# சத்திய வேதாகமப் பெயர் அகராதி

ஆர். என். ஆசீர்வாதம்

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்
95-A, வேப்பேரி நெடுஞ்சாலை
சென்னை - 600 007

விலை ரூ. 190.00

# சத்திய வேதாகமப் பெயர் அகராதி

# சத்திய வேதாகமப் பெயர் அகராதி

ஆர். என். ஆசீர்வாதம்

**சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்**
95A, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை - 600 007
Tel. 044-25323231, 26420173, 26420743
E-mail: elshq@elsindia.org, Website: www.elsindia.org
Online Store: www.christianbooksindia.com

Pub. No. 314 F - TAMIL
First ELS Edition : December 1993
Reprint : April 2021

# BIBLE DICTIONARY OF PROPER NAMES

R. N. ASIRVATHAM

© EVANGELICAL LITERATURE SERVICE

Meipporul Achakam, Chennai - 23 - 044 -26741526

# முகவுரை

தமிழ் வேதாகமத்தை மொழி பெயர்த்த பவர் ஐயர் (The Rev. Bower) ஒரு வேத அகராதியையும் (கி.பி. 1877-1885) எழுதினார் எனத் தெரிகிறது. பின்பு கி.பி. 1927இல் ஏ.சி. கிளேட்டன் (A. C. Clayton) ஐயரால் இயற்றப்பட்ட ஒரு தமிழ் அகராதி வெளியிடப்பட்டது. இது ஒரு முக்கியமான புத்தகம். இதில் 4800 குறிப்புகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு குறிப்பும் ஐயமற ஆராய்ந்து எழுதப்பட்டுள்ளது. இதில் பவர் ஐயர் எழுதின சில பகுதிகளும் சேர்ந்துள்ளன. இது ஒரு விலையேறப்பெற்ற புத்தகம். ஆனால் இப்பொழுது பெற்றுக்கொள்வது அரிது. ஆங்கிலத்தில் புதிய வேத அகராதி (New Bible Dictionary) என்ற புத்தகம் திண்டல் ஐக்கிய சங்கத்தாரால் (Tyndal Fellowship for Bible Research) 1962-ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டது. அதில் 2300 குறிப்புகள் அடங்கியுள்ளன. பூர்வ சாதனங்களில் உள்ளவைகளை ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட அருமையான புத்தகம். திருமறை சொற்பொருள் என்ற புத்தகம் சென்னையில் கி.பி.1966இல் வெளியாயிற்று. இது வேத வித்துவான்களாலும் அறிஞர்களாலும் இயற்றப்பட்ட ஓர் அகராதி. அதில் சொற்கள் சொற்பமாயிருந்தாலும் ஒவ்வொரு விஷயமும் தொடக்கத்திலிருந்து ஆராய்ச்சி செய்து எழுதப்பட்ட விலையுயர்ந்த புத்தகம். ஆனால் அதன் மொழி உயர்தரமான வசன நடையுள்ளது. தமிழில் தேறினவர்களுக்கு இனிமையாயிருந்தும், ஏனையோருக்கு எளிதாய் விளங்கிக்கொள்ள கடினமாயிருக்கும்.

இந்தச் சத்திய வேதாகமப் பெயர் அகராதி ஆசிரியனாகிய நான் தமிழ் கிறிஸ்தவர்களின் பொது உபயோகத்திற்காக எளிதாய் விளங்கிக் கொள்ளக்கூடிய ஓர் அகராதியாயிருந்தால் நன்மையா யிருக்குமென்ற எண்ணத்தோடு பல குறிப்புகளைச் சேர்த்தெழுதியுள்ளேன். இதில் ஏறத்தாழ 700 குறிப்புகள் அடங்கியுள்ளன. வில்லியம் திண்டேல் (William Tyndale) வேதாகமத் திருப்புதலைச் செய்தபோது கழனியிலே உழுகிற ஒரு பையனும் அதை வாசிக்கக் கூடியதாயிருக்க வேண்டுமென்ற நோக்கம் கொண்டிருந்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதமே இந்த அகராதியைச் சேர்த்தெழுதினவனாகிய நான் கல்வியறிவில் குறைந்தவனாயினும் இதை வாசித்து விளங்கக் கூடியதாயிருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பேச்சுப்போக்கான மொழியில் எழுதி யுள்ளேன். நான் தமிழில் தேறினவனல்ல. தொண்ணூறு வயதிலும் இதன் மூலப்பகுதிகளை எனது கையால் எழுத ஆண்டவர் கிருபை செய்தார்.

கடைசியாக இந்தப் புத்தகத்தைத் திரட்டி ஒழுங்குபடுத்தும்படி ஏழை அடியானை ஏவிக் கிருபையளித்த கர்த்தருக்கே கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக ! ஆமென்.

12-3-1969

ஹேவன் **ஆர். என். ஆசீர்வாதம்**

கொழும்பு-5

# ஆசிரியர் வரலாறு

புத்தகத்தின் ஆசிரியராகிய கனம் ஆர்.என். ஆசீர்வாதம் என்னும் இப்பெரியார் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணத்தில் பிறந்தவர். தமது ஆரம்பக் கல்வியைத் தமிழில் பயின்றார். பின்பு பிரசித்திப் பெற்ற யாழ்பாணக் கல்லூரியில் சேர்ந்து ஆங்கிலத்தில் கல்வி கற்று கல்கத்தா சர்வ கலாசாலை பட்டத் தேர்வில் முதன்மையாகத் தேர்ச்சியுற்றார். பின் வழக்கறிஞராக (Advocate) கொழும்பு நகரில் வேலைக்கமர்ந்தார். 56-வது வயதில் தனது உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றார். பின்பு கிறிஸ்தவ இலக்கிய நூல்கள் எழுதுவதில் மிகவும் ஆர்வமுள்ளவரானார். வேதாகமத்தை நன்றாய் பயின்று ஆராய்ச்சி செய்ததுமல்லாமல் சுவிசேஷ ஊழியத்திலும் மிகவும் ஆர்வம் கண்டார்.

நாளடைவில் நூல் எழுத ஆரம்பித்தார். முதன் முதலாக 'அனுதின மன்னா' (Daily Manna) என்ற நூலை 1951 இல் வெளியிட்டார். அது பழைய ஏற்பாட்டிலிருந்து அன்றாடம் வேத வாசிப்புப் பகுதிகளைக் கொண்டுள்ளது. அது போலவே 'டெய்லி பிரட்' (Daily Bread) என்றொரு நூலையும் அதே ஆண்டில் எழுதினார். 'கிறைஸ்ட் அன்ட் ஹிஸ் பாலோவர்ஸ்' (Christ and His Followers) என்றொரு நூலையும் விரைவில் வெளியிட்டார். இம்மூன்றும் ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ளன.

1954-ஆம் ஆண்டு தனது 77-வது வயதில் தன் ஜீவிய காலத்தில் அவர் எழுதின மிகச் சிறந்த நூலான 'பரிசுத்த வேதாகம ஒத்தவாக்கிய விளக்க உரையை' (Concordance to the Tamil Bible) எழுத ஆரம்பித்தார். அது சென்னை நகரில் 1961-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியானது. அப்பொழுது அவருக்கு வயது 84. 7 வருடங்களாகப் படித்து அதிக சிரத்தையோடு எழுதினதின் பலனே அது. ஆங்கிலத்தில் 'க்ருடன்ஸ் கன்கார்டன்ஸ்' (Cruden's concordance) என்னும் வேத அகராதியைப் போன்றது. முதல் பாகம் 670 பக்கம், இரண்டாம் பாகம் 198 பக்கம்- இரண்டும் சேர்த்து ஒரே கட்டுமானம் செய்தது. 1964 முதல் 1968க்குள் அவர் வேறே இரண்டு நூல்களைத் தமிழில் எழுதினார். அவற்றுள் ஒன்றாகிய சத்திய வேதப் பொருளடக்கம் என்னும் நூல் 1969இல் வெளியானது.

1969-ஆம் ஆண்டில் அவருடைய 91வது வயதில் அவர் தனது சுய சரிதையை எழுதி முடித்தார். இவர் கிறிஸ்தவ உலகில் யாழ்பாணத் தமிழ் மக்களிடையே தலைசிறந்த ஒருவரென்றால் மிகையாகாது. சுகபோகமாக வாழக்கூடிய வசதிகள் எல்லாம் இருந்தபோதிலும் தன் ஜீவிய காலத்தின் பெரும் பகுதியை கர்த்தருக்கென்றும் அவருடைய

ஊழியத்திற்கென்றும் அர்ப்பணித்தவர். தனது வயோதிப காலத்திலும் அவருக்கு உண்டான பக்தி வைராக்கியமும், ஊக்கமும் சுவிசேஷ ஊழியத்திலுள்ள ஆர்வமும் சற்றும் குறையவில்லை. தன் சரீரத்தில் கொஞ்சம் பெலன் இருக்கும் மட்டும் அதனைக் கர்த்தருக்கென்று செலவழித்தவர். கடைசியாக 92-வது வயதில் பூரண ஆயுசுள்ளவராய் 1971-ஆம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதி தனக்காக தமது விலையேறப்பெற்ற ஜீவனைக் கொடுத்தவரும் தன்னை ஆட்கொண்டவருமான கிறிஸ்து பெருமானுக்குள் இளைப்பாறும்படி மகிமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அவருடைய கடைசிப் பணியாகிய 'சத்திய வேதாகமப் பெயர் அகராதி' என்னும் இந்நூலானது இப்பொழுது அச்சிட்டு வெளிவருகிறது. இது தமிழ் உலகின் கிறிஸ்தவ மக்களால் ஏற்றுக் கொள்ளப்படும்படியும் அவர்களால் பயன்படுத்தப்படும்படியும் எல்லாம் வல்ல இறைவன் தாமே ஆசீர்வதிப்பாராக.

*பதிப்பாளர்.*

# சத்திய வேதாகமப் பெயர் அகராதி

## அகசியா (Ahaziah)

*(கி.மு. 896-895)*

***(கர்த்தரின் தாபரிப்பு)***

*1. இஸ்ரவேலின் எட்டாம் இராஜா. இவன் ஆகாப், யேசபேல் என்பவர்களின் மகன். இரண்டு வருஷம் இராஜாவாயிருக்கையில் பாகாலைச் சேவித்து, கர்த்தருக்குக்கோபம் மூட்டினான் (1 இரா. 22:51-53; 2 இரா. 1:2-4)*

மோவாபியர் இவனுக்கு விரோதமாகக் கலகம் பண்ணினார்கள் *(2 இரா. 1:1).*

இவன் யோசபாத்தோடு தோழமை கொண்டு கப்பல்கள் செய்ததில் நஷ்டப்பட்டான் *(2 நாளா. 20:35-36).*

இவன் மேல் வீட்டிலிருந்து விழுந்து வியாதிப்பட்டிருக்கையில், பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ஆள்களை அனுப்பினான். எலியா அவர்களைச் சந்தித்து *'அகசியா சாவான்'* என்று சொன்னபடியே, அவன் செத்தான். அவனுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை *(2 இரா. 1:1-17)*

*2.* யூதாவின் இராஜா *(கி.மு. 842-841).* யோராமின் இளைய மகன். ஆகாபு, யேசபேல் என்பவர்களின் பேரன் *(2 இரா. 8:25-29).* இவனுடைய பெயர் யோவகாஸ் என்று *2 நாளா. 21:17*இல் சொல்லப்பட்டுள்ளது. இவன் *22* வயதில் அரசாளத் தொடங்கி ஒரு வருஷம் அரசாண்டான் *(2 இரா. 8:26).* இவனுடைய தாயாகிய அத்தாலியாளின் யோசனைப்படி இவன் துன்மார்க்கமாய் நடந்தான் *(2 நாளா. 22:3)*

ஆகாபின் குமாரனாகிய யோராம் வியாதியாயிருந்தபோது அவனைப் பார்க்கும்படி இவன் யெஸ்ரயேலுக்குப் போயிருந்த வேளையில், யெகூ இவனைக் கொல்லுவித்தான். அவனுடைய ஊழியக்காரர் இவனை அடக்கம்பண்ணினார்கள் *(2 இரா. 9:16-28); 2 நாளா. 22:6-9).*

## அகபு (Agabus)

பவுலுடைய நாள்களில் எருசலேமிலிருந்த ஒரு தீர்க்கதரிசி. உலகமெங்கும் பஞ்சமுண்டாகுமென்று இவன் தீர்க்கதரிசனம்

உரைத்தான் *(அப். 11:28)*. இது கிலவுதியுராயன் காலத்தில் நிறைவேறிற்று.

இவன் செசரியா, பட்டணத்தில் பவுலைச் சந்தித்து, எருசலேமில் யூதர் அவனைக் கட்டி, புறஜாதியார் கையில் ஒப்புக் கொடுப்பார்களென்று, பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான் *(அப். 21:10-11)*

## அகாஸ்வேரு (Ahasuerus)

**(வல்லவன்)**

1. மேதிய குலத்தானாகிய தரியுவின் பிதா *(தானி. 9:1)*.

2. ஒரு பெர்சிய இராஜா. இவன் வஸ்தியை தன்னுடைய இராணியாக இராதபடி தள்ளிப்போட்டு, அழகான யூத பெண்ணாகிய எஸ்தரை விவாகம் செய்தான் *(எஸ். 2:17)*. இந்த அகாஸ்வேரு, கிரேக்கரால் 'சஷ்டா' எனப்பட்டான்.

இவன் கோரேஸ் என்பவனின் பேரன். கி.மு. 486இல் இராஜாவானான். பிற்பாடு கி.மு. 480ல் சலாமிஸில் (Salamis) நடந்த யுத்தத்திலும், அடுத்த வருஷம் பிலாத்தியாவில் நடந்த யுத்தத்திலும் தோல்வியடைந்தான்.

3. பெர்சிய இராஜா. கி.மு. 529-521. இவனுக்கு ஆலயம் கட்டுகிறதற்கு விரோதமாக யூதாவின் சத்துருக்கள் பிரியாது எழுதினார்கள் *(எஸ்றா 4:6)*.

## அகாயா (Achaia)

**(அகாயுக்கு என்பவனுடைய தேசம்)**

இது ரோமருடைய ஆளுகைக்குக் கீழிருந்த கிரேக்க தேசத்தின் ஒரு பகுதி. கிரேக்க தேசம் என்பது அகாயாவையும், மக்கெதோனியாவையும் அடக்கியுள்ளது *(அப். 19:21; ரோமர் 15:26; 1 தெச. 1:8)*.

கல்லியோன் இந்த நாட்டிற்கு அதிபதியாயிருந்த காலத்தில், யூதர்கள் பவுலுக்கு விரோதமாய்க் குற்றஞ்சாட்டினபோது, அவன் அவர்களைத் துரத்தி விட்டான் *(அப். 18:12-16)*

பவுல் மக்கெதோனியா அகாயா நாடுகளில் சுற்றித் திரிந்து, உபதேசம்பண்ணினான் *(அப். 19:21)*

இத்தேசத்தார், எருசலேமிலிருந்த தரித்திர விசுவாசிகளுக்குச் சகாயம் செய்தார்கள் *(ரோமர் 15:26)*.

அகாயாவிலிருந்த சபைக்கும், எப்பனெத்து என்பவனுக்கும், பவுல் வாழ்த்துதல் சொல்லுகிறான் *(ரோமர் 16:5)*.

## அகித்தோப்பேல் (Ahithophel)

***(மதிகெட்ட சகோதரன்)***

இவன் கீலோவு ஊரான். தாவீதுடைய விசேஷ ஆலோசனைக் காரன் *(2 சாமு. 15:12; 16:23)*.

அப்சலோம், தாவீதுக்கு விரோதமாகக் கலகம் செய்தபோது, அகித்தோப்பேலும் அவனைச் சேர்ந்துகொண்டானென்று தாவீது அறிந்தபோது, "கர்த்தாவே அவனுடைய ஆலோசனையைப் பயித்திய மாக்கிவிடுவீராக" என்றான் *(2 சாமு. 15:31)*.

அகித்தோப்பேலின் யோசனைப்படி, அப்சலோம் தன் தகப்ப னுடைய மறுமனையாட்டிகளிடம் பிரவேசித்தான் *(2 சாமு. 16:22)*

மேலும் அவன் சொன்ன ஆலோசனையை, அப்சலோம் கேளாமல் அற்கியனாகிய ஊசாயின் ஆலோசனையைக் கேட்டதினால், தன் யோசனையின்படி நடக்கவில்லையென்று அகித்தோப்பேல் கண்டபோது, தன் வீட்டுக்குப்போய் நான்று கொண்டு செத்தான் *(2 சாமு. 15:31-34; 2 சாமு. 17:23)*. ஆகவே அவனைப் பழைய ஏற்பாட்டின் யூதாஸ்காரியோத்து என்றும் சொல்லலாம்.

## அகிமாஸ் (Ahimaaz)

***(கோபத்தின் சகோதரன்)***

*1.* சாதோக்கின் குமாரன். வேகமாய் ஓடுகிறவனென்று பேர் பெற்றவன். அப்சலோம் கலகம் செய்த நாள்களில் இவனும், அபியத்தார் மகன் யோனத்தானும், தாவீதுக்கு உதவி செய்தார்கள் *(2 சாமு. 15:27,36)*.

அப்சலோம் தோல்வியடைந்த செய்தியை இவன் தாவீதுக்கு முதன்முதல் கொண்டுவந்தான் *(2 சாமு. 18:19-32)*.

*2.* நப்தலியிலிருந்த சாலொமோனின் விசாரிப்புக்காரன். சாலொமோனின் குமாரத்தியாகிய பஸ்மாத் என்பவளை விவாகம் பண்ணினான். *(1 இரா. 4:15)*.

*3.* சவுலுடைய மனைவியாகிய அகினோவாம் அகிமாசின் குமாரத்தி *(1 சாமு. 14:50)*.

## அகிமெலேக்கு (Ahimelech)
### *(இராஜாவின் சகோதரன்)*

*1. நோபிலிருந்த ஆசாரியனாகிய அகிதூபின் குமாரன் (1 சாமு. 22:9). தாவீதின் ஆசாரியனாகிய அபியத்தாரின் குமாரனென்று 2 சாமு. 8:17இல் குறித்துள்ளது.*

*அகிமெலேக்கு நோபில் ஆசாரியனாயிருந்தபோது தாவீதுக்கு உதவி செய்தானென்று கேள்விப்பட்டு, சவுல் ஆசாரியராயிருந்த 85 பேரைக் கொல்லுவித்தான் ( 1 சாமு. 22:18)*

*2. ஏத்தியனாகிய அகிமெலேக்கு. தாவீது சவுலுக்குத் தப்பி வனாந்தரத்திலிருந்த நாள்களில், இவன் தாவீதோடிருந்தான் (1 சாமு. 26:6)*

## அகியா (Ahijah)
### *(யேகோவா சகோதரன்)*

*1. சீலோனியனான ஒரு தீர்க்கதரிசி. இவன் காலம் கி.மு. 980. இவன் யெரோபெயாமைச் சந்தித்து, தன் சால்வையைப் பன்னிரண்டு துண்டுகளாகக் கிழித்து, பத்துத்துண்டுகளை அவனுக்குக் கொடுத்து, சாலொமோனின் இராஜ்யத்தில் பத்துக் கோத்திரங்களை உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் (1 இரா. 11:29-39). சில காலத்துக்குப் பின் இந்த தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று. ஆனால் யெரொபெயாம் ஜனங்களை விக்கிரக ஆராதனைக்குட்படுத்தினதினிமித்தம், அவனையும் அவன் சந்ததியையும் கர்த்தர் அழித்துப் போடுவாரென்று அகியா சொன்னான் (1 இரா. 14:6-16).*

*2. ஏலியின் குமாரனாகிய பினெகாசுக்குப் பிறந்த அகிதூபின் குமாரனாகிய அகியா (1 சாமு 14:3). ஏபோத்தைத் தரித்தவன் அகிமெலேக் என்று 1 சாமு. 22:9ல் குறித்துள்ளது.*

*3. பெலோனியனாகிய அகியா, இவன் தாவீதின் 30 பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:36).*

*4. தாவீதின் நாள்களில் லேவியரில் ஒருவனாகிய அகியா பொக்கிஷ விசாரணைக்காரனாயிருந்தான் (1 நாளா. 26:20).*

*5. சாலொமோனுக்கு சீசாவின் குமாரனாகிய அகியா சம்பிரதியாயிருந்தான் (1 இரா. 4:3).*

*6. இஸ்ரவேலின் இராஜாவாகிய பாஷாவின் தகப்பன் (1 இரா. 15:27).*

*7.* நெகேமியாவின் நாள்களில் உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்களில் ஒருவன் *(நெகே. 10:26)*

*8.* யெர்மெயேலின் குமாரனும், ராம், பூனா, ஓரேன், ஓத்சேம் அகியா என்பவர்களின் சகோதரனுமாவான் *(1 நாளா 2:25).*

## அகிரிப்பா

***(ஏரோது காண்க)***

## அகினோவாம் (Ahinoam)

***(மனோகரமான சகோதரி)***

*1.* இவள் சவுலுடைய மனைவி அகிமாசின் குமாரத்தி *(1 சாமு. 14:50).*

*2.* தாவீது, யெஸ்ரயேல் ஊராளாகிய அகினோவாவை விவாகம் பண்ணினான் *(1 சாமு 25:43).* இவளும், நாபாலின் மனைவியாகிய அபிகாயிலும், தாவீது இராஜாவாக வருமட்டும் அவனுடைய மனைவிகளாயிருந்தார்கள். இவர்களிருவரும் சிக்லாகிலிருக்கும்போது, அமலேக்கியர் சிறை பிடித்துப் போனபொழுது, தாவீது அவர்களை விடுவித்தான் *(1 சாமு. 30:5-19).*

தாவீதுடைய மூத்த குமாரனாகிய அம்னோனை அகினோவாம் பெற்றாள் *(2 சாமு. 3:20; 1 நாளா. 3:1).*

## அகீக்காம் (Ahikam)

***(கி.மு. 641)***

***(என் சகோதரன் எழும்பினான்)***

சாப்பானின் குமாரன். யோசியா இராஜாவின் நாள்களில் நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டபொழுது, இராஜா அகீக்காமையும், வேறு ஆள்களையும், உல்தாள் தீர்க்கதரிசியானவளிடம் அனுப்பி வைத்தான் *( 2 இரா. 22:12,14; 2 நாளா. 34:20).* யோயாக்கீமின் நாள்களில் எரேமியாவைக் கொன்று போடாமல் இவன் பாதுகாத்தான் *(எரே. 26:24).* இவனுடைய மகனாகிய கெதலியாவினிடம் நெபுகாத்நேச்சார் எரேமியாவைப் பாதுகாக்கும்படி ஒப்புவித்தான் *(எரே. 39:14; 2. இரா. 25:22).*

## அசரியா (Azariah)

***(கர்த்தர் உதவி செய்தார்)***

எபிரெயருக்குள் ஒரு பொதுவான பெயர். இது முக்கியமாக ஆசாரிய, லேவிய வகுப்பாருக்குள் வழங்கினது. எலியேசர் வம்சத்தில் அநேகருக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது.

*1.* யூதாவின் இராஜாவாகிய உசியாவின் மறுபெயர் *(2 இரா. 14:21; 2 நாளா. 26:1).*

*2.* சாதோக்கின் குமாரனாகிய அசரியா, சாலொமோனின் பிரதான மந்திரி *(1 இரா. 4:2)*

*3.* நாத்தானின் குமாரன் அசரியா, மணியகாரரின் தலைவன் *(1 இரா. 4:5).*

*4.* சாதோக்கின் குமாரனாகிய அகிமாசின் மகன் *(1 நாளா. 6:9).*

*5.* ஆசா இராஜாவின் நாள்களிலிருந்த ஓதேத்தின் குமாரனாகிய அசரியா ஒரு தீர்க்கதரிசி *(2 நாளா. 15:1-8)*

*6.* தூரபங்காட்டப்போன உசியா இராஜாவை எதிர்த்த ஆசாரியன் *(2 நாளா. 26:17).*

*7.* எசேக்கியா இராஜாவின் நாள்களிலிருந்த பிரதான ஆசாரியன் *(2 நாளா. 31:10).*

*8.* எஸ்றா நியாயப்பிரமாண புத்தகத்தை வாசித்தபொழுது ஜனங்களுக்கு விளங்கப் பண்ணினவர்களில் ஒருவன் *(நெகே. 8:7).*

*9.* நெபுகாத்நேச்சார் சிறை கொண்டுபோன யூத புத்திரரில் ஒருவனாகிய அசரியா. அவன் பெயர் ஆபேத்நேகோ என்று மாற்றப்பட்டது. *(தானி. 1:7).*

*10.* எருசலேம் அலங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணுகையில் உதவியாயிருந்தது அசரியா என்னும் ஒரு யூதப்பிரபு *(நெகே. 12:33)*

## அசீரியா, அசீரியர் (Assyria)

**(சம பூமி)**

இதெக்கேல் அல்லது திகிரிஸ் என்ற ஆற்றுக்கருகேயிருந்த ஒரு பலமுள்ள இராஜ்யம் *(ஆதி. 2:14).*

சேமுடைய குமாரனாகிய அசூர் நினிவேயைக்கட்டினான். அவனிலிருந்து இந்தப் பெயர் வந்தது *(ஆதி. 10:11, 22).*

நினிவே இதன் தலைநகர். இஸ்மவேலின் சந்ததியார் இத் தேசத்தில் குடியேறினார்கள் *(ஆதி. 25:18).*

அசூருபலிது என்பவன் அசீரியரின் இராஜாவாயிருந்து கி.மு.1400இல் பாபிலோனியரைக் கீழ்ப்படுத்தி தன் பேரனைப் பாபிலோனுக்கு இராஜாவாக நியமித்தான்.

ஏத்தியர் பாபிலோனியருக்கு உதவிசெய்ய ஆயத்தமானபோது, அசீரிய இராஜா சல்மனாசார் கி.மு. 1300இல் அவர்களைத் தோற்கடித்தான். அவன் மரித்தபின் அவனுடைய மகன்

துக்குல்திமாஸ் (Tukultimas) என்பவன் திகிரிஸ், ஐப்பிராத்து நதிகளின் ஓரமான தேசங்களுக்கு இராஜாவானான். இதன்பின் அசீரியா தாழ்ந்த நிலைக்கு வந்தது.

திகிலாத்பிலேசர் கி.மு. 1200இல் இராஜாவான பின் இராஜ்யத்தை மறுபடியும் நிலைவரப்படுத்தி, ஆமாத்தையும் கைப்பற்றினான். துவக்கத்தில் இவன் பெயர் பூல். இவன் இஸ்ரவேல் இராஜாவாகிய மெனாகேமுக்கு விரோதமாய்ப்போன வேளையில், அவன் இவனுக்குப் பணம் கொடுத்து தப்பிக்கொண்டான் *(2 இரா. 15:19).* பூல் பெரிய சீர்திருத்தங்கள் செய்து, தேசத்தை பலப்படுத்தி, "திகிலாத் பிலேசர்" என்று பேர் எடுத்துக்கொண்டான் *(2 இரா. 16:10).*

இஸ்ரவேலின் இராஜாவாகிய பெக்காவின் நாள்களில் திகிலாத் பிலேசர் வந்து ஈயோன் முதலிய நப்தலி தேசத்தைப் பிடித்து, குடிகளைச் சிறையாக்கி அசீரியாவுக்குக் கொண்டுபோனான் *(2 இரா. 15:29).*

ஆகாஸ், யூதாவின் இராஜாவாயிருக்கையில் சீரிய இராஜாவாகிய ரேத்சீனும், இஸ்ரவேல் இராஜாவாகிய பெக்காவும், அவனுக்கு விரோதமாய் வந்தபோது அவன் அசீரிய இராஜாவாகிய திகிலாத்பிலேசரிடம் உதவிகேட்டு, காணிக்கையையும் அனுப்பினான். அப்படியே அவன் உதவி செய்தபடியால் ஆகாஸ் அவனைச் சந்திக்கும்படி தமஸ்குவுக்குப்போன தருணத்தில் அங்கிருந்த பலி பீடத்தின் சாயலை எருசலேமுக்கு அனுபபி அப்படிப்பட்ட பலிபீடத்தைக் கட்டுவித்து, அதில் பலிகளைச் செலுத்தினான் *(2 இரா. 16:5-13).*

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஓசெயா இராஜ்யபாரம் பண்ணின காலத்தில், அசீரிய இராஜாவாகிய சல்மனாசார் வந்து, ஓசெயாவை பகுதிகட்டும்படிச் செய்தான்.

பின்பு அவன் பகுதி கட்டாமல் விட்டதினால் அசீரிய இராஜா அவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைத்தான். அதன்பின் சமாரியாவை முற்றுகை போட்டுக் கைப்பற்றி இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறையாக கொண்டுபோனான் *(2 இரா. 17:1-6).* இவர்களுக்குப்பதிலாக அசீரிய இராஜா பாபிலோனிலும் அடுத்த தேசங்களிலுமிருந்த மனுஷரை வரப்பண்ணி, அவர்களைச் சமாரியாவில் குடி யேற்றினான் *(2 இரா. 17:24).*

யூதாவின் இராஜாவாகிய எசேக்கியாவின் நாள்களில், அசீரிய இராஜாவாகிய சனகெரிப் வந்து யூதா பட்டணங்களைப் பிடித்ததினால் எசேக்கியா ஆலயத்தின் பொக்கிஷங்களையும், கதவு களிலிருந்த பொன் தகடுகளையும் கழற்றி அவனுக்குக் கொடுத்தான் *(2 இரா. 18:13-17).*

திரும்பவும் சனகெரிப் வந்து எருசலேமை முற்றுகை போட்ட போது, ஏசாயாவின் விண்ணப்பத்தைக் கர்த்தர் கேட்டு, அவனுடைய சேனைகளைச் சங்கரித்தார். சனகெரிப் திரும்பி நினிவேயில் போயிருக்கையில் கொல்லப்பட்டான் *(2 இரா. 19:37).*

எசாரதன் அசீரியாவில் இராஜாவாயிருந்த நாள்களில் (கி.மு.669) தன் சேனைகளை எருசலேமுக்கு அனுப்பினான். அவர்கள் யூதா ராஜாவாகிய மனாசேயைப் பிடித்துக்கட்டி, பாபிலோனுக்குக் கொண்டு போனார்கள். அங்கே அவன் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி விடுதலை பெற்றான் *(2 நாளா. 33:10-13).*

அசூர்பனிப்பல் என்பவன் அசீரியாவில் இராஜாவாய் (கி.மு. 627) வந்து சில சீர்த்திருத் தங்களைச் செய்தான். அந்நாள்களில் மேதியர் பலப்பட்டு நினிவேயை முற்றுகை போட்டார்கள். கல்தேயனாகிய நேபோபிலேசா எழும்பி, அசீரியரைப் பாபிலோனி லிருந்து துரத்தி விட்டான். பின்பு மேதியரும், பாபிலோனியரும் சேர்ந்து நினிவேயைக் கைப்பற்றினார்கள். கி.மு. 606இல் அசீரியா முடிவுக்கு வந்தது.

அசீரியாவின் வீழ்ச்சியைப்பற்றி தீர்க்கதரிசனங்களில் ஏற்கெனவே சொல்லப்பட்டிருந்தது. *(ஏசாயா 10:5-19; எசே. 31:1-18; நாகூம் 3:18-19; செப். 2:13-15).*

## அஸ்தோத் (Ashdod)

*(கோட்டை)*

இது பெலிஸ்தருடைய ஐந்து முக்கிய பட்டணங்களில் ஒன்று. மத்தியதரைக் கடலிலிருந்து மூன்று மைலுக்கப்பால் யோப்பா, காசா என்ற பட்டணங்களுக்கிடையிலிருந்தது. துவக்கத்தில் ஏனாக்கியர் இங்கே இருந்தார்கள் *(யோசுவா 11:22).* அஸ்தோத்தும் அதின் கிராமங்களும் பின்பு யூதாவின் சுதந்திரமாயிற்று *(யோசுவா 15:46,47).*

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து அஸ்தோத்தி லிருந்த கோயிலுக்குக் கொண்டுபோய், தாகோனண்டையில் வைத்தார்கள். மறுநாள் காலையில் தாகோன் முகங்குப்புறத் தரையில் விழுந்து கிடந்தது *(1 சாமு. 5:1-3)*

உசியா, யூதாவின் இராஜாவாயிருந்த காலத்தில் அஸ்தோத்தின் அலங்கத்தை இடித்துப்போட்டு பட்டணங்களைக் கட்டினான் *(2 நாளா. 26:6).*

நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டினபோது, அஸ்தோத்தியர் அதைத் தடுக்க முயன்றார்கள் *(நெகே. 4:7).* பின்பு அஸ்தோத் ஜாதிகளான ஸ்திரீகளை யூதர் சேர்த்துக் கொண்டதி

னிமித்தம், அவர்களின் பிள்ளைகள் பாதி அஸ்தோத் பாஷை பேசினார்கள். *(நெகே. 13:23,24).*

தர்த்தான், அசீரிய இராஜாவாகிய சர்கோனால் அனுப்பப்பட்டு, அஸ்தோத்தைப் பிடித்தான் *(ஏசா பா 20:1).*

இஸ்ரவேலர் சிறையாகப் போனபின், மற்ற ஜாதிகள் மேலும் தேவனுடைய நியாயத் தீர்ப்பு வருமென்று எரேமியா கூறினபோது அஸ்தோத்தில் மீதியானவர்களைப்பற்றியும் குறிக்கிறான் *(எரே. 25:20).*

செப்பனியாவும், சகரியாவும் கூட அவர்கள் அடையப்போகிற கீழ்நிலையைப்பற்றி முன்னறிவித்தார்கள் *(செப். 2:4; சக. 9:6).*

மக்கபேயர் நாள்களில் இது முற்றுமாய் அழிக்கப்பட்டது. பிற்காலங்களில் இந்தப் பட்டணம் ஆசோத்து எனப்பட்டது. பிலிப்பு அங்கே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான் *(அப். 8:40).*

## அதோனீராம் (Adoniram)

***(கர்த்தர் மேன்மையடைந்தார்)***

இவனுடைய பெயர் 'அதோராம்' என்றும் குறித்துள்ளது *(2 சாமு. 20:24; 1 இரா. 12:18).* இவன் தாவீது, சாலொமோன், ரெகொபெயாம் என்பவர்களின் பகுதி விசாரிப்புக்காரன் *(2 சாமு. 20:24; 1 இரா. 4:6).* ரெகொபெயாம் பகுதிகள் வாங்கும்படி இவனை அனுப்பினபோது இஸ்ரவேலர் கலகம் பண்ணி, இவனைக் கல்லெறிந்து கொன்றார்கள் *(1 இரா.12:18; 2 நாளா 10:18).*

## அதோனிசேதேக் (Adoni-Zedek)

***(நீதியின் கர்த்தர்)***

எருசலேமின் இராஜா. இவன் இன்னும் நான்கு எமோரிய இராஜாக்களோடு யோசுவாவுக்கு விரோதமாய்ப்போன வேளையில், யோசுவா இவர்களைத் தோற்கடித்து, வெட்டிக்கொன்று, மரங்களில் தூக்கி, ஒரு கெபியில் போட்டு அடைத்தான் *(யோசுவா. 10:1-27)*

## அதோனியா (Adoniyah)

***(கர்த்தர் என் கர்த்தர்)***

*1.* எபிரோனில் ஆகித் என்பவள் பெற்ற தாவீதின் நான்காம் மகன் *(2 சாமு. 3:2-4).*

தாவீது வியாதிப்பட்டிருந்தவேளையில் அதோனியா இராஜாவாக வர எத்தனித்து, யோவாப், அபியத்தார் என்பவர்களைச் சேர்த்துக் கொண்டான். ஆனால் சாதோக்கும், நாத்தானும் அவனுக்கு விரோதமாயிருந்தார்கள் *(1 இரா. 1:5-10)*

பின்பு சாலொமோன் இராஜாவானபின், இவன் பயந்து ஓடிப் போய், பலிபீடத்தின் கொம்புகளைப் பிடித்தபொழுது, சாலொமோன் அவனை வரவழைத்து விடுதலை பண்ணினான் *(1 இரா. 1:50-53).*

அதன்பின் அதோனியா அபிஷாகைத் தனக்கு மனைவியாக்கிக் கொள்ள முயன்றபோது, அவன் இராஜ்யத்தையும் நோக்குவா னென்று எண்ணி, சாலொமோன் அவனைக் கொல்லுவித்தான் *(1 இரா. 2:13-25).*

2. ஜனங்களுக்குப் போதனை செய்த ஒரு லேவியன் *(2 நாளா. 17:8).*

3. நெகேமியாவோடு கூட உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்களில் ஒருவன் *(நெகே. 10:16).*

## அத்தாலியாள் (Athaliah)

***(கர்த்தர் மேன்மையடைகிறார்)***

1. இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப், யேசபேல் என்பவர் களின் மகள். யூதா இராஜாவாகிய யோராம் இவளை விவாகம் செய்தான் *(2 இரா. 8:18, 26:2 நாளா. 21:6).* இவளுடைய தாயாகிய யேசபேலிலிருந்த பெனிக்கேயாளின் குணக்குறிகள் இவளிலும் காணப்பட்டது.

யோராம் மரித்தபோது அவனுடைய குமாரன் அகசியா இராஜாவானான். ஒரு வருஷத்தில் யெகூ அகசியாவைக் கொன்று போட்டான் *(2 இரா. 8:25; 9:27).*

அப்பொழுது அத்தாலியாள் இராஜவம்சத்தாராகிய தன் பேரப்பிள்ளைகளைக் கொன்றுபோட்டு, தானே இராஜ்ய பாரத்தை எடுத்துக்கொண்டாள் *(2 நாளா. 22:10).* யோராமின் குமாரர் கொல்லப்பட்டபோது, அவனுடைய இளைய மகனாகிய யோவாசை, யோராமின் சகோதரியாகிய யோசேபியாத் தப்பவைத்தாள் *(2 நாளா. 22:11).*

"அந்தப் பொல்லாத ஸ்திரீ" என்று வேதாகமத்தில் சொல்லி இருப்பதே இந்த அத்தாலியாளின் ஞாபகக் குறி *(2 நாளா. 24:7).*

2. அத்தாலியா என்ற பெயர் *1 நாளா. 8:26*லும், எஸ்றா *8:7*லும் காணப்படுகிறது.

## அத்தேனே பட்டணம் (Athens)

இது கிரேக்க தேசத்தின் முக்கிய பட்டணம். இந்தப்பேர் அவர்கள் வணங்கின தேவியிலிருந்து வந்தது. இந்தப் பட்டணம் கி.மு. 1556இல் கெக்குரோபு (Cecrops) என்பவனால் கட்டப்பட்டதென்று

பாரம்பரியமாய் சொல்லப்படுகிறது. மகா அலெக்சாந்தரின் நாள் களில் இந்தத் தேசம் விசேஷ மேன்மைபெற்றது. கல்வித் தேர்ச்சி அதிகமாயிருந்தது. சர்வகலா சபை சங்கங்கள், அத்தேனே, தர்சு அலெக்சாந்திரியாப் பட்டணங்களிலிருந்தன. நீதி சாஸ்திரிகளான டிராகோ, (Draco) சோலொன் (Solon) என்பவர்களும், பெரிகிலீஸ் (Pericles) என்னும் மந்திரியும், பிடியாஸ் (Phidias) என்னும் சித்திரக்காரனும், பிளேற்றோ (Plato), சாக்ரடீஸ் (Socrates), அரிஸ்டாடில் (Aristatle) என்னும் தத்துவ சாஸ்திரிகளும் இந்தப் பட்டணத்திலிருந்தார்கள். அதோடு அநேக கோயில்களும் சொரூபங்களும் அத்தேனேதேவியின் கோயிலிலிருந்தது. ரோமருக்குக் கீழ்ப்பட்டிருந்த காலத்திலும் இத்தேசத்துக்குச் சுயாதீனமிருந்தது.

பவுலும் அத்தேனே பட்டணத்துக்குப் போனவேளையில், அது விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், மற்றவர் களோடும் தர்க்கம் பண்ணினான். எப்பிக்கூரரும், ஸ்தோயிக்கரும் அவனோடு வாக்குவாதம் பண்ணினார்கள்.

இவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டு போய் பேசச்சொன்னபோது, அவன் அறியப்படாத தேவனைக் குறித்து பிரசங்கம் பண்ணினான். மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்து கேட்டபொழுது, சிலர் இகழ்ந்தார்கள், வேறு சிலர் விசுவாசித்தார்கள். அவர்களுக்குள் நியாயாதிபதியான தியொனீசியுவும், தாமரி என்னும் ஸ்திரீயும் விசுவாசிகளானர்கள் *(அப். 17:16-34).*

பின்பு இந்த தியொனீசியு அங்கிருந்த சபையின் கண்காணியா யிருந்தானென்று தெரிகிறது.

## அத்ரமலேக்கு (Adrammelech)

**(இராஜாவின் மேன்மை)**

*1.* ஒரு தேவியின் பெயர். அசீரிய இராஜா செப்பர்வியரையும், செப்பாவாமியரையும் கொண்டுவந்து, சமாரியாவில் குடியேற்றினான். அவர்கள் தங்கள் தேவர்களாகிய, அத்ரமலேக்கையும், அன்னம லேக்கையும் கொண்டுவந்து, அவைகளைச் சேவித்து, பிள்ளைகளையும் தகனபலி கொடுத்தார்கள் *(2 இரா. 17:31).* யூதரும் இவைகளை வணங்கின தாகத் தெரிகிறது.

*2.* சனகெரிப் என்பவனின் இரண்டு குமாரர் அவனை நினிவேயிலிருந்த ஒரு கோயிலில் வெட்டிக் கொன்றார்கள். அவர்களில் ஒருவனுடைய பேர் அத்ரமலேக்கு *(2 இரா. 19:37; ஏசாயா. 37:38).*

## அந்திக் கிறிஸ்து (Antichrist)

***(கிறிஸ்துவின் விரோதி)***

இந்த வார்த்தை கிறிஸ்துவை எதிர்த்து நிற்கிறவன் என்ற அர்த்தமுள்ளது. யோவானுடைய நிருபங்களில் மாத்திரம் இந்தச் சொல் பாவிக்கப்பட்டுள்ளது. *(1 யோவான் 2:18,22; 4:3; 2 யோவான் 7).*

பவுலும் இப்படிப்பட்ட ஒருவனைக் குறித்துப்பேசி, அவன் கேட்டின் மனுஷனாகிய பாவமனுஷன் என்றும், கிறிஸ்து இரண்டாம் முறை வருமுன் இவன் வெளிப்படுவான் என்றும் குறிக்கிறார் *(2 தெச. 2:3).* மேலும் பவுலும் யோவானும், கிறிஸ்து வரும்பொழுது இவன் அழிக்கப்படுவானென்றும் சொல்லுகிறார்கள். இயேசுவும், கடைசி நாள்களில் கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்களென்று எச்சரிக்கை கொடுத்திருக்கிறார் *(மத். 24:24).*

இயேசுவை, கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனும், மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாதவனும் அந்தி கிறிஸ்து என்று யோவான் சொல்லி, இப்பொழுதும் அநேக அந்திக் கிறிஸ்துக்கள் இருக்கிறார்களென்கிறான் *(1 யோவான். 2:18;4:3).*

மேலும் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர் உலகத்தில் தோன்றியிருக்கிறார்கள் *(2 யோவான் 7).*

நாம் பிழைக்கும்படி தேவன் தமது ஒரே பேறான குமாரனை உலகத்தில் அனுப்பினார். இதை மறுதலிக்கிறவன் விசுவாசத்தை அழித்து, சாத்தானின் கிரியையை நடப்பிக்கிறான். இப்படிப்பட்ட தீமை வளர்ந்தோங்கி கடைசி காலத்தில் சாத்தானால் அனுப்பப்படும் மிருகத்தில் நிறைவேறும். அந்த அக்கிரமக்காரனை கர்த்தர் தமது வருகையின் பிரசன்னத்தினால் நாசம்பண்ணுவார் *(2 தெச. 2:8).*

## அந்தியோகியா (Antioch)

***(நிலையில்லாமை)***

*1. சீரியாவின் அந்தியோகியா*

கிரேக்கரின் அரசாட்சி காலத்தில், இது சீரியாவின் தலைநகராயிருந்தது. சிலூக்கஸ் நிக்கற்றோர் (Selecus Nicator) என்பவன் இதை நிலைப்படுத்தி கி.மு. *300*இல் தன்னுடைய தகப்பனின் பேரை இதற்குக் கொடுத்தான். ஒரென்ரீஸ் (Orentes) ஆற்றின் தென் கரையில் இது கட்டப்பட்டது. யூதரும், வேறு அநேக புற ஜாதியாரும் இங்கே இருந்தார்கள்.

அப்போஸ்தலர் நாள்களின் பின் இங்கே இக்நேஷியஸ் (Ignatius) என்பவன் நாற்பது வருடம் அத்தியட்ச குருவாயிருந்தபின், இரத்தச்

சாட்சியாய், திரேஷன் (Trazan) ராயனால் கொல்லப்பட்டான். கிறிசொஸ்தம் (Chrisostam) என்பவர் பிறந்ததும் இங்கேயே, எருசேலம் சபையில் பந்தி விசாரணைக்காரராக தெரிந்துகொள்ளப் பட்ட ஏழுபேரில், நிக்கொலா எனப்பட்டவன் அந்தியோகியாப் பட்டணத்தான் *(அப். 6:5).*

ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினால் சிதறப் பட்டவர்கள் அந்தி யோகியா வரைக்கும்போய், இயேசுவைக் குறித்து பிரசங்கித்தபோது அநேகர் விசுவாசிகளானார்கள். எருசலேமிலுள்ள சபையார் இதைக் கேள்விப்பட்டு பர்னபாவை அந்தியோகியாவுக்கு அனுப்பினார்கள். அவன் போய்ப் பார்த்தபின், சவுலைத் தேடும்படி தர்சுவுக்குப்போய் அவனை அழைத்துவந்து, இருவரும் ஒரு வருஷ காலமாய் உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியா வில் சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று *(அப். 11:19-26).*

அந்நாள்களில் அகபு என்னப்பட்ட தீர்க்கதரிசி அந்தியோகியா வுக்கு வந்து, உலகமெங்கும் கொடிய பஞ்சம் உண்டாகுமென்று ஆவியானவராலே அறிவித்தான். அப்பொழுது சீஷர்கள் பணம் சேகரித்து, யூதேயாவிலிருந்த சகோதரருக்கு பர்னபா, சவுல் என்பவர்களுடைய கையில் கொடுத்து அனுப்பினார்கள் *(அப். 11:2-7,30).*

அந்தியோகியாப் பட்டணத்தில் சபை கூடியிருந்த வேளையில் பர்னபாவும், சவுலும், பரிசுத்த ஆவியினால் தேவ ஊழியத்துக்காகப் பிரித்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் புறப்பட்டு சின்ன ஆசியா எங்கும் திரிந்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பின், திரும்பவும் அந்தியோகியாவுக்கு வந்து நடந்த சங்கதிகளை அறிவித்தார்கள். *(அப். 13:11-2, 14:26,27).*

சில யூதேயாக் கிறிஸ்தவர்கள் அந்தியோகியாவுக்கு வந்து, சகோதரர் விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்பட மாட்டார்களென்று போதகம்பண்ணினதினிமித்தம் வாக்குவாதம் உண்டாகி, இந்த விஷயத்தைத் தீர்த்துக்கொள்ளும்படி, பவுலும், பர்னபாவும் வேறு ஆட்களோடுகூட எருசலேமுக்குப் போனார்கள். அங்கே செய்த தீர்மானத்தை எழுதி எடுத்துக்கொண்டு, அந்தியோகி யாவுக்கு வந்து, சபைக்கு ஒப்புக்கொடுத்தார்கள் *(அப். 15:1-30).*

பவுல் தன்னுடைய இரண்டாம், மூன்றாம் சுவிசேஷ பிரயா ணங்களை அந்தியோகியாவிலிருந்து துவங்கினான் *(அப். 18:22,23).*

ஒரு தடவை பவுல் அந்தியோகியாவில் சந்தித்த வேளையில், பேதுரு புற ஜாதியாருடன் சாப்பிடாத விஷயத்தில் பவுல் அவனில் குற்றம் பிடித்தான் *(கலா. 2:11).*

புறஜாதியாரின் தாய்ச்சபை அந்தியோகியாவிலிருந்தது.

2. பிசீதியா அந்தியோகியா

இது சின்ன ஆசியாவிலுள்ள பிரிகிரியாவுக்குச் சேர்ந்தது. இதுவும் சிலூகஸ் நிக்கேற்றர் என்பவனால் கட்டப்பட்டது.

இங்கே யூதருடைய ஜெப ஆலயமிருந்தது. பவுல் அங்கே இரண்டு ஓய்வுநாளில் பிரசங்கித்தவேளையில், சில யூதர் விசுவாசிகளானார்கள். வேறு சிலர் விரோதிகளானார்கள். இவர்கள் பக்தியும், கனமுமுள்ள ஸ்திரீகளையும், முதலாளிகளையும் எடுத்துவிட்டு அப்போஸ்தலரைத் துன்பப்படுத்தி, பட்டணத்தைவிட்டு துரத்திவிட்டார்கள் *(அப். 13:14-50)*.

இவ்விடமிருந்து சில யூதர் லீஸ்திராவுக்குப்போய் பவுலைக் கல்லெறிந்தார்கள் *(அப். 14:19)*.

பவுல் அந்தியோகியாவுக்குத் திரும்பப்போய் சீஷரை திடப்படுத்தி, புத்தி சொன்னான் *(அப். 14:21)*.

அந்தியோகியாவில் தனக்குண்டான பாடுகளைப்பற்றி, பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதினான் *(2 தீமோ. 3:11)*.

இப்பொழுது இந்தப் பட்டணம் துருக்கி தேசத்துக்குரியது.

## அந்திரேயா (Andrew)

***(தைரியன்)***

கலிலேயாவிலுள்ள பெத்சாயிதா ஊரிலிருந்த ஒரு மீன் பிடிப்பவன். யோவான் ஸ்நானனின் சீஷனாயிருந்து, பின் அப்போஸ்தலரில் ஒருவனானான். பேதுரு இவனுடைய சகோதரன்.

யோவான் ஸ்நானன் இயேசுவைப் பார்த்து, "இதோ, தேவாட்டுக்குட்டி" என்று சொன்னதைக் கேட்டு இவன் அவருக்குப் பின் சென்றான். பின்பு தனது சகோதரன் பேதுருவை அழைத்துக் கொண்டு அவரிடம் வந்தான் *(யோவான். 1:40,41)*.

பின்பு சீமோனும், அந்திரேயாவும் கடலில் வலைப்போட்டுக் கொண்டிருக்கையில் இயேசு தம்மைப் பின்பற்றி வரும்படி அவர்களுக்குச் சொன்னவுடனே, அவருக்குப் பின் சென்றார்கள் *(மத். 4:18-20)*.

ஐயாயிரம்பேரை போஷித்த வேளையில், ஒரு பையன் கையில் ஐந்து அப்பங்களிருக்கிறதைப்பற்றி இயேசுவுக்குச் சொன்னவன் இவனே *(யோவான் 6:8,9)*.

சில கிரேக்கர் இயேசுவைச் சந்திக்கவந்த செய்தியையும் இவன் அவருக்கு அறிவித்தான் *(யோவான் 12:21,22).*

கடைசி காலத்தில் எருசலேம் மேல் வரப்போகிற தேவ தீர்ப்பைப்பற்றி இயேசுவினிடம் வினாவினவர்களில் ஒருவன் இவன் *(மாற்கு 13:3,4)*

இயேசு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபின் எருசலேமில் ஜெபத்தில் தரித்திருந்தவர்களுக்குள் இவனும் இருந்தான் *(அப். 1:13).*

பிற்காலங்களில் இவன் கிரேக்கு தேசத்திலும், ஆசியாவிலும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அகாயாவில் சிலுவையிலறையுண்டு மரித்தான் என்று சொல்லப்படுகிறது.

சுயதேசத்திலும், பிற தேசத்திலும், இவனே முதல் சுவிசேஷகன் என்று சொல்லத்தகும் *(யோவான் 1:42; 12:21).*

## அபிகாயில் (Abigail)

***(மகிழ்ச்சியின் ஊற்று)***

*1.* இவள் மாகோனிலிருந்த நாபால் என்பவனின் மனைவி. ஓர் அழகான, புத்தியுள்ள ஸ்திரீ. தாவீது தன் மனுஷரை நாபாலிடம் அனுப்பினபோது அவன் அவர்களோடு மரியாதையீனமாய் பேசினதினிமித்தம், தாவீது அவன்மேல் பழிவாங்கும்படி போனான். அப்பொழுது அபிகாயில் காணிக்கைகளை எடுத்துக்கொண்டுபோய், அவனைச் சந்தித்து, சமாதானம் பண்ணிக்கொண்டாள். பின்பு நாபால் மரித்தபோது, தாவீது அவளை விவாகம் பண்ணினான் *(1 சாமு. 25:3;14-44).* யெஸ்ரயேல் ஊராளாகிய அகினோவாமையும், தாவீது விவாகம் பண்ணினான். இவர்கள் இருவரும் அவனோடு சவுலுக்குத் தப்பி, காத் பட்டணத்தில் ஆகீசிடம் தங்கியிருந்தார்கள் *(1 சாமு 27:3).*

பின்பு தாவீது இவ்விரண்டு மனைவிகளைக் கூட்டிக்கொண்டு எப்ரோனுக்குப் போனான் *(2 சாமு. 2:2).*

தாவீது சிக்லாகில் இருந்த நாள்களில், அமலேக்கியர் இந்த இரு மனைவிகளையும் சிறை பிடித்துக்கொண்டுபோன வேளையில், அவன்போய் இவர்களையும் மீட்டுக்கொண்டான் *(1 சாமு. 30:5, 18).*

தாவீதின் இரண்டாம் குமாரன் அபிகாயிலிடம் பிறந்த சீலேயாப் *(2 சாமு. 3:3).* இவனுடைய பெயர் "தானியேல்" என்றும் குறித்துள்ளது *(1 நாளா 3:1).*

*2.* தாவீதுடைய சகோதரியின் பெயர் *(1 நாளா. 2:16).* இவள் யெத்தேர் என்பவனை விவாகம் பண்ணி அமாசாவைப் பெற்றாள் *(1 நாளா. 2:17).*

## அபிசாய் (Abishai)
### *(கொடைக்குப் பிதா)*

செருயாளின் மகன், யோவாப், ஆசகேல் என்பவர்களின் சகோதரன், தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் *(1 நாளா. 2:16).*

இவன் தாவீதோடு சவுலின் பாளயத்துக்குப்போய் சவுல் நித்திரையாயிருக்கக்கண்டு, அவனைக் குத்திப்போட எண்ணின போது, தாவீது அவனைத் தடுத்தான் *(1 சாமு. 26:6-9).*

அப்னேர் ஆசகேலைக் கொன்றதினிமித்தம், யோவாபும்,. அபிசாயும் அவனைச் சங்காரம் பண்ணினார்கள் *(2 சாமு. 3:30).*

சீரியரோடு யுத்தம் நடந்த வேளையில் அபிசாய் அம்மோனியரை முறிய அடித்தான் *(2 சாமு. 10:10, 14).*

அபிசாய் உப்புப் பள்ளத் தாக்கில் 18,000 ஏதோமியரை முறிய அடித்தான் *(1 நாளா. 18:12).*

சீமேயி என்பவன் தாவீதைத் தூஷித்த வேளையில் அபிசாய் அவனைக் கொன்றுபோட எண்ணினபோது தாவீது தடை செய்தான் *(2 சாமு. 16:9)*

தாவீதின் சேனைகளின் மூன்றிலொரு பங்குக்கு அபிசாய் தளகர்த்தனாயிருந்தான் *(2 சாமு. 18:2).*

சேபா கலகம் செய்தவேளையில் மோவாபும், அபிசாயும் அவனைப் பின்தொடர்ந்துபோனார்கள். பின்பு சேபா கொல்லப் பட்டான் *(2 சாமு. 20:10-27).*

தாவீதை வெட்டவந்த ஒரு பெலிஸ்தனை, அபிசாய் வெட்டிக் கொன்று போட்டான் *(2 சாமு. 21:17).*

தாவீதின் மூன்று பராக்கிரம சாலிகளில் அபிசாய் பிரதான மானவன் *(2 சாமு. 23:18).*

## அபிஷாக் (Abishag)
### *(பிழைக்கு நடத்தும் பிதா)*

சூனேம் ஊராளாகிய ஓர் அழகான சிறு பெண். தாவீது வயது சென்ற காலத்தில் இவள் அவனுக்குப் பணிவிடை செய்தாள் *(1 இரா. 1:1-4).* பின்பு அதோனியா இவளை விவாகஞ் செய்ய விரும்பினபோது சாலொமோன் அவனைக் கொல்லுவித்தான் *(1 இரா. 2:17, 22-25).*

# அபிமெலேக்கு (Abimelech)

## *(இராஜாவின் தகப்பன்)*

*1.* ‘அபிமெலேக்கு’ கேராரின் இராஜாக்களுக்கு வழங்கின பெயர். ஆபிரகாம் கேராரில் தங்கியிருந்த நாட்களில் தன் மனைவி சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினால், அபிமெலேக்கு அவளைத் தன் அரண்மனைக்கு அழைப்பித்தான். தேவன் அவனுக்குச் சொப்பனத்தில் தோன்றி அவனை எச்சரித்தார். அப்பொழுது அவன் பொருள் பண்டங்களை ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன் மனைவி யையும் ஒப்புவித்தான் *(ஆதி. 20:1-8).*

பின்பு தண்ணீர் விஷயத்தில் வாக்குவாதம் உண்டானபோது இருவரும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அவர்கள் ஆணையிட்டுக்கொண்டபடியால், அந்த இடம் “பெயர் செபா” எனப்பட்டது *(ஆதி. 21:25-31).*

*2.* அபிமெலேக்கு கேராரிலிருந்த ஒரு பெலிஸ்திய இராஜா. ஈசாக்கு, பஞ்சத்தினிமித்தம் அபிமெலேக்கிடம் கேராருக்குப் போனான். அங்கே ஈசாக்கு தன் மனைவியை தன் சகோதரி என்று சொன்னது பொய் என்று இராஜா அறிந்து அவனை கண்டித்தான். ஆனாலும் பின்பு அவனை அன்பாய் நடத்தினான்.

ஈசாக்கு கேராரிலிருக்கையில் தன் தகப்பன் வெட்டின துரவுகளைப் பெலிஸ்தர் தூர்த்துப்போட்டதினால், மறுபடியும் அவைகளைத் தோண்டினான். இதனிமித்தம் வாக்குவாதம் உண்டானபோது, அபிமெலேக்கும், ஈசாக்கும் பெயர்செபாவில் உடன்படிக்கை செய்துகொண்டார்கள் *(ஆதி. 26:1-33).*

*3.* சங்கீதம் *34*ன் தலைப்பில் ஓர் அபிமெலேக்கைப் பற்றி கூறியுள்ளது. தாவீது சவுலுக்குத் தப்பி ஓடி இவனிடம் ஒதுக்கிடம் தேடினான் *(1 சாமு. 21:8)*

*4.* கிதியோனுக்கு சீகேமிலிருந்த ஒரு வைப்பாட்டி பெற்ற மகன் *(நியா. 9:1).* இவன் தன் தகப்பனின் குமாரர் எழுபதுபேரைக் கொலை செய்தான். பின்பு சீகேமியர் இவனை இராஜாவாக்கினார்கள் *(நியா. 9:5,6).*

இவன் இஸ்ரவேலில் மூன்று வருடம் அரசாண்ட பின் தேபேசுக்குப்போய் யுத்தம் செய்தபோது, ஒரு ஸ்திரீ எந்திரக் கல்லின் துண்டை அவன் தலைமேல் போட்டதினால், அவன் தன் ஆயுததாரியைக் கொண்டு தன்னைக் குத்துவித்தான் *(நியா. 9:54,55).*

*5.* தாவீதின் நாள்களில் ஓர் அபிமெலேக்கு ஆசாரியனாய் இருந்தான் *(1 நாளா. 18:16).*

*6.* ஓர் அபிமெலேக்கைப் பற்றி *1 நாளா. 24:31*-ல் குறித்துள்ளது.

## அபியத்தார் (Abiathar)

***(பிதா தலைமையானவன்)***

இவன் அகிமெலேக்கின் மகன் *(1 சாமு. 22:20)*. இவனுடைய குமாரன் பெயரும் அகிமெலேக் *(2 சாமு. 8:17)*. சவுல் நோபிலுள்ள ஆசாரியர்களைக் கொல்லுவித்தபோது, இவன் ஒருவன் தப்பி, கேகிலாவுக்கு தாவீதிடம் ஓடிப்போனான் *(1 சாமு.22:20)*. இவனிடம் ஒரு ஏபோத்து இருந்தது *(1 சாமு. 23:6)*. கர்த்தருடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவந்த வேளையிலும் இவன் ஆசாரியனாய் இருந்தான் *(1 நாளா. 15:11)*. அப்சலோம் கலகம் செய்த நாள்களில் அபியத்தார் தாவீதுக்கு உதவியாயிருந்தான் *(2 சாமு. 15:35; 17:15)*.

அதோனியா இராஜாவாக வர முயன்றபோது இவனைத் தன் பக்கத்தில் சேர்த்துக் கொண்டான் *(1 இரா. 1:19)*.

சாலொமோன் இராஜாவான பின் இவனை ஆசாரியனாயிராதபடி தள்ளிப்போட்டான் *(1 இரா. 2:26,27)*.

இயேசுவும் இந்த அபியத்தாரைப்பற்றிக் கூறியிருக்கிறார் *(மாற். 2:26)*.

ஏலி வம்சத்தின் கடைசி பிரதான ஆசாரியன் இவனே.

## அபியா (Abiah)

***(கர்த்தர் பிதா)***

1. சாமுவேல் தீர்க்கதரிசியின் இரண்டாம் மகன் *(1 சாமு. 8:2)*.

2. தாவீதின் நாட்களில் ஆசாரிய ஊழியத்துக்குச் சீட்டு போட்டபோது, எட்டாம் சீட்டு அபியாவின் பேர் வழிக்கு விழுந்தது *(1 நாளா. 24:10)*. யோவான் ஸ்நானகனின் தகப்பன் சகரியா, இந்த அபியா என்னும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவன் *(லூக்கா 1:5)*.

3. இஸ்ரவேல் இராஜாவாகிய யெரொபெயாமின் மகன் அபியா. இவன் வியாதிப்பட்டிருக்கையில், இவனுடைய தாய் அகியா என்னும் தீர்க்கதரிசியிடம் விசாரிக்கப்போன வேளையில், அவன் யெரொபெயாம் குடும்பத்துக்கு வரும் தேவனுடைய தீர்ப்பைச் சொல்லி, பிள்ளையாண்டானும் செத்துப்போவான் என்றான். அப்படியே ஆயிற்று *(1 இரா. 14:1-8)*.

4. யூதா இராஜாவாகிய ரெகொபெயாமின் மகன். இவனும் இராஜாவாய் வந்தான். *(1 நாளா. 3:10;2 நாளா. 11:20;14:1)*. இவன் பெயர் அபியாம் என்றும் குறித்துள்ளது. *(1 இரா. 14:31)*.

இந்த அபியாம் எருசலேமில் மூன்று வருஷம் இராஜ்யபாரம் பண்ணினான் *(1 இரா. 15:3)*. அபியாமுக்கும், யெரொபெயாமைத்

தோற்கடித்து, அவனுடைய பட்டணங்களையும் கைப்பற்றினான். யுத்தத்துக்கு முன், அவன் ஒரு மலைமேல் ஏறி பேசிச்சொன்ன வார்த்தைகள் வியக்கத்தக்கது *(2 நாளா. 13:4-12).*

பின்பு அபியா பலங்கொண்டு அநேக ஸ்திரீகளை விவாகம் பண்ணி, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றபின் மரித்தான் *(2 நாளா. 13:21).*

*5.* நெகேமியாவின் காலத்தில் உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்களில் ஒருவன் *(நெகே. 10:7).*

## அபியாள் (Abiah)

***(கர்த்தர் பிதா)***

*1.* இவள் எஸ்ரோனின் மனைவி. தெக்கோவாவின் தகப்பனாகிய அசூரின் தாய் *(1 நாளா. 2:24).*

*2.* இது எசேக்கியாவின் தாயின் பெயர் *(2 நாளா. 29:1).*

## அபியு (Abihu)

***(அவர் என் பிதா)***

ஆரோனின் மகன். இவனும் சீனாய் மலைமேல் ஏறி, இஸ்ரவேலின் தேவனைத் தரிசித்தான். *(யாத். 24:1,9).* ஆசாரிய ஊழியத்துக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டான் *(யாத். 28:1).* பின்பு இவனும், நாதாபும் அந்நிய அக்கினியை கர்த்தர் சந்நிதியில் கொண்டு வந்தபோது, பரிசுத்த அக்கினியால் கொல்லப்பட்டார்கள் *(லேவி. 10:1,2).*

பலிபீடத்தின் மேல் இருந்து எடுக்காத அக்கினியை அந்நிய அக்கினி என்று சொல்லலாம் *(லேவி. 6:12).* மதுபானத்தின் எழுச்சியினால் இதைச் செய்தான் என்றும் நினைக்க இடமுண்டு *(லேவி. 10:9).*

## அபினதாப் (Abinadab)

***(பெருந்தன்மையின் பிதா)***

*1.* பெலிஸ்தரின் நாட்டிலிருந்து கர்த்தரின் பெட்டி அனுப்பப்பட்டபோது, அதைக் கீரியாத்யாரீமின் மனுஷர் எடுத்து அபினதாபின் வீட்டிலே வைத்தார்கள் *(1 சாமு. 7:1).*

இருபது வருடங்களாய், அதாவது தாவீது கர்த்தரின் பெட்டியை எடுக்கும்வரை, அது இங்கே இருந்தது *(1 நாளா. 13:7).*

*2.* ஈசாயின் எட்டுக்குமாரரில் இரண்டாவதானவன். இவனும் சவுலோடு யுத்தத்திற்குப் போயிருந்த நாள்களிலே, தாவீது கோலியாத்தைக் கொன்றான் *(1 சாமு. 17:13; 1 நாளா. 2:13).*

*3.* சவுலின் குமாரரில் ஒருவன். இவனும், இவன் தகப்பன், சகோதரரும், கில்போவாவில் நடந்த யுத்தத்தில் கொல்லப் பட்டார்கள் *(1 சாமு. 31:2).*

*4.* அபினதாபின் குமாரன் சாலொமோனின் மணியகாரரில் தலைவன். இவன் சாலொமோனின் ஒரு குமாரத்தியை விவாகம் செய்தான் *(1 இரா. 4:11).*

## அபெத்தோன் (Abaddon)

### *(அழிம்பன்)*

இந்த வார்த்தை வேதாகமத்தில் வெளி. 9:11ல் மாத்திரம் காணப்படுகிறது. மற்ற இடங்களில் மரித்தவர்கள் இருக்கும் இடத்தைக் குறிக்கிறது. யோபு 26:6; 31:13ல் பாதாளம் என்றும், யோபு 28:22ல் மரணம் என்றும், சங். 88:12ல் பிரேதக்குழி என்றும் குறித்துள்ளது.

இவன் ''பாதாளத்தின்தூதன்'' எனப்படுகிறான். எபிரெயு பாஷையில் ''அபெத்தோன்'' என்றும், கிரேக்க பாஷையில் "அப்பொல்லியோன்" என்றும் சொல்லப்படுகிறான் *(வெளி. 9:11).*

கர்த்தருடைய நாள் வரும்போது பலத்த ஒரு ஜாதி தீவிரமாக வந்து பரவும் என்றும், அவர்களால் மனிதருக்கு அதிக சேதம் உண்டாகுமென்றும் குறித்திருக்கிறது. *(யோவேல் 2:1-11).*

இதிலிருந்து அக்காலத்தில் மகாசங்காரம் உண்டாகும் என்றும், ஒரு துர்ஜனப்பிரவாகம் எழும்புமென்றும், அதற்கு தலைவனாக ஒருவன் எழும்புவான் என்றும் தெரிகிறது.

## அப்சலோம் (Absalom)

### *(சமாதானத்தின் பிதா)*

தாவீதின் மூன்றாம் குமாரன் சவுந்தரியவான். கேசூரின் இராஜாவான தல்மாயின் குமாரத்தியாகிய மாக்காள் இவனுடைய தாய் *(2 சாமு. 3:3).* இவனுக்குத் தாமார் என்ற பேருள்ள சவுந்தரியமான ஒரு சகோதரி இருந்தாள். இவனுக்குச் சகோதர முறையான அம்னோன் அவள்மேல் மோகங்கொண்டு அவளைக் கற்பழித்தான் *(2 சாமு. 13:1-14).*

அப்சலோம் இதை மனதில் வைத்திருந்து, இரண்டு வருஷங்களின் பின், ஒரு பெரிய விருந்து வைத்து, தன் சகோதர முறையான

எல்லாரையும் அழைத்தான். அவ்வேளையில் அப்சலோமுடைய வேலைக்காரர் அம்னோனைக் கொன்றார்கள் *(2 சாமு. 13:15-29).*

அதின்பின் அப்சலோம் தன் பாட்டனாகிய கேசூரின் இராஜாவிடம் ஓடிப்போய், மூன்று வருடம் அங்கேயிருந்தான் *(2 சாமு. 15:8).*

பின்பு யோவாபின் தந்திரமான யோசனையின் பயனாக, தாவீது அப்சலோமை வரவழைத்தான். அவன் வந்து தன் தகப்பனுடைய முகத்தைப் பாராமல், இரண்டு வருஷம் எருசலேமிலிருந்தான் *(2 சாமு. 14:23-28).*

அப்சலோமைப்போல் சவுந்தரியமுள்ளவன் இஸ்ரவேலருக்குள் இல்லை. அவனுக்கு மூன்று குமாரரும், ஒரு குமாரத்தியும் பிறந்திருந் தார்கள் *(2 சாமு. 14:25-27).*

பின்பு யோவாப் இடைநின்று அப்சலோமைத் தாவீதோடு ஒப்புரவாக்கிவிட்டான்.

அப்சலோம் தான் இராஜாவாக வரும் நோக்கத்தோடு, இடம்பமாய் ஜீவித்து, ஜனங்களுக்கு அன்புகாட்டி, அவர்களுடைய இருதயங்க ளைக் கவர்ந்துகொண்டான் *(2 சாமு. 15:1-6).*

நான்கு வருஷம் சென்ற பின்தான் எபிரோனுக்குப்போய், ஒரு பொருத்தனை செலுத்த வேண்டுமென்று சொல்லி, தாவீதிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு அங்கேபோய், வேவுகாரரை அனுப்பி ஜனங்களை வரவழைத்தான். தாவீதின் ஆலோசனைக்காரனாகிய அகித்தோப்பேலையும் வரவழைத்து, தான் இராஜாவாக வர ஆயத்தம் செய்தான் *(2 சாமு. 15:7-12).*

தாவீது இதை அறிந்தவுடன் தன்வீட்டார் எல்லாரோடும் கூட புறப்பட்டு, எருசலேமைவிட்டு, கிதரோன் ஆற்றைக் கடந்து, கீலேயாத்துக் போனான்.

அப்பொழுது அப்சலோம் தன்னுடைய ஜனங்களோடு எருசலேமுக்கு வந்து, இராஜ்ய பாரத்தை எடுத்துக்கொண்டான். மேலும் அகித்தோப்பேலின் ஆலோசனைப்படி, தாவீதின் மறுமனையாட்டிகளிடத்தில் பிரவேசித்தான் *(2 சாமு. 16:15-23).*

பின்புஅப்சலோம் அகித்தோப்பேலின் ஆலோசனையைப் பார்க்கிலும், ஊசாயின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தாவீதுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய ஆரம்பித்தான் *(2 சாமு. 17:1-26).*

தாவீதுக்கு இது அறிவிக்கப்பட்டபோது, அவன் எழுந்து யோர்தானைக் கடந்து மக்னாயீமுக்கு வந்தான். இரு

பகுதிகளுக்குமிடையிலே எப்பிராயீம் காட்டிலே யுத்தம் நடந்தது. அப்சலோமின் ஜனங்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அவனுடைய தலை கர்வாலி மரத்தில் மாட்டிக்கொண்டிருந்தபோது, யோவாப் அவனைக் கொன்றான். ஜனங்கள் அவனை எடுத்து ஒரு குழியில் போட்டு, அவன்மேல் கற்குவியலைக் குவித்தார்கள் *(2சாமு. 18:10-17).* தாவீது அவனுக்காக துக்கங் கொண்டாடினான் *(2 சாமு. 18:33).*

தாவீது அப்சலோமுக்குத் தப்பி ஓடிப்போகையில் மூன்றாம் சங்கீதத்தைப் பாடினான்.

## அப்தோன் (Abdon)

***(எளிமையான)***

*1.* இஸ்ரவேலின் நியாயாதிபதி. பிரத்தோனியனான இல்லேலின் குமாரன். இஸ்ரவேலை எட்டு வருடம் நியாயம் விசாரித்தான். இவனுக்கு நாற்பது குமாரரும், முப்பது பேரப்பிள்ளைகளும் இருந்தார்கள். அவர்கள் எழுபது கழுதைகளின்மேல் ஏறுவார்கள் *(நியா. 12:13-15).*

*2.* பென்யமீன் கோத்திரத்தானாகிய சாஷாக்கின் குமாரன். இவன் எருசலேமிலே குடியிருந்தான் *(1 நாளா. 8:23-25).*

*3.* கிபியோனிலிருந்த பென்யமீன் கோத்திரத்து ஏலியேலின் மூத்த குமாரன். சவுலின் முற்பிதா *(1 நாளா. 8:30; 9:35,36).*

*4.* மீகாவின் குமாரன். தேவலாயத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தகத்தைப்பற்றி விசாரிக்கும்படி, யோசியா இராஜா இவனை உல்தாள் தீர்க்கதரிசியானவளிடம் அனுப்பினான் *(2 நாளா. 34:20-22).*

*5.* கெர்சோனியருக்குக் கொடுக்கப்பட்ட ஆசேர் கோத்திரத்தின் பட்டணம் *(யோசுவா 21:30).*

## அப்பொல்லோ (Apollos)

***(அழிக்கிறவன்)***

அலெக்சந்திரியா பட்டணத்திலிருந்த ஒரு வாய்ச்சாலமான, பாண்டித்தியமுள்ள ஒரு யூதன். இவன் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான். தொடக்கத்தில் யோவான் ஸ்நானனின் சீஷனாக இருந்ததாகத் தெரிகிறது.

இவன் எபேசு பட்டணம் போய், ஆவியில் அனலுள்ளவனாய், கர்த்தருக்கடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதித்தான். ஆனால், யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான். ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் அவனைச் சேர்த்துக்கொண்டு,

சுவிசேஷத்தின் கொள்கைகளை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் *(அப். 18:22-26).*

பின்பு அவன் அகாயா நாட்டிற்குப்போய், கொரிந்து பட்டணத்தில் யூதர்களுடன் தர்க்கம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தினான். *(அப். 18:27,28).* அநேகர் அவனை ஏற்றுக் கொண்டார்கள். இதினிமித்தம் கொரிந்து சபையில் மார்க்க தலைவரைப் பற்றிய பட்சபாதம் உண்டாகி, பிரிவினைகள் வந்ததைப் பற்றிப் பவுல் தன்னுடைய நிருபத்தில் குறிக்கிறான் *(1 கொரி. 1:12;3:6).*

ஆகிலும் பிற்பாடு பவுல், அப்பொல்லோ ஒரு சகோதரனென்று சொல்லி, அவன் திரும்பவும் கொரிந்து சபையைச் சந்திக்க வேண்டுமென்று விரும்பினதிலிருந்து, பவுலுக்கு அவனுடைய போதனையைப் பற்றி முழு நம்பிக்கை இருந்ததாகத் தெரியக் கிடக்கிறது *(1கொரி. 16:12).*

பவுல் திரும்பவும் அப்பொல்லோவைப்பற்றி தீத்து 3:13இல் குறித்துள்ளான்.

## அப்னேர் (Abner)

### *(ஒளியின் பிதா)*

அப்னேர் சவுலுக்குச் சகோதர முறையானவன். இவர்களிருவரும் நேர், கீஸ் என்னும் இரண்டு சகோதரரின் குமாரர் அப்னேர் சவுலுடைய சேனாபதியாயுமிருந்தான் *(1 சாமு. 14:50; 1 நாளா. 9:39).*

கோலியாத்தைத் தாவீது கொன்றதைப் பார்த்திருந்த அப்னேர், தாவீதை சவுலுக்கு முன்கொண்டு போய்விட்டான் *(1 சாமு. 17:57).*

பின்பு சவுல் தாவீதைத் தொடர்ந்துபோன சமயத்தில், அப்னேர் இராஜாவாகிய சவுலை கவனமாய்ப் பாதுகாக்கவில்லை என்று தாவீது அவனைக் கண்டித்தான் *(1 சாமு. 26:5-15).*

சவுல் மரித்தபோது அப்னேர் இஸ்போசேத்தை மகனாயீமுக்குக் கொண்டுபோய் இராஜாவாக்கினான் *(2 சாமு. 2:8-11).*

பிற்பாடு தாவீதின் சேவகருக்கும், இஸ்போசேத்தின் சேவகருக்குமிடையில் நடந்த யுத்தத்தில் அப்னேர் தோல்வியடைந்து ஓடிப் போகையில், ஆசகேல் அவனது எச்சரிப்புக்கு இணங்காமல் அவனைப் பின்தொடர்ந்து போனதினால், அப்னேர் அவனை ஈட்டியால் குத்திக் கொன்றான் *(2 சாமு. 2:18-23).*

இதன்பின் அப்னேர் தாவீதோடு சமாதானமானதினிமித்தமும், ஆசகேலின் இரத்தத்தினிமித்தமும், யோவாப் அப்னேரைக் கொன்றான் *(2 சாமு. 3:27).*

தாவீது அப்னேருக்காக துக்கங்கொண்டாடி எபிரோனில் அவனை அடக்கம் பண்ணின வேளையில், சத்தமிட்டு அழுதான் *(2 சாமு. 3:23).*

ஆனாலும் அப்னேரின் மரணம் தாவீது இஸ்ரவேலருக்கெல்லாம் இராஜாவாக வர வழிவகுத்தது.

அப்னேர் தேவாலய பரிபாலிப்புக்காகப் பொக்கிஷங்களை நேர்ந்து வைத்திருந்தான் *(1 நாளா. 26:28).*

## அமத்சியா (Amaziah)

***(கர்த்தர் பலவந்தர்)***

யூதாவின் பத்தாம் இராஜா. யோவாசின் மகன். *25*-ஆம் வயதில் இராஜாவாகி கி.மு. *796* முதல் *768* வரை அரசாண்டான் *(2 இரா. 14:1,2).* தன் தகப்பனைக் கொன்ற ஊழியக்காரரை முதலாவது கொல்லுவித்தான் *(2 நாளா. 25:1-3).*

பின்பு அவன் ஏதோமியருக்கு விரோதமாய்ப்போய் அவர்களை முறிய அடித்ததோடு, சேயீர் புத்திரரின் தெய்வங்களைக் கொண்டுவந்து அவைகளைப் பணிந்துகொண்டான். இதினிமித்தம் ஒரு தீர்க்கதரிசி அவனைக் கண்டித்தான் *(2 நாளா. 25:14-16).*

இதன்பின் அமத்சியா, இஸ்ரவேல் இராஜாவாகிய யோவாசோடு சாமர்த்தியம் பார்க்கப்போன வேளையில் தோற்கடிக்கப்பட்டான். யோவாஸ் அவனைப் பெத்ஷிமேசில் பிடித்து, எருசலேமுக்குக் கொண்டுபோய், அலங்கத்தின் ஒரு பகுதியை இடித்து, ஆலயத்தின் பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப் போனான் *(2 நாளா. 25:21-24).*

அமத்சியாவின் அரசுமுறை ஜனங்களுக்குப் பிரியமில்லாதிருந்ததினால், அவனுக்கு விரோதமாகக் கட்டுப்பாடு பண்ணி, அவனைக் கொண்டு யூதாவின் நகரத்தில் அடக்கம் பண்ணினார்கள் *(2 நாளா. 25:28).*

யோவாஸ் மரித்தபின் அமத்சியா பதினைந்து வருடம் உயிரோடிருந்தான் *(2 இரா. 14:17).*

இவனுடைய பெயர் *1* நாளா. *3:11*இல் சொல்லப்பட்ட இராஜ வம்ச அட்டவணையில் காணப்பட்டாலும், மத்.*1*-ஆம் அதிகாரத்தில் குறிக்கப்படவில்லை.

*2.* மெராரி குடும்பத்து ஒரு லேவியன் *(1 நாளா. 6:45).*

*3.* இரண்டாம் யெரொபெயாமின் நாள்களில் பெத்தேலிலிருந்த ஒரு ஆசாரியன். இவன் ஆமோஸ் தீர்க்கதரிசிக்கு விரோதமாய் குற்றஞ்சாட்டினான் *(ஆமோஸ் 7:10-17).*

*4.* யோஷா என்பவனின் பிதா *(1 நாளா. 4:34).*

## அமலேக்கியர் (Amalekites)

**(அமலேக்குக்குரியவர்கள்)**

**(அமலேக்கு-சமபூமிவாசி)**

அமலேக்கு ஏசாவின் பேரன் *(ஆதி. 36:12).* அவனுடைய சந்ததியார் அமலேக்கியர் எனப்பட்டார்கள். இவர்கள் கானான் தேசத்துத் தென்புறத்தில் குடியிருந்தார்கள். *(எண். 13:29).* பின்பு இவர்கள் ஆவிலா துவக்கி எகிப்துக்கு எதிரே இருக்கிற சூருக்குப் போகும் எல்லை மட்டும் குடியிருந்தார்கள் *(1 சாமு. 15:7).* இவர்கள் இஸ்ரவேலருடைய பாரம்பரிய சத்துருக்கள்.

இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணுகையில் அமலேக்கியர் வந்து ரெவிதீமிலே அவர்களோடு யுத்தம் பண்ணினார்கள். யுத்தம் நடக்கையில் மோசே தன் கையை ஏறெடுத்தான். யோசுவா அவர்களை முறியடித்தான் *(யாத். 17:8-13).*

பின்பு காதேசில் கர்த்தருடைய கட்டளைக்கு விரோதமாய் இஸ்ரவேலர், வாக்குத்தத்தம்பண்ணின இடத்துக்குத் துணிந்து போனபோது அமலேக்கியராலும், கானானியராலும் துரத்தப் பட்டார்கள் *(எண். 14:40-45).*

இஸ்ரவேலர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், மோவாபின் இராஜாவாகிய எக்லோன் அமலேக்கியரை கூட்டிக்கொண்டுவந்து இஸ்ரவேலரை முறியடித்தான் *(நியா. 3:13).*

சாமுவேலின் சொற்படி, சவுல் போய் அமலேக்கியரை மடங்கடித்தான். ஆனாலும் அவர்களுடைய இராஜாவாகிய ஆகாகைத் தப்பவைத்ததினிமித்தம் சாமுவேல் அவனைக் கண்டித்து ஆகாகையும் துண்டித்துப்போட்டான் *(1 சாமு. 15:33).*

சிக்லாகு தாவீதின் வசத்திலிருந்த நாள்களில், அவன் வேறே இடத்துக்குப் போயிருந்தவேளையில், அமலேக்கியர் சிக்லாகைக் கொள்ளையடித்து, ஜனங்களையும் சிறை பிடித்துக்கொண்டு போனார்கள். தாவீது அவர்களைத் தொடர்ந்துபோய், அவர்களை முறியடித்து, கொள்ளைப் பொருள்களையும் திருப்பிக்கொண்டான் *(1 சாமு. 30:1-20); 2 சாமு 1:1).*

கில்போவா மலையில் நடந்த யுத்தத்தில், சவுலும் அவனுடைய குமாரரும் கொல்லப்பட்ட செய்தியை ஓர் அமலேக்கியன் தாவீதுக்கு அறிவித்தான் *(2 சாமு. 1:5-16)*.

பின்பு சிமியோனின் புத்திரர் சேயீர் மலைத்தேசத்திற்குப் போய், மீதியாயிருந்த அமலேக்கியரை மடங்கடித்து அங்கே குடியேறினார்கள் *(1 நாளா. 4:42,43)*.

அமலேக்கு முந்தியெழும்பினவனானாலும், அவன் முடிவிலே முற்றும் நாசமாவான் என்று பிலேயாம் சொன்னது நிறைவேறிற்று *(எண். 24:20)*.

அமலேக்கின் பேரை வானத்தின் கீழ் இராதபடிக்கு நாசம் பண்ணுவேனென்று கர்த்தர் சொன்ன வார்த்தையும் நிறைவேறிற்று *(உபா. 25:19; யாத். 17:14)*.

## அமாசா (Amasa)

**(பாரம்)**

1. அபிகாயில், இஸ்ரவேலனாகிய எத்திராவுக்குப் பெற்ற மகன். அப்சலோம் இவனை யோவாபுக்குப் பதிலாக இராணுவத்தலைவனாக்கினான் *(2 சாமு. 17:25)*. அமாசாவின் தகப்பன் இஸ்மவேலனாகிய யெத்தேர் என்றும் குறித்துள்ளது *(1 நாளா. 2:17)*.

தாவீதின் மனுஷருக்கும், அப்சலோமின் மனுஷருக்கு மிடையில் நடந்த யுத்தத்தில் யோவாப் அமாசாவைத் தோற்கடித்தான் *(2 சாமு. 18:6-8)*.

பின்பு அமாசா தாவீதோடு ஒப்புரவாகிக்கொண்டான் *(2 சாமு. 19:13)*.

பிக்கிரியின் மகனாகிய சேபா கலகம் பண்ணினபோது, தாவீது யூதா மனுஷரை சேர்த்துக்கொண்டு வரும்படி அமாசாவை அனுப்பின வேளையில், யோவாப் அவனைச் சந்தித்து தந்திரமாய்க் கொன்றான் *(2 சாமு. 20:10)*.

2. இவன் எப்பிராயிம் புத்திரரின் தலைவரில் ஒருவன். அத்லாயின் குமாரன். ஆகாஸ் அரசாண்ட நாள்களில் இஸ்ரவேல் இராஜாவாகிய பெக்கா, யூதரில் அநேகரை சிறைபிடித்து, சமாரியாவுக்குக் கொண்டுபோன வேளையில், இவனும், வேறு தலைவரும் எழும்பி சிறைப்பட்டவர்களை விடுதலையாக்கினார்கள் *(2 நாளா. 28:9-15)*.

## அம்மோன்,
## அம்மோனியர் (Ammon)

***(என் நாட்டவன்)***

லோத்துக்குப் பிறந்த இரண்டாம் மகனின் பெயர் பென்னம்மி (ஆதி. 19:38). இவனுடைய சந்ததியார் அம்மோனியர். இவர்கள் மோவாப் தேசத்துக்கும், யாப்போக் ஆற்றுக்குமிடையே குடியேறி யிருந்தார்கள்.

இஸ்ரவேல் பிரயாணம் பண்ணுகையில் இவர்கள் மோவாபிய ரோடு கூடி இஸ்ரவேலைச் சபிக்கும்படி பிலேயாமை வரவழைத் தார்கள். இதினிமித்தம் இவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது என்று பத்துத் தலைமுறை மட்டும் கர்த்தர் சொன்னார் (உபா. 23:3-6).

நியாயாதிபதிகளின் நாள்களில் அம்மோனியர் இஸ்ரவேல் மேல் யுத்தம் செய்தார்கள். அப்பொழுது கீலேயாத்திய மூப்பர் யெப்தாவைத் தோப் தேசத்திலிருந்து அழைத்து, அவனைத் தங்களுக்குத் தலைவனாக்கி, யுத்தத்துக்கு அனுப்பினார்கள். அவன் போய் அவர்களைத் தோற்கடித்தான் (நியா. 11:4-33).

பின்பு நாகாஸ் என்னும் அம்மோனியன் கீலேயாத்திலிருக்கிற யாபேசை முற்றுகைபோட்டபோது, சவுல் அவர்களை முறியடித்தான் (1 சாமு. 11:1-11).

அம்மோனிய இராஜாவாகிய நாகாஸின் மகன் ஆனூன் இராஜாவானபோது, தாவீது அவனுக்குத் தயை செய்யும்படி தனது ஊழியக்காரரை அனுப்பின வேளையில், அவன் அவர்களை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டான். இதினிமித்தம் யுத்தம் உண்டாகி, அம்மோனியர் தோற்கடிக்கப்பட்டார்கள் (2 சாமு. 10:6-14).

அதின்பின் யோவாப் அம்மோனியருடைய ரப்பா பட்டணத்தின் மேல் யுத்தம் செய்து, இராஜதானியைப்பிடித்த பின், தாவீது போய், அவர்களுடைய இராஜாவின் கிரீடத்தை எடுத்துக்கொண்டு, ஜனங்களையும் கொடூரமான அடிமை வேலைக்குட்படுத்தினான் (2 சாமு. 12:26-31).

சாலொமோன் அம்மோன் ஸ்திரீகளின்மேல் ஆசை வைத்து அவர்களோடு ஐக்கியப்பட்டதுமல்லாமல், அவர்களுடைய அருவருப்பாகிய மில்கோமையும் பின்பற்றினான் (1 இரா. 11:1-6).

ரெகொபெயாமின் தாய் ஒரு அம்மோனிய ஸ்திரீ (1 இரா. 14:21; 2 நாளா. 12:13)

யோசபாத்துக்கு விரோதமாய் மோவாபியரும், அம்மோனியரும் வந்தபோது தோற்கடிக்கப்பட்டார்கள் (2 நாளா. 20:22).

உசியாவும், யோதாமும் இவர்களைப் பகுதி கட்டச்செய்தார்கள் *(2 நாளா. 26:8; 27:5)*

அம்மோனியரும், வேறு ஜாதிகளும் யோயாக்கீமுக்கு விரோதமாய் யுத்தம் செய்தார்கள் *(2 இரா. 24:2)*.

இஸ்ரவேலும், யூதாவும் சிறைப்பட்டுப்போன வேளையில் அம்மோனியர் அவர்களை நிந்தித்ததினிமித்தம் அவர்கள்மேல் தேவ தண்டனை வருமென்று எசேக்கியேல் கூறினான் *(எசே. 25:1-7)*.

சிறையிருப்பின் பின்பும், எருசலேமின் அலங்கங்கள் கட்டப்பட்ட போதும் இவர்கள் தடையாயிருந்தார்கள் *(நெகே. 4:6,7)*.

இஸ்ரவேலர் இந்த ஜாதியா ரோடு சம்பந்தம் கலந்ததைப் பற்றி எஸ்றாவும், நெகேமியாவும் கண்டித்தார்கள் *(எஸ்றா 9:1,2; நெகே. 13:21,25)*.

அம்மோன் புத்திரர் மேலும், அவர்கள் தேசத்தின் மேலும் வரப்போகிற தேவ தீர்ப்பைக் குறித்து தீர்க்கதரிசிகள் கூறினார்கள் *(எரே. 49:1-6; எசே. 21:28-32; ஆமோஸ் 1:13; செப். 2:8,9)*.

## அரராத், ஆரராத் (Ararat)
### (பரிசுத்த பூமி)

மெசொப்பொத்தாமியாவுக்கு வடகிழக்கே ஆர்மோனியா தேசத்திலுள்ள ஓர் உயர்ந்த மலைத்தொடர். இதிலுள்ள சிகரங்கள் ஒன்றின்மேல் நோவா செய்த பேழை தங்கிற்று *(ஆதி. 8:4)*.

பெர்சியா நோவாவின் மலையென்று சொல்லுகிற *13,000* அடி, *17,000* அடி உயரமான இரண்டு கொடுமுடிகளுள்ள மாசிஸ் (Massis) மலை என்பதே, வேதாகமத்தில் குறித்துள்ள அரராத் என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது. பாரம்பரியத்தின்படி நோவாவின் தோட்டமும், அவன் அடக்கம் பண்ணப்பட்ட இடமும் அவ்விடத்திலிருக்கிற தாகச் சொல்லப்படுகிறது.

## அரிஸ்தர்க்கு (Aristarchus)

தெசலோனிக்கேயிலிருந்த ஒரு மக்கெதோனிய தேசத்தான். பவுலுக்கு வழித்துணையாய்வந்த இவனையும், எபேசுவில் தட்டாரால் உண்டான கலகத்தில், ஜனங்கள் இழுத்துக்கொண்டு அரங்க சாலைக்குப் போனார்கள் *(அப். 19:29)*.

பின்பு இவன் பவுலோடு கிரேக்க தேசத்திலிருந்து மக்கெதோனியா வழியாய் எருசலேமுக்குப் போனான் *(அப். 20:24)*. பவுல் ரோமாபுரிக்குப் போனபோதும் கூடப்போனான் *(அப். 27:2)*. பின்பு

காவலிலும் இருந்தான் (கொலோ. 4:10). பவுல், "என்னோடுகூட காவலிருக்கிற அரிஸ்தர்க்கு" என்கிறான் (பிலே. 24).

நீரோ (Nero) ராயன் நாள்களில் இவன் இரத்தசாட்சியாய்க் கொல்லப்பட்டான் என்கிற பாரம்பரியமுண்டு.

## அரியேல் (Ariel)

### *(தேவ சிங்கம்)*

*1. லேவியின் புத்திரரை அழைத்துவரும்படி எஸ்றா கசிப்பியாவுக்கு அனுப்பின தலைவரில் ஒருவன் (எஸ்றா 8:16).*

*2. அரியேல் என்பது எருசலேமை அல்லது சீயோனைக் குறிக்கிறதாக ஏசாயா சொல்லியுள்ளான். அதாவது "தேவ சிங்கம்" அல்லது "வீரவான்களின் பட்டணம்" என்றும் கருதப்படும்.*

*அக்கினிப்பீடம் அல்லது பலி செலுத்தும் இடம் என்றும் விளங்கலாம் (ஏசாயா 29:1-2, 7).*

## அர்க்கிப்பு (Archippus)

### *(பிரதான பணியாள்)*

*பவுலுடைய உடன் போர்ச்சேவகன் (பிலே.:2). கொலோசெயிலிருந்த சபையில் ஒரு ஊழியக்காரன் (கொலோ. 4:17).*

*பின்பு இவன் லவோதிக்கேய சபையில் கண்காணியாயிருந்து இரத்த சாட்சியாய் மரித்தானென்று சொல்லப்படுகிறது.*

## அர்தசஷ்டா (Artaxerxes)

### *(மேன்மையான இராஜா)*

*பூர்வீக பெர்சிய இராஜாவாகிய அகாஸ்வேரு அல்லது சஷ்டா என்பவனின் மகன். இவன் கி.மு. 465 முதல் 424 வரை அரசாண்டான். நீண்ட கையுள்ளவன் என்றும் அழைக்கப்பட்டான். அவனுக்கு நீண்ட கைகளிருந்ததினாலோ, அல்லது அவனுடைய விசாலமான இராஜ்யத்தின் நிமித்தமோ இந்தப் பெயர் வந்திருக்கலாம்.*

*இவனுடைய ஆளுகையின் ஏழாம் வருடத்தில் சிறைப் பட்டிருந்த யூதரை இரண்டாம் முறையும் எருசலேமுக்குக் கொண்டு போகும்படி உத்தரவு கொடுத்தான் (எஸ்றா. 7-ஆம் அதிகாரம்)*

*இருபதாம் வருஷத்தில் பரிசுத்த நகரத்தின் அலங்கங்களைக் கட்டும்படி, நெகேமியாவுக்கும் வேறு யூதர்களுக்கும், உத்தரவு அருளினான் (நெகே. 2:1-8).*

## அர்மகெதோன் (Armageddon)

### *(மெகிதோவின் குன்று)*

மகெதோன் மலை. இதின் அர்த்தம் கூடிச் சேரும் இடம் அல்லது யுத்த ஸ்தலம் என்பது (வெளி. 16:6). இந்த இடம் கலிலேயா மலைகளுக்கும், இஸ்ரவேல் மலைகளுக்கும் இடையிலுள்ள ஒரு பெரிய சமபூமி. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஒரு பிரசித்திபெற்ற யுத்த பூமியாக இருந்தது.

இங்கே பாராக் சிசெராவையும், கானானியரையும் தோற்கடித்தான் (நியா. 5:19).

இஸ்ரவேல் இராஜ்யத்துக்கடுத்த பிராண சேத சம்பவங்களும் நடந்திருக்கின்றன. யோசியா இராஜா இவ்விடத்தில் கொல்லப்பட்டான் (2 இரா. 23:29,30).

கடைசி நாள்களில் பிசாசுகளின் ஆவிகள், தேவனுடைய மகா நாளில் நடக்கும் யுத்தத்திற்கு, பூமியின் இராஜாக்களை இந்த இடத்தில் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டு போகிறது. (வெளி. 16:14-16).

## அர்வனா (Arauna)

### *(கர்த்தர் உறுதியாயிருக்கிறார்)*

தாவீது இஸ்ரவேலை இலக்கம் பார்த்ததினால், கொள்ளை நோயுண்டானபோது காத் தீர்க்கதரிசி கர்த்தருக்குப் பலியிடும்படி, தாவீதுக்கு யோசனை சொன்னான். அதின்படி தாவீது எபூசியனாகிய அர்வனாவின் களத்தை கிரயத்துக்கு வாங்கி, பலி செலுத்தினான். அது மோரியா மலை மேலிருந்தது (2 சாமு. 24:15-25; 1 நாளா. 21:15-18).

பிற்பாடு சாலொமோன் தேவாலயத்தை அந்த இடத்திலேயே கட்டினான் (2 நாளா. 3:1).

## அர்னோன் (Arnon)

### *(விரைந்தோடும் வெள்ளம்)*

கிழக்குப் பக்கத்திலிருந்து சாக் கடலுக்குள் விழுகிற ஓர் ஆறு. அர்னோன் மோவாபுக்கும் எமோரியருக்கும் நடுவே இருக்கிற மோவாபின் எல்லை (எண். 21:13, 26). தேசம் பங்கிடப்பட்டபோது, அர்னோன் ரூபன் கோத்திரத்துக்கும், மோவுபுக்கும் இடையிலுள்ள எல்லையாயிற்று (யோசுவா 13:15,16; நியா. 11:18).

இந்த நதியில் அநேக துறைகளிருந்ததாகத் தெரிகிறது (ஏசாயா. 16:2).

## அலெக்சந்தர் (Alexandar)
### (ஜனங்களுக்கு உதவிக்காரன்)

மக்கெதோனியா இராஜாவாகிய பிலிப்பு என்பவனின் மகன். உலகத்தை வென்ற "மகா அலெக்சந்தர்" எனப்பட்டவன். இவன் கி.மு. 336 முதல் 326 வரை மக்கெதோனியாவில் இராஜ்யபாரம் பண்ணினான்.

தொடக்கத்தில் கிரேக்க தேசத்தைக் கீழ்ப்படுத்தினதின்பின், தீரு, காசா, எகிப்து முதலிய தேசங்களைப் பிடித்துக்கொண்டு வட இந்தியா மட்டும் போயிருந்தான்.

பாரம்பரியத்தின்படி இவன் எருசலேமுக்கும் போனதாகச் சொல்லப்படுகிறது. அச்சமயம் பிரதான ஆசாரியனாயிருந்த யதுவா (Jaodua-நெகே. 12:11) என்பவன் அலங்கார வஸ்திரங்கள் தரித்துக் கொண்டு தன்னுடைய மற்ற ஆசாரியர் எல்லாரோடுங்கூட அலெக்சந்தரை சந்திக்கப் போனானென்றும், அப்பொழுது அவன் இவர்களைப் பார்த்து, மனதில் உணர்த்தப்பட்டு கர்த்தரின் நாமத்தை மகிமைப்படுத்தினானென்றும் தெரியவருகிறது.

இவன் திரும்பித் தன் தேசத்துக்குப் போகிற வழியில் பாபிலோனியாவில் காய்ச்சல் பிடித்து மரித்தான்.

2. சிரேனா ஊரானாகிய சீமோனின் மகன். இவன் இயேசுவுடைய சிலுவையைச் சுமக்க பலவந்தம் பண்ணப்பட்டான் (மாற்கு. 15:21).

3. பிரதான ஆசாரியருடைய குடும்பத்தைச் சேர்ந்தவன். பேதுருவையும், யோவானையும் விசாரணை செய்தவர்களிலொருவன் (அப். 4:6).

4. எபேசுவில் கலகம் நடந்த வேளையில் பவுலோடிருந்தவர் களில் ஒருவன் (அப். 19:33).

5. எபேசுவிலிருந்த ஒரு கிறிஸ்தவன். பின்பு இவன் விசுவாசத்தை சேதப்படுத்தி, வேதப் புரட்டனானதினிமித்தம், பவுல் அவனைச் சபையிலிருந்துத் தள்ளிவிட்டான் (1 தீமோ 1:20).

6. கன்னானாகிய அலெக்சந்தர் பவுலுக்கு வெகு தீமை செய்தவன் (2 தீமோ. 4:14).

## அனனியா (Ananiah, Ananias)
### (கர்த்தர் கிருபையுள்ளவர்)

1. அசரியா என்பவனின் பாட்டன் (நெகே. 3:23).

2. நோப் ஆதசேர் என்னும் பென்யமீன் கோத்திரத்துப் பட்டணங்களுக்கு அருகில் இருந்த ஒரு பட்டணம் (நெகே. 11:32).

*3.* அரண்மனைத் தலைவனாகிய அனனியாவை எருசலேமின் காவல் விசாரணைக்கு நெகேமியா ஏற்படுத்தினான் *(நெகே. 7:2).*

*4.* எரேமியா தீர்க்கதரிசியை எதிர்த்து நின்ற, ஒரு பொய்த் தீர்க்கதரிசி. இவன் கர்த்தருக்கு விரோதமாய் பேசினபடியால் எரேமியாவின் சொற்படி அவ்வருடத்திலேயே செத்துப்போனான் *(எரே. 28:17).*

*5.* தானியேலோடுகூட பாபிலோனுக்குப் போன கூட்டாளிகளி லொருவன் *(தானி. 1:7,19).*

*6.* சப்பீராளின் புருஷன் இவர்களிருவரும் எருசலேம் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள். இவர்கள் தங்கள் காணியாட்சியை விற்று, ஒரு பங்கை வஞ்சித்து வைத்துக்கொண்டு, மீதியை பேதுருவிடம் கொடுத்தபோது, அவன் அவர்களுடைய பொய்யை வெளிப் படுத்தினதின் பயனாக இருவரும் மரித்தார்கள் *(அப். 5:1-10).*

*7.* தமஸ்குவிலிருந்த தேவ பக்தியுள்ள ஒரு மனுஷன். கர்த்தரின் சொற்படி இவன் சவுலினிடம் போய், அவன் பார்வையடையும்படி செய்து, ஞானஸ்நானம் கொடுத்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் படியும் சொன்னான் *(அப். 9:10-18).*

*8.* ஏரோது இராஜா ஏற்படுத்தின ஒரு பிரதான ஆசாரியன் *(கி.பி. 47-59).* இவன், சமாரியரைக் கொடூரமாய் நடத்தினானென்ற குற்றச்சாட்டை விசாரணைச் செய்வதற்காக கிலவுதியுராயனிடம் ரோமாபுரிக்கு, அனுப்பப்பட்டான். அவன் குற்றவாளி யென்று காணப்படாததினிமித்தம் திரும்பவும் ஆசாரிய ஊழியம் செய்தான். ஆனால் மறுபடியும் அவன் அநியாயங்கள் செய்தபோது ஜனங்களால் கொல்லப்பட்டான். இவன் ரோமருடைய ஆளுகைக்குச் சார்பாயிருந்தவன்.

பேலிக்ஸ் இராஜா முன் பவுலுக்கு விரோதமாய்க் குற்றஞ்சாட்டின பிரதான ஆசாரியன் இவன். பவுல் "வெள்ளையடிக்கப்பட்ட சுவரே" என்று இவனைப் பார்த்துச் சொன்னான் *(அப். 23:2,3; 24:1).*

## அன்னா (Anna)

**(கர்த்தரின் கிருபை)**

காய்பாவின் மாமன். கி.பி. 7 முதல் 16 வரை பிரதான ஆசாரியனாய் இருந்தான். இந்த அன்னாசேத் என்பவனின் மகன். கி.பி. 7இல் பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்டு கி.பி. 13இல் தள்ளப்பட்டான்.

வேதாகமத்தில் சில இடங்களில் இவர்கள் இருவரும் ஒரே தருணத்தில் ஆசாரியராக இருந்ததாகக் கூறியுள்ளது (லூக்கா 3:2). வேறு சில இடங்களில் ஒருவனை மாத்திரம் குறித்துள்ளது.

ஒருவேளை இயேசு விசாரணை செய்யப்பட்ட வேளையில் காய்பா பிரதான ஆசாரியனும், அன்னா ஆலோசனைச் சங்கத்தின் தலைவனாகவும் இருந்திருக்கலாம்.

அன்னாவுடைய குமாரர் ஐந்து பேரும், மருமகன் காய்பாவும் அந்த உத்தியோகத்தில் இருந்தார்கள்.

இயேசுவைக் கெத்செமனேத் தோட்டத்தில் பிடித்தப்பின், முதலாவதாக அன்னாவிடம் கொண்டுபோனார்கள் (யோவான் 18:13). இவன் பிரதான ஆசாரியன் என்று யோவான் 18:19ல் கூறியுள்ளது.

ரோமர் பிரதான ஆசாரியர்மாரை தங்கள் இஷ்டப்படி ஏற்படுத்தியும், தள்ளியும் வந்தபோதிலும், யூதர் அந்தப் பதவி ஜீவிய காலத்துக்குரியதென்று வாதித்தார்கள்.

## அன்னாள் (Anna, Hannah)

***(கர்த்தரின் கிருபை)***

1. ஆசேர் கோத்திரத்தாள். பானுவேலின் குமாரத்தி. இவள் ஒரு தீர்க்கதரிசி. நூறு வயதுக்கு மேலே இருந்த இவள், இரவும், பகலும் தேவாலயத்தில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தாள் (லூக்கா. 2:36).

இவளும் சிமியோனைப்போல, எருசலேமிலே மீட்புண்டாகக் காத்திருந்தவள். இவள் இயேசு என்னும் பிள்ளையைத் தேவாலயத்தில் கண்டு, அவரே மேசியா என்று கூறினாள் (லூக்கா. 2:36-38).

2. எப்பிராயீம் கோத்திரத்து, ராமதாயீம் ஊரானாகிய எல்க்கானா என்ற ஒருவன் இருந்தான். அவனுக்கு அன்னாள், பென்னினாள் என இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அன்னாளுக்கோ பிள்ளை இல்லை.

அன்னாள், தன் புருஷனோடு, வருடா வருடம் கர்த்தருக்குப் பலியிட சீலோவுக்குப் போவது வழக்கம். அவள் தனக்கு ஒரு ஆண்பிள்ளை கிடைத்தால், அவனைத் தேவ ஊழியத்துக்கு ஒப்புக்கொடுப்பதாக பொருத்தனை செய்து, ஜெபித்து வந்தாள். அப்படியே ஓர் ஆண் பிள்ளை கிடைத்தபோது "தேவன் கேட்டார்" என்ற அர்த்தமுள்ள சாமுவேல் என்னும் பெயரைக் கொடுத்தாள் (1 சாமு. 1:1-20).

பின்பு பெற்றோர் அந்தப் பிள்ளையை சீலோவுக்குக் கொண்டு போய், ஏலியிடம் கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுத்தார்கள் (1 சாமு. 1:24-28).

அப்பொழுது அவள் பாடின ஸ்தோத்திரப்பாட்டு தீர்க்கத்தரிசன வசனமாயிருந்தது *(1 சாமு. 2:1-10)*. இங்கே முதன்முதல், அபிஷேகம் பண்ணப்பட்டவரைப் பற்றி கூறியுள்ளது.

அன்னாளுக்கு திரும்ப ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள் *(1 சாமு. 2:21)*. அவள் வருடந்தோறும் சின்னச்சட்டையைத் தைத்து, சீலோவுக்குப்போய், அதைச் சாமுவேலுக்குக் கொடுத்தாள் *(1 சாமு. 2:19)*.

இயேசு பிறந்தபோது, மரியாள் பாடின பாட்டு இவளுடைய பாட்டுக்கு ஒத்தது *(லூக்கா. 1:46-55)*.

## ஆகாக் (Agag)

***(யுத்தப்பிரியன்)***

இது அமலேக்கிய இராஜாக்களுக்குரிய ஒரு பொதுப் பெயர்.

1. பிலேயாமின் தீர்க்கதரிசன வசனத்தில் இந்தப் பெயர் குறித்துள்ளது *(எண். 24:7)*.

2. சவுல் இராஜா, அமலேக்கியரை அழிக்கும்படி அனுப்பப்பட்டபோது, அவன் அவர்களின் இராஜாவாகிய ஆகாகைக் கொல்லாமல் உயிரோடே பிடித்துக்கொண்டு வந்தான் *(1 சாமு. 15:8,9)*.

இதினிமித்தம் சாமுவேல் சவுலைக் கண்டித்தபின், ஆகாகைத் துண்டித்துப் போட்டான். ஆகாக் செய்த அக்கிரமங்களினிமித்தம் இப்படி அவனுக்கு நடந்தது *(1 சாமு. 15:32,33)*.

## ஆகாகியன் (Agagite)

***(ஆகாகுக்குரியவன்)***

ஆகாக் குடும்பத்தைச் சேர்ந்தவன். யூதர் அமலேக்கியரை வெறுத்தபடியால், ஆகாகியன் என்பது அவர்களுக்கு ஒரு நிந்தையான சொல்லாயிருந்தது. அகாஸ்வேருவுக்குக் கீழிருந்த ஆமான், ஓர் ஆகாகியன் *(எஸ்தர். 3:1, 10;8:5; 9:24)*.

சாமுவேல் வெட்டிக்கொன்றவன் ஆகாகின் சந்ததியானானபடியால், இவன் தங்களை விரோதித்தானென்று யூதர் எண்ணினார்கள்.

## ஆகாஸ் (Ahaz)

***(அவர் பிடித்துக்கொள்கிறார்)***

1. யூதாவின் இராஜாவாகிய யோதாமின் மகன். இவன் இருபது வயதில் இராஜாவாகி கி.மு. 740 முதல் 724 வரை அரசாண்டான். *(2 இரா. 16:2)*.

இவன் பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்து பலியிட்டு, தன் குமாரரை அக்கினியில் தகித்தான் *(2 இரா. 16:3,4; 2 நாளா. 28:1-4)*. தன்னுடைய மேல்வீட்டில் வானசேனைகளுக்குப் பலிபீடங்களைக் கட்டினான் *(2 இரா. 23:12)*.

ஆகாஸ் இஸ்ரவேலுக்கும், சீரியாவுக்கும் விரோதமாக ஏசாயாவின் ஆலோசனையைக் கேளாமல், அசீரியா இராஜாவின் உதவியைத் தேடி, பொக்கிஷங்களையும், வெள்ளியையும், பொன்னையும் எடுத்து அவனுக்குக் காணிக்கையாக அனுப்பினான் *(2 இரா. 16:8)*. இவ்விதமாய் யூதா அசீரியாவுக்குக் கீழ்ப்பட்டது.

ஆகாஸ் திறை கொடுக்கும் முறையின்படி, திகிலாத்பிலேசரைச் சந்திக்க தமஸ்குவுக்குப் போனவேளையில். அங்கிருந்த பலிபீடத்தைக் கண்டு, அதின் மாதிரியை எருசலேமுக்கு அனுப்பி, ஆசாரியனாகிய உரியா அதைப்போன்ற ஒரு பலிபீடத்தைச் செய்யும்படி சொன்னான்.

ஆகாஸ் திரும்பி வந்து, அந்த பலிபீடத்தில் பலி செலுத்தினான். அதோடு அசீரியா இராஜாவினிமித்தம் தேவாலயத்திலிருந்த மண்டபங்களை ஆகாஸ் அப்புறப்படுத்தினான் *(2 இரா. 16:18)*.

இவைகளினிமித்தம் தேவன் அவனைச் சீரிய இராஜாவின் கையில் ஒப்புக்கொடுத்தார். அவன் இவர்களை முறிய அடித்து அநேகரை சிறைப் பிடித்துக்கொண்டுபோனான். ஆனாலும் ஓதேத் என்னும் ஒரு தீர்க்கதரிசி முன்வந்து, அவர்களைத் திரும்பி அனுப்பும்படி செய்தான் *(2 நாளா. 28:5-15)*.

சீரியரும், எப்பிராயீமியரும் யூதாவுக்கு விரோதமாய்ச் சேர்ந்து கொண்டார்களென்று ஆகாஸ் கேள்விப்பட்டபோது, அவனுடைய இருதயம் கலங்கினது. கர்த்தருடைய சொற்படி ஏசாயா அவனிடம் போய், அவனைத் தைரியப்படுத்தி, கர்த்தரிடம் ஓர் அடையாளத்தைக் கேட்கும்படி சொன்னான். அவன் கேட்கமாட்டேன் என்றபோது, ஏசாயா இம்மானுவேலைப்பற்றிய பேர்பெற்ற தீர்க்கதரிசனத்தை உரைத்தான் *(ஏசா. 7:10-16)*.

ஆகாஸ் பதினாறு வருடம் அநியாயமாய் அரசாட்சி செய்தபின் மரித்தான்.

எருசலேமில் இராஜாக்களின் கல்லறைகளுக்கு வெளியே இவன் அடக்கம் பண்ணப்பட்டான் *(2 நாளா. 28:27)*.

ஆகாஸ் ஒரு சூரிய கடிகாரம் உண்டாக்கியிருந்தான் *(ஏசா. 38:7)*.

அவன் குமாரனாகிய எசேக்கியா அவன் ஸ்தானத்தில் இராஜாவானான் *(2 இரா. 16:20)*.

2. பென்யமீன் கோத்திரத்து சவுலின் மகனாகிய யோனத்தானின் பேரன் *(1 நாளா. 8:35,36)*.

## ஆகாப் (Ahab)

### *(தகப்பனின் சகோதரன்)*

*உம்ரியின் மகன். இஸ்ரவேலின் ஏழாம் இராஜா. கி.மு. 919 முதல் 897 வரை இருபத்திரண்டு வருடம் அரசாண்டான். எத்பாகாலின் குமாரத்தியாகிய யேசபேலை விவாகம் செய்து, பாகாலைச் சேவித்து, சமாரியாவில் பாகாலுக்குக் கோயிலைக் கட்டிப் பலிபீடத்தையும் எடுப்பித்தான் (1 இரா. 16:29-33).*

அந்நாள்களில் சமாரியாவில் பஞ்சம் கொடிதாயிருந்தது. மூன்று வருடமாகையில் கர்த்தருடைய சொற்படி, எலியா போய் ஆகாபைச் சந்தித்தான். எலியா ஆகாபை நோக்கி, இந்தப் பஞ்சம் பாகாலைப் பின்பற்றுகிறதினாலேயே வந்ததென்றும், மெய்யான தெய்வம் யாரென்று அறியும்படி பாகாலின் தீர்க்கதரிசிகளையெல்லாம் கர்மேல் மலைமேல் கூடிவரச் செய்யும்படி சொன்னான். ஆகாப் அப்படியே செய்தபோது இருபகுதியாரும் பலி செலுத்தி, எலியாவின் தேவனே மெய்த்தேவன் என்று வெளிப்படவே, எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளையெல்லாம் கொன்றுபோட்டான். மழையும் பெய்தது. ஆகாப் மழைக்குத் தப்பும்படி யெஸ்ரயேலுக்கு ஓடிப்போனான் *(1 இரா. 18:1-45).*

அந்நாள்களில் சீரிய இராஜாவாகிய பெனாதாத் தன் சேனையைக் கூட்டிக்கொண்டு சமாரியாவை முற்றுகை போட்டான். நடந்த யுத்தத்தில் கர்த்தருடைய கிரியையினால் சீரியர் முறிந்தோடிப் போனார்கள்.

மறு வருடமும் பெனாதாத் சீரியரைச் சேர்த்துக்கொண்டு, இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ண ஆப்பெக்குக்கு வந்தார்கள். இந்த முறையும் கர்த்தருடைய சொற்படி இஸ்ரவேலர் சீரியரை முறிய அடித்தார்கள். பெனாதாத் ஓடிப் பதுங்கிக்கொண்டான். ஆனாலும் ஆகாப் அவனோடு உடன்படிக்கைபண்ணி அவனைத் தப்ப வைத்தான். இதினிமித்தம் தேவதீர்ப்பு ஆகாப்மேல் வருமென்று ஒரு தீர்க்கதரிசி அவனுக்கு அறிவித்தான் *(1 இரா. 20:1-43).*

ஆகாபின் அரண்மனைக்கு அடுத்தாற்போல், யெஸ்ரயேலில் நாபோத்துக்கு ஒரு திராட்சத் தோட்டம் இருந்தது. ஆகாப் அதைக் கிரயத்துக்கு வாங்கக் கேட்டும் நாபோத்து சம்மதிக்கவில்லை. அப்பொழுது யேசபேல் பொய்க் குற்றஞ்சாட்டி, நாபோத்தையும், அவன் வீட்டாரையும் கொல்லுவித்தாள். பின்பு ஆகாப் தோட்டத்தை ஆட்சி எடுக்கப்போன வேளையில், எலியா அவனைச் சந்தித்து அவன்மேல் வரப்போகிற தேவ தண்டனையை அறிவித்தான் *(1 இரா. 21:1-24).*

ஆகாப் எலியாவின் வார்த்தைகளைக் கேட்டு மனந்திரும்பி, தன்னைத் தாழ்த்தினான். இதினிமித்தம் வரவிருந்த தண்டனை அவனுடைய நாள்களில் வராதென்று கர்த்தர் சொன்னார் (1 இரா. 21:27-29).

மூன்று வருஷங்களின் பின் கீலேயாத்திலுள்ள ராமோத் என்னும் இடத்தைப் பிடிக்கும்படி, ஆகாப் யோசபாத்தின் உதவியோடு சீரியருக்கு விரோதமாய் யுத்தம் செய்யப்போனபோது, ஆகாப் வேஷம் மாறி யுத்தத்தில் பிரவேசித்தான். சீரியரில் ஒருவன் நினையாமல் எய்த அம்பு, ஆகாப் மீது பட்டு அவன் இறந்து போனான். அவனைச் சமாரியாவில் அடக்கம் பண்ணினார்கள். அவனுடைய இரதத்தைக் கழுவினபோது, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கின (1 இரா. 22:1-38).

2. கொலாயாவின் குமாரனாகிய ஆகாப் ஒரு பொய்த் தீர்க்கதரிசி. இவன் நெபுகாத்நேச்சரால் கொல்லப்படுவானென்று எரேமியா முன்னறிவித்தான் (எரே. 29:21-23).

## ஆகாய் (Haggai)

**(பண்டிகை)**

சிறிய தீர்க்கதரிசிகளில் பத்தாம் ஆள். சிறையிருப்புக்குப்பின் முதல் தீர்க்கதரிசனம் சொன்னவன். இவன் பாபிலோனிலேயே பிறந்திருக்கக்கூடும். பின்பு செருபாபேலோடு எருசலேமுக்கு வந்தான். தரியு ராயனின் இரண்டாம் வருடத்தில் (கி.மு. 520) இவனுடைய தீர்க்கதரிசன ஊழியம் நடந்ததாகத் தெரிகிறது. (ஆகா. 1:1, 15; 2:1, 10, 20). எருசலேமில் இரண்டாம் தேவாலயத்தின் கட்டுவேலை, சத்துருக்களுடைய எதிர்ப்பினிமித்தமும், யூதருடைய கவலையீனத்தினிமித்தமும், தாமதப்பட்டு பதினைந்து வருஷகாலமாய் நிறுத்தப்பட்டது. ஆகாயும் சகரியாவும் ஆலய வேலைக்கு ஜனங்களை ஏவி எழுப்பினதின் பயனாக அதைக் கட்டி முடித்தார்கள்.

## ஆகார் (Hagar)

**(அலைந்து திரிகிறவன்)**

ஆகார் என்னும் ஓர் எகிப்து தேசத்தாள், சாராளுக்கு பணிவிடைக்காரியாயிருந்தாள். சாராளுக்கு பிள்ளையில்லாதிருந்ததினிமித்தம், குடும்பம் வர்த்திக்கும்படி, அவள் ஆகாரை ஆபிரகாமுக்கு மறுமனையாட்டியாகக் கொடுத்தாள். ஆகார் கர்ப்பவதியானபோது, தன்னை அசட்டை பண்ணினாளென்று, சாராள் அவளைக் கடினமாய் நடத்தியதினிமித்தம் அவள் ஓடிப்போனாள் (ஆதி. 16:1-6).

ஒரு தூதன் அவளுக்குத் தரிசனமாகி அவளைத் திரும்பி தன் எஜமாட்டியிடம் போகும்படியும், அவள் பெறும் குமாரனுக்கு இஸ்மவேல் எனப் பெயரிடும்படியும் சொன்னான். இது ஒரு துரவுக்குக் கிட்ட நடந்ததினால் "என்னைக் காண்பவரை நானும் கண்டேன்" என்று சொல்லி அந்தத் துரவுக்கு "லகாய் ரோயீ" எனப் பேரிட்டாள் (ஆதி. 16:9-13).

பின்பு சாராளும், ஒரு பிள்ளையைப் பெற்று, ஈசாக்கு எனப் பேரிட்டாள். பிள்ளை பால் மறந்த நாளில் ஆபிரகாம் ஒரு விருந்து பண்ணினான். பின்பு இஸ்மவேல் ஈசாக்கைப் பரியாசம் பண்ணினதினால், சாராள், அவனையும் தாயையும் புறம்பே தள்ளும்படி ஆபிரகாமுக்குச் சொன்னாள் (ஆதி. 21:9-11).

ஆபிரகாம் அப்படியே ஆகாரையும், இஸ்மவேலையும் அனுப்பி விட்டான். அவள் புறப்பட்டுப்போய், பெயர் செபா வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். தண்ணீர் செலவழிந்தபின், ஆகார் பிள்ளையை ஒரு செடியின்கீழ் வைத்துவிட்டு அப்பாலே போய் அழுதாள். தேவதூதன் அவளுக்குத் தரிசனமாகி, பிள்ளையைக் கூட்டிக் கொண்டுபோ, அவனை ஒரு பெரிய ஜாதியாக்குவேன் என்றார். அவள் ஒரு துரவை கண்டு, பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள். அவன் வனாந்திரத்தில் குடியிருந்து வில்வித்தையில் வல்லவனானான். அவனுடைய தாய் ஒரு எகிப்திய பெண்ணை அவனுக்கு விவாகம் பண்ணுவித்தாள் (ஆதி. 21:15-21).

சுமார் இரண்டாயிரம் வருடங்களின்பின், பவுல் இந்த விஷயத்தை, ஒரு உவமையாக எடுத்துப் பேசுகிறான். ஆபிரகாமின் இவ்விரண்டு குமாரருடைய நிலை, நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ளும் அடிமைத்தனத்துக்கும், சுவிசேஷத்தினால் வரும் சுயாதீனத்துக்கும், உள்ள வித்தியாசத்தைக் குறிக்கிறதாகும்.

ஆகார், சாராள் என்னும் இரண்டு பெண்களும் இரண்டு உடன்படிக்கைகளுக்கு அடையாளம். முந்தினவள் அடிமைகளின் தாய். பிந்தினவள் சுயாதீனரின் தாய்.

சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட மோசேயின் பிரமாணம் அடிமைத்தனத்தைக் குறிக்கிறது. ஆகாரின் சந்ததியாரும் அப்படிப் பட்டவர்கள். சீனாய் மலை அரபியாவிலுள்ளது. ஆகாரும் அரபி தேசத்தாள்.

ஆகாருக்கு ஒப்பிடப்படும் சீனாய் மலை பிரமாணம் இப்பொழுது இருக்கிற எருசலேமுக்குச் சரி. மேலான எருசலேம் சுயாதீனமுள்ளவள். அது சாராளுக்கு ஒப்பிடப்படத்தக்கது. அவள் நம்மெல்லாருக்கும் தாயானவள். நாம் சுயாதீனமுள்ளவளின் பிள்ளைகள். ஆனபடியால் கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலையில் நிலை கொண்டிருப்போமாக என்கிறார் (கலா. 4:21-31).

## ஆகான் (Achan)

*(கலக்கம்)*

*இவன் யூதா கோத்திரத்து சேராகுவின் சந்ததியான். எரிகோ பட்டணத்தை இஸ்ரவேலர் பிடித்தபோது, சாபத்தீடானதை இவன் களவாய் எடுத்துக்கொண்டான். பின்பு இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தைப் பிடிக்கப்போனவேளையில், தோல்வியடைந்தார்கள். இதின் காரணத்தை அறியும்படி சீட்டுப் போட்டபோது இவன் அகப்பட்டான். இவனும் அதை ஏற்றுக்கொண்டு, தான் அந்தப் பொருளைக்கண்டு, இச்சித்து, எடுத்துக் கொண்டதாக அறிக்கை செய்தான். அப்பொழுது இவனையும், இவன் குடும்பத்தாரையும், இவனுக்குள்ள எல்லாவற்றையும் எடுத்து ஆகோர் பள்ளத்தாக்குக்குக் கொண்டுபோய் அவர்களைக் கல்லெறிந்து கொன்று, எல்லாவற்றையும் சுட்டெரித்தார்கள் (யோசுவா. 7ஆம் அதி).*

*ஆகோர் என்பதின் அர்த்தம் "கலக்கம்". ஓசியா "ஆகோரின் பள்ளத்தாக்கை, நம்பிக்கையின் வாசலாகக் கொடுப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார் என்கிறான் (ஓசியா. 2:15). கலக்கப் பள்ளத்தாக்கு நம்பிக்கைக்கு வாசலாகும். இந்தச் சம்பவம் யோசுவா 22:2இல் குறிக்கப்பட்டுள்ளது. இவன் பெயர் ஆசார் என்று 1 நாளா. 2:7இல் குறித்துள்ளது.*

## ஆகீஸ் (Achish)

*(பாம்பாட்டி)*

*இவன் காத்தின் இராஜா. மாயோகின் குமாரன் (1 சாமு. 27:2). மாக்காவின் குமாரன் என்று 1 இரா. 2:39இல் குறித்துள்ளது. "அபிமெலேக்" என்று சங். 34ன் தலைப்பில் சொல்லியுள்ளது.*

*தாவீது சவுலினால் துன்புறுத்தப்பட்ட நாள்களில் தப்பியோடி ஆகீஸிடம் போனான். அங்கே அவன் கோலியாத்தைக் கொன்ற தாவீதென்று வெளிப்பட்டபோது ஒரு பைத்தியக்காரன்போல் செயலாற்றித் தப்பிக்கொண்டான் (1 சாமு. 21:10-15).*

*பின்னும் ஒருதடவை சவுலுக்குத் தப்பிக்கொள்ளும்படி யோசித்து, தாவீது தன்னோடிருந்தவர்களையும் கூட்டிக்கொண்டு ஆகிஸிடம் போனான். ஆகீஸ் அவனை ஏற்றுக்கொண்டு சிக்லாக் என்னும் பட்டணத்தை அவனுக்குக் கொடுத்தான் (1 சாமு. 27:6).*

*அந்நாள்களில் பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் செய்ய ஆயத்தமானபோது தாவீதும் ஆகீஸோடு போனான். ஆனால் பெலிஸ்தரின் பிரபுக்கள் அதை விரும்பாததினால், தாவீது திரும்பி போய்விட்டான். (1 சாமு. 29:1-11).*

*பிற்பாடு சவுல் மரித்தபின், தாவீது இவ்விடமிருந்து எப்ரோனுக்குப்போய் இராஜாவானான் (2 சாமு. 2:1).*

## ஆக்கில்லா (Aquila)

### *(கழுகு)*

*ஆக்கில்லா கூடாரத்தொழில் செய்த ஒரு யூத கிறிஸ்தவன். இவனும் இவனுடைய மனைவி பிரிஸ்கில்லாளும் பொந்து தேசத்திலிருந்துபோய் ரோமாபுரியில் தங்கியிருந்தார்கள். அங்கே கிலவுதியுராயன் பிறப்பித்த கட்டளையினிமித்தம், ரோமாபுரியை விட்டு கொரிந்துவுக்குப் போனார்கள். பவுல் அவர்களைச் சந்தித்து அவனும் கூடாரவேலை செய்தவனானபடியால் அவர்களோடு தங்கியிருந்தான் (அப். 18:1-3).*

*அந்நாள்களில் நடந்த ஏதோ ஒரு சம்பவத்தைக் குறித்து, பவுல், என் பிராணனுக்காக தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்களென்று சொல்லுகிறான் (ரோமர் 16:4).*

*பவுல் இவ்விடமிருந்து எபேசுவுக்குப் போன வேளையில் இவர்களும் கூடப்போனார்கள்.*

*அங்கிருந்த நாள்களில் அப்பொல்லோ என்னும் பேர்பெற்ற ஒரு யூதன், அங்கே போய் கர்த்தருடைய மார்க்கத்தை உபதேசித்தான். அவன் யோவானின் ஞானஸ்நானத்தை மாத்திரம் அறிந்திருந்தபடியால் இவர்கள் அவனைச் சேர்த்துக்கொண்டு மார்க்க விஷயத்தைத் திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப். 18:24-26).*

*இவர்கள் வீட்டில் சபை கூடினதாகத் தெரிகிறது (1 கொரி. 16:19). இவர்களிருவரும் ஊக்கமான தேவ ஊழியக்காரராயிருந்தார்கள். பவுல் இவர்களை தன் உடன்வேலையாள்களென்று, குறிக்கிறான் (ரோமர். 16:3).*

*அநேக இடங்களில் பிரிஸ்கில்லாவின் பெயர் அவள் கணவன் ஆக்கில்லாவுக்கு முந்தி குறித்திருக்கிறதினால், அவள் ரோம ஸ்திரீயாயிருந்திருக்கலாம் என விளங்கலாம் அல்லது தேவ ஊழியத்தில் வல்லமையாய்ப் பாவிக்கப்பட்டவளாயிருக்கலாம்.*

## ஆசா (Asa)

### *(பரிகாரி)*

*1. இராஜ்யம் பிரிக்கப்பட்டப் பின், இவன் யூதாவின் மூன்றாம் இராஜாவானான். அபியாவின் மகன் ரெகொபெயாமின் பேரன். அப்சலோமின் குமாரத்தியாகிய மாகாள் இவனுடைய தாய் (1 இரா. 15:1-10),*

இவன் கர்த்தரின் பார்வைக்கு நன்மையானதைச் செய்தான். தேசம் பத்து வருஷம் அமரிக்கையாயிருந்தது. விக்கிரகங்களை அகற்றி விக்கிரகத் தோப்புகளை வெட்டினான். யூதாவில் அரணிப்பான பட்டணங்களைக் கட்டினான். பராக்கிரமசாலிகளான பெரிய சேனைகள் இவனுக்கு இருந்தது *(2 நாளா. 14:1-8)*.

எத்தியோப்பியனாகிய சேரா பத்து லட்ச சேனையோடு இவனுக்கு விரோதமாய் வந்தபோது, இவன் தேவனை நோக்கி ஜெபித்தபின் அவர்களை முறிய அடித்தான் *(2 நாளா. 14:9-12)*.

ஓதேத் தீர்க்கதரிசியின் ஏவுதலின்படி ஆசா பலிபீடத்தை புதுப்பித்துக் கட்டி விசேஷ பண்டிகை கொண்டாடினான் *(2 நாளா. 15:8-15)*. ஆசாவின் தாயாகிய மாகாளின் விக்கிரகத்தை நிர்மூலமாக்கி, அவளையும் இராஜாத்தியாயிராதபடி விலக்கிப்போட்டான் *(2 நாளா. 15:16)*.

இஸ்ரவேல் இராஜாவாகிய பாஷா இவனுக்கு விரோதமாய் வந்தபோது, இவன் சீரிய இராஜாவாகிய பெனாதாத்துக்குப் பணம் அனுப்பி, உதவி கேட்டதினிமித்தம், அவன் இஸ்ரவேலை முறிய அடித்தான். பாஷா சேர்த்துவைத்த மரங்களை, ஆசா எடுத்து, கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான் *(2 நாளா. 16:1-6; 1 இரா. 15:16-22)*.

ஆசா கர்த்தரைத் தேடாமல் சீரியருடைய உதவியை நாடினபோது, ஞானதிருஷ்டிக்காரனாகிய அனானி அவனைக் கண்டித்ததினிமித்தம், ஆசா அவனைச் சிறைப்படுத்தினான் *(2 நாளா. 16:7-10)*. ஜனங்களையும் கொடூரமாய் நடத்தினான். அவனுடைய முப்பத்தொன்பதாம் வருஷத்தில் கால்களில் வியாதி கண்டு, அவன் நோவு உக்கிரமாயிருந்தபோதும், அவன் கர்த்தரை அல்ல, பரிகாரிகளையே தேடினான். அவன் மரித்து பெத்லகேமில் தனக்கென்று வெட்டி வைத்திருந்த கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டான் *(2 நாளா. 16:12-14)*.

*2.* ஒரு லேவியன், எல்க்கானாவின் மகனும், பெரகியாவின் தகப்பனுமானவன் *(1 நாளா. 9:16)*.

## ஆசாப் (Asaph)

***(சேர்க்கிறவன்)***

*1.* லேவியின் குமாரனாகிய கெர்சோனின் சந்ததியான். பெரகியாவின் குமாரன் *(1 நாளா. 6:39)*. தாவீது உடன்படிக்கை பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுபோகையில், இவன் கைத் தாளங்களைத் தொனிக்கப்பண்ணிப் பாடினான் *(1 நாளா. 15:17-19)*.

பெட்டியைக் கூடாரத்துக்குள் வைத்தபின், கர்த்தரைத் துதித்துப் பாடுவதற்கு, தாவீது இவனைத் தலைவனாய் ஏற்படுத்தினான் *(1 நாளா. 16:4,5).*

ஆசாப் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனென்றும், ஞான திருஷ்டிக் காரனென்றும், சொல்லப்படுகிறது *(1 நாளா. 25:2; 2 நாளா. 29:30).*

சாலொமோன் தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்தவேளையில் ஆசாபும் அவன் கூட்டத்தாரும் கர்த்தரைத் துதித்துப் பாடினார்கள் *(2 நாளா. 5:12).* இரண்டாம் தேவாலயத்தில் கீதவாத்தியம் பாடின மூன்று கூட்டத்தாரில் ஒன்றின் தலைவன் இவன்.

எசேக்கியாவின் நாள்களில் ஆசாப் பாடின வார்த்தைகளால் கர்த்தரைத் துதித்தார்கள் *(2 நாளா. 29:30).*

இவனுடைய புத்திரர் நூற்றிருபத்தெட்டுப்பேர் பாடகராக இருந்தார்கள் *(எஸ்றா. 2:41).* எஸ்றாவின் நாள்களில் ஆலயத்தின் அஸ்திபாரம் போடுகையில் கர்த்தரைத் துதிக்கும்படி ஆசாபின் குமாரர் நிறுத்தப்பட்டார்கள் *(எஸ்றா. 3:10).*

ஆசாப் *50, 73-83*-ஆம் சங்கீதங்களின் ஆக்கியோன் எனப்படுகிறது.

2. ஆசாப், யோவாக் என்னும் எசேக்கியா இராஜாவின் ஒரு கணக்கனின் தகப்பன் *(2 இரா. 18:18).*

3. பெர்சிய இராஜாவின் வனத்துக்குக் காவலாளன் *(நெகே. 2:8).*

## ஆசியா (Asia)

தற்காலத்தில் ஆசியா எனப்படும் தேசம், பழைய புதிய ஏற்பாடுகளில் குறித்துள்ளதல்ல. வேதாகமத்தில் ஆசியா என்பது தற்காலத்து சின்னஆசியாவில் மேற்பாகத்திலுள்ள ஒரு மாகாணத்தைக் குறிக்கிறது. எபேசு அதன் தலைநகரமாயிருந்தது.

கிரேக்கருக்குக் கீழிருந்த இந்தத் தேசம் கி.மு. 133இல் மூன்றாம் அற்றலஸ் (Attales III) என்பவனால் ரோமருடைய ஆளுகைக் குட்படுத்தப்பட்டது. அக்காலத்தில் இது ஒரு செழிப்பான நாகரீக முள்ள, ஜனம் நெருங்கிய தேசம். ரோமர் இதை வெவ்வேறு மாகாணங்களாகப் பிரித்து, தேசாதிபதிகளை நியமித்து அரசாண்டார்கள் *(அப். 19:31).* ஜனங்களால் தெரிந்துக்கொள்ளப் பட்டவர்கள் தலைவராயிருந்து, பண்டிகைக் கொண்டாட்டங்கள், விளையாட்டு முதலியவைகளை நடத்தினார்கள். அவர்களில் சிலர் பவுலுடைய சிநேகிதராயிருந்தார்கள். இதினிமித்தம் அவனுடைய ஊழியத்துக்கு இடம் கிடைத்து விருத்தியடைந்தது.

ஆகவே தொடக்கத்தில் ரோம அரசாட்சி ஏற்படுத்தப்பட்ட இடங்களிலேயே, கிறிஸ்து மார்க்கம் பரவிற்று. பெர்கமு, சிமிர்னா, எபேசு என்னும் இடங்களில் சபைகளும், கோவில்களும் உண்டாயின. பின்பு சர்தை, தியத்தீரா, பிலதெல்பியா என்னும் இடங்களில் சபைகள் எழும்பின. லவோதிக்கேயாவிலிருந்த சபைக்கும் பவுல் ஒரு நிருபம் எழுதினான் (கொலோ. 4:16).

பெந்தெகொஸ்தே நாளில் ஆசியா தேசத்தார் எருசலேமில் வந்திருந்தார்கள் (அப். 2:9).

ஸ்தேவான் கொல்லப்பட்டவேளையிலும் இவர்கள் அங்கிருந்தார்கள் (அப். 6:9).

பவுலின் பிரசங்கத்தினால் ஆசியாவிலுள்ள யூதரும், கிரேக்கரும் குணப்பட்டார்கள் (அப். 19:10).

ஆசியா முழுமையும், தியானாளைச் சேவிக்கிறதாகச் சொல்லப்பட்டது (அப். 19:27).

பேதுரு தன்னுடைய நிருபத்தில் ஆசியாவில் சிதறியிருந்தவர்களையும் குறிக்கிறான் (1 பேதுரு. 1:1).

யோவான் தரிசனங்கண்ட நாள்களில் ஆசியாவில் ஏழு சபைகளிலிருந்தன (வெளி. 1:4).

## ஆசேர் (Asher)
**(பாக்கியவான்)**

யாக்கோபுக்கு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாள் பெற்ற குமாரன் (ஆதி. 30:13). அந்தப் பிள்ளை பிறந்தபொழுது லேயாள், "என்னைப் பாக்கிய வதி என்பார்கள்" என்று சொல்லி அவனுக்கு ஆசேர் என்று பேரிட்டாள்.

இதற்கிணங்க, யாக்கோபும் தன் பிள்ளைகளை ஆசீர்வதித்த வேளையில், "ஆசேருடைய ஆகாரம் கொழுமையாயிருக்கும்" எனறான் (ஆதி. 49:20).

மோசேயும் ஆசேரைக் குறித்து, "ஆசேர் புத்திரபாக்கியமுடையவனாய் தன் காலை எண்ணெயிலே தோய்ப்பான்" என்றான் (உபா. 33:24).

எகிப்திலிருந்த காலத்திலும் இந்தக் குடும்பம் அனுகூலமடைந்தது. சீனாயில் ஜனத்தொகை எடுத்தபோது இவர்களில் நாற்பத்தோராயிரத்து ஐந்நூறு பேரிருந்தார்கள் (எண். 1:41). வனாந்தர பிரயாணத்தில் தாணுக்கருகே ஆசேர் கோத்திரம் பாளயமிறங்கியிருந்தது (எண். 2:27).

கானான் தேசம் பங்கிடப்பட்டபோது, இவர்களுக்கு ஐந்தாம் சீட்டு விழுந்து, கர்மேலிலிருந்து வடபக்கமாக கடலருகே, செழிப்பான மெகிதோப் பள்ளத்தாக்கையும், சேர்த்துக் கொடுக்கப்பட்டது *(யோசுவா 19:24-31)*. ஆசேரியர், கானானியரைத் துரத்தாமல் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள் *(நியா. 1:31,32)*.

நியாயாதிபதிகளின் நாள்களில் இவர்கள் சிசெராவுக்கு விரோதமாய் நடந்த யுத்தத்தில் பங்கெடுக்கவில்லை. *(நியா. 5:17)*. கிதியோன் யுத்தம் செய்தவேளையில் அவனோடு சேர்ந்திருந்தார்கள் *(நியா. 6:35; 7:23)*.

தாவீதை இராஜாவாக்கு கிறதற்கு இந்தக் கோத்திரத்தாரும் போயிருந்தார்கள் *(1 நாளா. 12:36)*. சாலொமோனின் மணியக்காரரி லொருவன் ஆசேரில் இருந்தான் *(1 இரா. 4:16)*.

எசேக்கியாவின் பண்டிகை ஆசரிப்புக்கு இவர்களும் எருசலேமுக்குப் போனார்கள் *(2 நாளா. 30:11)*.

தாவீதின் நாள்களில் யோவாப் ஜனத்தொகை எடுத்தபோது, இந்தக் கோத்திரத்தார் கணக்கிடப்படவில்லை *(1 நாளா. 24:16-22)*.

இயேசுவைப் பிள்ளையாக தேவாலயத்துக்குக் கொண்டுபோன வேளையில் அவரை ஆசீர்வதித்த அன்னாள் இக்கோத்திரத்தாள் *(லூக்கா. 2:36)*.

2. ஆசேர் என்று பேருள்ள ஒரு பட்டணமும் உண்டு *(யோசுவா. 17:7)*.

## ஆட்டுக் குட்டியானவர் (The Lamb)

ஆட்டுக்குட்டியைப் பற்றி முதன் முதல் வேதாகமத்தில் ஆதி. *22:7,8*ல் குறித்துள்ளது. அங்கே சொல்லேயல்லாமல் அதின் கருத்து வெளிப்படவில்லை.

யாத். *12:3-10*ல் அந்தப் பெயர் மீட்புக்கிசைந்ததாகப் பயன் படுத்தப்பட்டுள்ளது.

யோவான். *1:29;* அப். *8:32, 1* பேதுரு. *1:19* முதலிய வசனங்கள் தேவ ஆட்டுக்குட்டியென்று மேசியாவைக் குறித்துள்ளது.

வெளி. *21:9*இல் வெளிப்படையாக ஆட்டுக்குட்டியானவர் என்று கூறப்பட்டுள்ளது.

ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியென்பது புதிய ஏற்பாட்டின் சபையில் பூரணப்பட்டதினால் ஒன்றாக்கப்பட்ட பரிசுத்தவான்களின் கூட்டத்தைக் கருதும்.

## ஆண்டவர் (Lord)

ஆண்டவர் என்பது எஜமானனைக் கருதுகிறது. ஆகவே மனுஷருக்கும் அதை உபயோகிக்கலாம் *(மத். 6:24; 15:22; மாற்கு. 13:35; எபே. 6:9; கொலோ. 4:1).* தேவன் என்ற பதம், எபிரெய பாஷையில் "அதோனை" என்றும், கிரேக்கில் "கியுறியஸ்" என்றும், ஆங்கிலத்தில் "லார்ட்" என்றும், தமிழில் "ஆண்டவர்" என்றும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இயேசுவும் தாம் ஆண்டவர் என்பதை ஏற்றுக்கொண்டார் *(மத். 22:43-45; மாற்கு 11:3; லூக்கா 6:46; 20:14; யோவான். 13:14).*

பழைய ஏற்பாட்டில் 'தேவன்' என்பதற்கு அநேக பெயர்கள் காணப்படுகின்றன. அந்நிய தேவர்களையும் தேவன் என்று சொன்னார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டில் தேவன் என்பது ஒரே தேவனையே குறிக்கிறது.

இந்தப் பெயர் பிதா, குமாரன், பரிசுத்தாவி மூவருக்கும் வழங்கிற்று. தோமா, இயேசுவை நோக்கி, "என் ஆண்டவரே, என் தேவனே" என்றான் *(யோவான் 20:28).*

ஆண்டவர் என்பது பழைய ஏற்பாட்டில் 'அதோனியா' என்ற கருத்துள்ள தெய்வத்துக்கடுத்த பெயர் *(லூக்கா. 2:29; அப். 4:24; 2 பேதுரு. 2:1; யூதா. 4; வெளி. 6:10).*

ஆண்டவர் என்பது எஜமான் என்ற கருத்தோடு *எபே. 6:9; 2 பேதுரு. 2:1; வெளி. 6:10*இல் வழங்கிற்று.

## ஆதாம் (Adam)

### *(ஆதி மனிதன் மண்ணிலிருந்து உண்டானவன்)*

ஆதாம் என்ற பெயர் சொந்தப் பெயராகவும், பொதுப் பெயராகவும் வேதாகமத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

தேவன் தமது சாயலாக மனுஷனை சிருஷ்டித்தாரென்றும், அவர் மனுஷனைப் பூமியின் மண்ணினால் உருவாக்கி ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான் என்றும் குறித்துள்ளது *(ஆதி. 1:26; 2:7).*

மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டதைப்பற்றி, வெவ்வேறு காரணத்தி னிமித்தம் ஆதியாக மத்தில் இரண்டு தடவைகளில் விவரித்துள்ளது

1. தேவன் சகல ஜீவராசிகளைச் சிருஷ்டித்தபின் அவைகளை ஆளுவதற்காக மனுஷனை சிருஷ்டித்தார்.

2. மனுஷன் தேவனுடைய ஆவியுள்ளவனானதால், தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கக்கூடியவனாயிருக்கிறான்.

ஆதாமுக்கு ஏற்ற துணையைக் கொடுப்பதற்காகக் கர்த்தர் அவனுடைய விலா எலும்பை எடுத்து, அதை மனுஷியாக உண்டாக்கினார். அவர்களிருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள் *(ஆதி. 2:21-25).*

பின்பு தேவன் அவர்களை நோக்கி "நீங்கள் பலுகிப்பெருகி சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்றார் *(ஆதி. 1:28).*

தேவன் அவர்களை ஏதேன் தோட்டத்தின் நடுவிலிருக்கிற விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாமென்று சொன்னதற்கு மாறாய், ஏவாள் அதைப் புசித்து தன் புருஷனுக்கும் கொடுத்தாள். அப்பொழுது தாங்கள் நிர்வாணிகளென்று அறிந்தார்கள் *(ஆதி.3:1-7).*

தேவன் அவர்களைச் சந்தித்து அவர்கள்மேல் வரப்போகிற தண்டனையைக் கூறினார். சர்ப்பத்தை நோக்கி, "ஸ்திரீயின் வித்து உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்றார் *(ஆதி. 3:8-10).*

ஆதாம் தன் மனைவிக்கு, ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய் என்னும் கருத்துள்ள 'ஏவாள்' எனப் பேரிட்டான் *(ஆதி. 3:20).*

பின்பு கர்த்தர் ஆதாம், ஏவாளை ஏதேன் தோட்டத்திலிருந்து, ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்து என்றென்றைக்கும் உயிரோடிராதபடி அனுப்பிவிட்டார் *(ஆதி. 3:21-24).*

அவர்களுக்குக் காயீன், ஆபேல் என்ற இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். காயீன் ஆபேலைக் கொலை செய்தபின் சேத் என்னும் ஒரு குமாரன் பிறந்தான் *(ஆதி. 4:25).* ஆதாமுக்கு அப்போது நூற்று முப்பது வயதாயிருந்தது. பின்பு எண்ணூறு வருடம் ஜீவித்து தொளாயிரத்து முப்பதாம் வயதில் மரித்தான் *(ஆதி. 5:2-5).*

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு ஆதாமிலிருந்து வரையப் பட்டுள்ளது. ஆதாம் தேவனால் உண்டானவன் *(லூக்கா. 3:28-38).*

ஆதாமைச் சேர்ந்தவர்களென்றும், கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென்றும் இரு பகுதியாய் பவுல் அப்போஸ்தலன், மனுஷ ஜாதியாரைப் பிரிக்கிறான். அதாவது, ஆதாம் பாவத்துக்கும், மரணத்துக்கும் காரணமாயிருந்ததினால் இவ்விரண்டு சாபமும் அவனுடைய சந்ததியாரான எல்லார் மேலும் வருகிறது. ஆவிக்குரிய பிறப்பினால் கிறிஸ்துவை அண்டினோர்க்கு ஜீவனை அளிக்கும் நீதிஉண்டாகிறது. இவ்விதமாய் இரு பகுதியாருண்டு *(ரோமர் 5:12-21).*

ஆதாமுக்குள்ளே எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுகிறார்கள். அதாவது ஆதாம் செய்த பாவத்தினால் மரணம் வந்ததினாலே, ஆதாமின் சந்ததியா

ரெல்லாருக்கும் அது உடையதாயிற்று. . அதுப்போல் கிறிஸ்துவினால் வரும் நித்திய ஜீவனும் அவரோடு ஐக்கியப்படும் எல்லாருக்கும் உரியதாகும் *(1 கொரி. 15:22).*

ஆதாம், மண்ணினால் உருவாக்கப்பட்டு, இவ்வுலக சுபாவமுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ, பரத்திலிருந்துவந்த ஆவிக்குரிய சுபாவமுள்ளவரும், ஜீவனைக் கொடுக்கும் வல்லமையுள்ளவராயுமிருக்கிறார் *(1 கொரி. 15:45).*

ஆதாம் முந்தின மனுஷன்; அவனுக்கு முன் ஒருவரும் இருந்ததில்லை. மனுஷ ஜாதியாருக்கு அவன் முற்பிதா. அவனுடைய பாவத்தினிமித்தம், அவனுடைய சந்ததியார் பாவத்துக்கும், மரணத்துக்கும் உட்பட்டிருக்கிறார்கள். பிந்தின ஆதாமாகிய கிறிஸ்துவை விசுவாசிப்போர், நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவனையும் அடைவார்கள்.

ஆகவே கிறிஸ்து கடைசி ஆதாமாகிறார். இதனால் ஆதாம் பின் வந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன்.

2. ஆதாம் என்ற பெயருள்ள ஒரு ஊர் யோர்தான் கரையில் யாப்போக்கு அருகில் உள்ளது *(யோசுவா. 3:16).*

## ஆபிப் (Abib)

### *(தானியக் கதிர்)*

எபிரெயர் பஸ்காப் பண்டிகை கொண்டாடின, வருடத்தின் முதலாம் மாதம் ஆபிப் *(யாத். 13:4).* இந்த மாதத்தில் புளிப்பில்லா அப்பப் பண்டிகை கொண்டாடினார்கள் *(யாத். 23:15; 34:18).* ஆனாலும் ஆபிப் ஒரு மாதத்தின் பெயர் அல்ல. அது கதிர் பயிர்க் காலம் *(யாத். 9:31).* சிறையிருப்புக்குப் பின் இந்த மாதத்தை நீசான் என்று சொல்லிக் கொண்டார்கள் *(நெகே. 2:1; எஸ். 3:7).*

| எபிரெயரின் மாதங்கள் | | ஆங்கில மாதங்கள் |
|---|---|---|
| ஆபிப், நிசான் | *(யாத். 12:2; நெகே. 2:1)* | மார்ச்-ஏப்ரல் |
| சீப் | *(1 இரா. 6:1,37)* | ஏப்ரல்-மே |
| சீவான் | *(எஸ். 8:9)* | மே-ஜூன் |
| தம்மூஸ் | *(எசே. 8:14)* | ஜூன்-ஜூலை |
| ஆபி | | ஜூலை-ஆகஸ்டு |
| எலூல் | *(நெகே. 6:15)* | ஆகஸ்டு-செப்டம்பர் |
| ஏத்தானீம் | *(1 இரா. 8:2)* | செப்டம்பர்-அக்டோபர் |
| பூல் | *(1 இரா. 6:38)* | அக்டோபர்-நவம்பர் |
| கிஸ்லேயு | *(நெகே. 1:1)* | நவம்பர்-டிசம்பர் |
| நேபேத் | *(எஸ். 2:16)* | டிசம்பர்-ஜனவரி |
| சேபாத் | *(சக. 1:7)* | ஜனவரி-பிப்ரவரி |
| ஆதார் | *(எஸ்றா. 6:15)* | பிப்ரவரி-மார்ச் |

# ஆபிராம், ஆபிரகாம் (Abraham)

### *(நேர்மையுள்ள பிதா)*

இவன் எபிரெய ஜாதியாரின் முற்பிதா. ஊர் என்ற கல்தேயரின் பட்டணத்தில் ஆபிராமும் ஆபிராமின் தகப்பனாகிய தேராகும், சகோதரர் நாகோர், ஆரான் என்பவர்களும் குடியிருந்தார்கள். ஆபிராமுடைய மனைவிக்குச் சாராய் என்று பெயர் (ஆதி. *11:27-29*). தேராகு, ஆபிரகாம், சாராய், லோத்து என்பவர்களோடு புறப்பட்டுப் போய் ஆரானில் தங்கியிருந்தான் (ஆதி. *11:31*).

கர்த்தர் ஆபிராமை நோக்கி "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" என்றார் (அப். *7:3*). பின் அவன் ஆரானிலிருந்து புறப்படும்போது மூன்று காரியங்களை அவனுக்கு வாக்குப் பண்ணினார்.

1. உனக்கு ஒரு தேசத்தைக் கொடுப்பேன்.

2. உன்னை ஒரு பெரிய ஜாதியாக்குவேன்.

3. பூமியின் வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி. *12:2,3*).

ஆபிராம், தன் தகப்பன் மரித்த பின், தனக்குள்ளதெல்லாவற்றையும், ஜனங்களையும் கூட்டிக்கொண்டு ஆரானிலிருந்து கானான் தேசத்துக்குப் புறப்பட்டு போனான். அவன் பிரயாணம் பண்ணி சீகேம் என்ற இடத்துக்குச் சமீபமான மோரே மட்டும் வந்தான் (ஆதி. *12:6*).

கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" என்றார். அவன் அங்கே ஒரு பலிபீடத்தைக்கட்டி கர்த்தரைத் தொழுது கொண்டான் (ஆதி. *12:7,8*).

அங்கே பஞ்சம் உண்டானதினிமித்தம் ஆபிராம் எகிப்துக்குப் போனான். அவ்விடம் சாராயைத் தன் சகோதரி என்று சொல்லிக் கொண்டதினால், பார்வோன் அவளைத் தன் அரண்மனைக்கு எடுப்பித்து, அவள் நிமித்தம் ஆபிராமுக்கு மிருக ஜீவன்களையும், வேலைக்காரிகளையும் கொடுத்தான். ஆனால் சாராயினிமித்தம் கர்த்தர் பார்வோனை வாதைகளால் வாதித்தபோது, அவன் சாராயை ஆபிராமுக்கு ஒப்புக்கொடுத்து, அவனுக்குண்டான யாவற்றோடும் அவனை அனுப்பிவிட்டான் (ஆதி. *12:11-20*).

ஆபிரகாம் அதிக ஆஸ்தி யுள்ளவனாய்ப் புறப்பட்டு பெத்தேலுக்கு வந்தான். லோத்துக்கும் ஆடு மாடுகள் மிகுதியாக இருந்ததினால், இருவருக்கும் ஒரே இடத்தில் குடியிருக்கக்

கூடாதிருந்தது. ஆகையால் லோத்து பிரிந்துபோய் சோதோமுக்கருகே தங்கினான் *(ஆதி. 13:5-12).*

பின்பும் கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி, அந்தத் தேசம் முழுவதையும், அவனுக்கும், அவன் சந்ததிக்கும் கொடுப்பேனென்றும், அவனுடைய சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணுவேன் என்றும் சொன்னார். அவன் புறப்பட்டு மம்ரே சமபூமிக்குப் போய், அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினான் *(ஆதி. 3:14-18).*

அந்நாள்களில் கெதர்லாகோமேர் என்னும் இராஜாவும் வேறு நான்கு இராஜாக்களும் சேர்ந்து சோதோம், கொமோரா என்னும் தேசங்களையும் கொள்ளையடித்து, ஜனங்களையும் சிறைப் பிடித்து போனார்கள். லோத்தையும், அவனுக்குள்ளவைகளையும் கொண்டு போனார்கள். ஆபிராம் இதைக் கேள்விப்பட்டு, தன்னுடைய ஆள்களைக் கூட்டிக்கொண்டுபோய் அவர்களை முறியடித்து, லோத்தையும், அவனுக்குள்ளவைகளையும் திருப்பிக்கொண்டு வந்தான். அப்பொழுது உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த, சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு ஆபிராமைச் சந்தித்து அவனை ஆசீர்வதித்தான். இவனுக்கு ஆபிராம் எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் *(ஆதி. 14:17-20).*

மறுபடியும் கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி உனக்கு ஒரு சுதந்தரவாளி பிறப்பானென்றும் அவனுடைய சந்ததி நட்சத்திரங்கள் போல பலுகிப் பெருகுமென்றும், இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுப்பேன் என்றும் சொன்னார் *(ஆதி. 15:1-21).*

சாராய் பிள்ளையில்லாதிருந்ததினிமித்தம், தன் பணிவிடைக்காரியாகிய ஆகாரை ஆபிராமுக்குக் கொடுத்தாள். அவள் இஸ்மவேல் என்ற ஒரு பிள்ளையைப் பெற்றாள். சாராய் ஆகார் தன்னை அசட்டைப் பண்ணினாளென்று கண்டு அவளை அனுப்பிவிடும்படி ஆபிராமுக்குச் சொன்னபோது அவன் அப்படிச் செய்தான்.

ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, நீ திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாவாயென்றும், உன்பேர் இனி ஆபிராம் என்னப்படாமல் ஆபிரகாம் என்னப்படும் என்றும் சொன்னார். அதோடு அவனோடு ஓர் உடன்படிக்கை செய்து அதற்கு அடையாளமாக அவனுடைய சந்ததியில் பிறக்கும் ஆண் பிள்ளைகள் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டுமென்றும் சொன்னார் *(ஆதி. 17:5-14).*

பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி, உன் மனைவி இனி சாராள் என்னப்படுவாள் என்றும், அவள் ஒரு குமாரனைப்

பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக என்றும் சொன்னார் (ஆதி. 17:15-22).

பின்பு கர்த்தர் மம்ரே சமபூமியில் ஆபிரகாமுக்குத் தரிசனமானார். மூன்று புருஷர் அவனிடம் போனார்கள். அவன் அவர்களை ஏற்றுக்கொண்டு உபசரித்தான். அப்பொழுது அவர், ஓர் உற்பவகாலத் திட்டத்தில் உன்னிடத்திற்கு வருவேன், அப்பொழுது சாராளுக்கு ஒரு குமாரன் இருப்பான் என்று சொன்ன போது அவள் நம்பவில்லை (ஆதி. 18:1-16). அவர்களில் இரண்டு புருஷர் சோதோம் கொமோராவை அழிக்கும்படி புறப்பட்டுப் போய்விட்டார்கள். ஆனால் கர்த்தரோ அவர்கள் போனபின் சோதோம் கொமோராவின் பாவம் கொடிதாயிருப்பதினால் அவர்களை அழிக்கப் போவதாகக் கூறினபோது, ஆபிரகாம் அந்தத் தேசங்களை அழிக்க வேண்டாமென்று விண்ணப்பம் பண்ணவே அங்கே பத்து நீதிமான்களிருந்தால் அழிப்பதில்லை என்று சொல்லிப் போய்விட்டார் (ஆதி. 18:23-33). பின்பு சோதோம் கொமோரா அழிக்கப்பட்டது. ஆனாலும் லோத்தும் குடும்பத்தாரும் தப்புவிக்கப்பட்டார்கள் (ஆதி. 19:29).

ஆபிரகாம் அவ்விடம் விட்டு கேராருக்குப் போய்த் தங்கினான். அங்கேயும் தன் மனைவியைச் சகோதரி என்று சொன்னதினிமித்தம் தொந்தரவு உண்டாயிற்று. இதிலும் கர்த்தர் அவர்களைக் காத்து வைத்தார் (ஆதி. 20:1-18).

ஆபிரகாம் நூறு வயதாயிருக்கையில் சாராள் ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டார்கள் (ஆதி. 21:1-7).

பிள்ளை பால் மறந்த நாளிலே ஆபிரகாம் ஒரு பெரிய விருந்து பண்ணினான். பின் இஸ்மவேல் ஈசாக்கைப் பரியாசம் பண்ணினதைச் சாராள் கண்டு, ஆகாரையும், அவளுடைய மகனையும் துரத்திவிடும்படி ஆபிரகாமுக்குச் சொன்னாள். ஆபிரகாம் அப்படியே செய்தான் (ஆதி. 21:8-21).

அக்காலத்தில் அபிமெலேக்கு தன் சேனாதிபதியோடு ஆபிரகாமைச் சந்திக்கப்போன வேளையில், இருவரும் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். ஆபிரகாம் பெயர் செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுது கொண்டான் (ஆதி. 21:29-34).

இதன்பின் ஆபிரகாமுக்குப் பெரிய சோதனை வந்தது. கர்த்தர் அவனை நோக்கி ஈசாக்கைப் பலியிடும்படி சொன்னார். அவன் கீழ்ப்படிந்து மோரியா மலைக்குப் போய், அங்கே ஈசாக்கை வெட்டக் கத்தியை எடுத்தபோது, தேவதூதன் அவனைத்தடை பண்ணி, ஓர்

ஆட்டுக் கடாவைக் காட்டினார். ஆபிரகாம் அந்தக் கடாவை பலியிட்டு, அந்த இடத்துக்கு "யேகோவாயீரே" என்று பேரிட்டான் (ஆதி. *22:1-14*).

இதினிமித்தம் கர்த்தர் தமது உடன்படிக்கையை மறுபடியும் ஸ்திரப்படுத்தினார் (ஆதி. *22:15-20*).

சாராள் நூற்றிருபத்தேழு வயதாயிருக்கையில் எபிரோனில் மரித்தாள். ஆபிரகாம் மக்பேலா என்னும் பூமியைக் கிரயத்துக்கு வாங்கி அங்கிருந்த குகையில் அவளை அடக்கம் பண்ணி னான் (ஆதி. *23:1-20*).

ஆபிரகாம் முதிர்ந்தவனாகி, தன் குமாரனுக்கு ஒரு மனைவியை தன் ஜனத்துக்குள்ளிருந்து எடுக்கும்படி, தன் ஊழியக்காரனை அனுப்பினான். அவன் ஆரானுக்குப்போய் ஆபிரகாமுக்கு இனத்தாளாகிய ரெபெக்காளை ஈசாக்குக்கு மனைவியாகக் கூட்டிக்கொண்டு வந்தான் (ஆதி. *24:1-67*).

ஆபிரகாம் கேத்தூராள் என்னும் ஒரு ஸ்திரீயையும் விவாகம் பண்ணியிருந்தான். அவளுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். ஆபிரகாம் தனக்கு உண்டான யாவையும் ஈசாக்குக்குக் கொடுத்தான். மறுமனையாட்டிகளின் பிள்ளை களுக்கு நன்கொடைகள் கொடுத்து, கீழ் தேசத்துக்கு அனுப்பிவிட்டான் (ஆதி. *25:1-6*).

ஆபிரகாம் நூற்று எழுபத் தைந்து வயதில் மரித்து மக்பேலாவில் அடக்கம்பண்ணப் பட்டான் (ஆதி. *25:7-10*).

ஆபிரகாமுடைய விசேஷ குணம், அவனுக்கிருந்த விசுவாசமே. விசுவாசிகளின் பிதாவென்றும், தேவனுடைய சிநேகிதனென்றும் அழைக்கப்படுகிறான்.

அவன் கர்த்தரால் அழைக்கப்பட்டபோது, போகும் இடம் இன்னதென்று அறியாமல், விசுவாசத்தினால் புறப்பட்டுப்போனான். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலே விசுவாசத்தினால் பரதேசியைப்போல சஞ்சரித்தான். சோதிக்கப்பட்டபோது, விசுவாசத்தினாலே ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான் (எபி. *11:8,9,19*).

'இஸ்ரவேலரின் முற்பிதா' என்ற கனம் ஆபிரகாமுக்குரியது (அப். *13:26*). லேவி கோத்திரத்தாரும் ஆபிரகாமின் சந்ததியார் (எபி. *7:5*). மேசியாவின் முற்பிதாவும் ஆபிரகாமே (மத். *1:1*).

ஆபிரகாம் கர்த்தரிடம் பெற்ற ஆணை, உடன்படிக்கை, வாக்குத்தத்தம், ஆசீர்வாதம் ஆகியவைகளின் உரிமை விசுவாசத்தினால் அவனுடைய பிள்ளைகளாவோர் எல்லாருக்கும்

உரியது (லூக்கா. 1:45, 72, 73; அப். 3:25; ரோமர் 4:13; கலா. ரோமர் 3:14).

கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்தது ஆபிரகாமுக்கு நீதியாக எண்ணப்பட்டதுபோல நாமும் விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்படுகிறோம் (ரோமர் 4:3-12).

## ஆபிரகாமுடைய மடி

யூதருக்குள்ளிருந்த நம்பிக்கையின்படி ஆபிரகாமின் மடி என்பது மரணத்துக்குப் பின் அடையும் பாக்கிய நிலையைக் குறிக்கிறது. அவர்கள் தாங்கள் மரித்தபின் பரதீசில் ஆபிரகாமோடு ஐக்கியப்பட்டு ஜீவிக்கலாமென்று நம்பினார்கள்.

இந்த நம்பிக்கையின்படியே இயேசுவும் லாசருவின் பின் நிலைமையைப்பற்றிப் பேசினபோது குறித்தார் (லூக்கா. 16:22,23).

## ஆபேத் நேகோ (Abed Nego)

**(நேபோ என்னும் தேவனின் ஊழியன்)**

நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுபோன யூதா புத்திரராகிய தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களுக்கு மறுபெயர் கொடுத்தபோது அசரியாவுக்கு ஆபேத் நேகோ எனப் பெயரிடப்பட்டது (தானி. 1:7).

பின்பு, தானியேலின் வேண்டுதலின்படி ஆபேத்நேகோ மாகாண விசாரிப்புக்காரனாய் நியமிக்கப்பட்டான் (தானி. 2:49).

இராஜா ஒரு பொற்சிலையைப் பண்ணுவித்து, அதை ஜனங்களெல்லாரும் பணிந்துகொள்ள வேண்டுமென்று கட்டளையிட்டபோது, இந்த யூத வாலிபர் மறுத்ததினால், அக்கினிச் சூளையில் போடப்பட்டார்கள். கர்த்தர் அவர்களைக் காத்தார். அப்பொழுது இராஜா அவர்களுடைய தேவனுக்கு ஸ்தோத்திரம்பண்ணி, இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான். பின்பு அவர்களைப் பாபிலோன் தேசத்தில் உயர்த்தினான் (தானி. 3:1-30).

## ஆபேல் (Abel)

**(சுவாசம்)**

ஆதாம், ஏவாள் என்பவர்களுக்குப் பிறந்த இரண்டாம் மகன். இவனுக்கு மூத்தவன் காயீன். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான். காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான் (ஆதி. 4:2).

இருவரும் கர்த்தருக்குக் காணிக்கை கொண்டுவந்தார்கள். ஆபேலின் காணிக்கை அங்கீகரிக்கப்பட்டது. காயீனின் காணிக்கை அங்கீகரிக்கப்படவில்லை. இதினிமித்தம் காயீன் ஆபேலைக் கொன்றான் (*ஆதி. 4:3-8*). கர்த்தர் காயீனைச் சந்தித்து, "நீ நன்மை செய்தால் மேன்மை இல்லையோ?" என்று சொல்லி, அவன்மேல் வரும் தண்டனையைக் கூறினார். அவன் அவர் சந்நிதியை விட்டுப் போனான் (*ஆதி. 4:9-16*).

இயேசு ஆபேலைப் பற்றி, முதன் முதல் இரத்தச் சாட்சியாய் மரித்த நீதிமான் என்றார் (*மத். 23:35*). மேலும் விசுவாசத்தினால், ஆபேல் மேன்மையான பலியைச் செலுத்தி, நீதிமான் என்று சாட்சி பெற்றான் (*எபி. 11:4*). காயீன் பொல்லாங்கனால் உண்டாயிருந்தான் என்றும், ஆபேலின் கிரியைகள் நீதியுள்ளவைகளாயிருந்தது என்றும், சொல்லப்பட்டுள்ளது (*1 யோவான் 3:12*).

மனுஷ ஜாதியாருக்குள் நன்மை செய்வோர், தீமை செய்வோர் என இரு பகுதியாருண்டு. அவர்களுக்கு இவ்விரு சகோதரர் முன்னடையாளமாயிருக்கிறார்கள்.

2. இந்தப் பெயருள்ள இடங்களுமுண்டு (*1 சாமு. 6:18; 2 சாமு. 2:14*). இநதச் சொல்லைச் சேர்த்து தொடற்சொற்கள் பல உண்டு. 'ஆபேல் சித்தீம்' (*எண். 33:49*). பெத்மாக்கா என்னும் ஆபேல் (*1 இரா. 15:20*). ஆபேல் மெகொல்லா (*1 இரா. 4:12*).

## ஆமோன் (Amon)

***(கி.மு. 643)***

***(சாமர்த்திய வேலைக்காரன்)***

யூதாவுடைய இராஜா. மனாசேயின் குமாரன். இருபத்திரண்டு வயதில் இராஜாவாகி இரண்டு வருடம் எருசலேமில் அரசாண்டான். அவன் தன் தகப்பன் சேவித்த நரகலான விக்கிரகங்களைப் பணிந்துகொண்டான். அவனு டைய ஊழியக்காரர் அவனை அரண்மனையில் கொன்றுபோட்டார்கள். ஆனால் தேசத்து ஜனங்கள் அவனைக் கொன்றவர்களை வெட்டிப்போட்டு, எட்டு வயதான அவன் குமாரனாகிய யோசியாவை இராஜாவாக்கினார்கள் (*2 இரா. 21:19-26; 2 நாளா. 33:21-25*). ஆமோன் இயேசுவின் முன்னடி யாரில் ஒருவன் (*மத். 1:10*).

2. ஆகாப் இராஜாவின் நாள்களில் சமாரியாப் பட்டணத்துத் தலைவன். ஆகாப் மிகாயாவைச் சிறைச்சாலையில் வைக்கும்படி இவனிடம் அனுப்பினான் (*1 இரா. 22:26*).

3. சிறையிருப்பிலிருந்து திரும்பிவந்த சாலமோனின் வேலைக்

காரருக்குள் ஆமோனின் புத்திரரும் இருந்தார்கள் (நெகே. 7:59). 'ஆமி' என்று எஸ்றா 2:57இல் குறித்துள்ளது.

## ஆமாத் (Hamath)

*(கோட்டை)*

ஓரேன்டஸ் என்னும் தேசத்தின் தலைநகரம். யாத்திராகம நாள்கள் துவங்கி, தீர்க்கதரிசனகாலம் வரைக்கும், ஆமாத் சீரியாவில் ஒரு பெரிய பட்டணமாயிருந்தது. ஆமாத்துக்குப் போகிற வழி என்பது ஒரு விசாலமான பாதை என விளங்குகிறது (எண். 13:21; 34:8; நியா. 3:3). சாலொமோன், யெரொபெயாம் என்பவர்களின் நாட்களில் அப்படி இருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளது (1 இரா. 8:65; 2 இரா. 14:25-28).

ஆமாத்தின் இராஜாவாகிய தோயீ, தாவீதுக்கு வெகுமா னங்களை அனுப்பி, அவனோடு சிநேகிதம்பண்ணினான் (2 சாமு. 8:9).

சாலொமோன் ஆமாத் தேசத்தில் இரஸ்துக்களின் பட்டணங்கள் அனைத்தையும் கட்டினான் (2 நாளா. 8:4).

ஆமாத் ஒரு பெரிய பட்டணமென்றும், ஆமாத் துவக்கி இஸ்ரவேலை ஒடுக்குகிற ஒரு ஜாதி எழும்புமென்றும் ஆமோஸ் குறிக்கிறான் (ஆமோஸ் 6:14).

அக்காலத்தில் இரண்டாம் விசை ஆமாத்திலும் துரத்துண்ட இஸ்ரவேலைக் கர்த்தர் கூட்டிச் சேர்ப்பார் (ஏசாயா 11:11).

ஆமாத்தும் பொல்லாத செய்திகேட்டு கலங்குகிறது (எரே. 49:23).

அசீரிய இராஜா ஆமாத்திலிருந்தும் ஜனங்களை வரப்பண்ணி சமாரியாவில் குடியேற்றினான் (2 இரா. 17:24).

## ஆமோஸ் (Amos)

*(பாரம் சுமப்பவன்)*

1. பன்னிரு தீர்க்கதரிசிகளில் ஒருவன். யூதேயாவிலுள்ள தெக்கோவா ஊரான் யூதாவின் இராஜாவாகிய உசியாவின் நாள்களிலும், இஸ்ரவேலின் இராஜாவாகிய யெரொபெயாமின் நாள்களிலும் இஸ்ரவேலைக் குறித்துத் தீர்க்கதரிசனம் சொன்னான் (ஆமோஸ். 1:1). காலம். கி.மு. 808.

தீர்க்கதரிசியாகுமுன் ஆமோஸ் மந்தை மேய்க்கிறவனும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்குகிறவனுமாய் இருந்தான். மந்தையின் பின்னாலே போகிறபோது கர்த்தர் இவனை அழைத்தார் (ஆமோஸ். 7:14,15).

இஸ்ரவேலுக்கு விரோதமாக ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொன்னதைப் பெத்தேலின் ஆசாரியனான அமத்சியா தடுத்து, அவனைத் துரத்த முயற்சித்தான். ஆனாலும் ஆமோஸ் அஞ்சாமல் தீர்க்கதரிசனம் சொன்னான் (*ஆமோஸ். 7:14*).

*2.* மரியாளின் புருஷனாகிய யோசேப்பின் முற்பிதா (*லூக்கா. 3:25*).

## ஆயலோன் (Ajalon)

*1.* எருசலேமுக்கு வடமேற்கு பக்கமாய் பதினாலு மைல் தூரத்திலுள்ள, தாண் கோத்திரத்தைச்சேர்ந்த ஒரு சம பூமி. இவ்விடத்தில் இஸ்ரவேலர் எமோரியரைத் தோற்கடித்தபோது யோசுவா விண்ணப்பம் பண்ணினதினால் சூரியன் கிபியோன் மேலும், சந்திரன் ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும் தரித்து நின்றது (*யோசுவா. 10:12*).

*2.* இந்தச் சமபூமிக்குக்கிட்ட கோகாத்தியருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு லேவிய பட்டணம் இருந்தது (*யோசுவா. 21:20,24*). தேசம் பிரிக்கப்பட்டபொழுது இது பென்யமீன் கோத்திரத்துக் காயிற்று (*1 நாளா. 8:13*). ஆனால் ஆகாசின் நாள்களில் பெலிஸ்தர் இதைக் கைப்பற்றினார்கள் (*2 நாளா. 28:18*).

*3.* ஆயலோன் ஊர் செபுலோன் தேசத்திலுள்ளது. நியாயாதிபதி யாகிய ஏலோன் அங்கே அடக்கம் பண்ணப்பட்டான் (*நியா. 12:12*).

## ஆயி (Ai)
**(பாழ்குவியல்)**

*1.* பெத்தேலுக்குக் கிழக்குப் பக்கமாயுள்ள ஒரு பட்டணம் (*யோசுவா. 7:2*).

ஆபிரகாம் இந்த இடத்துக்குக் கிட்ட பாளயமிறங்கியிருந்தான் (*ஆதி. 12:8*).

யோசுவா இஸ்ரவேலரோடு இதைப் பிடிக்கப்போன வேளையில், முதல் தோல்வியடைந்து, பின்பு அதைப் பிடித்து, இராஜாவையும், ஜனங்களையும் கொன்று, பட்டணத்தையும் சுட்டெரித்தார்கள் (*யோசுவா 7:2-5; 8:1-28*).

சிறையிருப்பின் காலத்துக்குப் பின்பும் இஸ்ரவேலர் வந்து இங்கே குடியேறினதாகத் தெரிகிறது (*எஸ்றா. 2:28; நெகே. 7:32*).

*2.* எஸ்போனோடு சம்பந்தப்பட்ட ஒரு எமோரியரின் பட்டணம் (*எரே. 49:3*).

## ஆரான் (Haran)
### *(மலைவாசி)*

மெசொபொத்தாமியாவில் எதெசா (Edessa) என்ற இடத்துக்கு அருகில் உள்ள ஓர் ஊர். கல்தேய தேசத்திலுள்ள ஊர் என்ற இடத்திலிருந்து, தேராகு, ஆபிராம், சாராய், லோத்து என்பவர்கள் புறப்பட்டு கானானுக்குப்போகிற வழியில், இங்கே கொஞ்ச காலம் தங்கியிருந்தார்கள். தேராகு இங்கே மரித்தான் *(ஆதி. 11:31-32; 12:4,5)*. ஆபிராமுடைய சகோதரனாகிய நாகோரின் சந்ததியார் இங்கே வாசம்பண்ணினார்கள்.

இதினிமித்தம் மெசொபொத்தாமியாவிலுள்ள நாகோரின் ஊர் என்னப்பட்டது. ஆபிராமின் ஊழியக்காரன் ரெபெக்காளைச் சந்தித்த தண்ணீர்த் துரவு இந்த ஊருக்குப் புறம்பேயுள்ளது *(ஆதி. 24:10-15)*.

பிற்காலத்தில் இந்த இடத்துக்கு அருகில் ரோம சேனாதிபதி சிறாசஸ் (Crassus) என்பவன் தோல்வியடைந்தான்.

ஆரான் என்னும் தேசத்தை அசீரியர் அழித்துப் போட்டதாக ரப்சாக்கே சொன்னான் *(2 இரா. 19:12)*.

இதன் பெயர் காரான் என்று அப். 7:4இல் குறித்துள்ளது.

2. தேராகுவின் மகன்; ஆபிராமின் சகோதரன். லோத்து, மில்க்காள், இஸ்காள் என்பவர்களின் தகப்பன் *(ஆதி. 11:27,28)*.

3. காலேபின் மறுமனையாட்டியாகிய எப்பாள் பெற்ற மகன் *(1 நாளா. 2:46)*.

4. கெர்சோனியனான சிமேயின் குமாரன் *(1 நாளா. 23:9)*.

## ஆரோன் (Aaron)
### *(பிரகாசமாக்கப்பட்ட)*

லேவி கோத்திரத்து அம்ராம், யோகெபேத்தை விவாகம் பண்ணி, மிரியாம், ஆரோன், மோசே என்பவர்களைப் பெற்றான் *(யாத். 6:20)*.

ஆரோனின் குமாரர் நாதாப், அபியு, எலெயாசார், இத்தாமார் என்பவர்கள் *(யாத். 6:23; 1 நாளா. 6:3)*.

இஸ்ரவேலை எகிப்திலிருந்து மீட்டுக்கொண்டு வரும்படி கர்த்தர் மோசேக்குச் சொன்னபோது அவன், தான் வாக்கு வல்லவனல்ல என்றதினிமித்தம் அவர் அவனுடைய சகோதரனாகிய ஆரோனை

அவனிடம் அனுப்புவதாகவும், அவன் ஜனங்களிடம் பேசுவா னென்றும் சொன்னார் *(யாத். 4:10-16)*.

ஆரோன் போய் மோசேயைச் சந்தித்தபோது மோசே கர்த்தர் கட்டளையிட்டவைகளை இவனுக்குத் தெரிவித்தான். பின்பு இருவரும் இஸ்ரவேலின் மூப்பரோடு இவைகளைப்பற்றி பேசினபோது, அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள் *(யாத். 4:27-31)*. மோசேயும், ஆரோனும் பார்வோனிடம்போய், இஸ்ரவேலைப் போகவிடும்படி கேட்டதின் பயனாக அவன் ஜனங்களின் வேலையை அதிக கொடுமையாக்கினான் *(யாத். 6:1-9)*.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி பார்வோன் உங்களிடம் அற்புதம் காட்டும்படி சொன்னால், ஆரோன் பார்வோனுக்கு முன்பாக தன் கோலைப் போடும்போது அது சர்ப்ப மாகும் என்றார். அப்படிச் செய்தபோது எகிப்தின் மந்திரவாதிகளும் அப்படிச் செய்தார்கள். ஆனால் ஆரோனுடைய கோல் அந்தச் சர்ப்பங்களை விழுங்கிற்று *(யாத். 7:8-12)*.

இதன் பின்பும் அநேக அற்புதங்கள் செய்தபின் பார்வோன் இஸ்ரவேலைப் போகவிட்டான். ஜனங்கள் புறப்பட்டு ரெவிதீமுக்குப் போயிருக்கையில் அமலேக்கியர் வந்து யுத்தம் பண்ணினார்கள். மோசேயும், ஆரோனும், ஊர் என்பவனும் மலையுச்சியில் ஏறினார்கள். மோசே தன் கையை ஏறெடுத்திருக்கையில், ஆரோனும், ஊரும் அவன் கைகளைத் தாங்கினார்கள் *(யாத். 17:12)*. அமலேக்கியர் தோல்வியடைந்தார்கள். பின்பு பிரயாணமாய் சீனாய் மலையடி வாரம் சேர்ந்தார்கள். மோசேயும், ஆரோனும், நாதாபும், அபியுவும் மற்றும் எழுபது மூப்பரும் பணிந்துகொள்ளும்படி கர்த்தர் சொன்னார்.

மோசே மட்டும் கர்த்தருக்குச் சமீபமாய்ப் போனான் *(யாத். 24:1,2)*.

மோசே மலையிலிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்டு, ஆரோனிடம், தங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டு பண்ணும்படி கேட்டார்கள். அவன் ஒரு பொற்கன்றுக் குட்டியை வார்ப்பித்து, "இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே", என்றான். ஜனங்கள் அதற்குப் பலி செலுத்தி பண்டிகை கொண்டாடினார்கள். மோசே இறங்கி வந்து, இவைகளைக் கண்டு, அப்படிச்செய்த ஜனங்களைக் கொன்றான். அன்று மூவாயிரம்பேர் மாண்டார்கள் *(யாத். 32:1-28)*.

கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாகக் கலகம் செய்தார்கள். கர்த்தர்

கொள்ளை நோயை அனுப்பினதால் கலகக்காரர் மாண்டு போனார்கள் (எண். 16:1-11). மோசேயும், ஆரோனும் நிலை பெற்றார்கள்.

கோராகு கலகம்பண்ணின வேளையில் கர்த்தரின் சொற்படி பன்னிரண்டு கோல்களைச் சாட்சியின் கூடாரத்தில் வைத்தபோது, ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது (எண். 17:1-10).

ஆசரிப்புக் கூடாரம் செய்யப்பட்டபின் அதில் ஆராதனை செய்வதற்கு வஸ்திரங்கள் ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் செய்யப்பட்டது (யாத். 39:1-31). பின்பு ஆசாரிப்புக் கூடாரத்தை நிறுத்தினபின், மோசே, ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசாரிய ஊழியத்துக்கு அபிஷேகம் பண்ணினான் (லேவி. 8:10-12). ஆரோ னுடைய குமாரரின் ஊழியம் கூடாரத்தின் முற்பாகத்தில் செய்ய வேண்டியவை. ஆரோன் மாத்திரம் பிரதான ஆசாரியனாய், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள், கிருபாசனத்துக்கு முன், வருஷத்துக்கு ஒருமுறை பாவ நிவாரண தினத்தில் போகவேண்டும் (லேவி. 16:12-14).

ஆரோனின் குமாரராகிய நாதாபும், அபியுவும் தங்கள் தூப கலசங்களில் அந்நிய அக்கினிபோட்டு கர்த்தருடைய சந்நிதியில் வந்தபோது, பரிசுத்த அக்கினி புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது. ஆரோன் பேசாதிருந்தான் (லேவி. 10:1-7).

சீனாயை விட்டுப் புறப்பட்டு போகையில், ஆரோனும், மிரியாமும், மோசேக்கிருந்த அதிகாரத்தினிமித்தம் பொறாமை கொண்டு, அவன் விவாகம் பண்ணின எத்தியோப்பியா தேசத்து ஸ்திரீயினிமித்தம் அவனுக்கு விரோதமாகப் பேசினார்கள். இத னிமித்தம் மிரியாம் குஷ்டரோகியானாள். ஆரோன் மன்னிப்புக் கேட்டு, மோசே அவளுக்காக ஜெபித்தபோது, சொஸ்தமானாள் (எண். 12:1-15).

இதன்பின் இஸ்ரவேலர் திரும்பவும் காதேசுக்கு வந்தபோது தண்ணீர் இல்லாதிருந்தது. தண்ணீர் வரும்படி, கர்த்தர் மோசேக்கும், ஆரோனுக்கும் சொன்னபடி அவர்கள் செய்யாமல், தங்கள் வல்லமையினால் செய்வதுபோல, மோசே கன்மலையை அடித்தான். இதினிமித்தம் அவர்கள் இருவரும் கானானுக்குப் போவதில்லை யென்று கர்த்தர் சொன்னார் (எண். 20:1-13)

பிற்பாடு ஜனங்கள் பிரயாணம் பண்ணி ஓர் (Mt. Hor) என்னும் மலைக்குப் போனார்கள். மோசேயும், ஆரோனும், எலெயாசாரும் மலைக்குமேல் ஏறிப்போய் அங்கே மோசே, ஆரோனின் வஸ்திரங்களைக் கழற்றி எலெயாசாருக்கு உடுத்தினபின் ஆரோன் மரித்தான் (எண். 20:22-28). ஆரோன் மரிக்கும்போது நூற்று இருபத்துமூன்று வயதாயிருந்தான் (எண். 33:39).

ஆரோன் லேவி கோத்திர ஆசாரிய முறைமைக்கு உட்பட்டவன். அது பூரணப்பட்டதல்ல. இயேசுவோ மெல்கிசேதேக்கின் முறைமையில் அழைக்கப்பட்டு அழியாத இவனுக்குரிய வல்லமையின்படி ஆசாரியரானார் *(எபி. 7:11-17).*

## இக்கோனியா (Iconium)
### *(சிறிய விக்கிரகம்)*

இது சின்ன ஆசியாவில் (Asia Minor) லீஸ்திராவுக்குக் கிட்ட இருந்த ஒரு பூர்வீகப் பட்டணம். இப்போதும் இது ஒரு பெரிய பட்டணமாக இருக்கிறது.

பவுலும், பர்னபாவும், முதலாம் சுவிசேஷ பிரயாணத்தில் இங்கேபோய் பிரசங்கித்தார்கள். அநேக அற்புதங்கள் செய்யும்படி கர்த்தர் அனுக்கிரகம்பண்ணினார். யூதரால் பகை உண்டானபோது சுற்றுப்புறங்களுக்கு ஓடிப் போனார்கள் *(அப். 14:1-7).*

லீஸ்திராவில் கல்லெறியப்பட்ட பின்பும், பவுலும் பர்னபாவும் திரும்பி இந்த இடத்துக்குவந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தினார்கள் *(அப். 14:19-22).*

இரண்டாம் சுவிசேஷ பிரயாணத்திலும், பவுல் இவ்விடம் போயிருந்தான். அச்சமயத்தில் இக்கோனியா சகோதரரால் நற்சாட்சி பெற்ற தீமோத்தேயுவைக் கண்டு அவனையுங் கூட்டிக்கொண்டு போனான் *(அப். 16:1-7).*

பின்பு இவ்விடத்தில் தனக்குண்டான துன்புறுத்தல்களைப்பற்றி தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதியுள்ளான் *(2 தீமோ. 3:11).*

## இசக்கார் (Issachar)
### *(கூலி வேலை செய்பவன்)*

இவன் யாக்கோபின் ஒன்பதாம் மகன். லேயாள் பெற்ற ஐந்தாம் மகன் *(ஆதி. 30:14-18).* யாக்கோபு எகிப்துக்குப் போகுமுன் இவனுக்கு நான்கு குமாரர் இருந்தார்கள் *(ஆதி. 46:13).*

சீனாயில் கணக்கெடுத்தபோது இவர்களில் ஐம்பத்து நாலாயிரத்து நானூறுபேர் இருந்தார்கள் *(எண். 1:29).* பிரயாணத்தில் இவர்கள் யூதாவுக்கருகே பாளயமிறங்கினார்கள் *(எண். 2:5).*

இரண்டாம் முறை கணக்கெடுத்தபோது இவர்கள் அறுபத்து நாலாயிரத்து முந்நூறுபேராயிருந்தார்கள் *(எண். 26:25).*

யோர்தானைக் கடந்தபின் ஆசீர்வாதம் கூற இவர்கள் கெரிசீம் மலையில் நின்றார்கள் *(உபா. 27:12).*

மோசே சொன்ன ஆசீர்வாதத்தில் இவர்கள் கடலிலுள்ள சம்பூரணத்தை அனுபவிப்பார்கள் என்றான் (உபா. 33:18,19).

யாக்கோபின் கடைசி வார்த்தைகளில், இவர்கள் இளைப் பாறுதலை நாடுவார்களென்றான் (ஆதி. 49:14,15).

தேசம் பிரிக்கப்பட்ட வேளையில் யெஸ்ரயேல் சமபூமி பதினாறு பட்டணங்களோடு இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் கடற்கரை மட்டும் இவர்களுக்குப் பூமி கிடைத்ததாகத் தெரியவில்லை.

தெபொராளும், பாராக்கும் இந்தக் கோத்திரத்தார். சிசெராவோடு நடந்த யுத்தத்தில், இவர்கள் விசேஷ பங்கெடுத்தார்கள் (நியா. 5:15).

நியாயாதிபதியாகிய தோலாவும், இராஜாக்களாகிய பாஷா, ஏலா என்பவர்களும் இந்தக் கோத்திரத்தார் (நியா. 10:1; 1 இரா. 15:27).

தாவீது ஜனத்தொகை எடுத்தபோது இந்தக் கோத்திரத்தில் எண்பத்தேழாயிரம்பேர் இருந்தார்கள் (1 நாளா. 7:5).

எப்ரோனில் தாவீதினிடம் வந்த இசக்கார் புத்திரரில், இஸ்ரவேலர் செய்யவேண்டியதை அறிந்து யோசனை சொல்லத்தக்க இருநூறுபேர் இருந்தார்கள் (1 நாளா. 12:32).

சாலொமோனின் மணியக்காரரில் ஒருவன் இசக்காரில் இருந்தான் (1 இரா. 4:7). எசேக்கியா நடத்தின பஸ்கா பண்டிகைக்கு இவர்களும் போயிருந்தார்கள் (2 நாளா. 30:18). எசேக்கியேலின் தரிசனத்திலும், யோவானின் வெளிப்படுத்தலிலும், இவர்கள் குறிக்கப்படுகிறார்கள் (எசே. 48:25; வெளி. 7:7).

2. தாவீதின் நாள்களில் காவல் காக்கிறவர்களின் வகுப்பைச் சேர்ந்த ஒரு கோராகியன் (1 நாளா. 26:5).

## இஸ்போசேத் (Ishbosheth)
**(வெட்கப்பட்டவன்)**

இவன் சவுலின் இளைய மகன். இவனுடைய பெயர் எஸ்பால், இஸ்வி என்றும் சொல்லப்பட்டது (1 நாளா. 8:33; 1 சாமு. 14:49).

இவனுடைய தகப்பனும், அண்ணன்மாரும் கில்போவா மலையில் நடந்த யுத்தத்தில் மாண்டபின் சவுலின் படைத் தலைவனாகிய அப்னேர் இவனை மக்னாயீமுக்குக் கொண்டுபோய், இராஜா வாக்கினான். இவனுக்கு அப்பொழுது நாற்பது வயது. இரண்டு வருடம் அரசாண்டான் (2 சாமு. 2:8, 10). சவுலின் குடும்பத்துக்கும், தாவீதின் குடும்பத்துக்கும் நெடுநாள் யுத்தம் நடந்தது (2 சாமு. 3:1).

இஸ்போசேத் ரிஸ்பாளின் விஷயத்தில் அப்னேரில் குற்றம் பிடித்ததினிமித்தம் அவன் கோபங்கொண்டு, தாவீதோடு சேர்ந்து

கொள்ள எத்தனித்தான். ஆனால் யோவாப் அப்னேரைக் கொன்றான் *(2 சாமு. 3:6, 27).*

அப்பொழுது இஸ்போசேத்தின் படைத்தலைவரான பானா, ரேகாப் என்பவர்கள், அவன் மத்தியான வேளையில் படுக்கையி லிருக்கையில் அவனைக் குத்திக் கொன்றார்கள். அவர்கள் இந்தச் செய்தியைச் சொல்ல, தாவீதிடம் போனபோது அவன் அவர்களைக் கொன்றான். இஸ்போசேத்தின் தலையை எபிரோனில் அப்னேரின் கல்லறையில் அடக்கம் பண்ணினார்கள் *(2 சாமு. 4:5-12).*

## இஸ்மவேல் (Ishmael)

***(கர்த்தர் கேட்கிறார்)***

இவன் சாராளுடைய அடிமைப் பெண்ணாகிய ஆகார், ஆபிரகாமுக்குப் பெற்ற பிள்ளை. ஆகார் கர்ப்பவதியானபோது, சாராயை அற்பமாக எண்ணினதினிமித்தம் சாராய் அவளைக் கடினமாய் நடத்தினாள். ஆகார் ஓடிப்போன வேளையில், தேவ தூதன் அவளைக் கண்டு, "நீ ஒரு குமாரனைப் பெறுவாய், அவனுக்கு இஸ்மவேல் என்று பேரிடுவாயாக. அவனுடைய கை எல்லாருக்கும் விரோதமாக இருக்கும்" என்றார். மேலும், "நீ திரும்பிப்போய் சாராயின் கையின் கீழ் அடங்கியிரு" என்றார் *(ஆதி. 16:9).*

ஆபிரகாமுக்கு எண்பத்தாறு வயதிருக்கையில் இஸ்மவேல் பிறந்தான். பதின்மூன்று வருடங்களுக்குப்பின் ஆபிரகாமும், இஸ்மவேலும் ஒரே நாளில் விருத்தசேதனம் பண்ணப்பட்டார்கள் *(ஆதி. 17:25,26).*

கர்த்தர் ஆபிரகாமுக்குத் தரிசனமான வேளையில், ஆபிரகாம் இஸ்மவேலுக்காக வேண்டிக்கொண்டான். கர்த்தர், "நான் அவனை ஆசீர்வதித்து, அவனைப் பலுகப் பண்ணுவேன். அவன் பன்னிரண்டு பிரபுக்களைப்பெறுவான்" என்றார் *(ஆதி. 17:17-20).*

இஸ்மவேல் பதினாறு வயதானபோது, ஈசாக்கு பால் மறந்த நாளில், ஆபிரகாம் பெரிய விருந்து பண்ணினான். இஸ்மவேல் ஈசாக்கைப் பரியாசம் பண்ணினான் *(ஆதி. 21:7-9; கலா. 4:29).* இதினிமித்தம் ஆகாரும், அவள் மகனும் புறம்பே தள்ளப்பட்டார்கள். அவள் புறப்பட்டு வனாந்தரத்தில் அலைந்து திரிந்தாள். பிள்ளை தண்ணீர் இல்லாததினால் அழுதான்.

தேவன் பிள்ளையின் சத்தத்தைக் கேட்டு ஒரு தண்ணீர் துரவைக்காட்டினார் *(ஆதி. 21:19).* இஸ்மவேல் வளர்ந்து, வில் வித்தையில் வல்லவனாகி, ஒரு எகிப்திய பெண்ணை விவாகம் பண்ணி பன்னிரண்டு குமாரரையும், ஒரு குமாரத்தியையும் பெற்றான்

(ஆதி. 25:12-16). ஏசா இவனுடைய குமாரத்தியாகிய மகலாத்தை விவாகம் செய்தான் (ஆதி. 28:9). 'பஸ்மாத்' என்று ஆதி. 36:3இல் குறித்துள்ளது.

இவனும் ஈசாக்கும் தங்கள் தகப்பனை அடக்கம் பண்ணி னார்கள். இஸ்மவேல் நூற்று முப்பத்தேழு வயதில் மரித்தான் (ஆதி. 25:9, 17).

மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டால் தான் இரட்சிப்பு உண்டென்றவர்களையும், விசுவாசத்தினாலே இரட்சிப்பு வரும் என்றவர்களையும் பவுல், கலா. 4:21-28இல் ஆகாருக்கும், சாராளுக்கும் ஒப்பிடுகிறான். மாம்சத்தின்படி பிறந்த இஸ்மவேல் அடிமையின் பிள்ளை. இவன் ஆபிரகாமின் பிள்ளையாயிருந்தும், மாம்சத்தின்படி பிறந்தவனானதால், புறம்பே தள்ளப்பட்டான். அதுபோலவே நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டு மென்கிறவர்கள், அடிமைத்தனத்திலிருக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறான்.

2. நெத்தானியாவின் மகன்; தாவீதின் இராஜ குடும்பத்தைச் சேர்ந்தவன்.

எருசலேம் அழிக்கப்பட்ட பின் நெபுகாத்நேச்சார் அகிக்காமின் குமாரனாகிய கெதலியாவை அதிகாரியாக நியமித்தான். அப்பொழுது இஸ்மவேலும் வேறு ஆள்களும், அவனிடம் வந்த வேளையில், அவன் இவர்களுக்குப் பாபிலோன் இராஜாவைச் சேவிக்கும்படி சொன்னதினிமித்தம் அவனைக் கொன்றார்கள் (2 இரா. 25:22-26; எரே. 40;7-16).

இதினிமித்தம் யோகனானும், வேறு ஆள்களும் சேர்ந்து இஸ்மவேலோடு யுத்தம் பண்ணப்போன வேளையில் அவன் தப்பிக் கொண்டான் (எரே. 41:1-15).

3. பென்யமீன் கோத்திரத்து சவுலின் சந்ததியான ஆத்சேலின் குமாரன் (1 நாளா. 8:38).

4. யோவாசை இராஜாவாக்க யோய்தாவுக்கு உதவியாயிருந்த நூற்றுக்கதிபதியாகிய இஸ்மவேல் (2 நாளா. 23:1).

5. அந்நிய ஸ்திரீயை விவாகம் செய்தபின் தள்ளிவிட்ட ஒரு ஆசாரியன் (எஸ்றா. 10:22).

6. செபதியா இஸ்மவேலின் குமாரன் (2 நாளா. 19:11).

## இஸ்மவேலர்

இஸ்மவேலுக்கு பன்னிரண்டு புத்திரரிருந்தார்கள். அவர்களுடைய சந்ததியார் இஸ்மவேலர். ஆனாலும் இந்தச் சொல் வேறு

ஜாதியாரையும் சேர்க்கிறது (ஆதி. 37:28, 36). மீதியானியரும், அமலேக்கியரும், சகல கிழக்கத்திப் புத்திரரும் இவர்களைச் சேர்ந்தவர்கள் (நியா. 7:12).

## இஸ்ரவேல் (Israel)

### *(கர்த்தர் போராடுகிறார்)*

யாக்கோபு பெனியேலில் ஒரு தேவ மனுஷனோடு வாதாடின போது, அவனுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது (ஆதி. 32:28). பின்பு அவன் பதான் அராமிலிருந்து வந்த பின்பு, மறுபடியும் தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனை ஆசீர்வதித்து 'இஸ்ரவேல்' என்று பேரிட்டார் (ஆதி. 35:10).

அதன்பின் அவனுக்கு இஸ்ரவேல் என்றும், அவன் சந்ததியாருக்கு 'இஸ்ரவேல் புத்திரர்' என்றும் பெயர் வழங்கிற்று (ஆதி. 32:32; 34:7; 49:16).

ஆனாலும் எகிப்திலிருந்து கி.மு. 1491இல் புறப்பட்ட பின்பே அவர்கள் ஒரு ஜாதியாக மதிக்கப்பட்டு, 'எபிரெயர்' என்று அழைக்கப்பட்டார்கள். எபிரெயர் என்பதின் அர்த்தம் அக்கரையார். ஆபிராம் ஐப்பிராத்து நதியைக் கடந்து வந்தபடியால், அந்தப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

யாக்கோபின் குமாரர் கானான் தேசத்திலிருந்த காலத்தில் பெரிய பஞ்சம் உண்டாயிற்று. அக்காலத்தில் யாக்கோபின் ஒரு மகனாகிய யோசேப்பு எகிப்து தேசத்தில் மேலான நிலைமையிலிருந்தான். அவன் அவர்களை அழைத்ததினால் அங்கே போய் குடியேறி னார்கள் (கி.மு. 1706).

யோசேப்பு கி.மு. 1635இல் மரித்தபின் எகிப்து இராஜாக்கள், இந்த ஜனங்களைக் கொடூரமாய் நடத்தினார்கள். அவர்களின் கூக்குரலைத் தேவன் கேட்டு, மோசேயை அனுப்பி, அவன்மூலம் அவர்களை விடுவித்தார். மோசே எகிப்துக்குப்போய், பார்வோனோடு பேசி, அற்புதங்களைச் செய்து, உத்தரவு பெற்று, ஜனங்களைக் கூட்டிக் கொண்டு போனான்.

நானூற்று முப்பது வருட அடிமைத்தனத்தின் பின் ஜனங்கள் எகிப்திலிருந்து கி.மு. 1491-இல் புறப்பட்டார்கள். மோசே அவர்களுக்குத் தலைவனாயிருந்தான்.

அவன் அவர்களை வழிநடத்தி சிவந்த சமுத்திரத்தைக் கடந்து சீனாய் மலையடிவாரத்துக்குக் கொண்டு போனான். அங்கே, தேவன் அவர்களுக்குப் பிரசன்னமாகி, தம்மை வெளிப்படுத்தி கைக்கொள்ள வேண்டிய கற்பனைகளைக் கொடுத்து, அவர்களைக் கானான் தேசத்துக்குக் கொண்டு போவதாகச் சொன்னார் (கி.மு. 1491).

மெய்த்தேவன் ஒருவரே, அவரையல்லாமல் சொரூபங்களையும், வேறே தேவர்களையும் வணங்கக் கூடாதென்று தேவன் சொல்லியிருந்தும், மோசே சீனாய் மலைமேல் ஏறிப்போய், திரும்பிவரத் தாமதித்தபோது, ஜனங்கள் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதை வணங்கினார்கள். மோசே மலையிலிருந்து இறங்கிவந்து அதைக் கண்டு, ஜனங்களுக்காகத் தேவனிடம் வாதாடி மன்னிப்புப் பெற்றான் *(யாத். 32:1-35).*

இஸ்ரவேலர் நாற்பது வருடம் வனாந்தரத்தில் பிரயாணம் செய்தார்கள். அநேக நாள்கள் காதேஸ் பர்னேயாவில் தங்கியிருந்தார்கள். மோசே அவர்களுக்குத் தீர்க்கதரிசியும், ஆசாரியனும், அதிகாரியுமாயிருந்தான்.

மேலும் தேவனுடைய கட்டளைப்படி ஓர் ஆசரிப்பு கூடாரத்தையும், சாட்சி பெட்டியையும், அதின்மேல் இரண்டு கேருபீன்களையும் உண்டாக்கி, அது கர்த்தருடைய சிங்காசனம் என்று அவ்விதமே அவரைத் தொழுதுகொள்ளும்படி மோசே ஜனங்களுக்குச் சொன்னான் *(யாத். அதி. 35-40 கி.மு. 1490).*

எகிப்திலிருந்துப் புறப்பட்ட இரண்டாம் வருடத்தில் ஜனத் தொகை எடுக்கப்பட்டது *(எண். 1:4).*

காதேஸ் பர்னேயாவிலிருந்து, கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படி மோசே ஆள்களை அனுப்பினான். அவர்கள் திரும்பி வந்து துர்ச்செய்தி சொல்லவே ஜனங்கள் புலம்பினார்கள். இதினிமித்தம் ஜனங்கள் நாற்பது வருடம் வனாந்தரத்தில் அலைந்து திரியவேண்டி வந்தது. போகிற வழியில் மோவாபியரோடும், மீதியானியரோடும் யுத்தம் செய்தார்கள். யோர்தானுக்கு அருகில் வந்தபோது ரூபன், காத், மனாசேயின் பாதிகோத்திரங்களுக்கு இக்கரையில் தேசம் கொடுக்கப்பட்டது *(யோசுவா. 12:1-6).*

மேரிபாவின் தண்ணீரண்டை நடந்த சம்பவத்தினிமித்தம், மோசேயும், ஆரோனும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குப் போக முடியவில்லை. ஆரோன் கி.மு. 1452-ல் மரித்தான். மோசே கி.மு. 1451-ல் மரித்தான்.

மோசேயின் ஸ்தானம் யோசுவாவுக்குக் கொடுக்கப்பட்டது. அவன் ஜனங்களை யோர்தான் ஆற்றுக்கூடாக வழி நடத்தி எரிகோ பட்டணத்தைக் கி.மு. 1451ல் பிடித்தான். பின்பு வேறு பட்டணங்களையும் கைப்பற்றி அநேக ஜாதிகளைக் கீழ்ப்படுத்தினான். அப்பொழுது ஐந்து இராஜாக்கள் உடன்படிக்கை செய்துகொண்டு இவனுக்கு விரோதமாக வந்தபோது அவர்களைக் கிபியோனில் தோற்கடித்துக் கொன்றுபோட்டு, தேசங்களையும்

கைவசப்படுத்தினான். இஸ்ரவேலின் மற்றக் கோத்திரங்கள் வெவ்வேறு பகுதிகளில் குடியேறினார்கள். முன் அங்கேயிருந்தக் கானானியரைத் துரத்தாமல் அவர்களோடு கலந்து ஜீவித்தார்கள்.

அப்படியே நாளடைவில், இஸ்ரவேலர் கானானியருடைய பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொண்டதோடு, பாகால் வணக்கத்திலும் பழகிக்கொண்டார்கள். ஒரே தேவ வணக்கத்தை விட்டுவிட்டுப் பல தேவர்களையும் சேவித்தார்கள்.

இவ்விதமாய் தங்களை, எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு அற்புதவிதமாய் வனாந்தரப் பிரயாணத்தில் வழிநடத்தி, கானான் தேசத்தை சுதந்தரமாய்க் கொடுத்த ஜீவனுள்ள தேவனை மறந்த இந்த ஜனத்தின் நிலை இப்படியாயிற்று. கானானியர் இவர்களைக் கீழ்ப்படுத்தத் தொடங்கினார்கள். இவர்களுடைய இனத்தவரான மோவாபியரும், அம்மோனியரும் வந்து இவர்களைக் கொள்ளை யடித்தார்கள். சத்துருக்களாகிய பெலிஸ்தர் இவர்களுக்கு இடுக்கண் செய்தார்கள். பின்பு யோசுவாவும் கி.மு. 1427-ல் மரித்தான்.

## நியாயாதிபதிகளின் காலம்

*(கி.மு. 1427 - கி.மு. 1095)*

இப்படிப்பட்ட காலத்தில் தேவன் ஜனங்களின் பாதுகாப்புக்காக காலத்துக்குக் காலம் நியாயாதிபதிகளை எழுப்பினார். அவர்கள் ஒடுக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக்கொண்டு தங்கள் தங்கள் ஊரிலிருந்து அதிகாரம் செலுத்தினார்கள்.

தேவ ஆவியினால் இவர்கள் நடத்தப்பட்டார்களென்பதை ஜனங்கள் அறிந்து அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். இந்த நியாயாதிபதிகளைப் பற்றி நியா. 3:8-16:31 வரை குறித்துள்ளது. 480 வருட காலமாய் இப்படி நடந்தது (1 இரா. 6:1). அதாவது எகிப்திலிருந்து புறப்பட்ட காலம் தொடங்கி, தேவாலயம் கட்டத் தொடங்கின காலம் வரை நியாதிபதிகளின் காலம் (332 வருடங்கள்) எனலாம்.

இவர்களில் விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றவர்கள் கிதி யோன், பாராக், சிம்சோன், யெப்தா, சாமுவேல் என்பவர்களே (எபி. 11:32).

ஏலியின் நாள்களில் பெலிஸ்தரோடு யுத்தம் நடந்தபோது, தேவனுடைய பெட்டி பிடிக்கப்பட்டது. பெலிஸ்தர் ஏழு மாதம் அதை வைத்திருந்தார்கள் (1 சாமு. 6:1). திருப்பி அனுப்பிவிட்டபோது அதைக் கீரியாத் யாரீமின் மனுஷர் அபினதாபின் வீட்டில் வைத்தார்கள். தாவீது அதை எருசலேமுக்குக் கொண்டு போகும் வரை இருபது வருஷம் அங்கே இருந்தது.

## சாமுவேலின் ஊழியம்
*(கி.மு. 1150-1095)*

இஸ்ரவேலருக்கும் பெலிஸ்தருக்குமிடையில் நடந்த யுத்தத்தில் ஏலியின் குமாரர் கொல்லப்பட்டார்கள். ஏலியும் மரித்தான். அப்பொழுது தேவன் சாமுவேலை எழுப்பினார். இவன் ஜனங்களின் பாவத்தை அவர்களுக்கு உணர்த்தி, பாகால் வணக்கத்தை விட்டு விட்டு, கர்த்தர் ஒருவருக்கே ஆராதனை செய்யும்படி ஏவினான். ஜனங்கள் அப்படிச் செய்து, தேவனுடைய உதவியால் பெலிஸ்தரை முறியடித்தார்கள்.

சாமுவேல் வயோதிபனானபோது, அவனுடைய குமாரரும் ஒழுங்காய் நடவாததினால், ஜனங்கள் தங்களுக்கு ஒரு இராஜா வேண்டுமென்று கேட்டார்கள். சாமுவேல் அதை ஏற்றுக் கொள்ளாதிருந்தும், தேவனுடைய வெளிப்படுத்தலின்படி, அவன் சவுலைத் தெரிந்து, அவர்களுக்கு இராஜாவாக ஏற்படுத்தினான் *(1 சாமு. அதி. 10).*

## சவுலுடைய ஆளுகை
*(கி.மு. 1905-1055)*

சவுல் முதன் முதல், அம்மோனியரோடு யுத்தம் செய்து அவர்களைத் தோற்கடித்தான். சாமுவேலின் ஆலோசனைப்படி அவன் நடந்துகொண்ட வேளையில் அவனுக்கு எல்லாம் அனுகூலமா யிருந்தது. சவுலுடைய மகன் யோனத்தானும் பெலிஸ்தர் மேல் வெற்றி சிறந்தான். சவுல் அமலேக்கியருக்கு விரோதமாய் யுத்தம் செய்கையில் சாமுவேலின் சொற்படி செய்யாததினால் கர்த்தர் அவனைக் கைவிட்டார். யுத்தத்தில் அவனும் யோனத்தானும் கொல்லப் பட்டார்கள் *(1 சாமு. அதி. 31).*

## தாவீதின் ஆளுகை
*(கி.மு. 1055-1015)*

சவுலின் பின், தாவீது இஸ்ரவேலின் இராஜாவானான். அவன் அநேக தடவைகளில் பெலிஸ்தரைத் தோற்கடித்து அவர்களை முற்றாய்க் கீழ்ப்படுத்தினான். ஏழாம் வருஷம் எருசலேமைக் கைப்பற்றி அதைத் தலை நகராக்கினான். சீயோன் மலைமேல் ஒரு கூடாரம் கட்டி, கர்த்தரின் பெட்டியைக் கொண்டுவந்து, அங்கே வைத்து அதை ஜனங்கள் சேவிக்கிறதற்கான ஒரு மத்தியஸ்தானமாக்கி னான். பிற்பாடு தேவாலயம் அவ்விடத்திலேயே கட்டப் பட்டது.

தாவீது சுற்றிவர இருந்த ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி, இஸ்ரவேலின் சுயாதீனத்தை ஸ்தாபித்து, ஒரு பெரிய இராஜ்யத்தை நிலைப்

படுத்தினான். இந்த இராஜ்யம் எகிப்தின் எல்லை தொடங்கி அக்கபாகுடா நாடு வழியாய் ஐபிராத்து நதிவரை பரவியிருந்தது.

## சாலொமோனின் ஆளுகை

***(கி.மு. 1015-975)***

தாவீது முதிர் வயதானபோது, தன் குமாரனாகிய சாலொமோனை தன்னுடைய ஸ்தானத்தில் இராஜாவாக்கினான் *(1 இரா. 2:1-46; 1 நாளா. அதி. 28-29)*. இவன் பெரிய கட்டடங்களைக்கட்டி, இராஜ பரிவாரம் வைத்து, மேம்பாடான ஜீவியம் செய்தான். தேவன் அவனுக்குத் தரிசனமாகி நீ விரும்புகிறதைக் கேள் என்று சொன்ன போது, அவன் ஞானமுள்ள இருதயத்தைக் கேட்டதால், தேவன் பிரியப்பட்டு, அதையும், அதோடு ஐசுவரியத்தையும், கீர்த்தியையும், மகிமையையும் அவனுக்குக் கொடுத்தார் *(1 இரா. 3:12)*.

ஆனாலும் அவன் அநேகம் அந்நிய ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்டான். வரிப்பணங்களை ஜனங்களிடம் கண்டிப்பாய் வசூலித்தான். இவைகளினிமித்தம் ஜனங்களுக்குள் திருப்தியீனமும் கலகமும் உண்டானது. அந்நிய ஸ்திரீகளினிமித்தம் அந்நிய தேவர்களையும் இராஜா பின்பற்றினான். கர்த்தர் சொப்பனத்தில் இருவிசை அவனை எச்சரித்தும், தேவனுக்குக் கீழ்ப்படியாததால் அவன்மேல் கோபமானார்.

சாலொமோன் கி.மு. 930-ல் மரித்தபோது இராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது *(கி.மு. 975)*. இஸ்ரவேல் கோத்திரங்கள் இரு பகுதியாயின. யூதா, பென்யமீன் கோத்திரங்கள் இருந்த தேசம் தென் இராஜ்யம் எனப்பட்டு, சாலொமோனின் குமாரனாகிய ரெகொபெயாம் பக்கமாயின. மற்றக் கோத்திரங்கள் யெரொபெயாமைத் தங்களுக்கு இராஜாவாகத் தெரிந்து கொண்டார்கள். இது வட இராஜ்யம் எனப்பட்டது. இதன்பின் இவைகள் யூதா இராஜ்யம், இஸ்ரவேல் இராஜ்யம் என முறையே சொல்லப்பட்டன.

இவ்விரண்டு இராஜ்யங்களும் 250 வருடமாக நடைபெற்றன. இதற்கிடையில் இரு பகுதியாருக்குமிடையில், காலத்துக்குக் காலம் விரோதமும் ஐக்கியமும் உண்டாயின.

யூதா இராஜ்யத்தில் ரெகொபெயாம் தொடங்கி ஆசாவரையும், இஸ்ரவேலில் யெரொபெயாம் தொடங்கி ஓம்ரி வரையும், அறுபத்தொரு வருடம் *(கி.மு. 975-914)* விரோதமிருந்தது *(1 இரா. அதி. 12-16)*.

யோசபாத்தின் மகன், ஆகாபின் மகளை விவாகம் செய்ததின்பேறாக 75 வருடம் *(கி.மு. 914-839)* அவர்களுக்கிடையில் சமாதானம் இருந்தது *(1 இரா. 16, 2 இரா. அதி. 13)*.

அதன்பின் மறுபடியும் விரோதமுண்டாயிற்று. யூதாவில் அமத்சியா துவக்கி எசேக்கியா வரையும், இஸ்ரவேலில் யோவகாஸ் துவக்கி ஓசியா வரையும் நூற்றிப்பதினேழு வருஷம் *(கி.மு. 839-722)* விரோதம் இருந்தது *(2 இரா. அதி. 13-18).*

கடைசியில் இஸ்ரவேல் கி.மு.722-ல் அசீரியரால் சிறைப் பட்டார்கள். யூதா கி.மு. 586-ல் பாபிலோனியரால் சிறைப்பட்டுப் போனார்கள்.

அசீரியாவுக்குக் கப்பங்கட்டிக் கொண்டு வந்த இஸ்ரவேல் இராஜாவாகிய ஓசியா, எகிப்தின் உதவியை நம்பி, கப்பங் கட்டாமல் விட்டதினால் அவன் சிறையாக்கப்பட்டான். அசீரியா, சமாரியாவை மூன்று வருடம் முற்றுகை போட்டு பிடித்து தன் வசமாக்கிக் கொண்டான் *(கி.மு. 721).* அங்கிருந்த ஜனங்களையும் கைதிகளாகக் கொண்டு போனார்கள். இஸ்ரவேல் இராஜ்யம் இதோடு முடிவடைந்தது.

## இஸ்ரவேல் இராஜாக்கள்

*(கி.மு. 937-721)*

| | | |
|---|---|---|
| யெரொபெயாம் I | 22 | வருடம் |
| நாதாப் | 2 | வருடம் |
| பாஷா | 12 | வருடம் |
| ஏலா | 2 | வருடம் |
| சிம்ரி-திப்னி | 4 | வருடம் |
| ஓம்ரி | 6 | வருடம் |
| ஆகாப் | 22 | வருடம் |
| அகசியா | 2 | வருடம் |
| யெகோராம் | 12 | வருடம் |
| யெகூ | 28 | வருடம் |
| யோவகாஸ் | 17 | வருடம் |
| யோவாஸ் | 16 | வருடம் |
| யெரொபெயாம் II | 41 | வருடம் |
| சகரியா | 6 | மாதம் |
| சல்லூம் | 1 | மாதம் |
| மெனாகேம் | 13 | வருடம் |
| பெக்காகியா | 2 | வருடம் |
| பெக்கா | 20 | வருடம் (முதலாம் சிறை) |
| ஓசெயா | 9 | வருடம் |

(அசீரியரால் சிறைப்பட்டது) இராஜ்யம் முடிவடைந்தது (கி.மு. 721).

அசீரியா இராஜா பிற தேசங்களிலிருந்து மனுஷரைக் கொண்டு வந்து, சமாரியாவில் குடியேற்றினான். அவர்கள் தங்கள் தெய்வங்களைக் கொண்டுவந்து சமாரியாவின் கோயில்களில் வைத்தார்கள்.

மீதியாயிருந்த இஸ்ரவேலரும் கர்த்தருக்குப் பயந்திருந்தும், இந்தத் தெய்வங்களையும் சேவித்தார்கள் (2 இரா. 17:28-35).

இஸ்ரவேலர் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்தபடியால் இப்படி நடந்தது. அவர்கள் செய்த துரோகம் 2 இரா. 17:7-19-ல் விவரித்துள்ளது. ஆகவே பிறகாலங்களில் யூதர் இவர்களைப் புறக்கணித்தார்கள். யூதா இராஜாவாகிய எசேக்கியா கி.மு. 705-ல் பஸ்காப்பண்டிகையை ஆசரித்து, அதற்கு சமாரியாவி லிருந்தவர்களையும் அழைத்து, மார்க்க விஷயத்தில் யாவரையும் ஐக்கியப்படுத்த முயன்றான் (2 நாளா. அதி. 30). அவனுடைய பேரன் யோசியாவும் அப்படியே செய்யப் பிரயாசப்பட்டான் (2 நாளா. அதி. 35).

இந்த நோக்கத்தோடு யோசியா மெகிதோபில் பார்வோன் நேகோவை எதிர்த்த வேளையில் கொல்லப்பட்டான் (கி.மு. 625). இஸ்ரவேல் இராஜ்யம் எகிப்துக்குக் கீழ்ப்பட்டிருந்தது. பின்பு கி.மு. 606-ல் நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றினான். தேவாலயம் கி.மு. 586-ல் அழிக்கப்பட்டது (2 இரா. அதி. 25).

எழுபது வருட சிறையிருப்பின் பின் (கி.மு. 539) பெர்சிய இராஜாவாகிய கோரேஸ் பாபிலோனைக் கைப்பற்றின பின் எருசலேம் தேவாலயத்தைக் கட்டும்படி, யூதருக்கு உத்தரவு கொடுத்து, அவர்களுக்கு ஏற்ற உதவிகளையும் செய்தான்.

கோரேஸ் யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடம் தேவாலயப் பணி முட்டுகளையும் கொடுத்தனுப்பினான் (கி.மு. 536). இவர்கள் எருசலேமுக்குப் போய், ஒரு பலிபீடங்கட்டி பலி செலுத்தின பின், தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போட்டார்கள். அப்போது சமாரியர், தங்களையும் இஸ்ரவேலர் சேர்த்துக் கொள்ளாததினால் இராயனுக்கு அபயமிட்டு ஆலய வேலையை நிறுத்தப்பண்ணினார்கள்.

சிலகாலம் சென்றபின், கி.மு. 445இல் அர்தசஷ்டா, நெகேமியாவை எருசலேமின் அலங்கங்களைக் கட்டும்படி, அதிகாரம் கொடுத்தனுப்பினான். அர்தசஷ்டாவின் கீழ் உத்தியோகத்திலிருந்த எஸ்றாவையும், அதற்கு முன் இராஜா எருசலேமுக்கு அனுப்பி யிருந்தான். அவன் விசேஷமாய் மார்க்க விஷயங்களை

ஜனங்களுக்குப் போதித்து, அவைகளை அனுசரிக்கும்படி செய்தான் சன்பலாத் சமாரியாவில் அதிபதியாயிருந்து, இவர்களுக்கு விரோதமாய் காரியங்களை நடப்பித்தான்.

## கிரேக்கரின் ஆளுகை

*(கி.மு. 332-820)*

பெர்சிய இராஜ்யத்தை மகா அலெக்சாந்தர் கைப்பற்றின பொழுது யூதா, சமாரியா தேசங்களும் அவனுடைய ஆளுகைக்குள்ளாயின. ஆனாலும் பெர்சிய அதிகாரிகளுக்குப் பதிலாக, கிரேக்க அதிகாரிகள் ஏற்படுத்தப்பட்டதைத் தவிர வேறுவித்தியாசங்களிருக்கவில்லை. யூதரும் எங்கும் போய்க் குடியேறி, தங்கள் தொழில்களைச் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகவே ஆமான் அகாஸ்வேருக்குச் சொன்னதாவது, "உமது இராஜ்யத்தின் சகல நாடுகளிலுமுள்ள ஜனங்களுக்குள்ளே ஒருவித ஜனங்கள் சிதறுண்டு பரம்பியிருக்கிறார்கள்" (எஸ். 3:8).

அலெக்சந்திரியாவில் அநேக யூதர் குடியேறி அவர்களுடைய பாஷையைக் கற்றுக்கொண்டு, வேதாகமங்களை அவர்களுடைய பாஷையில் மொழி பெயர்த்ததினால் புறஜாதியாரும் அவைகளை வாசித்தறியத் தருணம் கிடைத்தது. அதோடு சில யூதரும் அந்நிய தேவர்களை வணங்கவும் நேர்ந்தது.

## சீரிய ஆளுகை

*(கி.மு. 320-198)*

அக்காலத்தில் பலஸ்தீனா நாடு பித்தொலோ (Ptolemies) என்போரின் ஆளுகையின் கீழிருந்தது. பின்பு சீரிய இராஜாவாகிய அந்தியோகு (எப்பிபேனிஸ்) என்பவன் எருசலேமில் ஆளுகை செய்து, யூதமார்க்கத்தையும், அவர்களின் கொள்கைகளையும் அழிக்கத் தலையிட்டுத் தேவாலயத்தையும் பரிசுத்தக் குலைச்சலாக்கி னான் (கி.மு. 168). அப்பொழுது மத்தத்தியா என்ற யூதனும், அவனுடைய குமாரனான மக்கேபெயரும் எழும்பி எருசலேமை சீரியாவின் கையிலிருந்து விடுவித்தார்கள் (கி.மு. 167).

## மக்கேபெயரின் ஆளுகை

*(கி.மு. 165-135)*

மக்கேபெய யூதாஸ் என்பவன் தலைவனாய் நின்று தேவா லயத்தைப் பிரதிஷ்டைப்பண்ணி வேறு அநேக திருத்தங்களையும் செய்தான். அவன் மரித்த பின், அவனுடைய சகோதரர் யோவான்,

சிமியோன் என்பவர்கள் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். பின்பு ரோமராயன் பொம்பீ என்ற சேனாதிபதியை அனுப்பி எருசலேமைக் கைப்பற்றினான் *(கி.மு. 63)*.

## ரோமரின் ஆளுகை

***(கி.மு. 63 - கி.பி. 300)***

இதுமேய சந்ததியானும் யூதேயாவில் செல்வாக்குமுள்ள அந்திப்பேற்றர் (Antipator) என்னும் ஒரு யூதன் ரோமருக்கு உதவியா யிருந்தான்.

இதினிமித்தம் ரோமராயனாகிய ஜூலியஸ் சீசர் (Julius Caesar), தன்னுடைய மகன் ஏரோது என்பவனை யூதேயாவின் தேசாதிபதியாக நியமித்தான். பின்பு கி.மு. 47-ல் சீசர் கொல்லப்பட்டான். ஏரோது யூதரின் இராஜாவாக "மகா ஏரோது" என்றழைக்கப்பட்டான்.

கி.மு. 4-ல் இவன் மரித்த போது இராஜ்யம் இவனுடைய மூன்று குமாரராகிய அர்கெலாயு, அந்திப்பாஸ், பிலிப்பு என்பவர்களுக் கிடையில் பிரிக்கப்பட்டது. அர்கெலாயுவுக்கு யூதேயாவும், அந்திப் பாசுக்கு கலிலேயாவும், பெரயாவும், பிலிப்புக்கு வட பக்கத்து நாடும் கொடுக்கப்பட்டன. கி.பி. 6-ல் அர்கெலாயுவை நீக்கி யூதேயாவையும், சீரியாவையும் ஒன்றுசேர்த்து, ஒரு ரோம தேசாதிபதியை ஏற்படுத்தினார்கள். பின்பு பொந்தியு பிலாத்து (Pontius Pilate) இந்த ஸ்தானத்துக்கு வந்தான்.

இவனுடைய நாள்களில் யூதர் கலகம் பண்ணினதினிமித்தம், ரோமர் எருசலேமைக் கைப்பற்றினார்கள். அவர்களுடைய சேனாதிபதி தீத்து (Titus) தேவாலயத்தையும் சுட்டெரித்தான் *(கி.பி.70)*.

இதன்பின் யூதேயா, ரோம இராஜ்யத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தும், சுயாதீனமும் ஓர் அளவிற்குக் கிடைத்தது. ரபீமாரால் ஏற்படுத்தப் பட்ட சனதரின் (Sanhedrin) சங்கம் அவர்களுக்கிருந்தது. அந்தச் சங்கம் மார்க்க விஷயங்களையும், ஆளுகைக்குரிய விஷயங்களையும், ஒழுங்கு செய்தது. ஆனால் தேவாலய வரிப்பணம் ரோமாபுரி யிலிருந்த ஜூபிட்டர் கோயிலுக்கு அனுப்பப்பட்டது.

இப்படியிருக்கையில், கி.பி. 132-ல் பார்கொச்சா (Barkoche) அக்கிபா ரபீ என்பவனால் ஏவப்பட்டு, ரோமருக்கு விரோதமாய் கலகம் செய்ததினிமித்தம், அவர்கள் தேசத்தை முற்றாய் அழித்து ஜனங்களையும் பிற தேசங்களுக்குத் துரத்திவிட்டார்கள். அதோடு இஸ்ரவேலருக்குத் தேசமும், ஆலயமுமின்றி, சபையும், சங்கமுமின்றி, தங்களுடைய தேசமென்று சொல்ல இடமுமில்லாமற் போயிற்று.

இவ்விதமாய் சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலர், காலம் போகப் போக, படிப்படியாய்த் திரும்பவும் தங்கள் தேசத்துக்குப் போய்க் கொண்டேயிருந்தார்கள்.

கி.பி. நான்காம் நூற்றாண்டில் கான்ஸ்டன்டைன் (Constantine) எருசலேமைத் திரும்பக் கட்டினான். ஏழாம் நூற்றாண்டில் அது பெர்சியரின் கைவசமாயிற்று. சிலுவை வீரர்கள் (Crusaders) 88 ஆண்டுகளாக ஆளுகை செய்தார்கள். பின்பு துருக்கி இராஜ்யம் பலஸ்தீனாவோடு சேர்ந்து கி.பி. 1517 முதல் 1917 வரை அரசாட்சி செய்தார்கள்.

கி.பி. 1914-ல் உலக மகாயுத்தம் நடந்தது. அதன் முடிவில் 24-10-1918 அன்று இராஜ்யங்களின் ஐக்கிய சங்கம் கூடி பலஸ்தீனாவை ஆங்கிலேய ஆளுகைக்குட்படுத்தினது.

கி.பி. 1948ல் ஐக்கிய நாட்டுப் பொதுச் சபை தேசத்தை யூதருக்கும், அராபியருக்கும் இடையில் பிரித்தார்கள். இதோடு இஸ்ரவேல் இராஜ்யம் மறுபடியும் உற்பத்தியாயிற்று. ஆனாலும் எருசலேமின் ஒரு பகுதி அராபியரின் வசம் இருக்கும்வரை எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படுகிறது (லூக்கா. 21:24) எனறே சொல்ல வேண்டும்.

கிபி. 1967ஆம் வருடம் இஸ்ரவேலருக்கும், அராபியருக்கும் இடையில் நடந்த யுத்தத்தில், எருசலேம் முழுமையும், பலஸ்தீனாவின் வேறு சில பகுதிகளும் இஸ்ரவேலருடைய ஆதீனத்துக்குள்ளாயின.

ஆகவே புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறிற்று என்று சொல்லலாம்.

## இஸ்ரவேலின் சரித்திரம்

1. எகிப்திலிருந்த காலம் 144 வருடம் (கி.மு. 1635-1491) (யாத். 1-12 அதிகாரங்கள்).

2. வனாந்தரப் பிரயாணம் 40 வருடம் (கி.மு. 1491-1451-யாத். அதி. 12 முதல் உபா. 34).

3. கானானில் இராஜாக்கள் வரை, 356 வருடம் (கி.மு. 1451-1095-யோசுவா, நியாயாதிபதிகள், ரூத், 1 சாமு).

4. இராஜாக்களின் காலம். இராஜ்யம் பிரிக்கப்படுமுன் 120 வருடம் (கி.மு. 1095-975) (1 சாமு. 8, 1 இரா. 11, 1 நாளா. 10, 2 நாளா. 9).

5. இராஜ்யம் பிரிந்தபின் 253 வருடம் (கி.மு. 975-722).

6. யூத இராஜ்யம் 135 வருடம் (கி.மு. 722-587).

| | |
|---|---|
| கிரேக்கரின் ஆளுகை | *(கி.மு. 332-320).* |
| சீரியரின் ஆளுகை | *(கி.மு. 320-198).* |
| மக்கபேயரின் ஆளுகை | *(கி.மு. 165-135).* |
| ரோமரின் ஆளுகை | *(கி.மு. 63 - கி.பி. 300).* |
| துருக்கியின் ஆளுகை | *(கி.பி. 1517-1917).* |
| பிரித்தானிய ஆளுகை | *(கி.பி. 1917-1948).* |
| சுயாதீனம் ஒரு பகுதி | *(கி.பி. 1948-1967).* |
| இஸ்ரவேல் அரசு | *(கி.பி. 1967).* |

## இஸ்ரவேலின் கடைசி காலம்

இஸ்ரவேல் தங்கள் தேவனை விட்டு அந்நிய தேவர்களைச் சேவித்ததினால், சிறைப்பட்டுப் போனார்கள். அதின்பின் சாராளின்மூலமாக வந்த ஆபிரகாமின் சந்ததிக்குக் கர்த்தர் வாக்குப் பண்ணின தேசத்தை, ஆகாரின் மூலமாக வந்த சந்ததியார் கைப்பற்றினார்கள். இப்போது புற ஜாதியாரின் காலம் முடியும்போது அந்தத் தேசத்தின்மேல் அராபியருக்கு ஓர் உரிமையுமில்லை.

இஸ்ரவேலர் திரும்பிவந்து, கஷ்டத்தோடு, வனாந்தரமான தேசத்தை ஏதேன் தோட்டம் போலாக்குகிறார்கள் (எரே. *31:4;* ஏசாயா. *35:1;* யோவேல் *2:3).*

ஆனாலும் கடைசி காலத்தில் கோமேரும், தொகர்மா வம்சத்தாரும் வடதிசையிலிருந்து இராணுவங்களோடு வந்து இஸ்ரவேலைத் தாக்குவார்கள். அப்பொழுது கர்த்தர் கல்மழையையும், அக்கினியையும் வருஷிக்கப் பண்ணுவார். அவர்களெல்லாரும் இஸ்ரவேல் மலைகளில் விழுவார்கள் (எசே. அதி. *38, 39).* அவர்களுடைய ஆயுதங்களை எரிக்க ஏழு வருடமாகும் (எசே. *39:9).* பிரேதங்களைப் புதைக்க ஏழு மாதம் பிடிக்கும் (எசே. *39:14,15).* யுத்தம் நடக்கையில் கர்த்தர் தாமே தரிசனமாவார். அப்பொழுது தாங்கள் குத்தினவரைப் பார்த்துப் புலம்புவார்கள் (சக. *12:10).* அவர் மேகங்களுடனே வரும்போது கண்கள் யாவும் அவரைக் காணும். பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள் (வெளி. *1:7).*

காலம் சமீபம். இராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுக்கும் காலம் வருகிறது (அப். *1:7).*

எருசலேம் கர்த்தருக்குப் பரிசுத்தமாயிருக்கும் வேளை சமீபிக்கிறது (சக. *14:16-20).*

## தேவனுடைய இஸ்ரவேலர்

யூதனானாலும், புறஜாதியானானாலும், தேவனுடைய கிருபையைப் பெற்றுப் புதுச்சிருஷ்டியாவோரெல்லாரும் தேவனுடைய இஸ்ரவேலர் எனப்படலாம் *(கலா. 6:16; ரோமர். 9:7,8).*

## இதுமேயா (Idumea)

### (ஏதோமின் தேசம்)

ஏதோம் என்பது கிரேக்க பாஷையில் இதுமேயா எனப்பட்டது. மோவாபுக்குத் தென்பக்கமாயும், சாக்கடலுக்குத் தென்கிழக்குப் பக்கமாயுள்ள ஒரு விசாலமான தேசம் *(ஏசாயா 34:5,6; எசே. 35:15; 36:5; மாற்கு 3:8).*

ஓரியர் இத்தேசத்து பூர்வீக குடிகள். ஏசாவின் சந்ததியார் அங்கே குடியேறினபோதிலும், அவர்கள் முற்றாய் ஓரியரைக் கீழ்ப்படுத்த வில்லை *(ஆதி. அதி. 36).*

இதுமேயர்-ஏரோது குடும்பத்தார்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டு காதேஸ் மட்டும் வந்து, இதுமேய தேசத்தின் வழியாய்ப்போக உத்தரவு கேட்டபோது, ஏதோம் உத்தரவு கொடுக்கவில்லை. ஆகையால் இஸ்ரவேலர் விலகிப் போனார்கள் *(எண். 20:14-21).* பிற்பாடு இரு பகுதியாருக்கும் நெடுங்காலம் யுத்தம் நடந்தது. கடைசியாய் தாவீது அவர்களைக் கீழ்ப்படுத்தினான்.

கி.மு. 587-ல் எருசலேம் பிடிபட்டபின், ஏதோமியர், யூதா தேசத்தில் குடியேறினார்கள். அந்தப் பகுதி 'இதுமேயா' என்று சொல்லப்பட்டது *(மாற்கு. 3:8).* அதன் தலைப்பட்டணம் 'எபிரோன்'.

மக்கபேயு யூதாஸ் என்பவன் கி.மு. 165-ல் இந்தப் பட்டணத்தை கைவசப்படுத்தினான். பின்பு யோவான் கோகானு என்பவன் கி.மு. 125-ல் இதைக் கீழ்ப்படுத்தி அங்கிருந்த ஜனங்கள் யூதருடைய மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்தான். ரோமர் இந்தத் தேசத்தை கைப்பற்றினபின், இதுமேயனாகிய அந்திப்பேற்றரை யூதேயா தேசத்தின் தேசாதிபதியாக்கினார்கள். பின்பு 'மகா ஏரோது' தேசாதிபதியானான்.

யூதேயா பிடிபட்டதோடு, இதுமேயாவின் பெயரும் நின்று போயிற்று.

## இதெக்கேல் (Hiddekel)
**(வேகமான)**

இது ஏதேன் தோட்டத்திலுள்ள நாலு ஆறுகளில் ஒன்று (ஆதி. 2:14). இந்த ஆற்றின் கரையிலே, தானியேலுக்குத் தரிசனம் கிடைத்தது (தானி. 10:4).

## இத்தாமார் (Ithamar)
**(பனைமரத் தீவு)**

ஆரோனுக்கு எலிசபாள் பெற்ற கடைசி மகன் (யாத். 6:23; 1 நாளா. 6:3, 24). இவனும் ஆசாரிய ஊழியத்துக்குத் தெரிந்து கொள்ளப்பட்டான் (யாத். 28:1; 1 நாளா. 24:2). பிரயாண காலத்தில் லேவியரின் ஊழியத்துக்கடுத்த பொருள்கள் இவன் கையில் கொடுக்கப்பட்டன (யாத். 38:21; எண். 4:28).

கெர்சோன் புத்திரரும் மெராரி புத்திரரும் செய்யவேண்டிய ஆசரிப்புக் கூடார பணிவிடைக்கு, இவன் விசாரணைக்காரனா யிருந்தான் (எண். 4:28, 33). இவனுடைய புத்திரர் பிற்காலத்தில் தேவனுக்கடுத்த காரியங்களை நடத்தும் பிரபுக்களாயிருந்தார்கள் (1 நாளா. 24:5).

எஸ்றாவோடு திரும்பி வந்தவர்களின் வம்ச அட்டவணையில் இத்தாமாரின் மகன் தானியேல் குறிக்கப்பட்டிருக்கின்றான் (எஸ்றா. 8:2).

## இமெனேயு (Hymenaeus)

பவுல் குற்றஞ்சாட்டின ஒரு பொய் போதகன். இவனும், அலெக்சாந்தரும் விசுவாசத்தைப் புரட்டினவர்களென்று பவுல் சொல்லுகிறான் (1 தீமோ. 1:19-20). இவனும், பிலேத்தும் சரீர உயிர்த்தெழுதல் இல்லையென்று சொல்லி சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப் போடுகிறார்களென்று பவுல் கூறுகிறான் (2 தீமோ. 2:17,18).

## இம்மானுவேல் (Immanuel)

இதன் கருத்து : "தேவன் நம்மோடிருக்கிறார்." இயேசு ஒரு கன்னிகையினிடம் பிறப்பாரென்று ஏசாயா தீர்க்கதரிசி முன்னறிவித்த வேளையில், மேசியாவுக்குக் கொடுத்த பெயர் இது (ஏசாயா. 7:14). இந்தப் பெயர் தெய்வீக சுபாவமும், மனுஷீக சுபாவமும், கர்த்தரில் இருப்பதைக் காட்டுகிறது. பின்பு யோசேப்புக்குத் தேவதூதன் தரிசனமாகி சொன்னதில் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று (மத். 1:23).

சீரியா இராஜா இஸ்ரவேலரோடு கூடி, யூதா இராஜாவாகிய ஆகாசுக்கு விரோதமாய் வந்தபோது அவன் கலங்கினான். அப்பொழுது கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியை அவனிடம் அனுப்பினார்.

ஏசாயா ஆகாசிடம்போய், "கர்த்தர் உனக்கு உதவி செய்வார். நீ பயப்பட வேண்டியதில்லை. நீ நம்பாவிட்டால் ஒரு அடையாளத்தை வேண்டிக்கொள்" என்றான். ஆகாஸ் கேட்கமாட்டேன் என்றபோது ஏசாயா, "ஆண்டவர் தாமே ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்" என்றான் (ஏசாயா. *7:14*).

ஆகாஸ் அசீரியரின் உதவியில் நம்பிக்கை வைத்திருந்தான். ஏசாயா, அசீரியரிலிருந்தல்ல, கர்த்தரிடத்திலிருந்தே உதவி வரும் என்று அவனுக்குச் சொன்னான்.

ஏசாயா. *7:15,16*இல் சொல்லப்பட்டவை ஆகாசுக்கு மீட்பு வரும் காலத்தை உவமானமாய்க் குறிக்கிறது. ஆனால் இம்மானுவேலின் அடையாளத்தை அவன் ஏற்றுக்கொள்ளாததினால், அது அவனுக்கல்ல, பின் சந்ததியாருக்கே உபயோகமாயிற்று.

## இயேசு கிறிஸ்து (Jesus Christ)

### (இரட்சிக்கிறவர்)

***1. பெயர் :***

நமது கர்த்தரின் சொந்தப் பெயர் இயேசு. இது "யோசுவா" என்பதின் கிரேக்கச் சொல். இதின் அர்த்தம் "இரட்சகர்" (மத். *1:21*).

கிறிஸ்து என்பது "அபிஷேகம் பண்ணப்பட்டவர்." இவரே வரப்போகிற மேசியா என்பதைக் குறிக்கும்படி "இயேசு கிறிஸ்து" என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

***2. பிறந்த தேதி :***

ரோம பஞ்சாங்கத்தின்படி இயேசு *754*ஆம் வருடம் பிறந்தார். அது கி.பி. *1*ஆம் வருடம் என்று கணக்கிடப்பட்டது. பின்பு மகா ஏரோது மரித்த நாளோடு ஒத்துக் கணக்குப் பார்த்து, நமது இரட்சகர், கி.மு. *4*ஆம் வருடம் பிறந்தார் எனத் தீர்மானித்துள்ளது.

***3. இராஜாங்க நிலை :***

அக்காலத்தில் இஸ்ரவேலர் நிம்மதியற்ற நிலையிலிருந்தார்கள். சிறையிருப்பின் பின் பெர்சியர், கிரேக்கர், எகிப்தியர், சீரியர் முதலிய புறஜாதிகளால் ஆளப்பட்டார்கள். பின்னர் மக்கபேயரின் காலத்தில், ஒரு நூற்றாண்டுவரை சுயாதீனம் பெற்றிருந்தார்கள். ஆனாலும் கி.மு.

அறுபதிலிருந்து ரோம ஆதீனத்துக்குள்ளானார்கள். ரோமர் பலஸ்தீனாவைச் சீரியாவோடு சேர்த்து, ஒரு மாகாணமாக அரசாட்சி செய்தனர்.

அக்காலத்தில் பலஸ்தீனாவில் பரிசேயர், சதுசேயர், ஏரோதியர், செலோத்தியர் என பலவித மார்க்க கட்சிகள் இருந்தன. பரிசேயர் அரசாங்கக் காரியங்களில் தலையிட விரும்பாதவர்கள். சதுசேயர் ரோம ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருக்க சம்மதமானவர்கள். ஏரோதியர் ரோம அரசாட்சிக்குச் சார்பானவர்கள். செலோத்தியர் ரோம ஆளுகைக்கு விரோதமானவர்கள்.

இப்படியிருந்த காலத்திலேயே இயேசுவானவர் உலகத்தில் அவதரித்தார்.

*4. சமயத்திற்குரிய நிலை :*

அக்காலத்தில் யூதருடைய மார்க்கநிலை அதிக குறைவான தாயிருந்தது. சடங்காச்சாரங்களே முக்கியமாகக் கவனிக்கப்பட்டன. பரிசேயர், சதுசேயர் என இரு கட்சியார் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். இவர்களில் பரிசேயருக்கு அதிக செல்வாக்கிருந்தது. ஆனால் அவர்கள் தேவ வசனத்துக்கு மேலாக பாரம்பரியங்களையும், தங்கள் போதனைகளையும் அனுசரித்தார்கள். சதுசேயரோ அப்படிப்பட்ட போதனைகளை ஏற்றுக்கொள்ளாமல், மார்க்க விஷயங்களைப் பார்க்கிலும் அரசாங்க விஷயங்களில் தலையிட்டார் கள். சனதரின் (Sanhedrin) சங்கம் அவர்கள் கைக்குள்ளிருந்தது. தங்களுக்குச் சார்பானவர்களை அதன் அங்கத்தினர்களாக்கி னார்கள்.

யோவான் ஸ்நானன் இந்த இரு பகுதியாரையும் கண்டித்தான். இயேசு, அவர்கள் போதனைகளைப் பற்றி எச்சரிக்கையாயிருக்கும் படி சொன்னார் (*மத். 3:7; 16:6*). எப்படியானாலும் பொதுவான ஜனங்கள் தேவபக்தியைத் தேடினார்கள். அப்படிப்பட்டவர்களுக்கே சுவிசேஷமும் ஏற்றது.

***5. இயேசுவின் பிறப்பும் சிறு பிராயமும் :***

அவருடைய பிறப்பு அற்புதமானது. தேவனால் முன்னறி விக்கப்பட்டபடி, அவர் பரிசுத்த ஆவியினால் உற்பவித்தார். இதைப்பற்றிய காரியங்கள் வேதாகமத்தில் விவரமாய்க் குறித்துள்ளன (*மத். அதி. 1,2; லூக்கா 1:26-35; 2:1-39*). அவருடைய சந்தான வழியை மத்தேயு ஆபிரகாமிலிருந்தும், லூக்கா ஆதாமிலிருந்தும் தொடர்ந்து எழுதியிருக்கிறார்கள்.

பெத்லகேமில் இயேசு பிறந்தபின், யோசேப்பு தேவதூதனால் அறிவிக்கப்பட்டு, அவரை எகிப்துக்குக் கொண்டுபோனான். ஏரோது மரித்தபின், யோசேப்பு பிள்ளையை எடுத்துக்கொண்டு இஸ்ரவேல் தேசத்துக்கு வந்து நாசரேத்தூரில் வாசமாயிருந்தான் *(மத். 2:13-23)*. இதனால் நசரேயன் எனப்பட்டார்.

இயேசு பன்னிரண்டாம் வயதில் எருசலேம் தேவாலயத்துக்குப் போன ஒரு சம்பவம் மாத்திரம் அவருடைய இளம்பிராயத்தைப் பற்றிக் குறித்துள்ளது *(லூக்கா. 2:41-52)*. தச்சு வேலை அவருடைய தொழிலாயிருந்தது *(மாற்கு 6:3)*.

இயேசு கிறிஸ்துவைப் பற்றிய சரித்திரம் ஏனைய சரித்திரங்களிலும் வித்தியாசமானதும், ஒப்பற்றதுமான ஒன்று. அவருடைய ஜீவியத்தைக் குறித்துப் பல விஷயங்கள் அவர் உலகத்துக்கு வருவதற்கு அநேக வருஷங்களுக்கு முன்னே தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டது.

இயேசு கிறிஸ்துவின் ஜீவிய வரலாற்றை நான்கு சுவிசேஷங்களிலிருந்தும் அறிந்துகொள்ளலாம். நால்வரும் தனித்தனி நோக்கத்துடன் எழுதினாலும், ஒவ்வொரு வரலாறும் கிறிஸ்து இரட்சகராகிய தேவனும், பூரண மனிதகுமாரனும் என்ற ஏக அடிப்படையைக் கொண்டிருக்கிறது.

அப்போஸ்தலர் நடபடிகளிலும், வெளிப்படுத்தின விசேஷத்திலும் இதற்காதாரமுண்டு. "இயேசுவின் சாட்சியே தீர்க்கதரிசனத்தின் பொருள்," என்று வெளி. *19:10*-ல் கூறப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலும் அவரைப்பற்றிய தீர்க்கதரிசனங்களுண்டு.

### 6. ஞானஸ்நானமும் சோதனையும் :

இயேசு முப்பது வயதானபோது ஞானஸ்நானம் பெறும்படி யோவானிடம் போனார் *(லூக்கா 3:23)*. இவ்விதமாக தேவ குமாரனாகவும், உலக இரட்சகராகவும் மேசியா (இயேசு) தமது ஊழியத்தைத் தொடங்கினார். அவர் ஞானஸ்நானம் பெற்றபோது, பரிசுத்தாவியானவர் அவர்மேல் இறங்கினார். பிதாவும், அவர் இப்படி பாவியான மனுஷ ஜாதியாரோடு தம்மைச் சமமாக்கி, தேவசித்தம் செய்யத் தீர்மானித்ததில் பிரியப்பட்டு, "நீர் என்னுடைய நேசகுமாரன். உம்மில் பிரியமாயிருக்கிறேன்" என்று உரைத்தார் *(லூக்கா 3:22)*. அதன்பின், பிசாசினால் சோதிக்கப்படுவதற்காக ஆவியானவரால் வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார் *(மத். 4:1)*. தமது ஊழியத்தைச் செய்யத் தொடங்குமுன், பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படியவும், பிசாசின் தந்திரங்களை மேற்கொள்ளவும், எல்லா விதத்திலும் பிதாவை மகிமைப்படுத்த வேண்டுமென்பதே அவருடைய தீர்மானம்.

நாற்பது நாள் உபவாசமிருந்து பசியாயிருக்கையில், சாத்தான் அவரைச் சோதித்தான். தேவ குமாரனான அவர் தமது ஊழியத்தில் தம்மைத் தாம் வெறுத்துப் பிதாவில் முழு நம்பிக்கை வைக்கவேண்டு மென்பதும், தமது சுய நலத்திற்காக அற்புதங்களைச் செய்யாமல், தேவ ஆளுகையை உலகத்திலே அவர் சித்தப்படி ஏற்படுத்த வேண்டுமென்பதுமே, இவ்வித சோதனையின் ஜெயத்தில் காணப்படும் முக்கிய பொருள். தேவ வசனத்தைக்கொண்டு அவர் ஜெயம் பெற்றதுபோல, நாமும் உணவுகளின் ஆசை, சுய ஆசை, பொருளாசை போன்றவற்றால் வரும் சோதனைகளில் தேவ கிருபையால் ஜெயம் பெற வேண்டும்.

### 7. அவருடைய ஊழியம்

இயேசு ஞானஸ்நானம் பெற்ற மறுநாளில் யோவான், அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டியெனச் சாட்சி கொடுத்தான் *(யோவான். 1:29).*

அடுத்த நாள் இயேசு சில மனுஷரை நோக்கி, தம்மைப் பின்பற்றி வரும்படி அழைத்தார் *(யோவான். 1:43-51).*

மறுநாளில் கலிலேயாவிலுள்ள கானா ஊரில் ஒரு கலியாண வீட்டுக்குப் போயிருக்கையில் ஓர் அற்புதம் செய்ய நேரிட்டது *(யோவான். 2:1-10).*

யூதேயாவில் ஊழியம் : பின்பு இயேசு தமது சீஷரோடு யூதேயாவுக்கும் போய் அங்கே சஞ்சரித்து ஞானஸ்நானம் கொடுத்து வந்தார் *(யோவான் 3:22).* அங்கிருந்து கலிலேயாவுக்கும் போக்குவரத்தாயிருந்தார் *(யோவான் 4:2).*

அந்நாள்களில் அவர் செய்த முக்கிய ஊழியம் தேவாலயத்தைச் சுத்திகரித்ததும், நிக்கொதேமுவுடன் சம்பாஷித்ததும், யாக்கோபின் கிணற்றருகே சமாரியப் பெண்ணோடு மேசியாவைப் பற்றிப் பேசினதுமே *(யோவான். 2:13-17; 3:1-21; 4:3-26).*

## கலிலேயாவில் ஊழியம்

சமாரியாவில் இரண்டு நாள் தங்கினபின், இயேசு கலிலேயாவுக்குப் போனார். அங்கேயுள்ளவர்கள் அவர் யூதேயாவில் செய்த அற்புதங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தார்கள் *(யோவான். 4:43-45).*

தொடக்கத்தில் நாசரேத் ஜெப ஆலயத்தில், ஜனங்கள் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தும், இப்போது எல்லாரும் அவருக்குச் செவி கொடுத்தார்கள் *(லூக்கா. 4:16-30).*

இயேசு நாசரேத்தை விட்டு கப்பர்நகூமில் தங்கியிருந்து, வேறே சீஷர்களையும் சேர்த்துக்கொண்டு, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களின் வியாதிகளையும், நோய்களையும் சொஸ்தமாக்கினார் *(மத். 4:13, 18-23; யோவான் 4:46-54).*

அந்நாள்களில் *(கி.பி. 28)* அவர் யூதருடைய பண்டிகைக்கு எருசலேமுக்குப் போனவேளையில், பெதஸ்தா குளத்தருகே முப்பத்தெட்டு வருடம் வியாதி கொண்டிருந்தவனை, ஓய்வு நாளில் சொஸ்தமாக்கினதால், பரிசேயர் கோபங்கொண்டு, அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள் *(யோவான் 5:1-18).* வேறே அற்புதங்களையும் அவர் ஓய்வு நாளில் செய்ததினால் யூதர் அவரை அதிகமாய் விரோதித்தார்கள் *(மத். 12:1-14).* ஓய்வு நாளை உண்மையாகக் கைக்கொள்வதின் கருத்தை அவர்களுக்குப் போதித்தார்.

இயேசு பன்னிரண்டு சீஷர்களைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு வியாதியஸ்தர்களைச் சொஸ்தமாக்க அதிகாரம் கொடுத்து, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி அனுப்பினார் *(மத். அதி. 10: லூக்கா. 6:13-16).*

அவருடைய மலைப் பிரசங்கத்தினாலும், மற்றும் உவமைகளினாலும், தேவனுடைய இராஜ்யத்தின் இரகசியங்களைக் கூறினார் *(மத். அதி. 5-7; 13:1-53).*

அந்நாள்களில் அவரால் செய்யப்பட்ட முக்கிய அற்புதங்களாவன: கடலில் பெருங்காற்றை அமரப் பண்ணினது *(மத். 8:23-27).* கெர்கெசேனர் நாட்டில் பிசாசு பிடித்தவனைச் சொஸ்தமாக்கினது *(மத். 9:28-34).* யவீருவின் மகளை உயிரோடெழுப்பினது *(மத். 9-18-26).* ஐந்து அப்பம், இரண்டு மீனைக் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்தது *(மத். 14:13-21).* தண்ணீரின்மேல் நடந்தது *(மத். 14:22-33).*

ஏரோது அந்திப்பாஸ் என்பவனால் யோவான் ஸ்நானகன் கொல்லப்பட்டான் என்ற செய்தி இயேசுவுக்குக் கொண்டு வரப்பட்டது *(மத். 14:1-13).*

இயேசு அதைக்கேட்டு கலிலேயாக் கரைப் பகுதியை விட்டு, வடக்குப் பக்கமாய் கப்பர்நகூம், தீரு, சீதோன், தெக்கப்போலி என்ற இடங்களுக்குப் போனார். தமது சீஷர்களை, தமக்கு நேரிடப் போகிற மரணத்துக்கு ஆயத்தப்படுத்துவதும் அவருடைய நோக்கமாயிருந்தது.

அவர் செசரியாவுக்கு வந்தபோது தாம் யாரென்று சீஷரிடம் கேட்ட வேளையில், பேதுரு சொன்னதைக் கேட்டு, தாம் அடையப் போகிற மரணத்தையும், உயிர்த்தெழுதலையும் பற்றித் திட்டமாய்

அவர்களுக்குச் சொன்னார் (மத். 16:21). பின்பு மூன்று சீஷரைக் கூட்டிக் கொண்டு உயர்ந்த மலையின்மேல் ஏறி, மறுரூபமானார் (மத். 17:1-13). பலவித விஷயங்களைக் குறித்துப் போதனை செய்தார். அவையாவன: தாழ்மை, மன்னிக்கும் தன்மை, உலகத்தில் வெளிச்சமாயிருத்தல் ஆகியவை.

அவர் அந்நாள்களில் செய்த அற்புதங்களாவன : நாலாயிரம் பேரைப் போஷித்தது. மீன்வாயிலிருந்து வெள்ளிக்காசு எடுத்தது ஆகியவை (மத். 15:21-28; 32-38; 17-14-20, 24:27).

## பெரெயாவில் செய்த ஊழியம்

அந்நாள்களில் இயேசு யூதேயாவுக்கும் பெரெயாவுக்குமிடையில் போக்கும் வரத்தாயிருந்தார். இதற்குமுன் எழுபது சீஷரை தாம் போகும் இடங்களுக்குத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார் (லூக்கா. 10:1-24). அங்கே முக்கியமான உவமைகளையும் சொன்னார் (லூக்கா. 10:30-37; 16;1-12; 19-31).

ஜெபம்பண்ணுவதைப் பற்றியும், தேவனுடைய இராஜ்யம் வருவதைப்பற்றியும், பரிசேயரைப்பற்றியும் பலவித போதனைகளைக் கொடுத்தார் (லூக்கா. 11:1-13, 37-54; 17:20-27). ஐசுவரியவானாகிய ஒரு வாலிபனோடு சம்பாஷித்தார். யாக்கோபு, யோவான் என்பவர் களின் பேராசையைக் கண்டித்தார் (மத். 19:16-26; 20:20-28).

அவருடைய மிக அதிசயமான அற்புதம் லாசருவை உயிரோடெழுப்பினது (யோவான் 11:1-46). அத்தோடு அவருக்கு எதிரான விரோதம் மிக மும்முரமாய் எழும்பிற்று. அவரும் அதை எதிர்நோக்கும் நோக்கத்தோடு எருசலேமுக்குப் போகத் தீர்மானித்தார்.

## கடைசி நாள்கள்
### (கி.பி. 31)

பஸ்கா பண்டிகைக்கு ஆறு நாளைக்கு முன் இயேசு, பெத்தானியாவுக்குப் போனார்.

சனிக்கிழமை அவருக்கு சீமோன் வீட்டில் இரா விருந்து பண்ணினார்கள். மார்த்தாளும், லாசருவும் அங்கேயிருந்தார்கள். மரியாள் விலையேறப் பெற்ற தைலத்தால் அவரை அபிஷேகம் பண்ணினாள் (யோவான். 12:1-8).

ஞாயிற்றுக்கிழமை பாடுபட்ட வாரத்தின் (Passion Week) முதலாம் நாள். இயேசு தேவாலயத்துக்குப் பவனிபோய், திரும்பிப் பெத்தானியா வுக்குப் போனார் (மத். 12:1-11).

திங்கட்கிழமை அத்திமரம் பட்டுப்போனது. தேவாலயத்தைச் சுத்திகரித்தல்.

செவ்வாய்க்கிழமை இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணுகையில் ஆசாரியரும் மூப்பரும் வந்து, அவர் என்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறார் என்று கேட்டார்கள். அதற்கு பிரதியுத்திரமாக இயேசு ஒரு கேள்வி கேட்கவே அவர்கள் தெரியாது என்று மறுமொழி கொடுத்தார்கள் *(மத். 21:23-28)*.

பின்பு பரிசேயர், ஏரோதியர், சதுசேயர் எல்லாரும் கூடி ஆலோசனைபண்ணி அவரிடம் மூன்று கேள்விகள் கேட்டார்கள். அவர் கொடுத்த மாறுத்திரத்திற்கு அவர்களால் ஒன்றும் சொல்லக் கூடாமற் போயிற்று. *(மத். 22:15-46)*.

அப்பொழுது அவர் வேதபாரகர், பரிசேயர் என்பவர்களுடைய மாயங்களைக் குறித்து பல காரியங்களைச் சொல்லி ஜனங்களையும், தமது சீஷர்களையும் எச்சரித்தார் *(மத். அதி. 23)*.

காணிக்கைப் பெட்டியில் ஒரு துட்டுக் காசு போட்ட ஏழை விதவையைப்பற்றி மெச்சிப் பேசினார் *(மாற்கு. 12:41-44)*.

அவர் தேவாலயத்தை விட்டுப் புறப்படும்போது, ஒரு சீஷனுடைய கேள்வியின் பயனாக நீண்ட ஒரு பிரசங்கம் செய்தார். தேவாலயத்தின் அழிவு, உலக முடிவு, கடைசி நியாயத் தீர்ப்பு என்பவைகளைப்பற்றிப் பேசினார் *(மத். 25:31-46)*. இந்த நாளிலேயே யூதாஸ்காரியோத்தும் அவரைக் காட்டிக்கொடுக்க ஒத்துக் கொண்டான் *(மத். 26:14-16; லூக்கா 22:1-6)*.

புதன்கிழமை பெத்தானியாவில் தங்கியிருந்தார்.

வியாழக்கிழமை சீஷரிடம் பஸ்காவைப் புசிப்பதற்கு ஆயத்தம் பண்ணும்படி சொன்னார்.

சாயங்காலமானபோது பன்னிருவரோடுங்கூட பந்தியிருந்தார் *(மத். 26:17-20)*. அதன்பின் சீஷருக்கு அவர் செய்த நீண்ட பிரசங்கங்கள் *லூக்கா 22:14-38*லும், *யோவான் 14-16* அதிகாரங்களிலும் குறித்துள்ளன.

பின்பு அவர் புறப்பட்டு சீஷருடன் ஒலிவ மலைக்குப்போய், கெத்செமனே தோட்டத்தில் வியாகுலப்படுகையில், யூதாஸ் காரியோத்து என்பவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு, பிடிக்கப்பட்டு பிரதான ஆசாரியன் வீட்டுக்குக் கொண்டு போகப்பட்டார் *(லூக்கா. 22:39-54; யோவான். 18:1-13)*.

யூத அதிகாரிகள் அவரை விசாரித்த பின், பிலாத்துவுக்கு முன் கொண்டு போனார்கள். அவன் அவரில் ஒரு குற்றமும் காணாதிருந்தும், யூதரைப் பிரியப்படுத்துவதற்காக, அவர்கள்

சத்தமிட்டு கேட்டபடி சிலுவையிலறையும்படி ஒப்புக் கொடுத்தான் *(யோவான். 18:12;19:16; லூக்கா. 23:13-25).*

## அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்

வெள்ளிக்கிழமை காலை 9ஆம் மணி நேரம் அவரைச் சிலுவையிலறைந்தார்கள்.

யூதர் அவரைக் கொல்லுகிறதானால் கல்லெறிந்து கொன்றிருப்பார்கள். ரோமரோ அந்நியரைக் கொல்லும்போது செய்த வழக்கப்படி அவரைச் சிலுவையிலறைந்தார்கள். அதற்குமுன் அவர் ஏரோதுவுக்கு முன் கொண்டு போகப்பட்டபோது, அவன் அவரை நிந்தித்துப் பரியாசம்பண்ணி மினுக்கான வஸ்திரத்தை உடுத்துவித்தான் (லூக்கா. 23:11). பிலாத்து அவரை வாரினால் அடிப்பித்தான். முள் முடியை அவர் தலைமேல் வைத்தார்கள். சிலுவையைச் சுமந்தவராய், பட்டணத்துத் தெருக்கள் வழியே, கொல்கொதாவுக்கு, நூற்றுக்கதிபதியும் நாலு சேவகர்களும் அவரை நடத்திக் கொண்டு போனார்கள். சிலுவையின் பாரத்தால் தள்ளாடி விழுந்தபோது, சிமியோன் என்ற ஒருவனைக் கூடச் சுமந்து போகும்படிச் செய்தார்கள். குறித்த இடத்தில் போய்ச் சேர்ந்தபோது, அவருடைய உடுப்புக்களைக் கழற்றினார்கள். அவை அந்த நான்கு சேவகர்களுக்கும் வழக்கத்தின்படி விடப்பட்டது. நான்கு சுவிசேஷகரும் அவர் சிலுவையிலறையப்பட்டாரென்பதை மாத்திரம் குறித்தேயல்லாமல் அதைப்பற்றி விபரமாய்ச் சொல்லவில்லை (மத். 27:35; மாற்கு 15:25; லூக்கா 23:33; யோவான் 19:23). ஆனால் அக்கால வழக்கத்தின்படி சிலுவையை நிலத்திலே வைத்து கொல்லப் படுபவனின் கை கால்களைக் கயிற்றினால் கட்டி, அல்லது ஆணியடித்தபின் சிலுவையை நிமிர்த்தி, தோண்டப்பட்ட குழியில் நிறுத்துவார்கள்.

நமது ஆண்டவரையோ ஆணி அடித்தார்களென யோவான் 20:25, 27லிருந்து தெரிகிறது. உயிர்த்தெழுந்த பின் அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயங்களிருந்தன. இதைக் கண்டபோதோ "சந்தேகப்படுகிற தோமா" விசுவாசித்தான்.

சிலுவையில் ஆண்டவர் மாலை மூன்று மணியளவில், மரித்த வேளையில் சிலரைத் தவிர மற்றவர்கள் ஓடித் தப்பி விட்டார்கள். அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு அவருடைய இரகசிய சீஷனாயிருந்து, ஆலோசனைச் சங்கத்தில், அவரைக் கொலைக்குத் தீர்க்க சம்மதியாதிருந்தான். அவன் பிலாத்துவிடம் போய் அவருடைய சரீரத்தை அடக்கம் பண்ண உத்தரவு பெற்றான். இன்னும் ஓர் இரகசிய சீஷனாயிருந்த நிக்கொதேமுவும், வெள்ளைப்போளம்

முதலியவைகளைக் கொண்டுவந்து, இருவரும் சரீரத்தை இறக்கி, சுகந்த வர்க்கங்களுடன் சீலைகளில் சுற்றி, ஒரு புதிய கல்லறையில் இயேசுவை வைத்தார்கள் (யோவான். *19:38-42*). கல்லறை வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்தார்கள். பின்பு பிரதான ஆசாரியர், பிலாத்துவின் உத்தரவோடு கல்லுக்கு முத்திரை போட்டு, காவல்வைத்து கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள் (மத். *27:60-66*).

ஆகிலும் இயேசு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். அதற்குப் பின்பு நாற்பது நாள்கள் உலகத்திலிருந்து அநேகருக்குத் தரிசனமானார். பின்பு அவர் உயிரோடெழுந்ததைக் குறித்து தங்களுடனேகூட சாட்சியாக ஒருவன் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று பேதுரு சொன்னபோது யூதாஸ்காரியோத்துக்காக மற்றொரு அப்போஸ்தலனைத் தெரிந்தெடுத்தார்கள். (அப். *1:23*).

இயேசு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, எல்லாரையும் ஓரிடத்தில் கூடி வரச் செய்து, பரிசுத்தாவியால் அவர்கள் ஞானஸ்நானம் பெறும்வரை எருசலேமில் காத்துக் கொண்டிருக்கும்படியும், அதற்குப் பின் அவர்கள் பெலனடைந்து பூமியின் கடைசி பரியந்தம் தனக்குச் சாட்சிகளாயிருப்பார்களென்றும் சொன்னார். பின்பு அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உயர எடுத்துக்கொள்ளப்பட்டார். அப்பொழுது இரண்டு தேவ தூதர்கள் அவர்களருகே நின்று இந்த இயேசுவானவர் மறுபடியும் வருவார் என்றார்கள். (அப். *1:9-11*). உலகத்திலுள்ள கிறிஸ்தவர்களெல்லாரும் அவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்த ஐம்பதாவது நாளில் அவருடைய சீஷனாகிய பேதுரு பகிரங்கமாய் இயேசுவே மேசியாவென்று பிரசங்கித்தபோது மூவாயிரம் பேர் குணப்பட்டார்கள் (அப். *2:41*).

கிறிஸ்து மேசியாவென்று ஏற்றுக்கொள்ளாதிருந்த யூதனாகிய பவுல், இயேசுவைத் தரிசித்தபோது, குணப்பட்டு அந்த உண்மையைப் பிரசங்கித்த பின் அதற்காக இரத்தசாட்சியாக மரித்தான்.

## இயேசுவின் போதனையின் மூலாதாரம்

தேவனை உலகத்திற்கு வெளிப்படுத்துவதற்கே அவர் வந்தார். தேவனுடைய ஒரே பேரானவரே பிதாவை வெளிப்படுத்தினார் (யோவான். *1:14-18*).

தேவனுடைய பிள்ளைகளாவதற்கு மறுபடியும் பிறத்தல் அவசியம் என்று போதித்தார் (யோவான். *3:3*).

இயேசு தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிப் போதித்து, அது ஆவிக்கடுத்ததென்றும் குறித்தார் *(மத். 13:24; மாற்கு. 4:11; லூக்கா. 14:15; யோவான். 18:33-37).*

அவர் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறதென்று பிரசங்கித்ததிலிருந்து ஆவிக்குரிய பரலோக இராஜ்யம் சீக்கிரம் பூமியில் ஸ்தாபிக்கப்படுமென்றும், அதின்பின் எழுத்தின்படியுள்ள பரலோக இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுமென்றும் தெரியக்கிடக்கிறது *(மத். 4:17; மாற்கு. 1:14).*

உலகத்தின் இராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய இராஜ்யங்களாயின. அவர் சதா காலங்களிலும் இராஜ்யபாரம்பண்ணுவார், என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின *(வெளி. 11:15).*

## இரட்சகர் (Saviour)

இரட்சகர் என்பது இரட்சிக்கிறவர் எனப்படும். எவ்வித தீங்கிலும் இக்கட்டிலுமிருந்து இரட்சிக்கிறவனை "இரட்சகன்" என்று சொல்லலாம். கர்த்தர் ஒத்னியேல் என்னும் ஓர் இரட்சகனை எழும்பப்பண்ணினார் *(நியா. 3:9).*

பழைய ஏற்பாட்டில் தேவனை 'இரட்சகர்' என்று அநேக இடங்களில் குறித்துள்ளது *(சங். 106:22; ஏசாயா. 43:3; 45:15 63:8; எரே. 14:8; ஓசியா 13:4).* ஆனால் இந்தப் பதம் உலகத்தைப் பாவத்திலிருந்து மீட்கும்படி மரித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையே முக்கியமாய்க் குறிக்கிறது *(மத். 1:21; லூக்கா. 2:11).*

மனுஷ ஜாதி அவருடைய பாவ நிவாரண பலியை விசுவாசிப்பதால், பாவத்தினால் வரும் தண்டனையிலிருந்து மீட்படையக் கூடும் *(ரோமர். 5:8-12; 1 தீமோ. 1:15).* "நம்மை அக்கிரமங்களிலிருந்து மீட்டுக்கொள்ள அவர் நமக்காகத் தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார்" *(தீத்து 2:14; எபி. 7:25).* "அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும், அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்" *(2 தீமோ. 1:10).* உலகம் கெட்டழிந்து போகாமல் அதை இரட்சித்து, அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் நித்திய ஜீவனை அளிக்கிறார் *(யோவான். 3:16).*

"கர்த்தர் என் இரட்சகருமானவர்" என்று தாவீது கூறுகிறான் *(2 சாமு. 22:2).* இஸ்ரவேல் தங்கள் இரட்சகரான தேவனை மறந்தார்கள் *(சங். 106:22).*

பழைய ஏற்பாட்டில் அநேக தடவைகளில் தேவனாகிய கர்த்தரே இரட்சகர் என்று விபரமாய்க் கூறப்பட்டுள்ளது *(ஏசாயா. 43:3; 45:15; 60:16; எரே. 14:8; ஓசியா. 15:4).*

புதிய ஏற்பாட்டிலும் இந்த விஷயம் வெளிப்படையாய்க் குறிக்கப்பட்டுள்ளது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது (லூக்கா. 1:47; 1 தீமோ. 1:1; 2:3; 4:10; தீத்து 1:4; 2:9; 3:4; 2 பேதுரு. 1:1; யூதா. 2:5).

இயேசு கிறிஸ்துவே அந்த இரட்சகர் என்று வலியுறுத்தியுள்ளது (அப். 13:23; எபே. 5:23; 2 தீமோ. 1:10; தீத்து 1:4; 2:13).

தேவதூதன் யோசேப்பை நோக்கி "அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பார்" என்றான் (மத். 1:21).

"கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்," என்று தூதன் மேய்ப்பருக்குச் சொன்னான் (லூக்கா. 2:11).

"அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய உலக இரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறோம்'' என்று சமாரியர் அறிக்கை பண்ணினார்கள் (யோவான். 4:42).

மனுஷனுடைய பாவத்தினிமித்தம், அவன்மேல் வந்த தண்டனையை நிவிர்த்தி செய்வதற்காக, தேவன் தாமே தமது ஒரே பேரான குமாரனைக் கிருபாதார பலியாக ஒப்புக்கொடுத்ததினால், பாவியாகிய மனுஷனுக்கு இரட்சிப்பு உண்டு (யோவான். 3:16).

''நாம் இரட்சிக்கப்படும்படிக்கு, வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை" (அப். 4:12).

## இராயன் (Caesar)

இது ஜூலியன் குடும்பத்தாருடைய குடும்பப் பெயர். பேர் பெற்ற காயஸ் ஜூலியஸ் இராயன் (Caius Julius Caesar) என்பவனின் பின் அகுஸ்து (Augutus) இந்தப் பெயரை, உத்தியோகத்துக்கடுத்த பெயராக வைத்துக்கொண்டான். அதன்படி இருநூறு வருஷ காலமாய் ரோமாபுரியில் இராஜ்யபாரம் பண்ணின எல்லாருக்கும் இந்தப் பெயர் வழங்கிற்று.

புதிய ஏற்பாட்டு காலத்தில் பதினோரு இராயர் இருந்து, அவர்களில் நான்குபேர் மாத்திரம் பெயரிடப்பட்டுள்ளனர்.

1. அகுஸ்து இராயன் (கி.மு. 31 - கி.பி. 14).

இவன் உலகமெங்கும் குடி மதிப்பு எழுதப்படவேண்டுமென்று கட்டளை பிறப்பித்தான் (லூக்கா. 2:1). யோசேப்பும் மரியாளும், தாவீதின் சந்ததியாராயிருந்ததினாலும், குடிமதிப்பு எழுதப்படும்

படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் பட்டணங்களுக்குப் போக வேண்டியதாயிருந்ததினாலும், இவர்கள் பெத்லகேமுக்குப் போக நேரிட்டது. இவ்விதமாய் ''இஸ்ரவேலை ஆளப்போகிறவர் பெத்லகேமிலிருந்து வருவார்" என்று மீகா சொன்ன தீர்க்கதரிசனம் *(மீகா. 5:2)* நிறைவேறிற்று.

*2.* திபேரியு இராயன் *(கி.பி. 14:37).*

இவனுடைய பதினைந்தாம் வருடத்தில் யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தைச் செய்யத் துவங்கினான் *(லூக்கா. 3:1,2).* திபேரியு அகுஸ்துவின் சுவிகார புத்திரனும், மருமகனுமாயிருந்து அவனுக்குப் பின் இராயனானான்.

*3.* கிலவுதியு இராயன் *(கி.பி. 41-54).*

இவனுடைய நாள்களில், அகபு தீர்க்கதரிசனமாய் உரைத்த கொடிய பஞ்சம் உண்டாயிற்று *(அப். 11:28).* வரிசையின்படி இவன் நான்காம் இராயன்.

இவனே, யூதர் ரோமாபுரியிலிருந்து போக வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தவன். இதினிமித்தம் ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் போகவேண்டி வந்தது *(அப். 18:2).*

*4.* நேரோ இராயன் *(கி.பி. 54-68).*

*(அப். 25:25; பிலி. 4:22)* இந்த வசனங்களில் குறித்துள்ள இராயன் இவனே. இவன் கிலவுதியுவின் சுவிகாரபுத்திரன். தன் சகோதர முறையான பிறிற்றானிகஸ் (Britannicus) என்பவனை நஞ்சு கொடுத்து கொன்றுப்போட்டு இவன் இராஜ பட்டத்துக்கு வந்தான்.

ரோமாபுரிக்கு நெருப்பு வைத்தவன் இவனென்று சொல்லப் படுகிறது. பவுல், இராயருக்கு அபயமிடுகிறேன் என்றதும், ரோமாபுரிக்குப் போய் தனக்காக பரிந்து பேசினதும், "சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன்" என்று சொன்னதும் இவனைக் குறிக்கிறது *(அப். 25:1; 12, 21; 2 தீமோ. 4:17).*

## இல்க்கியா (Hilkiah)

**(கர்த்தர் என் காவல்)**

*1.* இவன் யோசியா இராஜாவின் நாள்களிலிருந்த பிரதான ஆசாரியன். கர்த்தருடைய ஆலயத்தைப் பழுது பார்த்த சமயத்தில், நியாயப்பிரமாண புத்தகத்தை இவன் கண்டெடுத்துச் சம்பிரதியாகிய சாப்பானிடம் கொடுத்தான்.

இராஜா அந்தப் புத்தகத்தின் வார்த்தைகளைக் கேட்டபோது, கர்த்தருடைய சித்தத்தை அறியும்படி இல்க்கியாவையும், வேறு

ஆள்களையும் உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவளிடத்தில் அனுப்பினான்.

பின்பு இராஜாவின் சொற்படி பாகால் விக்கிரகங்களை தேவா லயத்திலிருந்து புறம்பாக்கவும், வேறு சீர்த்திருத்தங்கள் செய்யவும், இவன் உதவியாயிருந்தான் *(2 இரா. 22:8-14); 2 நாளா. 34;14-28).*

2. எஸ்றா நியாயப் பிரமாண புத்தகத்தை வாசித்தபோது அதின் அர்த்தஞ் சொல்ல அவனோடு நின்றவர்களில் ஒருவன் *(நெகே. 8:4).*

3. செருபாபேலோடு யூதேயாவுக்குப் போன ஆசாரியர்களில் ஒருவன் *(நெகே. 12:7).*

4. மெராரிய லேவியனான அம்சியின் புத்திரன் *(1 நாளா. 6:45).* மெராரிதின் புத்திரரில் ஓசா என்பவனின் மகன் *(1 நாளா. 26:11).*

5. எரேமியா தீர்க்கதரிசியின் பிதா *(எரே. 1:1).*

## இன்னோம் பள்ளத்தாக்கு (Hinnom)

(இலவசம்)

இது எருசலேமின் தென் பக்கத்திலுள்ள ஒரு பள்ளத்தாக்கு. இன்னோம் புத்திரரின், பள்ளத்தாக்கென்றும் குறித் துள்ளது *(யோசுவா. 15:8; 2இரா. 23:10).*

இந்தப் பள்ளத்தாக்கிலே யூதா புத்திரர் தங்கள் பிள்ளைகளைத் தகனிக்கும்படி தோப்பேத்தின் மேடைகளைக் கட்டினார்கள் *(எரே. 7:31).* மனாசே இங்கே தன் குமாரரைத் தீமிதிக்கப் பண்ணினான் *(2 நாளா. 33:6).* ஆகாஸ் தூபங்காட்டி, தன் குமாரரை அக்கினியில் தகனித்தான் *(2 நாளா. 28:3).* யோசியா இங்கேயிருந்த தோப்பேத் என்னும் ஸ்தலத்தைத் தீட்டாக்கினான் *(2 இரா. 23:10).*

யூதர் இந்த இடத்தில் குப்பைக் கூளங்களைப் போடுவது வழக்கமாயிருந்தது. குற்றவாளிகளின் சவங்களும், மிருகங்களின் பிணங்களும் எறிந்து விடப்பட்டதால் எப்பொழுதும் அங்கே நெருப்பு எரிந்துக் கொண்டிருக்கும். இந்த இடத்தின் பெயரிலிருந்து எரிநரகம் என்ற அர்த்தமுள்ள கெகென்னா என்ற பேர் வந்தது.

புதிய ஏற்பாட்டில் பாவிகளுக்குக் கிடைக்கப்போகிற நித்திய தண்டனைக்கு உவமானமாய்க் குறித்துள்ளது *(மத். 5:22; மாற்கு. 9:47; லூக்கா. 12:5).*

## ஈசாக்கு (Isaac)
### *(நகைப்பு)*

ஆபிரகாம், சாராள் என்பவர்களின் மகன். ரெபெக்காளின் புருஷன். ஏசா, யாக்கோபு என்பவர்களின் தகப்பன்.

ஆபிரகாம் நூறு வயதாயிருக்கையில், தேவன், அவனுக்கு ஈசாக்கு என்ற ஒரு பிள்ளை பிறக்கும் என்றும், அவனோடு தாம் ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்துவதாகவும் சொன்னார் *(ஆதி. 17:16-21)*. சாராளுக்கும் அவ்விதம் சொல்லப்பட்டபோது அவள் நகைத்தாள் *(ஆதி. 18:12)*. பின்பு பிள்ளை பிறந்தபோது தேவன் என்னை நகைக்கப் பண்ணினார் என்றாள் *(ஆதி. 21:6)*.

இஸ்மவேல் ஆபிரகாமின் மூத்த மகனாயிருந்தும், ஈசாக்கினிடம் உன் சந்ததி விளங்கும் என்று தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னார் *(ஆதி. 21:12)*.

பின்பு ஆபிரகாமைச் சோதிக்கும்படி தேவன் அவனுடைய ஏகசுதனாகிய ஈசாக்கைத் தகனபலியாக பலியிடும்படிச் சொன்னார். அவன் கீழ்ப்படிந்து, அவனைப் பலியாக வெட்டும்படி கத்தியை எடுத்தபோது, கர்த்தருடைய தூதன் அவனைத் தடுத்தான். அப்பொழுது ஆபிரகாம் ஓர் ஆட்டுக்கடாவைக் கண்டு அதைப் பிடித்து, தன் குமாரனுக்குப் பதிலாக தகன பலியிட்டான் *(ஆதி. 22:1-13)*.

ஆபிரகாம் முதிர்வயதானபோது, ஈசாக்குக்குத் தன் ஜனத்துக்குள்ளிலிருந்து ஒரு மனைவி தேடும்படி, தன் ஊழியக்காரனை ஆரானுக்கு அனுப்பினான். அவன் போய் ஆபிரகாமின் இனத்தானாகிய பெத்துவேலின் மகள் ரெபேக்காளைக் கூட்டிக்கொண்டு வருகிறபோது, ஈசாக்கு சாயங்கால வேளையில் வெளியில் தியானம் பண்ணிக் கொண்டிருந்தான். அவன் அவள் வருகிறதைக் கண்டு, அழைத்துக் கொண்டுபோய், தனக்கு மனைவியாக்கிக்கொண்டு, அவளை நேசித்தான் *(ஆதி. 24:1-67)*.

ஆபிரகாம் நூற்று எழுபத்தைந்து வயதில் மரித்தபோது, ஈசாக்கும், இஸ்மவேலும் அவனை மக்பேலா குகையில் அடக்கம் பண்ணினார்கள் *(ஆதி. 25:9)*.

இருபது வருட காலமாய் ரெபெக்காளுக்குப் பிள்ளை இல்லாதிருந்ததினிமித்தம், ஈசாக்கு தன் மனைவிக்காக வேண்டிக் கொண்டபோது, அவள் கர்ப்பந்தரித்து இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றாள்.

அவர்களுக்கு ஏசா, யாக்கோபு என்று பேரிட்டார்கள். ஏசா வேட்டையில் வல்லவனும் வனசஞ்சாரியுமாயிருந்தான். யாக்கோபு

குணசாலியும் கூடாரவாசியுமாயிருந்தான். ஏசா வேட்டையாடிக் கொடுத்தது, ஈசாக்கின் வாய்க்கு ருசியாயிருந்ததினால், அவனில் பட்சமாயிருந்தான் (ஆதி. 25:28).

பஞ்சம் உண்டானதினிமித்தம் ஈசாக்கு அபிமெலேக்கிடம் போய் கேராவில் குடியிருந்தான். தன் மனைவி அழகுள்ளவளானபடியால் அவ்விடத்து மனுஷர் தன்னைக் கொல்லுவார்களென்று எண்ணி. அவளைத் தன் சகோதரி என்று சொன்னான். அபிமெலேக்கு இதன் உண்மையை அறிந்தபோது அவர்களைப் பாதுகாத்தான் (ஆதி. 26:1-11).

ஈசாக்கு கேராரின் பள்ளத்தாக்கிலிருந்த வேளையில், தண்ணீர் நிமித்தமாக அவ்வூர் மேய்ப்பருடன் வாக்குவாதம் உண்டாயிற்று. அங்கேயிருந்து பெயெர்செபாவுக்குப் போயிருக்கையில் தேவன் அவனுக்குத் தரிசனமானார். பின்பு அபிமெலேக்கும் அவனிடம் போய் இருவரும் சமாதானம் செய்துகொண்டார்கள் (ஆதி. 26:27-31).

ஈசாக்கு முதிர்வயதானதினால் கண்கள் பார்வையற்றுப் போன போது, ஏசாவை ஆசீர்வதிக்கும்படி அவனிடம் ருசியுள்ள பதார்த்தங்களைக் கேட்டான். இதைக் கேட்டுக்கொண்டிருந்த ரெபெக்காள், தந்திரயோசனை செய்து, யாக்கோபு அந்த ஆசீர்வாதத்தைப் பெறும்படி செய்தாள் (ஆதி. 27:1; 19:29).

ஏசா நடந்ததை அறிந்து அழுததினால் ஈசாக்கு அவனையும் ஆசீர்வதித்தான். இதினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து அவனைக் கொன்றுபோட யோசித்தான் (ஆதி. 27:38-41).

பின்பு ஈசாக்கு யாக்கோபை அழைத்து பதான் அராமுக்குப் போய், பெத்துவேல் குடும்பத்தில் ஒரு பெண் கொள்ளும்படி சொல்லி அவனை ஆசீர்வதித்து அனுப்பி வைத்தாள் (ஆதி. 28:1-5).

அநேக வருடங்களின் பின் யாக்கோபு மம்ரேக்கு தன் தகப்பனிடம் வந்தான். ஈசாக்கு நூற்றெண்பது வருடம் ஜீவித்திருந்து மரித்தபோது ஏசாவும், யாக்கோபும் அவனை அடக்கம் பண்ணினார்கள் (ஆதி. 35:27-29).

ஈசாக்கின் சரித்திரம், ஆபிரகாம், யாக்கோபு என்பவர்களின் சரித்திரத்தைப்போல கீர்த்தியுள்ளதாக இல்லாமலிருந்தும், அவனுடைய சாந்த குணம், பயபக்தி, சமாதானப் பிரியம் என்பவைகளினால் மெச்சத்தக்கது. இது அவனுடைய காலத்துக்கும் பிற்காலத்துக்கும் முன் மாதிரியானது. அவனைப் பலியிடக் கொண்டுபோன சந்தர்ப்பத்தில் ஆபிரகாமுடைய விசுவாசத்தோடு இவனுக்கிருந்த நம்பிக்கையும், தேவ பக்தியும் வியக்கத்தக்கது (ஆதி. 22:1-19). இதைப் பற்றி எபி. 11:17லும் யாக். 2:21லும் குறித்துள்ளது.

கோத்திரப் பிதாக்களாகிய ஆபிரகாம், யாக்கோபு என்பவர்களோடு இவனுடைய பெயரும் சேர்ந்திருக்கிறது (உபா. 9:5-27; மத். 8:11; அப்: 3:13).

ஆபிரகாம் தனது ஒரே மகனை பலி செலுத்த ஒப்புக் கொடுத்ததிலும், மரித்தோரிலிருந்து அவனைத் திரும்ப பாவனையாகப் பெற்றுக்கொண்டதிலும், ஈசாக்கு இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு முன்னடையாளமாகிறான் (ஆதி. 22:12,13; எபி. 11:19).

## ஈசாய் (Jesse)

### *(கர்த்தர் ஜீவிக்கிறார்)*

போவாஸ், ரூத் என்பவர்களின் பேரன். ராகாப் என்பவளின் பிரௌத்திரன். ஓபேத்தின் மகன். தாவீதின் பிதா. இயேசுவின் முற்பிதா (மத்: 1:5-6; லூக்கா. 3:23, 3:1-32).

கர்த்தர் சாமுவேலை நோக்கி பெத்லகேமியனாகிய ஈசாயினிடம் உன்னை அனுப்புவேன் என்றதே இவனைப்பற்றி முதன் முதல் வேதாகமத்தில் குறித்துள்ளது (1 சாமு. 16:1). "பெத்லகேம் ஊரானாகிய ஈசாய் சவுலின் நாள்களிலே வயது சென்ற கிழவனாய் மதிக்கப் பட்டான்" (1 சாமு. 17:12).

சவுலினால் துன்புறுத்தப்பட்ட நாள்களில் தாவீது மோவாபின் இராஜாவிடம்போய், தன் தகப்பனையும், தாயையும் அவனோடிருக்க ஒழுங்கு செய்தான் (1 சாமு. 22:3,4).

ஈசாய்க்கு எட்டு குமாரரிருந்தார்கள் (1 சாமு. 16:10, 11. 1 நாளா. 2:13-15).

"ஈசாயென்னும் அடி மரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்'' என்று மேசியாவைப்பற்றி ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தான் (ஏசாயா. 11:1-10).

## ஈராம் (Hiram)

### *(மேன்மையான பிறப்புடையவன்)*

1. இவன் தீருவின் இராஜா. (கி.மு. 1015) தாவீது, சாலொமோன் என்பவர்களோடு சிநேகிதமாயிருந்தான். தாவீது சீயோன் கோட்டையைப் பிடித்த பின், இவன் அவனுக்கு ஒரு வீடு கட்டும்படி மரங்களையும், தச்சரையும் கொடுத்தான் (2 சாமு. 5:11; 1 நாளா. 14:1).

சாலொமோன் ஆலயம் கட்டும்படி இவன் வியாபார முறையில் ஒழுங்கு செய்துகொண்டு, சாலொமோனுக்கு வேண்டியமட்டும்

கேதுரு மரங்களையும், தேவதாரு விருட்சங்களையும் லீபனோனி லிருந்து அனுப்பிவந்தான். இதற்குப் பதிலாக சாலொமோன் கோதுமையையும், ஒலிவ எண்ணெயையும் கொடுத்தான் *(1 இரா. 5:2-11)*.

இருபது வருடங்களின் பின் ஆலயமும் கட்டி முடித்தபோது, ஈராம் செய்த உதவிக்காக சாலொமோன் அவனுக்கு கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தபோது அவன் அவைகளில் பிரியப்படவில்லை. ஈராம் இதற்குப் பதிலாக பொன் அனுப்பியிருந்தான் *(1 இரா. 9:10-14)*.

ஈராமுடைய கப்பல்கள் சாலொமோனுடைய கப்பல்களோடு கூடப்போய், பொன், வெள்ளி முதலியவைகளைத் தர்ஷிசிலிருந்துச் சாலொமோனுக்குக் கொண்டு வந்தன *(1 இரா. 10:22; 2 நாளா. 9:21)*. சாலொமோனுடைய கப்பலில், ஈராமுடைய கப்பலாட்கள் ஒப்பீருக்குப்போய் சாலொமோனுக்குப் பொன் கொண்டு வந்தார்கள் *(1 இரா. 9:26-28; 2 நாளா. 8:17-18)*.

சாலொமோன் சீதோனிய ஸ்திரீகள் மேலும் ஆசை வைத்தான் *(1 இரா. 11:1)*. அவன் ஈராம் குடும்பத்தில் விவாக சம்பந்தம் கலந்திருப்பான் என்று தெரிகிறது.

2. இவன் தீரு தேசத்து கன்னான். நப்தலி கோத்திரத்து ஒரு கைம்பெண்ணின் மகன். சாலொமோன் இவனைக் கொண்டு தேவாலயத்துக்கடுத்த வெண்கலத் தூண்களையும், வேறு வேலைகளையும் செய்வித்தான் *(1 இரா. 7:13-15)*.

## உசியா (Uzziah)

***(கர்த்தர் பலமுள்ளவர்)***

இவனுடைய மறு பெயர் அசரியா. அமத்சியா கொல்லப்பட்ட போது, யூதா ஜனங்கள் பதினாறு வயதுள்ள, அவன் மகனாகிய உசியாவை இராஜா வாக்கினார்கள். உசியா ஏலாதைக் கட்டி, யூதாவின் வசமாக்கினான் *(2 இரா. 14:21,22; 15:1,2)*.

அவன் ஐம்பத்திரண்டு வருடம் எருசலேமில் அரசாண்டான். குஷ்டரோகியானபோது அவனுடைய மகன் யோதாம் ஜனங்களை நியாயம் விசாரித்தான். இராஜாக்களின் புத்தகத்தில் அவன் கர்த்தர் பார்வையில் செம்மையாய் நடந்தானென்றும், நாளாகமப் புத்தகத்தில் அவன் நடத்தின யுத்தங்களைப் பற்றியும், கட்டின கோபுரங்களைப் பற்றியும், விபரமாய்க் குறித்துள்ளன *(2 இரா. 15:1-5; 2 நாளா. 26:1-4)*.

அவன் பலப்பட்டபோது கர்த்தருக்கு விரோதமாக மீறுதல் செய்து, தூபங்காட்ட ஆலயத்தில் பிரவேசித்தான். ஆசாரியர்

அவனை எதிர்த்த வேளையில் குஷ்டரோகம் அவன் நெற்றியில் தோன்றியது. அவன் தனித்த வீட்டிலே குஷ்டரோகியாய் வாசம்பண்ணி மரித்தான் *(2 நாளா. 26:16-23)*.

அவனுடைய நாள்களில் குறிப்பிடத்தக்க பூமி அதிர்ச்சி உண்டானது *(ஆமோஸ். 1:1)*. இது சிறையிருப்புக் காலத்தின் பின்னும் நினைவு கூறப்பட்டது *(சக. 14:5)*.

2. உசியா என்ற பெயருள்ள ஒரு லேவியனிருந்தான் *(1 நாளா. 6:23)*.

3. அந்நிய ஸ்திரீயை விவாகம் பண்ணின ஓர் ஆசாரியன் *(எஸ்றா. 10:21)*.

4. யூதா புத்திரரில் ஒருவன் *(நெகே. 11:4)*.

## உம்ரி (Omri)

### *(கி.மு. 885-871)*

### *(கர்த்தர் பகிர்ந்து கொடுக்கிறார்)*

1. இவன் பன்னிரெண்டு வருடம் இஸ்ரவேலின் இராஜாவாயிருந்தான். ஏலா இராஜாவின் படைத்தலைவனாகிய சிம்ரி இராஜாவைக் கொன்றுபோட்டு தான் இராஜாவானபோது, உம்ரி அவனைத் திர்சாவில் கொன்றுபோட்டு இராஜ்யத்தை எடுத்தான் *(1 இரா. 16:16-18)*.

ஆனால் ஜனங்களில் ஒரு பகுதியார் எழும்பி திப்னியை இராஜாவாக்கினார்கள். திப்னி மரித்தபின், உம்ரி முழு தேசத்துக்கும் இராஜாவானான் *(1 இரா. 16:21,22)*.

பின்பு உம்ரி ஒரு மலையை வாங்கி, ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு சமாரியா என்னும் பெயரிட்டு அதைத் தலைநகரமாக்கினான். இவன் பொல்லாப்பானதைச் செய்து, தனக்கு முன்னிருந்த எல்லாரைப் பார்க்கிலும் கேடாய் நடந்தான் *(1 இரா. 16:26)*.

தன்னுடைய மகன் ஆகாபுக்கு சீதோனியரின் இராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் செய்து வைத்தான் *(1 இரா. 16:31)*. இவன் பன்னிரெண்டு வருடம் இராஜ்யபாரம் பண்ணினபின் மரித்து சமாரியாவில் அடக்கம் பண்ணப்பட்டான் *(1 இரா. 16:23,28)*.

2. பென்யமீன் கோத்திரத்தானாகிய பெகேரின் குமாரன் *(1 நாளா. 7:8)*.

3. யூதா கோத்திரத்து பேரேசின் சந்ததியான் *(1 நாளா. 9:4)*.

4. தாவீதின் நாள்களில் இசக்காரருக்கு அதிபதி *(1 நாளா. 27:18)*.

## உரியா (Uriah)

### *(கர்த்தரின் வெளிச்சம்)*

*1. இவன் ஓர் ஏத்தியன். தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன். இவன் பத்சேபாள் என்ற ஒரு சௌந்தரவதியான, யூத ஸ்திரீயை விவாகம் செய்திருந்தான். இஸ்ரவேலருக்கும், அம்மானியருக்கு மிடையில் நடந்த யுத்தத்தில், யோவாப், ராப்பாவை முற்றுகை போட்ட வேளையில் உரியா அவனுக்கு கீழ் சேவை செய்தான். எருசலேமிலிருந்த அவனுடைய மனைவியைத் தாவீது இச்சித்து, உரியா சாகும்படி அவனை மும்முரமாய் நடக்கிற போர் முகத்தில் நிற்கச் செய்யும்படி, தாவீது யோவாபுக்கு எழுதினான். யோவாப் அவ்விதமே செய்ததினால் உரியா மரித்தான். அதன்பின் உரியாவின் மனைவியாகிய பத்சேபாளைத் தாவீது தனக்கு மனைவியாக்கி கொண்டான். அவள் தாவீதுக்கு பெற்ற ஆண் பிள்ளையும் மரித்தது (2 சாமு. 12:15). தாவீது இந்தக் காரியத்தில் மாத்திரம் கர்த்தரின் கட்டளையை மீறினான் (1 இரா. 15:5).*

*இந்த உரியாவின் மனைவி சாலொமோனின் தாய் (மத். 1:6).*

*2. யூதாவின் இராஜாவாகிய ஆகாசின் நாள்களிலிருந்த ஓர் ஆசாரியன். ஆகாஸ் தமஸ்குவிலிருந்த ஒரு பலிபீடத்தின் மாதிரியை இவனுக்கு அனுப்பினபோது, இவன் அதைப் போன்ற ஒரு பலிபீடத்தை எருசலேமில் கட்டினான். பின்பு அதன்மேல் பலிகள் செலுத்தப்பட்டன (2 இரா. 16:10-16).*

*ஏசாயா எழுதின தீர்க்கதரிசனத்திற்கு இவன் சாட்சி வைத்தான் (ஏசாயா. 8:2).*

*2. கீரியாத்யாரீம் ஊரானாகிய செமாயாவின் மகன் உரியா, ஒரு தீர்க்கதரிசி. இவன் யூதாவுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் சொன்னானென்று யோயாக்கீம் இராஜா இவனைக் கொன்று போட்டான் (எரே. 26:20-23).*

*4. மெரேமோத்தின் பிதா (எஸ்றா. 8:33; நெகே. 3:4).*

*5. நியாயப்பிரமாணம் வாசிக்கப்படுகையில் எஸ்றாவோடு பிரசங்க பீடத்தின்மேல் நின்றவன் (நெகே. 8:4).*

## உன்னதமானவர் (The Most High)

*மெல்கிசேதேக் உன்னதமான தேவனுடைய ஆசாரியனென்று முதன் முதல் வேதாகமத்தில் குறித்துள்ளது (ஆதி. 14:18). மெல்கிசேதேக்கும், ஆபிரகாமும், "உன்னதமான தேவன்" என்பவரைப்பற்றிக் கூறியுள்ளார்கள் (ஆதி. 14:19,20,23).*

ஆனால் 'உன்னதமானவர்' என்ற வார்த்தையை முதன் முதல் பிலேயாம் உபயோகிக்கிறான். "உன்னதமானவர் அளித்த அறிவை அறிந்து விளம்புகிறேன்" என்கிறான் *(எண்: 24:16).*

"உன்னதமானவர் இஸ்ரவேல் புத்திரரின் தொகைக்குத் தக்கதாய் சர்வ ஜனங்களின் எல்லைகளைத் திட்டம் பண்ணினார்" என்று மோசே கூறுகிறான் *(உபா. 32:8).*

"உன்னதமானவர் தமது சத்தத்தைத் தொனிக்கப் பண்ணினார்" என்று தாவீது சொல்லுகிறான் *(2 சாமு. 22:14; சங்.18:13).*

"பரிசுத்தர் என்கிற நாமமுள்ள உன்னதமானவர் சொல்லுகிறார்" என்று ஏசாயா குறிக்கிறான் *(ஏசாயா. 57:15).*

நீ பெறப்போகிற இயேசு "உன்னதமானவரின் குமாரன் எனப்படுவார்" என்று தேவதூதன் மரியாளுக்குச் சொன்னார் *(லூக்கா. 1:32).*

உன்னதமானவருக்குப் பிள்ளைகளாயிருப்பதற்காக நாம் செய்ய வேண்டிய சில காரியங்களைப் பற்றி இயேசு குறித்திருக்கிறார் *(லூக்கா. 6:27-35).*

உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் இராஜ்யத்தை சதாகாலங்களிலும் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் *(தானி. 7:18).*

இந்த வார்த்தை குறிக்கப்பட்டிருக்கும் வேறு இடங்கள். *சங். 9:2; 21:7; 46:4; 47:2; 50:14; 56:2; 73:11; 77:10; 78:17; 82:6; 83:17; 87:5; 91:1; 107:10; ஏசாயா. 14:14; புல. 3:35; தானி. 4.34; 7:21,25; ஓசியா. 11:7; லூக்கா 1:76; அப். 7:48.*

## ஊசா (Uzza)

### *(பெலன்)*

*1. கீரியாத் யாரீமிலிருந்த அபினதாபின் மகன் (1 சாமு. 7:1).* தாவீது கர்த்தருடைய பெட்டியை ஒரு புது இரதத்தின் மேலேற்றி, அபினதாபின் வீட்டிலிருந்து நடத்திக்கொண்டு போகும்போது, அபினதாபின் குமாரர் ஊசாவும், அகியோவும் கூடப் போனார்கள். மாடுகள் மிரண்டு பெட்டியை அசைத்தபடியால், ஊசா பெட்டியைப் பிடித்தான். இந்தத் துணிவான செய்கையினிமித்தம் அவன் பெட்டியண்டையில் செத்தான் *(2 சாமு. 6:1-7).* தாவீது அந்த ஸ்தலத்திற்கு பேரேஸ் ஊசா என்னும் பேரிட்டான் *(1 நாளா. 13:7-11).*

*2. ஊசாவின் அரண்மனைத் தோட்டத்தில் மனாசேயும், அவன் மகன் ஆமோனும் அடக்கம் பண்ணப்பட்டார்கள் (2 இரா. 21:18-26).*

*3. மெராரியின் சந்ததியானாகிய ஊசா (1 நாளா. 6:29).*

*4. பென்யமீன் கோத்திரத்து ஏகூதின் சந்ததியான் (1 நாளா. 8:7).*

*5. சிறையிருப்பிலிருந்து வந்த நிதனீமியரானவர்களில் ஒருவன் (எஸ்றா. 2:43, 49).*

## ஊசாய் (Hushai)

**(வேகம்)**

*1. தாவீது அப்சலோமுக்குத் தப்பி, எருசலேமை விட்டு மலை உச்சி மட்டும் போனபோது அர்கியனாகிய ஊசாய் தன் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டு அவனுக்கு எதிர்ப் பட்டான்.*

*தாவீது அவனை நோக்கி, திரும்பிப்போய் அப்சலோமைச் சேர்ந்து கொண்டு, அகித்தோப்பேலின் ஆலோசனையை அபத்தமாக்கும்படி, அங்கே நடக்கும் செய்திகளை, சாதோக், அபியத்தார் என்னும் ஆசாரியர்கள் மூலம் தனக்கு அறிவிக்கும்படி சொல்லியனுப்பினான். அப்படியே அவன் திரும்பிப்போனான் (2 சாமு. 15:32-37). ஊசாய் அப்சலோமிடம் போய் அவனைச் சேவிப்பேனென்று சொன்னான் (2 சாமு. 16:6).*

*அகித்தோப்பேல் அப்சலோமுக்குச் சொன்ன ஆலோசனையைப் பார்க்கிலும், ஊசாயின் ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டது (2 சாமு. 17:5,14).*

*ஊசாய் தாவீதின் தோழனாயிருந்தான் (1 நாளா. 27:33). பின்பு ஊசாயின் குமாரன் பானா சாலொமோனின் மணியக்காரரில் ஒருவனாயிருந்தான் (1 இரா. 4:16).*

*2. நெகேமியாவின் நாள்களில் குமாரன் மதிலின் ஒரு பகுதியைக் கட்டினான் (நெகே. 3:25).*

## ஊசியேல் (Uzziel)

***(கர்த்தர் பலமுள்ளவர்)***

*1. கோகாத்தின் குமாரன் (யாத். 6:18; எண். 3:19). ஆரோனின் சிறிய தகப்பன் (லேவி. 10:4).*

*2. தாவீதின் நாள்களில் ஞானதிருஷ்டியுள்ள புருஷனாகிய ஏமானின் குமாரன் (1 நாளா. 25:4).*

*3. எருசலேமைப் பழுது பார்த்த தட்டாரில் ஒருவனாகிய அராயாவின் குமாரன் (நெகே. 3:8).*

*4. பென்யமீன் கோத்திரத்து பேலாவின் குமாரன் (1 நாளா. 7:7).*

*5. எசேக்கியாவின் நாள்களில் ஆலயத்தைச் சுத்திகரிக்க வந்தவர்களில் ஒருவன் (2 நாளா. 29:14).*

6. அமலேக்கியரை மடங்கடித்த சிமியோன் கோத்திரத்து தலைமைக்காரன் *(1 நாளா. 4:41-43).*

## ஊரீம் தும்மீம் (Urim Thummim)

பிரதான ஆசாரியன் தன் நியாய விதி மார்ப்பதக்கத்தில் வைத்திருந்த இரண்டு சிறிய பொருள்கள் *(யாத். 28:30; லேவி. 8:8).* இவைகள் விலையுயர்ந்த கற்களாயிருக்கலாம். ஊரீம் ஆம் என்றும் தும்மீம் இல்லையென்றும் கருத்துள்ளவை. இவைகள் ஒரு சிறிய பையில் வைக்கப்பட்டு, ஆசாரியனுடைய ஏபோத்தில் கட்டப்பட்டது. ஆரோனின் சந்ததியிலேயே இவைகள் இருந்தன *(உபா. 33:8).*

யோசுவா அதிகாரியாக நியமிக்கப்பட்டபோது அவன் ஊரீம் என்னும் நியாயத்தினால் எலெயாசார் மூலமாய் கர்த்தரிடத்தில் ஆலோசனைக் கேட்கவேண்டுமென்று கட்டளைப் பெற்றான் *(எண். 27:21).*

ஆகானுடைய காரியத்தில், யோசுவா இதினாலே கர்த்தருடைய நியமத்தை அறிந்தான் என்று தெரிகிறது *(யோசுவா. 7:14,18).*

நியாயாதிபதிகளின் நாள்களிலும் இது உபயோகிக்கப்பட்டதாக விளங்குகிறது *(நியா. 1:1-7; 20:18, 26-28).*

"ஊரீம் தும்மீம்" உபயோகிக்கப்பட்ட விதம் பின் சொல்லப்பட்ட சம்பவங்களிலிருந்து அறியலாம்.

அபியத்தார் தாவீதிடம் போனபோது, ஓர் ஏபோத்தையும் கொண்டுபோனான். ஊரீம், தும்மீம் உள்ள நியாயவிதி மார்ப்பதக்கம் அதில் இருந்திருக்க வேண்டும் *(1 சாமு. 23:6).*

தாவீது தேவனுடைய சித்தத்தை அறியும்படி நேரே கேள்வி கேட்டு ஆம், இல்லை என்ற மறு உத்தரவு பெற்றான் *(1 சாமு. 23:9-12; 30:7,8; 2 சாமு. 5:19-23; 21:1).*

தாவீதின் நாள்களின் பின் சிறையிருப்பு முடியுமட்டும், "ஊரீம், தும்மீம்" பாவிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது தீர்க்கதரிசிகளின் காலமாயிருந்ததினால் அப்படியிருந்திருக்கலாம். ஆகிலும் சிறை யிருப்புக் காலத்தின் பின் திரும்பவும் "ஊரீம், தும்மீம்" உள்ள ஆசாரியர் வேண்டுமென்று ஜனங்கள் விரும்பினார்கள் *(எஸ்றா. 2:63; நெகே. 7:65).*

"ஊரீம், தும்மீம் உபயோகிக்கப்பட்ட விதத்தைப் பற்றிப் பலவித மதிப்புகளுண்டு. தெய்வீக வழிநடத்துதலை அறியும்படி சீட்டுப் போட்ட ஒரு முறைமையைப்போல தெரிகிறது. அதிலிருந்த கற்களை

ஒரு சிறிய சாக்கில் போட்டு குலுக்கும்போது, விழும் கல்லிலிருந்து, அல்லது ஆசாரியன் கை போட்டு எடுக்கும் கல்லிலிருந்து மறு உத்தரவு அறிந்தார்கள். கல்லில் தெய்வீக ஒளி பிரகாசித்திருக்கலாம்.

யோனத்தானுடைய விஷயத்தில் சீட்டு போட்டபோது சவுல் கர்த்தரை நோக்கி, யதார்த்தத்தை விளங்கப்பண்ணும் என்றான் *(1 சாமு. 14:41).*

*கர்த்தர் சவுலுக்கு ஊரீமினாலாவது மறு உத்தரவு அருள வில்லை என்பதில் அவர் பேசாதிருந்தார் என்பதே அர்த்தம் (1 சாமு. 28:6).*

## எகிப்து (Egypt)

ஆப்பிரிக்காவின் வடபாகத்திலுள்ள ஒரு பெயர்பெற்ற தேசம். இது சகாரா (Sahara) வனாந்தரத்துக்குட்பட்டது. ஆனால் நைல் ஆற்றினிமித்தம் இது செழிப்பான தேசமாயிற்று.

கி.பி. 3000 முதல் இந்தப் பள்ளத்தாக்கிலிருந்த ஜனத்துக்குள் நாகரீகம் காணப்பட்டது. ஆனால் பார்வோன் என்ற பெயருள்ள இராஜாக்களின் காலத்திலேயே கல்விக்கடுத்த தேர்ச்சியும், இராஜாங்கத்துக்கடுத்த வளர்ச்சியும் தோன்றிற்று. அக்காலத்தில் பலஸ்தீனாவும் இவர்கள் ஆளுகைக்குள்ளிருந்தது. அத்தேசம் சீரியாவிலிருந்த ஐப்பிராத்து நதி துவங்கி, ஆப்பிரிக்காவின் நடுப்பகுதி மட்டும் பரவி இருந்தது.

ஆபிரகாம் பஞ்சத்தினிமித்தம் கானானிலிருந்து எகிப்துக்குப் போனானென்பதே வேதாகமத்தில் எகிப்தைப் பற்றி முதன் முதலாக குறிக்கப்பட்டுள்ளது *(ஆதி. 12:10).*

யோசேப்பைத் தேவன் ஆசீர்வதித்ததினால் அவன் படிப்படியாய் மேலான நிலைக்கு வந்து கடைசியாய் எகிப்து தேசம் முழுவதற்கும் அதிகாரியானான் *(ஆதி. 41:41).*

மற்ற தேசங்களில் பஞ்சம் உண்டானபோது யோசேப்பு எகிப்தில் போதிய தானியம் சேர்த்துவைத்தான். கானான் தேசத்திலிருந்து தானியம் கொள்ள வந்தவர்களுக்குள் யோசேப்பின் சகோதரரும் இருந்தார்கள். அவர்கள் யோசேப்பை அறியவில்லை. யோசேப்பு அவர்களை அறிந்தும் அறியாதவன் போல நடந்து கொண்டான் *(ஆதி. 42:1-25).*

பின்பு யோசேப்பு தன்னைத் தன் சகோதரருக்கு வெளிப் படுத்தி, அவர்களெல்லாரையும் எகிப்துக்கு வரும்படி சொன்னான். அப்படியே யாக்கோபும் அவன் சந்ததியார் யாவரும் எகிப்துக்குப் போனார்கள் *(ஆதி. 46:6).*

எகிப்திலும் பஞ்சம் மிகவும் கொடிதாயிருந்தது. யோசேப்பு எகிப்து, கானான் முதலிய தேசங்களிலிருந்தவர்களுக்குத் தானியம் விற்றுப் பணத்தையெல்லாம் அரண்மனையில் சேர்த்தான். ஜனங்களிடம் பணம் இல்லாமற் போனபோது அவர்களுடைய ஆடுமாடுகளை யும் எடுத்துக் கொண்டான். கடைசியாய் விதை தானியம் கொடுத்து விளைவில் ஐந்தில் ஒரு பங்கையும் பார்வோனுக்குச் சேரும்படி செய்தான் (ஆதி. 47:13-27).

யாக்கோபு மரித்தபின் யோசேப்பின் சகோதரர் அவன் தங்களை எவ்விதம் நடத்துவானோவென்று பயந்திருக்கையில் அவன் அவர்களுக்கு ஆறுதல் சொன்னான் (ஆதி. 50:15-21).

பின்பு யோசேப்பு நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரித்தான். இஸ்ரவேலர் அந்தத் தேசத்தை விட்டுப் போகும்போது, தன்னுடைய எலும்புகளையும் கொண்டு போகும்படி அவர்களிடம் ஆணையிடுவித்துக் கொண்டான் (ஆதி. 50:25,26).

யோசேப்பு மரித்தபின் எகிப்திலிருந்த இராஜாக்கள் இஸ்ரவேலரை கொடுமையாய் நடத்தினார்கள். அவர்கள் அதிகமாய்ப் பலுகிப் பெருகினதினிமித்தம் அவர்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளைப் பிறக்கும்போதே கொன்று போடும்படி இராஜா கட்டளை பிறப்பித்தான்.

அந்நாள்களில் மோசே பிறந்தபோது அவனுடைய பெற்றோர் அவனைத் தப்புவிக்க முயன்றார்கள். ஆனால் தேவனுடைய ஒழுங்கினபடி பார்வோனுடைய குமாரத்தி அந்தப் பிள்ளையை எடுத்து தன்னுடைய பிள்ளைபோல வளர்க்க நேரிட்டது.

பின்பு அவன் வளர்ந்து பார்வோனின் குமாரத்தியுடைய மகன் என்னப்படுவதை வெறுத்து மீதியான் தேசத்துக்கு ஓடிப்போய் அத்தேசத்து ஆசாரியனுடைய ஆடுகளை மேய்த்துவந்தான் (யாத். 3:1).

எகிப்தியர் இஸ்ரவேலரை ஒடுக்கினதினிமித்தம் அவர்கள் தேவனை நோக்கி கூக்குரலிட்டார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேக்குத் தரிசனமாகி நீ எகிப்துக்குப்போய் இஸ்ரவேலைப் போக விடும்படி பார்வோனிடம் கேள் என்றார் (யாத். 6:11).

பார்வோன் செவிகொடாவிட்டால் எகிப்து தேசத்தில் என் அற்புதங்களை நடப்பிப்பேன் என்றார். அந்தப்படியே மோசேயும், ஆரோனும் பார்வோனுடைய கண்களுக்கு முன் கோலால் நதியின் தண்ணீரை அடித்தபோது அது இரத்தமாய் மாறிற்று (யாத். 7:3-20).

பின்பு ஆரோன் தன் கோலை தண்ணீர்கள்மேல் நீட்டவே தவளைகள் எகிப்து தேசத்தை மூடிற்று. அப்பொழுது பார்வோன் ஜனங்களை பலியிடும்படி போகவிடுவேன் என்றான் (யாத். 8:6-8).

பார்வோன் திரும்பவும் மறுத்தபோது, ஆரோன் கோலால் பூமியின் புழுதியை அடிக்கவே, எகிப்து தேசமெங்கும் பூமியின் புழுதி யெல்லாம் பேன்களாயிற்று *(யாத். 8:16,17).*

பின்பும் ஓர் அடையாளமாக வண்டுகள் எகிப்து தேசமெங்கும் வந்தன. அப்பொழுது பார்வோன் மோசேயிடம், தேசத்திலேதானே பலியிடுங்கள் என்றான். மோசே அதற்கு சம்மதிக்கவில்லை *(யாத். 8:24-28).*

இன்னும் ஓர் அடையாளமாக எகிப்தியருடைய மிருக ஜீவன்க ளெல்லாம் கொள்ளை நோயினால் செத்துப்போயின. இஸ்ரவேல ருடையவைகளில் ஒன்றாகிலும் சாகவில்லை *(யாத். 9:1-7).* ஆகிலும் பார்வோன் ஜனங்களைப் போகவிடவில்லை. அப்பொழுது மோசே சூளையின் சாம்பலை அள்ளி பார்வோனுக்கு முன் வானத்துக்கு நேராக இறைக்கவே, எரிபந்தமான கொப்புளங்கள் மனிதர் மேலும், மிருக ஜீவன்கள் மேலும் எழும்பிற்று *(யாத். 9:9,10).*

பின்னும் கர்த்தருடைய சொற்படி கல்மழையும், அக்கினியும் எகிப்தின்மேல் பெய்தது. கோசேன் நாட்டில் மாத்திரம் கல்மழை இல்லாதிருந்தது *(யாத். 9:22,23).*

இதன் பின்னும் மோசே தன்கையை நீட்டினபோது எகிப்து தேசமெங்கும் வெட்டுக்கிளிகள் இறங்கிற்று *(யாத். 10:12,13).*

அப்பொழுது பார்வோன் தனக்காக கர்த்தரிடம் வேண்டிக் கொள்ளும்படி மோசேயிடம் கேட்டான். மோசே அப்படிச் செய்யவே, வெட்டுக்கிளிகள் இல்லாமற் போயிற்று *(யாத். 10:16,17).* ஆனாலும் பார்வோன் இடம் கொடுக்கவில்லை.

மோசே திரும்பவும் தன் கையை வானத்திற்கு நீட்டினதினால் எகிப்து தேசமெங்கும் மூன்றுநாள் காரிருள் உண்டாயிற்று. இஸ்ரவேல ருக்கோ வெளிச்சம் இருந்தது *(யாத். 10:22,23).*

கடைசியாக கர்த்தர் எகிப்து தேசத்திலிருந்த முதற்பேரான வனையும், மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தையும் அழித்தார் *(யாத். 12:29).*

மகா கூக்குரல் எகிப்தில் உண்டாயிற்று. பார்வோன் இஸ்ரவேலரை போகவிட்டான் *(யாத். 12:36).* அவர்கள் கி.மு. 1200 சித்திரை மாதம் புறப்பட்டுப் போனார்கள் *(யாத். 12:42).*

பிற்காலத்தில் சாலொமோன் எகிப்தின் இராஜாவாகிய பார்வோனோடு சம்பந்தங்கலந்து, அவனுடைய குமாரத்தியை விவாகம் பண்ணினான் *(1 இரா. 3:1).*

சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகை தேடின வேளையில், அவன் எகிப்துக்குப் போய் சீஷாக்கிடம் இருந்தான் *(1 இரா. 11:40).*

**எகிப்தின் பாரம் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது.**

கர்த்தர் வரும்பொழுது எகிப்தின் விக்கிரகங்கள் குலுங்கும். நான் எகிப்தியரைக் கடினமான அதிபதியின் கையில் ஒப்புவிப்பேன் *(ஏசாயா. 19:1,3)*. அக்காலத்தில் எகிப்தின் பட்டணங்கள் கானான் பாஷையைப் பேசி கர்த்தரின் நாமத்தில் ஆணையிடும் *(ஏசாயா. 19:12:25)*.

எகிப்தில் துரத்திவிடப்பட்டவர்கள் எருசலேமில் கர்த்தரைப் பணிந்துகொள்வார்கள் *(ஏசாயா. 27:12,13)*.

எகிப்தில் நம்பிக்கை வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு ஐயோ *(ஏசாயா. 31:1)*.

உரியா யோயாகீமுக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் சொன்னானென்று அவனைக் கொல்ல வகை தேடினபோது, அவன் எகிப்துக்கு ஓடிப்போனான் *(எரே. 26:21,22)*.

பார்வோனின் சேனை, உங்களுக்கு ஒத்தாசையாக எகிப்திலிருந்துப் புறப்பட்டது. ஆனாலும் திரும்பிப்போகும். கல்தேயர் வந்து தேசத்தைப் பிடிப்பார்கள் *(எரே. 37:7,8)*.

எகிப்துக்குப் போய் அங்கே தங்குவீர்களானால் பட்டயம், பஞ்சம், கொள்ளைநோய் என்பவைகளால் சாவீர்கள் *(எரே. 42:13-18)*.

கர்த்தரின் சொல்லைக் கேளாமல் ஜனங்கள் எரேமியாவைக் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் போனார்கள். அங்கேயும் எரேமியா, பாபிலோன் இராஜா எகிப்து தேசத்தைப் பிடித்து, கோயில்களை சுட்டெரித்து, ஜனங்களை சிறைபிடித்துக் கொண்டு போவானென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் *(எரே. 43:7, 11-13)*.

எகிப்தில் தங்கும்படி வந்த யூதர் தப்பிப்போகிறதுமில்லை, திரும்பிப் போவதுமில்லையென்று எரேமியா சொன்னான் *(எரே. 44:12-15)*.

எகிப்திலிருக்கிற யூதா ஜனங்களே கேளுங்கள். நான் இவ்விடத்தில் உங்களைத் தண்டிப்பேன். பார்வோன் ஒப்பிராவை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இதுவே என் வார்த்தையென்று நீங்கள் அறிவீர்கள் *(எரே. 44:25-30)*.

எகிப்து அழிந்து போகுமென்ற கர்த்தருடைய வார்த்தையை எரேமியா தீர்க்கமாய் உரைக்கிறான் *(எரே. 46:2-25)*.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்த நாள்களில் கர்த்தர் அவர்களுக்குச் செய்த நன்மைகளைப்பற்றி எசேக்கியேல் குறிக்கிறான். ஆனாலும் அவர்கள் கீழ்ப்படியவில்லை *(எசே. 20:5-10)*.

எகிப்தின் மேலும், பார்வோன் மேலும் வரப்போகிற தேவ தண்டனையை எசேக்கியேல் கூறுகிறான் (எசே. 29:2-20).

எகிப்தின் மேல் சொல்லப்பட்ட புலம்பல். எசே. 32:12-18 (கி.மு. 587).

எகிப்து பாபிலோனியருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, மேதிய-பெர்சிய இராஜ்யம் எழும்பி எகிப்தைக் கைவசமாக்கிற்று (கி.மு. 525).

மகா அலெக்ஸாந்தர் கி.மு. 332-ல் எகிப்தை தன் வசப்படுத்தினான். எகிப்து கிரேக்கருக்குக் கீழிருக்கையில் தொலொமேயு இராஜாக்களால் ஆளப்பட்டது.

பின்பு ரோம இராஜ்யம் எகிப்தைக் கைவசப்படுத்தினது. அக்காலத்தில் கிறிஸ்து மார்க்கம் அங்கே பரம்பிற்று.

கி.பி. 641 முதல், எகிப்து துருக்கி இராஜ்யத்துக்குட்பட்டது.

## எகோனியா (Jeconiah)

**(கர்த்தர் ஸ்திரப்படுத்துகிறார்)**

யூதா இராஜாவாகிய யோயாக்கீமின் குமாரன். இவனை யோயாக்கீன் என்றும் சொல்லப்பட்டுள்ளது (1 நாளா. 3:16-17, மத். 1:11,12).

## எக்ரோன் (Ekron)

**(இயற்கையாக்குதல்)**

இது பெலிஸ்தருடைய பிரதான ஐந்து பட்டணங்களிலொன்று. கானான் பிரிக்கப் பட்ட பொழுது இது முதலாவது யூதாவுக்கும், பின்பு தாணுக்கும் கொடுக்கப்பட்டது (யோசுவா. 15:45,46; 19:43).

பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை எக்ரோனுக்கு அனுப்பவே, அவ்வூரார் கூக்குரலிட்டார்கள் (1 சாமு. 5:10). பாகால் சேபூப் எக்ரோனின் தேவன் (2 இரா. 1:2, 3,6). இதுவும் பெலிஸ்தருடைய மற்றப் பட்டணங்களும், தீர்க்கதரிசிகளால் சபிக்கப்பட்டன (ஆமோஸ் 1:8; எரே. 25:20). செப்பனியா. “எக்ரோன் வேரோடே பிடுங்கப்படும்” என்கிறான். (செப். 2:4). சகரியா, தீருவின் அழிவினிமித்தம் எக்ரோனில் பயமுண்டாகும் என்கிறான் (சக. 9:5-7).

## எக்லோன் (Eglon)

**(வட்டமான)**

1. மோவாபியரின் இராஜா. இவன் அம்மோனியரையும், அமலேக்கியரையும் சேர்த்துக் கொண்டு, இஸ்ரவேலரைத் தோற்கடித்து, அவர்களைப் பதினெட்டு வருஷங்களாக ஒடுக்கினான்.

கர்த்தர் ஜனங்களின் கூப்பிடுதலைக் கேட்டு பென்யமீன் கோத்திரத்து ஏகூத் என்பவனை எழுப்பினார். ஏகூத் எக்லோன் என்பவனைக் கொன்றுபோட்டு, மோவாபியரைக் கீழ்ப்படுத்தினான். தேசம் எண்பது வருடம் அமைதலாயிருந்தது *(நியா. 3:12-30).*

*2.* லாகீசுக்கு கிட்ட இருந்த ஒரு பட்டணம். இதன் இராஜா வாகிய தெபீரு அதோனிசேதேக்கோடு சேர்ந்து, கிபியோனியருக்கு விரோதமாய் யுத்தத்துக்குப் போனவேளையில், யோசுவா அவர்களைத் தோற்கடித்து, பட்டணத்தையும் சங்காரம் பண்ணினான் *(யோசுவா. 10:2-23,34-37; 12:12).*

## எசியோன் கேபார் (Ezion Gebar)

### *(வல்லமையுள்ளவனின் முதுகெலும்பு)*

இது சிவந்த சமுத்திரத்தருகேயுள்ள அகபா (Akabah) குடா நாட்டின் வடபக்கத்திலுள்ள ஒரு பட்டணம்.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில் இவ்விடத்தில் பாளயமிறங்கி னார்கள் *(எண். 33:35).*

சாலொமோன் இங்கிருந்த துறையில் கப்பல்களைச் செய்வித்தான் *(1 இரா. 9:26; 2 நாளா. 8:17).*

யோசபாத் செய்வித்த கப்பல்கள் இவ்விடத்தில் உடைந்து போயிற்று *(1 இரா. 22:48; 2 நாளா. 20:36).*

## எசேக்கியா (Hezekiah)

### *(யேகோவா என் பெலன்)*

*1.* ஆகாஸ் இராஜாவின் மகன். யூதாவின் பன்னிரெண்டாம் இராஜா. இருபத்தைந்து வயதில் இராஜாவாகி இருபத்தொன்பது வருடம் அரசாண்டான் *(2 இரா. 18:1,2).*

எசேக்கியா தன் ஆளுகையின் துவக்கத்திலேயே, ஆலயத்தின் கதவுகளைத் திறந்து, பழுது பார்த்து, சுத்திகரித்து, ஜனங்கள் கர்த்தரிடம் திரும்பவும், அவரைச் சேவிக்கவும் உடன்படிக்கை பண்ணுவித்தான் *(2 நாளா. 29:2-21).*

மேலும் எருசலேமில் பஸ்கா பண்டிகை ஆசரிப்புக்காக, யூதா இஸ்ரவேல் ஜனங்களையும் எப்பிராயீம், மனாசே கோத்திரத் தாரையும் அழைத்தான். சாலொமோனின் நாள்களுக்குப் பின்பு இப்படிப்பட்ட ஒரு பண்டிகை நடந்ததில்லை *(2 நாளா. 30:1-26).*

எசேக்கியா அநேக மார்க்க சீர்த்திருத்தங்களைச் செய்தான். மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே செய்த வெண்கல சர்ப்பத்தையும் உடைத்தான்.

கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையில் அவனைப்போல யூதா இராஜாக்களில் ஒருவனும் இருந்ததில்லை (2 இரா. 18:3-5).

எசேக்கியா ஒரு சாலகத்தைக் கட்டி, தண்ணீர் நகரத்துக்குள் வரும்படி செய்தான் (2 இரா. 20:20).

எசேக்கியா ஆசாரியர், லேவியருடைய வகுப்புகளைத் திடப்படுத்தி, அவர்கள் தங்கள் ஊழியத்தைச் செய்து, துதித்து ஸ்தோத்தரிக்கவும் ஒழுங்குபடுத்தினான் (2 நாளா. 31:2).

எசேக்கியா கர்த்தருக்கு முன்பாக நன்மையும் செம்மையுமானதைத் தன் முழு இருதயத்தோடும் செய்து, சித்தி பெற்றான் (2 நாளா. 31:21).

அவன் பெலிஸ்தரைக் காசா மட்டும் முறிய அடித்தான் (2 இரா. 18:8).

அவனுடைய பதினான்காம் வருடத்தில் ஆசீரிய இராஜாவாகிய சனகெரிப் (சர்கோன்) யூதாவிலிருக்கிற பட்டணங்களைப் பிடித்தான். அப்பொழுது அவன் ஆலயத்திலிருந்த பொன் தகடுகளைக் கழற்றி அசீரிய இராஜாவுக்குக் கொடுத்தான். பத்து வருடங்கள் சென்றபின் அசீரிய இராஜா சனகெரிப் தன் சேனாதிபதியாகிய ரப்சாக்கே (உத்தியோகப் பெயர்) என்பவனையும், மற்றவர்களையும் எருசலேமுக்கு அனுப்பினான். ரப்சாக்கே யூத பாஷையில் உரத்த சத்தமாய் ஜனங்களோடு பேசி, எசேக்கியா இராஜாவால் வஞ்சிக்கப்படாமல், அசீரிய இராஜாவுக்குத் தங்களை ஒப்புக்கொடுக்கும்படி சொன்னான் (2 இரா. 18:19-37).

எசேக்கியா இதைக் கேட்டபொழுது, கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளும்படி ஏசாயா தீர்க்கதரிசிக்குச் சொல்லி அனுப்பினான் (2 இரா. 19:1-15).

பின்பு அசீரிய இராஜா தனக்கு அனுப்பின நிருபத்தை வாசித்தப்பின், இராஜா ஆலயத்துக்குப்போய், அந்த நிருபத்தை கர்த்தருக்கு முன் விரித்து, அவரை நோக்கி விண்ணப்பம் செய்தான் (2 இரா. 19:15-19).

அப்பொழுது ஏசாயா எசேக்கியாவுக்குச் சொல்லியனுப்பினதாவது: "அசீரிய இராஜா இந்த நகரத்துக்குள் பிரவேசிப்பதில்லை, அவன் வந்த வழியாய் திரும்பிப் போவான்.'' அன்று இராத்திரியிலேயே தேவதூதன் அசீரியருடைய சேனைகளைச் சங்கரித்ததினால் சனகெரிப் திரும்பி நினிவேக்குப் போனான் (2 இரா. 19:20-37).

அந்நாள்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கேதுவாய் இருக்கையில் கர்த்தரை நோக்கி வேண்டிக் கொண்டான். கர்த்தர்

ஏசாயாவை அனுப்பி, அவனுடைய பிளவை குணமாகச் செய்து அவனுடைய நாள்களோடு பதினைந்து வருடங்கள் கூட்டுவதாகவும் சொன்னார் *(2 இரா. 20:6,7)*.

இது நிறைவேறுமென்பதற்கு எசேக்கியா ஓர் அடையாளம் கேட்டபொழுது ஆகாசுடைய சூரிய கடிகாரத்தில் பத்துப் பாகை பின்னிட்டுப் போகும்படி கர்த்தர் செய்தார் *(2 இரா. 20:8-11)*.

அக்காலத்தில் பாபிலோன் இராஜாவாகிய பெரோதாக்பலா தான் எசேக்கியாவோடு சிநேகிதமாகும்படி நிருபங்களையும், வெகுமானத்தையும் அனுப்பினான். எசேக்கியா அவர்களை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்குத் தன் பொக்கிஷசாலை அனைத்தையும் காட்டினான். அப்பொழுது ஏசாயா அவனிடம் வந்து "உமது வீட்டில் உள்ளதிலும், உமது பிதாக்கள் இந்நாள்வரைக்கும் சேர்த்ததிலும் ஒன்றும் மீதியாக வைக்கப்படாமல் எல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும்" என்றான் *(2 இரா. 20:12-17)*.

பின்பு எசேக்கியா மரித்து பிரதானமான கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டான். ஜனங்கள் அவனைக் கனம் பண்ணினார்கள். அவனுடைய குமாரனாகிய மனாசே இராஜாவானான்.

சாலொமோனின் நீதிமொழிகளைப் பெயர்த்தெழுதும்படி எசேக்கியா மனுஷரை ஏற்படுத்தினான் (நீதி. 25:1). இராஜா தானே எழுதிய பாட்டு ஏசாயா *38:9-20*-ல் குறித்துள்ளது.

எசேக்கியா கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல், அவரில் சார்ந்திருந்தான். அவரும் அவனோடிருந்தார் *(2 இரா. 18:6,7)*. இது அவனைப் பற்றிச் சொல்லக்கூடிய நற்காரியமாகும்.

*2. யூதாவின் இராஜ சந்ததியில் பிறந்த ஒருவன் (1 நாளா. 3:23).*

*3. எஸ்றாவோடு திரும்பி வந்தவர்களிலொருவன் (எஸ்றா. 2:16; நெகே. 7:21).*

## எசேக்கியேல் (Ezekiel)

### *(கர்த்தர் பலப்படுத்துகிறார்)*

இவன் பிரதான தீர்க்கதரிசிகளில் ஒருவன். ஆசாரிய வகுப்பைச் சேர்ந்த பூசி என்பவனின் குமாரன் (எசே. *1:3*). கி.மு. *597*-ல் நெபுகாத்நேச்சார் பாபிலோனுக்குச் சிறையாக்கிக்கொண்டு போனவர்களில் ஒருவன். சிறையிருப்பின் ஐந்தாம் வருடம் முதல் இருபத்திரண்டு வருடங்களாக, சிறைப்பட்டவர்களுக்குக் கேபார் நதியண்டையில் தெலாபீபிலே ஆசாரிய ஊழியஞ் செய்தான் (எசே. *3:15-17*).

யூதாவின் மூப்பர்கள், முக்கியமான எல்லா விஷயங்களிலும் இவனுடைய ஆலோசனையைக் கேட்கிறது வழக்கமாயிருந்தது (எசே. *8:1; 14:1; 20:1*). அவன் எழுதினவைகளிலிருந்து அவனைப்பற்றி நாம் அறியக்கூடியவை. அவன் விவாகம் செய்திருந்தானென்பதும் அவனுக்கு ஒரு வீடு இருந்தது என்பதுமே (எசே. *3:24; 8:1; 24:18*). மற்றத் தீர்க்கதரிசிகளைக்காட்டிலும் இவன் போதக ஊழியமும் செய்ததாகத் தெரிகிறது (எசே. *3:17; 33:3-16*).

எசேக்கியேலுக்குக் கர்த்தருடைய வார்த்தை உண்டாகி "மனு புத்திரனே உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன். நீ என் வார்த்தையைக் கேட்டு துன்மார்க்கனை எச்சரிப்பாயாக. நீ அப்படிச் செய்யாவிட்டால் அவன் இரத்தப் பழியை உன்னிடம் கேட்பேன்" என்று சொல்லப்பட்டது.

எசேக்கியேல் இஸ்ரவேல் மூப்பர்களுக்குச் சொன்னதாவது: அவர்களுக்கு வந்த தண்டனைக்குக் காரணம் அவர்களுடைய துணிகரமான செய்கைகளும், கீழ்ப்படியாமையுமே. இப்போதும் எகிப்தியருடைய உதவியால் அவர்களுக்கு மீட்பு வருமென்று காத்திராமல், தேவன் குறித்த தண்டனை முற்றாய் அவர்களுக்கு வருமென்று ஏற்றுக் கொள்ளவேண்டும். அதாவது எருசலேம் முற்றாய் அழிக்கப்படும். அதோடு எழுபது வருட சிறையிருப்பும் அவர்களுக்கு இருக்கும் என்பதே. மேலும், சம்பவிக்க வேண்டியதே அவர்களுக்குச் சம்பவித்தது என்றான். ஆனாலும் கர்த்தர் அவர்களோடு செய்த சமாதான உடன்படிக்கை நிறைவேறும்.

கர்த்தருடைய ஜனமாகிய இஸ்ரவேலர் தங்கள் தேசத்தில் சுகமாயிருப்பார்கள். அவர்கள் என் ஜனமாயிருப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

## எஸ்கோல் (Eshcol)

*(திராட்சக் குலை)*

1. மம்ரே என்ற எமோரியனின் சகோதரன். கெதர்லா கோமேரின் சேனைகளைத் தோற்கடித்து, லோத்தை மீட்டுக்கொள்ள, இவன் ஆபிரகாமுக்கு உதவியாயிருந்தான் (ஆதி. *14:13,24*).

2. திராட்சப் பழங்களுக்குப் பெயர் பெற்ற, எபிரோனுக்கு அருகில் இருந்த ஒரு பள்ளத்தாக்கு. கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்க போனவர்கள், அத்தேசத்தின் செழுமையைக் காட்டும் பொருட்டாய், இவ்விடத்திலிருந்து ஒரு திராட்சக் குலையை அறுத்துக்கொண்டு போனார்கள் (எண். *13:24; 32:9*; உபா. *1:24*).

## எஸ்றா (Ezra)

*(உதவி)*

செசரியாவின் குமாரனாகிய எஸ்றா. பாபிலோனில் சிறை யிருந்தவன். இவன் ஆரோன் வம்சத்தவன். பெர்சிய இராஜாவாகிய அர்த்தசஷ்டாவின் காலத்தில், இவன் ஒரு தேறின வேதபாரகன். இராஜா எருசலேமுக்குப் போகும்படி யூதருக்கு உத்தரவு கொடுத்து, இவனைத் தலைவனாக ஏற்படுத்தி, தேவாலய பணிமுட்டுகளையும், பொன், வெள்ளியையும் கொடுத்தனுப்பினான்.

அதோடு, நதிக்கு அப்புறத்திலிருந்த இராஜாவின் உத்தியோகஸ்தர் எஸ்றாவுக்கு வேண்டிய பணம் கொடுக்கும்படியும் கடிதம் கொடுத்தனுப்பினான். எருசலேமில் ஆளுகை செய்வதற்கு வேண்டிய அதிகாரமும் எஸ்றாவுக்குக் கொடுக்கப்பட்டது.

எஸ்றா ஆயத்தங்கள் செய்து, ஜனங்களைக் கூட்டிக்கொண்டு, தேவனை ஸ்தோத்தரித்து புறப்பட்டுப் போனான். எருசலேமுக்குப் போக நான்கு மாதங்கள் சென்றன. அங்கே போனவுடன் பலிகள் செலுத்தினான். ஒவ்வொரு கோத்திரத்துக்காக ஒவ்வொரு காளை பலி செலுத்தப்பட்டது. எல்லாரும் தேவனை ஸ்தோத்தரித்தார்கள்.

எஸ்றா அங்கே அநேக சீர்த்திருத்தங்களைச் செய்தான். முக்கியமாக, அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணினவர்கள் அவர்களைத் தள்ளிவிடும்படி செய்தான்.

அதன்பின் எஸ்றா பெர்சியாவுக்குத் திரும்பிப்போய், பல வருடங்களின் பின், நெகேமியாவோடு திரும்பிவந்து, வேறு சீர்த்திருத்தங்களைச் செய்தான் *(எஸ்றா. அதி. 7-9)*.

எஸ்றா ஆசாரியனாயும், வேதபாரகனாயுமிருந்து வேதாகமத்தைச் சேர்த்தெழுதினான்.

தள்ளுபடியாகமத்தில், எஸ்திறாஸ் புத்தகத்தை இவன் அனுமதித்த தாக எண்ணப்படுகிறது.

*2.* செருபாபேலோடு, பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிப்போன ஆசாரிய குடும்பத்துத் தலைவன் *(நெகே. 12:1,33)*.

## எத்தியோப்பியா (Ethiopia)

நைல் நதியின் பள்ளத்தாக்கின் மேற் பக்கமாயுள்ள ஒரு தேசம். எபிரேயர் இதைக் "கூஸ்" என்றும், கிரேக்கர் 'மரேசா' என்றும் அழைத்தார்கள்.

ஏதேன் தோட்டத்துக் கீகோன் ஆறு, எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் என்று சொல்லப்பட்டுள்ளது *(ஆதி. 2:13)*.

துவக்கத்தில் காயீன் சந்ததியார் இங்கே குடியேறினார்கள். கி.மு. 1500-லிருந்து 500 வருடங்களாக எத்தியோப்பியா எகிப்தின் ஆளுகையின் கீழிருந்தது.

ஒன்பதாம் நூற்றாண்டில் எத்தியோப்பியனாகிய சேரா பலஸ்தீனாவுக்கு விரோதமாய் படையெடுத்து மரேசா மட்டும் வந்தான். யூதா இராஜாவாகிய ஆசா கர்த்தரை நோக்கி வேண்டிக் கொண்டபோது, கர்த்தர் அவர்களை முறியடித்ததினால் அவர்கள் ஓடிப்போனார்கள். ஆசா அவர்களுடைய பட்டணங்களைக் கொள்ளையடித்துக்கொண்டு திரும்பினான் *(2 நாளா. 14:9-15).*

எத்தியோப்பிய இராஜா தீராக்கா அசீரியருக்கு விரோதமாக, எசேக்கியா இராஜாவுக்கு உதவியாயிருந்தான் *(2 இரா. 19:9).*

கி.மு. 605-ல் நெபுகாத்நேச்சார் பார்வோன் நேகோவின் இராணுவத்தை முறிய அடித்தபோது, உதவிக்குப்போன எத்தியோப்பியரும் தோற்கடிக்கப்பட்டார்கள் (எரே. 46:9).

கம்பிசீஸ் என்பவன் எகிப்தை ஜெயித்தபோது எத்தியோப்பியாவும் பெர்சிய இராஜ்யத்துக்குக் கீழ்ப்பட்டது *(எஸ்.1:1).* எத்தியோப்பியா வுக்கும், அரேபியாவுக்கும் சம்பந்தம் இருந்ததாகத் தெரிகிறது *(2 நாளா. 21:16).*

அகாஸ்வேரு இந்து தேச முதல் எத்தியோப்பியா தேசம் வரை அரசாண்டான் *(எஸ். 1:1).*

## எத்தியோப்பிய மந்திரி

இவன் எத்தியோப்பியரின் இராஜ ஸ்திரீயாகிய கந்தாகேயின் மந்திரி. ஒருவேளை இவன் ஒரு யூதனாயிருந்திருக்கக்கூடும். அல்லாவிட்டால் அக்காலத்தில் அநேக யூதர் எகிப்தில் குடியேறி யிருந்ததினால், அவர்களிடமிருந்து யூத மார்க்கத்தைப்பற்றி அறிந்தவனாக இருக்கலாம்.

இவன் வேதாகமத்தை ஊக்கமாக வாசித்து பிலிப்புவினுடைய உபதேசத்தை வாஞ்சையுடன் கேட்டு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றதிலிருந்து ஓர் உத்தமனென்று அறியலாம் *(அப். 8:26-40).* பிற்பாடு இவன் அத்தேசத்தில் முதற் பிரசங்கியாயிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

## எத்தியோப்பிய ஸ்திரீ

மோசேயின் முதல் மனைவியாகிய சிப்போராள் மரித்தபின், அவன் எத்தியோப்பிய தேசத்து ஸ்திரீயை விவாகம் பண்ணினதினால், மிரியாமும், ஆரோனும் அவனில் குற்றம் பிடித்தார்கள் *(எண். 12:1).*

மோசே மிகுந்த சாந்தகுணமுள்ளவனானதால் பேசாமலிருந்தான். ஆனால் கர்த்தர் அவர்களுடைய குற்றத்தைக் கண்டித்தார் *(எண். 12:5-13).*

## எத்திரோ (Jethro)

***(மேன்மையானவன்)***

*மீதியான் தேசத்து ஆசாரியன். மோசேயின் மாமன் (யாத். 3:1). இவன் ரெகுவேல் (எண். 10:29) என்றும், ஓபாப் (நியா. 4:11) என்றும் அழைக்கப்படுகிறான்.*

மோசே எகிப்திலிருந்து தப்பி ஓடிப்போய், இவனிடம் சேர்ந்து இவனுடைய ஆடுகளை மேய்த்தான். இவன் தன் குமாரத்தியாகிய சிப்போராளை மோசேக்கு மனைவியாகக் கொடுத்தான் *(யாத். 2:15-21).*

நாற்பது வருடங்களுக்குப்பின், கர்த்தர் மோசேக்கு, முட்செடியிலுண்டான அக்கினி ஜுவாலையில் தரிசனமாகி, எகிப்துக்குப் போய் இஸ்ரவேல் ஜனங்களை மீட்கும்படி சொன்னார் *(யாத். 3:1-10).*

மோசே தன் மாமனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டான் *(யாத். 4:18).* தன் மனைவி, பிள்ளைகளை எத்திரோவிடம் அனுப்பி வைத்தான் *(யாத். 18:2).*

பின்பு மோசே இஸ்ரவேல் ஜனங்களோடு புறப்பட்டு வருகிறதைக் கேள்விப்பட்டு, அவர்களைச் சந்திக்கும்படி எத்திரோ, சிப்போராளையும், பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு ஓரேப் மலைக்குப் போனான் *(யாத். 18:1-6).* மோசே சந்தோஷமாய் அவர்களை ஏற்றுக்கொண்டு, தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் செய்த அற்புதமான நன்மைகளை விவரித்துச் சொன்னான். எத்திரோ இவைகளைக் கேட்டபோது கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லி, பலிகளையும் செலுத்தினான் *(யாத். 18:7-12).*

மோசே ஜனங்களை நியாயம் விசாரிக்கிறதில் முழு நேரத்தையும் செலவழிக்கிறதை எத்திரோ கவனித்து, அவனுக்கு ஆலோசனையாக ஜனங்களுக்குள் திறமையுள்ள ஆள்களைத் தெரிந்து, சிறிய காரியங்களை நியாயம் விசாரிக்க ஏற்படுத்தும்படி சொன்னதை மோசே செய்தான் *(யாத். 18:13-27).*

பின்பு எத்திரோ தன் தேசத்துக்குத் திரும்பிப் போனான். அவனுடைய மகன் ஓபாப் மோசேயோடு தங்கியிருந்தான் *(எண். 10:29).*

## எபிரெயன் (Hebrew)

எபிரெயன் என்ற பெயர் ஏபேரின் சந்ததியானாகிய ஆபிரகாமுக்கு முதல் கொடுக்கப்பட்டது (ஆதி. 14:13). ஏபேர் என்பதின் அர்த்தம் "தூர தேசங்கள்". ஐபிராத்து நதியின் கீழ்ப் பக்கத்திலிருந்து ஆபிரகாமும் அவன் சந்ததியாரும் நதியைக் கடந்து மேற்பக்கம் போனதினால் அங்கே இருந்தவர்கள் இவர்களை ஏபேரியர் என்று அழைத்தார்களெனச் சிலர் எண்ணுகிறார்கள். ஆகிலும் கோத்திரத் தலைவனாகிய ஏபேரிலிருந்து இந்தப் பெயர் வந்ததென்பது சரியாயிருக்கலாம்.

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் என்று பலஸ்தீனாவிலிருந்த யூதருக்கே சொல்லப்பட்டது. அவர்கள் எபிரெய பாஷையைப் பேசினார்கள். பவுல் "தான் எபிரெயரில் பிறந்த எபிரெயன்" என்றதினால், அவன் தாய், தகப்பன் இருவரும் எபிரெயர் எனத் தெரிகிறது. (பிலி. 3:5).

## எபிரோன் (Hebron)

***(உடன்படிக்கை)***

யூதேயா தேசத்தில், மலைத் தேசத்திலுள்ள ஒரு பட்டணம். எருசலேமிலிருந்தும், பெயர்செபாவிலிருந்தும் இருபது மைல் தூரத்திலுள்ளது.

எகிப்திலுள்ள சோவான் பட்டணத்துக்கு ஏழு வருடத்திற்கு முன்னே கட்டப்பட்டது (எண். 13:22). பலஸ்தீனா தேசத்திலுள்ள பட்டணங்களெல்லாவற்றிலும் பார்க்க இது முந்தினது. இதன் முதற் பேர், ஏனாக்கியர் இருந்த "கீரியாத் அர்ப்" (யோசுவா. 14:15; நியா. 1:10). மம்ரே இதற்குச் சேர்ந்தது (ஆதி. 13:18). ஆபிரகாமும், ஈசாக்கும் இங்கே தங்கியிருந்தார்கள் (ஆதி. 35:27). ஆபிரகாம் தன் மனைவி சாராளை அடக்கம் பண்ணுவதற்கு கிரயத்துக்கு வாங்கின மக்பேலா குகையும் இங்கேயுள்ளது (ஆதி. 23:19). தற்சமயத்தில் பத்தாயிரம் ஜனங்கள் இங்கே வாசமாயிருக்கிறார்கள்.

யோசுவா எபிரோனைக் காலேபுக்குச் சுதந்திரமாகக் கொடுத்தான் (யோசுவா. 14:13). அங்கேயிருந்த ஏனாக்கியரை காலேப் துரத்தி விட்டான் (யோசுவா. 15:13,14). இங்கே ஓர் அடைக்கலப்பட்டணம் ஏற்படுத்தப்பட்டது (யோசுவா. 20:7).

எபிரோனில் தாவீதுக்குப் பிள்ளைகள் பிறந்தார்கள் (2 சாமு. 3:2). அப்னேர் இங்கே கொல்லப்பட்டான் (2 சாமு. 4:1). இஸ்போசேத்தின் தலையை எப்ரோனில் அடக்கம் பண்ணினார்கள் (2 சாமு. 4:12).

தாவீது எப்ரோனில் யூதாவின் மேல் ஏழு வருடம் ஆறு மாதம் இராஜ்யபாரம் பண்ணினான் (2 சாமு. 5:5). அப்சலோம் எப்ரோனில் இராஜாவானான் (2 சாமு. 15:10). ரெகொபெயாம் இதைக் கட்டினான். (2 நாளா. 11:10).

2. லேவியின் புத்திரனாகிய கோகாத்தின் மூன்றாம் மகன் (யாத். 6:18; எண். 3:19; 1 நாளா. 6:2; 23:12).

3. மெரேசாவின் குமாரன் (1 நாளா 2:42).

## எபூசு (Jebus)

எபூசியரிடமிருந்துத் தாவீது இந்தப் பட்டணத்தைக் கைவசப் படுத்தினான். எருசலேமும் இந்தப் பெயரினால் அழைக்கப்பட்டது (நியா. 19:10,11; 1 நாளா. 11:4).

## எபூசியர் (Jebusites)

இஸ்ரவேலர் கானானுக்குப் போன நாள்களில் இந்த ஜாதியார் மலைத்தேசத்தில் வாசமாயிருந்தார்கள் (எண். 13:29). இவர்களை எருசலேமிலிருந்து துரத்திவிட யோசுவாவுக்கு கூடாமற்போயிற்று (யோசுவா 15:63; நியா. 1:21). இந்தப் பகுதி பென்யமீன் கோத்திரத்திற்குக் கொடுக்கப்பட்டது (யோசுவா. 18:28). இதிலிருந்த சீயோன் கோட்டையைத் தாவீது கைப்பற்றினபின், அதற்குத் தாவீதின் நகரமென பெயர் வந்தது (2 சாமு. 5:7). இந்தக் கோத்திரத்து ஜனத்தொகை குறைவாயிருந்ததினிமித்தமே, இஸ்ரவேலருக்கு விரோதமாயிருந்த ஜாதிகளின் பெயர் அட்டவணையில் இவர்களுடைய பேர் கடைசியாய்க் குறிக்கப்பட்டுள்ளது (யாத். 3:8; 13:5; 23:23; உபா. 7:1; 20:17).

வேதாகமத்தில் இரண்டு எபூசியரைப்பற்றி குறிப்பாய் சொல்லப் பட்டுள்ளது. (1) எருசலேம் இராஜாவாகிய அதோனிசேதேக். இவன் வேறே இராஜாக்களையும் கூட்டிக்கொண்டு கிபியோனியருக்கு விரோதமாய்ப் போனபோது யோசுவா இவர்களைத் தோற்கடித்துக் கொன்று போட்டான் (யோசுவா. 10:1,23). (2) எபூசியனாகிய அர்வனா. தாவீது இராஜா இவனிடம் ஒரு களத்தைக் கிரயத்துக்கு வாங்கி, பலிபீடங்கட்டி பலி செலுத்தினான் (2 சாமு. 24:18). பின்பு சாலொமோன் இவ்விடத்திலேயே ஆலயத்தைக் கட்டினான் (2 நாளா. 3:1).

தேசம் பிரிக்கப்பட்டபின், பென்யமீன் புத்திரர் எருசலேமிலே இருந்த எபூசியரைத் துரத்திவிடவில்லை. அவர்களும் இவர்களோடுகூட எருசலேமில் குடியிருந்தார்கள் (நியா. 1:21).

## எபெத்மெலேக் (Ebe Melech)

*(இராஜாவின் ஊழியன்)*

சிதேக்கியா இராஜாவின் அரண்மனையிலிருந்த எத்தியோப்பிய பிரதானி. எரேமியாவைத் துரவில் போட்டதை இவன் கேள்விப்பட்டு, இராஜாவிடம் போய் உத்தரவு பெற்றுக்கொண்டு, அவனைத் துரவி லிருந்துத் தூக்கிவிட்டான் (எரே. 38:7-13).

பாபிலோனியர் எருசலேமை நிச்சயமாகவே கைப்பற்றுவார்கள். ஆனால் கர்த்தர் உன்னை விடுவிப்பார் என்று எரேமியா எபெத்மெலேக்குச் சொன்னான். (எரே. 39:15-18).

## எபெனேசர் (Eben-ezer)

*(உதவியின் கல்)*

கர்த்தர் இஸ்ரவேலரைப் பெலிஸ்தரின் கையிலிருந்து விடுவித்ததை நினைவு கூறுவதற்காக சாமுவேல் மிஸ்பாவுக்கும், சேணுக்கும் நடுவாக. நிறுத்தின கல்லின்பெயர் இது. "இம்மட்டும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்" என்பது அர்த்தம் (1 சாமு. 7:10-12). இதற்கு முன் இவ்விடத்திலேயே பெலிஸ்தர் இஸ்ரவேலரைத் தோற்கடித்து, உடன்படிக்கைப் பெட்டியையும் பிடித்துக்கொண்டார்கள் (1 சாமு. 4:1-11).

## எபேசு (Ephesus)

ஆசியாவில் ரோமருடைய ஆளுகைக்குக் கீழிருந்த பகுதியின் தலைப்பட்டணம். இங்கே பேர்பெற்ற துறைமுகமிருந்தது. அநேக வீதிகளும், பாதைகளும் பட்டணத்துக்கூடாய் போயின. ரோமாபுரியி லிருந்து கிழக்குத் தேசங்களுக்குப் போகிற ஒரு பெரிய பாதையு மிருந்தது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக பெயர்பெற்ற 'தியானாளின் கோயில்' இங்கே இருந்தது. அந்தக் கோயிலைப்போல சிறிய கோயில்களைத் தொழிலாளர் வெள்ளியினால் செய்து விற்பனை செய்தார்கள் (அப். 19:24-32).

பவுல் இங்கே இரண்டு வருடங்களாகத் தங்கியிருந்து, ஜெப ஆலயங்களிலும், திறன்னு என்பவனின் வித்யாசாலையிலும், வீடுகளிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைக் குணப்படுத்தினான் (அப். 19:8-10; 20:17, 31). மாய வித்தைக்காரர் அநேகர் தங்கள் புத்தகங்களைக் கொண்டு வந்து சுட்டெரித்தார்கள் (அப். 19:16). யோவானின் ஞானஸ்நானத்தைப்பெற்ற பன்னிரெண்டு சீஷருக்குப் பவுல் ஞானஸ்நானம் கொடுத்து, பரிசுத்தாவி பெறும்படி செய்தான் (அப். 19:1-7).

அப்பொல்லோ, ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்பவர்களும் இங்கே சுவிசேஷ ஊழியஞ் செய்தார்கள் (அப். 18:24-28).

வெளிப்படுத்தின விசேஷத்திலும் இங்கே இருந்த சபையைப் பற்றிக் குறித்துள்ளது (வெளி. 1:11; 2:1-7).

## எப்சிபா (Hephzi-Bah)

ஏசாயா சீயோனைக் குறித்து சொன்ன அடையாளப் பெயர் "கர்த்தர் உன்மேல் பிரியமாயிருக்கிறார்" என்பது அர்த்தம் (ஏசாயா. 62:4).

## எப்சிபாள் (Hephzi-Bah)

எசேக்கியாவின் மனைவி. மனாசேயின் தாய் (2 இரா. 21:1).

## எப்பத்தா (Ephphatha)

இயேசு ஒரு செவிடனின் செவியைத் திறக்கப் பண்ணின வேளையில் சொன்ன வார்த்தை. இதற்கு 'திறக்கப்படுவாயாக' என்பது அர்த்தம் (மாற்கு. 7:34).

## எப்பிராத்தா (Ephratha)

*(செழிப்பு)*

பெத்லகேமின் பூர்வீகப் பெயர் (ஆதி. 35:19; 48:7). பெத்லகேம், எப்பிராத்தா என்னும் இடம்போல இவ்விரண்டு பெயர்களும் வழங்கினது (ரூத் 4:11; மீகா 5:2). சங். 132:6-ல் எப்பிராத்தா என்பது பெத்லகேமைக் குறிக்கும்.

2. யூதா கோத்திரத்து காலேபின் இரண்டாம் மனைவி. ஏர் என்பவனின் தாய் (1 நாளா. 2:19, 50; 4:4).

## எப்பிராயீம் (Ephraim)

*(செழிப்பான)*

யோசேப்பு, ஆஸ்நாத்து என்பவர்களின் இரண்டாம் மகன். யோசேப்பு, தான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் தன்னைப் பலுகப் பண்ணினார் என்று சொல்லி இவனுக்கு எப்பிராயீம் என்று பேரிட்டான் (ஆதி. 41:50-52).

யாக்கோபு, யோசேப்பின் இரண்டு பிள்ளைகளையும் ஆசீர்வதித்த வேளையில், இளைய மகனாகிய இவனுக்கு தலைப்பிள்ளையின் ஆசீர்வாதத்தைக் கொடுத்தான் (ஆதி. 48:14, 17-20). இவன் எப்பிராயீம் கோத்திரத்து முற்பிதா.

## எப்பிராயீம்
## *(கோத்திரம்)*

கானான் தேசத்துக்குப் போனபின்பும், எப்பிராயீம், மனாசே, பென்யமீன் என்னும் மூன்று கோத்திரத்தார்களும் ஒற்றுமையாயிருந்தார்கள்.

வனாந்தரப் பிரயாணத்தில் இந்தக் கோத்திரத்தார் ஆசரிப்புக் கூடாரத்தின் மேற்பக்கத்தில் பாளயமிறங்கியிருந்தார்கள் *(எண். 2:18-24)*.

எப்பிராயீம் கோத்திரத்துக்கும், மனாசேயின் பாதி கோத்திரத்துக்கும் கொடுத்த தேசங்கள் அடுத்தடுத்து இருந்தன. அவைகள் இயேசுவின் நாள்களில் சமாரியா எனப்பட்டது. வடபக்கத்துக் கோத்திரங்களில், எப்பிராயீம் அதிக பலமுள்ளதாயிருந்தது. ஆகவே யூதா கோத்திரத்து முதன்மைக்கு விரோதமாயிருந்தார்கள். கிதியோன் மீதியானியருக்கு விரோதமாய்ப் போனபோது தங்களை அழைக்கவில்லையென்று அவனோடு வாக்குவாதம் பண்ணினார்கள். *(நியா. 8:1-3)*.

யெப்தாவும் அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம் செய்தபோது, தங்களை அழைக்கவில்லையென்று எப்பிராயீமர் குற்றம் பிடித்ததினாலே, இவர்களுக்கிடையில் யுத்தம் உண்டாயிற்று *(நியா. 12:1-6)*.

பிற்காலத்திலும் எப்பிராயீமர், தாவீதைப் பார்க்கிலும் சவுலைச் சார்ந்தது இந்தக் கோத்திரப் பிரிவினையே காரணமாயிருந்திருக்கலாம்.

எப்பிராயீமரின் தேசத்துக்குள் பிரதான ஸ்தலங்களிருந்தன. தேவனுடைய பெட்டி இருந்த சீலோ, யாக்கோபு தரிசனம் கண்ட பெத்தேல், ஏபால் கெரிசீம் மலைகள், வட இராஜ்யத்தின் தலைநகராகிய சமாரியா.

தீர்க்கதரிசன புஸ்தகங்களில் இஸ்ரவேல் இராஜ்யத்துக்கு எப்பிராயீம் என்று சொல்லப்படுகிறது. யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தான்.

## எப்பிராயீம் மலை

இது எப்பிராயீம் தேசத்துக்குள்ளிருந்த மலைநாடு. சாமுவேலின் பெற்றோர் இந்தத் தேசத்தார் *(1 சாமு. 1:1)*.

## எப்பிராயீம் காடு

இங்கே அப்சலோமோடு நடந்த யுத்தத்தில் அவன் தோற்கடிக்கப்பட்டு, கொல்லப்பட்டான். இந்த இடம் மகனேயத்துக்கு அருகில் யோர்தானுக்குக் கிழக்கேயுள்ளது *(2 சாமு. 18:6-9)*.

## எப்பிராயீம் ஊர்

யூதர் இயேசுவைக் கொலை செய்ய ஆலோசனைபண்ணின போது, அவர் வனாந்தரத்துக்குச் சமீபமான எப்பிராயீம் ஊருக்குப் போனார் *(யோவான். 11:54).*

## எப்பிராயீம் வாசல்

இது எருசலேமின் அலங்கத்திலுள்ளது. இஸ்ரவேல் இராஜா வாகிய யோவாஸ் இந்த வாசல் தொடங்கி அலங்கத்தின் ஒரு பகுதியை இடித்துப்போட்டான் *(2 இரா. 14:18).*

## எமோரியன்(ர்) (Amorite)

கி.மு. இரண்டாயிரம் வருடத்துக்கு முன்னிருந்த ஒரு பலத்த ஜாதி. இவர்கள் அரேபியா வனாந்திரத்திலிருந்து புறப்பட்டு ஒரு பகுதியார் பாபிலோனியாவுக்குப் போய், குடியேறி இராஜாங்கத்தை ஏற்படுத்தி அரசாண்டார்கள். இருநூறு வருடங்களாய் ஒரு குலத்தரசர் ஆளுகை செய்தார்கள். அவர்களில் ஹமுறாபி (Hammurabi) என்பவன் பேர் பெற்றவனாயிருந்தான். மற்றொரு பகுதியார் சீரியா, பலஸ்தீனா நாடுகளுக்குப் போய்க் குடியேறினார்கள்.

எமோரியரின் முற்பிதா கானான் *(ஆதி. 10:16).* ஆபிரகாம் மம்ரே என்னும், எமோரியனின் சமபூமியில் குடியிருந்தான் *(ஆதி. 14:13).* கானானிலிருந்த எமோரியருடைய தேசத்தையும் இஸ்ரவேலருக்குக் கொடுப்பேனென்று தேவன் மோசேக்குச் சொன்னார் *(யாத். 3:8).* இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில் எமோரியரின் இராஜாவாகிய சீகோனிடம் அவனுடைய தேசத்தின் வழியாய்ப் போக உத்தரவு கேட்டபோது, அவன் அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினான். இஸ்ரவேலர் அவனைக் கொன்று, அவனுடைய தேசத்தைக் கட்டிக்கொண்டார்கள் *(எண். 21:23-25; உபா: 2:24-37).*

ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரம் ஆகிய இவர்களுக்கு மோசே எமோரியரின் தேசத்தையும், பட்டணங்களையும் கொடுத்தான் *(எண். 32:33).* இஸ்ரவேலர் இப்படியே எமோரியரின் தேசத்தில் குடியிருந்தார்கள் *(எண். 21:31).*

எமோரியரின் ஐந்து இராஜாக்களும், கிபியோனியருக்கு விரோதமாகப் போன வேளையில், யோசுவா அவர்களோடு யுத்தம் பண்ணி அவர்கள் ஓடிப்போகும்போது, கர்த்தர் வானத்திலிருந்து பெரிய கற்களை விழப் பண்ணினார். அவர்கள் செத்தார்கள் *(யோசுவா. 10:1-11).*

எமோரியர் இஸ்ரவேலரால் துரத்தப்படவில்லை. தாண் கோத்திரத்தாரை எமோரியர் எதிர்த்தபோதிலும், யோசேப்பின் குடும்பத்தாருக்குப் பகுதிக் கட்டினார்கள் *(நியா. 1:35).*

சாலொமோன் எமோரியரையும் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்தினான் *(1 இரா. 9:21).*

சீகோனின் மரணத்தோடு எமோரியரின் இராஜ்யம் அற்றுப் போயிற்று. அசீரியர் எழும்பினபோது அவர்களுடைய பெயரும் மங்கிற்று.

## எம்மாவு (Emmaus)

எருசலேமிலிருந்து ஏழு மைல் தூரத்திலுள்ள ஓர் ஊர். இயேசு உயிர்த்தெழுந்த பின் இந்த ஊருக்கு அருகில் இரண்டு சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்தினார் *(லூக்கா. 24:13).*

## எரிகோ (Jericho)

***(வாசனையான)***

சாக்கடலுக்கு வடக்கே, யோர்தான் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு பட்டணம். கடல் மட்டத்திலிருந்து 800 அடி கீழேயிருந்தது. இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்தபின் கைப்பற்றின முதலாவது பட்டணம் *(யோசுவா. 6:20).* ஏழு ஆசாரியர் தேவனுடைய பெட்டிக்கு முன்பாக ஏழு எக்காளங்களைப் பிடித்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு தரமாக ஆறு நாள் பட்டணத்தைச் சுற்றி வந்தார்கள். ஏழாம் நாள் ஏழுதரம் பட்டணத்தைச் சுற்றிவந்து, ஏழாம்தரம் ஆசாரியர் எக்காளங்களை ஊதி, கொம்புகளினால் நெடுந்தொனி இடும்போது ஜனங்கள் எல்லாரும் ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது பட்டணத்தின் அலங்கம் இடிந்து விழுந்தது. ஜனங்கள் பட்டணத்தைப் பிடித்து சகலத்தையும் சங்காரம் பண்ணினார்கள் *(யோசுவா. 6:1-21).* வேவு பார்க்கப்போன இரண்டு இஸ்ரவேலரைப் பாதுகாத்த ராகாபும் அவள் வீட்டாரும் தப்புவிக்கப்பட்டார்கள் *(யோசுவா. 6:25).* அவ்வேளையில் எரிகோ பட்டணத்தைத் திரும்பக் கட்டும்படி எழும்பும் மனுஷன்மேல் யோசுவா சாபம் கூறினான் *(யோசுவா. 6:26).* அதன்படி பெத்தேல் ஊரானாகிய ஈயேல் எரிகோவைக் கட்டினபோது, தன் மூத்த குமாரனாகிய அபிராமையும், இளைய குமாரனாகிய செகூப்பையும் சாகக் கொடுத்தான் *(1 இரா. 16:34).*

எலியாவின் நாள்களில் தீர்க்கதரிசிகளின் பாடசாலை எரிகோவிலிருந்தது *(2 இரா. 2:5; 4:38).* சிதேக்கியா ஓடிப்போகையில் எரிகோவின் சமபூமியில் அவனைப் பிடித்தார்கள். *(2 இரா. 25:5; 1 நாளா. 28:5; எரே. 39:5).*

சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்தவர்கள் எரிகோவில் குடியேறினார்கள் *(எஸ்றா. 2:34; நெகே. 7:36).*

புதிய ஏற்பாடு காலத்து எரிகோ மகா ஏரோது என்பவனால் கட்டப்பட்டது. இயேசு எரிகோவிற்குக் கிட்ட பர்திமேயுவுக்கும், வேறு குருடருக்கும் சுகம் கொடுத்தார் *(மத். 20:29; மாற்கு 10:46; லூக்கா. 18:35).* இயேசு எரிகோவின் வழியாய் போகையில் சகேயுவைச் சந்தித்தார் *(லூக்கா. 19:1).*

## எருசலேம் (Jerusalem)

***(அமரிக்கை)***

'சாலேம்' என்று தொடக்கத்தில் சொல்லப்பட்டது.

பரிசுத்த நகரம் என்று ஏசாயா *52:1*-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றிய நாலாயிர வருட வரலாறு உண்டு. எகிப்தின் பார்வோன் இராஜாக்களுடைய பிரபந்தங்களில் இதைப்பற்றிக் குறித்துள்ளது. அக்காலத்தில் இது 'உருசலேம்' எனப்பட்டது.

கி.மு. பதினான்காம் நூற்றாண்டில் எருசலேமை அரசாண்ட ஏவிய இராஜாக்களின் ஞாபக எழுத்துக்களும் காணப்படுகின்றன.

ஆபிரகாமைச் சந்திக்கப்போன மெல்கிசேதேக்கு 'சாலேமின் இராஜா' எனப்பட்டார் *(ஆதி. 14:18; சங். 76:2).* இதிலிருந்து அக்காலத்திலேயே இது பயபக்திக்குரிய இடமாக இருந்ததாகத் தெரிகிறது.

யோசுவா கானானைக் கைப்பற்றின காலத்தில், எருசலேம் இராஜாவாயிருந்த அதோனிசேதேக்கை கொலை செய்தான் *(யோசுவா. 10:1-27).* பின்னர் நடந்த யுத்தத்தில் இஸ்ரவேலர் எருசலேமைப் பிடித்து, அக்கினிக்கு இரையாக்கினார்கள் *(கி.மு. 1440).* ஆகிலும் எபூசியர் எருசலேமை விட்டுப் போகவில்லை *(நியா. 1:8-21).*

தாவீது எபிரோனில் ஏழரை வருஷம் இராஜாவாயிருந்த பின் எருசலேமைத் தலைநகராக்கும்படி அதைக் கைப்பற்றினான் *(கி.மு. 1040, 2 சாமு. 5:6-9).* எபூசியரின் சீயோன் பட்டணம், தாவீதின் நகரமாயிற்று. தாவீது தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டுவந்து வைத்தான் *(2 சாமு. அதி.6).* பின்பு தேவாலயம் கட்டப் பட்டமலைப் பகுதி 'மேல் பட்டணம்' என்றும் தாவீதின் நகரம் கீழ்ப் பட்டணம் என்றும் அழைக்கப்பட்டது.

சாலொமோன் இராஜாவானபோது அங்கே மதில்களைக் கட்டி அநேக சீர்த்திருத்தங்கள் செய்தான். அவனுடைய அருஞ் செயல், ஒரு விசேஷ தேவாலயம் கட்டி முடித்ததே *(கி.மு. 1004).*

அவன் மரித்தபின் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்தபோது (கி.மு. 933) எருசலேம் யூதா தேசத்தின் தலை நகரமாயிற்று. ரெகொபெயாம் இராஜாவாகி ஐந்து வருஷத்துக்குள், எகிப்திய சேனைகள் தேவாலயத்தையும், இராஜ மாளிகையையும் கொள்ளையடித்தன (1 இரா. 14:25-31).

யோராம் இராஜாவாயிருந்த நாள்களில் பெலிஸ்தரும், அரபியரும் அரண்மனையைக் கொள்ளையடித்துக்கொண்டு போனார்கள் (2 நாளா. 21:16,17-கி.மு. 851).

அமத்சியா இராஜாவாயிருந்தபோது, இஸ்ரவேலின் இராஜா யோவாஸ் அலங்கத்தின் ஒரு பகுதியை இடித்து, ஆலயத்திலிருந்த பொக்கிஷங்களையும் எடுத்துக்கொண்டு போனான் (2 நாளா. 25:21-24-கி.மு. 836). உசியா இராஜா இடிக்கப்பட்ட அலங்கத்தைத் திரும்பக் கட்டினான் (கி.மு. 789-772).

யூதாவின் இராஜாவாகிய எசேக்கியா ஆலயத்தின் கதவுகளிலிருந்த பொன் தகடுகளைக் கழற்றி, அசீரியா இராஜாவுக்குக் கொடுத்தான் (2 இரா. 18:16). கி.மு. 586-ல் பாபிலோன் இராஜாவாகிய நெபுகாத் நேச்சார், எருசலேமைப் பிடித்து, பட்டணத்தையும் ஆலயத்தையும் அழித்தான்.

எருசலேம் பெர்சியாவின் ஆளுகைக்குள்ளானபோது கோரேஸ் இராஜாவின் கட்டளைப்படி சிறைப்பட்டுப் போயிருந்த யூதர் திரும்பி தங்கள் தேசத்துக்குப் போய் ஆலயத்தைக் கட்டினார்கள் (எஸ்றா. 1:3-கி.மு. 538).

பின்பு நெகேமியா நகரத்தின் அலங்கத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்தான் (நெகே. 12 அதி. கி.மு. 465-425).

மகா அலெக்சந்தர், பெர்சியாவைத் தோற்கடித்து, அவர்களுடைய இராஜ்யத்தைத் தன் வசமாக்கினபோது, எருசலேம் அதனுடைய ஆளுகைக்குள்ளாயிற்று (கி.மு. 332).

அவன் மரித்தபோது அவனுடைய சேனாதிபதிகளிலொருவன், தொலொமேயு (Ptolomais) எருசலேமைப் பிடித்துத் தன் இராஜ்யத்துக்குள்ளாக்கினான் (கி.மு. 320).

கி.மு. 198-ல் எருசலேம் சீரிய இராஜாவாகிய மூன்றாம் அந்தியோகு என்பவனால் கைப்பற்றப்பட்டது. முப்பது வருடங்களின் பின் நான்காம் அந்தியோகு எப்பிபேனெஸ் (Epiphanes) எருசலேமின் அலங்கத்தை இடித்து ஆலயத்தைக் கொள்ளையடித்து அதைத் தீட்டுப்படுத்தி ஒரு சீரிய பட்டாளத்தையும் வைத்தான் (கி.மு. 168).

மக்கபெய யூதாஸ் என்பவன் கலகம்பண்ணி (கி.மு. 165) எருசலேமைக் கைப்பற்றி தேவாலயத்தைப் பிரதிஷ்டை பண்ணினான். அவனுக்குப்பின் அநேக வருஷங்களாக எருசலேம் சுயாதீனம் பெற்றிருந்தது (165-135).

கி.மு. 63-ல் எபிரெயருக்குள்ளேயே பிரிவினை உண்டாகி ஒருவரோடொருவர் சண்டை பண்ணினதினிமித்தம், ரோமர் படை யெடுத்துவந்து, சமாதானப்படுத்தி, எபிரெயரைத் திறை கொடுக்கும் படி செய்தார்கள். அப்பொழுது ரோமருக்கு உதவியாயிருந்த அந்திப்பேற்றர் என்பவனுக்கு ரோம தேசாதிபத்தியம் கொடுத்து, அவனை எருசலேமில் அதிகாரியாக வைத்தார்கள் (கி.மு. 40).

கி.மு. 40-ல் அவன் மரித்தபோது, அவனுடைய மகன் மகா ஏரோது, யூதேயாவுக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டு, பின்பு இராஜாவாக்கப் பட்டான். இவன் எருசலேமில் விசேட சீர்த்திருத்தங்கள் செய்து, தேவாலயத்தையும், திரும்பக் கட்ட தொடங்கினான். நாற்பத்தாறு வருடங்களின் பின்னரே அந்த வேலை முடிந்தது (யோவான். 2:20).

ஏரோது எருசலேமை அலங்கரித்து மாட மாளிகைகளையும், கோட்டை கோபுரங்களையும் கட்டினான். ரோம அரசாங்க கழுகுக் கொடியைப் பொன்னால் செய்து தேவாலய வாசலில் நிறுத்தினதி னிமித்தம், யூதர் கலகம் பண்ணினார்கள். கி.மு. 4-ல் ஏரோது மரித்தான்.

நமது ஆண்டவரும் அந்நாள்களில் பிறந்தார். ஏரோது அர்கெலாயு கி.மு.4 முதல் கி.பி. 6 வரை தேசாதிபதியாயிருந்தான். அக்காலத்தில் ஒவ்வொரு பஸ்கா பண்டிகை வேளையிலும் கலகங்கள் உண்டாகி, அநேக யூதர் கொல்லப்பட்டார்கள்.

பொந்தியு பிலாத்து (கி.பி. 26-37) தேசாதிபதியாயிருந்த காலத்தில் இயேசு சிலுவையிலறையுண்டு கொல்லப்பட்டார்.

கி.பி. 66-ல் யூதர், வெஸ்பேசியனின் நாள்களில் ரோம அரசாட்சிக்கு விரோதமாக எழும்பினதினிமித்தம், ரோம பட்டாளங்கள் வந்து எருசலேமை முற்றுகையிட்டுக் கைப்பற்றின. பின்பு கி.பி. 70-ல் தீத்து என்னும் சேனாதிபதி எருசலேமை முற்றாய்ச் சுட்டெரித்து அழித்தான். அதன்பின் 60 வருடம் அமைதலிருந்தது.

கி.பி. 132-ல் யூதருடைய கடைசிக் கலகம், பார்கொச்சா (Barkocha) என்பவனால் ஏற்பட்டது. ஆதிரியன் (Hadrian) என்னும் ரோம இராயன் அதைக் கீழ்ப்படுத்தினபின் தேவாலயமிருந்த இடத்தில் யூப்பிற்றருக்கு ஒரு கோயிலைக் கட்டினதோடு, யூதரெல்லாரையும் துரத்திவிட்டான். பின்பு ஆதிரியன் ஒரு கோயிலைக் கட்டி, தன்னுடைய சொரூபத்தை அதற்குள் நிறுத்தினான்.

கி.பி. 33-ல் கான்ஸ்டன்டைன் (Constantine) இராயனாக வந்து, கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவிக்கொண்டு, எருசலேமில் இயேசு அடக்கம்பண்ணப்பட்ட இடத்தில் ஒரு கோயிலைக் கட்டுவித்தான். யூதரும் அநேக கட்டுமானங்களை எழுப்பினார்கள்.

ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளாக இப்படி நடந்தபின் கி.பி. 614-ல் பெர்சியர் மறுபடியும் யூதரைத் துன்புறுத்தினார்கள். பரிசுத்த கட்டடங்களையும் அழித்தார்கள்.

கி.பி. 637-ல் காலிப் ஓமார் என்பவன் முகமதியரோடு வந்து, எருசலேமைக் கைப்பற்றினான். கி.பி. 691-ல் அப்துல்மலிக் என்பவன் தேவாலயம் இருந்த இடத்திலேயே ஒரு பள்ளிவாசலைக் கட்டி அதற்கு "ஓமார் பள்ளி" என்று பெயரிட்டான். இப்போதும் அது இருக்கிறது. அவர்கள் கிறிஸ்தவர்களையும், யூதர்களையும் தயவோடு நடத்தினார்கள்.

கி.பி. 1099-ல் சிலுவை வீரர்கள் (Crusaders) எருசலேமைக் கைப்பற்றி 88 வருடம் ஆளுகை செய்தார்கள். அவர்கள் அநேக கோயில்களை எழுப்பி வேறு சீர்த்திருத்தங்களையும் செய்தார்கள்.

கி.பி. 1192-ல் எகிப்தியனாகிய சலதீன் (Saladin) எருசலேமைக் கைப்பற்றினான்.

கி.பி. 1229-ல் ஜெர்மனி தேசத்து பிரட்ரிக் (Fredrick of Germany) சமாதான உடன்படிக்கை செய்து எருசலேமில் கோயில் கட்டினான்.

கி.பி. 1517-ல் துருக்கர் (Ottoman Trucks) எருசலேமைத் தங்கள் வசமாக்கி அநேக சீர்த்திருத்தங்கள் செய்தார்கள். சுலைமான் (Sulaiman) என்பவன் மதில்களைக் கட்டி, பட்டணத்தைச் சீர்ப்படுத்தி னான். இப்பொழுது இருக்கும் மதில் அவனால் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது.

எருசலேம் கி.பி. 1517 தொடங்கி துருக்கியருடைய ஆளுகைக்குக் கீழிருக்கும்போது கி.பி. 1914-ல் முதலாம் உலக மகா யுத்தம் தொடங்கிற்று.

கி.பி. 1917ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1-ஆம் தேதி பிரித்தானிய சேனாதிபதி அலென்பி (Allenby) என்பவன் எருசலேமைக் கைப்பற்றினான். யுத்தம் முடிந்தபின் உலக ஐக்கிய சங்கம் (League of Nations) எருசலேமைப் பிரித்தானியரின் ஏகாதிபத்தியத்திற்குள் வைத்தது. அதன்பின் யூதர் பல தேசங்களிலுமிருந்து வந்து, அங்கே குடியேறினார்கள்.

கி.பி. 1948-ல் யூதருக்கும், அரபியருக்குமிடையில் தேசம் பிரிக்கப்பட்டபோது பழைய நகரம் முழுவதும் யோர்தான்

இராஜ்யத்தைச் சேர்ந்தது. சீயோன் மலையும், வேறு சில இடங்களும் இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டன. யூதர் சுயாதீனம் பெற்றுத் தங்கள் அரசாட்சியைத் தொடங்கினார்கள். இஸ்ரவேலின் அரசு (State of Israel) என்று பெயர்வைத்து எருசலேமைத் தலைநகராக்கினார்கள். அநேக கட்டுமானங்களை எழுப்பி, வீடு வாசல்களைக் கட்டி எருசலேமை ஒரு விசேஷித்த பட்டணமாக்கினார்கள்.

ஆனாலும் அவர்களைச் சுற்றியிருக்கிற அராபியர் அவர்களை விரோதித்து, அவர்கள் தேசத்தை இல்லாமற் பண்ணவே நோக்கமாயிருந்தார்கள். அநேக தடவைகளில் இரு பகுதியாருக்குமிடையில் சண்டைச் சச்சரவு நடந்துகொண்டே வந்தது.

கி.பி. *1967*-ல் இஸ்ரவேலர் தாங்கள் சுயாதீனம் பெற்ற பத்தொன்பதாம் வருடத் திருநாளை கொண்டாடினார்கள்.

கி.பி. *1967*-ஆம் ஆண்டு எகிப்து தேசத்து தலைவன் நாசர் (Nasser) என்பவன் மற்ற அரபிய தேசங்களைச் சேர்த்துக்கொண்டு, இஸ்ரவேலரோடு யுத்தம் செய்யும் நோக்கத்தோடு (Akaba) அகபா குடாக் கடலை இஸ்ரவேலர் உபயோகிக்கக் கூடாதென்று கட்டளை பிறப்பித்தான். உடனே யுத்தம் தொடங்கி, இஸ்ரவேலர் சத்துருக்களைத் தோற்கடித்து எருசலேம், பெத்லகேம், எரிகோ பட்டணங்களையும், யோர்தான், சீனாய் தேசங்களின் பகுதிகளையும், ஆறு நாள்களில் கைப்பற்றினார்கள்.

அப்பொழுது உலக ஐக்கிய சங்கத்தார் அமெரிக்காவில் கூடி யுத்தத்தை நிறுத்தினார்கள். ஆனாலும் சமாதானம் உண்டாகவில்லை. நாசர் என்பவன் ரஷ்யாவின் உதவியை எதிர்பார்த்து இஸ்ரவேலுக்கு விரோதமாயிருந்தான்.

*1967*-ஆம் வருடம் இஸ்ரவேல் சேனாதிபதி தயான் (Dayan) புலம்பல் மதிலருகே நின்று கொண்டு "நாம் இப்போது பரிசுத்த ஸ்தலத்துக்கு வந்துவிட்டோம், இதை இனி நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கமாட்டோம்" என்று கூறினார். பிரதம மந்திரி எஸ்கோலும் அதை ஆதரித்தார்.

மறுநாள், பத்தொன்பது ஆண்டுகளாக யோர்தானுக்கும், இஸ்ரவேலுக்கும் நடுவே நின்ற தடுப்புச்சுவர் தகர்க்கப்பட்டது. "புறஜாதியாரின் காலம் நிறைவேறுமட்டும் எருசலேம் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" என்று நமது ஆண்டவர் கூறியபடி (லூக்கா. *21:23*) எருசலேம் திரும்பவும் யூதர் கைவசமாயிற்று.

இது புறஜாதியாராகிய நமக்கும் ஓர் எச்சரிப்பாகும். கிருபையின் காலம் முடிவடைந்து விட்டதோ?

எருசலேமைப்பற்றி நமக்குள்ள பற்றுதலின் காரணம், நமது ஆண்டவர் உலகத்திலிருந்த நாள்களில் அங்கேயே தமது ஜீவியத்தைக் கழித்தார் என்பதே.

அவர் பிறந்து, 12வது வயதில் மகா ஏரோதுவினால் கட்டப்பட்ட மகத்துவமான தேவாலயத்துக்கு, பஸ்கா பண்டிகை நாள்களில் வந்து மூன்று நாள் தங்கியிருந்தார் *(லூக்கா. 2:41-50)*.

பின்பு தமது ஊழியத்தைத் தொடங்கினபோது, பஸ்கர பண்டிகை நாட்களில் தேவாலயத்துக்கு வந்து, ஆடு, மாடு விற்கிறவர்களையும், காசுக்காரரையும் துரத்திவிட்டார் *(யோவான். 2:13-17)*.

மற்றொருமுறை தேவாலயத்துக்குப் பவனிபோன வேளையில் ஜனங்கள் ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள்.

இயேசு மறுபடியும் தேவாலயத்தைச் சுத்திகரித்து, அநேக அற்புதங்களைச் செய்ததினால், பிரதான ஆசாரியரும், வேத பாரகரும் அவருக்கு விரோதமாக எழும்பினார்கள் *(மத். 21:1-15)*.

யூதர் அவரைப் பிடித்து ஆசாரியர் முன்பும், பிலாத்துவின் முன்பும் கொண்டுபோய் விசாரணை செய்து குற்றவாளியாக்கினார்கள்.

அதன்பின் இயேசு நிந்திக்கப்பட்டு, துப்பப்பட்டு, வாரால் அடிக்கப்பட்டு, கடைசியாக சிலுவையிலறையப்பட்டு, மரித்து அடக்கம்பண்ணப்பட்டார்.

திரும்ப மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து 40 நாள்களாக அநேகருக்குத் தரிசனமானார். பின்பு பரலோகம் போனார்.

நான்கு சுவிசேஷங்களிலும் இவைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

இயேசு எருசலேமுக்காக புலம்பினார் *(மத். 23:37; சக. 13:34)*.

எருசலேமின் அழிவைப் பற்றி இயேசு கூறினது *(மத். அதி. 24; மாற்கு அதி. 13; லூக்கா. 13:34)*.

சீஷர்கள் எருசலேமில் பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தாவியினால் நிரப்பப்பட்டார்கள் *(அப். 2:4)*.

## மேலான எருசலேம் (Jerusalem Above)

மேலான எருசலேமோ சுயாதீனமுள்ளவள். அவளோ நம்மெல்லாருக்கும் தாயானவள் *(கலா. 4:26)*. அதாவது இவ்வுலக எருசலேம் யூதருடைய வரலாற்றுக்குரியது (மேலான எருசலேம்). கிறிஸ்தவர்களுடைய ஏற்பாட்டுக்கேற்றது. அதிலே. கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், யூதரோ, புறஜாதியாரோ எல்லாருக்கும் சுயாதீனமுண்டு.

## புதிய எருசலேம் (New Jerusalem)

"புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்... பரலோகத்தை விட்டு இறங்கிவர கண்டேன்" என்று யோவான் சொல்லுகிறான் (*வெளி. 21:2*). இது பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவ சபையைக் கருதுகிறது. வேதாகமத்தில் பல இடங்களில் வெவ்வெறு ஆசிரியரால் குறித்துள்ளன (*எபி. 11:10; 12:22; எபே. 1:23*).

## எரேமியா (Jeremiah)

### (ஒரு தீர்க்கதரிசி)

இவன் ஆனதோத் ஊரானாகிய இல்க்கியா ஆசாரியனின் குமாரன் (*எரே. 1:1*). அபியத்தார் என்பவனைச் சாலொமோன் ஆசாரியனாயிராதபடி விலக்கி ஆனதோத்துக்கு அனுப்பியிருந்தான். எரேமியா அவனுடைய சந்ததியானாயிருக்கலாம்.

எரேமியா எருசலேம் மேல் வரப்போகிற தேவ தீர்ப்புக்களைச் சொன்னதினிமித்தம் துன்புறுத்தப்பட்டான். ஒருதடவை அவனைத் துரவிலே போட்டபோது அவன் அமிழ்ந்து சாகப்போனான் (*எரே. 38:6*). பல வேளைகளில் அவன் ஜனங்களுக்காக துக்கித்து அழுதான். இதினிமித்தம் "கண்ணீர்விடும் தீர்க்கதரிசி" என்னும் பெயர் பெற்றான். அவன் அழுகிறதற்காக ஒரு குகைக்குப் போகும் வழக்கமிருந்தபடியால், அக்குகைக்கு 'எரேமியாவின் குகை' என்ற பெயர் கொடுக்கப்பட்டது. கொல்கொதா அதற்கு அருகில் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

எரேமியாவின் மரணத்தைப் பற்றித் திட்டமாய்ச் சொல்ல இயலாது. பாரம்பரியத்தின்படி அவன் எகிப்தில், அவனுடைய ஜனங்களாலேயே கல்லெறிந்து கொல்லப்பட்டானென்று சொல்லப்படுகிறது.

2. லிப்னா ஊரான். யோவகாஸ், சிதேக்கியா, இராஜாக்களின் பாட்டன் (*2 இரா. 24:18; 23:31*).

3. சிக்லாகில் தாவீதினிடம் வந்து சேர்ந்த பென்யமீன் கோத்திரத்து பராக்கிரமசாலிகளில் ஒருவன் (*1 நாளா. 12:4*).

4. மனாசே கோத்திரத்தைச் சேர்ந்த வீட்டுத் தலைவரில் ஒருவன் (*1 நாளா. 5:24*).

5. ரேகாபியருடைய வீட்டைச் சேர்ந்த யசினியாவின் தகப்பன் (*எரே. 35:3*).

6. செருபாபேலோடு பாபிலோனிலிருந்துத் திரும்பிவந்த ஓர் ஆசாரியன். பின்பு இந்தப் பெயர் ஒரு சந்ததித் தலைவனுக்கிருந்தது (*நெகே. 12:1,12*).

7. முத்திரை போட்ட ஆசாரியரில் ஒருவன். அலங்கப் பிரதிஷ்டையில் உதவி செய்தான் (நெகே. 10:2; 12:34).

## எர்மோன் (Hermon)

### (முக்கியமான-கரடுமுரடான)

இது சீரியாவில் லீபனோன் மலைத் தொடரிலுள்ள அதிக உயரமான (9200 அடி) மலை. சீயோன் மலையென்றும் உபா. 4:47-ல் சொல்லியுள்ளது. சீதோனியர் இதை 'சீரியோன்' என்றும், எமோரியர் 'சேனீர்' என்றும் அழைத்தார்கள் (உபா. அதி. 3,9).

எர்மோன் மலை வரையுமுள்ள எமோரியரின் தேசத்தை மோசே பிடித்தான் (உபா. 3:8).

கானானியர் எர்மோனை ஒரு பரிசுத்த ஸ்தலமாக எண்ணினார் கள். அர்மோன் ஆறு துவக்கி, எர்மோன் மலை மட்டுமுள்ள தேசத்தை, யோசுவா பிடித்தான் (யோசுவா. 11:3). உறைபனி எப்பொழுதும் இம்மலையுச்சியில் காணப்பட்டது. சங்கீதக்காரனும் இதைப் பற்றி சங். 133:3-ல் பேசுகிறான்.

இயேசு மறுரூபமான உயர்ந்த மலை இதென்று சொல்லுகிறார்கள் (மத். 17:1,2; மாற்கு 9:2).

## எலிகூ (Elihu)

### (அவர் கடவுளே)

1. சாமுவேலின் முற்பிதா (1 சாமு. 1:1). இவன் பெயர் எலியாப் என்றும், எலியேல் என்றும் சொல்லப்படுகிறது (1 நாளா. 6:27; 6:34).

2. மனாசே கோத்திரத்து ஆயிரத்து சேர்வைக்காரனாகிய எலிகூ, தாவீதிடம் சிக்லாகுக்குப் போனான் (1 நாளா. 12:20).

3. தாவீதின் மூத்த சகோதரனாகிய எலிகூ, (1 நாளா. 27:18) எலியாப் என்றும் அழைக்கப்பட்டான் (1 சாமு. 10:6).

4. தாவீதின் கீழ் வாசல் காக்கிறவனாயிருந்த எலிகூ ஏதோமின் சந்ததியான் (1 நாளா. 26:7).

5. யோபு தேவனில் குற்றம் சொன்னது சரியில்லையென்றும் தேவனால் வரும் தண்டனை மனுஷனுடைய நன்மைக்காகவென்றும், தேவன் இராக்கால சொப்பனங்களாலும், தரிசனங்களாலும் தமது இரகசியங்களை மனுஷருக்கு வெளிப்படுத்த நோக்கமாயிருக்கிறா ரென்றும், இவைகளை விளங்கப்படுத்த ஒருவன் தேவையென்றும் சொல்லி, நான் உமக்கு ஞானத்தை உபதேசிப்பேன் என்றும் சொன்ன எலிகூ, இவன் யோபின் நான்கு சிநேகிதரிலும் இளையவன்.

மற்றவர்கள் யோபுக்கு சரியான உத்தரவு கொடுக்காததால் இவன் பேசத்துவங்கினான் *(யோபு. அதி. 32:37)*. ஆனால் கர்த்தரோ அறிவில்லாத வார்த்தைகளினால் ஆலோசனையை அந்தகாரப் படுத்துகிற இவன் யார்? என்கிறார் *(யோபு. 38:2)*.

## எலிசபெத்து (Elizabeth)

**(தேவன் ஆணையிட்டிருக்கிறார்)**

ஆசாரியனாகிய சகரியாவின் மனைவி. யோவான் ஸ்நானனின் தாய் *(லூக்கா. 1:5)*. அவள் ஆசாரிய குடும்பத்தைச் சேர்ந்தவளும், கன்னிமரியாளுக்கு இனத்தவளுமாயிருந்தாள். அவள் கர்த்தரின் முன்னோடியாயிருப்பவனின் தாயாயிருப்பாளென்று ஒரு தூதனால் சகரியாவுக்கு அறிவிக்கப்பட்டது *(லூக்கா. 1:13-17)*.

## எலிசா (Elisha)

**(தேவன் இரட்சிப்பு)**

ஆபேல் மேகொலா ஊரானான சாப்பாத்தின் குமாரன். இவன் தன்னுடைய வேலைக்காரரோடு ஏர் ஓட்டிக்கொண்டிருக்கும்போது எலியா போய் தன் சால்வையை அவன்மேல் போட்டான். எலிசா அதனால் தனக்குக் கிடைத்த அழைப்பை அறிந்து ஜனங்களுக்கு ஒரு விருந்து பண்ணினபின், எல்லாவற்றையும் விட்டு, எலியாவுக்குப் பின்சென்று ஊழியம் செய்தான் *(1 இரா. 19:19-21)*. இவன் எலியாவின் கைகளுக்குத் தண்ணீர் வார்த்தவன் என்று குறிக்கப்பட்டுள்ளது *(2 இரா. 3:11)*.

எலியா பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் வேளை வந்தபோது, எலிசா அவனை விட்டுப்பிரிய சம்மதியாதிருந்ததினால், எலியா அவனிடம், 'உனக்குச் செய்ய வேண்டியது என்ன' என்று கேட்டான். அவன் தனக்கு எலியாவினுடைய ஆவியின் வரம் இரட்டிப்பாய்க் கிடைக்கவேண்டும் என்றான் *(2 இரா. 2:9)*. இரட்டிப்பான பங்கு முதற்பேறானவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது *(உபா. 21:17)*.

அதன்பின் எலிசா, ஆகாப், அகசியா, யோராம், யெகூ, யோவகாஸ், யோவாஸ் என்னும் இராஜாக்களின் நாள்களில் சுமார் ஐம்பத்து ஐந்து வருடங்களாக தீர்க்கதரிசன ஊழியஞ் செய்தான்.

அவன் பொதுவான வஸ்திரம் தரித்து, மொட்டையான தலையோடு, கையில் ஒரு கோல் பிடித்துக்கொண்டு திரிந்தான். சமாரியாவில் அவனுக்கொரு வீடு இருந்தது. அவன் பெத்தேல், எரிகோ என்னும் இடங்களிலும் தங்கியிருந்தான்.

யோசபாத்து வேறு இரண்டு இராஜாக்களோடு மோவாபியருக்கு விரோதமாக போன சமயத்தில், தண்ணீர் இல்லாதிருந்து, எலிசாவின் சொற்படி பள்ளத்தாக்குகள் தண்ணீரால் நிரம்பிற்று *(2 இரா. 3:10-20).*

ஒருமுறை எலிசா தமஸ்குவிலிருக்கையில், சீரியாவின் இராஜா, பெனாதாத், தன்னுடைய வியாதியைப்பற்றி அறியும்படி ஆசகேலை அவனிடம் அனுப்பினான். எலிசா, இராஜாவுடைய வியாதி நீங்கும், ஆனாலும் அவன் சாவானென்றும், ஆசகேல் இராஜாவாக ஆவானென்றும் சொன்னான். அப்படியே ஆயிற்று *(2 இரா. 8:7-15).* இது எலியாவுக்குக் கர்த்தர் ஓரேபில் கொடுத்த கட்டளையின் நிறைவேற்றம் *(1 இரா. 19:15-17).*

ஆகாப் வீட்டாரின்மேல் வரவேண்டிய தேவதீர்ப்பு நிறைவேறும்படி எலிசா யெகூவை இராஜாவாக அபிஷேகம் பண்ணினான் *(2 இரா. அதி. 9, 10).*

### எலிசாவினால் செய்யப்பட்ட அற்புதங்கள்

1. யோர்தானின் தண்ணீரை அடித்து இரு பக்கமாகப் பிரியச் செய்தது *(2 இரா. 2:13, 14).*

2. எரிகோவின் கெட்ட தண்ணீரை ஆரோக்கியமாக்கியது *(2 இரா. 2:19-22).*

3. பெத்தேலுக்குப் போகும்போது இவனை நிந்தித்த 42 பிள்ளைகள் கரடிகளால் பீறப்பட்டன *(2 இரா. 2:23-25).*

4. ஒரு விதவையிடமிருந்த ஒரு குடம் எண்ணெயை அதிகரிக்கச் செய்தது *(2 இரா. 4:1-7).*

5. சூனேமிய ஸ்திரீ எலிசாவுக்கு ஓர் அறைவீடு கட்டிக் கொடுத்தாள். இதற்காக பிள்ளையில்லாதிருந்த அவளுக்கு பிள்ளை கிடைத்தது *(2 இரா. 4:8-17).*

6. அந்தப் பிள்ளை மரித்தபோது உயிர் வரச் செய்தது *(2 இரா. 4:18-37).*

7. கில்காலில் பஞ்சமிருந்த நாள்களில் தீர்க்கதரிசிகளின் புத்திரருக்குக் காய்ச்சின கூழிலிருந்த தோஷத்தை நீக்கினது *(2 இரா. 4:38-41).*

8. பாகால் சலீஷாவிலிருந்து வந்த ஒரு மனுஷன் கொடுத்த முதற்பலனான வாற்கோதுமையினால் நூறு பேர் போஷிக்கப்பட்டு மீதியும் இருந்தது *(2 இரா. 4:42-44).*

9. நாகமானின் குஷ்டரோகம் நீங்கச்செய்தது *(2 இரா. 5:1-19).*

*10.* கேயாசி தான் செய்த தப்பிதத்திற்காகக் குஷ்டரோகியானது *(2 இரா. 5:20-27).*

*11.* தீர்க்கதரிசிகளின் புத்திரர் வீடு கட்ட மரங்கள் வெட்டும்போது தண்ணீரில் விழுந்த கோடாரியை மிதக்கச் செய்தது *(2 இரா. 6:1-7).*

*12.* சீரியாவின் இராஜா எலிசாவைப் பிடிக்கும்படி ஆள்களை அனுப்பினபோது, எலிசா அவர்களைச் சந்தித்து தடுமாற்றமடையச் செய்து, சமாரியாவுக்கே கூட்டிக்கொண்டு போய், அவர்களுக்கு ஒரு தீங்கும் வர விடாமல், விருந்துபண்ணி அனுப்பிவிட்டான் *(2 இரா. 6:8-23).*

*13.* பஞ்ச சமயத்தில் எலிசா, நாளை இந்நேரத்தில் சமாரியாவின் வாசலிலே ஒரு மரக்கால் கோதுமை மாவு ஒரு சேக்கலுக்கு விற்கப்படும் என்றான். ஒரு பிரதானி, கர்த்தர் வானத்திலே மதகுகளை உண்டாக்கினாலும் இப்படி நடக்குமா என்றான். மறுநாள் அப்படியே நடந்தது. அவிசுவாசித்தவன் அதைக் கண்டான். ஆனால் அதைச் சாப்பிடாமல் இறந்தான் *(2 இரா. அதி. 7).*

*14.* ஒரு வருடம் பஞ்சம் உண்டாகுமென்று முன்னறிவித்தான் *(2 இரா. 8:1).*

*15.* கடைசியாக எலிசா மரித்து அடக்கம் பண்ணப்பட்ட கல்லறையில், மறு வருடம் ஒரு பிரேதம் போடப்பட்டபோது உயிரடைந்தது *(2 இரா. 13:20,21).*

எலிசா சாதுவான, புத்தியுள்ள மனுஷன். இராஜாக்களைக் கூட அச்சுறுத்த அஞ்சாதவன். அவன் செய்த அற்புதங்கள் மிகுதியாய் கிருபையுள்ள செய்கைகள்.

எலியா பரலோகத்திற்கு ஏறிப்போனதை எலிசா கண்டபோது, "என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரை வீரருமா யிருந்தவரே" என்று புலம்பினான் *(2 இரா. 2:12).*

எலியாவின் ஊழியம் யோவான் ஸ்நானனுடைய ஊழியத்துக்கு முன்குறியாயிருந்தது போல, எலிசாவின் ஊழியம் இயேசுவின் ஊழியத்திற்கு முன்குறியாகும்.

எலிசா நாகமானைக் குணமாக்கினது புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது *(லூக்கா 4:27).*

## எலிமலேக்கு (Elimelech)

### (என் தேவன் இராஜா)

யூதா கோத்திரத்தான். ஒரு செல்வாக்கான மனுஷன். பெத்லகேம் ஊரான். நகோமியின் புருஷன் *(ரூத். 1:2,3).* நியாயாதிபதிகளின்

நாட்களில் கொடூர பஞ்சம் உண்டானதினால், இவன் தன் மனைவியாகிய நகோமியையும், மக்லோன், கிலியோன் என்னும் இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு, மோவாப் தேசத்துக்குப் போய் அங்கே இருந்தான். பின்பு எலிமலேக்கு இறந்து போனான். இரண்டு குமாரரும் ஓர்பாள், ரூத் என்னும் மோவாபிய பெண்களை விவாகம் பண்ணினார்கள். பத்து வருடமாகும் முன் இரண்டு குமாரரும் மரித்தார்கள் *(ரூத். அதி. 1)*.

## எலியா (Elijah)

### *(யேகோவா)*

இவன் ஆகாப், அகசியா என்னும் இராஜாக்களின் காலத்திலிருந்த தீர்க்கதரிசி, திஸ்பி ஊரான். கீலேயாத்தில் குடியிருந்தான் *(1 இரா. 17:1)*.

அவன் மயிர் உடை தரித்து, வார்க்கச்சையைத் தன் அரையில் கட்டிக் கொண்டிருந்தான் *(2 இரா. 1:8)*.

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப் என்பவன் சீதோனியரின் இராஜாவின் குமாரத்தியாகிய யேசபேலை, விவாகம் பண்ணினது மாத்திரமல்ல, பாகால் வணக்கத்தையும் துவக்கினான். இவன் சமாரியாவில் பாகாலுக்கு ஒரு கோயில் கட்டி, பலிபீடத்தை எடுப்பித்து, விக்கிரகத் தோப்பை வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினான் *(1 இரா. 16:29-33)*.

இப்படியிருக்கையில் எலியா ஆகாபிடம் போய், தான் இஸ்ரவேலின் தேவனுக்கு முன் நிற்கிறவனென்றும், இந்த வருடங்களில் மழை பெய்யாதிருக்குமென்றும், சொல்லியபின், போய் கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக் கொண்டான் *(1 இரா. 17:1-5)*. காகங்கள் அவனைப் போஷித்தன. ஆற்றுத் தண்ணீர் வற்றினபோது அவன் எழுந்து சாரிபாத் ஊருக்குப் போய் ஒரு விதவையிடம் சேர்ந்தான். அங்கே அவளுடைய மகன் மரித்தபோது அவனை உயிர்த்தெழுப்பினான் *(1 இரா. 17:17-24)*.

மூன்றாம் வருடமாகையால், எலியா ஆகாபைச் சந்திக்கும்படி போகையில் தான் வந்திருக்கிறதாக அறிவிக்கும்படி ஒபதியாவுக்குச் சொன்னான். ஆகாப் எலியாவைக் கண்டபோது "இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவன் நீயல்லவா?" என்றான். அதற்கு எலியா, நான் அல்ல, பாகால்களைப் பின்பற்றுகிற நீங்களே இஸ்ரவேலைக் கலங்கப் பண்ணுகிறவர்கள். இப்போதும் மெய்த்தேவன் யாரென்று அறிய, கர்மேல் மலைமேல் பலி செலுத்த பாகாலின் தீர்க்கதரிசி களைக் கூடிவரச் செய்யும் என்று சொன்னான். அவர்கள் வந்தபோது

அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்று இரு பகுதியாரும் சம்மதித்துக் கொண்டு, பலி செலுத்தினபோது, எலியாவின் பலி அங்கீகரிக்கப்பட்டது. அப்பொழுது பாகாலின் தீர்க்கதரிசிக ளெல்லாரையும் எலியா, கீசோன் ஆற்றங்கரையில் வெட்டிப் போட்டான். பின்பு ஆகாபுக்குப் போகும்படி சொன்னபின், மலை மேலேறி எலியா ஜெபித்தான். மழை பெய்ய ஆரம்பித்தது. ஆகாப் இரதத்தைப் பூட்டிப் போகையில், எலியா இரதத்துக்கு முன் யெஸ்ரயேல் மட்டும் ஓடினான் *(1 இரா. 18:1-46)*.

அன்று இரவு, யேசபேல், நாளை இந்நேரத்தில் உன் பிராணனை நான் வாங்குவேனென்று எலியாவுக்குச் சொல்லவே அவன் எழுந்து ஓரேப் பர்வதத்திற்கு ஓடிப்போனான். அங்கே கர்த்தர் தரிசனமாகி, அமர்ந்த மெல்லிய சத்தத்தில், அவனோடு பேசினார் *(1 இரா. 19:11-18)*. அவர் அவனிடம் மூன்று காரியங்களைச் செய்யச் சொன்னார். எலிசாவை ஊழியத்துக்கழைத்தல், ஆசகேலையும், யெகூவையும் அபிஷேகம் பண்ணுதல்.

இவைகளின் பின் நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தை அபகரிக்கும்படி ஆகாப் அவனைக் கொன்றதினிமித்தம் அவன் சந்ததி அழிக்கப்படுமென்று எலியா அவனுக்கு அறிவித்தான் *(1 இரா. 21:1-24)*.

ஆகாப் அதைக் கேட்டு, தன்னைத் தாழ்த்தி மனஸ்தாபப் பட்டபடியால், பொல்லாப்பு அவன் காலத்தில் வராமல் அவன் குமாரனுடைய நாள்களில் வருமென்று சொல்லப்பட்டது *(1 இரா. 21:27-29)*.

ஆகாபின் குமாரன் அகசியா வியாதிப்பட்டிருக்கையில், எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடத்தில் விசாரிக்க ஆள்களை அனுப்பினான். எலியா அவர்களைச் சந்தித்து, இராஜா மரித்து விடுவானென்று சொல்லியனுப்பினான். இதினிமித்தம் இராஜா, எலியாவைப் பிடித்து வரும்படி சேவகரை அனுப்பின போது, அவர்கள் அக்கினியினால் கொல்லப்பட்டார்கள். இரண்டாம் முறையும் அவ்விதமே நடந்தது. மூன்றாம் முறை வந்தவர்களுடன் எலியா போய், அகசியாவை நோக்கி, நீ இஸ்ரவேலின் தேவனை நோக்காமல், பாகால்சேபூபிடம் ஆள் அனுப்பினதினால் சாகவே சாவாய் என்றான். அப்படியே அவன் இறந்துபோனான் *(2 இரா. 1:1-17)*.

பின்பு எலியா தன் ஸ்தானத்தில் எலிசாவைத் தீர்க்கதரிசி யாக்கினான். எலியாவும், எலிசாவும் பேசிக்கொண்டு நடந்து போகையிலேயே அக்கினி இரதமும், அக்கினி குதிரைகளும் அவர்கள்

நடுவாக வந்து இருவரையும் பிரித்தது. எலியா சுழல் காற்றிலே பரலோகத்துக்கு ஏறிப்போனான். எலிசா, எலியாவினிடத்திலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்து திரும்பிப்போனான் *(2 இரா. 2:13).*

எலியா எழுதின நிருபம் யூதா இராஜாவாகிய யோராமுக்குக் கிடைத்ததென்று *2 நாளா. 21:12-ல்* குறிக்கப்பட்டுள்ளது. இது எலிசா ஊழியம் செய்த நாள்களானபடியால், ஒன்றில், எலியா தன் நாள்களில் இதை எழுதி வைத்திருப்பான். அல்லது யோராம் எலியாவின் நாள்களில் தன் தகப்பன் யோசபாத்தோடு இராஜ்ய பாரம் பண்ணியிருப்பான் என்று விளங்கலாம்.

எலியாவின் ஊழியத்துக்கும், மோசேயின் ஊழியத்துக்கும் ஒப்பனை உண்டு. மோசே துவங்கின வேலையை யோசுவா முடித்ததுபோல, எலியாவின் வேலையும் ஓரளவில் எலிசாவால் முடிவு பெற்றது. மோசேக்கு ஓரேபில் தேவதரிசனம் கிடைத்ததுபோல எலியாவுக்கும் கிடைத்தது.

மல்கியா *4:5-ல்* கர்த்தருடைய நாள் வருகிறதற்கு முன், எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேனென்பது, யோவான் ஸ்நானகனைப் பற்றியது என்று இயேசு சொன்னார் *(மத். 11:14; 17:12).*

மறுரூப மலையிலும் எலியா தோன்றினான் *(மாற்கு 9:4;* லூக்கா. *4:25;* ரோமர் *11:2-4;* யாக். *5:17,18*லும் எலியாவைப் பற்றி வாசிக்கிறோம்.

2. ஒரு பென்யமீன் கோத்திரத்தான் *(1 நாளா. 8:27).*

3. அந்நிய ஸ்திரீகளை விவாகம் செய்த ஓர் ஆசாரியனும், மற்றொருவனும் *(எஸ்றா. 10:21, 26).*

## எலியாக்கீம் (Eliakim)

***(கர்த்தர் ஸ்திரப்படுத்துகிறார்)***

1. இல்க்கியாவின் குமாரனாகிய எலியாக்கீம், எசேக்கியா இராஜாவின் அரமனை விசாரிப்புக்காரனாயும், பொக்கிஷக்காரனாயும் இருந்தான் *(ஏசாயா. 22:15,20).* இந்தப் பதவி முதன் முதல் சாலொமோனின் நாள்களில் உண்டாயிற்று *(1 இரா. 4:6).*

சனகெரிப் எருசலேமை முற்றுகை போட்டபோது, எலியாக்கீமும், வேறு இரண்டு பேரும் ரப்சாக்கேயைச் சந்திக்கப் போயிருந்தார்கள் *(2 இரா. 18:18; ஏசாயா. 36:3).* பின்பு எசேக்கியா இவனுக்கு இரட்டுடுத்தி, தேவனுடைய சித்தத்தை அறியும்படி ஏசாயாவிடம் அனுப்பினான் *(2 இரா. 19:2; ஏசா 37:3).*

எலியாக்கீம் மேலான பதவியை அடைவானென்று ஏசாயா சொல்லியனுப்பினான் *(ஏசாயா. 22:20-25).*

*2.* யோசியா இராஜாவின் மகன் பெயர் எலியாக்கீம். பார்வோன் நேகோ, அவனை இராஜாவாக்கி யோயாக்கீம் என்று பேரிட்டான் *(2 இரா. 23:34; 2 நாளா. 36:4).*

*3.* தேவாலயத்தைப் பழுது பார்த்த ஆசாரியரில் ஒருவன் *(நெகே. 12:41).*

*4.* மெலெயாவின் குமாரன் *(லூக்கா. 3:31).*

*5.* அபியூத்தின் குமாரன் *(மத். 1:13).*

## எலியாப் (Eliab)

### *(தேவன் பிதா)*

*1.* ஈசாயின் மூத்த மகன். தாவீதின் சகோதரன் *(1 சாமு. 16:6).* அவனுடைய தோற்றத்தைப் பார்த்து, அவன் இஸ்ரவேலின் இராஜாவாகத் தகுதியுள்ளவனென்று; சாமுவேல் நினைத்தான் *(1 சாமு. 16:6,7; 17:13).*

*2.* தாத்தான், அபிராம் என்பவர்களின் பிதா *(எண். 26:9).*

*3.* சாமுவேலின் முற்பிதாக்களில் ஒருவன் *(1 நாளா. 6:27).*

*4.* ஜனங்களை எண்ணித் தொகையெடுக்க, மோசேக்கு உதவியாயிருந்த செபுலோன் கோத்திரத்தான் *(எண். 1:9).*

*5.* தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமிலிருந்து எருசலேமுக்குக் கொண்டு போகையில், பாடகராயிருந்தவர்களில் ஒருவன் *(1 நாளா. 15:18, 20).*

*6.* சிக்லாகில் தாவீதிடம் போன ஒரு காத்தியன். இவன் ஓர் யுத்த வீரன் *(1 நாளா. 12:9).*

## எலெயாசார் (Eleazar)

### *(தேவன் உதவி செய்கிறவர்)*

*1.* ஆரோனின் மூன்றாம் மகன். பினெகாசின் தகப்பன் *(யாத். 6:23-25).* இவனுடைய தகப்பனும், இவனும், இவனுடைய மூன்று சகோதரரும் ஆசாரிய ஊழியத்துக்காக அபிஷேகம் பண்ணப் பட்டார்கள் *(யாத். 28:1).* நாதாபும், அபியூனும், கொல்லப்பட்டபோது, இவனும், இத்தாமாரும் ஆசாரிய ஊழியம் செய்தார்கள் *(லேவி. 10:6; எண். 3:4; 1 நாளா. 24:2).*

இவன் பரிசுத்த ஸ்தலத்தைக் காவல் காக்கிறவர்களுக்கு விசாரிப்புக் காரனாயிருந்தான் *(எண். 3:32).*

கோராகின் தூபகலசங்களைத் தகடுகளாக அடிக்கும்படி, இவனுக்குச் சொல்லப்பட்டது (எண். 16:37). ஆரோன் மரித்தபின் இவன் அவனுடைய இடத்துக்கு வந்தான் (எண். 20:25).

வாதை நின்றபின், மோவாபின் சமவெளியில் ஜனங்களை எண்ணிப்பார்க்க, மோசேக்கு இவன் உதவியாயிருந்தான் (எண். 26:1).

மோசே, யோசுவாவை அதிகாரியாக ஏற்படுத்துகையில், அவனை எலெயாசாரிடம், ஊரீமினால் ஆலோசனை கேட்கும்படி சொன்னான் (எண். 27:21).

கானான் தேசத்தைப் பங்கிட்டதில் இவன் யோசுவாவுக்கு உதவியாயிருந்தான் (யோசுவா. 14:1).

இவன் மரித்தபோது பினெகாசுக்குக் கொடுக்கப்பட்ட இடத்தில் அடக்கம் பண்ணப்பட்டான் (யோசுவா. 24:33). இவனுக்குப்பின் இத்தாமாருடைய சந்ததியார், ஏலியின் நாள்கள் தொடங்கி, சாலொமோனின் நாள்கள் வரை ஆசாரிய ஊழியம் செய்தார்கள். சாலொமோன் அபியத்தாரை விலக்கிப்போட்டு, எலெயாசாரின் சந்ததியானாகிய சாதோக்கை ஆசாரியனாக்கினான் (1 இரா. 2:26, 27).

2. கீரீயாத்யாரீமின் மனுஷர் தேவனுடைய பெட்டியைக் காக்கும்படி அபினதாபின் மகன் எலெயாசாரைப் பரிசுத்தப் படுத்தினார்கள் (1 சாமு. 7:1).

3. தோதோவின் மகன் எலெயாசார் தாவீதின் மூன்று பராக்கிரமசாலிகளில் ஒருவன் (2 சாமு. 23:9; 1 நாளா. 11:12).

4. எஸ்றாவோடு கூட வந்த ஓர் ஆசாரியன் (எஸ்றா. 83:3).

5. பரிசுத்த பணிமுட்டுகள் ஒப்புவிக்கப்பட்ட லேவியரைச் சேர்ந்த பினெகாசின் மகன் (எஸ்றா. 8:33).

6. எருசலேமில் அலங்கப் பிரதிஷ்டையில் பங்கெடுத்த, ஆசாரியனும், வாத்தியக்காரனும் இவன். (நெகே. 12:42).

7. மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பின் முற்பிதாவாகிய அபியூத்தின் மகன் எலெயாசார் (மத். 1:13).

## எல்க்கானா (Elkanah)

**(கர்த்தர் பெற்றுக்கொள்கிறார்)**

1. எப்பிராயீம் கோத்திரத்தான். சாமுவேலின் தகப்பன். அன்னாளின் புருஷன் (1 சாமு. 1:1-28; 2:11-20).

2. கோராகின் குமாரர் ஆசீர் எல்க்கானா, அபியாசாப் என்ப வர்கள் (யாத். 6:24).

3. ஆகாஸ் இராஜாவுக்கு இரண்டாவதானவன். பெக்காவோடு நடந்த யுத்தத்தில் சிக்ரி என்பவனால் கொல்லப்பட்டான் (2 நாளா. 28:6,7).

4. சிக்லாகில் தாவீதிடம் போனவன் (1 நாளா. 12:6).

5. தாவீதின் நாள்களில் தேவனுடைய பெட்டியைக் காவல் காத்தவன் (1 நாளா. 15:33)

## என்கேதி (Engedi)

### (ஆட்டுக்குட்டியின் ஊற்று)

சாக்கடலுக்கு மேற்பக்கமாயுள்ள சுத்த நீரூற்றுள்ள ஒரு பட்டணம் (யோசுவா. 15:12). இது ஒரு செழிப்பான இடமானாலும், சுற்றிவரக் கற்பாறைகளுள்ள பாழ்தேசம். தாவீது சவுலுக்குத் தப்பிஓடி, இங்கே ஒதுக்கிடம் தேடினான் (1 சாமு. 24:1). யோசபாத்தின் நாள்களில் மோவாபியரும், அம்மோனியரும் இந்த வழியாய் யூதாவை முற்றுகை போடவந்தபோது, தோற்கடிக்கப்பட்டார்கள் (2 நாளா. 20:2).

உன்னதப்பாட்டில் குறித்துள்ள நேசர் தோட்டங்களில் முளைக்கும் மருதோன்றிப் பூங்கொத்துக்கு ஒப்பிடப்படுகிறார் (உன். 1:14).

அத்சாத்சோன்-தாமார் பிற்காலத்தில் என்கேதி என்னப்பட்டது (ஆதி. 14:7; 2 நாளா. 20:2).

## ஏகூத் (Ehud)

### (பலமுள்ள)

பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன். ஒரு நியாயாதிபதி. மோவாபியரின் ஒடுக்கத்திலிருந்து இஸ்ரவேலை விடுவித்தான் (நியா. 3:25-30). இவன் மோவாபிய இராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கைக் கொண்டுபோய்க் கொடுத்து, இரகசியம் பேசுபவன்போல நடித்து, அருகில்போய் ஒரு கத்தியால் அவனைக் குத்தினான். பின்பு அவன் ஓடிப்போய் எப்பிராயீம் மலைகளில் எக்காளம் ஊதி ஜனங்களைச் சேர்த்து, யோர்தான் துறைகளில் மோவாபியரை வெட்டிக் கொன்றான். அதனால் தேசம் 80 வருடம் அமைதலாயிருந்தது. இவன் இடது கை பழக்கமுள்ளவனாயிருந்தான் (நியா. 3:12-30).

பென்யமீன் கோத்திரத்தானாகிய பில்கானின் குமாரன் (1 நாளா. 7:10).

## ஏசா (Esau)

***(ரோமமுள்ள)***

ஈசாக்குக்குப் பிறந்த இரட்டைப் பிள்ளைகளில் ஏசா மூத்தவன் *(ஆதி. 25:21-26)*. இவனுடைய தகப்பன் இவனில் பிரியமாயிருந்து, சேஷ்ட புத்திர பாகத்தை இவனுக்குக் கொடுக்க நோக்கமாயிருந்தான்.

ஒரு தடவை யாக்கோபு இவனுக்குக் கூழ் சாப்பிடக் கொடுத்து இவனுடைய சேஷ்ட புத்திரபாகத்தை வாங்கிக் கொண்டான் *(ஆதி. 25:27-34)*.

பின்பு ஈசாக்கு தன் கடைசி ஆசீர்வாதங்களை ஏசாவுக்குக் கொடுக்க எண்ணினபோது, யாக்கோபு தந்திரமாய் அதைப் பெற்றுக்கொண்டான் *(ஆதி. 27:30)*. இதினிமித்தம் ஏசா, யாக்கோபை பகைத்து அவனைக் கொன்றுபோட தீர்மானித்தான் *(ஆதி. 27:41)*. பின்பு ஏசா போய் சேயீர் மலையில் குடியேறினான் *(ஆதி. 36:8)*.

சேஷ்ட புத்திர பாகம் பெறவேண்டிய ஏசா அதை இழந்துபோக நேரிட்டதைப் பற்றி, வேத சாஸ்திரத்துக்கடுத்த போதனை பின் வருமாறு குறிக்கப்பட்டுள்ளது.

யாக்கோபை நான் சிநேகித்தேன். ஏசாவை நான் வெறுத்தேன் *(மல். அதி.2; ரோமர் 9:13)*. என்று கர்த்தர் சொன்னது, தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கும், தெரிந்து கொள்ளப்படாதவர்களுக்கு முள்ள முன்னடையாளமாகும்.

ஆனாலும் இந்தத் தெரிந்து கொள்ளுதலுக்கு அவர்களுடைய ஜீவியமும், நடத்தையும் காரணமானதல்ல. யாக்கோபும், ஏசாவும் பிறக்கும் முன்னமேயே, யாக்கோபு தெரிந்துகொள்ளப்பட்டான்.

தேவன் சிநேகிக்கிறதிற்கும், வெறுக்கிறதற்கும், அவருடைய முன்னறிவே காரணமாகும். தேவன் தமது கிருபையின்படி தமது சித்தத்தைச் செய்வதே அவருடைய தெரிந்துகொள்ளுதல். இந்தச் சுயாதிபாத்தியம் அவருக்கே உரியது.

தேவனிடத்திலிருந்து நன்மையானதைப் பெற்றுக்கொள்ள ஊக்கமாய்த் தேடுகிற எவனுக்கும், அது கிடையாமற் போகாது. ஆனால் அப்படிப்பட்ட விருப்பம் தேவனாலேயே உண்டாகிறது. ஏனெனில் நன்மையானது எதுவும் அவரிடத்திலிருந்து இறங்கி வருகிறது. ஆனபடியால் அதை விசுவாசத்தோடு தேடுவது நமது கடமை ஆகும்.

# ஏசாயா (Isaiah)

## *(கர்த்தரின் இரட்சிப்பு)*

ஏசாயா ஆமோத்சின் குமாரன் (ஏசாயா 1:1). ஆமோத்ஸ் என்றும் குறித்துள்ளது (ஏசாயா. 37:2). மூன்று பெரிய தீர்க்கதரிசிகளிலொருவன். இவன் அவர்களிலும் விசேஷித்தவன் என்று சொல்லத்தகும்.

யூதாவின் இராஜாவாகிய உசியா மரித்த வருடம் (கி.மு. 740). இவன் தீர்க்கதரிசன ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு, நாற்பது வருடம் (கி.மு. 740-701). தீர்க்கதரிசன ஊழியம் செய்தான் (ஏசாயா. 6:1; 37;33-37). ஆகவே மீகாவும் இவனுடைய நாள்களிலிருந்தான். எருசலேமிலே இவன் தங்கியிருந்தான்.

ஆமோஸ் தீர்க்கதரிசிபோல இவனும், தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனத்தின் பாவம், தண்டிக்கப்படாமல் போகாதென்று அறிந்தான்.

ஏசாயாவின் தூதின் பொருள், அசீரியரால் எருசலேமும், ஜனங்களும் அழிக்கப்படுவார்களென்பதே. ஆகிலும் ஒரு பகுதி மீதியாயிருப்பார்களென்றும் கூறினான்.

இந்தத் தூதை வலியுறுத்தும்படி ஏசாயா தன் பிள்ளைகளிலொருவனுக்கு அடையாளப் பெயராக மகேர்சாலால் அஷ்பாஸ் எனப் பெயரிட்டான். அதன் அர்த்தம், "தமஸ்குவின் ஆஸ்தியும், சமாரியாவின் கொள்ளையும் அசீரியாவுக்குக் கொண்டு போகப்படும் (ஏசாயா. 8:4).

மற்றப் பிள்ளைக்கு சேயார் யாசூபு எனப் பெயரிட்டான். அதின் அர்த்தம், "நீதியுள்ள ஓர் பகுதி மீந்திருப்பார்கள்" (ஏசாயா. 7:3). இது யூதரில் ஒரு பகுதியார் எழுபது வருட சிறையிருப்பின் பின் திரும்ப எருசலேமுக்கு வருவதைக் குறிக்கிறது (எரே. 25:11,12; தானி. 9:2).

ஆமோஸூம், ஓசியாவும், ஏசாயாவுக்கு முன்னிருந்தவர்கள். அவர்கள் இஸ்ரவேல் இராஜ்யத்தைப்பற்றியும், ஏசாயாவும், மீகாவும், யூதா இராஜ்யத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனம் கூறினார்கள்.

உசியா, யோதாம் என்னும் யூதாவின் இராஜாக்களின் நாள்களில், தேசம் செழிப்படைந்ததோடு, அவபக்தியும் அதிகரித்தது. அவர்களுக்குப் பின் ஆகாஸ் இராஜாவான நாள்களில் பெக்கா என்பவன் இஸ்ரவேலில் இராஜாவாயிருந்தான். அக்காலத்தில் அசீரியர் பலத்து, எழும்பி, ஆமாத், தமஸ்கு என்னும் பட்டணங்களைக் கீழ்ப்படுத்தி திறை கொடுக்கச் செய்தார்கள்.

அப்பொழுது அசீரியாவுக்கு எதிராக பெக்காவும், தமஸ்குவின் இராஜாவாகிய ரேத்சீனும் கட்டுப்பாடு பண்ணிக்கொண்டு,

ஆகாசையும் தங்களோடு சேரும்படி கேட்க, அவன் சம்மதிக்கவில்லை. இதினிமித்தம் அவர்கள் எருசலேமை முற்றுகை போட்டார்கள்.

அந்நாள்களில் ஏசாயா, ஆகாசிடம் பேசி, கர்த்தரிடம் ஒரு அடையாளம் கேட்கும்படி சொன்னபோது, அவன் கேட்கமாட்டேன் என்றான். ஏசாயா, "ஆண்டவர்தாமே அடையாளம் கொடுப்பார்" என்று சொல்லி, இம்மானுவேலைப்பற்றிய தீர்க்கதரிசனம் உரைத்தான் *(ஏசாயா. 7:10-17)*.

இஸ்ரவேலின் பின் வாங்கின நிலையை, ஒரு தெய்வீக பிள்ளை பிறப்பதினாலேயே திருத்தக்கூடும் என்பதைக் காட்டும்படி, ஏசாயா தீர்க்கதரிசனமாய் 'சமாதான பிரபு' வருவாரென்று கூறுகிறான் *(ஏசாயா. 9:6,7)*.

பின்பு அசீரிய இராஜாவாகிய சர்கோன் என்பவனால் எகிப்தியர் மேலும், எத்தியோப்பியர் மேலும் வரும் தண்டனைக்கு அடையாளமாக ஏசாயா, வஸ்திரமில்லாமலும், வெறுங்காலுமாய் நடந்தான் *(ஏசாயா. 20:2-4)*.

சனகெரிப் எருசலேமை முற்றுகைப் போட்ட நாள்களில் அவனுடைய சேனாதிபதி ரப்சாக்கே இஸ்ரவேலை நிந்தித்து பேசினதை, எசேக்கியா கேட்டு, கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளும்படி ஏசாயாவிடம் ஆள்களை அனுப்பினான் *(2 இரா. 19:1-4)*. ஏசாயா, அவர்கள் தோற்கடிக்கப்படுவார்களென்றும், சனகெரிப் கொல்லப்படுவானென்றும் சொல்லியனுப்பினான் *(2 இரா. 19:6,7; 32-34)*. பின்பு எசேக்கியா வியாதிப்பட்டிருக்கையில், ஏசாயா அவனிடம்போய் "நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப் போவீர்" எனறான். அப்பொழுது எசேக்கியா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி மிகவும் அழுதான். கர்த்தர் அவனைக் குணமாக்கி அவனுடைய நாள்களோடு பதினைந்து வருடங்களைக் கூட்டுவதாக ஏசாயா மூலம் அவனுக்கு அறிவித்தார் *(2 இரா. 20:1-6)*.

ஏசாயாவின் சொற்படி அத்திப்பழத்தின் அடையை எசேக்கியாவின் பிளவையின் மேல் பற்று போட்டபோது அவன் பிழைத்தான். *(2 இரா. 20:7)*.

கர்த்தர் சொன்னபடி, தான் மூன்றாம் நாள் ஆலயத்திற்கு போவதற்கு அடையாளம் கேட்டபோது, அதுவும் கொடுக்கப்பட்டது *(2 இரா, 20:8-11)*.

பின்பு எசேக்கியா, பாபிலோனிலிருந்துத் தன்னிடம் வந்தவர் களுக்கு, தன் பொக்கிஷங்களையெல்லாம் காட்டினபடியால், அவையெல்லாம் பாபிலோனுக்குக் கொண்டு போகப்படும் என்று ஏசாயா, எசேக்கியாவுக்குச் சொன்னான் *(2 இரா. 20:14-18)*.

ஏசாயா, யோவான் ஸ்நானன் வருவதைப் பற்றியும் முன்னறிவித்தான் (ஏசாயா. 40:3; மத். 3:3). இயேசு கிறிஸ்துவிடம் வேதபாரகர், பரிசேயர் கேட்ட கேள்விக்கு மறு உத்தரவாக அவர் ஏசாயா சொன்னதை எடுத்துக் காட்டினார் (மத். 15:7).

அப்போஸ்தலனாகிய பவுலும் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களைக் குறித்து ஏசாயா சொன்னதை எடுத்துக் காட்டுகிறான் (ரோமர். 10:17, 20).

ஏசாயாவின் மரணத்தைப் பற்றி ஜஸ்டின் மார்டைர் (Justin Martyr) என்பவரும், வேறு ஆள்களும், அவன் குழாயான அடிமரக் கட்டைக்குள் போடப்பட்டு, வாளால் அறுக்கப்பட்டானென்று சொல்லுகிறார்கள். எபி. 11:37-ல் குறித்துள்ள சம்பவம் இதைக் குறித்ததென்று பொதுவாய் நம்பப்படுகிறது.

## ஏதேன் (Eden)

**(மகிழ்ச்சி)**

1. எசேக்கியாவின் சீர்த்திருத்தங்களில் உதவியாயிருந்த ஒரு லேவியனின் பெயர் (2 நாளா. 29:12; 31:18).

2. தீருவுடன் வியாபாரம் செய்த இடமும், ஜனங்களும் (எசே. 27:23; 2 இரா. 19:12; ஏசாயா. 37:12).

## ஏதேன் தோட்டம் (Garden of Eden)

ஆதாம், ஏவாள் என்பவர்களுக்காகத் தேவன் உண்டாக்கின தோட்டம் (ஆதி. 2:8).

கர்த்தர் சீயோனிலிருக்கிற வனாந்தரத்தை (யூதா தேசம்) ஏதேனைப் போலாக்குவார் (ஏசாயா. 51:3).

தீருவின் அதிபதி, தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். இங்கே தீருவின் அதிபதி என்பது தீரு இராஜ்யத்தில் ஆளுகை செய்து கொண்டிருந்த விழுந்துபோன ஆவியைக் குறிக்கும். அதாவது அந்தத் தூதன் (எசே. 28:13). அவன் ஏதேனில் பாவமில்லாத பரிபூரணனாயிருந்தான்.

இந்தத் தோட்டம் இருந்த இடத்தைத் திட்டமாய் சொல்லக்கூடாதபோதிலும் திகிரிஸ், ஐப்பிராத்து என்னும் நதிகள் இத்தோட்டத்திற் கூடாய்ப் போன ஓர் ஆற்றின் கிளைகள் என்று சொல்லப்படுகிறது.

ஆதாமும், ஏவாளும் இந்தத் தோட்டத்திலிருந்தபோது, பிசாசினால் சோதிக்கப்பட்டு, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசித்ததினிமித்தம் தோட்டத்திலிருந்து துரத்தப்பட்டார்கள் (ஆதி.

*3:4-6, 23).* ஏதேன் தோட்டத்தைக் காவல் செ.ய கேருபீன்களையும், சுடரொளிப் பட்டயத்தையும் தேவன் வைத்தார்.

## ஏத்தியர் (Hittites)

கானானின் மகன் கேத் *(ஆதி. 10:15).* இவனுடைய புத்திரர் ஏத்தியர் எனப்பட்டார்கள் *(ஆதி. 23:3).* இவர்களில் ஒரு பகுதியார் கானான் தேசத்தில் குடியேறியிருந்தார்கள் *(ஆதி. 15:20; உபா. 7:1; நியா. 3:5).* இவர்களுடைய ஓர் இராஜா, ஜாதிகளின் இராஜாவாகிய திதியாஸ் என்று குறிக்கப்படுகிறான் *(ஆதி. 14:1).*

சீரிய தேசத்தில் ஏழு பட்டணங்கள் ஏத்தியருடைய ஆளுகைக் குட்பட்டிருந்தன. இவைகளில் ஆமாஸ், கர்கிமிஸ் விசேஷமானவைகள். ஆமாத்தின் இராஜாவாகிய தோயீ தாவீதோடு சிநேகமாயிருந்தான் *(2 சாமு. 8:9).* சாலொமோன் ஏத்திய ஸ்திரீகள் மேல் ஆசை வைத்து அவர்களோடு ஐக்கியமாயிருந்தான் *(1 இரா. 11:1).*

ஆபிரகாமின் நாள்களில் எபிரோன், ஏத்தியருக்குரியதாயிருந்தது. ஏத்தின் புத்திரரின் கையிலிருந்து மக்பேலா குகையை ஆபிரகாம் வாங்கினான் *(ஆதி. 23:10-18; 25:10).*

ஏசா ஏத்தியனாகிய ஏலோனின் குமாரத்தியாகிய ஆதாளை விவாகம் பண்ணினான் *(ஆதி. 36:2).*

கானான் தேசத்து மலை நாட்டில் ஏத்தியர் குடியிருந்தார்கள் *(எண். 13:29).*

எசேக்கியேல் எருசலேமை நோக்கி, "உன் தாய் ஏத்தித்தி" என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான் *(எசே. 16:3, 45).*

தாவீதோடு இருந்த உரியாவும் ஓர் ஏத்தியன் *(2 சாமு. 12:10).* தாவீதுக்கு உதவியாயிருந்த அபிமெலேக்கும் ஓர் ஏத்தியன் *(1 சாமு. 26:6).*

## ஏபால் (Ebal)

**(வெறுமை)**

1. ஏபால், கெரிசீம் என்னும் இரண்டு மலைகள் சீகேம் பள்ளத்தாக்கின் இரு பக்கத்திலுள்ளவை.

மோசே தனது கடைசி பிரசங்கத்தில் இரண்டு மலைகளில், கெரிசீம் மலைமேல் ஆசீர்வாதமும், ஏபால் மலைமேல் சாபமும் கூறப்பட வேண்டுமென்றான் *(உபா. 11:26-32).*

இரண்டாம் முறையும் மோசே, நீங்கள் கானானில் பிரவேசிக்கும் போது, ஏபால் மலையில் கற்களை நாட்டி, சாந்து பூசி, அதிலே

நியாயப் பிரமாண வார்த்தைகளை எழுதுங்கள் என்றான் (*உபா. 27:1-8*).

ஜனங்கள் யோர்தானைக் கடக்கும்போது பாதிக்கோத்திரங்கள் ஆசீர்வாதம் கூறும்படி கெரிசீம் மலையிலும், மற்ற பாதிக் கோத்திரங்கள் சாபம் கூறும்படி ஏபால் மலைமேலும் நிற்கவேண்டும். அப்பொழுது, கற்பனைகளுக்குக் கீழ்படிவோர் ஆசீர்வாதத்துக்கும் கீழ்ப்படியாதோர் சாபத்திற்கும் உட்படுவார்களென்று லேவியர் சொல்லும்போது, ஜனங்கள் 'ஆமென்' என்று சொல்லுவார்களாக என்றான் (*உபா. 27:9-26*).

அந்தப்படியே யோசுவா தேசத்தை ஜெயித்தபின் சீகேமிலே ஜனங்களைக் கூடிவரச் செய்து, மோசே கட்டளையிட்டபடியெல்லாம் செய்தான் (*யோசுவா. 8:30-35*).

*2. ஓரியனான சேயீரின் சந்ததியான். சேபாவின் குமாரன் (ஆதி. 36:23; 1 நாளா. 1:40).*

## ஏபோத்து (Ephod)

இது ஆசாரியர் அணிந்துகொள்ள வேண்டிய பரிசுத்த வஸ்திரங்களில் ஒன்று (*யாத். 28:4; 39:2*). ஏபோத்து, பொன்னினாலும், இளநீல நூலாலும், இன்னும் வேறே நூல்களாலும் விசித்திரமான முறையில் செய்யப்பட்டது (*யாத். 28:5*). கோமேதகக் கற்களும், இரத்தி னங்களும் அதில் பதிக்கப்பட்டிருந்தன (*யாத். 26:5-7*).

பிரதான ஆசாரியரைத் தவிர, வேறே ஆள்களும் ஏபோத்தை அணிந்ததாகத் தெரிகிறது. சாமுவேல் ஏபோத்தை தரித்தவனாய் கர்த்தருக்குப் பணிவிடை செய்தான் (*1 சாமு. 2:18*).

நோபிலிருந்த ஆசாரியர் சணல் நூல் ஏபோத்தை தரித்திருந்தார்கள் (*1 சாமு. 22:18*). தேவனுடைய பெட்டியைக் கொண்டுபோகையில் தாவீது சணல் நூல் ஏபோத்தை தரித்துக்கொண்டு நடனம் பண்ணினான் (*2 சாமு. 6:14*). அபியத்தார் தாவீதிடம் தப்பியோடின போது, ஒரு ஏபோத்தையும் கொண்டு போயிருந்தான் (*1 சாமு. 23:6*). தாவீது கர்த்தருடைய சித்தத்தை அறிகிறதற்கு அதை உபயோகித் தான் (*1 சாமு. 23:9; 30:7*).

*நியா. 17:5; 18:14; ஓசியா 3:4* இவைகளில் காணப்படுகிற ஏபோத்து, சுரூபங்களோடு சேர்ந்ததாகத் தெரிகிறது. கிதியோன் *1700* பொன் சேக்கலினால் ஒரு ஏபோத்தை செய்வித்தான். அது விக்கிரக ஆராதனைக்கு ஏதுவாயிற்று. (*நியா. 8:27*). மீகா ஓர் சுரூபத்தையும், விக்கிரகத்தையும் உண்டு பண்ணி, ஒரு ஏபோத்தையும் சேர்த்துக்கொண்டான் (*நியா. 17:1-5*).

## ஏரோது (Herod)

இதுமேயர் கி.மு. 125-ல் ஏர்கானஸ் என்பவனுக்கு கீழ்ப்பட்டிருந்த நாள்களில் யூத மார்க்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். அந்திப்பா என்பவன் இதுமேயாவின் தேசாதிபதியாயிருந்தான். அவனுக்குப்பின் அவனுடைய மகன் அந்திப்பத்தேர் அந்த நிலைக்கு வந்தான். அக்காலத்தில் யூதேயா ரோமருக்குக் கீழிருந்தது. இவன் ரோமரைச் சார்ந்து அவர்களுக்கு உதவியாயிருந்ததினிமித்தம், யூதேயாவின் தேசாதிபதியாக நியமிக்கப்பட்டான் (கி.மு. 47). இவன் இதுமேயனானபடியால் 'பாதி யூதன்' என்றழைக்கப்பட்டான். அவன் கொல்லப்பட்டபோது அவனுடைய மகன் ஏரோது யூதேயாவின் தேசாதிபதியானான் (கி.மு. 41). அவன் யூதேயாவிலிருந்து வரிப் பணம் வசூலித்து ரோமருக்குக் கொடுத்து அவர்களைப் பிரியப்படுத்தி நடந்ததினால் யூதேயாவின் இராஜாவாக கி.மு. 37-ல் நியமிக்கப் பட்டான்.

*1. மகா ஏரோது இராஜா (கி.மு. 37-4)*

இவன் தன் பிரஜைகளைப் பிரியப்படுத்தும் நோக்கமாய் அநேக கட்டடங்களைக் கட்டினான். விசேஷமாக ஒரு மகிமையான தேவாலயத்தைக் கட்டினான். நமது ஆண்டவரின் நாள்களிலிருந்த தேவாலயம் அதுவே.

யூதரைப் பிரியப்படுத்துவதற்காக பிரதான ஆசாரியனுடைய குமாரத்தியாகிய மரியம்னி என்பவளை விவாகம் செய்தான். ஆனால் இவன் அதிக குரோதியும், சந்தேகமுமுள்ளவனாயிருந்து, அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களெல்லாரையும், மரியம்னியையும் யூதரில் அநேகரையும் கொலை செய்தான்.

மரியம்னி இவனுக்குப் பெற்ற இரண்டு குமாரர் ரோமாபுரியில் வளர்க்கப்பட்டு, இவனுடைய இடத்துக்கு வருவார்களென்று எண்ணப்பட்டபோது, இவனுடைய மூத்த மகனாகிய இன்னொருவன், அவர்களுக்கு விரோதமாய் தகப்பனிடம் கோள் சொல்லி, அவர்களையும் கொல்லுவித்தான். ஆனால் சில நாள்களுக்குப் பின் அவனும் கொல்லப்பட்டான். பின்பு ஏரோதும் கி.மு. 4-ல் மரித்தான்.

இயேசுவின் பிறப்பைப்பற்றி சாஸ்திரிகள் இவனிடம் விசாரித்ததின் பயனாக, இவன் பெத்லகேமிலுள்ள இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் பிள்ளைகளெல்லாரையும் கொலை செய்தான் (மத். 2:16).

இவன் மரணசாசனம் எழுதி இராஜ்யத்தை தனது மூன்று குமாரருக்குக் கொடுத்த விவரமாவது; அர்கெலாயுவுக்கு யூதேயாவும், சமாரியாவும் (மத். 2:22), அந்திப்பாவுக்கு, கலிலேயாவும், பெராயாவும்

பிலிப்புவுக்கு வடகிழக்கு தேசங்களுமாம் *(லூக்கா. 3:1).* ரோம இராயனும் இதற்கு சம்மதம் கொடுத்தான்.

*2. அர்கெலாயு - ஏரோது (கி.மு. 4 - கி.பி. 6)*

இவன் மூத்த மகனாயிருந்து ஏரோதின் பட்டத்துக்கு வந்து, யூதேயாவில் அரசாண்டான். *(மத். 2:22).* தகப்பனுடைய மரண சாசனத்தின்படி, யூதேயா, சமாரியா, இதுமேயா இவனுக்குக் கிடைத்தன. இந்தத் தேசங்களுக்கு இராஜாவாக உறுதிப்பட ரோமாபுரிக்குப் போனான். இந்தச் சம்பவம் இயேசு, லூக்கா *19:12-27*-ல் சொன்ன உவமைக்குக் காரணமாயிற்று.

இதன்பின் அர்கெலாயு யூதேயாவிலும், சமாரியாவிலும், கொடூர ஆளுகை செய்ததினிமித்தம் அவர்கள் ரோமாபுரிக்கு ஸ்தானாதிபதிகளை அனுப்பி முறையிட்டபோது அவன் விலக்கப்பட்டு வியன்னா (Vienna) தேசத்துக்கு அனுப்பப்பட்டான்.

இதன்பின் இந்தத் தேசங்கள் ரோமருடைய நேர் ஆளுகைக்குக் கீழாயிற்று.

*3. ஏரோது - அந்திப்பா (கி.மு. 4 - கி.பி. 39)*

இவன் காற்பங்கு தேசாதிபதி எனப்பட்டான் *(மத். 14:1; லூக்கா. 3:19; 9:7; அப். 13:1).* இவன் மகா ஏரோதின் மகன். தாய் மல்தேஸ் என்னும் சமாரியப் பெண். கலிலேயா, பெரெயா என்னும் தேசங்களை ஆண்டான்.

இவன் முதல் அரபிய தேசத்து இராஜாவாகிய அரித்தாசின் மகளை விவாகம் பண்ணி, அவளை விட்டுவிட்டு இவனுடைய சகோதரன் பிலிப்புவின் மனைவியாகிய ஏரோதியாளை விவாகம் செய்தான். ஏரோதியாள் மற்றொரு வழியில் இவனுக்கு மகள் முறையானவள். அவனுடைய செய்கை துன்மார்க்கமானதென யோவான் ஸ்நானன் கண்டித்ததினிமித்தம், ஏரோதியாளால் இவன் ஏவப்பட்டு அவனைச் சிரச்சேதம் பண்ணினான் *(மத். 14:10; மாற்கு 6:14; லூக்கா. 9:7).* இயேசுவும் அவனைக் குறித்து ஒரு நரி என்று சொன்னார் *(லூக்கா. 13:31).* இயேசு இவன்முன் விசாரணைக்கு அனுப்பப்பட்ட வேளையில் அவரை இவன் நடத்தின விதத்திலிருந்து, இவனுடைய முட்டாள்தனமும், குறும்புப்புத்தியும் வெளியாகிறது *(லூக்கா 23:7-12).*

இவன் தன் முந்தின மனைவிக்குச் செய்த துரோகத்தினிமித்தம், அரித்தாஸ் இராஜா இவனுக்கு விரோதமாய் வந்து இவனைத் தோற்கடித்தான்.

பின்பு கலிக்குலா இராயனாய் வந்தபோது ஏரோதியாளால் ஏவப்பட்டு இவன் இராஜ பட்டம் கேட்டான். அதினிமித்தம் இவன் நீக்கப்பட்டு Lyons in Gouh என்ற தேசத்துக்கு அனுப்பப்பட்டு அங்கே நிர்ப்பந்தமான மரணமடைந்தான் (கி.பி. 39).

4. பிலிப்பு - ஏரோது (கி.மு. 4 - கி.பி. 34)

இவன் மகா ஏரோதின் மகன். தாய் எருசலேம் ஊராளாகிய கிளியோபத்திரா. இவன் இந்துரேயா, திராக்கொனி நாடுகளுக்கு அதிபதியாயிருந்தான் (லூக்கா. 3:1). இவன் ஒரு நற்குணசாலி. ஏரோது குடும்பத்தாரில் காணப்பட்ட குணங்களாகிய அதிகாரப்பிரியம், துர் இச்சை முதலியவை இவனிலிருக்கவில்லை. ஏரோதியாளின் மகளாகிய சலோமியை இவன் விவாகம் செய்தான். பிள்ளைகளில்லை. இவன் யோர்தானுக்கு அருகில் ஒரு பட்டணத்தைக் கட்டி சிசெரியா என்று பேரிட்டான். இவன் முப்பத்தெட்டு வருடம் (கி.மு. 4-கி.பி.34) அரசாண்டு மரித்தான். இவனுடைய தேசம் அகிரிப்பாவுக்குக் கொடுக்கப்பட்டது.

5. ஏரோது - பிலிப்பு (கி.பி. 34-37)

இவன் மகா ஏரோதின் மகன். இவன் தாய் பிரதான ஆசாரியனான சீமோனுடைய மகளாகிய மரியம்னி. இவனுக்குச் சுதந்திரம் கிடைக்கவில்லை. இவன் ஏரோதியாளை விவாகம் செய்து அந்திப்பா என்பவனுக்குக் பறி கொடுத்தான்.

மத்.14:3; மாற்கு 6:17-ல் இவனை பிலிப்பு என்று மாத்திரம் குறித்துள்ளது. இவனைப் பற்றி வேறொன்றும் சொல்லப்படவில்லை.

6. முதலாம் ஏரோது - அகிரிப்பா (கி.பி.37-44).

மகா ஏரோது, ஏர்கானுவின் மகளாகிய மரியம்னி என்பவர்களின் பேரன். திபேரியுராயனால் அனுப்பப்பட்டு ரோமாபுரியில் கல்வி கற்றான். ஏதோ காரணத்தால் இவன் சிறைவாசியானான். கலிகுலா இராயனாய் வந்தபோது, இவனை விடுதலை பண்ணி, பிலிப்புவின் தேசங்களையும், லிசானியாவையும் இவனுக்குக் கொடுத்து, இவனை இராஜாவாக்கினான். கிலவுதியு இராயனாய் வந்தபோது யூதேயா, சமாரியா தேசங்களும் இவனுக்குக் கிடைத்தன.

யூதரைப் பிரியப்படுத்தும்படி, புதிய கிறிஸ்தவ மார்க்கம் துவங்கினபோது, சபையைத் துன்புறுத்தி, யாக்கோபைக் கொன்று பேதுருவையும் சிறைச்சாலையில் வைத்தான் (அப். 12:1-4). தீரியர், சீதோனியர் இவனிடம் சமாதானம் கேட்டு வந்தபோது, சிங்காசனத்திலிருந்து அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகையில்,

ஜனங்கள் இது தேவசத்தம் என்றார்கள். இவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியால், தேவதூதன் இவனை அடித்தான். அதனால் இவன் புழுபுழுத்து செத்தான் (அப். 12:20-25 - கி.பி.44).

இவனுடைய காலத்தில் ஏரோது குடும்பம் அதிக மேன்மையடைந்தது. இவனுடைய பிள்ளைகள் - அகிரிப்பா, பெர்னீக்கேயாள், துருசில்லா என்பவர்கள்.

7. இரண்டாம் ஏரோது - அகிரிப்பா (கி.பி. 56-100)

இவன் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் மகன். துவக்கத்தில் இவன் காற்பங்கு தேசாதிபதியாயிருந்தான். நான்கு வருடங்களின் பின் கிலவுதியு இராயன், பிலிப்புவின் தேசத்தையும், லிசானியாவையும் கொடுத்து இவனை இராஜாவாக்கினான். பின்பு நேரோ இராயன், கலிலேயா பெரேயா தேசங்களையும் கொடுத்தான்.

அப்போஸ்தலனாகிய பவுல் இவனுக்கு முன்பாக தன்னுடைய மார்க்க அனுபவத்தைப்பற்றி பேசினபோது, இவன், தானும் கிறிஸ்தவனாகலாம் என்று பரிகாசமாய்ச் சொன்னான் (அப். 26:28).

பின்பு இவனும் பெர்னீக்கேயாளும் ரோமாபுரிக்குப் போயிருந்த நாள்களில் (கி.பி. 100-ல்) இவன் மரித்தான்.

8. அரிஸ்தொபுலு-ஏரோது இவன் முதலாம் ஏரோது அகிரிப்பாவின் சகோதரன். இவன் ரோமாபுரியில் ஒரு குடும்பத்துக்குத் தலைவனாயிருந்தான். அப்போஸ்தலனாகிய பவுல் இவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான் (ரோமர். 16:11).

## ஏரோதியர் (Herodians)

இவர்கள் ஏரோது இராஜ வம்சத்துக்குச் சார்பான இராஜாங்கத்துக்கடுத்த ஒரு யூத கட்சி. இயேசுவுக்கிருந்த கீர்த்தி இவர்களுடைய நோக்கங்களுக்குத் தடையாயிருந்தது.

இதினிமித்தம் கலிலேயாவில் ஆண்டவர் சூம்பின கையுடையவனைச் சொஸ்தமாக்கினபோது, இவர்களும் பரிசேயரோடு கூடி, அவருக்கு விரோதமாக ஆலோசனை பண்ணினார்கள் (மாற்கு. 3:6). பிற்பாடு வரி கொடுக்கும் விஷயத்தில் இயேசுவை அகப்படுத்தும்படி, இவர்களும் பரிசேயரோடு சேர்ந்து தர்க்கித்தார்கள் (மத். 22:16).

இயேசு ஏரோதின் புளித்தமாவைக் குறித்துச் சீஷரை எச்சரித்து, இவர்களுடைய தப்பிதமான போதனையைக் கண்டித்தார் (மாற்கு. 8:15).

## ஏரோதியாள் (Herodias)

மகா ஏரோதுவின் பேத்தி. முதலாம் ஏரோது அகிரிப்பாவின் சகோதரி. ஏரோதியாள் முதலில் பிலிப்பு என்பவனுக்கு மனைவி யாயிருந்து, பின்பு அவனைவிட்டு காற்பங்கு தேசாதிபதியாயிருந்த ஏரோதைச் சேர்த்துக்கொண்டாள். இதினிமித்தம் யோவான் ஸ்நானன் அவனைக் கடிந்து கொண்டபோது, அவனைக் காவலில் போட்டான் *(மத். 14:1-12)*. ஏரோதியாள் யோவானைக் கொன்றுபோட வகை தேடியும் ஏரோது அவனைப் பாதுகாத்தான் *(மாற்கு. 6:19,20)*. பின்பு ஏரோதின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில், ஏரோதியாளின் ஏவுதலின்படி யோவான் ஸ்நானன் சிரச்சேதம் பண்ணப்பட்டான் *(மாற்கு. 6:28)*.

## ஏலா (Elah)

*1.* பாஷாவின் மகன். இஸ்ரவேலின் நான்காம் இராஜா. இரண்டு வருடம் அரசாண்டான். இவன் தன் அரண்மனை விசாரணைக் காரன் வீட்டில் குடித்து, வெறித்திருக்கையில் சிம்ரி இவனைக் கொன்றுபோட்டு, தான் இராஜாவாகி, ஒரு வாரம் அரசாண்டான் *(1 இரா. 16:8-15)*.

*2.* இஸ்ரவேலின் இராஜாவாகிய ஓசியாவின் தகப்பன் *(2 இரா. 15:30)*.

*3.* ஏசாவின் சந்ததியிலுள்ள ஒரு பிரபு *(ஆதி. 36:41; 1 நாளா. 1:52)*.

*4.* சவுல் பெலிஸ்தரோடு யுத்தம்பண்ணின ஒரு பள்ளத்தாக்கின் பெயர் *(1 சாமு. 17:2)* தாவீது கோலியாத்தைக் கொன்றதும் இந்தப் பள்ளத்தாக்கில்தான் *(1 சாமு. 21:9)*.

*5.* காலேபின் மகன் *(1 நாளா. 4:15)*.

*6.* பென்யமீன் கோத்திரத்து ஊசியின் மகன் *(1 நாளா. 9:8)*.

## ஏலாம் (Elam)

***(வாலிபம்)***

*1.* சேமுடைய குமாரன் *(ஆதி. 10:22; 1 நாளா. 1:17)*. இவனுடைய சந்ததியார் ஏலாமியர் எனப்பட்டார்கள்.

*2.* தாவீதின் நாள்களில் வாசல் காக்கிறவனாகிய மெஷெலேமி யாவின் ஐந்தாம் மகன் *(1 நாளா. 26:3)*.

*3.* செருபாபேலோடு பாபிலோனிலிருந்துத் திரும்பி வந்த ஏலாமின் புத்திரர் *1254* பேர் *(எஸ்றா. 2:7; நெகே. 7:12)*.

4. ஆசியாவின் மேற்பக்கத்திலுள்ள ஒரு நாடு. கெதர்லாகோமர் ஒரு காலத்தில் இதன் இராஜாவாயிருந்தான் (ஆதி. 14:1). பாபிலோனிய ஹமுராபி கி.பி. 1760-ல் இவர்களைத் துரத்திவிட்டிருந்தும், திரும்ப இவர்கள் பாபிலோனியரைத் தோற்கடித்து, பல வருடங்களாக அவர்களை ஆண்டார்கள்.

அநேக வருடங்களின் பின் சனகெரிப் இவர்களைத் தோற்கடித்து, ஏலாமியரைச் சமாரியாவில் குடியேற்றி இஸ்ரவேலரை ஏலாமில் வைத்தான் (எஸ்றா. 4:9).

பிற்காலங்களில் ஏலாம், மேதிய-பெர்சிய இராஜ்யத்துக்குட் பட்டிருந்தது. சூசா ஒரு விசேஷ பட்டணமாயிருந்தது.

பாபிலோனைக் கீழ்ப்படுத்த, "ஏலாமே எழும்பு" என்று ஏசாயா சொல்லுகிறான் (ஏசாயா 21:2). இது நிறைவேறிற்று. ஏலாமும் பின்பு அழிக்கப்பட்டது (எரே. 25:25; எசே. 32:24). பெந்தெகொஸ்தே நாளில் ஏலாமியரும், எருசலேமில் இருந்தார்கள் (அப். 2:9).

## ஏலி (Eli)

***(கர்த்தர் மேன்மையுள்ளவர்)***

ஏலி சீலோவில் கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியனாய் அநேக வருடங்கள் ஊழியஞ்செய்தான். சாமுவேல் இவனுக்குக் கீழ் வளர்ந்தான் (1 சாமு. 1:9; 1 இரா. 2:21).

இவனுடைய வம்ச வரலாற்றைப்பற்றி நிச்சயமாய்ச் சொல்ல முடியாவிடினும், இவன் ஆரோனுடைய மகனாகிய இத்தாமாரின் சந்ததியான்.

ஏலி பயபக்தியுள்ளவனாயிருந்தும், அவனுடைய குமாரராகிய ஓப்னியும், பினெகாசும் துன்மார்க்க நடத்தையுள்ளவர்களா யிருந்தார்கள் (1 சாமு. 2:23-25).

ஏலியினால் அவர்களை அடக்கக் கூடாமற் போயிற்று.

தேவனுடைய மனுஷன் ஒருவன் ஏலியிடம் வந்து அவனுடைய குமாரருடைய துர்நடத்தையினிமித்தம் அவனுடைய குடும்பத்தின் மேல் வரப்போகிற தேவதீர்ப்பை அறிவித்தான் (1 சாமு. 2:27-36). சாமுவேலும் தனக்கு கிடைத்த வெளிப்படுத்தலை ஏலிக்கு அறிவித்தான் (1 சாமு. 3:11-18). பெலிஸ்தரோடு யுத்தம் நடந்தபோது, ஏலியின் குமாரர் கர்த்தருடைய பெட்டியை யுத்தக்களத்துக்குக் கொண்டு போகவே, பெட்டி பிடிபட்டது. அவர்களும் கொல்லப் பட்டார்கள். இதைக் கேள்விப்பட்டு தொண்ணூற்றெட்டு வயதாயிருந்த ஏலியும் மல்லாக்காக விழுந்து மரித்தான்.

ஏலி இஸ்ரவேலை நாற்பது வருடம் நியாயம் விசாரித்தான் *(1 சாமு. 4:1-18).* இவனே முதன் முதல் பிரதான ஆசாரியனாயும், நியாயாதிபதியாயுமிருந்தவன்.

## ஏலிம் (Elim)

***(பேரீச்ச மரங்கள்)***

இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின் பாளயமிறங்கின இரண்டாம் இடம். மாராவில் கசப்பான தண்ணீரிருந்தது. ஆனால் இவ்விடத்தில் பன்னிரெண்டு நீரூற்றுகளும், எழுபது பேரிச்ச மரங்களும் இருந்தன *(யாத். 15:27).*

இது சுயெஸ் (Suez) குடாக் கடலிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள ஓர் இடமென்று சிலர் உத்தேசிக்கிறார்கள் *(எண். 33:9).* தற்காலத்தில் இது 'குருன்டென்' எனப்படும் பாலைவனம்.

## ஏவாள் (Eve)

***(ஜீவனுள்ளோருக்குத் தாய்)***

ஆதாமின் மனைவி. காயீன், ஆபேல், சேத் என்பவர்களின் தாய் *(ஆதி. 4:1).* தேவன் மனுஷனைச் சிருஷ்டித்தபின், அவனுக்கு ஏற்ற துணை வேண்டுமென்று, ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி, அவனிலிருந்து ஒரு விலா எலும்பை எடுத்து, அதை மனுஷியாக உருவாக்கி, அவனிடத்தில் கொண்டு வந்தபோது, இவள் "மனுஷி" எனப்படுவாளென்று ஆதாம் சொன்னான் *(ஆதி. 2:18-23).*

தேவன் புசிக்கக் கூடாதென்று விலக்கின மரத்தின் கனியைப் புசிக்க, சர்ப்பத்திற்கு ஏவாள் துணைக் கருவியாயிருந்ததினால், அவள் வேதனையோடு பிள்ளை பெறவும், புருஷனுக்குக் கீழ்ப் பட்டிருக்கவும் நியமிக்கப்பட்டாள் *(ஆதி. 3:16).*

ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள் என்று சொல்லி ஆதாம் தன் மனைவிக்கு "ஏவாள்" என்று பேரிட்டான் *(ஆதி. 3:20).*

கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று நாம் விலகாதிருக்கும்படி, சர்ப்பம் ஏவாளை வஞ்சித்ததைப் பவுல் எடுத்துக் காட்டுகிறான் *(2 கொரி. 11:3).*

மேலும் முதல் ஆதாம் உருவாக்கப்பட்டதினாலும், ஏவாள் வஞ்சிக்கப்பட்டு பாவத்திற்குட்பட்டதினாலும், ஸ்திரீயானவள் உபதேசம் பண்ணாமல் அமைதலாயிருக்க வேண்டுமென்றும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தக்கூடாதென்றும் பவுல் கூறுகிறான் *(1 தீமோ. 2:12-18).*

ஸ்திரீகள் சபையில் பேசுவது அழகல்ல என்றும் பவுல் சொல்லுகிறான் *(1 கொரி. 14:34,35).*

## ஏவில் மெரொதாக் (Evil Merodach)

பாபிலோனிய இராஜாவாகிய இரண்டாம் நேபுகாத்நேச்சாரின் மகனாகிய இவன் அவனுக்குப் பின் இராஜாவானான். யூதா இராஜாவாகிய யோயாக்கீன் 37 வருடம் சிறையிருந்தபின் அவனை விடுதலையாக்கி, அவனுடைய, சிங்காசனத்தை உயர்த்தி, உயிரோடிருந்த நாளெல்லாம் தனக்கு முன் போஜனம் பண்ணும்படி செய்தான் *(2 இரா. 24:27-30; எரே. 52:31-39).*

ஏவில் மெரொதாக் இரண்டு வருடம் ஆளுகை செய்தபின் இவனுடைய மைத்துனனாகிய நரிகிலிசார் இவனைக் கொன்று தானே இராஜாவானான்.

## ஏனாக், ஏனாக்கியர் (Anak, Anakim)

**(இராட்சதப் பிறவி)**

கானானைச் சுற்றிப் பார்க்க போனவர்கள், "அங்கே இராட்சதப் பிறவியான ஏனாக்கின் குமாரரையும் கண்டோம்" என்றார்கள் *(எண். 13:33).* ஏனாக்கின் தகப்பன் அர்பா. அவனுடைய மூன்று குமாரர்: சேசாய், ஆகீமான், தல்மாய். அவர்களுடைய பட்டணம் எபிரோன் *(யோசுவா. 15:14).*

யோசுவா எபிரோனிலும், மற்ற மலைத்தேசங்களிலுமிருந்த ஏனாக்கியரை நிக்கிரகம் பண்ணி, அவர்களுடைய பட்டணங்களையும் நிர்மூலமாக்கினான். காசாவிலும், காத்திலும், அஸ்தோத்திலும் மாத்திரம் சிலர் மீதியாயிருந்தார்கள் *(யோசுவா. 15:13).*

பின்பு எபிரோன் காலேபுக்கு கொடுக்கப்பட்டபோது, அவன் அங்கிருந்த ஏனாக்கியரைத் துரத்திவிட்டான் *(யோசுவா. 15:13).*

## ஏனோக்கு (Enoch)

**(கற்றுக் கொண்டவன்)**

1. காயீனுடைய மூத்த மகன். ஒரு பட்டணத்துக்கும் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது *(ஆதி. 4:17,18).*

2. யாரேத்தின் மகன். மெத்தூசலாவின் தகப்பன் *(ஆதி. 5:21).* ஆதாமுக்கு ஏழாம் தலைமுறையானவன் *(யூதா. 14).* இவன் 365 வருஷம் உயிரோடிருந்து, தேவனோடு சஞ்சரித்துக் காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார் *(ஆதி. 5:22-24).* விசுவாசத்தினாலே ஏனோக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான் *(எபி. 11:5).*

இவன் ஒரு புத்தகம் எழுதினானென்றும், அதில் சொல்லப் பட்டவை புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறதென்றும் தெரிய வருகிறது. யூதா. *14:15* வசனம் அவைகளில் ஒன்று.

உபத்திரவ காலத்தின் கடைசி பகுதியில் அதாவது இரண்டாம் *3* வருட காலத்துவக்கத்தில் இரண்டு சாட்சிகள் எருசலேமில் வந்து, பிரசங்கித்து, அற்புதங்களைச் செய்து, அந்திக் கிறிஸ்துவினால் வெட்டப்பட்டு, மரித்து, உயிர்த்தெழும்புவார்கள் என்று எழுதி யிருக்கிறது (வெளி. *11:3-12*). சிலர் இவர்கள் எலியாவும், மோசேயும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எபி. *9:27*-ன்படி மனுஷனுக்கு, மரணமும், நியாயத்தீர்ப்பும் நியமிக்கப்பட்டிருக்கிறபடியால், ஒரு தடவை மரணமடைந்த மோசே மறுபடியும் மரணமடைய தேவை யில்லை. ஆதலால் மரணத்தைக் காணாமல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கும் எலியாவும் தான். இந்த இரத்த சாட்சிகள். இந்த ஒழுங்கின்படி ஏனோக்கு மறுபடியும் வந்து, இரத்த சாட்சியாய் மரிப்பான்.

## ஏனோஸ் (Enos)

***(அழிவுள்ள)***

இவன் சேத் என்பவனின் மகன். ஆதாமுடைய பேரன் (ஆதி. *4:26; 1* நாளா. *1:1*). இவன் *905* வருடம் உயிரோடிருந்தான் (ஆதி. *5:11*). அப்பொழுது மனுஷர் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ள ஆரம்பித்தார்கள் (ஆதி. *4:26*).

## ஐபிராத்து நதி (Euphrates)

ஆசியாவின் மேற்பக்கத்திலுள்ள மகா பெரிய நதி. இதை நதியென்று யாத் *23:31*லும், பெரிய நதி என்று ஆதி. *15:18*லும் சொல்லியுள்ளது.

இது அர்மேனிய மலைகளிலிருந்து துவங்கி தென் கிழக்காய் ஓடி பெர்சிய கடலுக்குள் பாய்கிறது. தற்போது அதன் நீளம் *1780* மைல்.

ஏதேன் தோட்டத்திலிருந்த நாலாம் ஆற்றின் பெயர் ஐபிராத்து (ஆதி. *2:14*). கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த தேசத்தின் எல்லையில் ஐபிராத்து நதியும் உட்பட்டிருந்தது (உபா. *11:24*).

ஆதாதேசர் என்னும் இராஜாவை தாவீது இராஜா ஐபிராத்து நதியண்டையில் முறியடித்தான் (*2* சாமு. *8:3*). வடதேசத்தில் ஐபிராத்து நதியண்டையில் கர்த்தருக்கு ஒரு யாகமும் உண்டென்று எரேமியா கூறுகிறான் (எரே. *46:10*).

ஐபிராத் நதியண்டை கட்டப்பட்டிருந்த நான்கு தூதரை அவிழ்த்து விடும்படி சொன்ன சத்தத்தை யோவான் கேட்டான் (வெளி. 9:14).

## ஒத்னியேல் (Othniel)

இவன் கேனாசின் மகன். காலேபின் மருமகன். இவன் கீரியாத் செப்பாரைப் பிடித்ததினிமித்தம், காலேப் தன் மகள் அக்சாளை, அவனுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்தான் (நியா. 1:13; யோசுவா. 15:17). பின்பு இஸ்ரவேல் பாகால் விக்கிரகங்களைச் சேவிக்கத் தொடங்கினபடியால், கூசான்ரிஷதாயீமின் கையில் விற்கப் பட்டார்கள். இஸ்ரவேல் அவனை எட்டு வருடம் சேவித்த பின் ஒத்னியேல் எழும்பி அவனைத் தோற்கடித்து, இஸ்ரவேலை விடுதலையாக்கி 40 வருடம் நியாயம் விசாரித்தான் (நியா. 3:9-11). இவன் இஸ்ரவேலின் முதல் நியாயாதிபதி. ஆத்தாத் என்ற ஒரு குமாரன் இவனுக்கு இருந்தான் (1 நாளா. 4:13).

2. தாவீதின் நாள்களில் ஒத்னியேல் சந்ததியானான எல்தாயி என்னும் நெத்தோபாத்தியன் பன்னிரெண்டாம் சேனாதிபதியா யிருந்தான் (1 நாளா. 27:15).

## ஒநேசிப்போரு (Onesiphorus)

பவுல், தீமோத்தேயுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் ஒநேசிப்போருவின் வீட்டாருக்கு "என் வாழ்த்துதலைச் சொல்லு" என்கிறான் (2 தீமோ. 4:19). மேலும், "என் விலங்கைக் குறித்து அவன் வெட்கப்படவில்லை. ரோமாவில் என்னைத் தேடி கண்டுபிடித்தான். கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக" என்றும் சொல்கிறான்.

ஒநேசிப்போரு எபேசிய சபையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவன்.

## ஒநேசிமு (Onesimus)

***(பிரயோஜனமான)***

கொலோசெ சபையில் செல்வாக்குள்ள கிறிஸ்தவனாயிருந்த பிலேமோனின் அடிமை. இவனைக் குறித்துப் பவுல், "கட்டப் பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகன்" என்றும், வேறொரு இடத்தில் "உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன்" என்றும் சொல்லுகிறான் (பிலே. 10; கொலோ. 4:9).

இவன் தன் எஜமானின் பொருளை அபகரித்துக் கொண்டு, கொலோசெயிலிருந்து ரோமாபுரிக்குப் போன வேளையில் பவுலைச் சந்தித்துக் குணப்பட்டான்.

ஒநேசிமு பவுலுக்குப் பிரயோஜனமுள்ளவனாயிருந்த போதிலும் பிலேமோனுடைய சம்மதமில்லாமல் அவனை வைத்திருப்பது சரியல்லவென்று எண்ணி, அவனைத் திருப்பி அனுப்பினான். கொலோசெயருக்கு ஒரு நிருபமும், பிலேமோனுக்கு ஒரு நிருபமும் எழுதி, அவைகளை இவன் வசமாகவும், தீகிக்கு வசமாகவும் அனுப்பினான் (கொலோ. 4:7-9). "என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர் ஏற்றுக் கொள்ளும்'' என்று பவுல் ஒநேசிமுவைக் குறித்து பிலேமோனுக்கு எழுதியிருந்தான் (பிலே. 12).

## ஒபதியா (Obadiah)

**(கர்த்தருடைய தாசன்)**

*1.* ஆகாப் இராஜாவின் அரண்மனை விசாரிப்புக்காரன். கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவனாயிருந்தான். யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளை சங்கரித்தபோது, இவன் நூறு தீர்க்கதரிசிகளைக் கெபிக்குள் ஒளித்து வைத்துப் பராமரித்தான்.

எலியா, தான் வந்திருக்கிறதைப்பற்றி இவன்மூலம் இராஜாவுக்கு அறிவித்து, பின்பு அவன் போய் இராஜாவைச் சந்தித்து, தனக்கும் பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் இடையிலிருந்த விவாதத்தை முடிவாக்கித் தீர்த்துக் கொண்டார்கள் *(1 இரா. 18:3-16).*

*2.* சிக்லாகில் தாவீதோடு போய்ச் சேர்ந்த ஒரு பராக்கிரமசாலி *(1 நாளா. 12:9).*

*3.* யோசபாத் யூதா பட்டணங்களில் உபதேசம்பண்ணும்படி அனுப்பின ஒரு பிரபு *(2 நாளா. 17:7).*

*4.* சிறையிருப்பிலிருந்து எஸ்றாவோடு திரும்பி வந்தவர்களில் ஒருவன் *(எஸ்றா. 8:9).*

*5.* நெகேமியாவோடு உடன்படிக்கைக்குக் கையெழுத்து வைத்த ஓர் ஆசாரியன் *(நெகே. 10:5).*

*6.* பொக்கிஷ அறையைக் காவல் காத்தவர்களில் ஒருவன் *(நெகே. 12:25).*

*7.* யூதா தேசத்துத் தீர்க்கதரிசி. ஒபதியா தீர்க்கதரிசனப் புத்தகத்தை எழுதினவன் *(ஒப. 1).*

## ஒம்ரி (Omri)

**(உம்ரி காண்க)**

உம்ரி என்பவனின் பெயர் ஒம்ரி என்றும் குறித்துள்ளது *(2 இரா. 8:26; 2 நாளா. 22:3).*

## ஓர்னான் (Ornan)

*(அர்வனா காண்க)*

இந்தப் பெயர் ஓர்னான் என்று *1 நாளா. 21:15; 2 நாளா. 3:1*லும், அர்வனா என்று *2 சாமு. 24:16-20*லும் குறிக்கப்பட்டுள்ளது.

## ஒலிவமரம் (Olive)

நோவா பேழையிலிருந்து வெளியே விட்ட புறா, ஒலிவ மரத்தின் இலையைக் கொத்திக்கொண்டு வந்ததென்று சொல்லியுள்ளது (*ஆதி. 8:11*). இந்த மரம் பலஸ்தீனாவில் அதிகமாகக் காணப்பட்டது. இது இராஜ விருட்சம் (*நியா. 9:8*), நேர்த்தியும் பச்சையுமான மரம் (*எரே. 11:16*). அலங்காரமானது (*ஓசியா. 14:6*), பழம் உள்ளது (*யாக். 3:12*), எனப் பலவிதமாய் விவரித்துள்ளது. ஒலிவ மரம் வளருகிறபோது, அதில் நல்ல ஜாதி மரக்கொப்பை ஒட்ட வைத்தால், நல்ல பழம் கொடுக்கும். காட்டொலிவ மரம், நல்ல ஒலிவ மரம் என்பவைகளைப் பற்றி ரோமர் *11:24*இல் சொல்லியுள்ளது.

சாலொமோன் கட்டின தேவாலயத்தின் கதவுகளும், கேருபீன் முதலியவைகளும் ஒலிவ மரத்தால் செய்யப்பட்டன (*1 இரா. 6:23; 31-33*). அக்காலத்தில் ஒலிவ எண்ணெய் எரிக்கிறதற்கும், காயங்கள் சுகமாக்குவதற்கும் உபயோகிக்கப்பட்டன (*லூக்கா. 10:34*).

## ஒலிவமலை (Mount of Olives)

இது எருசலேமுக்குக் கிழக்கே கெதரோன் ஆற்றருகே இருந்த நான்கு சிகரங்கள் உள்ள ஒரு மலைத் தொடர்.

தாவீது அப்சலோமுக்குத் தப்பிப் போகையில், ஒலிவ மலை மேல் ஏறிப்போனான் (*2 சாமு. 15:30*). கர்த்தரின் இரண்டாம் வருகையில் அவருடைய பாதங்கள் ஒலிவ மலைமேல் நிற்கும் (*சக. 14:4*). கர்த்தரின் வருகையின் இரண்டாம் பகுதியில் பண்டிகை நாள்களில் கூடாரம் போடும்படி ஒலிவக் கிளைகளைக் கொண்டு வருவது வழக்கமா யிருந்தது (*நெகே. 8:15*).

இயேசு கழுதை மேலேறி ஒலிவ மலையின் அடிவாரத்தின் வழியாக எருசலேமுக்குப் போனார். பின்பு ஒலிவ மலை அடிவாரத்துக்கு வந்தபோது, அந்த நகரத்துக்காகக் கண்ணீர் விட்டார் (*லூக்கா. 19:35-37,41*). கடைசி பஸ்காப் பண்டிகையின் பின் இயேசுவும் சீஷரும் ஒலிவ மலைக்குப் போனார்கள் (*மத். 26:30*). கெத்சமனே தோட்டம் அதனடியிலிருந்தது.

அக்காலத்தில் இந்த மலை மேல் நின்று, சந்திரத் தோற்றத்தைப் பார்த்து, மற்றவர்களுக்கு அறிவிப்பது வழக்கமாயிருந்தது.

இநத மலைத்தொடர் மூன்று மைல் நீளம் உள்ளது. இதன் தெற்குப் பக்கமாயுள்ள சிகரத்தில் சாலொமோன், காமோசுக்கும் மோளோகுக்கும் மேடைகள் கட்டினதினிமித்தம் "இடறலின் மலை" என்ற பெயர் வந்தது *(1 இரா. 11:7; 2 இரா. 23:13)*. சீலோவாம் ஊர் இதற்குத் தெற்கேயுள்ளது. வலது பக்கத்தில் ஓர் உயரமான சிகரம் உண்டு. அதிலிருந்து ஆண்டவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப் பட்டார் என தொடக்கத்தில் எண்ணப்பட்டது *(அப். 1:10,11)*.

ஆனாலும், தேவாலயம் இருந்த மலையிலிருந்து கிழக்கே அரை மைல் தூரத்தில் இருக்கிற அரை மைல் உயரமான சிகரமே, இயேசு பரலோகம் போன மலையென்று இப்போது நிச்சயித்திருக்கிறார்கள் *(லூக்கா. 24:50)*. இதுவே ஒலிவ மலை.

இப்பொழுது இருக்கிற ஒலிவ மலை முழுவதும் வித்தியாச மானது. அங்கிருந்த அநேக ஆலயங்களும் அழிக்கப்பட்டன. இயேசு பரத்துக்கு ஏறின இடத்தில் ஒரு சிறு ஆலயம் துருக்கியரால் கட்டப்பட்டுள்ளது. இயேசுவின் பாத அடையாளமுள்ள கற்பாறை இருக்கிறதாகவும் சொல்லுகிறார்கள். அவர் பரத்துக்கு ஏறின இடத்தில் ரஷியர் ஒரு கட்டடம் கட்டியிருக்கிறார்கள்.

## ஒலிவமலைப் பிரசங்கம்

இயேசு தமது உலக ஜீவியத்தின் கடைசி வாரத்தில் பாடுபடுகிறதற்கு இரண்டு நாள்களுக்கு முன் ஒரு செவ்வாய்க்கிழமை பின்வருங்காரியங்களைப் பற்றித் தமது சீஷருக்கு வெளியிட்டார்.

அவர், தேவாலயத்தை விட்டுப் புறப்படுகையில் சீஷர் அந்தக் கட்டடங்களை அவருக்குக் காண்பித்தபோது, இவைகள் எல்லாம் அழிக்கப்படும் நாள்கள் வரும் என்றார். பின்பு அவர் தேவாலயத்துக்கு நேராக ஒலிவ மலையில் உட்கார்ந்திருக்கையில், நான்கு சீஷர் அவரிடத்தில் வந்து, அவர் சொன்ன சம்பவம் எப்போது நடக்கும் என்றும், அவருடைய இரண்டாம் வருகை எப்படி இருக்கும் என்றும் கேட்டார்கள். அவர் பிரதியுத்தரமாக எருசலேமின் அழிவைப் பற்றியும், தாம் மகிமையோடு திரும்பி வருகிறதைப்பற்றியும் அவர்களோடு பேசினார்.

தமது இரண்டாம் வருகை சீக்கிரம் நடக்கும் என்றும், ஆனால் அதன் நாளையும், நாழிகையையும் தமக்குத் தானும் சொல்ல இயலாதென்றும், இவைகளுக்கு முன் சில சம்பவங்கள் நடக்கும் என்றும் சொன்னார். அவையாவன :

1. தாம் மரித்து, உயிர்த்தெழுந்தபின், உலகத்திலும் திருச்சபையிலும் துன்புறுத்தல்கள், துயரங்கள், உபத்திரவங்கள் உண்டாகும். பழையவை ஒழிந்து புதியவை ஏற்படுவதற்கு அடையாளமாக அநேகக் காரியங்கள் சம்பவிக்கும் என்றார்.

உதாரணமாக, எருசலேம் தேவாலயம் அழிக்கப்படும் என்றும், பலிகளும், யூதருடைய சடங்காச்சாரங்களும் அற்றுப்போகும் என்றும் சொன்னார்.

மேலும், அநேகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பி, ஆள்களை வஞ்சிப்பார்கள். பஞ்சங்களும், கலகங்களும் உண்டாகும். ஆனால் இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம் *(மாற்கு. 13:8)*. இவைகள் மாத்திரமல்ல, உலகம் முழுவதும் சுவிசேஷம் கூறப்படும் என்றார்.

2. கடைசி நாள்களில், மேசியாவின் இராஜ்யம் பகிரங்கமாய் ஸ்தாபிக்கப்படும். இயேசு மகிமையோடும், வல்லமையோடும், மேகங்களின் மேல் வருகிறதைக் காண்பார்கள். அதற்கு முன் வானங்களிலும், பூமியிலும் அடையாளங்கள் காணப்படும். அவர் வரும்போது தாம் தெரிந்து கொண்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார் *(மாற்கு. 13:1-27; மத். 24:3-25; லூக்கா. 21:5-36)*.

நாம் இவைகளை நன்றாய் விளங்கிக்கொண்டால் கால நேரம் எப்பொழுதென்று நிர்ணயிக்க வேண்டியதில்லை. துன்புறுத்தல்கள் வருவது முடிவு காலம் வருகிறதற்கு அடையாளமாகும். நாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டுமென்பதற்காகவே அடையாளங்கள் கொடுக்கப்படும்.

ஆகவே, தேவனுடைய இராஜ்யம் நிலைபெறும்வரை நாம் தரிசித்து நடக்கிறவர்கள் போல் இராமல், விசுவாசித்து நடக்கிற வர்களாயிருக்கவேண்டும்.

அடையாளங்களைக் காணும்போது, நாம் அவைகளைக் கவனித்து, இராஜ்யம் சமீபம் என்று அறிந்து, விழித்துக் காத்திருப்பதே புத்தியுள்ள காரியம். தேவனுடைய நோக்கமும் அதுவே.

## ஓக் (Og)
### *(கி.மு. 1452)*
### *(நீண்ட கழுத்துடையவன்)*

பாசான் இராஜா. இவனுக்கு 60 பட்டணங்கள் உள்ள ஒரு தேசம் இருந்தது. அவைகளில் அஸ்தரோத், எத்ரேயி என்பவை இராஜரீகப் பட்டணங்கள்.

இவன் இஸ்ரவேலுக்கு விரோதமாய் வந்தபோது, எத்ரேயுவில் தோற்கடிக்கப்பட்டான் *(எண். 21:32-35)*.

இவன் ஓர் இராட்சதன். அவனுடைய கட்டில் இரும்பினால் செய்யப்பட்டு, ஒன்பது முழ நீளமும், நான்கு முழ அகலமுமா யிருந்தது.

அறுபது பட்டணங்கள் உள்ள அவனுடைய தேசம் பின்பு மனாசேயின் பாதி கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டது (உபா.3:13). இவனுடைய தோல்வியைப்பற்றி வேதாகமத்தில் பல முறைகளில் குறிக்கப்பட்டுள்ளது (யோசுவா. 9:10; நெகே. 9:22; சங். 135:11; 136:20).

## ஓசன்னா (Hosanna)
### (கர்த்தரே இரட்சியும்)

இயேசு எருசலேம் தேவாலயத்துக்குப் பவனி போகையில், ஜனங்கள் ''உன்னதத்தில் ஓசன்னா'' என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள் (மத். 21:9; மாற்கு 11:9; யோவான் 12:13).

கூடாரப் பண்டிகை நாள்களில் யூதர் இந்த வார்த்தையை சங். 118:25, 26-லிருந்து எடுத்துச் சொல்வது வழக்கம். "கர்த்தரே இரட்சியும்" என்பது இதன் அர்த்தம். தொடக்கத்தில் இது ஒரு விண்ணப்பம் போல் சொல்லப்பட்டது. சுவிசேஷங்களில் மகிழ்ச்சியான வாழ்த்துதலைக் கருதுகிறது.

## ஓசெயா (Hoshea)
### (கர்த்தர் உதவி செய்கிறார்)

இவன் இஸ்ரவேல் இராஜ்யத்தின் பத்தொன்பதாவது கடைசி இராஜா (கி.மு. 721). இவனுக்கு முன்னிருந்த பெக்கா அரசாண்ட நாள்களில் அசீரியர் இஸ்ரவேல் இராஜ்யத்தின் அநேகப் பகுதிகளைக் கைப்பற்றி இராஜாவையும் திறை கொடுக்கப் பண்ணினார்கள். பின்பு ஓசெயா, பெக்கா இராஜாவைக் கொன்று போட்டு, தான் இராஜாவானான் (2 இரா. 15:26-30).

இவனும் சில காலம் கப்பங் கட்டிக்கொண்டிருந்தபின், எகிப்தின் உதவியை நம்பி, கப்பம் கொடாமல் விட்டபோது, அசீரிய இராஜாவாகிய சல்மனாசார் ஓசெயாவைப் பிடித்துச் சிறையில் போட்டான். பின்பு சமாரியாவை முற்றுகை போட்டு, மூன்று வருடங்களில் பிடித்து, இஸ்ரவேலரை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டு போனான். (கி.மு. 722-2 இரா. 17:3-5).

ஏசாயாவும் 10ஆம், 11ஆம் அதிகாரங்களில் இந்தச் சம்பவங்களைப் பற்றிப் பேசுகிறான்.

2. யோசுவாவுக்கும் இப்பெயர் இருந்தது (எண். 13:8; உபா. 32:44).

3. உடன்படிக்கைக்கு முத்திரை போட்டவர்களில் ஒருவன் (நெகே. 10:23).

4. தாவீதின் நாள்களில் இருந்த எப்பிராயீமின் தலைவன் (1 நாளா. 27:20).

## ஒப்பீர் (Ophir)

**(செழுமை)**

*1.* இவன் சேமின் சந்ததியானாகிய யொக்கானின் குமாரன் *(ஆதி. 10:29; 1 நாளா. 1:23).*

*2.* ஒரு துறையின் பெயர். இது தென் அரேபியாவிலுள்ளதென்று எண்ணுகிறார்கள். யொக்தானின் சந்ததியார் அங்கே குடியேறி இருந்திருக்கலாம். இது தங்கத்திற்குப் பெயர் பெற்ற இடம் *(யோபு. 22:24; 28:16; சங். 45:9; ஏசாயா. 13:12).* சாலொமோன், ஈராம் எனபவர்களின் கப்பல்கள் ஒப்பீருக்குப்போய் பொன் கொண்டு வந்தன *(1. இரா. 9:28; 10:11; 2 நாளா. 8:18; 9:10).* யோசபாத் பொன்னுக்காக ஒப்பீருக்கு அனுப்பின கப்பல்கள் எசியோன் கேபேரில் உடைந்து போயின *(1 இரா. 22:48).* தேவாலயத்தின் வேலைக்காகத் தாவீது ஒப்பீரின் தங்கத்தைச் சேர்த்து வைத்தான் *(1 நாளா. 29:4).*

## ஒப்னி (Hophni)

ஒப்னி என்பதன் பொருள் "சண்டைக்காரன்." இவன் ஏலியின் மகன். பினெகாசின் சகோதரன் *(1 சாமு. 1:3).* இவனும் இவனுடைய சகோதரனும், பேலியாளின் மக்களெனப்பட்டார்கள் *(1 சாமு. 2:12).* இவர்கள் ஆசாரிய ஊழியம் செய்தபோதிலும், இச்சை பேராசை முதலிய துர்க்குணங்கள் அவர்களில் காணப்பட்டன. தகப்பனுடைய புத்திமதிக்கும் இணங்காதவர்களாயிருந்தார்கள்.

பலியிடப்பட்டவைகளில் ஆசாரியருக்குப் போகவேண்டிய பங்கிலும் அதிகமாக பலவந்தமாய் எடுத்தார்கள் *(1 சாமு. 2:13-16).*

இதினிமித்தம் மனுஷர் கர்த்தருடைய காணிக்கையை வெறுத்தார்கள் *(1 சாமு. 2:17-22).* இதன் காரணமாக ஏலியின் குடும்பமும் சபிக்கப்பட்டது. ஒருமுறை தேவனுடைய மனுஷன் ஒருவனும், மறுமுறை இளைஞனான சாமுவேலும், ஏலியினுடைய குடும்பத்தின்மேல் வரும் தேவதண்டனையை அவனுக்கு அறிவித்தார்கள் *(1 சாமு. 2:27-36; 3:11-14).*

பின்பு பெலிஸ்தரோடு நடந்த யுத்தத்தில், இஸ்ரவேலர் தோற்கடிக்கப்பட்டு, ஒப்னியும், பினெகாசும் கரத்தருடைய பெட்டியை யுத்த களத்திற்குக் கொண்டுபோனபொழுது, பெட்டி பிடிக்கப்பட்டது. ஏலியின் குமாரர் கொல்லப்பட்டனர் *(1 சாமு. 4:1-11).* இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட ஏலியும், மல்லாக்காக விழுந்து செத்தான் *(1 சாமு. 4:10-18).*

பிற்காலங்களில் ஏலியின் சந்ததியானான அபியத்தார் ஆசாரிய நிலையிலிருந்து விலக்கப்பட்டான் *(1 இரா. 2:26, 35)*. இதனால், அந்தக் குடும்பம் ஆசாரிய ஊழியத்திலிருந்து விலக்கப்பட்டது.

## ஓரேப் (Horeb)

***(பாழான)***

*1.* ஓரேபும் சீனாயும் ஒன்றே. சீனாய் ஒரு மலை என்றும், வனாந்தரம் என்றும், பழைய ஏற்பாட்டில் *35* தடவையும், அதே மலை ஓரேப் என்று *17* தடவையும் குறிக்கப்பட்டுள்ளது. உபாகமத்தில் அநேக இடங்களில் ஓரேப் என்றே சொல்லியுள்ளது.

இந்த இரண்டு பெயர்களையுமுடைய மலை தேவபர்வத மென்றும் அழைக்கப்படுகிறது.

மோசே பார்வோன் வீட்டை விட்டபின் சீனாய் குடா நாட்டுக்குக் கிழக்கேயுள்ள மீதியான் தேசத்துக்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டு, வனாந்தரத்துக்கு மேற்குப் பக்கமாயுள்ள தேவ பர்வதம் என்னும் ஓரேப் மலைக்கு வந்தபோது அவனுக்குத் தேவதரிசனம் கிடைத்தது *(யாத். 3:1)*.

மோசேயைத் தவிர எபிரெயரில் எலியா மாத்திரம் இந்த மலைக்குப் போனான் *(1 இரா. 19:8)*.

*2.* ஓரேப் மீதியானியரின் அதிபதி எப்பிராயீமர் இவனை ஓரேப் என்னும் மலையில் கொன்றுபோட்டு, அவன் தலையைக் கிதியோனிடம் கொண்டு போனார்கள் *(நியா. 7:25)*. ஏசாயாவும் இதைப்பற்றி ஏசாயா *10:26*இல் குறித்திருக்கிறார். தேவனுடைய சத்துருக்களை ஓரேபுக்கும், சேபுக்கும் சமமாக்கும் என்றும் சொல்லியுள்ளது *(சங். 83:11)*.

## ஓர் மலை (Mount Hor)

*1.* இஸ்ரவேலர் காதேசிலிருந்துப் புறப்பட்டு, ஏதோம் தேசத்து எல்லையில் இருக்கிற ஓர் என்னும் மலையில் பாளயம் இறங்கினார்கள். ஆரோன் அந்த மலையின்மேல் ஏறி மரண மடைந்தான் *(எண். 33:37,38)*.

*2.* பலஸ்தீனாவின் வட எல்லையாகிய ஓர் என்னும் மலை எர்மோன் மலையாயிருக்கலாம் *(எண். 34:7,8)*.

## ஓனான் (Onan)

*("பலமுள்ளவன்")*

கானானிய ஸ்திரீ ஒருத்தி யூதாவுக்குப் பெற்ற இரண்டாம் மகன். இவனுடைய மூத்த சகோதரன் மரித்தபோது, அவனுடைய மனைவி மூலம் அவனுக்குச் சந்ததி உண்டாக்கச் சம்மதியாததினால், கர்த்தர் இவனை அழித்துப் போட்டார் (*ஆதி. 38:8-10, எண். 26:19; 1 நாளா. 2:3*).

## கபத்தா (Gabbatha)

*(தளவரிசை - மேடு)*

இது அந்தோனியா கோபுரத்துக்கு அருகில் இருந்த மேடை. இந்த இடத்திலுள்ள நியாயாசனத்தின் மேல் உட்கார்ந்து, பிலாத்து இயேசுவை யூதர் கையில் ஒப்புக் கொடுத்தான் (*யோவான். 19:13*).

## கபாலஸ்தலம் (Place of skull)

இது ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்ட இடம். கபால ஸ்தலம் என்று அர்த்தம் கொள்ளும் கொல்கொதா (*மத். 27:33; மாற்கு. 15:22; லூக்கா. 23:33; யோவான். 19:17*). எபிரெய பாஷையிலே "கொல் கொதா" எனப்பட்டது. கல்வாரி என்ற பெயர் லூக்கா *23:33*இல் ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

கபாலஸ்தலம் என்பது காரணப் பெயர் :

(1) கபாலங்கள் (தலையோடுகள்)-அவ்விடத்தில் காணப்பட்டன என்று சொல்லுகிறார்கள்.

(2) இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் முற்காலங்களில் ஒரு தலையோட்டு உருவமான மலையென்பதும் இணங்கக்கூடியது.

(3) ஆதாமுடைய தலையோடும் அங்கே காணப்பட்டது என ஒரு பாரம்பரியமுண்டு.

ஆனாலும் அந்த இடம் இப்போது இருக்கிற "பரிசுத்த கல்லறை" தேவாலயத்தின் சுற்றெல்லைக்குட்பட்டிருக்கிறதாக நிச்சயித்திருக்கிறார்கள். இன்னும் சிலர் எரேமியாவின் குகை என்ற இடத்துக் குட்பட்டிருக்கிறதென்கிறார்கள்.

## கப்பத்தோக்கியா (Cappadocia)

இது சின்ன ஆசியாவிலுள்ள ஒரு பெரிய தேசம். ரோமருடைய ஆதிக்கத்துக்குள்ளிருந்தது. மத்திய ஆசியாவுக்கும் கருங்கடல் துறைகளுக்கும் இடையிலுள்ள வர்த்தகப் பாதை இதற்கூடாய்ப் போனதால் இது செழிப்பான தேசமாயிருந்தது.

இங்கிருந்த யூதரும் பெந்தெகோஸ்தே நாளில் எருசலேமுக்குப் போயிருந்தார்கள் (அப். 2:9).

பேதுரு தன் முதலாம் நிருபத்தில் இங்கே சிதறியிருந்த யூதரைக் குறித்தும் எழுதுகிறான் (1 பேதுரு. 1:1)

## கப்பர்நகூம்
## (Capernaum)
### (நாகூமின் ஊர்)

இது கலிலேயாக் கடலுக்கு வடமேற்கில் இருந்த ஒரு பட்டணம். இயேசு நாசரேத்தை விட்டுப்போக நேர்ந்தபோது, கப்பர்நகூமிலே வாசம்பண்ணினார் (மத். 4:13). அக்காலத்தில் இது கடற்கரையோரத்தில் இருந்த ஓர் விசேஷப்பட்டணம். அங்கே ஓர் ஆயத்துறையும் இராஜாவின் மனுஷனுடைய வீடும் இருந்தன (மத். 9:9; யோவான் 4:46). அங்கே இருந்த ரோமப் பட்டாளத்தின் நூற்றுக் கதிபதி யூதருக்காக ஒரு ஜெப ஆலயத்தைக் கட்டினான் (மத். 8:5; லூக்கா. 7:1).

இயேசுவின் ஊழியம் இவ்விடத்தில் அதிகமாய்ச் செய்யப் பட்டது.

ஜெப ஆலயத்தில் அசுத்த ஆவியுள்ள மனுஷனைச் சுகமாக்கினார் (மாற்கு. 1:23-26). சீமோனுடைய மாமியின் ஜுரத்தை நீக்கினார் (மாற்கு. 1:31). படுக்கையிலிருந்த திமிர்வாதக்காரனுடைய பாவத்தை மன்னித்து, அவனை எழுந்து நடக்கச் செய்தார் (மத். 9:2-7; லூக்கா. 5:18-25). ஆயத்துறையில் இருந்த மத்தேயுவை அழைக்கவே, அவன் அவருக்குப் பின் சென்றான் (மத். 9:9). நூற்றுக் கதிபதியின் வேலைக்காரனைச் சுகப்படுத்தினார் (மத். 8:5). ஜெப ஆலயத் தலைவனாகிய யவீருவின் குமாரத்தியைச் சொஸ்தமாக்கினார் (மாற்கு. 5:22). இராஜாவின் மனுஷனுடைய குமாரன் ஒருவனைப் பிழைக்கச் செய்தார் (யோவான் 4:46). வரிப்பணம் கொடுக்க மீனின் வாயிலிருந்து வெள்ளிப்பணம் கிடைக்கச் செய்தார் (மத். 17:27). ஜீவ அப்பத்தைப்பற்றி, அங்கிருந்த ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார் (யோவான் 6:59).

கப்பர்நகூம் இயேசுவின் பட்டணம் என்று குறித்துள்ளது (மத். 9:1). அங்கே அவர் போயிருந்தபோது வீட்டிலே சீஷருக்குத் தாழ்மையைப்பற்றி உபதேசம் பண்ணினார் (மாற்கு. 9:33-37).

கடைசியாய் இயேசு இப்பட்டணத்தைக் குறித்து, “உங்களுக்கு ஐயோ” என்றார் (மத். 11:23; லூக்கா. 10:15). அவ்விதமே இந்தப் பட்டணம் சமூலமாய் அழிந்து, அது இருந்த இடமும் தெரியாமல் போய்விட்டது.

## கமாலியேல் (Gamaliel)

***(கர்த்தரின் வெகுமதி)***

*1.* கமாலியேல் சீமோனின் குமாரன். இல்லேலின் பேரன். ஒரு பரிசேயன், நியாயசாஸ்திரி ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தினன். இவனுக்கு "என் ஆசாரியன்" என்ற கருத்துள்ள "ரபீ" என்பதோடு, "எங்கள் ஆசிரியன்" என்ற "'ரபான்" பட்டமும் வழங்கிற்று.

பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் செய்த பிரசங்கத்தினால் ஆலோசனைச் சங்கத்தார் மூர்க்கமடைந்து, அவர்களைக் கொலை செய்ய வகை தேடினபோது, கமாலியேல் அவர்களுக்காகப் பேசி, அவர்களுடைய கிரியை மனுஷனால் உண்டானதானால் அழிந்துபோம், தேவனால் உண்டாயிருந்ததானால் தேவனோடு போர் செய்கிறவர்களாவோம் என்று சொல்லி, அவர்களை விட்டு விடும்படி ஆலோசனை சொன்னான் *(அப். 5:33-40).*

பவுல், இந்தக் கமாலியேல் தன்னைப் படிப்பித்து, வேதப் பிரமாணத்தின்படி திட்டமாய்ப் போதித்தானென்றும் கூறுகிறான். *(அப். 22:3).*

*2.* மனாசே கோத்திரத்தில் பெதாசூரியன் குமாரனாகிய கமாலியேல் அந்தச் சந்ததிக்குச் சேனாபதி. வனாந்தரப் பிரயாணத்தில் குடிமதிப்பு எழுத இவன் உதவியாயிருந்தான். (எண். *1:10; 2:20; 7:54; 10:23).*

## கர்மேல் (Carmel)

***(தேவனுடைய திராட்சைத் தோட்டம்)***

*1.* இது பலஸ்தீனாவில் கலிலேயாக்கடல் அருகிலிருந்து மத்திய தரைக்கடல் மட்டும் போகிற *13* மைல் நீளமுள்ள ஒரு மலைத் தொடர். இங்கே *500* அடி உயரமுள்ள ஒரு சிகரத்தில் "பரி. ஏலியஸ்" என்னும் ஒரு கன்னியாஸ்திரி மடம் இருக்கிறது.

யோசுவா முறிய அடித்தவர்களில் கர்மேலுக்கடுத்த யொக்னியாமின் இராஜாவும் ஒருவன் *(யோசுவா. 12:22).*

ஆசேர் கோத்திரத்துக்கு இது கொடுக்கப்பட்டது *(யோசுவா. 19:26).*

எலியாவும், பாகாலின் தீர்க்கதரிசிகளும் விவாதம் செய்த இடம் *(1 இரா. 18:19).*

எலிசாவும் அங்கே போக்குவரத்தாயிருந்தான் *(2 இரா. 2:25).*

சூனேமியாளும் அங்கே போனாள் *(2 இரா. 4:25).* "கர்மேல்" என்னும் சொல் உவமைப்பேச்சாய் உபயோகிக்கப்பட்டது. அது

அழகு, (உன். 7:5) செழிப்பு, (ஏசாயா 35:2) உறுதியான நிலை, (எரே. 46:18) செல்வாக்கான ஜீவியம் (எரே. 50:19) என்பவைகளைக் குறிக்கும்.

மேலும் "கர்மேல்" சோர்ந்து போகுதலுக்கும், கர்த்தரின் பழி வாங்குதலுக்கும் (நாகூம் 1:4) அழிவுக்கும், (ஆமோஸ் 1:2; ஏசாயா. 33:9) ஒப்பிடப்பட்டுள்ளது.

2. எபிரோனுக்குத் தெற்கேயுள்ள யூதாவின் பட்டணம். கர்மேலில் நாபாலுக்கு ஆட்டு மந்தைகளும் இருந்தன (1 சாமு. 25:2).

சவுல் இராஜா அமலேக்கியரை மடங்கடித்தபின் அங்கே ஒரு ஜெயஸ்தம்பம் நாட்டினான் (1 சாமு. 15:12).

கர்மேலியனாகிய எஸ்ராயின் வீடு அங்கே இருந்தது (2 சாமு. 23:25).

## கலிலேயா (Galilee)

### (வட்டம்)

இது பலஸ்தீனாவின் வட பக்கமான தேசம். யோசுவாவின் நாள்களில் நப்தலி கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டது. கேதேஸ் என்னும் அடைக்கலப் பட்டணம் அங்கே இருந்தது (யோசுவா. 20:7). சாலொமோனின் நாள்களில் ஆசேர் கோத்திர நாடும், இதற்குச் சேர்ந்திருந்தது. சாலொமோன் இங்கிருந்த இருபது பட்டணங்களை ஈராமுக்குக் கொடுத்தான் (1 இரா. 9:11). இரண்டாம் யெரொபெயாம் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு, சம பூமியில் கடல் மட்டுமுள்ள இஸ்ரவேலின் தேசத்தைச் சேர்த்துக்கொண்டான் (2 இரா. 14:25, 27). பழைய ஏற்பாடு நாள்களில் ஆசேர், நப்தலி, செபுலோன், இசக்கார் தேசங்களெல்லாம் கலிலேயாவுக்குச் சேர்ந்திருந்தன. அப் போது அது நீளம் அறுபது, அகலம் முப்பது மைல் விசாலமுள்ள தேசமாயிருந்தது. அங்கே குடியேறியவர்களுள் யூதரைப் பார்க்கிலும் புறஜாதியார் அநேகராயிருந்ததினால், புறஜாதியாருடைய கலிலேயாவெனப்பட்டது (ஏசாயா. 9:1). அவர்களுடைய பேச்சிலும் வித்தியாசமிருந்தது. யூதர் கலிலேயரைக் குறைவானவர்களென்று மதிப்பிட்டனர்.

கலிலேயரும் மேசியாவின் வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். ஆகவே இயேசு அங்கே போனபோது, அவரை ஏற்றுக்கொண்டு அவருடைய தூதை அங்கீகரித்தனர்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில், பலஸ்தீனா மூன்று மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

யூதேயா, சமாரியா, கலிலேயா. கலிலேயாவும் இருபாகங்கள் உடையது. மேல் கலிலேயா-காடுகள் நிறைந்த, ஜனம் குறைவான

மலை நாடு; கீழ்க் கலிலேயா கடலருகேயுள்ளது. செழிப்பும், ஜனத்தொகையுமுள்ள தேசமாயிருந்தது. சுவிசேஷ ஊழியம் அதிகமாய் அங்கே நடந்தது.

இயேசுவின் நாள்களில் இது ரோம ஆதிக்கத்துக்குள்ளிருந்தது. மகா ஏரோது கி.மு. 37-கி.பி.4 வரை இராஜாவாயிருந்தபின், அவன் மகன் ஏரோது அந்திப்பா கி.பி. 40 வரை அரசாண்டான்.

கலிலேயாவிலுள்ள விசேஷப் பட்டணங்கள்: நப்தலியிலுள்ள காதேஸ், கோராசீன், பெத்சாயிதா, கப்பர்நகூம் முதலியன. கடலுக்கு வடபக்கத்திலுள்ளவை நாசரேத், கானா, நாயீனும் அங்கேயுள்ளது.

அத்தேசத்துக் குடிஜனம், யூதர், கானானியர், அசீரியர் முதலியவர்கள். அத்தேசத்தாரின் பேச்சில் வித்தியாசமிருந்தது. கலிலேயனாகிய பேதுருவை நோக்கி, அங்கே நின்றவர்கள், "உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது" எனறார்கள் (மத். 26:73).

ஆகிலும், இயேசுவும் அவருடைய சீஷரில் அதிகமானவர்களும் இத்தேசத்தார்கள். கலிலேயாவில் நடந்த ஊழியத்தைப் பற்றியே முதல் மூன்று சுவிசேஷகரும் எழுதியுள்ளனர்.

## கலிலேயாக் கடல் (Sea of Galilee)

இது யோர்தான் நதியைச் சேர்ந்தது. பதின்மூன்று மைல் நீளமும், எட்டு மைல் அகலமுமுள்ள கடல். பழைய ஏற்பாட்டில், கின்னரேத் கடல், கின்னரோத் கடல் என்றும் (எண். 34:11; யோசுவா. 12:3), புதிய ஏற்பாட்டில், (லூக்கா. 5:1இல்) கெனெசரத்துக் கடல் என்றும் (யோவா. 21:1ல்), திபேரியாக் கடல் என்றும் குறித்துள்ளது. இயேசுவின் நாள்களில் பெத்சாயிதா, கப்பர்நகூம், கோராசின், திபேரியா என்னும் பட்டணங்கள் இந்தக் கடலைச் சுற்றிவரக் கட்டப்பட்டிருந்தன. மீன் வியாபாரம் மும்முரமாய் நடந்தது. இயேசுவுடைய சீஷர்களில் அநேகர் இக்கடலில் மீன் பிடித்தார்கள்.

இக்கடலில் தண்ணீர் தெளிவானதும், சுத்தமாயுமிருந்தமையால் ஜனங்கள் தங்கள் தேவைகளுக்கு இதை உபயோகித்தனர்.

பொதுவாய் அமைதியாய் இருக்கும் இக்கடல், சில வேளைகளில் மலைப்பகுதிகளிலிருந்து புயல் காற்றடித்து, அலைகள் உண்டாகி, படகுகளைச் சேதப்படுத்துவதுண்டு (மத். 8:23, 24; 14:24).

இப்போது இதன் பெயர் "யாம் கினரெற்"

## கலிலேயா மலை

இயேசு உயிர்த்தெழுந்தபின், அவர் சொன்னபடி, சீஷர் கலிலேயா மலைக்குப் போனார்கள். அவர் அவர்களிடம் வந்து, "சகல

அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுங்கள்” என்றார் *(மத். 28:16).*

## கல்தேயா (Chaldea)

ஆரம்பத்தில் பாபிலோனியாவின் தென்கிழக்குப் பக்கம் கல்தேயா எனப்பட்டு, பின்பு முழு பாபிலோனியாவுக்கும் இப்பெயர் வழங்கலாயிற்று. மெசொபொத்தோமியாவின் ஒரு பகுதியாகிய பாபிலோனியா, 400 மைல் நீளம், 100 மைல் அகலமான தேசம்.

அராபியா தேசத்திலிருந்து கல்து என்னும் ஒரு ஜாதியார் வந்து குடியேறியதினிமித்தம், இப்பெயர் கொடுக்கப்பட்டது.

பின்பு கல்தேயனாகிய நெபோபிலாசர் (Neboplasser) கி.மு. 626இல் பாபிலோனின் இராஜாவாகி, தன் இராஜ்ய வம்சத்தை நிலை நிறுத்தும்படி, கல்தேய குலத்தை மேலாக்கினான். அவனுக்குப் பின் நேபுகாத்நேச்சார், எவில்மேரொதாக், நேபோநிதஸ், பெல்ஷாத்சார் என்பவர்கள் அரசாண்டார்கள்.

தானியேலின் நாள்களில் பாபிலோனியர் கல்தேயரெனப் பட்டார்கள் *(தானி. 5:7).*

மேதியனாகிய தரியு இராஜா ஒரு கல்தேயன் *(தானி. 9:1).*

ஊர் என்ற முக்கியப் பட்டணம் கல்தேயாவில் உள்ளது.

## கல்தேயன் (Chaldean)

கல்தேய தேசத்தான். கல்தேயர் தொடக்கத்தில் அராபியாவி லிருந்து வந்து குடியேறினார்கள். கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் முன்னேறி வந்து பாபிலோனியாவைக் கீழ்ப்படுத்தினார்கள். மெரோடாக்பலாதன் (Merodach Baladan) ஒரு கல்தேயன் *(ஏசாயா. 39:1).* ஆனால் கல்தேய இராஜாக்களில் பேர் பெற்றவன் நெபுகாத் நேச்சார். கல்தேயரின் ஊர் என்ற பட்டணமே அவர்களுடைய முக்கியப் பட்டணம் *(ஆதி. 11:28; 15:2; நெகே. 9:7).*

கல்தேயனென்று ஜோசியனுக்கும், மாயவித்தைக்காரனுக்கும் சொல்லியுள்ளது *(தானி. 2:2; 4:7).*

## காசா, காத்சா (Gaza)

காசா என்பதின் பொருள் “அரணிப்பான இடம்.” இது பெலிஸ்தருடைய முக்கிய ஐந்து பட்டணங்களில் ஒன்று. சிம்சோனின் ஜீவிய சரித்திரத்தில் இந்த இடம் பலமுறை குறிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் கானானியருடைய எல்லை காசா மட்டும் இருந்தது (ஆதி. 10:19).

யோசுவா கைப்பற்றின தேசம் காசா மட்டும் இருந்தது (யோசுவா. 10:41). அக்காலத்தில் இங்கே ஏனாக்கியர் குடியிருந்தார்கள் (யோசுவா. 11:22).

யூதா காசாவைப் பிடித்த போதிலும், அது அவர்கள் வசம் அதிக காலம் இருக்கவில்லை. தேசம் பங்கிடப்பட்டபோது, இது யூதாவுக்குக் கொடுக்கப்பட்டது (யோசுவா. 15:47). ஆனால் பெலிஸ்தர் அதை மறுபடியும் கைப்பற்றி, சிம்சோனின் நாள்கள்வரை அவர்கள் கைவசம் இருந்தது.

ஒருமுறை அங்கிருந்த ஒரு வேசி வீட்டில் சிம்சோனைப் பிடிக்கப் பெலிஸ்தர் ஆயத்தமானபோது, அவன் இரவில் பட்டணத்துக் கதவுகளைப் பெயர்த்தெடுத்து, எதிரே இருந்த மலையுச்சிக்குச் சுமந்துகொண்டு போனான் (நியா. 16:1-13).

பின்பு தெலீலாள் வீட்டில் பெலிஸ்தர் சிம்சோனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, காசாவுக்குக் கொண்டுபோய், சிறைச்சாலையில் மாவரைக்க வைத்தார்கள் (நியா. 16:21).

எரேமியாவின் நாள்களில் காசா பார்வோனின் கைவசம் இருந்தது (எரே. 47:1). கி.மு. 332இல் மகா அலெக்சாந்தர் அதைப் பிடித்து, முற்றாய் அடித்தான் (ஆமோஸ். 1:6,7; செப். 2:4; சக. 9:5).

இந்த இடம் ஆசா என்றும் குறிக்கப்பட்டுள்ளது (உபா. 2:22; 1 இரா. 2:24; எரே. 25:20).

சுவிசேஷகனாகிய பிலிப்பு காசாவுக்கு, வனாந்தர வழியாய்ப் போக வேண்டியிருந்தது (அப். 8:26).

பிற்காலங்களில் வேறொரு பட்டணம் கட்டப்பட்டு, குஸ்ஸே என்று பெயரிடப்பட்டது. தற்காலத்திலும் 16,000 குடும்பங்கள் அங்கே இருக்கின்றனவாம்.

## காதேஸ்-பர்னேயா (Kadesh-Barnea)

**(பர்னேயாவின் பரிசுத்த இடம்)**

இது பலஸ்தீனாவுக்குத் தெற்கு பக்கமாயுள்ள ஒரு வனாந்தரம். இஸ்ரவேலர் பிரயாணம்பண்ணின காலத்தில் இது அவர்களுக்கு 38 வருடங்களாகப் பிரதான தங்கும் ஸ்தலமாயிருந்தது. கானானைச் சுற்றிப் பார்க்க ஆள்களை, அனுப்பின நாள் துவக்கி, அவர்கள் காதேசுக்குப் போகும் மட்டும், இவ்விடத்தில் தங்கியிருந்தார்கள். இது சீன் வனாந்தரத்துக்கருகேயும், ஏதோமின் எல்லைக்கருகேயும்,

சீனாயிலிருந்து பதினொரு நாள் பயணத் தூரத்திலிருந்தது (எண். *20:1,14,16; 34:4; உபா. 1:1*).

கெதர்லாகோமேர் என்பவன் காதேஸ் என்னும் என்மிஸ்பாத் வரைக்குமுள்ள தேசங்களைக் கட்டிக்கொண்டான் (ஆதி. *14:7*).

ஆகார் ஓடிப்போன வேளையில், கண்ட கிணறு காதேசுக்கருகில் இருந்தது (ஆதி. *16:14*).

ஆபிரகாமும் பிரயாணம் பண்ணிக் காதேசுக்கு அருகில் குடியேறினார்கள் (ஆதி. *20:1*).

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கப் போனவர்கள் திரும்பி காதேசுக்கு வந்தனர் (எண். *13:26*).

கோராகுவின் கலகம் நடந்ததும், இஸ்ரவேலர் காதேசிலிருந்த நாள்களிலேயே (எண். அதி. *16*).

இஸ்ரவேலர் காதேசிலே தங்கியிருக்கையில் மிரியாம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டாள் (எண். *20:1*).

தண்ணீர் இல்லாதிருந்தபோது, இஸ்ரவேலர் முறுமுறுத்ததினால், மோசே கன்மலையை அடித்து தண்ணீர் வரச் செய்தது இவ் விடத்திலேயே (எண். *20:2-12*).

மோசே காதேசிலிருந்து ஏதோம் இராஜாவிடம், அவனுடைய தேசம் வழியாய்ப் போக உத்தரவு கேட்டபோது உத்தரவு கிடைக்க வில்லை (எண். *20:14-21*).

எசேக்கியேலும் காதேசிலுள்ள கலகத்தின் தண்ணீர்களைப் பற்றிப் பேசுகிறான் (எசே. *47:19*).

## காத் (Gad)
### *(சேனை)*

*1.* காத் யாக்கோபின் ஏழாம் மகன். லேயாளின் வேலைக்காரி யாகிய சில்பாள் பெற்ற மூத்த பிள்ளை. லேயாள் ஏராளமாகிற தென்று சொல்லி, அவனுக்குக் காத் என்று பேரிட்டாள் (ஆதி. *30:10,11*). யாக்கோபு எகிப்துக்குப் போன வேளையில், காத்துக்கு ஏழு குமாரர் இருந்தார்கள் (ஆதி. *46:16*). யாக்கோபு தன் கடைசி வார்த்தையில் காத் என்பவனுக்குத் தொந்தரவு வரும், ஆனால் அவன் முடிவிலே ஜெயிப்பான் என்றான் (ஆதி. *49:19*). மோசேயும் காத்துக்கு விஸ்தாரமான இடம் கிடைக்குமென்றும், அவன் முன்னேறி வருவானென்றும் கூறுகிறான் (உபா. *33:20,21*).

## காத் கோத்திரம்
## (Tribe of Gad)

பிரயாணத்தில் இவர்கள் கூடாரத்துக்குத் தென் பக்கத்தில், ரூபனுக்கருகே பாளயமிறங்கினார்கள் *(எண். 2:10-15)*. மோசேயின் காலத்தில் காத்துடைய ஏழு குமாரரின் குடும்பங்களில் எண்ணப் பட்டவர்கள் 40,500 பேர் *(எண். 26:15-18)*.

ரூபன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரங்கள் யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்தில் செழிப்பான மேய்ச்சல் நிலம், தங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று மோசேயிடம் கேட்க, அவன் சம்மதித்தான் *(எண். அதி. 32)*. காத் புத்திரருக்குக் கிடைத்த தேசம் யோசுவா 13:24-28இல் சொல்லியுள்ளது.

இந்தக் கோத்திரத்தாரும், அவர்களைச் சேர்ந்தவர்களும் யோர்தானின் ஓரத்திலே ஒரு பலிபீடத்தைக் கட்டினதால் உண்டான வாக்குவாதத்தை இஸ்ரவேல் புத்திரரோடு சமாதானமாய்த் தீர்த்துக் கொண்டார்கள் *(யோசுவா. 22:9-34)*. இஸ்ரவேலர் பெலிஸ்தரால் ஒடுக்கப்பட்ட காலத்தில், காத் நாட்டில் ஒதுக்கிடம் பெற்றார்கள் *(1 சாமு. 13:7)*.

தாவீது சவுலுக்குத் தப்பித் திரிந்தபோது, காத்தியர் அவனோடு போய்ச் சேர்ந்தார்கள் *(1 நாளா. 12:8)*.

கி.மு. 734இல் மூன்றாம் திக்லாத்பிலேசர், ரூபனியர், காத்தியர், மனாசேயின் பாதிக் கோத்திரத்தாராகிய இவர்களைச் சிறையாகக் கொண்டு போனான் *(1 நாளா. 5:26)*.

எசேக்கியேலின் தரிசனத்தில், காத்துக்கும் ஒரு பங்கு உண்டா யிருந்தது *(எசே. 48:27)*.

யோவானின் தரிசனத்தில், காத் கோத்திரத்தாரும் முத்திரை போடப்பட்டதைக் கண்டான் *(வெளி. 7:5)*.

3. எர்மோன் மலையடியிலுள்ள ஒரு தேசம் பாகால்-காத் எனப்பட்டது *(யோசுவா. 11:16)*.

4. காத் தீர்க்கதரிசி, இவனைத் தாவீதின் தீர்க்கதரிசியென்றும் குறித்துள்ளது. தாவீது ஜனங்களைத் தொகையெடுத்ததினால், வந்த கொள்ளை நோயில் தப்புகிறதற்குக் காத்தின் ஏவுதலின்படி, அர்வனாவின் களத்தில் பலி செலுத்தினான் *(2 சாமு. 24:10-16; 1 நாளா. 21:8,9)*. காத் ஒரு புத்தகமும் எழுதினான் *(1 நாளா. 29:29)*.

5. காத் என்ற ஒரு தெய்வமும் வணங்கப்பட்டது *(ஏசாயா. 65:11)*.

6. காத் என்ற ஒரு பள்ளத்தாக்கும் உண்டு *(2 சாமு. 24:5)*.

## காபிரியேல் (Gabriel)

### *(தேவ மனுஷன்)*

வேதாகமத்தில் சொல்லப்பட்ட இரண்டு தூதரில் இவன் ஒருவன். மற்றது, பிரதான தூதன் மிகாவேல் (யூதா. *9*). வெள்ளாட்டுக்கடாவின் தரிசனத்தையும், ஏழு வாரங்களைப் பற்றியும், தானியேலுக்கு விளங்கப்பண்ணும்படி இவன் அனுப்பப்பட்டான். (தானி. *8:16; 9:21*).

இவன் சகரியாவுக்குத் தரிசனமாகி, அவனுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்றும், அவனுக்குக் கொடுக்கும் பேர் என்னவென்றும் சொன்னான். பின்பு இயேசுவின் பிறப்பைப் பற்றி, மரியாளுக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டான் (லூக்கா. *1:26-38*).

## காமோஸ்-காமோஷ் (Chamosh)

### *(மோவாபியரின் தெய்வம்)*

அவர்கள் கேமோஷ் தேவனின் ஜனமென்று எண். *21:29* லும், கேமோஷ் விக்கிரகத்தையடுத்த ஜனம் என்று எரே. *48:46*லும் சொல்லியுள்ளது. காமோஸ் எமோரியரின் தேவனென்று நியா. *11:24*-ல் குறித்திருப்பது தவறாயிருக்கலாம். அவர்களுடைய தெய்வம் மில்கோம். இந்தத் தெய்வத்துக்கு நரபலி இட்டதாகத் தெரிகிறது (*2* இரா. *3:27*). சாலொமோன் இந்த தெய்வத்துக்கு எருசலேமுக்கு எதிரான மலையில் கட்டின மேடையை (*1* இரா. *11:7*) யோசியா அழித்தான் (*2* இரா. *23:13*).

## காம் (Ham)

இவன் நோவாவின் மூன்று குமாரரில் ஒருவன். ஜலப்பிரளயத்தின்பின், பூமியெங்கும் குடியேறின மூன்று ஜாதியாரில் ஒன்றுக்கு இவன் முற்பிதா (ஆதி. *10:1, 6--20*). இந்தப் பெயரின் அர்த்தம் 'கருமை'. எகிப்து தேசத்தின் கருமையான நிலத்தினிமித்தம் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கலாம்.

நோவா வெறி கொண்டிருந்த காரியத்தில், காம் அவமதிப்பாய் நடந்து கொண்டதினிமித்தம் நோவா காமுடைய மகன் கானான், தன் சகோதரரிடம் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்று கூறினான். (ஆதி. *9:20-25*).

எகிப்து தேசத்தில் தேவன் நடப்பித்த கிரியைகள் பின்வரும் சங்கீதங்களில் குறித்துள்ளன (சங். *78:51; 105:23,27; 106:21*).

தேதோரில் பூர்வத்தில் காமின் சந்ததியார் குடியிருந்தார்கள் (*1* நாளா. *4:40*).

கெதர்லாகோமேர், காமிலே இருந்த சூசிமியரை முறிய அடித்தான் (ஆதி. *14:5*).

## காயீன் (Cain)

**(சுதந்தரம்)**

*1.* இவன் ஆதாம், ஏவாள் என்பவர்களின் மூத்த மகன். ஆபேல் இவனுடைய சகோதரன் (ஆதி. *4:1,2*). காயீன் நிலத்தைப் பயிரிடுகிறவனானான். ஆபேல் ஆடுகளை மேய்க்கிறவனானான். இருவரும் பலி செலுத்தினபோது, ஆபேலின் பலி அங்கீகரிக்கப் பட்டது (ஆதி. *4:4*). அவனுடைய பலி மேன்மையானதென்று தேவன் அதைப் பற்றிச் சாட்சி கொடுத்தார் (எபி. *11:4*). காயீனுடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருந்தன (*1* யோவான். *3:12*). "காயீனுடைய வழியில் நடந்து" (யூதா. *11*) என்பது பகை, கொலை பாதகத்துக்குக் காரணமாகும் என்பதைக் குறிக்கிறது. காயீனுக்கு ஆபேலின் மேல் இருந்த பகை வர வர அதிகரித்ததினால் கடைசியில் அவனைக் கொன்றான்.

அதைப்பற்றி கர்த்தர் காயீனிடம் கேட்டபோது, பொய் கலந்த மறுமொழி கொடுத்தான். "பூமியில் நீ சபிக்கப்பட்டிருப்பாய்" என்று கர்த்தர் சொல்லி அவனைத் துரத்திவிட்டார். அவன் புறப்பட்டுப் போய், நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான் (ஆதி. *4:8-16*).

காயீன் விவாகம் செய்து, ஏனோக் என்ற ஒரு குமாரனைப் பெற்ற பின்பு, ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு ஏனோக் என்று பேரிட்டான் (ஆதி. *4:17*).

*2.* எபிரோனுக்கு அருகில் இருந்த யூதாவின் பட்டண மொன்றுக்கு இப்பெயர் இருந்தது (யோசுவா. *15:17*).

## காயு (Gaius)

*1.* யோவான் தன் மூன்றாம் நிருபத்தைக் காயு என்பவனுக்கு எழுதினான். அவன் பிரியமானவனென்றும், சத்தியத்தில் நடக்கிறவன் என்றும், செய்கிறதை உண்மையாய்ச் செய்கிறவனென்றும் அதில் சொல்லுகிறான் (*3* யோவான் *1,2,5,11*).

*2.* பவுலுக்குப் பிரயாணத்தில் கூட்டாளியாய் இருந்த மக்கெதோனியாவின் காயு, எபேசுவில் நடந்த கலகத்தில், இவனும் அகப்பட்டான் (அப். *19:29*).

*3.* தொபையானாகிய காயு, பவுலின் மூன்றாம் பிரயாணத்தில் கிரேக்கிலிருந்து ஆசியா மட்டும் போனான் (அப். *20:4*).

*4.* கொரிந்து பட்டணத்தில் பவுல், இவன் வீட்டிலிருந்து ரோமருக்கு நிருபம் எழுதினான் (ரோமர். *16:23*).

*5.* இவன் குணப்பட்டு, பவுலினால் ஞானஸ்நானம் பெற்றான் (*1* கொரி. *1:14,15*).

## காய்பா (Caiaphas)

இவனொரு சதுசேயன். அன்னா என்பவனின் மருமகன் *(யோவான் 18:13)*. அன்னாவின் பின், இவன் பிரதான ஆசாரியனா யிருந்தான் *(கி.பி. 18-36)*.

பிலாத்து தேசாதிபதியாய் இருந்த காலம் முழுவதும், இவன் பிரதான ஆசாரியன். அன்னாவும் இவனோடுகூட ஆசாரியனாக இருந்ததாகத் தெரிகிறது *(லூக்கா. 3:2)*. அன்னா பிரதிஸ்தனா யிருந்திருக்கலாம்.

இயேசுவைப் பிடித்து சிலுவையில் அறைந்த விஷயத்தில், இவன் முதல்வன் *(மத். 26:3,4 யோவான் 11:49)*. பின்பு பேதுரு, யோவான் ஆகிய அப்போஸ்தலரைத் துன்புறுத்தினதற்கும் இவன் காரணமா யிருந்தான் *(அப். 4:6)*.

இயேசு செய்த அற்புதங்களைப் பற்றித் தீர்மானம் செய்யக் கூடி வந்த ஆலோசனைச் சங்கத்தில், காய்பா தீர்க்கதரிசனமாய் "ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாய் இருக்குமென்று" சொன்னான் *(யோவான். 11:49-52)*.

பின்பு அன்னா இயேசுவைக் கட்டுண்டவராகக் காய்பாவிடம் அனுப்பினான் *(யோவான். 18:24)*.

காய்பா பிரதான ஆசாரியருடைய குடும்பத்தைச் சேர்ந்தவன் *(அப். 4:5)*.

## காலேப் (Caleb)
**(தைரியம்)**

இவன் கேனேசியனாகிய எப்புன்னேயின் குமாரன் *(எண். 32:11)*. கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்க யூதா கோத்திரத் தலைவனாக மோசே இவனை அனுப்பினான் *(எண். 13:6)*. திரும்பி வந்தபோது இவனும், யோசுவாவும் மாத்திரமே அந்தத் தேசத்துக்கு போகலா மென்று சொன்னார்கள். அவர்களுக்கே அந்தத் தேசத்துக்குப் போகும் சிலாக்கியமும் கிடைத்தது *(எண். 14:38; 32:11)*.

அந்த நல்ல தேசத்தைக் காலேப் மாத்திரம் காண்பான். நான் அதை அவனுக்கும், அவன் பிள்ளைகளுக்கும் கொடுப்பேன் என்று கர்த்தர் சொன்னார் *(உபா. 1:36)*.

தேசத்தை ஜெயித்தப்பின், யோசுவா எபிரோனைக் காலேபுக்குக் கொடுத்தான். அப்போது அவன் 85 வயதுள்ளவனாயிருந்தான் *(யோசுவா. 14:6-15)*. காலேப் அங்கிருந்த ஏனாக்கின் குமாரரைத்

துரத்திவிட்டான். அவன் தன் மகளை ஒத்னியேலுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்தான் *(யோசுவா. 15:14-17).*

யூதாவுக்கும் காலேபுக்கும் வேறு தேசங்களும் இருந்தன *(1 சாமு. 30:14).*

## கானா (Cana)

இது கலிலேயாக் கடலுக்கும், மத்தியதரைக் கடலுக்கும், இடையில் கலிலேயாவின் மேற்குப்பக்கமாய் இருக்கும் ஊர். இயேசு செய்த முதலாம் அற்புதம் இந்த ஊரில் நடந்தது *(யோவான். 2:1).* பின்பு கப்பர்நகூமிலிருந்த இராஜாவின் மனுஷனுடைய குமாரனை இவ்விடத்திலிருந்து ஒரு வார்த்தையினால் சுகமாக்கினார் *(யோவான் 4:46-50).* நாத்தான்வேலும் இந்த ஊரான் *(யோவான் 21:2).*

## கானான் (Canaan)

***(தாழ்மையான)***

*1.* காமின் மகன். நோவாவின் பேரன் *(ஆதி. 10:6; 1 நாளா. 1:8).* தான் வெறித்திருந்த காரியத்தில் காம் செய்ததை நோவா அறிந்து காமின் குமாரனாகிய கானானைச் சபித்தான் *(ஆதி. 9:20-25).*

இவன் கானானிய கோத்திரங்களின் முற்பிதா. இவனுடைய மூத்த மகன் சீதோன், பெனிக்கே பட்டணத்தைக் கட்டி, தன் பெயரை அதற்கு இட்டான் *(ஆதி. 10:15-19).*

*2.* ஆபிரகாம் கானான் தேசத்தில் சேர்ந்தபோது, தேவன் அதை அவன் சந்ததிக்கு வாக்குப் பண்ணினார் *(ஆதி. 12:7).*

பலஸ்தீனா முழுவதும் இந்த ஜனத்தின் பேரால் அழைக்கப் பட்டது.

## கானானியர் (Cananites)

இவர்கள் கானான் என்பவனின் சந்ததியார். கானான் தேசத்தின் குடிகள் அராபிய வனாந்தரத்திலிருந்து கி.மு. 3000க்கு முன், பலஸ்தீனாவுக்கு வந்து, தேசத்தைச் சீர்ப்படுத்தினார்கள்.

இவர்கள் மூன்று அட்சர வரியை நினைத்து உண்டு பண்ணினார்கள். இவைகளில் ஒன்றாகிய பெனிக்கேயருடைய அட்சர வரி, மேல் தேசங்களின் எழுத்துகளுக்கு மூலப் பிரதியாயிற்று. இந்த ஜனங்கள் கடலருகேயும், யோர்தான் அண்டையிலும் குடியிருந்தனர் *(எண். 13:29).* இஸ்ரவேலர் அங்கே போனபின், அத் தேசத்தில் குடியிருந்த அமலேக்கியர், ஏத்தியர், எபூசியர், எமோரியர்

முதலியவர்களுடைய தேவர்களைப் பினபற்றாதிருக்கும்படி, அவர்களைத் தேசத்திலிருந்து சங்காரம் பண்ண வேண்டுமென்று மோசே கட்டளை கொடுத்தான் (உபா. 20:17). ஆகிலும் அவர்கள் முற்றாய் துரத்தப்படவில்லை (நியா. 1:27-36). சில கானானியர் தேசத்தில் இருந்து கொண்டு, இவர்களை நெருக்கினார்கள். அவர்களுடைய தேவர்கள் இவர்களுக்குக் கண்ணியானார்கள் (நியா. 2:3).

மீந்திருந்த புறஜாதி ஜனங்களைச் சாலொமோன் அமஞ்சி வேலை செய்ய அடிமைப்படுத்தினான் (1 இரா. 9:20,21).

கானான் தேசத்து வட பக்கத்தில் இருந்த பெனிக்கேயர் பலத்த ஜாதியானார்கள். அவர்கள் சூரிய தேவனையும், பாகாலையும், சந்திரதேவியாகிய அஸ்ரோத்தையும் சேவித்தார்கள். நரபலியும் செலுத்தப்பட்டது. மேலும் அவலட்சணமான கிரியைகளும் நடந்தன. பாகால் வணக்கம் அத்தாலியாளால் இஸ்ரவேலில் ஏற்பட்டது (2 நாளா. 24:7).

## கானானியன் (Cananean)

1. அப்போஸ்தலரில் ஒருவனாகிய சிறிய சீமோன் கானானியன் எனப்பட்டான் (மத். 10:4; மாற்கு 3:18). செலோத்தே என்று லூக்கா. 6:15; அப். 1:13இல் குறித்துள்ளது. யூதருக்குள் சுதேச அபிமான முள்ள ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவன் என்பதே இதன் அர்த்தம்.

2. பரிசுத்தமில்லாதவனும் கானானியன் எனப்பட்டான் (சக. 14:21).

## கானான் தேசம் (Land of Canaan)

ஆபிராம் ஆரானிலிருந்துப் புறப்பட்டு, கானான் தேசத்தில் சேர்ந்தபோது, கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, "உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்" என்றார் (ஆதி. 12:5-17). பலஸ்தீனா தேசம் முழுவதற்கும் இப்பெயர் வழங்குகிறது.

## கிதியோன் (Gideon)

**(மரம் வெட்டுவோன்)**

இவன் இஸ்ரவேலின் ஐந்தாம் நியாயாதிபதி. மனாசே கோத்திரத்தான். ஒப்ராவில் இருந்த யோவாசின் மகன் (நியா. 6:11).

அக்காலத்தில் மீதியானியர் இஸ்ரவேலரை ஏழு வருடமாய் சிறுமைப்படுத்தினதினால், அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, ஒரு தேவதூதன் கிதியோனுக்குத் தரிசனமாகி,

அவன் இஸ்ரவேலை மீதியானியரின் கையிலிருந்து இரட்சிக்கும்படி சொன்னான் *(நியா. 6:11-14).*

பின்பு கர்த்தரின் சொற்படி கிதியோன் தன் தகப்பனுடைய பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, கர்த்தருக்குப் பலிபீடம் கட்டிப் பலி செலுத்தினான். அதனிமித்தம் அவனுக்கு யெருபாகால் என்று பெயரிடப்பட்டது *(நியா. 6:24-32).*

மீதியானியர் வந்து இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பாளய மிறங்கின வேளையில், கிதியோன் யுத்தத்துக்குப் போகும்முன், மயிருள்ள ஒரு தோலைக் கொண்டு, கர்த்தரிடம் ஒரு அடையாளம் கேட்டபோது, அது கிடைத்தது *(நியா. 6:36-40).*

யுத்தம்பண்ண கிதியோனோடு வந்து சேர்ந்த 32,000 ஆள்களில் 300 பேரை மாத்திரம் கர்த்தரின் சொற்படி வைத்துக்கொண்டான் *(நியா. 7:3-7).*

அன்று இராத்திரி கிதியோன் எழுந்து, மீதியானியரின் பாளயத்தருகேபோன வேளையில், ஒருவன் கண்ட சொப்பனத்தை இன்னொருவனுக்குச் சொல்லக் கேட்டு, தேவன் அவர்களைத் தன் கையில் கொடுத்தார் என்று அறிந்தான்.

அவன் திரும்பிப்போய், அந்த 300 பேரை மூன்று படையாக வகுத்து, ஒவ்வொருவன் கையிலும் ஓர் எக்காளத்தையும், வெறும் பானையையும், தீவட்டியையும் கொடுத்து, மீதியானியரின் பாளயத்தைச் சுற்றி நின்று எக்காளம் ஊதினபோது, அவர்களெல்லா ரும் சிதறிக் கூக்குரலிட்டு ஓடிப்போனார்கள் *(நியா. 7:16-22).*

கிதியோன், மீதியானியரின் இராஜாக்களாகிய சேபாவும், சல்முனாவும் ஓடிப்போகையில் தொடர்ந்து போய் அவர்களைப் பிடித்துக் கொன்றான் *(நியா. 8:12).*

கிதியோன் பார்வைக்கு இராஜகுமாரனைப்போல் இருந்தான் *(நியா. 8:18).*

பின்பு ஜனங்கள் கிதியோன் தங்களை ஆளும்படி கேட்டும் அவன் சம்மதிக்கவில்லை *(நியா. 8:23).*

ஆனால் கிதியோன் ஜனங்களிடம் கடுக்கன்களைக் கேட் டெடுத்து, ஒரு ஏபோத்தை உண்டாக்கி, ஒப்ராவில் வைத்தான். இஸ்ரவேலர் அதைப் பின்பற்றிச் சோரம் போனார்கள். அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று *(நியா. 8:27).*

தேசம் அவன் நாள்களில் 40 வருடம் அமைதலாய் இருந்தது *(நியா. 8:28).*

கிதியோன் தன் வீட்டில் வாசமாயிருந்து, விருத்தாப்பியத்தில் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டான். அவனுடைய *70* குமாரரில் அபிமெலேக் ஒருவன் *(நியா. 8:30,32).*

விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றவர்களில் கிதியோன் ஒருவன் *(எபி. 11:32).*

## கிபியா, கீபெயாத் (Gibea, Gibeath)

***(மலை)***

இம்மலைக்குச் சமீபமான அநேக இடங்களுக்கும் இப் பெயர் வழங்கிற்று.

*1.* யூதா மலை நாட்டிலுள்ள ஒரு பட்டணம் *(யோசுவா. 15:57)* இப்போது எல்ஜிபா என்று பெத்லகேமுக்கருகில் இருக்கிற இடமாயிருக்கலாம். *2.* பென்யமீனுக்குச் சேர்ந்த பதினான்கு பட்டணங்களில் ஒன்று. யோசுவா. *18:28*இல் கீபெயாத் என்றும் *1 சாமு. 11:4; 2 சாமு. 21:6; ஏசாயா. 10:29*இல் "சவுலின் ஊராகிய கிபியா" என்றும் சொல்லியுள்ளது.

*3.* கிபியா தேவனுடைய பெட்டி வைத்திருந்த அபினதாபின் வீடு இருந்த பட்டணம் *(2 சாமு. 6:3,4).*

## கிபியோன் (Gibeon)

***(உயர்வான இடம்)***

இது ஏவியருடைய இராஜதானிப் பட்டணங்களில் ஒன்று *(யோசுவா. 9:7).* எருசலேமிலிருந்து *5* மைல் தூரத்தில் உள்ளது. ஆயியைப் பார்க்கிலும் பெரிய பட்டணம். பலசாலிகள் உள்ள இடமாயுமிருந்தது *(யோசுவா. 10:2).*

எரிகோவுக்கும், ஆயிக்கும் சம்பவித்ததைக் கண்டு, கிபியோனிய குடிகள் யோசுவாவோடு சமாதானம் செய்து கொண்டார்கள் *(யோசுவா. 9:3-15).*

அந்தப் பட்டணம், தொடக்கத்தில் பென்யமீனருக்குப் பங்கிடப்பட்டு, பின்பு லேவியருக்குக் கொடுக்கப்பட்டது *(யோசுவா. 18:25; 21:17).*

தாவீது யூதாவின் இராஜாவானபோது, இஸ்போசேத்தின் மனுஷரோடு கிபியோனில் நடந்த யுத்தத்தில் தாவீது ஜெயம் பெற்றான் *(2 சாமு. 2:12-17).* கிபியோனுக்கருகில் இருக்கிற பெரிய கல்லண்டையில், யோவாப், அமாசாவை ஒரே குத்தாகக் குத்திக் கொன்றான் *(2 சாமு. 20:8).*

தாவீது கிபியோனியாவிலுள்ள மேட்டின் மேலிருக்கிற கர்த்தருடைய வாசஸ்தலத்துக்கு முன்னிருக்கிற தகன பலி பீடத்தின் மேல் பலி செலுத்த ஆசாரியரை வைத்தான் *(1 நாளா. 16:39, 40).*

கிபியோனில் ஒரு பெரிய மேடை இருந்தது. சாலொமோன் அங்கே பலியிட்டபின், கர்த்தர் தரிசனத்தில் அவனோடு பேசினார் *(1 இரா. 3:4; 9:2; 2 நாளா. 1:3).*

யோகனான் கிபியோனிலிருக்கும் பெருங்குளத்தண்டையில் இஸ்மவேலைக் கண்டு, அவன் மிஸ்பாவிலிருந்து கூட்டிக் கொண்டு போன ஆள்களை விடுவித்தான் *(எரே. 41:11-15).*

செருபாபேலோடு சிறைபட்டுப்போன கிபியோனியரின் புத்திரரும் திரும்பி எருசலேமுக்கு வந்தார்கள் *(நெகே. 7:25; 3:7).*

## கிபியோனியர் (Gibeonites)

இவர்கள் கிபியோனியா, எரிகோ, ஆயி என்னும் பட்டணங்களுக்குச் சம்பவித்ததைக் கேள்விப்பட்டு, யோசுவாவிடம் போய் தந்திரமாக சமாதான உடன்படிக்கை செய்தனர் *(யோசுவா. 9:3-15).*

இந்த உடன்படிக்கைக்கு விரோதமாகச் சவுல் கிபியோனியரைக் கொன்றதினிமித்தம் அவனுடைய சந்ததியாரில் ஏழு பேர் கொல்லப்பட்டனர் *(2 சாமு. 21:1-9).*

## கிரேக்க தேசம் (Greece)

*1.* இந்தப் பெயர் கிரீக் (Greec) என்ற ஒரு ஜாதியிலிருந்து வந்தது. இவர்களும் வேறு ஜாதியாரும் அதிரியாற்றிக் (Adriatic) குடாக் கடலருகே குடியிருந்தார்கள். ரோமர் முதன் முதல் கிரேக்கி என்ற ஜாதியாரோடு பழகினபடியால் அத்தேசத்திலிருந்த எல்லா ஜாதியாருக்கும் இப்பெயரையே உபயோகித்தார்கள். சின்ன ஆசியாவின் மேற்பகுதிகளிலும் அதைச் சேர்ந்த தீவுகளிலுமிருந்த ஜோனியரும் (Jonians) இவர்களைச் சேர்ந்தவர்கள்.

கிரேக்க தேசம் பழைய ஏற்பாட்டில், ''யாவான்'' என்று குறித்துள்ளது *(ஆதி. 10:4; ஏசாயா. 66:19; எசே. 27:13).* இந்தப் பதம் அயோனியன் என்பதற்குச் சம்பந்தப்பட்டது. "யாவான்" என்பது "கிரேக்கு தேசம்" என்று மொழிபெயர்த்துள்ளது *(தானி. 8:21; 10:20;11:2; சக. 9:13).* புதிய ஏற்பாட்டிலும் பவுல் கிரேக்கு தேசத்துக்குப் போனான் என்று குறித்துள்ளது *(அப். 20:2).*

*2. ரோம ஆதிக்க காலத்தில் இந்தத் தேசம் மக்கெதோனியா, அகாயா என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது (1 தெச. 1:7).*

தானியேல் சொப்பனத்தில் கண்ட "கிரேக்க இராஜா" மகா அலெக்சாந்தராயிருக்கலாம் (தானி. 8:21).

அப். 20:2இல் குறித்துள்ள கிரேக்க தேசம் அகாயா நாடாயிருக்க வேண்டும்.

## கிரேக்க பாஷை

கிரேக்கு தேசம் சீர்திருத்தத்திலும், நாகரிகத்திலும் பேர் பெற்றது, அத்தேனே, பெர்கமு, அந்தியோகியா, அலெக்சந்திரியாப் பட்டணங்களில் விசேட கல்லூரிகளிருந்தன. கிரேக்க பாஷை தெரிந்தவன், கல்விமானென்று எண்ணப்பட்டான். ரோம சேனாதிபதி பவுலிடம் உனக்கு கிரேக்க பாஷை தெரியுமாவென்று கேட்ட நோக்கம் இதுவே (அப். 21:37).

புதிய ஏற்பாடு முழுவதும் கிரேக்க பாஷையில் எழுதப்பட்டது. வேதாகமத்தில் ''கிரேக்கர்'' என்ற பதம் பலவிதமான கருத்துள்ளது.

1. கிரேக்க தேசத்துக் குடிகளுக்கும், அவர்களுடைய சந்ததியாருக்கும் வழங்கினது.

2. கிரேக்க பாஷை பேசிய யூதரைக் குறித்துள்ளது. அந்தியோகியா பட்டணத்துக் கிரேக்கர் என்பது யூதரை குறிக்கிறது (அப். 6:1; 9:29; யோவான். 7:35).

3. யூதமார்க்கத்தைத் தழுவின புறஜாதியாரும் கிரேக்கரென் றழைக்கப்பட்டார்கள் (யோவான். 12:20; அப். 17:4).

4. யூதர், கிரேக்கர் என்று எதிரிடையாய்ச் சொல்லிய இடங்களில், கிரேக்கர் என்பது புறஜாதியாரையே குறிக்கிறது (அப். 14:1; 18:4; 19:10; ரோம. 1:16; 10:12; 20:21; 1 கொரி. 1:22-24; கலா. 3:28; கொலோ. 3:11).

கிரேக்க பாஷையைப் பேசி, அவர்கள் பழக்க வழக்கங்களை அனுசரித்த யூதருக்கு "ஹெலினையிற்ஸ் (Hellenites) என்றும், புற ஜாதியாருக்கு "ஹெலனீஸ்" (Hellaness) என்றும் சொல்லப்பட்டது.

## கிரேத்தா (Crete)

மத்தியத்தரைக் கடலிலுள்ள ஒரு தீவு. 156 மைல் நீளமும், 7.30 மைல் வரை அகலமுமுள்ளது.

கிரேக்க தேசம் முன்னேறின காலத்தில் இதுவும் ஒரு விசேஷித்த இடமாயிற்று. பழைய ஏற்பாட்டில் “கப்கோர்” என்ற தேசம் இதைக் குறித்ததாக எண்ணப்படுகிறது *(உபா. 21:22; ஆமோஸ் 9:7).*

பவுல் ரோ:மாபுரிக்குக் கப்பலில் கொண்டு போகப்பட்டபோது, புயலினால் தடுக்கப்பட்டு, கிரேத்தா தீவின் ஒதுக்கில் தங்கினதாகக் குறித்துள்ளது *(அப். 27:7).*

பவுல் விடுதலையான பின், அங்கே போயிருக்கையில் தீத்துவை அங்கிருந்த சபையின் காரியங்களைப் பார்க்கும்படி ஏற்படுத்தினான் *(தீத்து. 1:12-16).*

கிரேத்தியர் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமிலிருந்தார்கள் *(அப். 2:11).*

கிரேத்தா தீவாருடைய தப்பிதமான நடக்கைகளைப் பவுல் கண்டிக்கிறான் *(தீத்து. 1:12).*

கிரேத்தியரைப் பற்றி *1 சாமு. 30:14; எசே. 25:16; செப். 2:5*இல் குறித்துள்ளது.

## கிலெயாத், கீலேயாத் (Gilead)

***(பெலமான இடம்)***

*1. காத்தின் சந்ததியானான மிகாவேலின் குமாரன் கீலேயாத் (1 நாளா. 5:14).*

*2. மனாசேயின் கோத்திரத்து மாகீர் பெற்ற கிலெயாத் (எண். 26:29; யோசுவா. 12:2; 1 நாளா. 2:21). இவன் அந்த சந்ததியின் முற்பிதாவாயிருக்கலாம்.*

*3. கிதியோன், பயமுள்ளவர்கள் கீலேயாத் மலைகளிலிருந்து ஓடிப்போகக்கடவர்கள் என்றான் (நியா. 7:3).*

*4. யோர்தானுக்குக் கிழக்கே இருந்த ஒரு மலை நாடு. கானான் தேசம் முழுவதிலும் இது செழிப்பான பகுதி.*

லாபானும் யாக்கோபும் செய்துகொண்ட உடன்படிக்கைக்குச் சாட்சியாக குவித்த கற்குவியலுக்கு யாக்கோபு இட்டப் பெயர் கலயெத் *(ஆதி. 31:44-48).*

இந்தத் தேசம் ரூபன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டது. பிற்காலங்களில் இது பெரேயா (Berea) எனப்பட்டது.

கீலேயாத் கந்தவர்க்கங்கள், பிசின் தைலம் ஆகியவை உள்ள தேசம் *(ஆதி. 37:25).*

கிலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? பின்னை ஏன் என் ஜனமாகிய குமாரத்தி சொஸ்தமடையாமற்போனாள்? *(எரே. 8:22).*

சிசெராவோடு நடந்த யுத்தத்தில் கிலேயாத் மனுஷர் உதவி செய்யவில்லை *(நியா. 5:17).*

சவுலின் நாள்களில் பெலிஸ்தருக்குப் பயந்து எபிரெயரில் சிலர் கிலேயாத் தேசத்துக்குப் போனார்கள் *(1 சாமு. 13:7).*

அப்னேர், இஸ்போசேத்தை கிலேயாத் மேலும் இராஜா வாக்கினான் *(2 சாமு. 2:8-9).*

தாவீதின் சொற்படி இஸ்ரவேலனைத்தையும் இலக்கம் பார்க்க கிலேயாத்துக்குப் போனார்கள் *(2 சாமு. 24:6).*

எலியா கிலேயாத்திலுள்ள திஸ்பி ஊரான் *(1 இரா. 17:1).*

யெகூவின் நாள்களில் ஆசகேல் கிலேயாத் முழுவதையும் முறிய அடித்தான் *(2 இரா. 10:33).*

பெக்காவின் நாள்களில் திகிலாத்பிலேசர் கிலேயாத்தைப் பிடித்து, ஜனங்களைச் சிறையாக்கிக் கொண்டு போனான் *(2 இரா. 15:29).*

சீரியர் கிலேயாத்தியரைத் துன்புறுத்தினதினிமித்தம், ஆசகேலின் வீட்டிலே தீக்கொளுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் *(ஆமோஸ். 1:3).*

கிலேயாத், அக்கிரமம் செய்கிறவர்களின் பட்டணம் என்று சொல்லி, கர்த்தரிடம் திரும்பும்படி ஓசியா தீர்க்கதரிசி கூறுகிறான் *(ஓசியா. 6:8).*

கிலேயாத் மலையின் செழிப்பைப்பற்றி உன் *4:1*-இல் குறித்துள்ளது.

## கிலேயாத்தின் பிசின் தைலம் (Balm of gilead)

இது கிலேயாத் தேசத்திலுள்ள ஒரு ஜாதி மரத்திலிருந்து எடுக்கப்படுகிற பிசின். ஔஷதத்துக்கடுத்த தைலமாகவும், அழகுப் பொருளாகவும் அது உபயோகிக்கப்பட்டது *(ஆதி. 37:25; எரே. 8:22; 46:11; 51:8).*

இஸ்மவேலர் கிலேயாத்திலிருந்த பிசின் தைலம் - ஆகியவைகளில் வியாபாரம் செய்தார்கள் *(ஆதி. 37:25).*

யாக்கோபு கொஞ்சம் பிசின் தைலமும் தேனும் யோசேப்புக்கு வெகுமதியாக அனுப்பினான் *(ஆதி. 43:11).*

கிலேயாத்திலே பிசின் தைலம் இல்லையோ? *(எரே. 8:22).* எகிப்தின் குமாரத்தியே நீ கிலேயாத்துக்குப் போய், பிசின் தைலம் வாங்கு

*(எரே. 46:11).* பாபிலோனின் நோவை ஆற்றப் பிசின் தைலம் போடுங்கள் *(எரே. 5:8).*

## கீலேயாத்தியர் (Gileadites)

கீலேயாத் தேசத்தில் குடியிருந்தவர்கள் கீலேயாத்தியரெனப் பட்டார்கள் *(நியா. 12:4).* மனாசேயின் பேரன் கிலெயாத். அவனுடைய சந்ததியார் கீலேயாத்தியர் *(எண். 26:29).*

வேதாகமத்தில் சொல்லப்பட்ட பெயர் பெற்ற கீலேயாத்தியர் : யாவீர், யெப்தா, பர்சிலா என்பவர்கள் *(2 சாமு. 17:27).*

## கில்கால் (Gilgal)
***(வட்டம்)***

யோர்தானுக்கும் எரிகோவுக்குமிடையிலுள்ள இடம். இஸ்ரவேலர் யோர்தானைக் கடந்த பின் முதன் முதல் இங்கே பாளய மிறங்கினார்கள். யோர்தானிலிருந்தெடுத்த பன்னிரெண்டு கற்களை யோசுவா கில்காலில் நாட்டினான் *(யோசுவா. 4:20).* விருத்தசேதனம் பெறாதிருந்த இஸ்ரவேல் புத்திரர் இங்கே விருத்தசேதனம் பண்ணப் பட்டார்கள் *(யோசுவா. 5:3).* எகிப்தின் நிந்தையை புரட்டிப் போட்டதால் அந்த ஸ்தலத்துக்கு “கில்கால்” எனப் பெயர் வந்தது.

பஸ்காவையும் அங்கே ஆசரித்தார்கள். மறுநாளில் அந்தத் தேசத்துத் தானியத்தைப் புசித்தபோது, மன்னா பெய்யாமல் ஒழிந்தது *(யோசுவா. 5:9-12).*

கிபியோனியர் கில்காலிருக்கிற பாளயத்துக்கு வந்து தந்திரமாய் யோசுவாவோடு சமாதான உடன்படிக்கைச் செய்தார்கள் *(யோசுவா. 9:3-15).*

இந்த இடத்தில் சாமுவேல் ஆகாகைத் துண்டித்தான் *(1 சாமு. 15:33).* சவுல் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டதும் புறக்கணித்து தள்ளப்பட்டதும் இங்கேயே *(1 சாமு. 11:14, 15:23).*

அப்சலோமின் கலகத்தின் பின், தாவீது திரும்பி வந்தபோது, யூதாகோத்திரத்தார் கில்காலில் அவனை அங்கீகரித்தார்கள் *(2 சாமு. 19:15).*

தீர்க்கதரிசிகளின் நாள்களில் கில்கால் ஒரு விக்கிரக ஆராதனைக் குரிய இடமெனக் கண்டிக்கப்பட்டது *(ஆமோஸ். 4:4; 5:5; ஓசியா 4:15; 9:15; 12:11).*

## கில்போவா (Gilboa)

*(பொங்கும் ஊற்று)*

இது இசக்கார் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒரு மலை நாடு. தாவீது, ''கில்போவா மலைகளே, உங்கள்மேல் பனிபெய்யாதிருப்பதாக'' என்று சொல்லி, சவுலின் மரணத்தைக் குறித்து புலம்பல் பாடினான் *(2 சாமு. 1:21).*

பெலிஸ்தரோடு யுத்தம் செய்யும்படி இஸ்ரவேலர் சவுலின் தலைமையில் கில்போவாவிலே பாளயமிறங்கினார்கள் *(1 சாமு. 28:4).* இஸ்ரவேலர் கில்போவா மலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். சவுலும் குமாரரும் கொல்லப்பட்டார்கள் *(1 சாமு. 31:1; 2 சாமு. 1:21; 21:12; 1 நாளா. 10:1-18).*

இந்த இடத்தின் தற்காலப் பெயர் "ஜெபெல்வியூகுவா".

## கிறிஸ்தவன் (Christian)

இந்தச் சொல் புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் காணப்படுகிறது *(அப். 11:26; 26:28; 1 பேதுரு. 4:16).* கிறிஸ்தவன் என்பவன் கிறிஸ்துவைப் பின்பற்றுபவன்.

அந்தியோகியாவில் கிறிஸ்துவின் மார்க்கத்தாருக்கும் யூதமார்க்கத்தாருக்கும் வித்தியாசம் காட்டும்படி கிறிஸ்துவைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களும் அதை அங்கீகரித்தார்கள். பவுல் நசரேயருடைய மதபேதத்துக்கு முதலாளி என்று யூதர் சொன்னார்கள் *(அப். 24:5).*

அகிரிப்பாவும், "நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங் குறைய நீ என்னைச் சம்மதிக்கப் பண்ணுகிறாய்'' என்று பவுலுக்குச் சொன்னான் *(அப். 26:28)*

துவக்கத்தில் கிறிஸ்து மார்க்கம் குறைவான நிலையிலுள்ள ஜனங்களுக்குள்ளேயே பரம்பினதினிமித்தம், "கிறிஸ்தவன்'' என்பது ஒரு இழிவான சொல்லாக இருந்தது.

"கிறிஸ்தவன் என்ற பெயரினிமித்தம் ஒருவன் பாடுபட்டால், வெட்கப்படாமல், அந்தப் பெயரினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன்'' என்று பேதுரு கூறுகிறான் *(1 பேதுரு. 4:16).*

"கிறிஸ்தவர்கள்'' கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவர்களாகும் *(அப். 9:14; ரோமர். 10:12; 1 கொரி. 1:2).*

துவக்கத்தில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவின் சீஷர் என்றெண்ணப் பட்டும், அப்போஸ்தலரின் நாள்களில், 'விசுவாசிகள்' *(அப். 5:14),*

*"பரிசுத்தவான்கள்" (அப். 9:13), "சகோதரர்" (அப். 6:3), "தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்" (2 தீமோ. 2:10). "தேவனுடைய சபை" (அப். 20:28), "தேவனுடைய அடிமைகள்" (ரோம. 6:22) என்றும் அழைக்கப்பட்டார்கள்.*

*பெயர் எவ்விதமாயிருப்பினும், கிறிஸ்து உள்ளவனே, கிறிஸ்தவன் என்று சொல்லத்தகும் (கொலோ. 1:27).*

## கிறிஸ்து (Christ)

*கிரேக்க பாஷையில் கிறிஸ்து என்பது எபிரேய பாஷையில் "மேசியா". அதன் அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்". அவருடைய மனுஷீகப் பெயர் "இயேசு". ஊழியத்துக்கேற்ற பெயர், "கிறிஸ்து". ஆகவே அவர் "இயேசு கிறிஸ்து", "கிறிஸ்து இயேசு", "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என்று அழைக்கப்படுகிறார் (அப். 11:17; 15:11; 16:13; 20:21; 28:31; ரோமர். 1:7; 5:11,12; 13:14; 1 கொரி. 16:23).*

*பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைப் பற்றிய செய்திகள், அநேக இடங்களில் முன்னறிவிக்கப்பட்டிருந்தும், புதிய ஏற்பாடு முழுவதற்கும் அவரைப் பற்றியவைகளே மூலாதாரமாயுள்ளன.*

*உலகம் முழுவதிலுமுள்ள திருச்சபைக்கு கிறிஸ்து இயேசுவே அஸ்திபாரம்.*

*கிறிஸ்துவைப்பற்றிய உண்மை மறுதலிக்கப்படத்தக்கதல்ல, அவருடைய உயிர்த்தெழுதலே, கிறிஸ்தவ மார்க்கத்தின் மூலாதாரம்.*

*கி.பி. முதலாம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மார்க்கமும் மற்ற மார்க்கங்களைப் போலென்று எண்ணி, சரித்திரக்காரர் அதைப்பற்றி விசேஷமாய்க் குறிக்கவில்லை. பின்பு இந்த மார்க்க போதனைகள் அக்காலத்து அரசாங்க முறைகளுக்கு எதிரிடையான தென்று கண்டபோதே, அவர்கள் இந்த மார்க்க விஷயங்களைப்பற்றி எழுதத் துவங்கினார்கள்.*

*ஆகிலும் இந்த மார்க்கத்தின் உண்மையை ஏற்றுக்கொள்ளாதவர்களும் கூட, கிறிஸ்து பலஸ்தீனா நாட்டில் பிறந்து வளர்ந்து அநேக அற்புதங்களைச் செய்து, சிலுவையிலறையுண்டு மரித்தாரென்பதை ஒப்புக் கொண்டார்கள். தற்காலத்திலும் இந்த உண்மைகளை ஜனங்கள் பொதுவாய் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.*

*மேலும் அவரைப் பற்றிய காரியங்கள் சுவிசேஷங்களிலிருந்தே நாம் முக்கியமாக அறியக்கூடும். சுவிசேஷங்களும் சரித்திரமுறையாய் எழுதப்படாததால், கால நிரூபண முறைப்படி குறிக்கப்படவில்லை. ஆனாலும் உண்மையானவைகளே எழுதப்பட்டன. லூக்கா*

சுவிசேஷகன். "ஆரம்பம் முதல் கண்ணாரக் கண்டு, வசனத்தைப் போதித்தவர்கள் ஒப்புவித்தபடியே, நானும் ஆதி முதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த விசேஷங்களின் நிச்சயத்தையே எழுதுகிறேன் என்கிறான் (லூக்கா. 1:2,3). இவைகள் எழுதப்பட்ட நாள்களில் கிறிஸ்துவை முகமுகமாய்க் கண்டு, அவரைப் பற்றி அறிந்தவர்கள் அநேகர் இருந்தார்கள்.

மேலும், அக்காலத்தில் எத்தனையோபேர் இந்த உண்மைக்காக இரத்த சாட்சியாக மரிக்கவும் நேரிட்டது.

சுவிசேஷங்களில், "கிறிஸ்து" என்ற பெயர் அநேக இடங்களில் சொல்லப்படவில்லை. தாமே மேசியாவென்று அவர் உரிமை கொள்ளவுமில்லை. பிலிப்பு செசரியாவில் இயேசு தாம் யார் என்று சீஷரிடம் கேட்ட வேளையில், சிலர் அவரை யோவான்ஸ்நானன் என்றும், சிலர் அவரை எலியா என்றும் சொல்வதாகச் சொன்னார்கள். அப்பொழுது பேதுரு பிரதியுத்தரமாக "நீர் கிறிஸ்து" என்றான். அப்பொழுது தம்மைக் குறித்து ஒருவருக்கும் சொல்லாதபடிக்கு கட்டளையிட்டார் (மாற்கு. 8:27-30). மேலும் இதை என் பிதா உனக்கு வெளிப்படுத்தினாரென்றும் சொன்னார் (மத். 16:17).

ஆலோசனைச் சங்கத்தாரின் முன்னே தாம் கிறிஸ்துதானென்பதை ஒப்புக் கொண்டார் (மாற்கு. 14:62). வேறேவிதமாய் அவருடைய சத்துருக்கள் இதை அத்தாட்சிப்படுத்தக் கூடாமலிருந்தது. அவர் தாம் "யூதருடைய இராஜா" அல்லது மேசியாவென்று, தேவதூஷணம் சொன்னாரென்று பொய்க் குற்றஞ்சாட்டி அவரைச் சிலுவையிலறைந்தார்கள் (மாற்கு. 15:26,32).

இயேசு ஊழியஞ் செய்யத் துவங்கினபோதே, அவரே மேசியா என்று தெரிந்தது (யோவான். 1:41,49). அவரும் தாமே கிறிஸ்து என்று சமாரியா நாட்டு ஸ்திரீக்குச் சொன்னார் (யோவான். 4:25). பின்பு சாலொமோனின் மண்டபத்தில் யூதர்களுக்கு தாமே கிறிஸ்துவென்று தெளிவாய்ச் சொன்னார் (யோவான். 10:24).

பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு தன் பிரசங்கத்தில் "நீங்கள் சிலுவையிலறைந்த இயேசுவைத் தேவன் எழுப்பி, ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினார்" என்றான் (அப். 2:32-36).

"நானே கிறிஸ்து" என்று அநேகர் சொல்லி ஜனங்களை வஞ்சிப்பார்களென்று கிறிஸ்து சொன்னார் (மாற்கு. 13:6).

"சிலர் பொறாமையினாலும், கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறார்கள்" என்று பவுல் எழுதுகிறான் (பிலி. 1:15).

தீர்க்கதரிசிகள், தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் மூலம் கிறிஸ்துவுக்கு, உண்டாகும் பாடுகளை முன்னறிவித்தார்கள் *(1 பேதுரு. 1:11).*

இயேசு, கிறிஸ்துவல்ல என்று மறுதலிக்கிறவன், "அந்திக் கிறிஸ்து" *(1 யோவான். 2:22).*

"இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும், தேவனால் பிறந்திருக்கிறான்" *(1 யோவான். 5:1).*

கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் *(கொலோ. 3:1).*

கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் *(ரோமர். 10:14).*

கிறிஸ்து தேவ பெலனும், தேவ ஞானமுமாயிருக்கிறார் *(1 கொரி. 1:24).*

"நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறார்" *(1 கொரி. 5:7).*

"கிறிஸ்து நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்" *(1 கொரி. 15:20).*

கிறிஸ்துவே, எனக்குள் பிழைத்திருக்கிறார் *(கலா. 2:20).*

அவர்கள் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருடம் அரசாண் டார்கள் *(வெளி. 20:4).*

## கிறிஸ்பு (Crispus)

கொரிந்து பட்டணத்தில் ஜெப ஆலயத்தலைவன். இவன் தன் வீட்டார் அனைவரோடும் கூட விசுவாசியாகி பவுலினால், ஞானஸ்நானம் பெற்றான் *(அப். 18:7,8; 1 கொரி. 1:14).*

## கின்னரேத் (Chinnereth)

**(சுழற்சி)**

நப்தலிக்குச் சேர்ந்த ஓர் அரணிப்பான பட்டணம் *(உபா 3:17; யோசுவா. 11:12).* கின்னரேத் கடலருகே இருந்தபடியால், இப்பெயர் வந்தது. பழைய ஏற்பாட்டில் இந்தக் கடல், கலிலேயாக் கடல் எனப்பட்டது *(எண். 34:11; யோசுவா. 12:13; 13:27).*

பின்பு சீரிய இராஜாவாகிய பெனாதாத், ஆசா இராஜாவின் வேண்டுகோளின்படி, கின்னரோத் முதலிய இஸ்ரவேலின் பட்டணங்களை முறியடித்தான். *(1 இரா. 15:20).*

## கீகோன் (Gihon)
### (நீரோடை)

*1. ஏதேன் தோட்டத்திலிருந்த நாலு ஆறுகளிலொன்று (ஆதி. 2:13).*

*2. எருசலேமுக்குக் கிழக்கே, கெதரோன் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு நீரூற்று. சாலொமோன் இதற்கு அருகில் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான் (1 இரா. 1:33)*

*எசேக்கியா இந்த ஆற்றில் அணைக் கட்டி, தண்ணீரைத் தாவீதின் நகரத்துக்கு நேராகத் திருப்பினான் (2 நாளா. 32:30). மனாசே கீகோனின் மேற்பக்கத்தில், தாவீதின் நகரத்தின் வெளி அலங்கத்தை அரணாக்கினான் (2 நாளா. 33:14).*

*கீகோன் ஆற்றிலிருந்து பொங்கி வருகிற தண்ணீரை மொண்டுகொள்ள முப்பது படிகள் இறங்கிப் போக வேண்டுமென்கிறார்கள்.*

## கீசோன் (Kishon)
### (வளைந்தோடும் ஆறு)

*1. இது பலஸ்தீனாவிலுள்ள ஒரு பெயர் பெற்ற ஆறு. சமாரியாவிலுள்ள கில்போவா, தபோரா மலைகளுக்கு இடையில் உற்பத்தியாகி, யெஸ்ரயேல் சமவெளிக்கூடாய் 23 மைல் தூரம் ஓடி, மத்தியத் தரைக் கடலில் விழுகிறது.*

*கோடை காலத்தில் தண்ணீரில்லாதிருந்தாலும், மழை பெய்யும் வேளையில் கொந்தளிப்பான நீர்ப்பாய்ச்சலிருக்கும்.*

*சீரியருக்கும் இஸ்ரவேலருக்குமிடையில் நடந்த யுத்தத்தில், சிசெராவின் இரதங்களைக் கீசோனின் தண்ணீர் வாரிக்கொண்டு போயிற்று (நியா. 4:7; 5:21).*

*கீசோன் என்னும் ஆற்றண்டை சிசெரா, யாபீன் என்பவர்களுக்குச் செய்தது போலச் செய்யும் என்று சங்கீதக்காரன் கூறுகிறான் (சங். 83:9,10).*

*இங்கே எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை வெட்டிக் கொன்றான் (1 இரா. 18:40).*

*2. இந்தப் பெயருள்ள பட்டணம் யோசுவா. 21:28இல் குறித்துள்ளது. 1 நாளா. 6:72லும் காணப்படுகிறது.*

## கீஸ் (Kish)

**(வல்லமை)**

கீஸ் என்னும் பெயருள்ள ஐந்து ஆள்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றார்கள்.

1. பென்யமீன் கோத்திரத்து அபீயேலின் சந்ததியானான கீஸ் இஸ்ரவேலின் முதலாம் இராஜாவாகிய சவுலின் தகப்பன் *(1 சாமு. 9:1; 14:51)*. காணாமற்போன கழுதைகளைத் தேட, கீஸ், சவுலை அனுப்பினான் *(1 சாமு. 9:3)*.

2. கிபியோனில் குடியிருந்த யெகியேல், மாக்காள் என்பவர்களின் குமாரன், சவுலின் முற்பிதா *(1 நாளா. 9:36, 39)*.

3. மெராரியின் குடும்பத்து மகேலியின் குமாரன் கீஸ். தாவீதின் நாள்களிலிருந்தவன் *(1 நாளா. 23:21; 24:29)*.

4. எசேக்கியாவின் நாள்களிலிருந்த ஒரு லேவியன் *(2 நாளா. 9:12)*.

5. பென்யமீன் கோத்திரத்து மொர்தேகாயின் முன்னோன் *(எஸ். 2:5)*.

## கீதரோன் சிற்றாறு (Kidron)

மூன்று மைல் நீளமுள்ள ஒரு சிற்றாறு. எருசலேம் அலங்கத்துக்கும், ஒலிவ மலைக்குமிடையிலுள்ளது. இது கடலில் முடிகிறது. இதில் எப்போதும் தண்ணீரிருக்கிறதில்லை. மழை காலத்தில் தண்ணீர் பாயும். இரு பக்கமும் செங்குத்தான கரைகளுள்ளது.

## கீதரோன் (Kidron)

பிற்காலங்களில் இது யோசபாத்தின் பள்ளத்தாக்கு எனப்பட்டது.

அப்சலோமுக்குத் தப்பி, தாவீது இராஜா கீதரோன் ஆற்றைக் கடந்தான் என்பதே இதைப்பற்றி முதன் முதலாக வேதாகமத்தில் சொல்லியுள்ளது *(2 சாமு. 15:23)*.

ஆசா தன் தாயின் விக்கிரகங்களைக் கீதரோன் ஆற்றண்டையில் சுட்டெரித்தான் *(1 இரா. 15:13; 2 நாளா. 15:16)*.

எசேக்கியாவின் நாள்களில் ஆலயத்தில் கண்ட அசுத்தத்தைக், கீதரோன் ஆற்றுக்குக் கொண்டுபோனார்கள் *(2 நாளா. 29:16)*.

ஜனங்கள், எருசலேமில் உண்டான பலிபீடங்களைக் கீதரோன் ஆற்றில் போட்டார்கள் *(2 நாளா. 30:14)*.

யோசியா தோப்பு விக்கிரகங்களைக் கீதரோன் ஆற்றில் சுட்டெரித்தான் *(2 இரா. 23:6).*

இந்த இடம் "பள்ளத்தாக்கு" என்று இரண்டு இடங்களில் குறித்துள்ளது *(2 நாளா. 33:14; நெகே. 2:15).*

கீதரோன் வாய்க்கால் பரிசுத்தமாயிருக்கும் என்று எரேமியா சொல்லுகிறான் *(எரே. 31:40).*

இதற்கிணங்க இயேசுவும் சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்புறம் போனார் *(யோவான். 18:1).*

எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட பள்ளத்தாக்கும் இதுவா யிருக்கலாம் *(எசே. அதி. 27).*

## கீரியாத் அர்பா (Kirjath Arba)

எபிரோனின் முதற் பெயர் கீரியாத் அர்பா *(நியா. 1:10).* இங்கே சாராள் மரித்தாள் *(ஆதி. 23:2).* அர்பா என்பவன் ஏனாக்கியருக் குள்ளே பெரியவன் *(யோசுவா. 14:15).* இது யூதாவில் மலைத் தேசத்திலுள்ள ஒரு அடைக்கலப் பட்டணம் *(யோசுவா. 20:7).*

சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்த யூதாவின் புத்திரரில் சிலர் இங்கே குடியேறினார்கள் *(நெகே. 11:25).*

## கெதலியா (Gedaliah)

***(கர்த்தர் பெரியவர்)***

*1.* இவன் எரேமியாவின் சிநேகிதனாகிய அகீக்காமின் மகன். பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், எருசலேமை அழித்துப்போட்டு, ஜனங்களைச் சிறை பிடித்துக்கொண்டு போன பின், மீதியாயிருந்த ஏழை ஜனங்களை பாதுகாக்கும்படியாக, கெதலியாவை அதிகாரியாக வைத்தான் *(2 இரா. 25:22; எரே. 33:5).* கெதலியா மிஸ்பாவில் குடியிருந்தான். பாபிலோன் இராஜாவின் பிரபுக்கள் எரேமியாவை அவனிடம் ஒப்புவித்தார்கள் *(எரே. 39:14).*

ஆனால் அம்மோன் இராஜாவாகிய பாலிஸ், கெதலியாவை கொன்றுபோட யோசித்து, நெத்தானியாவின் குமாரனாகிய இஸ்மவேலை, அவனிடம் அனுப்பி வைத்தான். கரேயாவின் குமாரனாகிய யோகனான் இந்தக் காரியத்தை கெதலியாவுக்குச் சொன்னபோதிலும், அவன் அதை நம்பவில்லை *(எரே. 40:13-16).*

பின்பு இஸ்மவேல் பத்து மனுஷரோடு கூடப்போய் கெதலியாவை யும் அவனோடிருந்த யூதரையும் கல்தேயரையும் வெட்டிக் கொன்று போட்டான் *(2 இரா. 25:25).*

கெதலியாவின் சதிக் கொலையை நினைவுகூறும்படி, யூதர் ஏழாம் மாதத்தில் உபவாசம் பண்ணினார்கள் *(சக. 7:5; 8:19).*

2. எதுத்தூனின் குமாரனாகிய கெதலியா, வாத்தியங்களால் தீர்க்க தரிசனம் சொல்லும் கூட்டத்தாரின் தலைவன் *(1 நாளா. 25:3, 9).*

3. மறுஜாதி மனைவிகளைத் தள்ளிவிட்ட ஆசாரியரிலொருவன் *(எஸ்றா. 10:18).*

4. பஸ்கூரின் குமாரன் கெதலியா. எரேமியாவைத் துரவில் போட்டவன் *(எரே. 38:1, 4-6).*

5. கெதலியாவின் குமாரனாகிய கூஷின் குமாரன் செப்பனியா *(செப். 1:1).*

## கெத்செமனே (Gethsamene)

இதின் அர்த்தம் ஆலை. "ஊற்று மரம்". நமது ஆண்டவர் தீவிர வேதனைப்பட்ட தோட்டமிருந்த ஒரு துண்டு நிலம். இந்தத் தோட்டம் ஒலிவ மலைக்கு மேற்பக்கத்திலிருந்தது *(மத், 26:36; மாற்கு. 14:32).*

எருசலேம் அலங்கத்திலிருந்து கால் மைல் தூரத்திலும், கெதரோன் ஆற்றிலிருந்து ஐம்பது கெஜத்துக்கு அப்பாலும் உள்ளது. இப்போதும் அங்கே எட்டு உயரமான ஒலிவ மரங்களிருக்கிறதாம். இவைகள் அக்காலத்தில் இருந்தவைகளென அநேகர் எண்ணுகிறார்கள். ஆனால் கி.பி. 70-இல் தீத்து என்பவன் அவ்விடத்திலுள்ள எல்லா ஒலிவ மரங்களையும் வெட்டினானென யோசீபஸ் (Josephus) சொல்லுகிறான்.

பிரான்சிஸ்கஸ் (Franciscus) கூட்டத்தார் எரிகோவுக்கு போகும் பாதையருகே பழைய ஒலிவ மரங்களுள்ள ஒரு தோட்டத்தை கெத்செமனே என்று எண்ணி அதைப் பாதுகாத்து வருகிறார்களாம்.

கிரேக்க சபையார் வேறொரு இடத்தைக் குறிப்பிட்டுக் காட்டு கிறார்களாம்.

இன்னும் கல்லெறி தூரத்திலுள்ள ஒரு குகைக்கு "வியாகுல குகை" என்று பேரிட்டு அதுவே அவர் வேதனைப்பட்ட இடமென, வேறு சிலர் கூறுகிறார்களாம்.

## கெரிசீம் (Gerizim)

*(பாழ் நிலம்)*

தற்காலத்திலிருக்கிற "நபுலஸ்" என்னும் பட்டணத்துக்கு அருகில் இருக்கும் பள்ளத்தாக்கின் இருபக்கமுமுள்ள மலைகள், ஏபால்,

கெரிசீம். மோசேயின் கட்டளைப்படி *(உபா. 11:29)* இஸ்ரவேல் ஜனங்களில் பாதிப் பேர், கெரிசீம் மலைக்கு எதிர் புறமாகவும், பாதிப்பேர் ஏபால் மலைக்கு எதிர்புறமாகவும் நிற்பார்கள். லேவியர் கர்த்தரின் பெட்டியைச் சுமந்துகொண்டு பள்ளத்தாக்கில் நின்று கொண்டிருக்கும்போது, யோசுவா நியாயப் பிரமாணத்திலுள்ள ஆசீர்வாதமும், சாபமுமாகிய சகல வார்த்தைகளையும் வாசிப்பான் *(யோசுவா. 8:33-35)*. ஆசீர்வாதங்கள் கூறப்பட்டபோது கெரிசீம் மலையில் நின்றவர்கள் ஆமென் என்றும், சாபங்கள் கூறப்பட்டபோது ஏபால் மலையில் நின்றவர்கள் ஆமென் என்றும் சொன்னார்கள் *(உபா. 27:12)*.

யோதாம், கெரிசீம் மலை உச்சியில் நின்று, சீகேம் மனுஷரோடு உவமையாய்ப் பேசினான் *(நியா. 9:7)*.

சமாரியர் பல நூற்றாண்டுகளாக இந்த மலையில் தொழுது கொண்டு வந்தார்கள். ஆபிரகாம் இந்த மலைமேல் ஈசாக்கைப் பலியிட்டானென சமாரியர் நம்பினார்கள் *(ஆதி. 12:6)*. சமாரிய ஸ்திரீ யாக்கோபின் கிணற்றடியில் நின்று இந்த மலையைக் குறிப்பிட்டுக் காட்டிப் பேசியிருப்பாள் *(யோவான். 4:20)*.

இந்த மலைகளுக்கிடையில் யாக்கோபுடைய கிணறும், யோசேப்பின் கல்லறையும் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள் *(யோவான். 4:5; யோசுவா. 24:32)*.

## கேதேஸ் (Kadesh)

**(கோயில்)**

யூதாவிலுள்ள ஒரு பட்டணம் *(யோசுவா. 15:23; 1 நாளா. 6:72)*. கெர்சோன் புத்திரருக்குக் கொடுத்த பட்டணம். கீசோன் என்றும் சொல்லியுள்ளது *(யோசுவா. 21:28)*. நப்தலி கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்ட அரணிப்பான பட்டணம் *(யோசுவா. 12:22; 19:37)*. பின்பு இது ஓர் அடைக்கலப் பட்டணமாயிற்று *(யோசுவா. 20:7; 21:32)*.

பாராக் குடியிருந்த நப்தலியிலுள்ள இடம் *(நியா. 4:6)*. திகிலாத்பிலேசர் கேதேஸில் இருந்தவர்களையும் சிறையாகக் கொண்டு போனான் *(2 இரா. 15:29)*.

## கேபா (Geba)

**(குன்று)**

பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பட்டணம் *(யோசுவா. அதி. 18:24)*. இங்கே 'காபா' என்று குறித்துள்ளது. *(யோசுவா. 21:27; 1 நாளா. 6:60)*. இது யூதா இராஜ்யத்தின் வட எல்லையா

யிருந்ததினால் "கேபா முதல் பெயர்செபா மட்டும்" என்ற பேச்சு வந்தது *(2 இரா. 23:8)*. யோனத்தானும் ஆயுததாரியும் பெலிஸ்தரின் தாணையத்திற்குப் போன பாதையிலிருந்த கற்பாறை ஒன்று கேபாவுக்கு எதிராக இருந்தது *(1 சாமு. 14:4-14)*.

ராமாவில் பாஷா கட்டின கற்களையும், மரங்களையும் ஆசா எடுத்து கேபாவையும் மிஸ்பாவையும் கட்டினான் *(1 இரா. 15:22)*. சிறையிருப்பிலிருந்து வந்தவர்கள் இந்தப் பட்டணத்தில் குடியேறினார்கள் *(எஸ்றா. 2:26; நெகே. 11:31)*.

இந்த இடத்தில் இப்போது "ஷீபா" என்ற ஒரு பட்டணம் கட்டப்பட்டிருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

## கேயாசி (Gehazi)

### *(இது தரிசனப் பள்ளத்தாக்கு எனப்படும்)*

இவன் எலிசாவின் வேலைக்காரன் என்றும், பணிவிடைக் காரனென்றும் குறித்துள்ளது *(2 இரா. 4:12, 43)*.

சூனேமியாளுக்குப் பிள்ளை இல்லாததைப் பற்றி இவன் எலிசாவுக்கு அறிவித்தான். பின்பு ஒரு பிள்ளை பிறந்தது. அது மரித்தபோது, எலிசாவின் சொற்படி இவன் பிள்ளையை உயிர்ப்பிக்க முயன்றும் இயலாமற்போனபோது, எலிசா உயிர்வரச் செய்தான் *(2 இரா. 4:8-37)*.

குஷ்டரோகியான நாகமான் எலிசாவின் சொற்படி சொஸ்த மடைந்த சமயத்தில் அவனிடம் வெகுமதியை எலிசா ஏற்றுக் கொள்ளாததைக் கண்ட கேயாசி எலிசா அறியாமல் தான் அதைப் பெற்றுக்கொண்டான். இந்தப் பொருளாசையினிமித்தம், எலிசா நாகமானின் குஷ்டரோகம் அவனையும் அவன் சந்ததியாரையும் என்றென்றைக்கும் பிடிக்கும் என்றான் *(2 இரா. 5:20-27)*.

பின்பு சூனேமியாள் தன் வயலைப்பற்றி யோராம் இராஜாவிடம் முறையிட்ட வேளையில் கேயாசி அவனுக்கு நடந்த உண்மையைச் சொல்லவே, இராஜா அவளுக்கு அந்த வயல் கிடைக்கும்படிச் செய்தான் *(2 இரா. 8:4-6)*.

## கேருபீன்(கள்) (Cherubim)

கர்த்தருக்கு ஊழியஞ் செய்கிற பரம ஜீவன்கள்; ஆதாமையும் ஏவாளையும் தேவன் ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்ட பின், கேருபீன்களையும் சுடரொளிப் பட்டயத்தையும் ஜீவ விருட்சத்தைப் பாதுகாப்பதற்காக வைத்தார் *(ஆதி. 3:22-24)*.

பரிசுத்த ஸ்தலத்தில் கிருபாசனத்தின் இரண்டு ஓரங்களிலும், பொன்னினால் இரண்டு கேருபீன்களைச் செய்து வைக்கும்படி கர்த்தர் மோசேயிடம் சொன்னார். கேருபீன்களின் முகங்கள் கிருபாசனத்தை நோக்குகிறவைகளாயும், தங்கள் செட்டைகளால் அதை மூடுகிறவைகளாயும் இருக்கவேண்டும் (யாத். 25:18-21).

சாலொமோன் கட்டின தேவாலயத்தில் ஒலிவ மரங்களால் இரண்டு கேருபீன்களைச் செய்து சந்நிதி ஸ்தானத்தில் வைத்தான். அவைகள் ஒவ்வொன்றும் பத்து முழ உயரமாயும், பொன் தகட்டால் மூடப்பட்டதாயுமிருந்தது (1 இரா. 6:23-28). கேருபீன்களின் செட்டைகள் விரிந்திருந்ததினால், ஆலயத்தின் சுவரில் தொடத்தக்கதாயிருந்தது. ஆலயத்தின் சுவர்களை எல்லாம் சுற்றிலும், உள்ளும் புறமுமாக கேருபீன்கள் கொத்து வேலைகளுமாக்கினான் (1 இரா. 6:29-32).

எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் கேருபீன்கள் நாலு ஜீவன்களாகத் தோன்றின. அவைகள் மனுஷ சாயலாய் நான்கு முகங்களும், நான்கு செட்டைகளுமுள்ளவைகளாயிருந்தன. அவைகளுடைய முகங்கள் மனுஷ முகமும், சிங்க முகமும், எருது முகமும், கழுகு முகமுமாயிருந்தன. அவைகளுடைய தலைகளுக்கு மேலான மண்டலத்தின் மேலிருந்து ஒரு சத்தம் பிறந்தது (எரே. 1:3-25).

இவைகளைப்போல செட்டைகளுள்ள ஜீவன்கள் யோவானுக்கும் காணப்பட்டன (வெளி. 4:6-8). அவைகள் சிங்கம், காளை, மனுஷன், கழுகு முதலிய வைகளுக்கு ஒப்பாயிருந்தன. இவைகள் "தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தன.

கேருபீன்கள் தேவ தூதருடைய வகுப்பைச் சேர்ந்த பரம பிராணிகளென்று எண்ணப்படுகிறார்கள். நான்கு முகங்கள் அவைகளுடைய நான்கு வித குணங்களைக் காட்டுகின்றன. மனுஷ முகம், மனுஷ அறிவு புத்தியுள்ள தன்மையையும், காளை முகம், பணிவிடை அல்லது தொண்டு செய்யும் தன்மையையும், சிங்க முகம், இராஜரீக தைரியமான தன்மையையும் கழுகு முகம், வானங்களுக்கு மேலாக பறக்கக்கூடிய தன்மையையும் காட்டு கிறது.

ஏசாயாவும் தான் கண்ட சேராபீன்களைப் பற்றி விவரிக்கிறான் (ஏசாயா. 6:2-4).

## கேனியன்(ர்) (Kenite)

அமலேக்கியரோடு சம்பந்தப்பட்ட ஒரு நாடோடி ஜாதி (ஆதி. 15:19). கேனியர் இஸ்ரவேலரோடு சிநேகமாயிருந்து யூதா கோத்திரத்

தோடு சேர்ந்து கொண்டார்கள். தாவீதின் நாள்களில் யூதா தேசத்தின் தென் பக்கத்தில் குடியிருந்தார்கள் *(1 சாமு. 27:10).* ரேகாப் சந்ததியார் கேனியரோடு ஐக்கியப்பட்டிருந்தார்கள் *(1 நாளா. 2:55).*

மோசேயின் மாமன் ஒரு கேனியன். கேனியனான ஏபேர் மற்றக் கேனியரை விட்டுப் பிரிந்து, தன் கூடாரத்தைக் காதேசில் போட்டிருந்தான் *(நியா. 4:11).*

சவுல் அமலேக்கியரை மடங்கடித்தபோது கேனியரைத் தப்ப வைத்தான் *(1 சாமு. 15:6).*

தாவீது அமலேக்கியரிலிருந்து கொள்ளையாடினதில் வெகு மதிப்பாக சில்வற்றை கேனியருக்கும் அனுப்பினான் *(1 சாமு. 30:29).*

நெகேமியா எருசலேமில் பழுதுபார்த்துக் கட்டின வேலையில், கேனியரும் உதவியாயிருந்தார்கள் *(நெகே. 3:16).*

## கொரிந்து (Corinth)

இது கொரிந்து குடா நாட்டிலுள்ள ஒரு கிரேக்க பட்டணம். ரோமருடைய அகாயா நாட்டுக்குச் சேர்ந்தது.

அகுஸ்து இராயன் கி.மு. 46-இல் இந்தப் பட்டணத்தை அந்த நாட்டுக்குத் தலைநகரமாக்கி, ஒரு தேசாதிபதியையும் ஏற்படுத்தினான். இதைச் சேர்ந்த இரண்டு துறைமுகங்களிருந்தன. வியாபாரம் அதிகரித்திருந்தது; அநேக யூதரும் அங்கே குடியேறினார்கள் *(அப். 18:1-18).*

பவுல் அத்தேனே பட்டணத்தை விட்டு கொரிந்து பட்டணத்துக்கு வந்தபோது, ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களைக் கண்டு, அவர்களோடு தங்கியிருந்து, யூதருக்கும், கிரேக்கருக்கும் புத்தி சொல்லிக் கொண்டிருந்தான் *(அப். 18:1-4),*

அப்பொல்லோ என்னும் பெயர் கொண்ட ஒரு யூதன், கொரிந்துக்கு வந்து சுவிசேஷ ஊழியம் செய்தான் *(அப். 19:1).*

பின்பு பவுல் மக்கெதோனியாவிலிருந்து கொரிந்துக்குப் போக யோசித்தும் அது சரியான தருணமாயிராதென்று எண்ணிப் போகாமல் விட்டான் *(2 கொரி. 1:15-23).*

பவுல் கொரிந்து சபைக்கு இரண்டு நிருபங்கள் எழுதினான்.

பின்னும் ஒரு முறை பவுல், காவலிலிருந்து விடுதலையான பின், கொரிந்துவுக்குப் போன வேளையில் எரஸ்து என்பவனை அங்கே விட்டுவிட்டுப் போனான் *(2 தீமோ. 4:20).*

கொரிந்து பட்டணத்தில் இரண்டு துறைமுகங்களிருந்தன. அவைகளில் முக்கியமானது "கெங்கிரேயா" (அப். 18:18).

கொரிந்து பட்டணத்தில் வியாபாரம் அதிகரித்ததினால் செல்வாக்கும் அதிகமானது. அத்தோடு துன்மார்க்கமும் பொல்லாங்கும் மிகுதியாயின. இவைகள் கிறிஸ்தவ சபைகளுக் குள்ளும் புகுந்தன. பவுலுக்கு அதிக விசாரத்தை உண்டாக்கினதால், தன் நிருபங்களில் இவைகளைக் கண்டித்து எழுதியிருக்கிறான்.

## கொர்நேலியு (Cornelius)

இவன் செசரியாவிலிருந்த ரோம பட்டணத்தின் நூற்றுக்கதிபதி. புறஜாதியானாயிருந்தும் ஒரே தேவனை வணங்கின பயபக்தி யுள்ளவன்.

ஒரு தேவதூதன் அவனுக்குத் தரிசனமாகி, யோப்பா பட்டணத்திலிருந்துப் பேதுருவை அழைக்கும்படி சொன்னபோது, அவனிடம் ஆள் அனுப்பினான். பேதுருவும் தரிசனம் கண்டு, அவனைக் கூட்டிக்கொண்டு போகவந்த ஆள்களுடன் கொர்நேலியுவின் வீட்டுக்குப் போய் அவனும் அவனுடைய சிநேகிதரும், உறவின் முறையாரும் தனக்காகக் காத்திருந்ததைக் கண்டான். அவன் அவர்களுக்கு வசனத்தை கூறின வேளையில், பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேலிறங்கினார். அப்போது பேதுரு அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் (அப். 10:1-48).

கொர்நேலியுவும் அவன் வீட்டாருமே, புறஜாதியாரில் முதன் முதலாக கிறிஸ்தவர்களானார்களென்று எண்ணப்படுகிறது. பிலிப்பு ஞானஸ்நானம் கொடுத்த எத்தியோப்பிய மந்திரி இதற்கு முந்தினவனாயிருக்கலாம் (அப். 8:35-39).

## கொர்பான் (Corban)

இந்தச் சொல் மாற்கு 7:11இல் மாத்திரம் காணப்படுகிறது. "காணிக்கை" என்று மத். 15:5இல் எழுதியுள்ளது.

தொடக்கத்தில் தேவனுக்குக் கொடுக்கும் காணிக்கையை இது கருதிற்று. கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினால் அதைச் செலுத்த வேண்டுமென்று மோசேயின் பிரமாணத்தில் சொல்லியுள்ளது (உபா. 23:21-23). பழிக்கஞ்சாத சில மனுஷர் தங்கள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல், அந்தப் பொருள் கர்த்தருக்குக் காணிக்கையாகக் கொடுத்தாயிற்றென்பார்கள். யூத தலைவரும் அப்படிப்பட்ட கொர்பான் காணிக்கையை ஏற்றுக்கொண்டார்கள். பரிசேயரும் அதற்கு அனுமதி கொடுத்தார்கள். நமது ஆண்டவர் இந்தப் போதனையினிமித்தம் பரிசேயரைக் கண்டித்தார்.

அவர்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்கு கிறார்களென்றார் *(மாற்கு. 7:13).*

## கொலோசெ (Colosse)

சின்ன ஆசியாவில் பெரிக்கிரியாவிலிருந்த ஒரு பூர்வீகப் பட்டணம். ஒரு காலத்தில் பெயர் பெற்ற இடமாயிருந்தது. பின்பு இதற்கு அருகிலிருந்த லவோதிக்கேயா மேலான நிலைக்கு வரவே, இது குறைந்து போயிற்று.

இந்த ஊரானாகிய எப்பாப்பிரா, இங்கேயும் லவோதிக்கேயாவி லும், எராப்போலியிலும், அதிகமாய் கர்த்தருடைய ஊழியம் செய்தான் *(கொலோ. 4:12,13).*

பவுல் இந்தப் பட்டணங்களிலுள்ள சபைகளைச் சந்திக்கவில்லை *(கொலோ. 2:1).* ஆனால் யூதருடைய தப்பிதமான போதனைகளைப் பற்றி, பவுல் இங்கேயுள்ள சபைகளை எச்சரித்து எழுதினார்.

பிலேமோன், ஒநேசிமு என்பவர்கள் கொலோசெ சபையைச் சேர்ந்தவர்களாகத் தெரிகிறது *(கொலோ. 4:9).*

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் துருக்கர் இங்கேயிருந்த ஆலயத்தை அழித்ததோடு, பட்டணமும் இல்லாமற் போயிற்று.

## கொல்கொதா (Golgotha)

***(தலை ஓடு)***

கொல்கொதா என்பதின் பொருள் "தலை ஓடு"

எருசலேமுக்குப் புறம்பே இயேசு சிலுவையிலறையப்பட்ட இடம். இது கபாலஸ்தலம் என்று அர்த்தங்கொள்ளும். "கொல்கொதா" என்று *மத். 27:33; மாற்கு. 15:22; யோவான். 19:17*லும் கபாலஸ்தலம் என்று *லூக்கா. 23:33*லும் குறித்துள்ளது.

இப்பெயர் கொடுக்கப்பட்ட நியாயம், ஒன்றில் இது ஒரு கபாலத் தோற்றமான மேடு, அல்லது அநேக தலையோடுகள் கிடந்த இடமாயிருக்கலாம். பின்பு இந்த அடையாளங்கள் அங்கே காணப்படவில்லை.

பரிசுத்த கல்லறைத் தேவாலயம் (Church of Holy Sepulchre) ஒன்று அவ்விடத்தில் கட்டப்பட்டிருக்கிறது.

அக்காலத்து யூத ஜனங்கள் கி.பி. 130இல் செய்த கலகத்தின் பயனாய், யூதரும், யூத கிறிஸ்தவர்களும் எருசலேமிலிருந்து துரத்தப் பட்டார்கள். அதன்பின் அஞ்ஞான இராஜ்யங்கள் வன்மங்கொண்டு, இந்தப் பரிசுத்த இடங்களை அழித்துப் போட்டார்கள்.

## கோகாத், கோகாத்தியர் (Kohath)

*(ஜனக்கூட்டம்)*

லேவியின் இரண்டாம் குமாரன். ஆரோன், மோசே என்பவர்களின் முற்பிதா *(ஆதி. 46:11)*. லேவி கோத்திரம் மூன்று பகுதியானவை. கெர்சோனியர், கோகாத்தியர், மெராரியர் *(எண். 3:17)*. கோகாத்தின் குமாரர் அம்ராம், இத்சேயார், எப்ரோன், ஊசியேல் என்பவர்கள் *(எண். 3:19)*.

வனாந்தரப் பிரயாணத்தில் இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்தின் தென்புறமாகப் பாளயமிறங்கினார்கள் *(எண். 3:29)*.

அவர்களுடைய காவல், பெட்டி, மேசை, பரிசுத்த ஸ்தலத்தின் பணிமூட்டுகள் முதலியவைகளுக்கடுத்தவை *(எண். 3:31)*. யோசுவா தேசத்தை ஜெயித்த பின் சீட்டுப்போட்டு இவர்களுக்கு 23 பட்டணங் களும் வெளி நிலங்களும் கொடுக்கப்பட்டன *(யோசுவா. 21:4,5)*.

தாவீதின் நாள்களில் கோகாத்தியரின் குமாரரில் ஏமானும் அவன் குடும்பத்தாரும் சங்கீத சேவையில் பணிவிடை செய்தார்கள் *(1 நாளா. 6:33)*. தாவீது லேவியரை வகுப்புகளாகப் பிரித்து ஊழியத்துக்கு நியமித்தான் *(1 நாளா. 23:6,12)*.

மோவாபியர், யோசபாத்துக்கு விரோதமாக வந்தபோது அவன் கர்த்தரை நோக்கி தலைகுனியவே, கோகாத்தியர் கர்த்தரைத் துதித்தார்கள் *(2 நாளா. 20:18,19)*.

எசேக்கியா தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது, கோகாத்தியரும் உதவி செய்தார்கள் *(2 நாளா. 29:12-14)*.

## கோராகு (Korah)

*(மொட்டை)*

*1.* கோகாத்தின் சந்ததியானான இத்சேயான் குமாரன் கோராகு *(யாத். 6:21)*. இவன் ரூபன் வம்சத்து தாத்தானையும், அபிராமையும், பேலேத்தின் குமாரனாகிய ஓனையும், இன்னும் சபைத் தலைவராகிய 250 பேரையும் கூட்டிக்கொண்டு ஆரோன், மோசே என்பவர்களுக்கு விரோதமாக எழும்பினான் *(எண். 16:1-3)*.

தேவனுடைய சொற்படி, மோசே அவர்களிடம் போய், மற்ற ஜனங்களை விலகிப் போகும்படி செய்து தேவதீர்ப்பைக் கூறவே, பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும், பொருள்களையும் விழுங்கிற்று *(எண். 16:25-32)*.

கோராகின் குமாரரோ சாகவில்லை *(எண். 26:11)*. இவன் பெயர் "கோரா" என்று யூதா 11இல் குறித்துள்ளது.

*2. ஏதோமியரின் தகப்பனாகிய ஏசாவின் குமாரன் (ஆதி. 36:5).*

*3. கோராகு ஏசாவின் பேரனென்றும் சொல்லியுள்ளது (ஆதி. 36:16).*

*4. கோகாத்தின் சந்ததியான் (1 நாளா. 6:22). கோராகின் குமாரர் தாவீதின் நாள்கள் துவங்கி சங்கீத சேவை செய்தார்கள் (1 நாளா. 6:37).*

## கோரேஸ் (Cyrus)

**(சூரியன்)**

*இவன் "மகா கோரேஸ்" எனப்பட்டான். பெர்சிய இராஜ்யத்தை ஸ்தாபித்தவன். இவன் தன்னுடைய இராஜ்யத்தை நிலைப்படுத்தின பின், சின்ன ஆசியாவில் லீதியாவின் இராஜாவாகிய கோரேசை (Croesus) கி.மு. 546இல் தோற்கடித்தான். பின்பு கி.மு. 540இல் பாபிலோன் இராஜாவாகிய நேபோநிது (Nabonidus) என்பவனைப் பிடித்து, பாபிலோனைக் கீழ்ப்படுத்தினான். நேபோநிது பெல்ஷாத்சார் என்பவனின் தகப்பன்.*

*கோரேஸ் இராஜாவான முதலாம் வருடத்திலேயே பாபிலோனியாவில் சிறையிருந்த யூதரெல்லாரையும் விடுதலை பண்ணி அவர்களுக்குள் விருப்பமானவர்கள் தங்கள் தேசத்துக்கு திரும்பிப்போய் தேவாலயத்தைக் கட்டலாமென்று பிரசித்தம் பண்ணினான். அத்தோடு நேபுகாத்நேச்சார் எருசலேமிலிருந்து கொண்டுவந்த பணிமுட்டுகளையும் பொக்கிஷங்களையும் போகிறவர்களிடம் கொடுத்தனுப்பினான் (2 நாளா. 36:22,23; எஸ்றா. 1:1-7; 3:7; 5:13,17).*

## கோலியாத் (Goliath)

**(சிறைவாசம்)**

*1. காத் ஊரிலிருந்த ஒரு பெலிஸ்திய இராட்சதன். அவன் ஒன்பது அடிக்கு மேலான உயரமுள்ளவன். பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்குமிடையில் யுத்தம் நடந்த நாள்களில், இவன் தன்னோடு போர் செய்ய இஸ்ரவேலரில் யாராவது ஒருவரை அழைத்த வேளையில், அவர்கள் பயந்து ஒருவனும் போகவில்லை. தாவீது அங்கே போயிருந்த வேளையில் அவனைக் கொன்ற சம்பவம் 1 சாமு. 17இல் விவரித்துள்ளது.*

*2. 2 சாமு. 21:19; 1 நாளா. 20:5லும் ஒரு கோலியாத்தைப் பற்றிச் சொல்லியுள்ளது. அவன் யார் என்பதை நிச்சயித்தற்கரியது.*

## கோனியா (Coniah)

*(கர்த்தர் சிருஷ்டிக்கிறார்)*

யோயாக்கீமின் மறுபெயர் (எரே. 22:24-28).

## சகரியா (Zechariah)

1. இஸ்ரவேலின் 14-ஆம் இராஜா (கி.மு. 759) 2-ஆம் யெரொபெயாமின் மகன். இவன் சமாரியாவில் ஆறு மாதம் இராஜ்ய பாரம்பண்ணினான். சல்லூம் இவனைக் கொன்றுபோட்டு, தான் இராஜாவானான். நாலாம் தலைமுறை மட்டும் யெகூவின் சந்ததியார் இஸ்ரவேலின் சிங்காசனத்தில் வீற்றிருப்பார்களென்று கர்த்தர் சொன்ன வார்த்தை, இவனில் நிறைவேறினது (2 இரா. 14:29; 10:30; 15:7-12).

2. யோவாஸ் இராஜாவின் நாள்களில் ஆசாரியனாயிருந்த யோய்தாவின் மகன் சகரியா. ஜனங்கள் விக்கிரகங்களைச் சேவித்ததினிமித்தம், அவர்களைக் கடிந்துகொண்டான். அதினால் ஜனங்கள் அவனுக்கு விரோதமாய் எழும்பி, இராஜாவின் கற்பனையின்படி அவனை ஆலயப்பிரகாரத்தில் கல்லெறிந்து கொன்றார்கள் (2 நாளா. 24:21). இயேசுவும் இந்த இரத்தப் பழியைப் பற்றி மத். 23:35; லூக்கா. 11:51இல் பேசினார். இங்கே சகரியாவின் தகப்பன் பரகியா என்றது யோய்தாவின் மறுபெயராகவோ, அல்லது அவனுடைய முன்னோரிலொருவரின் பெயராகவோ இருக்கலாம்.

3. ஏரோதின் நாள்களில் அபியா என்னும் ஆசாரிய வகுப்பைச் சேர்ந்த ஓர் ஆசாரியன். அவனுடைய மனைவி எலிசபெத்து, இருவரும் சந்தானமில்லாத வயோதிபர்களாயிருந்தார்கள். ஒரு நாள் சகரியா தூபங்காட்டுகிற வேளையில், ஒரு தேவதூதன் தரிசனமாகி "உன் மனைவி ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக" என்றான். அவன் இதை விசுவாசியாதபடி யால் பிள்ளை பிறக்கும் வரை ஊமையாயிருந்தான். இந்தப் பெயர் பிள்ளைக்குக் கொடுக்கப்பட்டதும் வாய் திறக்கப்பட்டு, ஸ்தோத்திரப் பாட்டுப் பாடினான் (லூக்கா. 1:5-20, 62-79).

4. சகரியா தீர்க்கதரிசி. இவன் இத்தோவின் மகனான பெரகியா வின் குமாரன் (சக. 1:1). இத்தோ செருபாபேலோடு சிறையிருப் பிலிருந்துத் திரும்பி வந்த ஆசாரியரிலொருவன் (நெகே. 12:16).

5. எசேக்கியா இராஜாவின் பாட்டன் (2 இரா. 18:2; 2 நாளா. 29:1).

6. கீஸ் என்பவனின் சகோதரன். சவுலுடைய சிறிய தகப்பன் (1 நாளா. 9:37).

7. தாவீதின் நாள்களில் ஓர் ஆசாரியன் (1 நாளா. 15:24).

*8.* யூதாவில் ஒரு பிரபு. யோசபாத்துக்கு உதவியாய் இருந்தவன் *(2 நாளா. 17:7).*

*9.* யோசபாத்தின் மகன் *(2 நாளா. 21:2).*

*10.* உசியா இராஜாவின் ஆலோசனைக்காரனும், ஒரு தீர்க்கதரிசியும் *(2 நாளா. 26:5).*

*11.* யோசியாவின் நாள்களில் தேவாலய விசாரணைக்காரன் *(2 நாளா. 35:8).*

*12.* எஸ்றா அகாவாவுக்கு ஓடுகிற நதியண்டையில் அழைப்பித்த தலைவரில் ஒருவன் *(எஸ்றா. 8:15).*

## சகேயு (Zacchaeus)

**(தூய்மை)**

சகேயு எரிகோவிலிருந்த ஆயக்காரருக்குத் தலைவனும், ஐசுவரியவானுமாயிருந்தான். இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டு அவன் குள்ளனானபடியால், அவரைப் பார்க்க ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். இயேசு அவனைக் கண்டு, அவனுடைய வீட்டில் தங்க விரும்பியபோது, சகேயு அவரைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டான். அப்பொழுது அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டு, இனிமேல் அநியாயமாய் எதையும் வாங்கமாட்டேன் என்று சொன்னான்.

இதைக்கேட்டு இயேசு, இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்ததென்றும், மனுஷகுமாரன் இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே வந்தார் என்றும் சொன்னார் *(லூக்கா. 19:1-10).*

இந்தச் சம்பவத்தை சுவிசேஷகரில் லூக்கா மாத்திரமே குறித்துள்ளான்.

## சதுசேயர் (Sadducees)

இவர்கள் தாவீதின் நாள்களில் பிரதான ஆசாரியனாயிருந்த, சாதோக் என்பவனிலிருந்து வந்ததாகத் தெரிகிறது *(2 சாமு. 8:17).* பின் வந்த பிரதான ஆசாரியர்களும் இவனுடைய சந்ததியார். எசேக்கியேல் "இவர்களே நீதியான ஆசாரிய வகுப்புக்குரியவர்கள்" என்கிறான் *(எசே. 40:46; 43:19; 48:11).*

இவர்கள் உயிர்த்தெழுதல் இல்லையென்றும், தேவதூதனும், ஆவியும் இல்லையென்றும் சாதித்தார்கள் *(மத். 22:23; அப். 23:8).*

சதுசேயர், ரோம அரசாட்சி முறைக்குச் சார்பாயும், பிரதான ஆசாரியர் வகுப்பைச் சேர்ந்தவர்களாயும் இருந்தார்கள் *(அப். 5:17).*

எருசலேம் பிடிபடுவதற்கு முன், 200 வருடங்களாக பிரதான ஆசாரியர் சதுசேயரிலிருந்தே தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

யோவான்ஸ்நானன் இவர்களையும் பரிசேயரையும் விரியன் பாம்புக்குட்டிகள் என்று குற்றஞ்சாற்றினான் *(மத். 3:7)*. இயேசுவினிடத்திலும் இவ்விரு கட்சியாரும் அடையாளம் காட்டும்படி கேட்டார்கள் *(மத். 16:1)*.

இயேசுவும், பரிசேயர், சதுசேயர் என்பவர்களின் உபதேசத்தைக் குறித்து தமது சீஷரை எச்சரித்தார் *(மத். 16:12)*.

இயேசுவுக்கும் பரிசேயருக்குமிடையில் இருந்த பிணக்குகளில், இவர்கள் சம்பந்தப்படாதிருந்தும், அவர் தாமே மேசியா என்றபோது, அது ரோம அரசாட்சிக்கு விரோதமானதென்று கண்டு, அவரை விரோதித்தார்கள். இதுவே, இவர்களும் இயேசுவைக் கொலை செய்ய வகை தேடியதற்குக் காரணம்.

இயேசு உயிர்த்தெழுந்த பின்னர், உயிர்த்தெழுதலில், நம்பிக்கை இல்லாத சதுசேயர், கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினார்கள் *(அப். 4:1-4)*.

பின்பு பவுல், ஆலோசனைச் சங்கத்தாரால் விசாரிக்கப்படுகையில், உயிர்த்தெழுதலைப் பற்றிய விஷயத்தில், சதுசேயருக்கும், பரிசேயருக்கும் இடையில் வாக்குவாதம் உண்டானபடியால், பவுல் தப்பிக் கொண்டான் *(அப். 23:6-10)*.

சதுசேயர், மோசேயின் கற்பனைகளைத் தவிர வேறொரு கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ளாமல் ஆத்துமாவின் அழிவின்மையையும் உயிர்த்தெழுதலையும் நம்பாமல், ஒவ்வொருவனுடைய உயர்வு தாழ்வு அவனவன் நடத்தைக்குத் தக்கதாய் இருக்குமென்றும் சாதித்தார்கள். தேவதூதரும், பிசாசுகளும் இல்லையென்றும் சொன்னார்கள்.

அவர்கள் மேலான வகுப்பைச் சேர்ந்தவர்களும் கல்விமான்களுமாயிருந்தார்கள். தேவன் ஒருவரென்ற நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தும், பரிசுத்த ஜீவியத்துக்கடுத்தவைகளில் கவனமற்றிருந்தார்கள்.

எருசலேம் அழிக்கப்பட்டு, பிரதான ஆசாரியரும் கொல்லப்பட்டதோடு, சதுசேயர் என்ற பகுதியினர் முற்றாக ஒழிந்து போனார்கள்.

## சமாரியா (Samaria)

***(விழிப்பு)***

*1.* சமாரியா என்பதன் பொருள் “காவல் மலை”. இது வட இராஜ்யத்தின் தலைநகர். ஓம்ரி இராஜாவாகி ஆறு வருடம்

அரசாண்டபின், சமாரியா மலையை விலைக்கு வாங்கி, அங்கே ஒரு பட்டணத்தைக் கட்டி, அதைத் தனது இராஜதானியாக்கினான் *(1 இரா. 16:24)*.

அதன்பின், ஆகாப் இராஜா அங்கே ஒரு தந்த அரண்மனையைக் கட்டி எழும்பினான். யேசபேல் பாகாலுக்கு ஒரு கோயிலைக் கட்டி, பாகால் வணக்கத்தைத் திடப்படுத்தினான். ஆகாப் பாகாலுக்கு ஒரு விக்கிரகத் தோப்பை வைத்து, கர்த்தருக்கு கோப மூட்டினான் *(1 இரா. 16:32,33; 1 இரா. 22:39)*.

சமாரியா "எப்பிராயீமுடைய கிரீடம்" என்று ஏசாயா சொல்லுகிறான் *(ஏசாயா. 28:1)*. தீர்க்கதரிசிகள் சமாரியாவை விக்கிரக ஆராதனைக்கு மூலஸ்தானமெனக் கூறினார்கள் *(ஏசாயா. 8:4; எரே. 23:13; எசே. 23:4; ஓசி. 7:1; மீகா. 1:6)*.

சமாரியாவுக்கும் தமஸ்குவுக்கும் இடையில் கலகமுண்டாகி, இரண்டு தடவைகளில் சீரியாவின் இராஜாவாகிய பெனாதாத் சமாரியாவை முற்றுகை போட்டான். இரண்டாம் தடவை அங்கு கொடிய பஞ்சம் உண்டாயிற்று *(1 இரா. 20:1; 2 இரா. 6:24,25)*. அப்போது கர்த்தர் சீரியருடைய இராணுவத்தில் ஒரு கலகம் உண்டாக்கினதின் பயனாக, அவர்கள் தங்கள் ஜீவன் தப்ப ஓடிப் போனார்கள் *(2 இரா. 7:7)*.

ஆகாப் இராஜாவின் நாள்களில், எலியா தீர்க்கதரிசி பாகால் வணக்கத்தை கொண்டுவந்த தீர்க்கதரிசிகள் 450 பேரை கொன்றான் *(1 இரா. 18:40)*.

பின்பு பாகால் வணக்கத்தை அழிக்கும்படி ஆகாபின் எழுபது குமாரரையும், மற்றவர்களையும் யெகூ கொன்றான் *(2 இரா. 10:7; 14:25)*.

சமாரியர் இந்த வணக்கத்தை விடாமலிருந்ததினிமித்தம், தீர்க்கதரிசிகள் பட்டணத்தின் மேலும் ஜாதியின் மேலும் வரப்போகிற தேவ தண்டனையை முன்னறிவித்தார்கள் *(ஏசாயா. 28:1-4; ஓசியா. 8:13; ஆமோஸ் 3:11)*.

ஓசியா இராஜாவின் ஏழாம் வருடம், சல்மநேசர் சமாரியாவை முற்றுகை போட்டு, மூன்று வருடங்களில் *(கி.மு. 722ல்)* சர்கோன் அதைக் கீழ்ப்படுத்தினான் *(2 இரா. 17:5, 18:9)*.

அசீரியர், இஸ்ரவேல் ஜனங்களைச் சிறைப்பிடித்து, மெசபெத்தோமியாவுக்கு அனுப்பி, அவர்களுக்குப் பதிலாக, பாபிலோனிய சீரிய ஜனங்களைச் சமாரியாவிலும், இஸ்ரவேலின் மற்றப் பட்டணங்களிலும் குடியேற்றினார்கள் *(2 இரா. 17:3-6)*. ஆனால் சமாரியா அழிக்கப்படவில்லை. அது எப்போதும் அசீரியர்,

பாபிலோனியர், பெர்சியர், கிரேக்கர், ரோமர் ஆகியவர்களின் அரசாட்சிக்குட்பட்டிருந்தது.

இயேசுவின் நாள்களில், பெரிய ஏரோது செய்த சீர்த்திருத்தங்களின் பயனாக, சமாரியா ஒரு பேர் பெற்ற பட்டணமாயிற்று. அங்கே அநேக விக்கிரக கோயில்களும் கட்டப்பட்டன.

இயேசு பரமேறிய பின், சீஷர்கள் போய் சமாரியாவில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தபோது அநேகர் விசுவாசிகளானார்கள் *(அப். 8:6).*

பிற்காலங்களில் இது ஒரு அத்தியட்ச குருவின் ஸ்தானமாயிற்று. எருசலேமில் கி.பி. *536*இல் நடந்த குருமாரின் கூட்டத்தில் இங்கிருந்தும் ஒருவர் போயிருந்தார்.

சமாரியா என்பது ஒரு நகரத்தை மாத்திரமல்ல, முழு தேசத்தையும் குறித்துள்ளது *(1 இரா. 21:1; 2 இரா. 17:24; எரே. 31:5).*

2. சமாரியா என்ற பெயருள்ள பெர்சிய இராஜ்யத்தின் ஒரு மாகாணம் உண்டு *(நெகே. 4:2).*

இயேசுவின் நாள்களில் இது பொந்தியுபிலாத்து அரசாண்ட யூதேயா தேசத்தின் ஒரு பாகமாயிருந்தது. சமாரியா, இதுமேயா, யூதேயா ஒரே அரசாட்சிக்குக் கீழிருந்தது.

3. சமாரியா என்ற பெயர் சில வேளைகளில் வட இராஜ்யம் முழுமைக்கும் சொல்லப்பட்டது *(1 இரா. 21:1; 2 இரா. 17:24; எரே. 31:5).*

## சமாரியன் (Samaritan)

இந்தப் பதம் பழைய ஏற்பாட்டில், *2 இரா. 17:24-41*இல் மாத்திரமே காணப்படுகிறது.

சமாரியா தேசத்தில் குடியிருந்தவர்கள், சமாரியர் எனப் பட்டார்கள். பிற்காலங்களில் வேறு இடங்களிலிருந்து ஜனங்கள் இங்கு குடியேற்றப்பட்டதினால் இவர்கள் ஒரு கலப்பு ஜாதியினரானார்கள். இதினிமித்தம் யூதர் அவர்களோடு சம்பந்தம் கலக்கவில்லை *(2 இரா. 17:24; லூக்கா. 17:11).*

யோசியா சமாரியாவிலிருந்த மேடைகளைத் தகர்த்து, பாகால் வணக்கத்தையும் அழித்துப்போட எத்தனித்தான் *(2 இரா. 23:19).*

இதினிமித்தம் சில சமாரியர் தொழுதுகொள்ள எருசலேம் தேவாலயத்துக்குப் போனார்கள் *(எரே. 41:5).*

பின்பு, சிறையிருப்பிலிருந்து வந்த யூதர், தேவாலயத்தைக் கட்ட ஆரம்பித்தபோது, சமாரியரும் ஒத்தாசை செய்ய முன் வந்தாலும் செருபாபேல் அதை ஏற்றுக்கொள்ளவில்லை (எஸ்றா. 4:4; நெகே. 4:7).

இதினிமித்தம் சமாரியர் ஆலயம் கட்டுவதை தடை செய்ய முயன்றார்கள். இந்தப் பகை அவர்களிடையில் நீடித்தது.

பிற்பாடு நெகேமியா எருசலேமின் அலங்கத்தைக் கட்டத் தொடங்கியபோதும், சமாரியர் அதற்கு விரோதமாயிருந்தார்கள் (நெகே. 4:1-23).

இதன்பின் சமாரியர் தங்களுக்காக ஒரு ஆலயத்தை கெர்சீம் மலையில் கட்டினார்கள்.

கி.மு. 128இல் யூதருடைய இராஜா ஏர்கானூ அந்த ஆலயத்தை அழித்துப்போட்ட போதிலும், சமாரியர் அந்த இடத்தில் தங்கள் வணக்கங்களை செய்து வந்தார்கள். இயேசுவின் நாள்களிலும் அப்படியே நடந்தது (யோவான். 4:20).

சமாரியரும் மேசியா ஒருவர் வருவாரென்று எதிர்பார்த் திருந்தார்கள் (யோவான். 4:25). அவர்கள் மோசேயின் ஆகமத்தை மாத்திரம் தங்கள் விவிலிய நூலாக வைத்துக்கொண்டார்கள்.

இயேசு தமது சீஷரை அனுப்பினபோது, சமாரியாவுக்குப் போகவேண்டாம் என்று சொன்னபோதிலும், அவர் கூறிய நல்ல சமாரியனைப்பற்றிய உவமையிலிருந்தும், சொஸ்தமான பத்து குஷ்டரோகிகளுள் ஸ்தோத்திரம் செலுத்தினவன் சமாரியனா யிருந்தான் என்பதிலிருந்தும், அவர் அவர்களைப் புறக்கணிக்க வில்லை என்றும் தெரிகிறது (மத். 10:5,6; லூக்கா. 17:16-19).

ஆனால் இயேசு உயிர்த்தெழுந்த பின் வசனத்தைக் கேட்ட சமாரியரில், அநேகர் விசுவாசிகளானார்கள் (அப். 8:5,6).

## சம்மா (Shammah)
### (புகழ்ச்சி)

1. ரெகுவேலின் குமாரன், ஏசாவின் பேரன் (ஆதி. 36:13, 17; 1 நாளா. 1:37).

2. ஈசாயின் மகன், தாவீதின் சகோதரன் (1 சாமு. 16:9; 17:13). இவன் சிமேயாவென்று 1 நாளா. 20:7லும், சிம்மா என்று 1 நாளா. 2:13லும் குறித்துள்ளது.

3. ஆகேயின் குமாரனாகிய சம்மா என்னும் ஆசாரியன், தாவீதின் பேர்பெற்ற மூன்று பராக்கிரமசாலிகளிலொருவன் (2 சாமு. 23:11,33).

4. ஆரோதியனாகிய சம்மா தாவீதின் முப்பது பேரில் ஒருவன் (2 சாமு. 23:25). இவன் சம்மோத் என்று 1 நாளா. 11:27லும், சம்மூத் என்று 1 நாளா 27:8லும் குறித்துள்ளது.

## சரெப்தா (Sarepta)

இது சீதோனுக்கடுத்த ஒரு ஊர். சாறிபாத் என்றும் சொல்லப் பட்டது. கர்த்தருடைய வார்த்தையின்படி, எலியா இவ்விடத்துக்குப் போய், ஒரு விதவையின் வீட்டில் தங்கினான். பஞ்சகாலமானதால் அவளிடம் பானையில் ஒரு பிடி மாவும், கலசத்தில் கொஞ்சம் எண்ணெயும் மாத்திரம் இருந்தது. ஆனால் அது குறைவு படாமலிருந்து, அநேக நாள் அவர்கள் சாப்பிட்டார்கள்.

அந்நாள்களில் அந்த விதவையின் குமாரன் மரித்த வேளையில் எலியா விண்ணப்பம் பண்ணி அவன் உயிரடைந்தான் (1 இரா. 17:8-24; லூக்கா. 4:26).

சர்வ வல்லவர் என்பது தேவனுடைய பெயர். இது பழைய ஏற்பாட்டில் 48 தடவைகளில் சொல்லியுள்ளது. "தேவனால் அப்படியாயிற்று", "சர்வ வல்லவரால் அப்படியாயிற்று" என்று யாக்கோபு கூறுகிறான் (ஆதி. 49:25). சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும் (யோபு. 5:17).

சில வேளைகளில் தேவன் என்ற வார்த்தையோடு சேர்த்துச் சொல்லப்படுகிறது. "சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக" (ஆதி. 28:3).

புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தின விசேஷத்தில் எட்டு தடவைகளிலும், 2 கொரி, 6:18லும் குறித்துள்ளது. கர்த்தர் நான் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று ஆபிரகாமுக்குச் சொன்னார் (ஆதி. 17:1; 35:11). யாக்கோபு சர்வ வல்லமையுள்ள தேவன் எனக்குத் தரிசனமாகி என்னை ஆசீர்வதித்தார் (ஆதி. 48:3). சர்வ வல்லமையுள்ள தேவன் என்னும் நாமத்தினால் நான் ஆபிரகாமுக்கும் தரிசனமானேன் (யாத். 6:3).

"சர்வ வல்லவரின் தரிசனத்தைக் கண்டு" என்று பிலேயாம் கூறுகிறான் (எண். 24:4). சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். என்னைக் கிலேசப்படுத்தினார் என்று நகோமி சொன்னாள் (ரூத். 1:20,21).

சர்வ வல்லவருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதிரும். சர்வ வல்லவரின் அம்புகள் எனக்குள் தைத்திருக்கிறது. சர்வ வல்லவர் நீதியைப் புரட்டுவாரோ? சர்வ வல்லவருடைய

சம்பூரணத்தை நீர் அறியக் கூடுமா? சர்வ வல்லவரோடு நான் பேசினால் நல்லது. சர்வ வல்லவரோடு வழக்காடுகிறவன் யார்? (யோபு. 5:17; 6:4; 8:3; 11:7; 13:3; 40:2).

சர்வ வல்லவர் இராஜாக்களைச் சிதறடித்தார். சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான் (சங். 68:14; 91:1).

அந்த நாள் சர்வ வல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும் (ஏசாயா. 13:6). அந்த இரைச்சல் சர்வ வல்லருடைய சத்தம் போலிருந்தது (எசே. 1:24). எனக்குக் குமாரராயுமிருப்பீர்களென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார் (2 கொரி. 6:18).

இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நானே. சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர் என்று அந்த ஜீவன்கள் சொல்லிக் கொண்டிருந்தன. சர்வ வல்லமையுள்ள கர்த்தராகிய தேவனே உம்மை ஸ்தோத்திரிக்கிறோம் என்று மூப்பர்கள் சொன்னார்கள்.

சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே உமது நியாயத் தீர்ப்புகள் சத்தியமானவை. குதிரை மேலேறியிருந்தவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிரகோபமாகிய ஆலையை மிதிக்கிறார். சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக் குட்டியானவருமே அதற்கு ஆலயம் (வெளி. 1:18; 4:8; 11:17; 16:7; 19:15: 21:22).

## சல்லூம் (Shallum)

1. சல்லூம் என்பதன் பொருள் "பிரதிபலன்". இஸ்ரவேலின் 15-ஆம் இராஜா. (கி.மு. 745) யெகூ இராஜாவின் வம்சத்தானாகிய சகரியா அரசாண்டபொழுது, சல்லூம் அவனைக் கொன்று போட்டு, தான் இராஜாவானான். இவன் சமாரியாவில் ஒரு மாதம் மட்டும் அரசாண்டபின், மெனாகேம் திர்சாவிலிருந்து வந்து, இவனைக் கொன்று போட்டு தான் இராஜாவானான் (2 இரா. 15:10-14).

2. இவன் யூதாவின் இராஜாவாகிய யோசிதாவின் குமாரன் (1 நாளா. 3:15; எரே. 22:11). யோவகாஸ் இவனுடைய மறு பெயர் (2 நாளா. 36:1). மூன்று மாதம் எருசலேமில் அரசாண்டான்.

3. நப்தலியின் குமாரன் (1 நாளா. 7:13). சில்லேம் என்றும் குறித்துள்ளது (ஆதி. 46:24; எண். 26:49).

4. உல்தாள் என்னும் தீர்க்கதரிசினியின் புருஷன் (2 இரா. 22:14; 2 நாளா. 34:22).

5. சாதாக்கின் குமாரனாகிய ஒரு பிரதான ஆசாரியன். இல்க்கியாவின் தகப்பன் (1 நாளா. 6:12,13; எஸ்றா. 7:2).

*6.* எருசலேமின் அலங்கத்தைக் கட்டினவன் *(நெகே. 3:12).*

*7.* அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணினவன் *(எஸ்றா. 10:24).*

## சவுல் (Saul)

### *(கேட்கப்பட்டது)*

*1.* ஏதோம் தேசத்தில் ஆண்ட இராஜா *(ஆதி. 36:37,38; 1 நாளா. 1:48).*

*2.* சவுல் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீஸ் என்பவனின் மகன். இவன் இஸ்ரவேலின் முதல் இராஜா *(1 சாமு. 9:1-10, 27).*

இஸ்ரவேலர் பெலிஸ்தரால் நெருக்கப்பட்டபோது, தங்களுக்கும் ஓர் இராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் கேட்டதினால், சாமுவேல் தேவனுடைய கட்டளைப்படி, கில்காலில் சவுலை இராஜாவாக அபிஷேகம் பண்ணினான் *(1 சாமு. 10:1).*

பின்பு சாமுவேல் மிஸ்பாவில் ஜனங்களை வரவழைத்து அவர்களுக்கு முன் சவுலை இரண்டாம் முறை இராஜாவாக அபிஷேகம் பண்ணினான் *(1 சாமு. 10:17-25).*

அந்நாள்களில் நாகாஸ் என்னும் அம்மோனியன் வந்து, யாபேசை முற்றுகைபோட்டான். சவுல் அவனை முறியடித்தான் *(1 சாமு. 11:1-11).*

அதன்பின், சாமுவேல் ஜனங்களைக் கில்காலுக்கு அழைத்துக் கொண்டுபோய், சவுலை இராஜாவாக ஏற்படுத்தி, பலிகளைச் செலுத்தினார்கள். தேவனுடைய சித்தத்தின்படி செய்தான் என்பதற்கு அத்தாட்சியாக, சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினபோது, கர்த்தர் இடி முழக்கத்தையும், மழையையும் கட்டளையிட்டார் *(1 சாமு. 12:18).*

அப்பொழுது சாமுவேல், ஜனங்கள் கர்த்தருக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று சொல்லி அவர்களைத் திடப்படுத்தி அனுப்பி வைத்தான் *(1 சாமு. 12:14).*

இதன்பின் பெலிஸ்தர், இஸ்ரவேலரோடு யுத்தம் செய்யும்படி, ஜனங்களைக் கூட்டிக்கொண்டு மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள்.

சவுல், யுத்தம் தொடங்குமுன் பலி செலுத்தும்படி கில்காலில் சாமுவேலுக்காக ஏழு நாள் காத்திருந்தும் வராததினால், தானே அப்பலியைச் செலுத்தினான் *(1 சாமு. 13:5-9).*

அப்போது சாமுவேல் வந்து சவுலைப் பார்த்து "நீர் புத்தி யீனமாகச் செய்தீர், உம்முடைய இராஜ்யபாரம் நிலை நிற்காது.

தேவன் தமது இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தெரிந்து கொண்டார்" என்று சொன்னான் *(1 சாமு. 13:11-14)*.

இதுவே சவுல் செய்த முதலாம் தப்பிதம்.

இதன் பின்னர் சாமுவேல் சவுலிடம், அமலேக்கையும், அவனுக் குள்ள எல்லாவற்றையும் அழித்துப்போடு என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அந்தப்படியே சவுல் போய், அமலேக்கியரை மடங்கடித்தும் அவர்களுடைய இராஜாவாகிய ஆகாகையும் ஆடு மாடுகளில் சிலவற்றையும் தப்ப வைத்தான்.

சாமுவேல் சவுலிடம் வந்தபோது, சவுல் தான் கர்த்தரின் கட்டளைப்படியே செய்ததாகக் கூறினான். ஆனால் சாமுவேல் ஆடு மாடுகளின் சத்தத்தைக் கேட்டு அதைப்பற்றி விசாரித்தபோது, சவுல் அவைகளைப் பலிக்காக கொண்டு வந்ததாகச் சொன்னான். அதற்கு சாமுவேல் "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம், கர்த்தர் உம்மை இராஜ்யபாரத்தினின்று புறக்கணித்தார்" என்று சொன்னான் *(1 சாமு. 15:23)*.

சாமுவேல் போகும்படி திரும்பியபோது, சவுல் அவனுடைய சால்வையைப் பிடிக்கவே, அது கிழிந்தது. அப்போது சாமுவேல் "கர்த்தர் இவ்விதமே உம்முடைய இராஜ்ய பாரத்தையும் கிழித்து, உமது தோழனுக்குக் கொடுத்தார்" என்றான் *(1 சாமு. 15:28)*. பின்பு சவுல் சாகுமட்டும், சாமுவேல் திரும்ப அவனைக் காண வரவில்லை *(1 சாமு. 15:10-35)*. இது சவுலின் இரண்டாம் தப்பிதம்.

கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார். ஒரு பொல்லாத ஆவி சவுலைக் கலங்கப் பண்ணினது. சவுலுக்கு சவுக்கியமுண்டாகச் சுரமண்டலம் வாசிக்கும்படி தாவீதைக் கொண்டு வந்தார்கள். சவுல் அவனில் பிரியப்பட்டு, முதல் அவனை ஆயுததாரியாக்கி, பின் தனது சேனைத்தலைவனாக்கியதோடு, தன் மகள் மீகாளையும் விவாகம் செய்து கொடுத்தான் *(1 சாமு. 16:14-23)*.

தாவீதின் பேர் விளங்கியபோது சவுல், பொறாமைக் கொண்டு அவனைக் கொல்லும்படி பல முறை எத்தனித்தான் *(1 சாமு. அதி. 18)*.

ஆனால், கர்த்தர் அவனைக் காத்து, சவுலின் பின் அவனை இராஜாவாக்கினார்.

இதன்பின் பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் செய்யும்படி சூனேமில் பாளயமிறங்கியிருக்கையில், சவுல் அவர்களைக் கண்டு பயந்து கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, கர்த்தர் மறு உத்தரவு அளிக்கவில்லை. அப்பொழுது சவுல் அஞ்சனம் பார்க்கும் ஒரு ஸ்திரீயிடம் போய், சாமுவேலை எழும்பி வரப்பண்ணும்படி

கேட்டான். சாமுவேல் தோன்றி அவனுக்கு வரப்போகிற தீர்ப்பை வெளியிட்டான் *(1 சாமு. 28:8-14)*. இதுவே சவுல் செய்த மூன்றாம் தப்பிதம்.

மறுநாள் யுத்தம் நடந்தபோது சவுலின் குமாரர் கொலலப் பட்டார்கள். சவுல் வில் வீரரால் காயப்பட்டு, தன் பட்டயத்தின் மேல் விழுந்து இறந்தான் *(1 சாமு. 31:4)*.

சவுல் இஸ்ரவேலின் முதல் இராஜா. அவன்மேல் தேவ ஆவி வந்த வேளைகளில் தீர்க்கதரிசனம் உரைத்தான். சாமுவேல் மூலம் தேவ வாக்கு என்ன என்பதை அவன் அறிந்திருந்தான். அப்படி யிருந்தும், அவனுடைய முடிவு இப்படியாயிற்று. இதிலிருந்து அவன் ஆவிக்குரிய மனுஷனாயிராமல் மாம்சத்துக்குரியவனாயிருந்தான் எனத் தெரிகிறது.

3. சவுல் :- இது அப்போஸ்தலனாகிய பவுலின் முதற் பெயர் *(அப். 13:9)*. பவுல் காண்க.

## சனகெரிப் (Sennacherib)

சனகெரிப் அசீரியரின் இராஜா (கி.மு. 681-705). அவனுடைய தகப்பன், சர்கோன் அவன் கொல்லப்பட்டபோது, இவன் இராஜாவானான். அப்பொழுது அவனுடைய இராஜ்யத்தில் கலகங்கள் உண்டாயின.

பலாதானின் குமாரனாகிய பெரோதாக் பலாதான் என்னும் பாபிலோனின் இராஜா பாபிலோனைக் கைப்பற்றிக் கொண்டு மற்ற தேசங்களோடும் சமாதானமாகி யூதா இராஜாவாகிய, எசேக்கியா வுக்கும் நிருபங்களையும் வெகுமானத்தையும் அனுப்பினான் *(2 இரா. 20:12)*.

கி.மு. 702இல் மெரோதாக் பலாதான் தோற்கடிக்கப்பட்டான். ஆனால் ஒரு வருடத்துக்குப் பின் அசீரிய இராஜா யூதாவைத் தோற்கடித்து, எசேக்கியாவைத் திறை கொடுக்கப் பண்ணினான் *(2 இரா. 18:13-16)*.

அடுத்த வருடம் அசீரிய இராஜா சனகெரிப் பாபிலோனை இரண்டாம் முறை முற்றுகை போட்டிருக்கையில் எசேக்கியா கலகம் பண்ணினதினிமித்தம், சேனைகளை அவனுக்கு விரோதமாய் அனுப்பினான். எசேக்கியா கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். அப்பொழுது ஏசாயா சொல்லியனுப்பியபடி, அன்று இராத்திரி கர்த்தருடைய தூதன் அசீரியருடைய சேனைகளை அடித்து 1,85,000 யுத்த வீரரைக் கொன்றதினால், சனகெரிப் திரும்பி போனான் *(2 இரா. 19:19-35)*.

சனகெரிப் பிரயாணப்பட்டுப் போய் நினிவேயிலிருந்தான். அங்கே தன் தேவனாகிய நிஸ்ரோகின் கோயிலிலே பணிந்து கொள்ளும் போது அவன் குமாரராகிய அத்ரமேலுக்கும், சரேத்சேரும் அவனை வெட்டிப் போட்டு ஓடிப்போனார்கள் *(2 இரா. 19:37)*.

அவன் குமாரனாகிய எசரத்தோன் இராஜாவானான்.

## சாதோக் (Zadok)

***(நீதியுள்ள)***

*1.* இவன் ஆரோனின் சந்ததியான். அகித்துப்பின் மகன் *(1 நாளா. 6:5-13)*. தாவீதின் நாள்களில் இவனும், அபியத்தாரின் குமாரன் அகிமலேக்கும் ஆசாரியராயிருந்தார்கள் *(2 சாமு. 8:17)*.

தாவீது அப்சலோமுக்கு தப்பி ஓடினபோது சாதோக்கும் அபியத்தாரும் கர்த்தருடைய பெட்டியோடு அவனிடம் போக, அவன் அவர்களைத் திருப்பி எருசலேமுக்கு அனுப்பினான் *(2 சாமு.15:24-36)*.

அப்சலோம் மரித்த பின், இவர்கள் இருவரும் தாவீதுக்கு இராஜ்யத்தை நிலைநிறுத்த உதவியாயிருந்தார்கள். *(2 சாமு. 19:11)*. தாவீது ஆயத்தப்படுத்தின இடத்தில் தேவனுடைய பெட்டியைக் கொண்டு வந்து வைக்க சாதோக்கும் உதவியாயிருந்தான் *(1 நாளா. 15:11)*.

தாவீதின் கடைசி நாள்களில், அதோனியா இராஜாவாக முயன்றும், தாவீதின் கட்டளைப்படி, சாதோக்கும் நாத்தானும் சாலொமோனைச் சீகோனுக்குக் கொண்டுபோய் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் *(1 இரா. 1:30-39)*.

சாலொமோன் இராஜா ஆசாரியனாகிய சாதோக்கை அபியத்தாரின் ஸ்தானத்தில் வைத்தான் *(1 இரா. 2:35)*. சாதோக்கும் அவன் சந்ததியாரும் கி.மு. 587இல் சாலொமோனின் தேவாலயம் அழிந்துபோகும் வரை, ஆசாரிய ஊழியம் செய்தார்கள். எசேக்கியேல் சாதோக்கின் சந்ததியே உண்மையான ஆசாரியரென்று கூறுகிறான் *(எசே. 44:15, 48:11)*.

*2.* உசியா இராஜாவின் மாமனும் யோதாம் இராஜாவின் பாட்டனுமான சாதோக் *(2 இரா. 15:33; 2 நாளா. 27:1)*.

*3.* நெகேமியாவின் கீழ் அலங்கத்தைக் கட்டினவன் *(நெகே. 3:4)*.

*4.* அகித்தூபின் மகனாகிய சாதோக் - ஓர் ஆசாரியன் *(1 நாளா. 6:12; நெகே. 11:11)*.

*5.* இம்மேரின் குமாரன் சாதோக், அலங்கத்தைப் பழுது பார்த்த ஓர் ஆசாரியன். *(நெகே. 3:29).*

*6.* வேதபாரகனாகிய சாதோக், ஆலயத்தில் பொக்கிஷக்காரன் *(நெகே. 13:13).*

*7.* எபிரோனில் தாவீதிடம் போன ஒரு வாலிபன் *(1 நாளா. 12:28).*

## சாத்தான் (Satan)

சாத்தான் என்பதன் பொருள் "எதிராளி". இப்பதத்தின் மூல அர்த்தம் "சத்துரு" *(2 சாமு. 19:22).* இவன் சிருஷ்டிக்கப்பட்டவன். தேவதூதர் வகுப்பைச் சேர்ந்தவன்.

ஆதியிலே பாவஞ் செய்த தூதர்களைத் தேவன் நரகத்திலே தள்ளி, நியாயந்தீர்ப்புக்கு வைத்திருக்கிறார் *(2. பேதுரு. 2:4).* அவர்கள் தங்கள் ஆதிமேன்மையைக் காத்துக் கொள்ளாத தூதர்கள் *(யூதா. 6).*

இந்த வீழ்ச்சியின் பின், சாத்தானும் அவன் கூட்டத்தாரும் ஆகாமியத்துக்கு அதிகாரிகளானார்கள். மனுஷ ஜாதியாருக்கு தீங்கு வருவிப்பதே, அவர்களது ஒரே நோக்கம். எப்படியாயினும் அவர்கள் கிரியைகள் தேவ வல்லமைக்குட்பட்டவைகள். மனுஷருடைய காரியங்களில் தலையிடுவதும், தேவனுக்கு முன் அவர்களைக் குற்றஞ்சாட்டுவதும், சாத்தானின் தொழில் *(சக. 3:1,2).* ஜனத் தொகையெடுக்க சாத்தான் தாவீதை ஏவினான் *(1 நாளா. 21:1).* சாத்தான் யோசுவாவுக்கு விரோதமாக நின்றான் *(சக. 3:1).* சாத்தான் தன் பகைஞனின் வலது பக்கத்தில் நிற்பானாக என்று தாவீது சொல்லுகிறான் *(சங். 109:6).* பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறவன் *(1 யோவான் 3:8).*

வெவ்வேறு பெயர்கள் இவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன :

*1.* சோதனைக்காரன் :- *(மத். 4:3; 1 தெச. 3:5).*

*2.* சாத்தான் :- *(மாற்கு 3:26; 4:15; ரோமர். 16:20).*

*3.* பிசாசு :- *(லூக்கா. 4:2-6; அப். 13:10; எபே. 4:27; 6:11).*

*4.* பொல்லாங்கன் :- *(மத். 13:19,38; 1 யோவான். 2:13,14; 3:12; 5:18).*

*5.* பிசாசுகளின் தலைவன் :- பெயெல்செபூல் *(மத். 12:24-27).*

*6.* இவ்வுலகத்தின் அதிபதி :- *(யோவான். 16:11).*

*7.* அபெத்தோன் :- அப்பொல்லியோன், பாதாளத்தின் தூதன் *(வெளி. 9:11).*

8. ஏவாளை வஞ்சித்த சர்ப்பம், பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் (ஆதி. 3:1-4; வெளி. 12:9; 20:2).

9. பேலியாள் :- (2 கொரி. 6:15).

10. எதிராளி :- (1 பேதுரு. 5:8).

11. மோசம் போக்குகிறவன் :- (வெளி. 12:9).

12. பொய்க்குப் பிதா :- (யோவான். 8:44).

13. கொலைபாதகன் :- (யோவான். 8:44).

14. பாவஞ் செய்கிறவன் :- (1 யோவான். 3:8).

மனுஷன் கெட்டுப் போகாதபடி நித்திய ஜீவனை அடையும்படி, தேவன் ஏற்படுத்திய பழியை ஏற்றுக்கொள்ளாதபடி, அவனை வஞ்சித்து, தன் இராஜ்யத்துக்குட்படுத்துவதே அவன் விருப்பம்.

சாத்தான் சரீர உபத்திரவத்திற்குக் காரிய கர்த்தன் என்ற கருத்துடன் 1 கொரி. 5:5இல் குறித்துள்ளது. பவுலுக்கு இருந்த வியாதியும் அவனால் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது (2 கொரி. 12:7).

இயேசுவும் தம் ஊழியத் தொடக்கத்தில் பிசாசினால் சோதிக்கப் பட்டார் (மத். 4:1-11; லூக்கா. 4:2-13). அதுமாத்திரமல்ல, எல்லா விதத்திலும் நம்மைப் போல அவர் சோதிக்கப்பட்டார் (எபி. 4:15). சீஷர் மூலமாயும் சாத்தான் அவரை சோதித்தான். “எனக்குப் பின்னாகப் போ சாத்தானே” என்று பேதுருவுக்குச் சொன்னதி லிருந்து இது தெரியவருகிறது (மத். 16:23). அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசுக்குள்ளும் சாத்தான் புகுந்தான் (லூக்கா. 22:3).

எழுபது சீஷர் இயேசுவிடம் வந்து, தங்கள் ஊழியத்தைப் பற்றிச் சொன்னபோது, சாத்தான் வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்று இயேசு சொன்னார் (லூக்கா. 10:18). இது சாத்தானின் அதிகாரம் அற்றுப் போகத் தொடங்கினதென்பதைக் காட்டுகிறது.

புதிய ஏற்பாட்டில், நன்மை, தீமை உண்டென்றும் நன்மைக்குக் காரணர் தேவன், தீமைக்கு காரணம் சாத்தான் என்றும் கருதியுள்ளது. ஆகவே தேவ மக்களுக்கு எப்போதும் போராட்டம் உண்டு. இதினிமித்தம் விசுவாசத்தில் உறுதியாயிருந்து பிசாசை எதிர்த்து நில்லுங்கள் என்று 1 பேதுரு. 5:9லும், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அவன் ஓடிப்போவானென்று யாக். 4:7லும், பிசாசுக்கு இடம் கொடாமல் இருங்கள் என்று எபே. 4:27லும் பார்க்கிறோம். மேலும் பவுல், “தேவன் உண்மையுள்ளவர். அவர் சோதனையோடு அதற்குத் தப்பிக்கொள்ளும் போக்கையும் உண்டாக்குவார்” என்கிறான் (1 கொரி. 10:13).

ஜனங்கள் சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு, தேவனிடம் திரும்பும்படி செய்வதே, சுவிசேஷகருடைய தகுதியான ஊழியம் *(அப். 26:18).*

பிசாசுக்கும் அவன் தூதர்களுக்கும் நித்திய அக்கினி ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது என்று இயேசு சொல்லுகிறார் *(மத். 25:41).* சாத்தான் பாதாளத்திலே அடைக்கப்பட்டு சங்கிலியினால் ஆயிரம் வருடம் கட்டப்பட்டிருப்பான் *(வெளி. 20:1-3).* பின்பு கொஞ்சக் காலம் விடுதலையாக்கப்பட்டு கடைசியில் எரிநரகத்தில் சதாகாலமும் வாதிக்கப்படுவான் *(வெளி. 20:7-10).* ஆனால் இயேசு கிறிஸ்துவின் ஜீவியம், மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவைகளின் பயனாக அவன் தோற்கடிக்கப்பட்டான்.

சமாதானத்தின் தேவன், சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப் போடுவார் *(ரோமர் 16:20).*

## சாமுவேல் (Samuel)

***(தேவனால் கேட்கப்பட்டவன்)***

*1.* சாமுவேல் என்பதின் பொருள், "தேவனிடத்தில் கேட்டது". இவன் எப்பிராயீம் கோத்திரத்து எல்க்கானாவின் மகன். தாயின் பெயர் அன்னாள். அவள் பிள்ளை இல்லாதிருந்தபடியால் ஒரு பிள்ளை கிடைத்தால் தேவ ஊழியத்துக்கு ஒப்புக் கொடுப்பதாகச் சொல்லிப் பிரார்த்தித்தாள். அப்படியே ஒரு பிள்ளையைப் பெற்று அதற்கு சாமுவேல் என்று பெயரிட்டு, சீலோவிலிருந்த தேவாலயத்திற்குக் கொண்டு போய் ஏலி என்னும் ஆசாரியனிடம் ஒப்புக்கொடுத்தாள் *(1 சாமு. 1:24-28).* சாமுவேல் சணல்நூல் ஏபோத்தைத் தரித்தவனாய் கர்த்தருக்கு முன்னே பணிவிடை செய்தான் *(1 சாமு. 2:18).* ஒரு நாள் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி ஏலி குடும்பத்தின்மேல் வரப்போகும் தண்டனையை வெளிப் படுத்தினார் *(1 சாமு. 3:12).* சாமுவேல் கர்த்தரின் தீர்க்கதரிசிதான் என்று இஸ்ரவேலருக்கும் விளங்கினது *(1 சாமு. 3:20).* பின்பு சாமுவேல் ஆசாரிய ஊழியம் செய்து இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்து கொண்டிருந்தான் *(1 சாமு. 7:6).*

அந்நாள்களில் பெலிஸ்தர் இஸ்ரவேலுக்கு விரோதமாக வந்தபோது சாமுவேல் ஜனங்களை மிஸ்பா என்ற இடத்தில் கூட்டி பலிசெலுத்தி தேவனை நோக்கி வேண்டிக்கொண்டபோது இடி முழக்கம் உண்டாகி, பெலிஸ்தர் தோற்கடிக்கப்பட்டார்கள். அப்போது சாமுவேல் ஒரு கல்லை நிறுத்தி, "எபனேசர்" என பெயரிட்டான் *(1 சாமு. 7:12).*

சாமுவேல் வருடா வருடம் பெத்தேல், கில்கால், மிஸ்பா என்ற இடங்களைச்சுற்றி போய் நியாயம் விசாரித்தபின் ராமாவிலிருந்த தன் வீட்டுக்குத் திரும்பி வருவான். இவ்விடத்தில் ஒரு பலி பீடத்தையுங் கட்டினான் *(1 சாமு. 7:15-17).*

அவன் முதிர் வயதானபோது தன் குமாரரை நியாயாதிபதிகளாக ஏற்படுத்தினான். அவர்கள் நியாயத்தைப் புரட்டினதால் ஜனங்கள் தங்களுக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்தும்படி, சாமுவேலிடம் கேட்டார்கள். சாமுவேல் அது தேவனுக்குத் தகாததென்று கண்டதினால் இணங்காதிருந்தும் தேவனிடம் விசாரித்தபோது அவர் அப்படிச் செய்யும்படிச் சொன்னார் *(1 சாமு. 8:1-22).*

சாமுவேல் சவுலைச் சந்தித்து அவனை இராஜாவாக அபிஷேகம்பண்ணினான் *(1 சாமு. 10:1).* பின்பு சாமுவேல் ஜனங்களை மிஸ்பாவில் வரழைத்து அவர்கள் தேவனைப் புறக்கணித்து, ஓர் இராஜாவைக் கேட்டதற்காக அவர்களை எச்சரித்தபின், சீட்டு போட்ட போது சீட்டு சவுலின் மேல் விழுந்தது. அந்தப்படியே ஜனங்களும் அவனை இராஜாவாக ஏற்றுக் கொண்டார்கள். *(1 சாமு. 10:24).*

சாமுவேல் இஸ்ரவேல் ஜனங்களைக் கில்காலில் கூட்டிச் சேர்த்து அவர்களுக்குக் கர்த்தர் எகிப்திலிருந்துப் புறப்பட்டது முதல் செய்த நன்மைகளை விவரித்துச் சொல்லி; கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்து இடி முழக்கமும், மழையும் வரச் செய்த பின் கர்த்தரையே சேவிக்கும்படி புத்தி சொல்லி அவர்களை அனுப்பிவிட்டான் *(1 சாமு. அதி. 12).*

சில காலத்தின் பின் பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் செய்யும்படி வந்த வேளையில் பலி செலுத்த சாமுவேல் வரத் தாமதித்ததினால், சவுல் தானே பலி செலுத்தினான். சாமுவேல் வந்தபோது அவனைக் குற்றப்படுத்தி இந்தத் தப்பிதத்தினிமித்தம் அவனுடைய இராஜ்ய பாரம் நிலை நிற்காது என்றான் *(1 சாமு. 13:14)*

சவுல் அமலேக்கியரோடு செய்த யுத்தத்தில் தேவ கட்டளைக்குக் கீழ்ப்படியாததால் அவனுடைய இராஜ்யபாரம் நீங்கிற்று என்று சாமுவேல், அவனுக்குச் சொன்னபின் அமலேக்கியருடைய இராஜாவாகிய ஆகாகைத் துண்டித்தான் *(1 சாமு. 15:33).*

இதின்பின் சாமுவேல் கர்த்தரின் சொற்படி பெத்லகேமுக்குப் போய் தாவீதை அபிஷேகம் பண்ணினான் *(1 சாமு. 16:1-13).* பின்பு சவுல் தாவீதைக் கொல்ல வகை தேடினபோது தாவீது சாமுவேலிடம் போய், இருவரும் நாயோதியிலே தங்கியிருந்தார்கள். சவுல் தாவீதைப்

பிடிக்க ஆள்களை அனுப்பினபோது அவர்கள் போய் தீர்க்கதரிசி களைக் கண்டு அவர்களும் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். பின்பு சவுலும் போன சமயத்தில் அவனும் தீர்க்கதரிசனம் சொன்னதினால் சவுலும் தீர்க்கதரிசிகளில் ஒருவனோ என்பார்கள் *(1 சாமு. 19:18-24).*

சாமுவேல் மரணமடைந்தபோது ஜனங்கள் எல்லாரும் அவனுக்காகப் புலம்பி, ராமாவிலே அவனை அடக்கம் பண்ணி னார்கள் *(1 சாமு. 25:1).*

பின்பு பெலிஸ்தியரோடு யுத்தம் ஆரம்பித்த வேளையில் சவுல் எந்தோரின் அஞ்சனக்காரியை கொண்டு சாமுவேலை அழைப்பித் தான். அவன் சவுலுக்குத் தரிசனமாகி வரப்போகிற தேவ தண்டனையை அவனுக்கு அறிவித்தான் *(1 சாமு. 28:8-19).*

சாமுவேல் ராமாவிலே தீர்க்கதரிசிகளுக்கு ஒரு கல்லூரியை ஏற்படுத்தியிருந்தான் *(1 சாமு. 19:19,20).* அவன் நியாயாதிபதிகளில் கடைசியானவனானாலும் எல்லாரிலும் விசேஷித்தவன். தீர்க்கதரிசிகளில் முதலானவனும், இஸ்ரவேலின் இராஜ்ய பாரத்தைத் தொடங்கினவனும் அவனே. இஸ்ரவேல் ஜனங்களைப் பெலிஸ்தர் கையிலிருந்து விடுவித்ததிலும், அவர்களை ஒரு புதிய முறைமைக் குள்ளாக்கினதிலும், அவன் மோசேக்கு அடுத்ததாகக் கணிக்கப்படத் தக்கவன். சாமுவேல், விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றவருள் ஒருவன் *(எபி. 11:32).*

*2. சாலொமோனின் நாள்களில் சங்கீத சேவை செய்த ஏமானின் பாட்டன் சாமுவேல் (1 நாளா. 6:33).*

## சாராள் (Sarah)

***(இளவரசி)***

*1. சாராள் என்பதன் பொருள் "இராணி". இவளுடைய முதற் பெயர் சாராய். ஆபிராமுக்கு சகோதரி முறையாக இருந்த இவள், அவனுக்கு மனைவியானாள் (ஆதி. 11:29; 20:12). தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், சாராயையும் தன் பேரனாகிய லோத்தையும் கூட்டிக்கொண்டு, கல்தேய தேசத்து ஊர் என்கிற பட்டணத்திலிருந்து ஆரானுக்கூடாக கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான் (ஆதி. 11:31). ஆபிராம் தன் மனைவியையும் லோத்தையும் கூட்டிக்கொண்டு ஆரானில் கிடைத்த பரிவாரங்க ளோடு கானானுக்குப் போனான். பஞ்சத்தினிமித்தம் ஆபிராம் சாராயோடு எகிப்துக்குப் போய், அவள் அழகுள்ளவளாதலால், தன்னுடைய ஜீவனுக்கு ஆபத்து வரும் என்று நினைத்து, அவள் தன் சகோதரி என்று சொன்னான். அப்போழுது பார்வோன்*

அவளை அழைப்பித்து, அரண்மனையில் வைத்திருக்கையில் அவள் அவனுடைய மனைவியென்று அறிந்தபோது, அவர்கள் இருவரையும் அனுப்பிவிட்டான் (ஆதி. 12:12-20).

சில காலங்களின் பின் ஆபிராம் கேராரிலே தங்கியிருக்கையில், அத்தேசத்து இராஜாவாகிய அபிமெலேக்கு சாராயை தன் அரண்மனைக்கு அழைப்பித்தான். தேவன் அவனுக்குத் தரிசனமாகி அவனை எச்சரித்ததினால், அவன் அநேக பொருள் பண்டங்களை ஆபிராமுக்குக் கொடுத்து சாராயையும் அவனுக்கு ஒப்புவித்தான் (ஆதி. 20:2-14).

சாராய் மலடியாயிருந்ததினிமித்தம், தன் வேலைக்காரியான ஆகாரை ஆபிரகாமுக்கு மறுமனைவியாகக் கொடுத்தாள். அவள் கர்ப்பந்தரித்திருக்கையில் சாராய் அவளை கடினமாய் நடத்தினபடியால், ஆகார் ஓடிப்போய், பின் திரும்பி வந்து இஸ்மவேலைப் பெற்றாள் (ஆதி. 16:15).

சாராய் தொண்ணூறு வயதாயிருக்கையில் தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னபடி சாராள் ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு ஈசாக்கு என்று பேரிட்டாள் (ஆதி. 21:1-3). ஆபிராமின் பேர், ஆபிரகாம் என்றும், சாராயின் பேர், சாராள் என்றும் மாற்றப்பட்டது (ஆதி. 17:15). பிள்ளை பால் மறந்த நாளில், ஆபிரகாம் விருந்து பண்ணினபோது, இஸ்மவேல் பரியாசம் பண்ணினபடியால் ஆகாரையும் பிள்ளையையும் அனுப்பிவிட்டான் (ஆதி. 21:8-14).

சாராள் 127 வயதானபோது, எபிரோன் என்னும் கீரியாத் அர்பாவில் மரித்து, மக்பேலா குகையில் அடக்கம்பண்ணப்பட்டாள் (ஆதி. 23:1-19).

சாராள் ஆபிரகாமோடு நீடிய நாள்களாக ஒரு துணையாக இருந்து, அவனுக்குத் தேவனிலிருந்த நம்பிக்கையிலும், மனுஷீகத்தின்படி சம்பவிக்கக்கூடாததைப் பெற்றுக்கொள்வதிலும் பங்குள்ளவளாயுமிருந்தாள். அவள் ஆபிரகாமுக்கு அடங்கிக் கீழ்ப்படிந்திருந்தாள் (1 பேதுரு. 3:6). விசுவாசத்தினாலே, அவள் வயது சென்றவளாயிருந்தும், பிள்ளை பெற்றாள் (எபி. 11:11). அவள் மரித்தபோது, அவள் புருஷனும், மகன் ஈசாக்கும் அவளுக்காக அதிகம் துக்கம் கொண்டாடினார்கள் (ஆதி. 24:67).

புதிய ஏற்பாட்டில் சாராளைப் பற்றிப் பின் வரும் இடங்களில் குறித்துள்ளது (ரோமர். 4:19; 9:9; கலா. 4:22).

2. ஆசேருடைய மகள் (ஆதி. 46:17; எண். 26:46; 1 நாளா. 7:30).

## சாரோன் (Sharon)

*1. சாரோன் என்பதன் பொருள் "சமபூமி". யோர்தானுக்குக் கிழக்கிலிருந்த காத் தேசத்திலுள்ள ஒரு மேய்ச்சல் பூமி (1 நாளா. 5:16).*

*2. யோபாவுக்கும், செசெரியாவுக்கும் இடையில் 80 மைல் நீளமும், 9 மைல் அகலமுமான ஒரு சமவெளி (1 நாளா. 27:29). "சாரோனின் ரோஜா" என்று நமது ஆத்ம நேசர் அழைக்கப்படுகிறார் (உன். 2:1).*

*லித்தா என்ற இடம் சாரோனுக்கு அருகே இருந்ததாகத் தெரிகிறது (அப். 9:35).*

## சாலேம் (Salem)

*சாலேம் என்பதன் பொருள் "சமாதானம்". எருசலேமின் பூர்வீக பேராயிருக்கலாம். இது மெல்கிசேதேக்கு அரசாண்ட தேசம் (ஆதி. 14:18; எபி. 7:1). "இராஜாவின் பள்ளத்தாக்கு" என்னும் சாவே பள்ளத்தாக்கு அருகே இருந்தது. தமஸ்குவிலிருந்து எபிரோனுக்கு போகிற வழியில் இருந்ததாகத் தெரிகிறது. சாலேம், சீயோனுக்குச் சமமாக கூறப்பட்டுள்ளது. சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது (சங். 76:2).*

## சாலொமோன் (Solomon)

***(சமாதானம்)***

*சாலொமோன் எனபதன் பொருள் "சாந்தம்". தாவீது, பத்சேபாள் என்பவர்களின் குமாரன். இவன் முழு இஸ்ரவேலின் இராஜாவாக கி.மு. 973-933 வரை அரசாண்டான் (2 சாமு. 12:24). நாத்தான் தீர்க்கதரிசி இவனுக்கு "யெதிதியா" என்று பெயரிட்டான். அதன் அர்த்தம் "கர்த்தருக்கு அன்பானவன்" (2 சாமு. 12:25).*

*அதோனியாவை இராஜாவாக்க ஆயத்தங்கள் செய்த வேளையில் தாவீதின் கட்டளைப்படி சாலொமோன் இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான் (1 இரா. 1:5-49). சாலொமோன் கிபியோனுக்குப் போய், பலி செலுத்தின சமயத்தில், கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி அவன் வேண்டிக்கொண்டதற்கு மேலாக ஞானமும், உணர்வுமுள்ள இருதயத்தையும், அவன் கேளாத ஐசுவரியத்தையும், மகிமையையும் கொடுத்தார் (1 இரா. 3:12). அவனுடைய ஞானத்தைக் கேட்க சகல இராஜாக்களிடமிருந்தும் பல ஜாதியான ஜனங்கள் வந்தார்கள்.*

*சாலொமோனின் நாள்களிளெல்லாம் யூதாவும், இஸ்ரவேலும் சமாதானமாயும் சுகமாயும் குடியிருந்தார்கள்.*

அவனுக்கு 4000 இரதக் குதிரை இலாயங்களும், 12,000 குதிரை வீரரும் இருந்தார்கள் *(1 இரா. 4:26).*

எருசலேமில் இராஜா வெள்ளியைக் கற்கள்போலவும், கேதுரு மரங்களைக் காட்டத்தி மரங்கள் போலவும் அதிகமாக்கினான் *(1 இரா. 10:27).*

இராஜா அந்நிய இராஜாக்களோடு உறவு கொண்டாட விருப்பமுள்ளவனாயிருந்து, எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் குமாரத்தியை விவாகம் பண்ணினான் *(1 இரா. 3:1).* அவளுக்கு ஒரு மாளிகையையும் கட்டுவித்தான் *(1 இரா. 7:8).*

தீருவின் இராஜாவாகிய ஈராமோடு சிநேகிதமாகி அவனிடமிருந்து வேண்டிய மட்டும் கேதுரு மரங்களையும், தேவதாரு விருட்சங்களையும் பெற்றுக்கொண்டான். அவைகளுக்குப் பதிலாக சாலொமோன் கோதுமையையும் ஒலிவ எண்ணெயையுங் கொடுத்தான் *(1 இரா. 5:1-12).*

சாலொமோனும் ஈராமும் எசியோன்கேபேரில் கப்பல்களைச் செய்வித்து ஓப்பீருக்கு அனுப்பி, பொன்னை எடுப்பித்தார்கள் *(1 இரா. 9:26-28).*

சாலொமோன் இராஜாவான நான்காம் வருடம், கர்த்தரின் ஆலயத்தைக் கட்டத் தொடங்கினான். அந்த ஆலயம் முழுவதும் சகல சட்டதிட்டத்தின்படி ஏழு வருடத்தில் கட்டி முடித்தான் *(1 இரா. 6:1-38; 2 நாளா. 3:5).*

சாலொமோன் தன் அரண்மனையைக் கட்டி முடிக்க பதின்மூன்று வருடம் சென்றது. "லீபனோன் வனம்" என்னும் மாளிகையையும் கட்டினான் *(1 இரா. அதி.7).*

அப்பொழுது உடன்படிக்கைப் பெட்டியைச் சீயோன் என்னும் தாவீதின் நகரத்திலிருந்து கொண்டுவந்து, ஆலயத்தின் சந்நிதி ஸ்தானத்தில் வைத்தான் *(1 இரா. 8:1-6).* பின்பு ஜனங்களை ஆசீர்வதித்து, தேவனை நோக்கி ஒரு விசேஷித்த பிரார்த்தனை செய்தபின், ஆலயத்தை பிரதிஷ்டை செய்தான் *(1 இரா. 8:22-53).*

சாலொமோனுடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு சேபாவின் இராஜஸ்திரீ அவனிடம் வந்தாள் *(1 இரா. 10:1-13).*

ஈராமின் கப்பல்கள் ஓப்பீரிலிருந்து வாசனை மரங்களையும், இரத்தினங்களையும் கொண்டு வந்தன. சாலொமோன் அவைகளால் ஆலயத்திற்கும் அரண்மனைக்கும் வேண்டியவைகளைச் செய்வித்து, சங்கீதக்காரருக்குச் சுரமண்டலங்களையும், தம்புருகளையும் உண்டாக்கினான் *(1 இரா. 10:12).*

இராஜாவுக்குத் தர்ஷீசின் கப்பல்களும் இருந்தன. அவைகள் பொன் வெள்ளியையும் யானைத் தந்தங்களையும், மயில்களையும் கொண்டுவந்தன *(1 இரா. 10:22).*

சாலொமோன், ஈராம் அவனுக்கு செய்த உதவிக்காக கலிலேயா நாட்டிலுள்ள இருபது பட்டணங்களைக் கொடுத்தான் *(1 இரா. 9:10-14).*

அவனுக்கு அநேக அந்நிய மனைவிகளும், வைப்பாட்டிகளும் இருந்தார்கள். அவர்களைப் பிரியப்படுத்தும்படி, அவன் மேடைகளைக் கட்டிக்கொடுத்தான்.

இராஜாவுக்கும், அரண்மனைக்கும் வேண்டிய உணவு பொருள்களைச் சேகரிக்கும்படி, அவன் தேசத்தைப் பன்னிரெண்டு மாகாணங்களாகப் பிரித்து, மணியக்காரரை ஏற்படுத்தினான். அவர்கள் மாதத்துக்கு ஒவ்வொருவராக வருட முழுவதும் பராமரித்து வந்தார்கள் *(1 இரா. 4:7).*

ஜனங்கள் அநேகவித வரிப்பணங்கள் கொடுக்கவும், ஏவல் வேலை செய்யவும் வேண்டியிருந்ததால் அவர்களுக்குள்ளே திருப்தியின்மையும் குழப்பங்களும் உண்டாயிற்று.

சாலொமோன் அந்நிய ஸ்திரீகள் மேல் ஆசை வைத்து, அவர்களோடு ஐக்கியப்பட்டிருந்ததால், அவர்கள் அவனுடைய இருதயத்தை அந்நிய தேவர்களைப் பின்பற்றும்படி சாயப் பண்ணினார்கள் *(1 இரா. 11:1-10).*

அவனுடைய ஆளுகை இதினிமித்தம் கறைப்பட்டது. கர்த்தர் அவனுக்கு விரோதிகளை எழுப்பினார். முதலாவது ஏதோமியனாகிய ஆதாத் எகிப்திலிருந்து வந்து கலகம் பண்ணினான் *(1 இரா. 11:17-22).*

பின்பு ரேசோன் என்பவன் தமஸ்குவை ஆளுகை செய்து கொண்டு இஸ்ரவேலுக்கு விரோதியானான். சாலொமோனுடைய ஊழியக்காரனாயிருந்த யெரொபெயாமும் கலகம் பண்ணினான்.

சாலொமோன் பிறந்தபோது, தேவனுக்கு அன்பானவன் எனப்பட்டான். வளர்ந்தபோது, தேவனிடத்திலிருந்து விசேஷ வரமாகிய ஞானவரம் பெற்றான். தகப்பன் இவனுக்கு முக்கிய புத்திமதி கூறியிருந்தான். "நீ கர்த்தரைத் தேடினால் அவர் உனக்குத் தென்படுவார். நீ அவரை விட்டுவிட்டால் அவர் உன்னை என்றைக்கும் கைவிடுவார்" *(1 நாளா. 28:9)* என்றான்.

ஞானவான் என்ற பேர் பெற்ற இவன், முடிவில் மோசம் போனான்.

72ஆம் சங்கீதம் இவனைப் பற்றியது. சாலொமோன் இயேசுவின் முற்பிதா (மத். 1:6).

இவனுடைய மகிமையைக் குறித்து இயேசுவும் குறிப்பிட்டார் (மத். 6:29).

## சிக்லாக் (Ziklag)

**(சுற்றுதல்)**

இந்தப் பட்டணம் முதல் யூதாவுக்குக் கொடுக்கப்பட்டு, பின்பு சிமியோன் வசமாயிற்று (யோசுவா. 15:31; 19:5). இது யூதாவின் தெற்கு பக்கத்தில் உள்ளது.

சவுலுடைய நாள்களில் இது பெலிஸ்தரின் வசத்திலிருந்தது. தாவீது சவுலுக்குத் தப்பி, ஆகீசிடம் போன சமயத்தில், இந்தப் பட்டணம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அந்நாள்களில் தாவீது அங்கே இல்லாத தருணத்தில், அமலேக்கியர் அதைக் கொள்ளையடித்த போதிலும், தாவீது அவர்களைப் பின்தொடர்ந்துபோய் தோற்கடித்து, கொள்ளை பொருள் எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டான். அவன் எடுத்தக் கொள்ளைப் பொருளை அவன் நடமாடின எல்லா இடங்களிலுமிருந்தவர்களுக்கு வெகுமதியாக அனுப்பினான் (1 சாமு. 27:6; 30:1-31).

இதன்பின் சிக்லாக் யூதாவின் வசமேயிருந்தது.

## சிசெரா (Sisera)

**(சேனை)**

இவன் கானானியரின் இராஜாவாகிய யாபீனின் சேனாதிபதி. யாபீன் இஸ்ரவேலரை ஒடுக்கின காலத்தில், தெபொராள் தீர்க்கதரிசினி, பாராக் என்பவனை அழைத்து, சிசெராவுக்கு விரோதமாக யுத்தம் செய்யும்படி ஏவி அவளும் கூடப்போனாள் (நியா. 4:8-10).

தாபோர் மலைப் பள்ளத்தாக்கில் யுத்தம் நடந்தது. சிசெரா தோல்வியடைந்து ஓடிப்போய் கேனியனான ஏபேரின் மனைவி யாகேலின் கூடாரத்துக்குள் புகுந்தபோது, அவள் கையால் கொல்லப்பட்டான் (நியா. 4:14-21). இவ்விதமாய் கர்த்தர் இஸ்ரவேலுக்குக் கொடுத்த வெற்றியைத் தெபொராள் பாட்டாய்ப் பாடினாள் (நியா. 5:1-23; 1 சாமு. 12:9).

நிலத்துக்கு எருவாய்ப் போன சிசெரா என்று சங். 83:10இல் குறிக்கப்பட்டுள்ளது.

"சிசெராவின் புத்திரர்" (எஸ்றா. 2:53) சாலொமோனுடைய நாள்களில் ஆலயத்தில் கூலிவேலை செய்தார்கள். இவர்கள் சிறையிருப்பின் பின், செருபாபேலோடு திரும்பி வந்தவர்கள் (நெகே. 7:55).

## சிதேக்கியா (Zedekiah)

சிதேக்கியா என்பதன் பொருள் "கர்த்தருடைய நீதி". இவன் யூதாவின் கடைசி இராஜா. யோசியாவின் மூன்று குமாரரில் இளையவன். நேபுகாத்நேச்சார் யோயாக்கீனை விலக்கிப் போட்டு இவனை இராஜாவாக ஏற்படுத்தி (கி.மு. 597). அவனுடைய மத்தனியா என்ற பேரை, சிதேக்கியாவென்று மாற்றினான் (2 இரா. 24:15-17).

இவன் துர்ஆலோசனைக்காரருடைய யோசனையை கேட்டு, பாபிலோனிய இராஜாவுக்கு விரோதமாய் கலகம்பண்ணினான்.

இதினிமித்தம் நேபுகாத்நேச்சார் தன் சேனைகளோடு எருசலேமுக்கு விரோதமாய் வந்து, கி.மு. 686இல் அதைக் கீழ்ப்படுத்தினான். சிதேக்கியா இரவிலே தப்பி ஓடினபோது, எரிகோ சமவெளியில் பிடிபட்டு, நேபுகாத்நேச்சாரிடம் கொண்டு வரப்பட்டான். அங்கே அவனுடைய கண் முன்னே அவனுடைய குமாரரைக் கொன்றபின், அவனையும் குருடாக்கி, விலங்குப்போட்டு பாபிலோனுக்கு அனுப்பினான் (2 இரா. 25:1-7; எரே. 39:1-7).

சிதேக்கியா எரேமியாவிடம் ஆலோசனை கேட்டும், அவன் சொன்னதை ஏற்றுக்கொள்ளாதிருந்தான். இதினிமித்தம் அவன் துரவில் போடப்பட்டபோதும், இராஜா கவனிக்கவில்லை (எரே. 38:1-13).

சிதேக்கியா கர்த்தரால் அபிஷேகம் பெற்றவன் அல்ல, நேபுகாத் நேச்சார் ஏற்படுத்திய இராஜா (எரே. 37:1). எசேக்கியேல் இவன் இஸ்ரவேலை ஆளுகிற அவபக்தியுள்ள துன்மார்க்க அதிபதி என்கிறான் (எசே. 12:10; 21:25).

2. ஆகாப் இராஜாவின் கள்ளத் தீர்க்கதரிசிகளின் தலைவன் (1 இரா. 22:11; 2 நாளா. 18:10).

3. பாபிலோனுக்குச் சிறைப்பட்டுப் போனவர்களுக்குள் இருந்த கள்ளத்தீர்க்கதரிசியாகிய இவன் அக்கினியால் சுடப்பட்டான் (எரே. 29:21,22).

4. யோயாக்கீமின் நாள்களிலிருந்த ஓர் அதிபதி (எரே. 36:12).

5. யோயாக்கீமின் குமாரன் சிதேக்கியா (1 நாளா. 3:16).

## சிப்போராள் (Zipporah)

***(சிறு பறவை)***

*மீதியான் ஆசாரியனாகிய எத்திரோவின் மகள், மோசேயின் மனைவி. இவளுக்கு கெர்சோம், எலியேசர் என்று இரண்டு புத்திரர் இருந்தார்கள் (யாத். 2:21,22; 18:4).*

*மோசே தன் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்க எகிப்துக்குப் போனபோது இவளும் கூடப் போனாள். போகிற வழியிலே கர்த்தர் கெர்சோமுக்கு விருத்தசேதனம் செய்யாததினால், மோசேயைக் கொல்லப் போனதினிமித்தம் சிப்போராள் தானே கெர்சோமுக்கு விருத்தசேதனம் செய்தாள் (யாத். 4:18-26).*

*பின்பு அவள் பிள்ளைகளோடுகூடத் தன் தகப்பனிடம் போனாள். இஸ்ரவேலர் எகிப்திலிருந்து புறப்பட்டதை எத்திரோ கேள்விப்பட்டு சிப்போராளையும் அவளுடைய இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு ரெவிதீமில் இஸ்ரவேலர் பாளயமிறங்கியிருந்த இடத்துக்கு வந்தார்கள் (யாத். 18:1-6).*

## சிமிர்னா (Smyrna)

***(வெள்ளைப்போளம்)***

*இது சின்ன ஆசியாவிலுள்ள ஒரு பூர்வீகப் பட்டணம். கி.மு. 1000க்கு முன் கிரேக்கருக்குச் சேர்ந்திருந்தது. கி.மு. 600இல் முற்றாய் அழிக்கப்பட்டுத் திரும்பவும் 200 வருடங்களின் பின் கட்டப்பட்டது.*

*ரோமருடைய காலத்தில் இது ஒரு முக்கிய துறைமுகம். இங்கு அநேக வித்தியாசாலைகளும் இருந்தன.*

*கி.பி. 23இல் திபேரியுராயன் பேரில், இங்கு ஒரு பெரிய கோயில் கட்டப்பட்டது. கிறிஸ்தவருடைய சபையும் உருவாகியது. வெளிப்படுத்தினவிசேஷத்தில் சொல்லப்பட்டுள்ள ஏழு சபைகளுள், இதுவும் ஒன்று (வெளி. 2:8-11). அங்கே இருந்த யூதர், கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக எழும்பி, பொலிக்காப் என்னும் அத்தியட்ச குருவைச் சுட்டெரித்தார்கள். இது கி.பி. 169இல் நடந்தது.*

*பிற்காலங்களில் இந்தப் பட்டணம் துருக்கியருடைய ஆதிக்கத்துக்குட்பட்டது.*

## சிமியோன் (Simeon)

***(கேட்குதல்)***

*சிமியோன் கோத்திரப் பிதாக்களில் ஒருவன். யாக்கோபு, லேயாள் என்பவர்களின் இரண்டாம் மகன் (ஆதி. 29:33). லேவியும் இவனும் தீனாளுடைய உடன் பிறந்த சகோதரர் (ஆதி. 34:25). சீகேம்*

தீனாளைத் தீட்டுப்படுத்தினதினிமித்தம், சிமியோனும் லேவியும் சிமேயையும், அவன் வீட்டாரையும் கொன்று போட்டு பட்டணத் தையும் கொள்ளையடித்தார்கள் (ஆதி. 34:26-30).

யாக்கோபின் புத்திரர் தானியம் கொண்டு வரும்படி, எகிப்துக்குப் போனவேளையில், யோசேப்பு இவனைப் பென்யமீனுக்குப் பிணையாளியாக வைத்துக் கொண்டான் (ஆதி. 42:24-36).

யாக்கோபு இறக்கும் நேரத்தில், கூறிய ஆசீர்வாதத்தில், சிமியோன், லேவி என்பவர்களின் கோபக்குணத்தைக் கண்டித்து, இஸ்ரவேலிலே அவர்கள் சிதறப்படுவார்களென்றும் சொன்னான் (ஆதி. 49:5-7).

சிமியோனின் குமாரர் எமுவேல், யாமின், ஓகாத், யாகீன் சொகார், கானானிய ஸ்திரீயின் குமாரனாகிய சவுல் என்பவர்கள் (ஆதி. 46:10).

மோசேயின் ஆசீர்வாதத்தில் சிமியோனுடைய பேர் சொல்லப் படவில்லை (உபா. அதி. 33).

## சிமியோன் கோத்திரம்

இந்தக் கோத்திரத்தின் ஜனத்தொகையும் அவர்களுடைய செல்வாக்கும் வரவரக் குறைந்து போயிற்று. சீனாயில் ஜனத் தொகை எடுத்தபோது, இக்கோத்திரத்தில் யுத்தத்துக்குப் போகத்தக்கவர்கள் 59,300 பேர் இருந்தார்கள். மோவாபில் எடுக்கையில் 22,200 பேர் மட்டும் இருந்தார்கள் (எண். 1:23; 26:14).

ஆசீர்வாதம் கூறும்படி, கெர்சீம் மலைமேல் நினறவர்களில், சிமியோன் கோத்திரத்தாரும் சேர்ந்திருந்தார்கள் (உபா. 27:12).

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தேசத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. தெபொராள் பாடின பாட்டிலும் இந்தக் கோத்திரத்தைப்பற்றிக் குறிக்கவில்லை (நியா. 5 அதி). பின்பு இந்தக் கோத்திரம், யூதா கோத்திரத்துக்குட்பட்டது. இவர்கள் யூதாவின் தென் மேற்குப் பகுதிகளில் வாசமாயிருந்தார்கள் (யோசுவா. 19:9). இவர்களுடைய பட்டணங்கள் யூதாவுக் குட்பட்டதாகத் தெரிகிறது (யோசுவா. 15:26-32; 1 இரா. 19:3; நெகே. 11:26-29).

வெளிப்படுத்தின விசேஷத்தில் இவர்களும் முத்திரை போடப் பட்டார்களென குறித்துள்ளது (வெளி. 7:7).

2. இயேசுவின் குடும்பத்தின் முற்பிதாக்களில் ஒருவன் (லூக்கா. 3:30).

3. எருசலேமிலிருந்த ஒரு பக்திமான். இயேசு ஒரு பிள்ளையாக தேவாலயத்துக்குக் கொண்டு போகப்பட்டபோது இவன் அவரைக் கையில் எடுத்து தேவனை ஸ்தோத்தரித்து மேசியாவைக் காணுமட்டும் தான் மரிப்பதில்லையென்று, ஆவியானவர் தனக்கு வெளிப் படுத்தினதாகச் சொன்னான் *(லூக்கா. 2:25-35).*

4. அந்தியோகியாவிலிருந்த ஒரு தீர்க்கதரிசி *(அப். 13:1).*

5. அப்போஸ்தலனாகிய பேதுரு *(அப். 15:14).*

## சிம்சோன் (Samson)
### *(பெலன்)*

சிம்சோன் என்பதன் பொருள் "சூரியனை போன்றவன்". இவன் இஸ்ரவேலில் ஒரு பெயர் பெற்ற நியாயாதிபதி. தாண் கோத்திரத்து மனோவாவின் மகன். இவனுடைய பிறப்பைப் பற்றி இவனுடைய பெற்றோருக்குத் தேவனால் அறிவிக்கப்பட்டபோது, இவன் நசரேயனாயிருக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. அதாவது: அவன் மதுபானம் குடியாமலும், தலை மயிர் வெட்டாமலும் இருக்க வேண்டும் என்பதே *(நியா. 13:1-24).*

அவன் இஸ்ரவேலை 20 வருடம் நியாயம் விசாரித்து, பெலிஸ்தரை அநேக தடவைகளில் கொன்றான். தன்னுடைய நசரேய பிரதிஷ்டைக்கு உண்மையாயிருந்த நாள்களெல்லாம் அவனுக்கு அதிசயமான பெலனும், தைரியமும் இருந்தது *(நியா. 14:5-9).*

அவன் திம்னாத்தில் ஒரு பெண்ணை விவாகம் செய்த சம்பவத்தில் முப்பது பெலிஸ்தரைக் கொல்ல நேரிட்டது *(நியா. 14:19,20).*

ஒரு முறை ஒரு கழுதையின் தாடை எலும்பினால் 1000 பெலிஸ்தரைக் கொன்றான் *(நியா. 15:1-19).*

பின்பு சிம்சோன் காசாவிலிருந்த ஒரு வேசியிடம் போன வேளையில், பெலிஸ்தர் அவனைப் பிடிக்க ஆயத்தம் பண்ணின போது, அவன் இரவில் எழுந்து, பட்டணத்துக் கதவுகளை நிலைகளோடு பெயர்த்தெடுத்து, சுமந்துகொண்டு போய் ஒரு மலைமேல் வைத்தான் *(நியா. 16:1-3).*

அதன்பின் சிம்சோன் சோரேக் ஆற்றங்கரையிலிருந்த தெலீலாள் என்னும் ஒரு ஸ்திரீயோடு சிநேகமானான். அவளுடைய இன் சொல்லைக் கேட்டு தன்னுடைய பெலன் எதனால் வந்ததென்று அவளுக்குச் சொன்னான். அவள் அதை அறிந்துகொண்டு தன்

மடியில் நித்திரை செய்யும் வேளையில், அவன் தலை மயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்தாள். அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று. பெலிஸ்தர் அவனைப் பிடித்து, கண்களைப் பிடுங்கி, சிறைச் சாலையில் மாவரைக்க வைத்தார்கள் (*நியா. 16:18-24*). அவன் தலை மயிர் திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.

பெலிஸ்தரின் பிரபுக்கள், தங்கள் தேவனாகிய தாகோனுக்குப் பலிசெலுத்திக் கொண்டாடின வேளையில், வேடிக்கை காட்டும்படி சிம்சோனைக் கொண்டு போனார்கள். அங்கே அவன், தேவனை நோக்கி ஜெபித்து, அவர்களிருந்த வீட்டுத் தூண்களைத் தன் கையால் பலமாய்ச் சாய்க்க, வீடு விழுந்து, எல்லாரும் கொல்லப்பட்டார்கள். அவனும் செத்தான் (*நியா. 16:23-30*).

சிம்சோனுக்கிருந்த பெலனின் இரகசியம், தேவனுடைய கட்டளைப்படி நசரேய பிரதிஷ்டையைக் காத்துக் கொள்வதே. அந்தப் பிரதிஷ்டையை மீறினபோதே, தேவனுடைய ஆவி அவனை விட்டுப் போயிற்று.

ஆகிலும் அவனுடைய கடைசி ஜெபம் கேட்கப்பட்டதிலிருந்து, அவன் மனஸ்தாபப் பட்டானென்று தெரிகிறது. "ஆண்டவரே! இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும்" என்றான் (*நியா. 16:28*).

ஆகவே விசுவாசத்தினால் நற்சாட்சி பெற்றவர்களில் இவனும் ஒருவனாக எண்ணப்படுகிறான் (*எபி. 11:32*).

## சில்வானு (Silvanus)

இவனுடைய மறு பெயர் சீலா. சில்வானும் தீமோத்தேயுவும் கொரிந்து சபையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள் (*2 கொரி. 1:19*). தெசலோனிக்கேயருக்கு எழுதின நிருபங்களில் பவுல் இவனையும் சேர்த்திருக்கிறான் (*1 தெச. 1:1; 2 தெச. 1:1*). பேதுரு எழுதின முதலாம் நிருபத்தை இவன் கையில் கொடுத்தனுப்பினான் (*1 பேதுரு. 5:12*).

## சீகார் (Sychar)

இது சமாரியாவிலுள்ள ஒரு பட்டணம். அங்கிருந்த யாக்கோபின் கிணற்றருகே ஒரு சமாரிய ஸ்திரீயைக் கண்டு, இயேசு அவளுக்கு மெய்த்தேவனைத் தொழுதுகொள்ளும் முறையைச் சொல்லிக் கொடுத்தார் (*யோவான். 4:5, 39*).

## சீகேம் (Shechem)

**(தோள்)**

*1.* இது பலஸ்தீனா தேசத்தில், எப்பிராயீமுக்குச் சேர்ந்த ஒரு முக்கிய பட்டணம். எருசலேமுக்கு வடக்கே *31* மைல் தூரத்தில், ஏபால் கெர்சீம் என்னும் மலைகளுக்கிடையிலுள்ளது.

ஆபிரகாம் சீகேமுக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமியில் தங்கியிருந்து, ஒரு பலி பீடத்தைக் கட்டினபோது, தேவன் அவனுக்குத் தரிசனமானார் *(ஆதி. 12:6,7).*

யாக்கோபு சீகேமுக்கு அருகிலுள்ள, சாலேம் என்ற இடத்தில் கூடாரம் போட்டு, அதை விலைக்கு வாங்கி, பலிபீடம் கட்டி, "ஏல் எல்லோகே இஸ்ரவேல்" என்று பேரிட்டான் *(ஆதி. 33:18-20)*

யாக்கோபின் குமாரத்தி தீனாளை சீகேம் தீட்டுப்படுத்தினபடியால், சிமியோனும் லேவியும் ஏமோரையும், சீகேமையும், ஆண்மக்கள் யாவரையும் கொன்று பட்டணத்தையும் கொள்ளையடித்து, தீனாளையும் அழைத்துக் கொண்டு போனார்கள் *(ஆதி. 34:1-24).*

பின்பு யாக்கோபு அவன் வீட்டாருடைய காதணிகளைச் சீகேமுக்கருகே இருந்த கர்வாலி மரத்தின் கீழ் புதைத்து, ஒரு பலி பீடத்தைக் கட்டி "ஏல்பெத்தேல்" என்று பேரிட்டான் *(ஆதி. 35:1-7).*

இஸ்ரவேலர் பலஸ்தீனாவைக் கைப்பற்றினபின், யோசுவா ஜனங்களை இவ்விடத்துக்கு வரவழைத்து, தேவனுடைய உடன்படிக்கையைப் புதுப்பித்தான் *(யோசுவா. 8:30-35).* பிற்பாடு இந்தப் பட்டணம் எப்பிராயீமுக்குக் கொடுக்கப்பட்டது *(1 நாளா. 7:28).* இஸ்ரவேலர் யோசேப்பின் எலும்புகளை, யாக்கோபு சீகேமில் கொண்ட நிலத்தில், அடக்கம்பண்ணினார்கள் *(யோசுவா. 24:32).*

பிற்பாடு இந்தப் பட்டணம் எப்பிராயீமுக்குக் கொடுக்கப்பட்டு, ஓர் அடைக்கலப் பட்டணமும் ஏற்படுத்தப்பட்டது *(யோசுவா. 20:7; 21:21).*

யோசுவா இஸ்ரவேலரைச் சீகேமிலே கூடி வரச் செய்து தன்னுடைய கடைசிப் பிரசங்கத்தைச் செய்தான் *(யோசுவா. 24:1).*

கிதியோன் மரித்தபின், இஸ்ரவேலர் பாகால்பேரீத்தை வணங்கிப் பின்பற்றினார்கள். அவனுடைய மகன் அபிமெலேக்கு சீகேமிலிருந்த தன் தாயின் சகோதரியிடம் போய் அவர்களோடு பேசினபோது அவர்கள் அவனை இராஜாவாக்கினார்கள். பின்பு சீகேம் மனுஷர் அவனுக்கு இரண்டகம் பண்ணினபோது, அவன் அவர்களுடைய பட்டணத்தை இடித்து, அதில் உப்பு விதைத்தான் *(நியா. 8:33; 9:1-3; 25-45).*

சாலொமோன் மரித்தபின் இஸ்ரவேல் ஜனங்கள் ரெகொபே யாமை விட்டுப் பிரிந்து, யெரொபெயாமை இவ்விடத்தில் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள். அவன் இதைத் தலைப் பட்டணமாக்கினான் *(1 இரா. 12:1-25)*.

சிறையிருப்புக் காலத்துக்குப் பின்பும், இது சமாரியரின் முக்கியப் பட்டணமாயிருந்தது. இங்கே அவர்கள் ஓர் ஆலயம் கட்டினார்கள்.

பிற்காலங்களில், ரோமர் இதைப் பிடித்து, திரும்பக் கட்டி எழுப்பி, "நபுலஸ்" என்று பெயரிட்டனர்.

யோவான். *4:5*இல் சொல்லப்பட்ட "சீகார்" என்பது, சீகேமுக்கு அருகில் இருந்த ஓர் ஊர்.

*2.* ஏவியனான ஏமோரின் குமாரன், அத்தேசத்து அதிபதி. இவன் யாக்கோபின் குமாரத்தியாகிய தீனாளைத் தீட்டுப்படுத்தினதி னிமித்தம், அவளுடைய சகோதரராகிய சிமியோனும், லேவியும் அவனைக் கொன்றார்கள் *(ஆதி. 34:1-31)*.

## சீகோன் (Sihon)

**(தைரியம்)**

இவன் எமோரிய தேசத்து இராஜா. எஸ்போன் அவனுடைய தலைப்பட்டணம். இவன் மோவாபியரைத் தோற்கடித்து, அவர்களுடைய தேசத்தைக் கைப்பற்றினான். அவனுடைய தேசம் அர்னோன் தொடங்கி, யாப்போக்கு வரையும் யோர்தான் தொடங்கி வனாந்தரம் வரையும் இருந்தபடியால், மோசே ஸ்தானாதிபதிகளை அனுப்பி அவனுடைய தேசத்துக்கூடாகப் போக உத்தரவு கேட்டான். அவன் உத்தரவு கொடாமல், இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினான். அவர்கள் அவனைத் தோற்கடித்து, அவனுடைய தேசத்தில் குடியேறி னார்கள் *(எண். 21:20-26; உபா. 2:26-36; நியா. 11:19-22)*. இந்தத் தேசம் பிற்பாடு ரூபன், காத் கோத்திரங்களுக்குக் கொடுக்கப்பட்டது *(எண். 32:1-41; யோசுவா. 13:10)*.

சீகோனின் மேல் பெற்ற வெற்றியைப் பற்றி, இஸ்ரவேலின் சரித்திரத்தில், பல தடவைகளில் குறித்துள்ளது. மோசே உபா. *31:4*லும் ராகாப் யோசுவா. *2:10*லும் கிபியோனியர், யோசுவா. *9:10*லும் யெப்தா நியா. *11:19*லும் லேவியர், நெகே. *9:22*லும் இதைக் குறித்துப் பேசினார்கள். சங்கீத புத்தகத்திலும் இவனைப் பற்றிக் குறித்துள் ளது *(சங். 135:11-13; 60:89)*.

## சீஷாக் (Shishak)

இவன் எகிப்தின் இராஜா; கி.மு. *945-924* வரை அரசாண்டான். சாலொமோன் யெரொபெயாமைக் கொல்ல வகை தேடினபோது, அவன் தப்பி எகிப்துக்குப் போய், சீஷாக்கிடம் தங்கி இருந்தான் *(1 இரா. 11:29-40)*.

பின்பு ரெகொபெயாம் இராஜாவான ஐந்தாம் வருடத்தில் சீஷாக் வந்து, யூதாவைத் தோற்கடித்து, எருசலேமின் ஆலயத்தின் பொக்கிஷங்களையும் அரண்மனைப் பொக்கிஷங்களையும் எடுத்துக் கொண்டு போனான் *(1 இரா. 14:25,26; 2 நாளா. 12:2-12)*.

## சீதோன் (Zidon)

**(கோட்டை)**

இது தீரு பட்டணத்துக்கு *20* மைல் வடக்கேயுள்ள ஓர் பெனிக்கியரின் துறைமுகம். ஆசேர், செபுலோன் நாடுகளுக்கு வட எல்லை *(ஆதி. 49:13; யோசுவா. 19:26; நியா. 1:31)*.

கி.மு. *701*இல் சனகெரிப், சீதோன் பட்டணத்துக்கு விரோதமாய்ப் போய், அதைப் பிடித்தான் *(ஏசாயா. 23:1-12)*. அசீரியா குன்றிப் போனபோது, சீதோன் மறுபடியும் சுயாதீனம் பெற்றது. ஆனால் கி.மு. *587*இல் நேபுகாத்நேச்சார், எரேமியா முன்னுரைத்தபடி, அதை முற்றுகை போட்டுப் பிடித்தான். கி.மு. *333*இல், இது மகா அலெக்சாந்தரின் ஆதிக்கத்துக்குள்ளாயிற்று. பின்பு கி.மு. *64*இல் ரோமர் அதைக் கைப்பற்றினார்கள்.

ஆகாப் விவாகம்பண்ணின யேசபேல், சீதோனியரின் இராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தி *(1 இரா. 16:31)*. இரண்டாம் தேவாலயம் கட்டுவதற்கு சீதோனியரும் கேதுரு மரங்களைக் கொடுத்தார்கள் *(எஸ்றா. 3:7)*. தீர்க்கதரிசிகள் பல முறைகளில் சீதோன் மேல் வரப்போகிற தேவ தீர்ப்பைக் கூறியுள்ளார்கள் *(ஏசாயா. 23:12; எரே. 27:3-6; எசே. 28:21,22; யோவான் 3:4-6)*. சீதோனியரும் இயேசுவின் பிரசங்கத்தைக் கேட்டார்கள் *(மத். 15:21; மாற்கு. 3:8)*. அவர் சீதோன் பட்டணத்து அருகே ஒரு வீட்டில், சிரோபேனிக்கியா ஸ்திரீயின் மகளைப் பிடித்திருந்த பிசாசை நீக்கி விட்டார் *(மாற்கு. 7:24-30)*.

ஏரோது-அகிரிப்பா என்பவன் சீதோனிலிருந்து அவனைக் காண வந்தவர்களுக்கு சிங்காசனத்தின் மேலிருந்து பிரசங்கம் பண்ணினான் *(அப். 12:20)*. பவுலும் ரோமாபுரிக்குப் போக பிரயாணத்தில் சீதோன் துறையில் தங்கினபோது, தன் சிநேகிதரிடம் போய் இளைப் பாறுதலடைய உத்தரவு பெற்றான் *(அப். 27:3)*.

## சீபா (Ziba)

*(தாவரம்)*

சவுல் இராஜாவின் ஊழியக்காரன். இவன் யோனத்தானின் மகனாகிய மேவிபோசேத்தைத் தாவீதிடம் அழைத்து வந்தான். தாவீது அவனைத் தன் அரண்மனையில் இருக்கும்படி சொல்லி, அவனுடைய நிலங்களைப் பயிரிடும்படி சீபாவுக்கும் அவன் குமாரருக்கும் ஒப்புக்கொடுத்தான் (2 சாமு. 9:11).

பின்பு தாவீது அப்சலோமின் கலகத்தினிமித்தம் எருசலேமை விட்டுப் போகையில், சீபா வெகுமதிகள் எடுத்துக்கொண்டு தாவீதுக்குக் கொடுத்து, மேவிபோசேத்தின் மேல் வீண்பழி சொன்னான். தாவீது அப்பொழுது மேவிபோசேத்தின் நிலங்களை அவனுக்குக் கொடுத்தான் (2 சாமு. 16:1-4). தாவீது திரும்பி வந்தபின், மேவிபோசேத் நடந்த உண்மையை அவனுக்குச் சொன்னபொழுது, தாவீது நிலத்தை இருவரும் பங்கிட்டுக்கொள்ளும்படி கற்பித்தான் (2 சாமு. 19:17-29).

## சீமேயி (Shimei)

*(கர்த்தரே புகழ்ச்சி)*

சீமேயி சவுலுக்கு இனத்தவனாகிய கேராவின் குமாரன். அப்சலோமின் கலகத்தினிமித்தம், தாவீது புறப்பட்டுப் போகையில், இவன் தாவீதைத் தூஷித்துக்கொண்டே நடந்து போனான் (2 சாமு. 16:5). கர்த்தர் அவன் இப்படிச் செய்ய இடம் கொடுத்திருக்கக் கூடுமென்று சொல்லி, தாவீது சகித்துக்கொண்டான் (2 சாமு. 16:5-13).

தாவீது திரும்பி வரும்போது, சீமேயி வந்து இராஜாவுக்கு முன்பாகத் தாழ விழுந்து, மன்னிப்புக் கேட்டதினிமித்தம் மன்னிக்கப்பட்டான். சாலொமோன் சீமேயிடம் ஒரு வீடு கட்டி, எருசலேமில் இருக்க உத்தரவு கொடுத்தான். மூன்று வருடங்களுக்குப் பின், சீமேயி காத் ஊருக்குப் போனதினால் அவனைப் பெனாயாவைக் கொண்டு கொன்றான் (1 இரா. 2:36-46).

2. லேவியின் பேரனும், கெர்சோனின் குமாரனும் (எண். 3:17,18; 1 நாளா. 6:16,17; சக. 12:13; யாத். 6:17).

3. சிமியோனின் சந்ததியான். சீமேயிக்குப் பதினாறு குமாரரும், ஆறு குமாரத்திகளும் இருந்தார்கள் (1 நாளா. 4:26,27).

4. அதோனியா இராஜாவாக எத்தனித்தபோது, சீமேயி அவனுக்கு உடந்தையாயிருக்கவில்லை (1 இரா. 1:8). பின்பு பென்யமீனில் சாலொமோனுடைய மணியக்காரனாயிருந்தான் (1 இரா. 4:18). சீமேயி

என்னும் பெயருள்ளவர்களைக் குறித்து பின்வரும் இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறது *(1 நாளா. 6:29; 42, 43; 5:4; 8:13; 27:27).*

*5.* சிமேயா *(1 நாளா. 25:17).*

*6.* சீமேயு *(1 நாளா. 27:27).*

## சீமோன் (Simon)

***(கேள்வி)***

பழைய ஏற்பாட்டில் சிமியோன் எனப்பட்ட பெயர், பிற் காலத்தில் சீமோன் என வழங்கிற்று. யாக்கோபு பேதுருவை சிமியோன் என்று அழைத்திருக்கிறான் *(அப். 15:14).*

*1.* இயேசுவின் தலைமையான சீஷன் சீமோன். அவர் பேதுரு என்று பெயர் கொடுத்தார் *(யோவான். 1:42).*

*2.* கானானியனாகிய சீமோன் யூதருக்குள் ஒரு சுதேசக் கட்சியைச் சேர்ந்தவன். *(மத். 10:4).* கிரேக்க பாஷையிலே "செலோத்தே" எனப்பட்ட சீமோன் *(லூக்கா. 6:15; அப். 1:13).*

*3.* கர்த்தராகிய இயேசுவின் சகோதரரில் ஒருவன் *(மத். 13:55; மாற்கு. 6:3).*

*4.* பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்து சொஸ்தமடைந்த சீமோன், அவனுடைய வீட்டில், ஒரு ஸ்திரீ தைலத்தை இயேசுவின் சிரசின் மேல் ஊற்றினாள் *(மத். 26:6; மாற்கு. 14:3; யோவான். 12:1-3).*

*5.* இயேசுவின் சிலுவையை சுமக்கப் பலவந்தம் பண்ணப்பட்ட சிரேனே ஊரானாகிய சீமோன் *(மத். 27:32; மாற்கு. 15:21; லூக்கா. 23:26).*

*6.* பரிசேயனாகிய சீமோன், அவனுடைய வீட்டில் இயேசு பந்தியிருந்தபோது, பாவியான ஒரு ஸ்திரீ, இயேசுவின் பாதங்களில் பரிமளத் தைலத்தைப் பூசினாள் *(லூக்கா. 7:36-40).*

*7.* யூதாஸ்காரியோத்தின் தகப்பன் சீமோன் *(யோவான். 6:71; 12:4; 13:2).*

*8.* சமாரியாவிலிருந்த மாய வித்தைக்காரனாகிய சீமோன். இவன் பிலிப்புவின் பிரசங்கத்தால் குணப்பட்டு, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பணத்தால் சம்பாதிக்க நினைத்ததால், பேதுரு அவனைக் கண்டித்தான் *(அப். 8:9-24).*

*9.* யோப்பா பட்டணத்தில் தோல் பதனிடுகிறவனாகிய சீமோன். அவனுடைய வீட்டில் பேதுரு தங்கியிருந்தான் *(அப். 9:43).*

## சீயோன் (Zion)

*(சூரிய மலை)*

இது எருசலேமிலுள்ள குன்றுகளில் ஒன்று. கெதரோன் பள்ளத் தாக்குக்கு மேற்குப் பக்கமாயும், தேவாலயத்தின் தெற்குப் பக்கமாயும் இருந்தது.

எபூசியரின் பூர்வீகக்கோட்டை இந்த மலையிலிருந்தது. தாவீது அதைப் பிடித்தபின் அது தாவீதின் நகரமாயிற்று *(2 சாமு. 5.7; 1 நாளா. 11:5).*

பின்பு, தாவீது தேவனுடைய பெட்டியை ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து, தாவீதின் நகரத்துக்குக் கொண்டு வந்தான் *(2 சாமு. 6:12).*

சாலொமோன் தேவாலயத்தை இதற்கு அடுத்த மலைமேல் கட்டினபின் கர்த்தரின் பெட்டியைக் கொண்டு வந்து, சந்நிதி ஸ்தலமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைத்தான் *(1 இரா. 8:6; 2 நாளா. 5:2).*

அதன்பின் சீயோன் என்ற பேர் தேவாலயம் இருந்த இடத்திற்கும், சில வேளைகளில் எருசலேம் முழுவதற்கும் கொடுக்கப்பட்டது *(சங். 48; 65:1; 102:21; ஏசாயா 2:3; ஏசாயா. 8:18).* உதாரணமாக, *மத். 21:4*இல் "உன் இராஜா வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள்" என்றும், ரோமர் *11:26*இல் "மீட்கிறவர் சீயோனிலிருந்து வருவார்" என்றும், *1 பேதுரு. 2:6*இல் "மூலைக்கல்லைச் சீயோனில் வைக்கிறேன்" என்றும், வெளி. *14:1*இல் "சீயோன் மலைமேல் ஆட்டுக் குட்டியானவரைக் கண்டேன்" என்றும் குறித்துள்ளது.

## சீரியா (Syria)

*(பீடபூமி)*

சீரியா ஒரு பெரிய தேசம். வடக்கில் தோரஸ் மலைத் தொடரும், கிழக்கில் ஐபிராத்து நதியும், சாக்கடல் வரையுமுள்ள வனாந்தரமும், மேற்கில் மத்திய தரைக்கடலும், தெற்கில் சீனாய் குடா நாடும் அதன் எல்லைகள் *(2 சாமு. 8:6; 15:8; லூக்கா. 2:2; அப். 15:23).*

இந்தத் தேசம் காலாகாலங்களில் வெவ்வேறு அரசாட்சி களுக்குட்பட்டிருந்தது. கி.மு. 1300 தொடங்கி அங்கே குடியேறின பல ஜாதிகளுக்குள் அராபியரே அநேகராய் இருந்தார்கள். தமஸ்கு இதன் தலைநகர். கி.மு. 64இல் ரோமர் இதைப் பிடித்து, ஒரு தனி மாகாணமாக்கி அந்தியோகியாவைத் தலைநகரமாக்கினர். கிறிஸ்து மார்க்கம் தொடங்கின நாள்களிலும் அப்படி இருந்தது. பிற் காலங்களில் சீரியா துருக்கியின் ஆதிக்கத்துக்குட்பட்டது. அராபிய

மொழியில் ஆதி கிறிஸ்தவ மார்க்கத்துக்கடுத்த புத்தகங்களும், முக்கியமாய் பூர்வீக வேதாகமும் அவர்களிடமிருந்தது.

## சீரியன் (ர்)

சீரியாவிலிருந்த ஜனங்களில் பெரும்பாலோர் ஆராமியர். ஆராம், சேமுடைய சந்ததியான் (ஆதி. 10:22). அவன் ஆபிரகாமுடைய சகோதரனாகிய நாகோரின் பேரன் (ஆதி. 22:21). இஸ்ரவேலரும் ஆராமியரும் இனத்தவர்கள். “என் தகப்பன் அழிவுக்கு நேரான சீரியா தேசத்தானாயிருந்தான்” என்று யாக்கோபைப் பற்றி சொல்லி யுள்ளது (உபா. 26:5). சீரியனான லாபானின் சகோதரியாகிய ரெபெக்காளை, ஈசாக்கு விவாகம் செய்தான். பின்பு, அவன் குமாரத்திகளை யாக்கோபு விவாகம் செய்தான் (ஆதி. 24:29). ஆபிரகாமின் நாள்களிலும், தமஸ்குவில் குடியேறிய ஆராமியர் (ஆதி. 15:2). இஸ்ரவேலருக்கு விரோதமாயிருந்தார்கள். பின்பு தாவீது அவர்களைக் கீழ்ப்படுத்தியும், இஸ்ரவேல் இராஜ்யம் பிரிந்த பின், ஆராமியர் திரும்பவும் பலத்துக்கொண்டார்கள். இவர்களுக் கிடையில் யுத்தம் நடந்துக்கொண்டே இருந்தது, கடைசியில் கி.மு. 732இல் தமஸ்குவைத் திக்லாத்பிலேசர் பிடித்தபோது, சீரியருடைய இராஜ்யம் முடிவுக்கு வந்தது.

சீரியரும், பாபிலோனியரும் ஒரே தேவர்களைச் சேவித்தனர்.

## சீரிய வேதாகமம்

இது சீரிய மொழியில் எழுதியுள்ளது. மெசொப்பொத்தேமியா, சீரியா தேசங்களிலிருந்த சீரிய மொழி பேசின கிறிஸ்தவர்களுக்காக இது மொழிபெயர்க்கப்பட்டது. கி.மு. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன் வெளியாயிற்று. இதிலுள்ள புதிய ஏற்பாட்டில், 2 பேதுரு, 2-ஆம், 3-ஆம் யோவான், யூதா, வெளிப்படுத்தின விசேஷம் என்னும் புத்தகங்கள் சேர்க்கப்படவில்லை.

எவரால், எந்தக் காலத்தில் இது மொழி பெயர்க்கப்பட்டதெனத் தீர்க்கமாகச் சொல்ல முடியாத போதிலும் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் கிறிஸ்து மார்க்கம் ரோமரால் ஏற்றுக்கொள்ளப்பட்டபொழுது, இந்த ஆகமமும் அங்கீகரிக்கப்பட்டது.

கி.பி. 464இல் எழுதப்பட்ட நகல் ஒன்று பிரித்தானிய வினோத சாலையில் இருக்கிறதெனத் தெரிகிறது.

## சீலா (Sila)

சீலா ஒரு தீர்க்கதரிசி. அப்போஸ்தல நடபடிகளில் சீலா என்றும், நிருபங்களில் சில்வானு என்றும் குறிக்கப்படுகிறான். சீலா, ரோம தேச சுதந்தரமுள்ள ஒரு யூதன் (அப். 16:37).

எருசலேம் சபையிலிருந்த சகோதரரில், பர்னபாவும், சீலாவும் விசேஷித்தவர்கள். அங்கே கூடிய ஆலோசனை சங்கத்தின் தீர்மானங்களை மற்றச் சபைகளுக்குக் கொண்டு போகும்படி, தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் சீலாவும் ஒருவன் (அப். 15:22, 27).

சீலா அந்தியோகியாவுக்குப் போய், தீர்க்கதரிசன வார்த்தைகளால் சகோதரருக்குப் புத்தி சொல்லி அவர்களைத் திடப்படுத்தினான் (அப். 15:32).

பர்னபாவும், பவுலும் பிரிந்தபோது, பவுல் சீலாவைக் கூட்டிக் கொண்டு தன் இரண்டாம் பிரயாணத்தில் போனான். இவர்கள் பிலிப்பு பட்டணத்துக்குப் போயிருக்கையில், கலகம் உண்டாகி, காவலில் போடப்பட்டார்கள் (அப். 16:12-39). விடுதலையாக்கப்பட்ட பின் தெசலோனிக்கேயாவுக்குப் போன வேளையில் அங்கேயும் கலகம் உண்டானதால் அவ்விடமிருந்து பவுலும், சீலாவும் பெரோயாவுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கேயும் யூதர் கலகம் உண்டாக்கினதினிமித்தம் பவுல் அத்தேனேக்கு அனுப்பப்பட்டான். சீலாவும் தீமோத்தேயுவும் அங்கே தங்கினார்கள் (அப். 16:40; 17:14).

சீலா பின்பு பிலிப்பு பட்டணத்திற்குப் போனான் (பிலி. 4:15). பவுல் கொரிந்திலிருந்து நிருபங்கள் எழுதின வேளையில் சீலா அவனோடிருந்தான் (2 கொரி. 1:19; 1 தெச. 1:1; 2 தெச. 1:1; அப். 17:4; 14,15).

பேதுருவும் சீலாவைப்பற்றி 1 பேதுரு. 5:12இல் குறித்துள்ளான்.

## சீலோ (Shiloh)

பெத்தேலிலிருந்து ஒன்பது மைல் வடக்கேயும், சீகேமிலிருந்து பத்து மைல் தெற்கேயும் உள்ள எப்பிராயீமைச் சேர்ந்த பட்டணம் (நியா. 21:19).

நியாயாதிபதிகளின் நாள்களில் இஸ்ரவேலரின் தேவாலயம் இங்கே இருந்தது.

இஸ்ரவேல் கானான் தேசத்தைக் கைப்பற்றினபின், இங்கே கூடி ஆசரிப்புக் கூடாரத்தை நிறுத்தினார்கள். யோசுவா சீலோவில் சீட்டுப்போட்டு, இஸ்ரவேலருக்குத் தேசத்தைப் பங்கிட்டான் (யோசுவா 18:10). லேவியருக்கும் பட்டணங்களை நியமித்தார்கள் (யோசுவா. 18:21).

பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழிந்தபடியினால், சீலோவில் வருடந்தோறும் பண்டிகை கொண்டாடுகிற நாள்களில் நடனம் செய்யப்போன இஸ்ரவேலின் பெண்களைப் பிடித்துப் பென்யமீன் புத்திரர் தங்கள் தேசத்துக்குக் கொண்டுபோனார்கள் (நியா. 21:16-

23). இங்கு ஆலயத்தில் சாமுவேல் ஊழியம் செய்துகொண்டிருந்தான் (1 சாமு. 1:24-28).

பின்பு இங்கிருந்த ஆலயம் அழிக்கப்பட்டதுபோல, எருசலேம் தேவாலயத்துக்கும் சம்பவிக்குமென்று எரேமியா தீர்க்கதரிசனமாய் உரைத்தான் (எரே. 7:14; 26:6-9).

அகியா தீர்க்கதரிசி இந்த ஊரான் (1 இரா. 11:29; 14:2).

ஆதி. 49:10இல் "சமாதான கர்த்தர்" என்பது ஆங்கிலத்தில் சீலோ என்று குறித்துள்ளது.

## சீலோவாம் (Siloam)

### (அனுப்புதல்)

எருசலேமிலுள்ள கெதரோன் பள்ளத்தாக்குக்கு மேற்பக்கத்திலுள்ள ஒரு முக்கிய குளம். இங்கே மேற்குளம், கீழ்குளம் என்று இரண்டு குளங்கள் இருந்ததாகத் தெரிகிறது (ஏசாயா. 7:3; 22:9).

எசேக்கியாவின் நாள்களில், சனகெரிப் எருசலேமைக் கைப்பற்றப் போனபோது, எசேக்கியா நகரத்துக்குப் புறம்பேயுள்ள ஊற்றுகளைத் தூற்று, கீயோன் ஆற்றிலே அணைக் கட்டி அதன் தண்ணீரை மேற்கேயிருந்து தாவீதின் நகரத்துக்கு நேராகத்திருப்பினான் (2 இரா. 20:20; 2 நாளா. 32:30).

கீழ்க் குளத்திற்குப் பழைய குளமென்றும், சீலோவாம் குளமென்றும், புதிய ஏற்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இயேசு ஒரு பிறவிக் குருடனின் கண்களில் சேற்றைப் பூசி, சீலோவாம் குளத்தில் கழுவச் சொன்னார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம் (யோவான். 9:6,7).

லூக்கா. 13:4இல் குறித்திருக்கிற சீலோவாம் கோபுரம், இந்தக் குளத்திற்கு அருகே இருந்ததாக உத்தேசிக்கிறார்கள்.

சல்லூம் என்பவன் சீலோவாம் குளத்து மதிலைக்கட்டினான் (நெகே. 3:15).

மெதுவாய் ஓடுகிற சீலோவாவின் தண்ணீரைப்பற்றி ஏசாயா 8:6இல் குறித்துள்ளது.

## சீன் (Sin)

### (கோட்டை)

இது எகிப்தின் எல்லையிலுள்ள ஒரு காவல் கோட்டை. போர்ட் செட் (Portsaid) என்னும் துறைமுகத்திலிருந்து 20 மைலுக்கப்பால்

இருந்தது. தற்காலத்தில் "தெல்பராம்" என்று சொல்லப்படுகிறது. எசே. *30:15,16*இல் இந்த இடத்திற்கு விரோதமாகத் தீர்ப்பு சொல்லியுள்ளது. பெலுஜியம் (Pelugeum) என்றும் குறித்துள்ளது.

## சீன் வனாந்தரம் (Wilderness of Sin)

இது ஏலிம் என்ற இடத்திற்கும், சீனாய்க்கும் நடுவே இருந்தது (*யாத். 16:1*). இஸ்ரவேலர் சீன் வனாந்தரத்திலிருந்துப் புறப்பட்டு, ரெவிதீமில் பாளயமிறங்கினார்கள் (*யாத். 16:1*). மன்னா முதன் முதல் இங்கே கொடுக்கப்பட்டது (*யாத். 16:15*).

## சீனாய் மலை (Mount Sinai)

சீனாய் மலையென்றும், சீனாய் வனாந்தரம் என்றும், பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் குறித்துள்ளது. இதே இடம் "ஓரேப்" என்றும் சொல்லப்படுகிறது. இஸ்ரவேலர் எகிப்திலிருந்துப் புறப்பட்டு மாரா, ஏலிம் என்ற இடங்களுக்குப் போன பின், மூன்றாம் மாதம் சீனாய்க்கு வந்தார்கள் (*யாத். 19:1*). அங்கே மலையடிவாரத்தில் பாளயமிறங்கினார்கள்.

சீனாயில் கொடுமுடி அவர்களுக்குக் காணத்தக்கதாய் இருந்தது (*யாத். 19:16-20*). மலையுச்சியில், கர்த்தர் மோசேக்குத் தரிசனமாகி, பத்துக் கற்பனைகளையும் வேறே நியமங்களையும் கொடுத்தார். அவர் ஜனங்களோடு பண்ணின உடன்படிக்கையின் முக்கிய நோக்கமானது, எல்லாக் கோத்திரங்களும் ஏகமாய் ஒரே தேவனைச் சந்திக்க வேண்டும் என்பதே.

மோசே எத்திரோவின் ஆடுகளை மேய்த்துக் கொண்டு சீனாய் வனாந்தரத்தின் பின்புறமாய் தேவனுடைய பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்தபோது, அவனுக்குத் தேவதரிசனம் கிடைத்தது (*யாத். 3:1-3*).

இது தற்காலத்தில் "ஜேபல் மசா" எனப்படுகிறது. இதற்கு "மோசேயின் மலை" என்று அர்த்தம். இது அகபா, சுவேஸ் என்னும் கால்வாய்களுக்கிடையில் உள்ளது.

இந்த மலையின் அடிவாரத்தில் ஒரு கன்னியாஸ்திரீ மடமிருக்கிறது. அங்கே கோடக்ஸ் சினாடிகஸ் (Codex Sinaticus) என்னும் கிரேக்க வேதாகமம் கண்டுபிடிக்கப்பட்டது.

எலியா தீர்க்கதரிசியும் இங்கே போய் இருந்தான் (*1 இரா. 19:8*).

## சுக்கோத் (Succoth)

1. இஸ்ரவேலர் ராமேசை விட்டு, முதன் முதல் பாளயமிறங்கின இடம் (*யாத். 12:37; 13:20; எண். 33:5,6*).

2. காத்தியருக்குக் கொடுக்கப்பட்ட யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள ஒரு பட்டணம் (*யோசுவா. 13:27*). யாக்கோபு ஏசாவைச் சந்தித்த பின் அங்கேபோய் ஒரு வீடு கட்டி, மிருக ஜீவன்களுக்குக் குடிசைகளையும் போட்டான். அதினாலே அந்த ஸ்தலத்துக்குச் சுக்கோத் என்று பேரிட்டான் (*ஆதி. 33:1-17*).

கிதியோன் சேபாவையும், சல்முனாவையும் பின் தொடர்ந்து போகையில், இப்பட்டணத்தார் அவனுக்கு அப்பம் கொடாததினிமித்தம் அவன் முள்ளுகளினாலும், நெரிஞ்சல்களினாலும் அவர்களுக்குப் புத்திவரப் பண்ணினான் (*நியா. 8:5-17*).

## சூசான் (Shusan)

***(லீலி)***

இது ஏலாம் தேசத்தில் ஊலாய் ஆற்றங்கரையிலிருந்த பாபிலோனியருடைய பேர் பெற்ற தலைநகரம். இங்கே அரண்மனையிருந்தது.

கி.மு. 640இல் அசீரியா இராஜா இதைப்பிடித்து, சூசானிலிருந்த ஜனங்களைச் சமாரியாவுக்குக் கொண்டுவந்து குடியேற்றினான்.

பிற்பாடு சூசான் சுயாதீனம் பெற்று மறுபடியும் பெரிய நகரமாயிற்று. கோரேஸ் சூசானைப் பெர்சிய இராஜ்யத்தின் தலைநகரமாக்கினான். அகாஸ்வேருவின் அரண்மனையும், எஸ்தர் இருந்ததும் இங்கேயே (*நெகே. 1:1; எஸ்தர். 1:2; 9:11*).

தானியேல் தரிசனம் கண்ட போது சூசான் அரண்மனையிலிருந்தான் (*தானி. 8:2*).

ஒருமுறை மகா அலெக்சாந்தர் இதைக் கைப்பற்றினான். பிற்காலத்திலே இங்கே சுரங்கங்கள் தோண்டி, அநேக பொருட்களைக் கண்டுபிடித்தான்.

## சூனேம் (Shunem)

1. இசக்கார் தேசத்திலுள்ள ஒரு பட்டணம். இது கில்போவாவிலிருந்து வடக்கே ஐந்து மைல் தூரத்திலுள்ளது (*யோசுவா. 19:18*). சவுலோடு யுத்தம் செய்வதற்காகப் பெலிஸ்தர் இங்கே பாளயமிறங்கினார்கள் (*1 சாமு. 28:4*).

2. எலிசா தீர்க்கதரிசிக்கு உதவியாய் இருந்த ஒரு ஸ்திரீயின் ஊர் (*2 இரா. 4:8*).

தாவீது விர்த்தாப்பியனானபோது, அவனுக்குப் பணிவிடை செய்யும்படி அங்குள்ள அபிஷாகை சூனேமிலிருந்து கொண்டு வந்தார்கள் *(1 இரா. 1:3-15).*

## செசரியா (Caesarea)

இது ரோமருடைய அரசாட்சி காலத்தில் பலஸ்தீனாவின் தலை நகரம். எருசலேமிலிருந்து 68 மைல் தூரத்தில் மத்திய தரைக் கடலோரத்தில் ஒரு துறை இருந்தது. இங்கே அகஸ்துராயன் பேரில் மகா ஏரோது ஒரு பட்டணம் கட்டி இராயனுடைய பெயரை வைத்தான். ஏரோதின் குடும்பத்தாரும், ரோம அதிபதிகளும் அதில் வாசம்பண்ணினார்கள். ஒரு பெரிய கோயிலும் கட்டி, அதற்குள் இராயனுடைய சொரூபமும் வைக்கப்பட்டது.

பல ஜாதியினர் அங்கே குடியேறினார்கள். யூதருக்கும் மற்றவர்களுக்குமிடையில் விரோதமிருந்தது.

பிலாத்து, யூதேயாவின் தேசாதிபதியாய் இருந்த நாட்களில் இப்பட்டணத்தில் வசித்தான்.

சுவிசேஷகனாகிய பிலிப்புவின் வீடு அங்கே இருந்தது *(அப். 8:40).* பவுலும், அவனைச் சேர்ந்தவர்களும் கடைசிப் பிரயாணத்தில் பிலிப்புவின் வீட்டில் தங்கினான் *(அப். 21:8).* நூற்றுக்கதிபதியாகிய கொர்நேலியுவினால் அழைக்கப்பட்டு, பேதுரு போய் அங்கே பிரசங்கித்தான் *(அப். 10:19-48).* பவுலும் இவ்விடம் கொண்டு வரப்பட்டு, ஏரோதின் அரண்மனையில் காவல் காக்கப்பட்டான் *(அப். 23:33-35).*

இவ்விடத்தில் பெஸ்துவுக்கு முன், பவுல் நியாயம் விசாரிக்கப் பட்டபோது, பவுல் இராயனுக்கு அபயமிட்டான் *(அப். 25:4-13).*

ஏரோது செசரியாவுக்குப்போய் சீதோனியருக்குப் பிரசங்கம் பண்ணின வேளையில், தேவ தூதனால் அடிக்கப்பட்டு, இறந்தான் *(அப். 12:19-23).*

## செசரியா-பிலிப்பி (Caesarea Philippi)

இது பலஸ்தீனாவில் வட கோடியிலுள்ள பட்டணம். பேதுரு இயேசுவின் பேரில் சொன்ன அறிக்கையும், அவர் கொடுத்த உத்தரவும் இங்கே நடந்தது *(மத். 16:13-20).* அவர் மறுரூபமானதும் இங்கே *(மத். 17:1-13).*

மகா ஏரோதின் மகனாகிய பிலிப்பு இந்தப் பட்டணத்தைப் பெரிதாகவும் சிறப்பாகவும் கட்டி, சீசர் என்னும் இராயனுடைய

பெயரையும், தன்னுடைய பெயரையும் சேர்த்து, "செசரியா-பிலிப்பி" என்று பேரிட்டான். இயேசு சொஸ்தமாக்கின பெரும்பாடுள்ள ஸ்திரீ இவ்வூராளென்று சொல்லப்படுகிறது (லூக்கா. 8:43-48).

இயேசு போயிருந்த அதிகத் தூரமான இடம், எகிப்தை விட இதுவே என்று எண்ணப்படுகிறது.

## செபுலோன் (Zebulon)

### (குடியிருப்பு)

லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற கடைசி மகன் (ஆதி. 30:19,20). இவனுடைய குமாரர்: சேரேத், ஏலோன், யாலேயேல் என்பவர்கள். இவர்களுடைய சந்ததியார் செபுலோனியர் என்பட்டார்கள் (எண். 26:26).

எசேக்கியேல் கண்ட தரிசனத்தில், செபுலோனுக்கும் ஒரு பகுதி கிடைத்ததாகச் சொல்லுகிறான் (எசே. 48:26).

இயேசு செபுலோன் நப்தலி நாடுகளண்டைக்குப்போய் பிரசங்கித்தார் (ஏசாயா. 9:1; மத். 4:13).

## செபுலோன் கோத்திரம்

வனாந்தரப் பிரயாணத்தில் இந்தக் கோத்திரத்தில் யுத்தம் செய்யக்கூடியவர்களின் தொகை 57,400 (எண். 1:31).

தேசம் பிரிக்கப்பட்டபோது, கலிலேயாவின் மலை நாடு இவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. செழிப்பான நாடுகளும் இவர்களுக்குக் கிடைத்தது (யோசுவா. 19:10-16).

சிசெராவோடு நடந்த யுத்தத்தில் இவர்கள் விசேஷப் பங்கெடுத்தார்கள் (நியா. 5:14-18).

இஸ்ரவேலின் நியாயாதிபதி ஏலோன், இந்தக் கோத்திரத்தான் (நியா. 12:11).

பின்பு இந்தக் கோத்திரம் குறைந்து போய், கடைசியில் அசீரியரால் சிறைப்பட்டுப் போனார்கள் (2 இரா. 15:29).

எசேக்கியாவின் நாட்களில் இந்தக் கோத்திரத்தாரும், பஸ்கா பண்டிகை ஆசரிப்புக்குப் போனார்கள் (2 நாளா. 30:11).

யோவானுடைய தரிசனத்திலும், இந்தக் கோத்திரத்தார் முத்திரையிடப்பட்டார்கள் (வெளி. 7:8).

## செபதியா (Zebadiah)

*1.* பென்யமீன் கோத்திரத்துப் பெரீயாவின் குமாரன் *(1 நாளா. 8:15).*

*2.* தாவீதின் சேர்வைக்காரரில் ஒருவன். ஆசகேலின் மகன் யோவாபின் சிறிய மகன். *(1 நாளா. 27:7).*

*3.* யோசபாத் என்பவனால் யூதா நாட்டில் பிரசங்கிக்கும்படி அனுப்பப்பட்ட ஒரு லேவியன் *(2 நாளா. 17:8).*

*4.* யோசபாத்தின் கீழிருந்த ஒரு நியாயாதிபதி. இஸ்மவேலின் மகன் *(2 நாளா. 19:11).*

*5.* அந்நிய ஸ்திரீயை விவாகம் செய்த ஓர் ஆசாரியன் *(எஸ்றா. 10:19,20).*

## செபதேயு (Zebedee)

***(கர்த்தரின் ஈவு)***

இவன் ஒரு மீன்பிடிக்காரன். யாக்கோபு, யோவான் என்பவர்களின் தகப்பன் *(மத். 4:21; 10:2).*

## செப்பனியா (Zephaniah)

***(கர்த்தர் காக்கிறார்)***

*1.* கோகாத் கோத்திரத்து லேவியன். சாமுவேலின் முற்பிதா *(1 நாளா. 6:34-37).*

*2.* மாசெயின் குமாரனாகிய செப்பனியா, சிதேக்கியா இராஜாவின் நாள்களிலிருந்த ஒரு ஆசாரியன். இவன் எரேமியாவின் உண்மையான சிநேகிதனாயிருந்து, அவனுக்கும் சிதேக்கியா இராஜாவுக்குமிடையில் தூது கொண்டு போகிறவனாயிருந்தான். எருசலேம் பிடிக்கப்பட்ட பின், ரிப்லாவில் பாபிலோனியரால் கொல்லப்பட்டான் *(எரே. 21:1; 29:25; 37:3; 52:24-27).*

*3.* சகரியா தீர்க்கதரிசியின் நாள்களிலிருந்த யோசியாவின் தகப்பன் *(சக. 6:10).*

*4.* செப்பனியா ஒரு தீர்க்கதரிசி *(கி.மு. 639-608).* இவன் கூஷின் குமாரன். எசேக்கியா இராஜாவின் சந்ததியான் *(செப். 1:1).* இவன் 25-ஆம் வயதில் தீர்க்கதரிசன ஊழியம் செய்யத்தொடங்கி, யோசியா இராஜாவுக்கு உதவியாயிருந்தான். பாகால் வணக்கத்தையும், விக்கிரகாராதனைகளையும் கண்டித்தான். தேவாலயத்தில் நியாயப் பிரமாணப் புத்தகம் கண்டெடுக்கப்பட்டபின் இவ்வித வணக்கங்கள் நின்றுபோயின.

கி.மு. 312இல் சம்பவித்த நினிவேயின் அழிவைப்பற்றி முன்னறிவித்த நாகூமும், கி.மு. 587இல் எருசலேமின் அழிவைப் பார்த்திருந்த எரேமியாவும் இந்தத் தீர்க்கதரிசியின் நாள்களில் இருந்தவர்கள்.

## செமாயா, சேமாயா (Shemaiah)

**("யேகோவா கேட்கிறார்")**

1. இவன் ஒரு தீர்க்கதரிசி. ரெகொபெயாம் இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் செய்ய ஆயத்தமானபோது, இவன் அவனைத் தடுத்தான் *(1 இரா. 12:22-24; 2 நாளா. 11:2-4)*.

எகிப்தின் இராஜாவாகிய சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்தவேளையில் செமாயா ரெகொபெயாமை நோக்கி அந்நிய தேவர்களைச் சேவித்ததால் அது தேவ தண்டனையாக வந்தது என்றான் *(2 நாளா. 12:5:9)*. இவன் ரெகொபெயாமின் நடபடிகளை ஒரு புத்தகத்தில் எழுதினான் *(2 நாளா. 12:15)*.

2. தொபியாவும், சன்பல்லாத்தும் கூலிக்குப் பிடித்து, நெகேமியாவிடம் அனுப்பின ஒரு கள்ளத் தீர்க்கதரிசி *(நெகே. 6:10-14)*.

3. எரேமியா தீர்க்கதரிசியை எதிர்த்த ஒரு கள்ளத் தீர்க்கதரிசி. இவன் யோயாக்கீனோடு சிறைபிடிக்கப்பட்டான். இவனுடைய குடும்பம் முற்றாய் அழிந்து போகுமென்று, எரேமியா முன்னறிவித்திருந்தான் *(எரே. 29:24-32)*.

4. ரூபன் கோத்திரத்து யோவேலின் குமாரன் *(1 நாளா. 5:4)*.

5. நெதனெயேலின் குமாரன். தாவீதின் சம்பிரதி *(1 நாளா. 24:6)*.

6. ஓபேத் ஏதோமின் குமாரன் *(1 நாளா. 26:4)*.

7. யோசபாத்தின் நாள்களில் வேத புத்தகத்தில் இருந்து ஜனங்களுக்குப் போதித்தவன் *(2 நாளா. 17:8)*.

8. எசேக்கியாவின் நாள்களில் காணிக்கைகளைப் பங்கிடும்படி ஏற்படுத்தப்பட்டவன் *(2 நாளா. 31:15)*.

9. எருசலேமின் அலங்கத்தைக்கட்ட உதவிசெய்தவன் *(நெகே. 3:29)*.

10. செருபாபேலோடு எருசலேமுக்கு வந்தவர்களில் ஒருவன் *(நெகே. 10:8)*.

11. லேவியரைக் கூட்டி வரும்படி எஸ்றாவால் அனுப்பப்பட்டவன் *(எஸ்றா. 8:16)*.

12. எருசலேமின் அலங்கப்பிரதிஷ்டையில் பங்கெடுத்த ஒரு பிரபு (நெகே. 12:34).

## செருபாபேல் (Zerubbabel)

**(பாபிலோனியாவில் துளிர்த்தது)**

செயல்தியேலின் குமாரன் (எஸ்றா. 3:2; ஆகாய். 1:1). சொரொபாபேல் என்று (மத். 1:12ல்) குறித்துள்ளது. இவனும் பிரதான ஆசாரியனாகிய யோசுவாவும் சிறையிலிருந்த யூதரை எருசலேமுக்குக் கூட்டிப்போனார்கள் (கி.மு. 536). இவன் பின்பு யூதாவின் தலைவனாக நியமிக்கப்பட்டான் (ஆகாய். 2:21).

இவன் தாவீதின் சந்ததியான் (1 நாளா. 3:19). இது மேசியாவுக்குரிய உரிமை. செருபாபேலும் கர்த்தருடைய முத்திரை மோதிரமாக வைக்கப்படுவானென்று முன்னறிவிக்கப்பட்டது (ஆகாய். 2:23).

ஆலயத்தைக் கட்டி முடிக்கும்படி சகரியா, செருபாபேலை ஏவி எழுப்பிச் சொன்னதாவது : "கர்த்தருடைய ஏழு கண்களும் செருபாபேலின் கையிலிருக்கிற தூக்குநூலைச் சந்தோஷமாய்ப் பார்க்கிறது (சக. 4:10).

## சேத் (Seth)

**(பதிலாக கொடுக்கப்பட்டது)**

இவன் ஆதாம், ஏவாள் என்பவர்களின் மூன்றாம் மகன். ஆபேல் மரித்தபின், இவன் பிறந்தான். அவனுக்குப் பதிலாக தேவன் இன்னொரு புத்திரனைக் கொடுத்தானென்று ஏவாள் அவனுக்கு "சேத்" என்று பேரிட்டாள் (ஆதி. 4:25, ஆதி. 5:3-8; லூக்கா. 3:38; 1 நாளா. 1:1).

எண். 24:17இல் சொல்லப்பட்டிருக்கிற ''சேத்புத்திரர்'' "கலகக்காரர்" என்ற அர்த்தமுள்ளது (எரே. 48:45).

## சேபா (Sheba)

**(உடன்படிக்கை)**

இது பலஸ்தீனாவில் சிமியோன் கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டணம் (யோசுவா. 19:2).

2. பென்யமீன் மனுஷனான பிக்கிரியின் குமாரன் சேபா. தாவீதுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினதினிமித்தம் யோவாப் அவனைப் பின் தொடர்ந்துபோகையில், ஆபேல் பட்டணத்தார் சேபாவைக் கொன்றார்கள் (2 சாமு. 20:1-22).

*3.* தென் அராபியாவிலுள்ள ஒரு தேசம். அந்தத் தேசத்து ராஜஸ்திரீ சாலொமோனுடைய கீர்த்தியைக் கேள்விப்பட்டு, அதன் உண்மைகளை அறியும்படி அவனிடம் போய், மறை பொருளைக் கேட்டபோது, அவன் அவைகளை விடுவித்தான் *(1 இரா. 10:1-7).*

நமது ஆண்டவரும் இந்த ராஜஸ்திரீ செய்ததை மெச்சிப் பேசினார் *(மத். 12:42).*

*4.* காமின் சந்ததியான கூஷ் என்பவனின் மகன் *(ஆதி. 10:7; 1 நாளா. 1:9).*

*5.* ஆபிரகாம் கேத்தூராள் என்பவர்களின் மகனாகிய யக்ஷானின் மகன் *(ஆதி. 25:3).*

## சேம் (Shem)

இவன் நோவாவின் மூத்த மகன் *(ஆதி. 5:32; 1 நாளா. 1:4).* ஜலப்பிரளயத்தில் தப்பின எட்டு பேரில் ஒருவன் *(ஆதி. 7:13).*

நோவாவின் குடும்பத்தார் பேழைக்குள் போனவேளையில் சேம் ஏறக்குறைய நூறு வயதுள்ளவனாயும், விவாகம் செய்தவனாயு மிருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை *(ஆதி. 7:7).*

பின்பு நோவா வெறித்திருந்த சமயத்தில் இவன் அவனை மரியாதையாய் நடத்தினதினிமித்தம் ஆசீர்வாதம் பெற்றான் *(ஆதி. 9:23,27).*

சேம் தலைப்பிள்ளையாயிருந்து, சேம் கோத்திரத்துக்கு முற்பிதாவானான் *(ஆதி. 11:10-26).* நமது ஆண்டவருக்கும் இவன் முற்பிதா *(லூக்கா. 3:36).*

சேமுடைய குமாரர்: ஏலாம், ஆசூர், அர்பக், லூத், ஆராம் என்பவர்கள். சேமிலிருந்து உண்டான ஜாதிகள் எல்லாவற்றிற்கும் இவர்கள் முற்பிதாக்களானார்கள் *(ஆதி. 10:22).* அர்பக்சாத் என்பவன் ஆபிரகாமுக்கும் அவன் மூலம் எபிரெய ஜாதியாரெல்லாருக்கும் முற்பிதா.

அர்பக்சாத் பிறந்தபின், சேம் 500 வருடம் உயிரோடு இருந்தான். அவன் 600-ஆம் வயதில் மரித்திருப்பான் *(ஆதி. 11:11).*

## சேயீர் (Seir)

*1.* ஏதோம் சீமையாகிய சேயீர் தேசத்தில், ஏசா குடியேறினான் *(ஆதி. 32:3).* இது சவக்கடலுக்குத் தெற்குப் பக்கமாயுள்ள ஒரு மலைதேசம். தொடக்கத்தில் ஓரியர் இங்கே குடியேறினார்கள் *(ஆதி.*

14:6). பின்பு ஏசாவும் அவன் சந்ததியாரும் இதைக் கைப்பற்றினார்கள் (உபா. 2:12; யோசுவா. 24:4).

சிமியோனின் புத்திரர் சேயீர் மலைத் தேசத்திற்குப் போய் அமலேக்கியரைத் துரத்தித் தாங்கள் குடியேறினார்கள் (1 நாளா. 4:42,43). பிலேயாமின் தீர்க்கதரிசனத்தில் சேயீரைப் பற்றிக் குறித்துள்ளது (எண். 24:18).

2. சேயீர் என்பவன் ஓரியரின் முற்பிதா (ஆதி. 36:20; 1 நாளா. 1:38, 39).

## சேயீர் மலை

இது யூதா தேசத்தின் எல்லையாயிருந்த மலை (யோசுவா. 15:10).

## சேராபீம் (Seraphim)

இவர்கள் பரம பிராணிகள். இவர்கள் செட்டைகளை விரித்து சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஆண்டவருக்கு மேலாக நிற்கிறதாக ஏசாயா சொல்லுகிறான்.

அவர்களில் ஒவ்வொருவனுக்கும் அவ்வாறு செட்டைகளும், கைகளும், கால்களும் இருந்தன.

அவர்களில் ஒரு வரிசை மற்ற வரிசையோடு மறுமொழியாக "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்" என்று பாடி, பூமியனைத்தும் அவர் மகிமையால் நிறைந்திருக்கிறதென்று சொன்னார்கள் (ஏசாயா. 6:2-7).

இவர்கள் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் சம்பந்த முள்ளவர்களெனத் தெரிகிறது (ஏசாயா. 6:6).

## சேலா (Selah)

1. இது ஏதோமிலுள்ள ஒரு இடம். அமத்சியா யுத்தம் செய்து, சேலாவைக் கைப்பற்றி அதற்கு "யொக்தியேல்" என்னும் பெயரைக் கொடுத்தான் (2 இரா. 14:7; ஏசாயா. 16:1).

2. இந்தச் சொல் சங்கீதங்களில் 71 தடவைகளிலும், ஆபகூக்கில் 3 தடவைகளிலும் காணப்படுகிறது.

இதன் அர்த்தம் கீத வாக்கியங்களுக்கு அடுத்ததாய், அல்லது வணக்கத்துக்கு உரியதாயிருக்கலாம்.

## சோதோம் (Sodom)

லோத்து ஆபிரகாமை விட்டுப் பிரிந்து சோதோமில் குடியேறினான் (ஆதி. 13:12).

நான்கு இராஜாக்கள் வந்து சோதோமைக் கொள்ளையடித்து லோத்தையும், அவன் பொருள்களையும் கொண்டு போனார்கள் *(ஆதி. 14:12)*.

தேவதூதர் லோத்திடம் போய் இந்த ஸ்தலத்தை அழிக்கப் போகிறோம். உன் மனைவியையும், குமாரத்திகளையும் அழைத்துக் கொண்டு மலைக்கு ஓடிப்போ என்று சொன்னபடி அவன் செய்தான் *(ஆதி. 19:12-17)*. அப்பொழுது கர்த்தர் வானத்திலிருந்து அக்கினியை வருஷிக்கப்பண்ணிச் சோதோமை அழித்தார் *(ஆதி. 19:24,25)*.

சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும், கர்த்தருக்கு முன்பாகப் பாவிகளுமாய் இருந்தார்கள் *(ஆதி. 13:13)*.

சோதோம் கொமோராவின் பாவம் மிகவும் கொடியதாயிருந்தது *(ஆதி. 18:20)*.

"ஒரு நிமிஷத்தில் கவிழ்க்கப்பட்ட சோதோமின் பாவத்துக்கு வந்த தண்டனை" என்று எரேமியா குறிக்கிறார் *(புல. 4:6)*.

இயேசுவும் நியாயத்தீர்ப்பு நாளில் சோதோமுக்கு நேர்ந்ததைப் பற்றி பேசுகிறார் *(மத். 10:15)*.

சோதோம் என்ற வார்த்தை ஞானார்த்தமாய் வெளி. 11:8இல் சொல்லப்பட்டுள்ளது.

## சோதோமின் பாவம்

இது விக்கிரகாராதனைக்கடுத்த துன்மார்க்க கிரியைகளைக் குறிக்கிறது. இந்தப் பாவத்தைப்பற்றிய ஆங்கில சொல்லை தமிழில் ஆண்புணர்ச்சி என்று மொழி பெயர்த்துள்ளது *(உபா. 23:17)*. இந்தப் பாவத்துக்குட்பட்டவர்கள் தேவாலயத்துக்குள் பிரவேசிக்கலாகாது.

ரெகொபெயாமின் நாள்களில் இந்தப் பாவம் அதிகமாயிருந்தது *(1 இரா. 14:24)*.

ஆசா, யோசபாத் என்னும் இராஜாக்கள் அப்படிப்பட்ட பாவம் செய்தவர்களை அகற்றிவிட்டார்கள் *(1 இரா. 22:46)*.

யோசியா அப்படிப்பட்டவர்களின் வீடுகளை இடித்துப் போட்டான் *(2 இரா. 23:7)*.

## சோவார் (Zoar)

***(சிறியது)***

இது சித்தீம் சம பூமியிலுள்ள ஐந்து பட்டணங்களில் ஒன்று. இதன் முதற் பெயர் பேலர். இதன் இராஜா சோவார். கெதர்லா

கோமேர் தோற்கடித்த ஐந்து இராஜாக்களில் ஒருவன் (ஆதி. 14:2-8). தேவ தீர்ப்பு அந்தப் பட்டணங்கள் மேல் வந்தபோது, லோகாத்தின் வேண்டுதலின்படி இந்தப் பட்டணம் தப்பிற்று (ஆதி. 19:20-23). ஏசாயா, எரேமியா என்பவர்களின் நாள்களிலும் இந்தப் பட்டணம் இருந்தது. அவர்கள் இந்தப் பட்டணம் மோவாப் தேசத்தின் ஒரு பகுதியென குறிக்கிறார்கள் (ஏசாயா. 15:5; எரே. 48:24).

## சோவான் (Zoan)

இது எகிப்திலுள்ள ஒரு பூர்வீக பட்டணம். எபிரோன் பட்டணம் நிலை பெற்ற காலத்தில், இதுவும் கட்டப்பட்டதாகத் தெரிகிறது (எண். 13:22). கிரேக்கர் இதை "ரியூனிஸ்" என்றழைத்தனர். இது நைல் நதியைச் சேர்ந்த ஒரு முக்கிய துறைமுகம்.

எகிப்தின் கடைசி இராஜாவாகிய இரண்டாம் ராமசேஸ் (Ramases) என்பவர்களின் நாள்களில் இது அதிக செழிப்பாய் இருந்தது. அவன் இங்கே அநேகக் கட்டடங்களையெழுப்பி, தனக்கும் ஒரு அரண்மனையைக் கட்டினான். மேலும் ஒரு பெரிய கோயிலைக் கட்டி தன்னுடைய சுரூபத்தை அதற்குள் வைத்தான்.

ஏசாயா, எசேக்கியேல் என்பவர்களின் காலத்திலும் இது இருந்தது (ஏசாயா. 19:11; எசே. 30:14).

எகிப்தியர் மேல் விழுந்த வாதைகளெல்லாம் சோவானிலே நடந்தது (சங். 78:12, 43).

## ஸ்தேவான் (Stephen)

*(கிரீடம்)*

1. ஆதிச் சபையார் தெரிந்து கொண்ட ஏழு உதவிக்காரரில், ஸ்தேவான் விசேஷித்தவன். அக்காலத்தில் கிரேக்க பாஷை பேசின அநேக யூதர் கிறிஸ்தவர்களானார்கள். எருசலேம் சபையிலுள்ள விதவைகளுக்குப் பந்தி விசாரணை செய்யும்படி ஏழுப் பேரைத் தெரிந்து கொண்டார்கள் (அப். 6:1-6).

அவர்களில் ஸ்தேவான் விசுவாசமும், பரிசுத்த ஆவியும், வல்லமையும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள் அற்புதங்களும், அடையாளங்களும் செய்தான். அப்பொழுது "லிபர்த்தினர்" என்னும் கூட்டத்தார் அவனுக்கு விரோதமாய் எழும்பி, அவனை ஆலோசனைச் சங்கத்தார் முன் கொண்டு போனார்கள் (அப். 6:5, 8-15).

அத்தருணத்தில் ஸ்தேவான் ஒரு நீண்ட பிரசங்கம் செய்தான். யூதர்கள் அதைக் கேட்டு மூர்க்கம் அடைந்து அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

"ஆண்டவரே இவர்கள் மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும்" என்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லி, ஸ்தேவான் நித்திரை அடைந்தான் *(அப். 7:5; 54-60).*

இவ்வண்ணமாய் ஸ்தேவான் கிறிஸ்தவர்களில் முதன் முதல் இரத்த சாட்சியானான். ஸ்தேவான் நிமித்தமாய் எழும்பின உபத்திரவத்தினாலே சீப்புரு, அந்தியோகியா முதலிய இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது *(அப். 11:19-22).*

## ஸ்தேவான் (Stephanas)

கொரிந்து சபையைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவன். இவனுடைய வீட்டாருக்குப் பவுல் ஞானஸ்நானம் கொடுத்தான் *(1 கொரி. 1:6).* இவர்கள் அகாயா நாட்டில் முதற்பலனானவர்கள் *(1 கொரி. 16:15).* ஸ்தேவான், பொர்த்துனாத்து, அகாயுக்கு என்பவர்களும், எபேசுவுக்குப் பவுலைச் சந்திக்கப் போய், உபகாரங்களும் கொடுத்தார்கள் *(1 கொரி. 16:17).*

## தபீத்தாள் (Tabitha)

**"பெண்மான்"**

இவள் யோப்பா பட்டணத்திலிருந்த ஒரு கிறிஸ்தவ ஸ்திரீ. சீஷி என்றழைக்கப்பட்டாள். தருமங்கள் மிகுதியாய்ச் செய்தவள். விசேஷமாக விதவைகளுக்கு அங்கிகளும், வஸ்திரங்களும் செய்து கொடுத்தவள். இவள் வியாதிப்பட்டு, மரணமடைந்தபோது, லித்தாவிலிருந்த பேதுருவை வரவழைத்து அவன் ஜெபித்தபோது உயிரடைந்தாள். இதினிமித்தம் அநேகர் விசுவாசிகளானார்கள் (அப். 9:36-43). கிரேக்க பாஷையில் இவளுடைய பெயர் தொற்காள்.

## தபேரா (Teberah)

***("பற்றி எரிதல்")***

இது ஒரு வனாந்தரம். இந்த வனாந்தரத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் பாளயமிறங்கியிருந்தார்கள். அவர்கள் முக்கிய காரணமின்றி முறையிட்டதினிமித்தம் கர்த்தருடைய கோபம் மூண்டு அக்கினி பற்றியெரிந்து சிலரைப் பட்சித்து, மோசே விண்ணப்பம் பண்ணினபோது அக்கினி அவிந்து போயிற்று. மோசே அவ்விடத்துக்குத் தபேரா என்று பேரிட்டான் *(எண். 11:1-3; உபா. 9:22).*

## தமஸ்கு (Damascus)

. இது சீரியாவிலுள்ள ஒரு விசேஷப் பட்டணம். எருசலேமைத் தவிர பூமியிலுள்ள அதிகப் பூர்வ பட்டணம். இப்போதும் ஜனங்கள் குடியேறியிருக்கிற இடம். லீபனோன் மலைத்தொடருக்கு அருகிலிருக்கும் ஒரு செழிப்பான தேசம்.

லோத்தைப் பிடித்துக்கொண்டு போனவர்களை, ஆபிரகாம் தமஸ்குவுக்கு இடதுபுறமான ஓபாமட்டும் துரத்தினான் என்பதே இந்த இடத்தைப்பற்றி வேதாகமத்தில் முதன் முதல் குறித்துள்ளது *(ஆதி. 14:15).* தமஸ்கு ஊரானாகிய எலியேசர் ஆபிரகாமின் விசாரணைக்காரன் *(ஆதி. 15:2).* தாவீதின் நாள்களில் தமஸ்கு பட்டணத்தாராகிய சீரியர் அவனுக்கு விரோதமாக வந்தபோது, அவன் அவர்களை வெட்டிப் போட்டுத் தாணயங்களை வைத்தான் *(2 சாமு. 8:6).* சீரியர் தாவீதைச் சேவித்து, கப்பங் கட்டினார்கள்.

ரேசோன் சில மனுஷரைச் சேர்த்துக் கொண்டு தமஸ்குவில் இராஜாவாயிருந்து, சாலொமோனின் நாள்களிலெல்லாம் இஸ்ரவேலுக்கு விரோதியாயிருந்தான் *(1 இரா. 11:25).* நூறு வருடங்களாய் தமஸ்குவுக்கும், இஸ்ரவேலுக்குமிடையில் யுத்தம் நடந்தது. தமஸ்குவில் இருந்த இராஜாக்களில் பெனாதாத் பேர் பெற்றவன். ஆகாப் இராஜாவின் நாள்களில் அவன் இஸ்ரவேலரை நெருக்கினான்.

ஆசா தேவாலயத்துப் பொக்கிஷங்களை எடுத்து, தமஸ்குவிலிருந்த பெனாதாத் என்னும் சீரிய இராஜாவுக்குக் கொடுத்தனுப்பினான் *(1 இரா. 15:18).*

நாகமான் இஸ்ரவேலின் தண்ணீரைப் பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளாகிய ஆப்னாவும், பர்பாரும் நல்லதல்லவா என்று சொல்லி, திரும்பிப் போனான் *(2 இரா. 5:12).* தமஸ்கு பாழான மண்மேடாகும்; இராஜாங்கம் தமஸ்குவையும் விட்டொழியும் என்று ஏசாயா உரைத்தான் *(ஏசாயா. 17:1,3).*

தமஸ்குவுக்கு விரோதமாய் வேறு தீர்க்கதரிசிகளும், தீர்க்க தரிசனம் உரைத்தார்கள் *(எரே. 49:24-27; எசே. 27:18-36; ஆமோஸ். 1:3-5, சக. 9:1).*

அப்போஸ்தலனாகிய பவுலின் குணப்படுதல் தமஸ்குவுக்குச் சமீபமாய் சம்பவித்தது. பின்பு அவன் தமஸ்குவுக்குக் கொண்டு போகப்பட்டுப் பார்வை அடைந்து ஞானஸ்நானம் பெற்று ஆலயங்களில் பிரசங்கித்தான் *(அப். 9:1-22).* யூதர்கள் அவனைக் கொலை செய்ய ஆலோசித்தபோது, சீஷர்கள் அவனை இராத்திரியில் ஒரு கூடையில் வைத்து மதில் வழியாய் இறக்கி

விட்டார்கள் (அப். 9:23-25). தமஸ்குவிலிருந்த நாள்களில் பவுல் அரபி தேசத்துக்குப் போய் சில காலம் இருந்ததாகத் தெரிகிறது (கலா. 1:17).

பவுல் தமஸ்குவில் தனக்குச் சம்பவித்ததைப் பற்றி மூன்று தடவைகளில் சாட்சியாகக் கூறியுள்ளான் (அப். 22:5-11; 26:12-20; 2 கொரி. 11:32,33).

தமஸ்குவின் தனி அதிகாரம் படிப்படியாய்க் குறைந்து போய் இறுதியில் அசீரிய இராஜ்யத்துக்குட்பட்டது.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் சில காலம் தமஸ்கு அரேத்தா இராஜாவின் தலைநகரமாயிருந்தது (2 கொரி.11:32). பின்பு ரோம இராஜ்யத்துக்குக் கீழிருந்தது. (கி.மு. 64-கி.பி. 33). அராபியர் கி.பி. 634இல் அதைத் தங்கள் ஆதிக்கத்துக்குள்ளாக்கினார்கள்.

அப்படியிருக்கையில் முதலாம் உலக யுத்தத்தில், அலென்பி என்னும் பிரித்தானிய சேனாதிபதி தமஸ்குவையும் கைவசப் படுத்தினான்.

தற்காலத்தில் அது சீரிய இராஜ்யத்துக்கு தலைப் பட்டணமா யிருக்கிறது.

## தம்மூஸ் (Tammuz)

1. பாபிலோனியர், அசீரியர், பெனிக்கேயர் வணங்கின ஒரு தெய்வம். கிரேக்கர் அதோனிஸ் என்று சொன்னார்கள்.

இது மேய்ப்பருடைய ஆண் தெய்வம். இஸ்தார் அவர்களுடைய பெண் தெய்வம்.

எசேக்கியேல், தன் தரிசனத்தில் தம்மூசுக்காக அழுது கொண்டிருக்கும் ஸ்திரீகளை ஆலயத்தின் வாசலில் கண்டான் (எசே. 8:14).

இதைப் பற்றிய கட்டுக்கதை என்னவெனில். தம்மூசு மரித்த போது, அவனுடைய மனைவி மற்றவர்களையும் அழைத்துத் துக்கம் கொண்டாடி, அவனைச் சந்திக்கும்படி பாதாளத்துக்குப் போனபோது, அவன் உயிர்த்தெழுந்தான் என்பதே.

இதை நினைவுகூரும்படி, பிற்காலங்களில் ஸ்திரீகள் கோயில்களுக்குப் போய்ப் புலம்புவது வழக்கமாய் இருந்தது. அத்தருணங்களில் அவலட்சணமான காரியங்களும் நடைபெற்றன.

2. எபிரெயரின் பஞ்சாங்கத்தில் இது நான்காம் மாதம் எனக் குறித்துள்ளது.

## தரியு (Darius)

*(கி.மு. 621-486)*

1. தரியு என்பது மூன்று பெர்சிய இராஜாக்களின் பெயராகும். மகா தரியு எனப்படும் முதலாம் இராஜா ஜஸ்தாவிஸ் என்பவன். அவன் இராஜ்யத்தைப் பலப்படுத்தி மேலாக்கினான். அவன் யூதருக்கு தயவு செய்து, அவர்கள் எருசலேமுக்குப் போய் தேவாலயத்தைக் கட்ட உதவி செய்தான். அப்படியே யோசுவா, செரூபாபேல் என்பவர்கள் ஜனங்களைக் கூட்டிக்கொண்டு போய் தேவாலயத்தைக் கட்டத் தொடங்கியபோது, நேரிட்ட தடைகளிலும் அவர்களுக்குச் சகாயம் செய்தான் (எஸ்றா. *3:1-13; 6:1-15;* ஆகாய். *1:1;* சக. *1:7*).

2. பெர்சியனாகிய தரியு (கி.மு. *326-330*).

இவன் பெர்சியாவின் கடைசி இராஜா, நெகே. *12:22*இல் கூறப்பட்டுள்ள இராஜா இவனே.

3. மேதியனாகிய தரியு (தானி. *11:1*).

இவன் மேதிய குலத்தானாகிய அகாஸ்வேருவின் புத்திரன் (தானி. *9:1*).

கல்தேயரின் இராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டபோது, இவன் பிரதி இராஜாவானான் (தானி. *5:30, 31*).

## தர்ஷீஸ் (Tarshish)

*(கடினமான)*

வேதாகமத்தில் தர்ஷீஸ் என்ற சொல் ஆள்களையும், இடங்களையும் குறிக்கிறது.

ஆள்களின் பெயர்கள் :

1. பென்யமீன் கோத்திரத்துப் பில்கானின் மகன் (1 நாளா. *7:10*).

2. பெர்சியா இராஜாவாகிய அகாஸ்வேருவின் ஏழு அதிபதிகளில் ஒருவன். இவர்களுக்கு இராஜ சமுகத்தைத் தரிசிக்கும் அதிகாரம் உண்டு (எஸ். *1:13*).

3. நோவாவின் பேரனாகிய யாவானின் குமாரன் (ஆதி. *10:4;* 1 நாளா. *1:7*).

இடங்களின் பெயர்கள் :

1. தர்ஷீஸ் பட்டணம் என்பது பழைய ஏற்பாட்டில் பல தடவைகளில் சொல்லப்பட்டும், எங்கேயிருந்ததென்றும் திட்டமாய்க்

குறிக்கப்படவில்லை. பலஸ்தீனா தேசத்திலிருந்து அதிகத் தூரத்தில் மத்திய தரைக்கடலருகே இருந்ததாகத் தெரிகிறது (யோனா. 1:3; ஏசாயா. 66:19).

இந்த இடத்திலிருந்து பெனிக்கேயர் வெள்ளி, இரும்பு, தகரம், ஈயம் முதலியவைகளை இறக்குமதி செய்தார்கள் (எசே. 27:12).

தர்ஷீஸ் கப்பல்கள் என்பது (1 இரா. 10:22; சங். 48:7) தர்ஷீசுக்கு போக்குவரத்தாயிருந்த பெரிய வியாபாரக்கப்பல்களைக் குறிக்கிறது. பின்பு இந்தப் பெயர் பொதுவாக ஓப்பீர் முதலிய தூர தேசங்களுக்குப் போய் வியாபாரம் செய்த கப்பல்களுக்கு உபயோகிக்கப்பட்டது.

சாலொமோனுக்கும் சிவந்த சமுத்திரத்தில் எசியோன், கேபார் என்னும் துறைமுகத்தில் இப்படிப்பட்ட பெரிய கப்பல்கள் இருந்தன. கர்த்தருடைய நாளில் நியாயத்தீர்ப்பு தர்ஷீஸின் கப்பல்கள் மேலும் விழும் என்று ஏசாயா. 2:16இல் குறித்துள்ளது.

## தர்சு (Tarsus)

இது தென்கிழக்காசியாவில், சிலிசியாவிலுள்ள ஒரு முக்கிய பட்டணம் (அப். 21:39). அங்கே விசேஷ பாடசாலைகள் இருந்தன. பவுலின் பிறப்பிடமும் இதுவே (அப். 22:3).

பவுல் குணப்பட்டபின், எருசலேமில் அவனுக்குத் துன்புறுத்தல் உண்டானபோது, கிறிஸ்தவர்கள் அவனைத் தர்சுவுக்கு அனுப்பி விட்டார்கள் (அப். 9:30). பின்பு பர்னபா தர்சுவுக்குப் போய் அந்தியோகியாவுக்குப் பவுலைக் கூட்டிக்கொண்டு போனான் (அப். 11:25).

பவுல் தனது இரண்டாம் பிரயாணத்திலும், இந்த இடத்துக்குப் போனதாகத் தெரிகிறது (அப். 15:41).

## தாகோன் (Dagon)

*(மீன்)*

பெலிஸ்தருடைய முக்கிய தெய்வம். இந்தச் சொரூபத்தின் தலையும், கரங்களும், உடலும் மனுஷ ரூபமுள்ளவை. தாகோன் செழிப்பு கொடுக்கும் தெய்வமாக மதிக்கப்பட்டது. இதன் முக்கிய கோயில்கள் காசாவிலும், அஸ்தோத்திலும் இருந்தன.

பெலிஸ்தர் சிம்சோனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, காசாவுக்குக் கொண்டு போய், சிறைச்சாலையில் வைத்தார்கள். பின்பு தங்கள் தேவனாகிய தாகோனுக்குப் பலி செலுத்தக்கூடி வந்த

வேளையில், வேடிக்கை காட்டும்படி சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். அப்பொழுது சிம்சோன் அவர்கள் இருந்த வீட்டின் தூண்களை பலமாய் சாய்த்தபோது, அது விழுந்து, ஜனங்கள் எல்லாரும் கொல்லப்பட்டார்கள் *(நியா. 16:21-30).*

பெலிஸ்தருக்கும், இஸ்ரவேலருக்கும் இடையில் நடந்த யுத்தத்தில், பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியைப் பிடித்து அஸ்தோத்திற்குக் கொண்டு போய் தாகோன் அண்டையில் வைத்தார்கள். மறுநாள், தாகோன் கர்த்தருடைய பெட்டிக்குமுன் முகங்குப்புற விழுந்து கிடந்தது *(1 சாமு. 5:1-6).*

## தாண் (Dan)

### *(நியாயாதிபதி)*

இவன் யாக்கோபின் ஐந்தாம் மகன். ராகேலின் வேலைக்காரியாகிய பில்காள் இவனைப் பெற்றாள். இவன் பிறந்தபோது ராகேல் "தேவன் நியாயம் தீர்த்தார்'' என்று சொல்லி, தாண் என்று பேரிட்டாள் *(ஆதி. 30:5,6).*

யாக்கோபு தன் புத்திரரை ஆசீர்வதித்தபோது தாண் தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான் என்றும், அவன் வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும், பாதையில் இருக்கிற விரியனைப்போலவும் இருப்பான் என்றும் கூறினான் *(ஆதி. 49:16,17).* இது அவனுடைய தந்திரப் புத்தியை குறிக்கிறது.

## தாண் கோத்திரம்

பன்னிரு கோத்திரங்களிலும் சிறியதாய் இருந்தபோதிலும், யூதா, எப்பிராயீம் கோத்திரங்களுக்கு அருகே சுதந்தரம் பெற்றதினாலும், கடற்கரையில் குடியேறினதினாலும், மேன்மை பெற்றார்கள். வனாந்தரப் பிரயாணத்தில் இவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திற்கு வடபுறத்தில் பாளயமிறங்கினார்கள் *(எண். 2:25).* மோசே கோத்திரங்களை ஆசீர்வதிக்கையில், "தாண் ஒரு பாலசிங்கம். அவன் பாசானிலிருந்து பாய்வான்'' என்றான் *(உபா. 33:22).* இது அவர்களுடைய கொள்ளையாடும் தன்மையைக் குறிக்கிறது.

பின்பு, பெலிஸ்தர் இவர்களை நெருங்கியதால், தங்கள் சுதந்திரத்தை விட்டு வடக்குப் பக்கமாய்ப் போய் குடியேறினார்கள் *(நியா. 18:1).* தெபொராள் பாடின பாட்டில் இவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டார்கள் *(நியா. 5:17).* பிற்காலங்களில் அசீரியர் இந்தக் கோத்திரத்தையும் சிறைகொண்டுபோனார்கள் *(2 இரா. 15:29).*

## தாண் பட்டணம்

தாண் கோத்திரத்தார் பூர்வத்தில் "லாயீஸ்" என்னும் பெயர் கொண்ட பட்டணத்தைப் பிடித்து தாண் என்று பெயர் வைத்தார்கள் *(நியா. 18:29).*

இந்தப் பட்டணம் இஸ்ரவேல் தேசத்தின் வட எல்லையாக இருந்ததினால் "தாண் முதல் பெயெர்செபா தேசம் மட்டும்" *(நியா. 20:1)* என்ற பழமொழி வழங்கிற்று. யெரோபெயாம் அதைத் திரும்பப் பிடித்தான் *(2 இரா. 14:25).* எரேமியாவும் இந்தப் பட்டணத்தைப்பற்றி எரே. *4:15*லும், *8:16*லும் கூறியிருக்கிறான்.

## தாத்தான் (Dathan)

இவன், ரூபன் வம்சத்தவனான எலியாப் என்பவனின் குமாரன் *(எண். 26:9).*

இவனும், சகோதரனான அபிராமும், லேவியனான கோராகோடு சேர்ந்து, மோசே, ஆரோன் என்பவர்களுக்கெதிராகக் கலகம் பண்ணினார்கள் *(எண். 16:1-35, 26:9).* இதினிமித்தம் பூமி தன் வாயைத் திறந்து, அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தாரையும், பொருள் பண்டங்களையும் விழுங்கியது *(எண். 26:10; சங். 106:17).*

## தாமார் (Tamar)

***(பனைமரம்)***

1. யூதாவின் மூத்த மகனாகிய ஏர் என்பவனின் மனைவி. ஏர் மரித்தபோது, அவனுடைய சகோதரன் ஓனான் அவளை விவாகம் பண்ணினான். பின் அவனும் மரித்தான். இதன்பின் அவள் யூதாவுக்குப் பாரேஸ், சேரா என்னும் இரண்டு குமாரரைப் பெற்றாள். பாரேஸ் இயேசு பிறந்த குடும்பத்தாரின் முற்பிதா *(ஆதி. 28:6-30; 1 நாளா. 2:4; மத். 1:3).*

2. இவள் தாவீதின் குமாரத்தி. அப்சலோமின் சகோதரி. இவளை இவளுடைய சகோதர முறையான அம்மோன் கற்பழித்தபடியால், அப்சலோம் அவனைக் கொன்றான் *(2 சாமு. 13:1-33, 1 நாளா. 3:9).*

3. அப்சலோமின் குமாரத்தி *(2 சாமு. 14:27).*

4. இது பலஸ்தீனா தேசத்தின் தெற்குப் பக்கமாயிருந்த ஓர் இடம் *(எசே. 47:19).*

5. சாலொமோனின் பண்டகசாலை பட்டணம்.

## தாவீது (David)

*(பிரியமானவன்)*

தாவீது என்பவன் யூதா கோத்திரத்துப் பெத்லகேமியனான ஈசாயின் குமாரன். இவன் ஜீவியம் ஓர் ஆட்டு இடையனாகத் தொடங்கி, இஸ்ரவேலின் இராஜனாக முடிவடைந்தது. இவன் மேய்ப்பனாக இருந்த நாள்களில் சிங்கம், கரடி முதலிய துஷ்ட மிருகங்களோடு போராட நேரிட்டது *(1 சாமு. 17:34-36)*. இதினிமித்தம் வீரனும், தைரியசாலியுமானான். அதோடு வனாந்தர ஜீவியம் செய்ததினால் சுரமண்டலம் முதலிய கீத வாத்தியங்கள் வாசிக்கவும் பழகிக் கொண்டான். இப்படிப்பட்டவனைத் தேவன் இஸ்ரவேலின் இராஜாவாக்கச் சித்தங்கொண்டார்.

அக்காலத்தில் சவுல் இஸ்ரவேலின் இராஜாவாயிருந்தான். அவன் கர்த்தரின் வார்த்தையைப் புறக்கணித்ததினிமித்தம் சாமுவேல் கர்த்தரின் சொற்படி ஈசாயின் கடைசி மகனாகிய தாவீதை அபிஷேகம் பண்ணினான் *(1 சாமு. 16:13)*. அவன் திரும்பவும் ஆடு மேய்க்கப்போனான்.

அந்நாள்களில் சவுல் தேவனால் விடப்பட்ட ஓர் ஆவியினால் பிடிக்கப்படும் வேளையில் தாவீது சுரமண்டலம் வாசிக்க, சவுல் ஆறுதலடைந்து சொஸ்தமாவான் *(1 சாமு. 16:23)*. சவுல் அதினிமித்தம் தாவீதில் பிரியப்பட்டு, அவனைத் தன் ஆயுததாரியாக்கினான்.

பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்குமிடையில் யுத்தம் உண்டாயிற்று. பெலிஸ்தரில் ஒருவனாகிய கோலியாத் என்னும் இராட்சதன் தன்னோடு யாரும் யுத்தம் செய்து, தன்னைக் கொன்றால் தாங்கள் அவர்களுக்கு வேலைக்காரராயிருப்போமென்று நாள்தோறும் சபதம் கூறினான். சவுலும் இஸ்ரவேலரும் பயந்திருந்தார்கள் *(1 சாமு. 17:1-11)*.

தாவீது அங்கே போயிருந்த தருணத்தில் ஒரு கவணினாலும், ஒரு கல்லினாலும் அந்தப் பெலிஸ்தனைக் கொன்று அவனுடைய தலையை அவனுடைய பட்டயத்தினாலேயே வெட்டிப் போட்டான் *(1 சாமு. 17:12-54)*.

அப்பொழுது யோனத்தான் தாவீதைத் தன் உயிரைப் போல சிநேகித்தான் *(1 சாமு. 18:1)*.

பின்பு, பெலிஸ்தரில் நூறு பேரைக் கொன்று, அவர்களின் நுனித்தோலைக் கொண்டுவருகிறவனுக்குத் தன் மகளாகிய மீகாளை மனைவியாகக் கொடுப்பேனென்று சவுல் சொன்ன போது, தாவீது அப்படிச் செய்து மீகாளை விவாகம் செய்தான். மீகாளும் அவனை நேசித்தாள் *(1 சாமு. 18:22-28)*. தாவீது புத்திமானாய் நடந்து கொண்டதினால், அவன் பேர் அருமையாயிருந்தது.

இதினிமித்தம் சவுல் தாவீதைக் கொன்றுபோட யோசித்தான். ஒருநாள் சவுலைப் பொல்லாத ஆவி பிடித்த வேளையில், தாவீது சுரமண்டலம் வாசித்துக் கொண்டிருந்தபோது, சவுல் ஈட்டியால் அவனைக் குத்த எத்தனித்தான் *(1 சாமு. 19:1, 9,10).*

மறுமுறை தாவீதைப் பிடிக்கிறதற்கு சவுல் ஆள்களை அவன் வீட்டிற்கு அனுப்பின சமயத்தில் மீகாள் அவனைத் தப்ப வைத்தாள் *(1 சாமு. 19:11-16).*

இதன்பின் தாவீது சவுலுக்குத் தப்பி ஓடிக்கொண்டு திரிந்தான்.

ஒருமுறை தாவீது நோபிலிருந்த ஆசாரியனாகிய அகிமெலேக்கிடம் போய் அப்பம் கேட்டபோது, அவன் பரிசுத்த அப்பத்தைக் கொடுத்தான். தாவீதும், அவனோடிருந்தவர்களும் புசித்தார்கள் *(1 சாமு. 21:1-6; மத். 12:3,4).*

தாவீது காத்தின் இராஜாவாகிய ஆகீசிடம் போனான். அவனுடைய ஊழியக்காரர் இவனை இன்னானென்று அறிந்ததினிமித்தம் தனக்கு மோசம் வருமென்று எண்ணி, வேஷம் மாறி, பயித்தியக்காரன் போல நடந்து கொண்டதால் தப்பிக்கொண்டான் *(1 சாமு. 21:10-15).*

தாவீது அதுல்லாம் என்னும் கெபிக்குப் போகும் வேளையில், அவன் பெற்றோரும், வேறு அநேகரும் அவனிடம் போனார்கள் *(1 சாமு. 22:1-3).*

அவன் மாகோன் வனாந்தரத்திலிருக்கையில், சவுலும் அவனுடைய மனுஷரும் அவனைத் தேடிப் போய்ப் பிடிக்கத்தக்கதாயிருந்த சமயத்தில், ஓர் ஆள் வந்து, பெலிஸ்தர் படையெடுத்து வந்திருக்கிறார்களென்று சவுலுக்குச் சொல்லவே அவன் திரும்பிப் போனான் *(1 சாமு. 23:25-27).*

பின்பு தாவீது ஆகிலா மேட்டில் ஒளிந்துக் கொண்டிருக்கும் நாள்களில், சவுல் அவனைத் தேடி *3000* பேரோடு போனான். அங்கே சவுல் படுத்து நித்திரையாயிருந்த வேளையில், தாவீது அபிசாயுடன் அவனுக்கு அருகில்போய், அவன் தலை மாட்டிலிருந்த ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டு, அவனுக்கு ஒரு சேதமும் செய்யாமல் போனார்கள். தாவீது அப்புறம் போய் அப்னேரைக் கூப்பிட்டு நடந்த காரியத்தைச் சொன்னான் *(1 சாமு. 26:5-16).*

சவுல் தன்னைக் கொன்று போடுவானென்று தாவீது எண்ணிக் கொண்டு ஆகீசிடம் போய் தானிருக்கிறதற்கு ஓர் இடம் தர வேண்டுமென்று கேட்டபோது. அவன் சிக்லாகைக் கொடுத்தான். தாவீது தன் இரண்டு மனைவிகளோடும் அறுநூறு ஆள்களோடும் அங்கே போய் வாசமாயிருந்தான் *(1 சாமு. 27:5-7).*

சிக்லாகிலிருக்கையில் தாவீது தன் மனுஷரோடு ஆகீசுக்கு உதவியாகப் போனவேளையில், அமலேக்கியர் சிக்லாகைக் கொள்ளையடித்தார்கள். மூன்றாம் நாளில் தாவீது திரும்பி வந்து நடந்ததைக் கண்டு, அவனும் ஜனங்களும் மனங்கசந்து அழுதார்கள். பின்பு தாவீது தன்னைத் திடப்படுத்திக் கொண்டு, அமலேக்கியரைத் தொடர்ந்து போய், அவர்களை முறியடித்து, அநேகரைக் கொன்று போட்டு, கொள்ளை பொருள் எல்லாவற்றையும், தன் மனைவிகளையும் திருப்பிக் கொண்டான் *(1 சாமு. 30:1-20).*

அந்த நாள்களில் பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணினார்கள். இஸ்ரவேலர் முறிந்தோடி கில்போவா மலையில் வெட்டுண்டு விழுந்தார்கள். சவுலும் அவன் மூன்று குமாரரும் செத்துப்போனார்கள் *(1 சாமு. 31:1-6).* தாவீது சவுலின் பேரிலும், அவன் குமாரனாகிய யோனத்தானின் பேரிலும் புலம்பல் பாடினான் *(2 சாமு. 1:17).*

பின்பு தாவீது கர்த்தரிடம் விசாரித்துக் கொண்டு எப்ரோனுக்குப் போகவே யூதாவின் மனுஷர் வந்து, அவனை யூத வம்சத்தார் மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் *(2 சாமு. 2:1-4).*

சவுல் மரித்தபின் அப்னேர் இஸ்போசேத்தை இஸ்ரவேல் மேல் இராஜாவாக்கினபின், தானே காரியங்களை நடத்தி வந்தான்.

பின்பு அவன் தாவீதோடு உடன்படிக்கை செய்து, அவனை இஸ்ரவேலுக்கும் இராஜாவாகச் செய்தான். *(2 சாமு. 3:13-22).*

யோவாப் இதை அறிந்தபோது, அப்னேரைத் தந்திரமாய்க் கொன்றான். அதோடு இஸ்போசேத்தின் படைத் தலைவரான இருவர் அவனைப் படுக்கையின் மேல் குத்திக்கொன்றார்கள். அவர்கள் அவன் தலையை எடுத்துக் கொண்டு தாவீதினிடம் போன வேளையில், அவன் அவர்களைக் கொன்று, அவர்கள் கை கால்களை எப்ரோன் குளத்தண்டையில் தூக்கிப் போட்டான் *(2 சாமு. 4:1-12).*

அக்காலத்தில் இஸ்ரவேல் கோத்திரத்தாரெல்லாரும் எப்ரோனிலிருக்கிற தாவீதிடம் வந்து, உடன்படிக்கைபண்ணி, அவனை இஸ்ரவேலின் மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் *(2 சாமு. 5:1-3).*

தாவீது முப்பது வயதில் இராஜாவாகி, நாற்பது வருடம் அரசாண்டான். அதாவது எபிரோனில் யூதாவின் மேல் ஏழரை வருடம், எருசலேமில் சமஸ்த இஸ்ரவேலின் மேல் முப்பத்து மூன்று வருடம் *(2 சாமு. 5:4-5).*

பின்பு தாவீது முப்பதினாயிரம் பேரைத் தெரிந்துகொண்டு கிபியாவில் அபினதாபின் வீட்டிலிருந்த தேவனுடைய பெட்டியை ஒரு புது இரதத்தின் மேல் ஏற்றிக் கொண்டு வந்தான். தாவீதும், ஜனங்களும் கீத வாத்தியங்களோடு ஆடிப்பாடிக் கொண்டு போகும் போது, நாகோனின் களத்தில் பெட்டி அசைந்தபடியால் ஊசா என்பவன் அதைப் பிடித்தான். தேவன் அவனை அடித்தார். அவன் செத்தான் *(2 சாமு. 6:7).*

அப்பொழுது தாவீது பெட்டியை ஓபேத் ஏதோம் என்பவனின் வீட்டில் வைத்தான். மூன்று மாதங்களின் பின் தாவீது அந்தப் பெட்டியை தாவீதின் நகரத்துக்குச் சுமந்து கொண்டு போக ஒழுங்கு செய்தான். போகிறபொழுது ஜனங்கள் ஆடுமாடுகளைப் பலி செலுத்தினார்கள். தாவீதும் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு கர்த்தருடைய பெட்டிக்குமுன் நடனம் பண்ணினான்.

பெட்டியை அதற்குப்போட்ட கூடாரத்துக்குள் வைத்து, பலிகளைச் செலுத்தினார்கள். தாவீது ஜனங்களை ஆசீர்வதித்த பின் தன் வீட்டாரை ஆசீர்வதிக்கும்படி திரும்பினான் *(2 சாமு. 6:10-20).*

தாவீது சமாதானத்தோடு கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டிலே வாசமாயிருக்கையில், திரைகளின் நடுவே இருக்கிற தேவனுடைய பெட்டியைப் பற்றி யோசித்து, அதற்கு ஒரு தேவாலயம் கட்டும் நோக்கமாய் தீர்க்கதரிசியாகிய நாத்தானுக்குச் சொன்னான் *(2 சாமு. 7:1-3).*

அன்று இராத்திரி கர்த்தர் நாத்தானுக்குத் தரிசனமாகி, தாவீதுக்குச் சொல்ல வேண்டியதை வெளிப்படுத்தினார். "கர்த்தர் தாவீதுக்கு வீட்டை உண்டுபண்ணுவார். அவனல்ல, அவனுடைய மகனே தேவாலயத்தைக் கட்டுவான். தாவீதுடைய இராஜாசனம் என்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" என்றும் கர்த்தர் சொன்னாரென்று நாத்தான் சொன்னான் *(2 சாமு. 7:4-17).*

இதைக் கேட்டு தாவீது கர்த்தருடைய சமுகத்துக்குப்போய், தன்னைத் தாழ்த்தி நன்றி கூறினான் *(2 சாமு. 7:18-29).*

தாவீது அவனைச்சுற்றி இருந்த ஜாதிகளைக் கீழ்ப்படுத்தி தாணயங்களை வைத்து, எல்லாரும் தன்னைச் சேவிக்கும்படிச் செய்தான். அவன் போன எல்லா இடத்திலும் கர்த்தர் அவனைக் காப்பாற்றினார் *(2 சாமு. 8:14).*

தாவீது அம்மோனியருக்கு விரோதமாய் யுத்தம் செய்யும்படி யோவாபையும், ஜனங்களையும் அனுப்பிவிட்டு, எருசலேமில் இருந்துவிட்டான். பத்சேபாள் என்னும் உரியாவின் மனைவியில்

ஆசை வைத்து, அவளோடு விபசாரம் செய்தான்; உரியாவையும் கொன்றான் *(2 சாமு. 11:26,27)*. பின்பு அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

ஒரு வருடமானபின், கர்த்தர் நாத்தானை தாவீதினிடம் அனுப்பினார். அவன் ஒரு உவமையைச் சொல்லி, தாவீதைக் குற்றப்படுத்தினபோது அவன் தன் பாவத்தை அறிக்கையிட்டான். தாவீது எழுதின 32ஆம், 51ஆம் சங்கீதங்கள் அவனுடைய மனஸ்தாபத்தையும், அவன் பெற்றுக்கொண்ட மன்னிப்பையும் காட்டுகின்றன. ஆகிலும் பட்டயம் உன் வீட்டை விட்டு விலகா தென்று நாத்தான் சொன்னது நடந்து தீர்ந்தது *(2 சாமு. 12:1-14)*.

இதற்குப் பின்பு அப்சலோமின் சகோதரியாகிய தாமாரின் மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்கொண்டு, அவளைக் கற்பழித்தான் *(2 சாமு. 13:1-14)*. இதினிமித்தம் இரண்டு வருடம் சென்றபின் அப்சலோம் அம்னோனைக் கொன்றுபோட்டு கேசூரின் இராஜாவிடம் ஓடிப்போனான் *(2 சாமு. 13:37)*. சில காலத்தின் பின் யோவாபின் தந்திர யோசனையின் பயனாகத் தாவீது அப்சலோமை வரவழைத்தான். அவன் வந்து இரண்டு வருடம் தகப்பனுடைய முகத்தைப் பாராமல் எருசலேமில் இருந்தான் *(2 சாமு. 14:28)*.

பின்பு யோவாபின் வேண்டுதலின்படி தாவீது அப்சலோமை அழைப்பித்து அவனை ஏற்றுக் கொண்டால், அப்சலோம் தனக்கு இரதங்களையும், குதிரைகளையும், சேவகரையும் சம்பாதித்து, ஜனங்களோடு பட்சமாய்ப் பேசி, அவர்கள் இருதயங்களைக் கவர்ந்து கொண்டான்.

அப்படியிருந்தும் நாலு வருடம் சென்றபின் தாவீதினிடம் உத்தரவு கேட்டுக் கொண்டு அப்சலோம் எப்ரோனுக்குப் போனான். அகித்தோப்பேலும் அவனிடம் போய்ச் சேர்ந்தான். ஜனங்கள் அப்சலோமை இராஜாவாக்க ஆயத்தம்பண்ணுகிறதைத் தாவீது கேள்விப்பட்டு, அவன் வந்து எருசலேமைச் சங்காரம் பண்ணுவானென்று எண்ணி, இராஜாவும், அவன் வீட்டாரும், அவனைச் சேர்ந்தவர்களும் புறப்பட்டு, கால்நடையாய்ப் போனார்கள் *(2 சாமு. 15:1-18)*.

தாவீது பகூரிம் மட்டும் போகையில் சீமேயி என்பவன் வந்து இராஜாவைத் தூஷித்து, ''இரத்தப் பிரியனே, பேலியாளின் மனுஷனே, தொலைந்து போ,'' என்றான் *(2 சாமு. 16:5-7)*. தாவீது அதைப் பொறுத்துக்கொண்டான் *(2 சாமு. 16:10-12)*.

இராஜா யோர்தானைக் கடந்து போய், மகனாயீமில் சேர்ந்தான். பிற்பாடு எப்பிராயீம் காட்டிலே இஸ்ரவேல் ஜனங்களுக்கும்,

தாவீதின் சேவகருக்குமிடையில் யுத்தம் நடந்தபோது, இஸ்ரவேலர் முறியடிக்கப்பட்டார்கள். அப்சலோமும் கொல்லப்பட்டான் *(2 சாமு. 18:6-15)*.

தாவீது அப்சலோமுக்காக அழுது புலம்பினான் *(2 சாமு. 19:1)*. பின்பு இராஜா எருசலேமுக்குத் திரும்பி வந்தான் *(2 சாமு. 20:3)*.

தாவீது, சவுல் யோனத்தான் என்பவர்களின் எலும்புகளைக் கீசின் கல்லறையில் அடக்கம் பண்ணுவித்தான் *(2 சாமு. 21:14)*.

தாவீதுக்கு இருந்த பராக்கிரமசாலிகளின் நாமங்கள் *2 சாமு. 23:8-39*இல் குறித்துள்ளன.

தாவீது லேவியரெல்லாரையும் கணக்கிட்டு, இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் செய்ய வேண்டிய கடமைகளையும் நியமித்தான் *(1 நாளா. 23:2-32)*

இஸ்ரவேலரைத் தொகையிடுகிறதற்குச் சாத்தான் தாவீதை ஏவிவிட்டான். அவன் தொகையிட்டது தேவனுடைய பார்வைக்கு ஆகாததாயிருந்தபடியால், அவர் ஜனங்களை வாதித்தார். தாவீது காத் என்னும் தீர்க்கதரிசி சொன்னபடி ஓர்னானுடைய களத்தில் பலி செலுத்தினபோது வாதை நின்றது. அப்பொழுது தாவீது "கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே" என்றான் *(1 நாளா. 21:1-30; 22:1; 2 சாமு. அதி. 24)*.

மேலும் கர்த்தருக்கு ஓர் ஆலயம் கட்டும்படி சாலொமோனுக்கு கட்டளை கொடுத்தான். அதை கட்டுகிறதற்காகத் தாவீது பொன், வெள்ளி முதலியவைகளைச் சேர்த்து வைத்தான் *(1 நாளா. 22:6,14)*.

தாவீது மரணமடையும் காலம் சமீபித்தபோது, தன் குமாரனாகிய சாலொமோனை இஸ்ரவேலின்மேல் இராஜாவாக்கினான் *(1 நாளா. 23:1)*. அவன் செய்ய வேண்டிய பல காரியங்களையும் அவனுக்கு விவரமாய்ச் சொன்னான்.

பின்பு தாவீது நித்திரை அடைந்து தாவீதின் நகரத்தில் அடக்கம் பண்ணப்பட்டான்.

அவன் இஸ்ரவேலை நாற்பது வருடம் அரசாண்டான். சாலொமோன், தகப்பனுடைய சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்தான் *(1 இரா. 2:1-12; 1 நாளா. 29:23)*.

கர்த்தர் தாவீதை எல்லாச் சத்துருக்களின் கைக்கும் நீங்கலாக்கி விடுவித்தபோது அவன் பாடின பாட்டு 2 சாமு. 22-ஆம் அதிகாரத்தில் குறித்துள்ளது.

தாவீதுடைய கடைசி வார்த்தைகள் 2 சாமு. 23:1-7இல் காணப் படுகிறது.

தாவீது தீர்க்காயுசும், ஐசுவரியமும், மகிமையுமுள்ளவனாய் நல்ல முதிர் வயதிலே மரணமடைந்தான் (1 நாளா. 29:28).

தாவீதின் சரித்திரம் நாலுபங்குகளாகப் பிரிக்கப்படலாம். தாவீது இராஜாவுடைய நடபடிகள், கால சம்பவங்கள் சாமுவேல், காத், நாத்தான் என்பவர்களின் பிரபந்தங்களில் எழுதியுள்ளன (1 நாளா. 29:30).

1. பெத்லகேமில் வாலிப காலம்.

2. சவுலுக்கும் அவனுக்குமிடையிலுள்ள சம்பவங்கள்.

3. யூதாவின் மேல் இராஜாவாயிருந்த காலம்.

4. இஸ்ரவேல் முழுமைக்கும் இராஜா.

அவனுடைய ஆளுகை சுமார் கி.மு. 1000 வருடத்தில் துவங்கிற்று.

பெலிஸ்தியரால் நொறுக்கி ஒடுக்கப்பட்ட ஜாதியாகிய இஸ்ரவேலை, பலஸ்தீனா தேசம் முழுவதிலுமுள்ள இராஜ்யங்க ளெல்லாவற்றிலும் மேலான நிலைக்குக் கொண்டு வந்தான்.

இஸ்ரவேல் கோத்திரங்களையும், நாடுகளையும் ஒரே இராஜ்யமாக்கி, எருசலேமைத் தலைநகராக்கி, அதை முக்கிய தேவஸ்தானமாக்கினது தாவீதுடைய விசேஷ கிரியைகள்.

சங்கீதங்களில் சுமார் 73 அவனால் எழுதப்பட்டன. "இஸ்ரவேலின் இனிய சங்கீதக்காரன்" எனப் பெயர் பெற்றான்.

இயேசுவும் இவனுடைய சந்ததியில் பிறந்து "தாவீதின் குமாரன்" எனப்பட்டார்.

தாவீது "கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற மனுஷன்" என்பதே (1 சாமு. 13:14; அப். 13:22). அவனைப்பற்றிய ஞாபகக் குறியாகும்.

## தானியேல்

### (கர்த்தர் என் நியாயாதிபதி)

யோயாக்கீம் யூதாவின் இராஜாவாயிருந்த நாள்களில், நேபுகாத் நேச்சார் எருசலேமைப் பிடித்த சமயத்தில், இராஜகுலத்தாராகிய தானியேலையும், வேறு மூன்று வாலிபரையும் பாபிலோனுக்குக் கொண்டு போனான் (கி.மு. 605). அப்பொழுது தானியேலுக்கு வயது பதினெட்டு. அவன் பெயர் பெல்தெஷாத்சார் என மாற்றப்பட்டது.

தானியேலும், அவன் தோழராகிய அனனியா, மீஷாவேல், அசரியா என்பவர்களும், கல்தேய கல்வியில் பயிற்றப்பட்டு, இராஜ அரண்மனையில் சேவை செய்யத் தகுதியுள்ளவர்களானார்கள்.

விக்கிரகாராதனைக்கேற்ற இராஜாவின் போஜனமும், திராட்சரசமும் அவர்களுக்கு நியமிக்கப்பட்டபடியால் அவைகளால் தங்களைத் தீட்டுப்படுத்தாமல் தங்களுக்கு பருப்பு முதலிய மரக்கறிகளும், தண்ணீரும் கொடுக்கும்படி, வேண்டிக் கொண்டபடி செய்யப்பட்டது (தானி. 1:8-16).

தேவன் தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார் (தானி. 1:17).

பின்பு பெல்ஷாத்சார் இராஜாவானபோது ஒரு பெரிய விருந்து செய்து எருசலேம் தேவாலயத்தின் பொற்பாத்திரங்களில் திராட்சரசம் குடித்தபோது, மனுஷ கை விரல்கள் தோன்றி, சுவரில் எழுதக்கண்டான். தானியேல் அதன் அர்த்தத்தை அவனுக்குச் சொல்லிக் காட்டினான் (தானி. 5:17-28). அன்று இராத்திரி பெல்ஷாத்சார் கொல்லப்பட்டான் (தானி. 5:30). மேதியனாகிய தரியு இராஜாவானபோது தானியேலைப் பிரதானிகளுக்கும், தேசாதிபதிகளுக்கும் மேற்பட்டவனாக்கினான் (தானி. 6:2).

கர்த்தர் தாமே நோவா, யோபு என்பவர்களோடு தானியேலையும் சேர்த்து நீதியுள்ளவர்களெனக் குறிப்பிடுகின்றார் (எசே. 14:14,20).

தானியேல் பாபிலோனில் 72 வருடம் இருந்தான். சிறையிருப்பின் முதலாம் வருடம் தொடங்கி சிறையிருப்பு முடிந்த பின்னும் இரண்டு வருடம் உயிரோடிருந்தான். இராஜாக்களின் அரண்மனையில் தேவனுடைய சாட்சியாயிருந்து, கடைசியில் "நீ இளைப்பாறிக் கொண்டிருந்து, நாள்களின் முடிவிலே உன் சுதந்தர வீதத்துக்கு எழுந்திருப்பாய்" என்ற வாக்கையும் பெற்றான்.

தானியேலைப்போல் இருக்கத் திடன்கொள்.

வேதாகமத்தில் தானியேல் பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவனாக எண்ணப்படுகிறான்.

2. தாவீதுக்கு அபிகாயேலிடம் பிறந்த இரண்டாம் குமாரன் (1 நாளா. 3:1).

3. எஸ்றாவோடு திரும்பி வந்த ஆசாரியரில் ஒருவன் (எஸ்றா. 8:2). முத்திரைப் போட்டவர்களில் இவனும் ஒருவனாயிருக்கலாம் (நெகே. 10:6).

## திபேரியா (Tiberias)

கலிலேயாக் கடலின் மேற்பக்கத்திலுள்ள ஒரு பட்டணம். ஏரோது அந்திப்பாஸ் இதை கி.பி. 16-22இல் கட்டி, அக்காலத்து இராயனாகிய திபேரியா என்ற பேர் கொடுத்து, தேசத்தின் தலைநகராக்கினான்.

இது ஒரு கல்லறைத் தோட்டத்திற்கு அடுத்திருந்தபடியால் யூதர் இதற்கு விலகியிருந்தார்கள். திபேரியா என்ற பெயர் யோவான் 6:23இல் மாத்திரம் காணப்படுகிறது.

ஆனால் எருசலேம் கி.பி. 70இல் அழிக்கப்பட்டபின், இதுவே கல்வித் தேர்ச்சிக்கு மத்திய ஸ்தாபனமாயிற்று. யூதருடைய மார்க்கத்திற்குரிய மிஷ்னா, தல்முட் என்னும் புத்தகங்கள் அங்கே எழுதப்பட்டன.

இப்பட்டணம் தற்காலத்திலும் இருக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

வெந்நீர் ஊற்றுகளும் ரபீமாருடைய பாடசாலைகளும் அங்கே இருந்தன.

## திபேரியாக்கடல் (Sea of Tiberias)

இது கலிலேயாக் கடலின் ஒரு பகுதி. அங்கிருந்து திபேரியாப் பட்டணத்தினிமித்தம் இப்பெயர் வழங்கிற்று. இயேசு இந்தக் கடலருகேயும் ஊழியஞ் செய்தார். உயிர்த்தெழுந்த பின்பும் இவ்விடத்தில் சீஷருக்குத் தரிசனமானார் (யோவான். 6:1; 21:1).

## திபேரியு ராயன் (Tiberians Caesar)

இவன் அகுஸ்து இராயனின் சுவீகாரப் புத்திரனும், மருமகனும் ஆவான். அவன் மரித்த பின், இவன் இராயனாகி 23 வருடங்கள் ஆளுகை செய்தான் (கி.பி. 14-37). இவனுடைய 15-ஆம் வருடத்தில் யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தைத் தொடங்கினான் (லூக்கா. 3:1,2).

மாற்கு 12:14லும், யோவான் 19:12-15லும், "இராயன்" என்பது இவனையே குறிக்கிறது.

பின்பு இவன் இராயனாய் இராமல் விலக்கப்பட்டதாகத் தெரிகிறது.

## திர்ஷாதா (Tirshatha)

இது பெர்சிய இராஜாங்கத்துக்கடுத்த ஒரு பட்டப்பெயர். "மாட்சிமையுள்ளவன்" (His Excellency) என்ற கருத்துள்ளது. செருபாபேலும், நெகேமியாவும் யூதேயாவில் தேசாதிபதிகளா

யிருக்கையில், இந்தப் பெயர் அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது (எஸ்றா. 2:63; நெகே. 8:9).

## தீகிக்கு (Tichichus)

ஆசியா நாட்டானாகிய இவன் பவுலுக்குத் துணையாயிருந்து, அவனோடு கிரேக்க தேசத்திலிருந்து ஆசியாவுக்குப் போனான் (அப். 20:4).

கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தைப் பவுல் இவனிடம் கொடுத்தனுப்பினான் (கொலோ. 4:7).

பவுல் இவனைக் கிரேத்தா தீவுக்குத் தீத்துவிடம் அனுப்ப யோசித்தும் (தீத்து 3:12). பின்பு எபேசியருக்கு எழுதிய நிருபத்தை இவன் கையில் கொடுத்தனுப்பினான் (எபே. 6:21; 2 தீமோ. 4:12). பவுல் "இவன் உண்மையான ஊழியக்காரன்" என்று சொல்லுகிறான் (எபே. 6:21; கொலோ. 4:7).

## தீரு (Tyre)

***(கன்மலை)***

கர்மேல் மலையிலிருந்து வடக்கே 35 மைல் தூரத்திலுள்ள பெனிக்கேயரின் ஒரு பூர்வீகத் துறைமுகம். கரையில் இருந்து 1/2 மைல் தூரத்திலிருந்த ஒரு தீவில் கட்டப்பட்டிருந்த ஒரு கோட்டை இங்கு இருந்தது. இஸ்ரவேலர் கானான் தேசத்தைக் கைப்பற்றினபின் இந்தப் பகுதி ஆசேர் கோத்திரத்துக்கு கொடுக்கப்பட்டும் அவர்கள் அதை ஆட்சிகொள்ளவில்லை (யோசுவா. 19:29).

தீருவின் இராஜாவாகிய ஈராம், தாவீது, சாலொமோன் என்னும் இராஜாக்களின் கட்டுமானங்களுக்குக் கேதுரு மரங்களையும், வேலைக்காரரையும் கொடுத்தான் (1 இரா. 5:1-16; 1 நாளா. 14:1).

நினிவேயின் வீழ்ச்சியின் முன் இரண்டு நூற்றாண்டுகளாக அசீரியா இராஜாக்களாகிய சல்மனேசர், சனகெரிப், அசூர்பனிபல் என்பவர்களால் தீரு தாக்கப்பட்டது. கி.மு. 606க்கு பின், தீரு இருந்த மேன்மையான நிலையைப் பற்றி, எசேக்கியேல் கூறுகிறான் (எசே. 26-28). அதோடு அங்கிருந்த அக்கிரமத்தின் மிகுதியால் அது அழிக்கப்படுமென்று எசேக்கியேல் முன்னறிவித்தது, நேபுகாத்நேச்சார் பதின்மூன்று வருடமாய் முற்றுகை போட்ட பின் அதைக் கைப்பற்றினதில் நிறைவேறிற்று (கி.மு. 573).

கி.மு. 332இல் மகா அலெக்சாந்தர் அதைக் கீழ்ப்படுத்தி, அங்கிருந்த ஜனங்களைக் கொடுமையாய் நடத்தி, 40,000 பேரைக் கொலை செய்தான்.

கி.மு. 65இல் ரோமர் அதற்கு சுயாதீனம் கொடுத்ததினிமித்தம் தேசம் செழிப்புற்றது. கி.மு. 5ஆம் நூற்றாண்டில், அங்கிருந்த வியாபாரிகள் மீன், சரக்கு முதலியவற்றை எருசலேமுக்குக் கொண்டுபோனதாக நெகே. 13:16இல் குறித்துள்ளது.

இயேசு கலிலேயாவில் செய்த அற்புதங்களைக் கேள்விப்பட்டு, தீரு பட்டணத்து ஜனங்கள் அவரிடத்தில் வந்தார்கள் (மாற்கு. 3:8). பின்பு இயேசுவும் அங்கே போயிருந்து அற்புதங்கள் செய்தார் (மாற்கு. 7:24).

பவுலும் எருசலேமுக்குப் போகும்போது, தீரு துறைமுகத்திலிறங்கி, ஏழு நாள்கள் அங்கிருந்த சீஷருடன் தங்கினான் (அப். 21:3).

## தீனாள் (Dinah)

*(நியாயத்தீர்ப்பு)*

இவள் லேயாள் யாக்கோபுக்குப் பெற்ற குமாரத்தி (ஆதி. 30:21; 46:15). யாக்கோபு சீகேமிலே தங்கியிருந்த நாள்களில் தீனாள் அத்தேசத்துப் பெண்களைப் பார்க்கப்போன வேளையில், அந்த இடத்துப் பிரபுவாகிய சீகேம் அவளைத் தீட்டுப்படுத்தினான். இதினிமித்தம் யாக்கோபின் குமாரர் சீகேமின் தகப்பனாகிய எமோர் என்பவர்களுடன் வஞ்சகமாகப் பேசி, அந்த ஊர் ஆண் மக்களெல்லாம் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால் எல்லாரும் சமாதானமாக வாசம்பண்ணலாம் என்றார்கள். அப்படியே அவர்கள் செய்து, நோவெடுத்திருக்கையில், சிமியோனும், லேவியும் அவர்களைக் கொன்று போட்டார்கள் (ஆதி. 34:25, 26). இதினிமித்தம் யாக்கோபு அவர்களைக் கடிந்து கொண்டான் (ஆதி. 34 அதி). தன் கடைசி வார்த்தைகளிலும் இவர்களுடைய கோபக் குணத்தைக் கண்டித்துப் பேசினான் (ஆதி. 49:5-7).

## துரோவா (Troas)

சின்ன ஆசியாவிலுள்ள ஒரு துறைமுகப் பட்டணம். பல நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த துரோய் (Troy) என்ற பட்டணத்திலிருந்து இப்பெயர் வந்தது.

பவுலும், சீலாவும் பிரயாணப்பட்டு, துரோவாவுக்கு வந்த போது, மக்கெதோனியா தேசத்தானொருவன், மக்கெதோனியாவுக்கு வந்து தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்டதாகப் பவுல் தரிசனம் கண்டான் (அப். 16:8-10; 2 கொரி. 2:12,13).

பின்பு பவுல் எருசலேமுக்குப் போகிற வழியில் துரோவாவில் ஏழு நாள் தங்கினான். அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்த

வேளையில், பவுல் நடுராத்திரி வரை பிரசங்கிக்கையில் ஐத்திகு என்னும் ஒரு வாலிபன், மேல் வீட்டிலிருந்து விழுந்து மரித்த போது, பவுல் ஜெபித்து, அவனுக்குத் திரும்ப உயிர்வரச் செய்தான் *(அப். 20:6-12).*

இவ்விடத்திலிருந்த கார்ப்பு என்பவனிடம் பவுல் ஒருமுறை தனக்குரிய பொருள்களை வைத்திருந்தான் *(2 தீமோ. 4:13).*

## தெக்கப்போலி (Decapolis)

**(பத்துப் பட்டணங்கள்)**

இந்தப் பெயர் கலிலேயாக் கடலின் தெற்கேயுள்ள தேசத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பத்துப் பட்டணங்களில் ஜனங்கள் ஒன்றுகூடி, தங்கள் பாதுகாப்புக்காகவும், வேறு நன்மைகளுக்காகவும் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பத்துப் பட்டணங்களாவன : தமஸ்கு, பிலதெல்பியா, கெதரா, சைதோபொலிஸ், பெல்லா, கெரர்சா, இப்போஸ், தியோன், கணத்தா, ரப்பானா. இத்தேசத்து ஜனங்களும் வந்து இயேசுவுக்குப் பின் சென்றார்கள் *(மத். 4:25).*

இயேசு சீதோனிலிருந்துத் திரும்பவும் அங்கே போனார் *(மாற்கு. 7:31).* அந்தக் காலத்தில் இது ஒரு பெயர் பெற்ற தேசமாயிருந்தது.

லேகியோனாகிய பிசாசுகள் பிடித்தவன் இயேசுவினால் சொஸ்தமாக்கப்பட்டபின் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம் பண்ணினான் *(மாற்கு. 5:20).*

## தெக்கோவா (Tekoah)

**(நிலையான)**

*1.* யூதேயாவிலிருந்த ஒரு பட்டணம். பெத்லகேமுக்குத் தெற்கே ஆறு மைல் தூரத்திலுள்ளது. ஆமோஸ் தீர்க்கதரிசன ஊழியத்துக்குப் போகும் முன் இவ்வூரில் இருந்தான் *(ஆமோஸ் 1:1).* அப்சலோமைத் தாவீதோடு ஒப்புரவாக்கும்படி யோவாப் இவ்வூரிலிருந்த புத்தியுள்ள ஒரு ஸ்திரீயை அழைப்பித்தான் *(2 சாமு. 14:2).* ரெகொபெயாம் தேசம் இரண்டாகப் பிரிந்தபின், இங்கே அரணிப்பான பட்டணத்தைக் கட்டினான் *(2 நாளா. 11:6).* சத்துரு வருகிறானென்று தெக்கோவாவில் எக்காளம் ஊதுங்கள் என்று எரேமியா சொன்னான் *(எரே. 6:1).*

நெகேமியாவின் நாள்களில் தெக்கோவா ஊரார் அலங்கத்தைப் பழுது பார்த்துக் கட்டினார்கள் *(நெகே. 3:5-27).*

*2.* யூதாவின் பேரனாகிய எஸ்ரோனின் சந்ததியானான தெக்கோவா *(1 நாளா. 2:24; 4:5).*

## தெபொராள் (Deborah)

***(தேனீ)***

*1.* ரெபெக்காளின் தாதி. இவள் மரித்தபோது பெத்தேலுக்கு அருகே அடக்கம்பண்ணப்பட்டாள் *(ஆதி. 35:8).*

*2.* இஸ்ரவேலின் நான்காம் நியாயாதிபதி. லபிதோத்தின் மனைவி. எப்பிராயீம் மலைத் தேசமாகிய ராமாவுக்கும் பெத்தேலுக்கு மிடையிலிருந்த பேரீச்சமரத்தின் கீழ் குடியிருந்து, நியாய விசாரணை செய்தாள் *(நியா. 4:5 - கி.மு. 1125).* அக்காலத்தில் கானானியரின் இராஜாவாகிய யாபீன் இஸ்ரவேலைக் கொடுமையாக ஒடுக்கினான் *(நியா. 4:14).* தெபொராள் அபினோகாமின் குமாரனாகிய பாராக்கை வரவழைத்து, யாபீனின் சேனாதிபதியாகிய சிசெராவுக்கு விரோதமாக யுத்தம் செய்யும்படி சொன்னாள். பின்பு அவளும் கூடப்போய், நடந்த யுத்தத்தில் கர்த்தர் ஜெயம் கொடுத்தார். சிசெரா தப்பி ஓடி, யாகேலின் கூடாரத்துக்குள் போனபோது கொல்லப்பட்டான் *(நியா. 4:17-21).*

தெபொராள் ஒரு தீர்க்கதரிசியானவள். "இஸ்ரவேலின் தாய்" என்றும் பேர்பெற்றாள் *(நியா. 5:7).* இந்த யுத்தத்தைப் பற்றி அவளும் பாராக்கும் பாடின பாட்டு, எபிரெயக் கவிகளில் விசேஷமானது. இதில் கீசோன் நதியருகே யுத்தம் நடந்து கொண்டிருக்கையில் சடுதியாக மழை பெய்து, வெள்ளப்பெருக்கு உண்டாகி கானானியரின் இரதங்களை அடித்துக் கொண்டுபோயிற்று. ஆகவே தெபொராள், இஸ்ரவேலுக்காக நீதியைச் சரிக்கட்டின கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள் என்று பாடினாள் *(நியா. 5:1-22).*

## தெமேத்திரியு (Demeterius)

*1.* எபேசுவிலிருந்த ஒரு தட்டான். இவன் தியானாளின் கோயிலைப்போல வெள்ளியினால் கோயில்கள் செய்து, வியாபாரம் செய்தான். பவுலுடைய பிரசங்கத்தைக் கேட்டு, ஜனங்கள் குணப்பட்டதினிமித்தம், இந்த வியாபாரம் நஷ்டப்பட்டதினால் இவன் கலகம் உண்டாக்கினான் *(அப். 19:24-41).*

*2.* பரிசுத்த யோவானால் புகழப்பட்ட ஒரு கிறிஸ்தவன் *(3 யோவான். 12).*

## தெலிலாள் Delilah)

***(காமமுள்ள)***

சோரேக் ஆற்றங்கரையிலிருந்த ஒரு பெலிஸ்திய ஸ்திரீ. சிம்சோன் இவளோடு சிநேகிதமானான். அவனுடைய மகாபெலம் எதனால்

உண்டானதென்ற இரகசியத்தை அவள் அவனிடம் கேட்டறிந்து பெலிஸ்தியருக்குச் சொன்னபோது, அவர்கள் அவனைப் பிடித்து, கண்களைப் பிடுங்கி, சிறைச்சாலையில் வைத்தார்கள் *(நியா. 16:4-21)*.

## தேகுவேல் (Deuel)

காத் கோத்திரத்தான். இஸ்ரவேலின் பிரபுவாகிய எலிசாபின் பிதா *(எண். 1:14; 7:42)*. இவன் ரெகுவேல் என்றும் அழைக்கப்பட்டான்.

## தேமா (Demas)

பவுல் முதல்முறை காவலில் இருந்த நாள்களில் தேமா அவனுக்கு உதவியாயிருந்தான் *(கொலோ. 4:14; பிலே. 24)*. ஆனால் பின்பு இவன் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து பவுலை விட்டுப் போய்விட்டான் *(2 தீமோ. 4:10)*.

## தேமா (Tema)

1. இஸ்மவேலுடைய குமாரரில் ஒருவன் *(ஆதி. 25:15; 1 நாளா. 1:30)*.

2. அராபிய தேசத்திலுள்ள ஒரு பட்டணம் *(யோபு. 6:19)*. இது தேதான், பூசு என்ற கடையாந்தர இடங்களோடு சேர்த்து சொல்லப்பட்டுள்ளது *(எரே. 25:23)*.

## தேயோப்பிலு (Theophilus)

**(தேவனுக்கு அருமையானவன்)**

லூக்கா தன் சுவிசேஷத்தையும், அப்போஸ்தலருடைய நடபடிகளையும் இவனுக்கு நியமித்து எழுதினான். "மகா கனம் பொருந்திய" என்று சொல்லியிருப்பதால் *(லூக்கா. 1:11; அப். 1:1)*. இவன் அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தனாயிருக்க வேண்டும். இவன் அக்காலத்திலேயே கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றிக் கொண்டு, இன்னும் அதைப் பற்றிய உண்மைகளை அறிய விருப்பமுள்ளவனாயிருந்தது ஒரு விசேஷித்த காரியம்.

## தேராகு (Terah)

ஆபிராம், நாகோர், ஆரான் என்பவர்களின் தகப்பன். தேராகு கல்தேயப் பட்டணமாகிய ஊர் என்ற இடத்தில் வாசமாயிருந்தான். பின்பு தன் குமாரனாகிய ஆபிராமையும், அவன் மனைவி சாராயையும், தன் பேரனாகிய லோத்தையும் கூட்டிக்கொண்டு ஆரானுக்குப் போயிருந்து, அங்கே 60 வருடங்களுக்குப் பின் 205வது வயதில் மரித்தான் *(ஆதி. 11:24-32)*. தேராகு வேறே தேவர்களைச் சேவித்தான் *(யோசுவா. 24:2)*.

## தேராபீம் (Teraphim)

இந்தப் பதம் தமிழ் வேதாகமத்தில் ஓசியா *3:4*இல் மாத்திரம் காணப்படுகிறது. ஆங்கிலத்தில் நியா. *17:5; 18:14*-லும் காணப்படுகிறது. மற்ற இடங்களிலெல்லாம் ''சொரூபங்கள்'' என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது.

இவைகள், அஞ்ஞானிகளின் வீடுகளில் வைத்திருந்த மனுஷரூபமுள்ள தெய்வங்கள். பாதுகாவலரென்றும், அதிர்ஷ்டம் கொடுப்பவர்களென்றும் எண்ணப்பட்டன. இவைகளில் சில ஒட்டகச் சேணத்தின் கீழ் ஒளித்து வைக்கத்தக்க சிறியதாக இருந்தன *(ஆதி. 31:34)*. வேறு சில மனுஷ அளவாயிருந்தன *(1 சாமு. 19:13)*.

மேலும் இப்படிப்பட்ட சுரூபம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவனிடமிருந்தால் பெற்றோருடைய சொத்து அவனுக்குக் கிடைக்க வேண்டுமென்ற ஒழுங்கு ஆதிகாலத்தில் இருந்தது. லாபான் தன் சுரூபத்தை யாக்கோபினிடமிருந்து எடுத்துக் கொள்ளக் கூடாமற்போனபோது, அவனோடு பொருத்தனை பண்ணியதற்குக் காரணம் இதுவே *(ஆதி. 31:19)*.

இந்தச் சுரூபங்கள், அஞ்ஞான வணக்கத்துக்குரியன *(நியா. 17:5; ஓசியா. 3:4)*. இதினிமித்தம் ஓசியா இராஜா, மார்க்க சீர்த்திருத்தம் செய்தபோது இவைகளை நிர்மூலமாக்கினான் *(2 இரா. 23:24)*.

சிறையிருப்பின் பின் இவைகள் மறுபடியும் வணங்கப்பட்டன *(சக. 10:2)*

## தேவன், கடவுள் (God)

எபிரெயர் தொடக்கத்தில் “வல்லமையுள்ளவர்” என்ற கருத்துள்ள “ஏல்” (El) என்ற பதத்தைத் தங்கள் தேவனுக்கு உபயோகித்தார்கள்.

பின்பு மோசேக்குக் கிடைத்த வெளிப்படுத்தலில் ''நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்'' என்று கூறியது, எபிரெய பாஷையில் ''யாவே'' (Yahweh)) எனப்பட்டது. அதிலிருந்து யேகோவா என்ற சொல் வந்தது. “இருக்கிறேன்” என்பதின் கருத்து நித்தியர், மாறாதவர், உண்மையுள்ளவர்.

அதோனை (Adoni) என்பதும் எபிரெயர் உபயோகித்த ஒரு பதம். அது ஆங்கிலத்தில் லார்ட் (Lord) என்றும், தமிழில் “கர்த்தர்” என்றும் மொழி பெயர்த்துள்ளது.

கர்த்தர் என்பது ''செய்கிறவர்'' என்னும் கருத்துள்ளது. அதிலிருந்து ஆளுகிறவர், ஆண்டவர் என்கிற சொற்கள் வந்தது.

புதிய ஏற்பாட்டில் கிரேக்க பதம் "தியோஸ்" (Theos) லத்தீனில் 'தேயுஸ்' சமஸ்கிருதத்தில் 'தேவ்' என்ப்பட்டது. தேவன் என்பது இதிலிருந்து வந்திருக்கலாம்.

தமிழ் வேதாகமத்தின் முதல் மொழி பெயர்ப்பில் "தேவன்" என்றும், திருத்திய மொழிபெயர்ப்பில் "கடவுள்" என்றும் சொல்லியுள்ளது.

வேதாகமத்தின் முதற் சொற்கள் "ஆதியிலே தேவன்" என்பது தேவன் இருக்கிறார் என்பதைக் குறிக்கிறது. அதைவிட தேவனுடைய ஏவுதலின்படி இப்புத்தகம் எழுதப்பட்டதென்பதையும் கருதுகிறது.

தேவன் என்ற பதம் கி.பி. 1871இல் பிறப்பித்த ஐக்கிய திருப்புதல் தொடங்கி கி.பி. 1957இல் சர்வதேச சத்திய வேத சங்கத்தாருடைய அனுமதியின்படி வெளியிட்ட பிரசுரம் வரை உபயோகிக்கப்பட்டது. ஆனால் கி.பி. 1965இல் வெளியான திருத்திய மொழிபெயர்ப்பில் கடவுள் என்றே வலியுறுத்திக் குறித்துள்ளது.

தேவன் இருக்கிறாரென்பதை அத்தாட்சிப்படுத்தவோ, அவருடைய வல்லமை, மகத்துவம் எப்படிப்பட்டதென்பதைக் காட்டவோ, வேதாகமம் எழுதப்படவில்லை. அவைகள் தேவனுடைய வார்த்தைகளிலிருந்தே அறிந்துகொள்ள வேண்டியவை.

அந்த முதற் சொற்களால் தேவன் தம்மைப்பற்றிய வெளிப்பாட்டை முதன் முதல் கொடுக்கிறார். பின் எழுதப்பட்டவையும் அவரைத் தொடர்பாய் அறிவிக்கின்றன. இவ்வண்ணமே நாம் தேவனை அறியவேண்டியது.

தேவனுடைய வசனமாகிய வேதாகமமே, நாம் அவரை அறிகிறதற்கு மூலாதாரமாய் உள்ளது. தேவன் என்ற பதத்தின் வியாக்கியானத்தை வேதாகமத்திலிருந்தே எடுத்துக்காட்ட பலர் முயலுகிறார்கள். சுருக்கமாய்ச் சொல்லத்தக்கது, "தேவன் ஒரு முடிவற்ற, நித்திய ஆவியாயிருக்கிறார்." அவர் இருப்பதிலும், ஞானத்திலும், வல்லமையிலும், பரிசுத்தத்திலும், நீதியிலும், நன்மையிலும், உண்மையிலும் மாறாதவர்.

## தேவனுடைய பெயர்கள் :

தேவனுடைய பெயர்கள் மனுஷரால் கொடுக்கப்படாமல் அவர் தாமே தம்மை வெளிப்படுத்தும்படி எடுத்துக் கொண்டவையாகும். பழைய ஏற்பாட்டில் இரண்டு பெயர்கள் குறித்துள்ளன. அவையாவன: யேகோவா, ஏலோகிம். 'யேகோவா' என்பது "கர்த்தர்" என்றும், ஏலோகிம் என்பது "தேவன்" என்றும் மொழி பெயர்த்துள்ளன.

இவ்விரண்டு பெயர்களும் வெவ்வேறு கருத்துள்ளவை. யேகோவா என்பது அவர் தாம் தெரிந்து கொள்ளுகிறவர்களோடிருக்கும் சம்பந்தத்தையும், தாம் அவர்களைப் பாதுகாப்பவரென்றும், தம்மையே அவர்கள் சேவிக்க வேண்டுமென்ற முறையையும் காட்டுகிறது.

ஏலோகிம் என்பது, தமக்கும் உலகத்துக்குமுள்ள சம்பந்தத்தைக் குறிக்கிறது. அவரே அதைச் சிருஷ்டித்தவர்; ஆளுகிறவர். படைப்பின் மேலும், மனுஷ சம்பவங்கள் மேலும் அதிகாரமுள்ளவர்.

பொதுவாக மனுஷர் தேவனைப்பற்றி நினைக்க, பேச வேண்டிய சமயங்களில் அவர் ஏலோகிம் எனப்படலாம். ஏலோகிம் என்பது பண்மைப் பெயர்; ஏல் ஒருமைப் பெயர். அதன் அர்த்தம் பலம், பராக்கிரமம். ஏல்ஷடாய் (El Shadai) "சர்வ வல்லமையுள்ள தேவன்". இந்தப் பெயரையே கோத்திரப் பிதாக்கள் உபயோகித்தார்கள் (ஆதி. 17:1; யாத். 6:3).

தேவன் மோசேக்கு எரிகிற முட்செடியில் தரிசனமான வேளையில், தமது பெயர், "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்றார் (யாத். 3:14). இது தாம் ஆதியும் அந்தமுமில்லாத ஏகமுற்றானவரென்பதைக் கருதுகிறது.

தேவன் ஆபிரகாமுக்குத் தரிசனமானபோது, தாம் சர்வ வல்லமையுள்ள தேவனென்று அவனோடு ஓர் உடன்படிக்கை செய்தார் (ஆதி. 17:1). அந்த உடன்படிக்கையை நிறைவேற்றத் தொடங்கின வேளையில், தமது பெயர் யோகோவா என்று மோசேயுடன் சொன்னார். இது இஸ்ரவேலோடு செய்த உடன்படிக்கை பெயர் (யாத். 6:3).

கர்த்தருடைய புதிய நாமம், வெளி. 3:12இல் குறித்துள்ளது.

எபிரெயர் தங்கள் தெய்வத்திற்கு ஏல், ஏல்-எலியோன், ஏலோகிம் என்ற வார்த்தைகளை உபயோகித்தார்கள். ஏலோகிம் என்பது அவருடைய பூரண லட்சணங்களையும், திரியேகத்துவத்தையும் குறிக்கிறது. அதன் அர்த்தம்- "ஜீவனுள்ள தேவன்".

தேவன் என்பது ஒரு பொதுச்சொல். அது மெய்த் தேவனுக்கு மாத்திரமல்ல. சொரூபங்களுக்கும், விக்கிரகங்களுக்கும் பாவிக்கப்பட்டுள்ளது (ஆதி. 35:2; 31:13; உபா. 4:28; 12:2).

## மெய்த்தேவனின் பெயர்கள் :

1. உன்னதமான தேவன் மெல்கிசேதேக்கு, உன்னதமான தேவனின் ஆசாரியன் (ஆதி. 14:18; எபி. 7:1).

ஆபிரகாம் "உன்னதமான தேவனுடைய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" என்றான் (ஆதி. 14:23).

தாவீது "உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன்" என்றான் (சங். 57:2). தானியேலும் "உன்னதமான தேவன் மனுஷரின் இராஜ்யத்தில் ஆளுகை செய்கிறார்" என்றான் (தானி. 5:21).

பிசாசுகளும் உன்னதமான தேவனைப்பற்றி அறிக்கை செய்தன (மாற்கு. 5:7; லூக்கா. 8:28; அப். 16:17).

2. பரலோகத்தின் தேவன் கோரேஸ், "பரலோக தேவன்" பூமியின் இராஜ்யங்களைத் தனக்குக் கொடுத்ததாகக் கூறுகிறான் (2 நாளா. 36:22; எஸ்றா. 1:2). பரலோக தேவனைத் துதியுங்கள் (சங். 136:26). "பரலோக தேவன் அழியாத இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்" (தானி. 2:44). கடைசி நாள்களில் மனுஷர் பரலோக தேவனின் நாமத்தைத் தூஷித்தார்கள் (வெளி. 16:11).

3. தேவனாகிய கர்த்தர் ஏவாளுக்கும் சர்ப்பத்துக்குமிடையே நடந்த சம்பாஷணையில் "தேவனாகிய கர்த்தர்" எனக் குறிப்பிடப்படுகிறது. தேவன் தாம் தேவனாகிய கர்த்தர் என்று ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்போருக்கு வெளிப்படுத்தினார் (ஆதி. 3:13; 14:1; யாத். 3:16).

4. சர்வ வல்லமையுள்ள தேவன் தாம் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருக்குத் தரிசனமானார் (ஆதி. 17:1; 28:3; 35:11).

சில இடங்களில் தேவன் என்பதற்குப் பதிலாக "தேவனுடைய நாமம்" என்று குறிப்பிடப்படுகிறது (ஆதி. 12:6). ஒருவரைப் பற்றி அறியப்பட்டதே, அல்லது வெளிப்படுத்தப்பட்டதே அவருடைய நாமமாகும். அவர் "இஸ்ரவேலின் தேவன்" என்றும் சொல்லப்படுகிறார் (யாத். 24:10, யோசுவா. 7:19; 1 சாமு. 1:17, சங். 41:13; மத். 15:31).

## தேவன் ஒருவரே.

தேவன் ஒருவரே என்ற உண்மையை வேதாகமம் பல இடங்களில் வலியுறுத்திக் காட்டுகிறது. அநேக தேவர்கள் உண்டாயிருந்தாலும், மெய்த்தேவன் ஒருவரே (1 கொரி. 8:4-6).

"இஸ்ரவேலே கேள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" (உபா. 6:4). இது பக்தியுள்ள ஒவ்வொரு யூதனுடைய ஜெபமாகும். நமது ஆண்டவரும், "நமது தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்கிறார் (மாற்கு. 12:29). "கர்த்தரே தேவன், வேறொருவரும் இல்லை" என்று சாலொமோன் சொல்லுகிறான் (1 இரா. 8:59). "நான் முந்தினவரும், நான் பிந்தினவருந்தானே; என்னைத் தவிர தேவன் இல்லை என்று இஸ்ரவேலின் இராஜாவாகிய கர்த்தரும், சேனைகளின் கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்" (ஏசாயா. 44:6).

## தேவனிலுள்ள இயல்பான தன்மைகள் :

பரிபூரணம் தேவனிலேயேயுள்ளது. இதை அவருடைய வசனத்தில் வெளியிட்டிருக்கிறார் (மத். 5:48).

*1. தேவன் இருக்கிறவராக இருக்கிறார். தம்மில் தாமே ஜீவனுடையவர் (யாத். 3:14; சங். 36:9; யோவான். 5:26).*

*2. தேவன் நித்தியர். நித்திய வாசியும், பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவர். நித்தியமும் அழிவில்லாமையும், அதரிசனமுள்ள இராஜனும், தேவனுமாயிருக்கிறார் (ஏசாயா. 57:15; 1 தீமோ. 1:17).*

*3. தேவன் மாறாதவர். நான் கர்த்தர், நான் மாறாதவர் (மல். 3:6). கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமானது (சங். 33:11). அவரிடத்தில் யாதொரு மாறுதலும், யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை (1 தீமோ. 1:17).*

*4. தேவன் சர்வ வியாபகர். கர்த்தர் வானத்திலும், பாதாளத்திலும், எங்கேயும், எந்நேரமும் சமூகமாயிருக்கிறார் (சங். 139:7-10; அப். 17:27,28).*

*5. தேவன் சர்வ ஞானமுள்ளவர். அவருடைய அறிவு அளவில்லாதது (சங். 147:5). உலகத்தோற்ற முதல் தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது. (அப். 15:18). சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் அவருக்குத் தெரியும். அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை (யோபு. 17:6).*

*6. தேவன் சர்வவல்லமையுள்ளவர். தமது தன்மை, நோக்கம் ஆகியவைகளுக்கிணங்க சகலத்தையும் செய்யக் கூடியவர் (ஆதி. 17:1; யோபு. 42:1,2; 1 தீமோ. 2:13; வெளி. 19:6).*

*7. தேவன் நித்தியமானவர்.*

*நமது ஆண்டவர் பெரியவரும், மகா பெலமுள்ளவருமாயிருக்கிறார் (சங். 147:5). அவர் அதிசயமானவர், நித்திய பிதா. (ஏசாயா. 9:6).*

## தேவனுடைய இயற்கைத் தன்மைகள்:

*1. தேவன் பரிசுத்தமுள்ளவர் : இந்த இலட்சணம் பின்வரும் வசனங்களிலிருந்துத் தெரிய வருகிறது (யோசுவா. 24:19; 1 சாமு. 2:2; சங். 47:8; 51:11; 39:35; 105:42; ஏசாயா. 6:3; ஓசியா. 11:9). தமது சாயலிலே சிருஷ்டித்த பிராணிகளில் தேவன் பரிசுத்தத்தைக் காண விரும்புகிறார் (லேவி. 19:2; 1 பேதுரு. 1:15).*

*2. தேவன் நீதியுள்ளவர்: நீதியும், நியாயமும் ஒரே கருத்துள்ளவை. அவருடைய நீதியான ஆளுகையில் பரிசுத்தம் விளங்குகிறது. அவர் கொடுக்கும் தண்டனை, பிரதிபலன் அவருடைய பரிபூரண நீதியில்*

தங்கியிருக்கிறது (ஆதி. 18:25; உபா. 10:17; யோபு. 8:3; சங். 9:8; 119:142; எரே. 11:20; ரோமர். 2:11).

3. தேவன் இரக்கமுள்ளவர்: தேவன் பாவிகளுக்குக் காட்டுகிற இரக்கத்திலிருந்து அவருடைய தெய்வீக அன்பு விளங்குகிறது. அதன்படியே அவர் நியமித்த பிராயச்சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் பாவியை மன்னிக்கிறார் (யாத். 34:7; உபா. 4:31; சங். 51:1; 117:2; ஏசாயா. 55:7; எரே. 3:12; லூக்கா. 1:50; எரே. 2:4; தீத்து. 3:5; எபி. 4:14-16).

4. தேவன் உண்மையுள்ளவர்: தேவன் மனுஷருக்கு அருளிய வாக்குத் தத்தங்களால் வேதாகமம் நிறைந்திருக்கிறது. அவைகளைச் செய்வேனென்றும் சொல்லியிருக்கிறார் (எரே. 32:40). அவருடைய விசேஷ வாக்குத்தத்தம் மனுஷருடைய இரட்சிப்பை அடுத்தது. அது அவரை முற்றாய் நம்பினவர்களுக்கு, அவர் கொடுக்கும் விசேஷ நன்மைகளிலிருந்து தெரிய வருகிறது. மனுஷன் இரட்சிப்பை அடையும் வழியைத் தேவன் காட்டியிருக்கிறார். அதன்படி செய்தால் இரட்சிப்பு கிடைக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

இம்மைக்குரிய நன்மைகளையும் அவர் கொடுப்பதாக வாக்குப்பண்ணி இருக்கிறார் (சங். 84:11; ஏசாயா. 33:16). சோதனையிலும், துன்புறுத்தல் நாள்களிலும் எங்களுக்குச் சகாயம் செய்வார் (ஏசாயா. 41:10; 1 கொரி. 10:13; 1 பேதுரு. 4:12).

தேவன் எமக்கு வரும் சிட்சையைச் சகிக்கவும் உதவுகிறார் (எபி. 12:4-13). நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் என்று வாக்களித்திருக்கிறார் (சங். 32:8). இயேசுவை விசுவாசிப்பவர்கள் அவரோடு ஐக்கியப்படவும், கடைசியில் மகிமையடையவும் செய்வார் (1 கொரி. 1:9; 1 யோவான் 2:25).

5. தேவன் அன்புள்ளவர்: தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8). இது தேவனுடைய குணங்களில் முக்கியமானது. அவர் செய்யும் நன்மை எல்லாவற்றிற்கும் இதுவே மூலாதாரம். தேவன் அன்புள்ளவர் என்று வேதாகமத்தில் முதல் தொடங்கி, கடைசிவரை சொல்லப்பட்டுள்ளது (ஏசாயா. 63:7-9; எரே. 31:13; யோவான். 3:16). பாவிகளை மீட்கிறதற்கு அவர் ஏற்படுத்தின வழியிலேயே அவருடைய தெய்வீக அன்பு வெளியாகிறது. "நாம் பாவிகளாயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப் பண்ணுகிறார்" (ரோம. 5:8). அவர் தம்மைப் பலியாகக் கொடுத்து, சிந்தின இரத்தத்தினாலே தேவன் உலகத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கிக் கொண்டார் (ரோமர். 5:8; 8:32-39).

6. திரியேக தேவன்: பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, மூவராயிருந்தாலும் இயல்பில் ஒருவரே என்று வேதாகமம் கூறுகிறது. இயேசு கிறிஸ்து

ஞானஸ்நானம் பெற்ற வேளையில் பரிசுத்த ஆவி அவர் மேல் புறாவைப்போல் இறங்கினார். பிதா தம் குமாரனைப் பற்றி சாட்சி கொடுத்தார் *(மத். 3:16,17; மாற்கு. 1:10,11; லூக்கா. 3:21,22).*

இயேசு, தேவகுமாரன் என்று யோவான் சாட்சி பகர்ந்தான் *(யோவான். 1:29-34).* இயேசு கிறிஸ்து தாமே உயிர்த்தெழுந்த பின், தமது சீஷருக்குக் கொடுத்த கட்டளையில் தேவத்துவம் திரித்துவமென உறுதிப்படுத்துகிறார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுங்கள்" *(மத். 28:19).*

*1. பிதா என்பது தேவன் (மத். 11:25; யோவான் 6:27, ரோமர். 15:6; 1 கொரி. 8:6; எபே. 4:6; யாக். 1:27).*

*2. குமாரன் என்பது தேவன் (யோவான் 1:1; 20:28; ரோமர். 9:5; பிலி. 2:6; கொலோ. 2:9; எபி. 1:8, 2 பேதுரு. 1:1).*

*3. ஆவியானவர் என்பது தேவன் (அப். 5:3; 1 கொரி. 2:10; எபே. 2:22).*

இம்மூவரும் வெவ்வேறானவர்கள். மெய்யான திராட்சச் செடியைப் பற்றிப் பேசினபின் இயேசு "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவிடத்தில் இருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார்" என்றார் *(யோவான். 15:26).*

இம் மூவருக்கிடையிலிருக்கும் வேற்றுமை, தோன்றி நிற்கும் தன்மை இயேசுவின் வார்த்தைகளிலிருந்து வெளியாகிறது.

7. இரட்சகராகிய தேவன்: தேவன் தமது குமாரனை மனுஷருடைய பாவங்களுக்குப் பலியாக ஒப்புக் கொடுத்ததில் அவர் நமக்கு இரட்சகராகிறார் *(யோவான். 3:16).* என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது *(லூக்கா. 1:47).* தேவன் நம்முடைய இரட்சகர் என்று *1 தீமோ. 1:1; 2:3; 4:10*இல் குறித்துள்ளது.

தேவன் நித்தியமும், அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள இராஜன் என்று குறித்துள்ளது *(1 தீமோ. 1:17).*

உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்று தேவன் சொன்னார் *(யாத். 20:1-3).*

மேலும் தேவன் மனித அவதாரம் எடுத்து உலகத்தில் ஜீவித்து இவ்விதமாய்த் தாம் எப்படிப்பட்டவர்கள் என்று இயேசு கிறிஸ்துவின்மூலம், மனுஷ ஜாதிக்குத் தம்மை வெளிப்படுத்தி இருக்கிறார். கிறிஸ்தவர்களெல்லாரும் இதை விசுவாசிக்கிறார்கள்.

ஆனால், வேறு அநேகர் இந்தக் காரியத்தை உண்மையென்று ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. அப்படிப்பட்டவர்கள் போக்குச் சொல்ல இடமில்லையென்று அப்போஸ்தலனாகிய பவுல், "தேவன் உண்டென்கிற அறிவு அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் தேவத்துவம் உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினால் தெளிவாய்க் காணப்படும்" என்கிறார் *(ரோமர். 1:20).*

இரண்டாவதாக, அப்படிப்பட்டவர்களுடைய மனச்சாட்சியே அவர்களுக்குச் சாட்சியாயிருக்கிறது. குற்றமுண்டு, குற்றமில்லையென்பது அவர்கள் இருதயங்களிலே எழுதியிருக்கிறது *(ரோமர். 2:15).*

சிருஷ்டிக்கப்பட்டவைகளும், இயற்கையும் ஒருவனுடைய மனச்சாட்சியும் தேவன் உண்டென்று வெளிப்படுத்துகிறது. ஆகிலும் மனுஷன் அதை ஏற்றுக் கொள்ளாமல் சிருஷ்டிகரைச் சேவியாமல் சிருஷ்டியைச் சேவிக்கிறான் *(ரோமர். 1:25).* இப்படிப்பட்டவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரராகிறார்கள். அவர்கள் அதை அறிந்தும், தாங்களே செய்து கொண்டு, அப்படிச் செய்கிற மற்றவர்களிடத்திலும் பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள் *(ரோமர். 1:32).*

உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக *(மத். 4:10)* என்று இயேசு கூறுகிறார்.

## தேவனுடைய இராஜ்யம் (Kingdom of God)

இராஜ்யம் என்பது பலவித அர்த்தமுள்ளது. ரோம இராஜ்யம் முதலிய இவ்வுலக இராஜ்யங்களைக் குறிக்கிறதோடு, அது வேறு கருத்தோடும் உபயோகிக்கப்பட்டுள்ளது *(2 இரா. 15:19).*

தேவன் ஆளுகை செய்கிற சர்வலோகத்தையும் குறிக்கிறது *(சங். 22:28; 145:13; 1 நாளா. 29:21; மத். 6:13).* பூலோக இராஜ்யங்களைவிட பரலோக இராஜ்யமும் உண்டு. கர்த்தருடைய ஜெபத்தில் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" என்று சொல்லியுள்ளது *(மத். 6:10).*

இயேசுவானவர் சொன்ன உவமைகளில் "பரலோக இராஜ்யம்" என்று *மத். 13:24, 31,33, 44*லும், "தேவனுடைய இராஜ்யம்" என்று *மாற்கு 4:11-26; லூக்கா. 14:15*லும் குறிக்கப்பட்டுள்ளது.

அவர் தாமே, "என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல" என்று சொன்னார் *.(யோவான் 18:36).* சிலர் இது தேவனுடைய சபையைக் கருதுகிறதாக எண்ணுகிறார்கள். எப்படியாகிலும் தேவன் உலகத்தில் அழியாத ஓர் இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார் *(தானி. 2:44; வெளி. 20:4,6).*

இயேசு கொடுத்த போதனைகளில் பல முறைகளில் இராஜ்யத்தைப்

பற்றிப் பேசினார். இது இராஜ்யம், தேவனுடைய இராஜ்யம், பரலோக இராஜ்யம் என்று மூன்று வித இராஜ்யத்தைக் கருதுகிறது.

"இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து .......... இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார் (மத். 4:23). "பின்பு அவர் பட்டணங்கள் தோறும் ........ தேவனுடைய இராஜ்யத்துக்குரிய நற்செய்தியைக் கூறி, பின் தம்முடைய பன்னிரெண்டு சீஷரையும் ......... தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவும் .......... அனுப்பினார் (லூக்கா. 8:1; லூக்கா. 9:2).

இயேசு சொன்ன உவமைகளில், பரலோக இராஜ்யத்தின் இரகசியங்களைப் பற்றிப் பேசினார் (மத். 11:13). அது எதற்கு ஒப்பாயிருக்கும் என்று பல தடவைகளில் உவமைகளால் விளங்கப்படுத்தினார்.

இயேசு இராஜ்யத்தைப் பற்றிப் பிரசங்கிக்கும் முன்னே யோவான் ஸ்நானன், "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்றான் (மத். 3:2). அதற்கு முன் தானியேல் இவ்வுலக இராஜ்யங்கள் நடக்கும்போது "தேவன் அழியாத ஒரு இராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார். அது என்றென்றைக்கும் நிற்கும்" என்றான் (தானி. 2:44).

அரிமத்தியாவின் யோசேப்பு என்னும் ஒரு யூதன் தேவனுடைய இராஜ்யத்துக்குக் காத்திருந்தான் என்று கூறப்பட்டுள்ளது (லூக்கா. 23:51). ஆனால் யூதர் பொதுவாய் மேசியா வந்து தங்களை ரோம இராஜ்யத்திலிருந்து விடுதலையாக்கித் தங்களுக்கு உலகத்துக்குரிய ஓர் இராஜ்யத்தைச் ஸ்தாபித்துச் சீயோனிலிருந்து உலகம் முழுவதையும் அரசாளுவாரென்று நம்புகிறார்கள்.

ஆனால், இயேசுவானவர் "நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமுள்ள" இராஜ்யத்தை ஸ்தாபிக்க வந்தார் (ரோமர் 14:17). இந்த இராஜ்யத்துக்குத் தேவனே இராஜா. இயேசு கிறிஸ்து பிரதிநிதி. ஆகவே இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிற எவனும் நித்திய ஜீவனை அடைவான்.

## தேவ ஆட்டுக்குட்டி (Lamb of God)

'தேவ ஆட்டுக்குட்டி' என்பது தேவன் ஆபிரகாமுக்குக் காட்டிக் கொடுத்த ஆட்டுக்குட்டியை நினைப்பூட்டுகிறது (ஆதி. 22:8).

யூதருக்குள் பலி செலுத்துவதற்கு அதிகமாய் ஆட்டுக்குட்டியை எடுப்பது வழக்கமாயிருக்கிறது. அவர்களுடைய பஸ்காப் பண்டிகையின்போது ஆட்டுக்குட்டியை நெருப்பில் சுட்டுப் புசிப்பார்கள் (யாத். 12:3, 5,8).

எரேமியா குற்றஞ் சாட்டப்பட்டபோது, தான் அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்படும் சாதுவான ஆட்டுக்குட்டியைப் போ இருந்தான் என்கிறான் (*எரே. 11:9*). ஓர் ஆட்டுக்குட்டியில் காணப்படுகி சாந்தகுணமும், குற்றமின்மையும் நமது ஆண்டவரி காணப்பட்டதினிமித்தம் அவரும் ஆட்டுக்குட்டி எனப்பட்டார்.

யோவான் ஸ்நானன் "உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தே ஆட்டுக்குட்டி" (*யோவான். 1:29*). என்று சொன்னதிலிருந்து அவ பாவ நிவாரணப் பலியாகக் கொல்லப்பட்ட ஆட்டுக்குட்டியை கருதினதாகத் தெரிகிறது. சிலர் பஸ்கா ஆட்டுக்குட்டியாயிருக்குமென் நினைக்கிறார்கள்.

யோவான்ஸ்நானன் இரண்டாம் தரம் அவரைக்கண்டு, "இதோ தே ஆட்டுக்குட்டி" என்று மாத்திரம் சொன்னான் (*யோவான். 1:36*).

குற்றமற்ற மாசில்லாத ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்து என்று பேது சொல்லுகிறான் (*1 பேதுரு. 1:19*).

அடிக்கப்பட்டிருந்தது போல் காணப்பட்ட ஓர் ஆட்டுக்குட்டி என் வெளிப்படுத்தலில் குறித்துள்ளது (*வெளி. 5:6,8*).

தேவனுடைய சிங்காசனத்தின்முன் நின்றவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து வெளுத்தவர்க எனப்பட்டார்கள் (*வெளி. 7:14*).

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவ புத்தகத்தி பேரெழுதப்பட்ட பூமியின் குடிகளே மிருகத்தின் ஆளுகைக் உள்படாதிருப்பார்கள் (*வெளி. 13:8*).

ஆட்டுக்குட்டியானவருடைய கலியாண விருந்துக் அழைக்கப்பட்டவர்கள் பாக்கியவான்கள் என்பது கர்த்தருடை மகிமையில் பங்குள்ளவர்களாகும்படி தெரிந்து கொள்ளப்பட் வர்களைக் குறிக்கிறது (*வெளி. 19:9*).

இந்தப் பதம் வேதாகமத்தில் யோவான் *1:29, 36*இல் காணப்படுகிற ஆனால் இது இயேசுவைக் குறிக்கிற "ஆட்டுக்குட்டி" என்பது அ *8:32; 1* பேதுரு. *1:19;* யோவான் *21:15*லும் மற்றும் வெளிப்படுத்தலில் தடவைகளிலும் சொல்லியுள்ளது.

## தொற்காள்

*(தபீத்தாள் காண்க)*

## தோப்பேத் (Topheth)

*(வெறுப்பான இடம்)*

இது எருசலேமுக்குப் புறம்பே இருந்த இன்னோம் பள்ளத்தாக்கி ஒரு பகுதி. ஆபகாஸ், மனாசே என்பவர்களின் நாள்களில் யூதா புத்திர இங்கே மேடைகளைக் கட்டி, தங்கள் குமாரரையும், குமாரத்திகளையு

அக்கினியிலே தகனித்தார்கள். ஆதலால், "இதோ நாட்கள் வரும். அப்பொழுது அது சங்காரப் பள்ளத்தாக்கு என்று சொல்லப்படும். தோப்பேத்தில் இடம் கிடையாமற் போகுமட்டும் சவங்களை அடக்கம்பண்ணுவார்கள்" என்று எரேமியா கூறுகிறான் (எரே. 7:31, 32; 19:6). ஒருவனும் தன் பிள்ளைகளைத் தீ கடக்கப்பண்ணாதபடி யோசியா, தோப்பேத் என்னும் ஸ்தலத்தை தீட்டாக்கினான் (2 இரா. 23:10). பிற்பாடு நகரத்தின் குப்பை கூளங்களைப்போட்டு எரித்ததினிமித்தம் இந்த இடம் கெகென்னா (Gehenna) என்று பெயர் பெற்றது.

## தோமா (Thomas)

பன்னிரு அப்போஸ்தலரில் ஒருவன் (மத். 10:3). இரட்டைப் பிள்ளைகளில் ஒருவன் என்று அர்த்தமுள்ள திதிமு (யோவான் 21:2). இவன் ஐயப்படுகிற குணமுள்ளவன் (யோவான். 20:4). மரித்த லாசருவிடம் யூதேயாவுக்குப் போகும்படி இயேசு சீஷரை அழைத்த வேளையில், "வாருங்கள் நாமும் அவரோடே மரிக்கும்படி போவோம்" என்றதில் இவனுடைய மற்றொரு தன்மையும் வெளியாகிறது (யோவான். 11:16). கர்த்தர் உயிர்த்தெழுந்தார் என்பதைக் கேள்விப்பட்டபோது, அவரைத் தொட்டுப் பார்த்தாலொழிய, விசுவாசிக்க மாட்டேனென்று சொன்னவனும் இவனே (யோவான். 20:25). உயிர்த்தெழுந்தபின், இயேசு தம்மைத் தொட்டுப் பார்க்கும்படி, தோமாவுக்குச் சொன்னபோது, "என் ஆண்டவரே, என் தேவனே" என்றான். அதற்கு இயேசு காணாதிருந்தும் விசுவாசிக்கிறவன் பாக்கியவான் என்றார் (யோவான். 20:27-29).

பிற்காலங்களில் இவன் "ஐயப்படும் தோமா" எனப்பெயர் பெற்றான்.

## தோவேக்கு (Deog)

சவுலுடைய மேய்ப்பரில் பிரதானியான ஓர் ஏதோமியன். தாவீது சவுலுக்குத் தப்பி, நோபிலிருந்த அகிமெலேக்கினிடம் போன வேளையில், இவனும் அங்கே இருந்தான். அகிமெலேக்கு தாவீதோடு சிநேகமாயிருந்தானென்று, இவன் பின்பு சவுலுக்கு அறிவித்தான். சவுல் அகிமெலேக்கு சதி செய்தானென்று அவனில் குற்றம் பிடித்து, தன் காவலாளரிடம் அவனையும், மற்ற ஆசாரியர்களையும் கொல்லும்படி சொல்லியும், அவர்கள் செய்யாதபோது, தோவேக்கு ஆசாரியர் 85 பேரை அன்றே கொன்றான். இன்னும் நோபிலுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும், ஆடு, மாடுகளையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப்போட்டான் (1 சாமு. 22:7-19).

52ஆம் சங்கீதத்தின் தலைப்பில் இவனுடைய பெயர் சொல்லப் பட்டுள்ளது.

## நகோமி (Naomi)

**(இன்பமான)**

எலிமெலேக்கின் மனைவி. மக்லோன், கிலியோன் என்பவர்களின் தாய்.

நியாயாதிபதிகளின் நாள்களில், பெத்லகேமில் பஞ்சம் உண்டானதினிமித்தம், அவ்வூரானாகிய எலிமெலேக்கு தன் குடும்பத்தோடு மோவாப் தேசத்துக்குப் போனான். அங்கே அவன் மரித்தான். அவனுடைய குமாரரும், அவ்வூர் பெண்களை விவாகம் செய்தபின் மரித்தார்கள். பின் நகோமி, யூதா தேசத்துக்குத் திரும்பிப் போகையில் அவளுடைய மருமக்களில் ஒருத்தியான ரூத்தும் கூடப்போனாள்.

அவர்கள் பெத்லகேமுக்கு வந்தபோது அவ்வூரார் தன்னை நகோமி என்று சொல்லாமல், கசப்பு என்ற கருத்துள்ள மாராள் என்று சொல்லும்படி சொன்னாள். பின் அவளுடைய உறவின் முறையான போவாஸ் என்னும் ஆஸ்திக்காரன், ரூத்தை விவாகம் செய்தான். அவர்களுக்கு ஓபேத் என்னும் பிள்ளை பிறந்தது. நகோமி அவனைத் தன் பிள்ளைபோல் எடுத்து வளர்த்தாள். அவன் தாவீதின் தகப்பனாகிய ஈசாயின் தகப்பன் (ரூத். 4:17).

## நசரேயன் (Nazarene)

1. நாசரேத் ஊரில் பிறந்தவனை நசரேயன் என்று சொல்லுவது வழக்கம். இயேசுவும் நாசரேத் ஊரில் வளர்ந்தபடியால், இப்பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டது (மத். 2:23; அப். 24:5). "நசரேயனாகிய இயேசு" என்று பின்வரும் தருணங்களில் அழைக்கப்பட்டார்.

பிசாசு பிடித்தவன் (மாற்கு. 1:24; லூக்கா. 4:34). ஜனங்கள் (மாற்கு. 10:47; லூக்கா. 18:37). ஒரு வேலைக்காரி (மாற்கு. 14:67 மத். 26:71). கல்லறையிலே ஸ்திரீகளுக்குக் காணப்பட்ட தூதன் (மாற்கு. 16:6). எம்மாவுக்குப் போன சீஷர் (லூக்கா. 24:19). இயேசுவைப் பிடிக்கப்போன சேவகர் (யோவான் 18:5). சிலுவை மேலிருந்த மேல் விலாசம் (யோவான் 19:19). பேதுரு நசரேயனாகிய இயேசு என்று சொன்னான் (அப். 2:22; 3:6; 4:10). ஸ்தேவானில் சொல்லப்பட்ட குற்றச்சாட்டு (அப். 6:14). இயேசு தாமே பவுலுக்குச் சொன்ன வார்த்தை (அப். 22:8). பவுல் இயேசுவைப் பற்றி சொன்னது (அப். 26:9).

புதிய ஏற்பாட்டில் "நசரேயன்" என்பது பொதுவாய் இயேசுவைக் குறித்துள்ளது.

பிற்பாடு, பவுல் நசரேய மதபேதத்துக்கு முதலாளி எனப்பட்டான் (அப். 24:5).

இயேசு "நசரேயன்" எனப்படுவாரென்று தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது (மத். 2:23). இது வேதாகமத்தில் குறிப்பாகச் சொல்லியுள்ளதல்ல. தீர்க்கதரிசிகள் பொதுவாய் இயேசுவைப் பற்றிச் சொன்னவைகளிலிருந்து மத்தேயு தன்னுடைய வசனிப்பாகச் சொல்லியிருப்பான்.

இயேசு "வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போல் எழும்புகிறார்" என்று குறித்துள்ளது (ஏசாயா. 53:2).

## நசரேயன் (Nazarite)

கர்த்தருக்கென்று நசரேய விரத பொருத்தம் பண்ணுகிறவன் நசரேயன் எனப்படுவான். புருஷனாவது, ஸ்திரீயாவது இந்தப் பொருத்தனைக்குட்படலாம். இதற்குட்பட்டவன் திராட்சரசம் மதுபானம் என்றவற்றை விலக்க வேண்டும். பிரேதத்தண்டையில் போகவும் அசுத்தமான ஆகாரங்கள் புசிக்கவும், சவரகன் கத்தி தலையின்மேல் படவும் கூடாது. அவன் தீட்டுப்படாமல் கர்த்தருக்குப் பரிசுத்தமாக இருக்க வேண்டும்.

அவன் தீட்டுப் படாமல், பலி செலுத்தித் தீட்டை நிவிர்த்தி செய்ய முறைகளிருந்தன. சிம்சோன், யோவான் ஸ்நானன் ஆகியவர்கள் பிறக்கும் முன்னே தேவனுடைய சொற்படி இந்தப் பிரதிஷ்டைக்குட்படுத்தப்பட்டார்கள்.

ஆகிலும் ஒருவன் தேவ ஊழியம் செய்வதற்காக அல்லது மார்க்க அப்பியாசங்களுக்காகத் தன்னைத்தானே உலக ஜீவியத்திலிருந்து பிரித்து இவ்விதப் பிரதிஷ்டை செய்வதுமுண்டு. அப்படிச் செய்பவர்கள் வெளியான காரியங்களில் மாத்திரமல்ல, உள்ளான ஆவிக்குரிய ஜீவியம் செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இந்த விரதம் செய்வோருக்கு விசேஷ ஆசீர்வாதமுண்டென்று நம்பப்படுகிறது.

## நப்தலி (Naphtali)

பன்னிரு கோத்திரப் பிதாக்களில் ஒருவன். யாக்கோபின் ஆறாவது மகன். ராகேலின் வேலைக்காரியாகிய பில்காளின் இரண்டாம் மகன் (ஆதி. 30:7,8).

## நப்தலி கோத்திரம்

யாக்கோபு எகிப்துக்குப் போகையில் நப்தலியின் நான்கு குமாரரும் கூடப்போனார்கள் (ஆதி. 46:8, 24-26).

சீனாய் மலையடிவாரத்தில் ஜனத்தொகை எடுத்தபோது, இவர்கள் 53,400ம், மோவாப் வெளியில் எடுத்தபோது 45,400ம் இருந்தார்கள் (எண். 1:42, 43; 26:48-50).

வனாந்தரப் பிரயாணத்தில் ஆசேர் அருகே நப்தலி கோத்திரத்தார் பாளயமிறங்கினார்கள் (எண். 2:25-30). இவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தேசம் யோசுவா. 19:32-39இல் குறித்துள்ளது.

கானானியரோடு நடந்த யுத்தத்தின் தொடக்கத்தில், இவர்கள் முன்னேறிச் சென்றார்கள் (நியா 4:6; 5:18). சாலொமோனிடம் வெண்கல வேலை செய்த ஈராம் என்பவன் நப்தலி கோத்திரத்தாளாகிய ஒரு கைம்பெண்ணின் மகன் (1 இரா. 7:13,14).

தாவீது, எப்ரோனிலிருந்த நாள்களில் இந்தக் கோத்திரத்திலிருந்து 31,000 தலைவரும், யுத்தத்துக்குப் போகத்தக்க 37,000 பேரும் அவனுக்கு உதவியாயிருந்தார்கள் (1 நாளா. 12:34). கி.மு. 734இல் சீரிய தேசத்துப் பெனாதாத் இந்தத் தேசத்தைக் கீழ்ப்படுத்திய பின் திகிலாத்பிலேசர் ஜனங்களை அசீரியாவுக்குச் சிறைபிடித்துக் கொண்டு போனான் (1 இரா. 15:20; 2 இரா. 15:29).

யாக்கோபின், மோசேயின் கடைசி வார்த்தைகளில் இக்கோத்திரத்தார் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் (ஆதி. 49:21; உபா. 33:23).

நியாயாதிபதிகளில் பாராக் என்பவன் நப்தலி தேசத்தான் (நியா. 4:6). இயேசு செபுலோன், நப்தலி நாடுகளின் எல்லைக்குப் போயிருந்தார் (மத். 4:13,14; ஏசாயா. 9:1,2).

கடைசி நாள்களில் முத்திரை போடப்பட்டவர்களில் இக்கோத்திரத்தாரும் இருக்கிறார்கள் (வெளி. 7:3,6).

## நரகம் (Hell)

வேதாகமத்தில், "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும்" என்று குறித்துள்ளது (யாத். 20:14; உபா. 6:8). ஆனால் எபிரெயர் பூமியின் கீழிருக்கிற மண்டலத்துக்கு ஆதேஸ் (Hades), ஷெயோல் (Sheol), கெகன்னா (Gehenna) என்று வெவ்வேறு பெயர் இட்டார்கள். தமிழ் வேதாகமத்தில் இந்த இடம் "பாதாளம்" என்று மிகுதியாய் மொழிபெயர்த்துள்ளது. நமது ஆண்டவரும் சொன்ன உவமையில் ஐசுவரியவான் மரித்தபின் பாதாளத்தில் வேதனைப் பட்டதாகச் சொன்னார் (லூக்கா. 16:19-31).

நரகம் என்பது நெருப்பு எரிகிற ஒரு இடம் (மத். 5:22; யாக். 3:6). இந்தப் பெயர் இன்னோம் பள்ளத்தாக்கிலிருந்து வந்ததாகத் தெரிகிறது. அங்கே பூர்வ காலத்தில் கானானியர் நரபலிகள் செலுத்தினார்கள்.

பிற்காலங்களில் எருசலேம் நகரத்தார் குப்பை கூளங்களையும், பிரேதங்களையும் சுட்டெரித்தார்கள். அதினிமித்தம் இரட்சிப் படையாத ஜனங்களும் அவ்விதமே தண்டனையடைவார்களென்று நினைத்து, அதை நரகம் என்று சொன்னார்கள்.

எபிரெய பாஷையில் ஷீயோல் என்பதும், கிரேக்கில் ஹேடீஸ், கெகென்னா என்பதும் நரகம் என்பதைக் கருதுகிறது. இப்பதம் வெவ்வேறு கருத்துள்ளது. தீயோர் போகிற இடம் பாதாளம் என்று எண். *16:33;* யோபு. *24:19;* சங். *9:17*லும் இன்னும் வேறு இடங்களிலும் சொல்லியுள்ளது.

பாதாளம் பூமிக்குள்ளிருக்கிறதாகக் குறித்துள்ளது (எண். *16:30*).

நரகம் ஒரு பாதாளமென்றும் (நீதி. *9:18*) அதற்கு வாசல்களுண்டென்றும் (ஏசாயா. *38:10*) ஆழமானது என்றும் (யோபு. *11:8*) குறித்துள்ளது.

கர்த்தரின் கோபம் அக்கினி தாழ்ந்த நரகமட்டும் எரியும் (உபா. *32:22*).

கர்த்தருக்கு முன்பாக நரகம் மூடப்படாதிருக்கிறது (யோபு. *26:6*).

துன்மார்க்கரும், தேவனை மறக்கிறவர்களும் நரகத்தில் தள்ளப்படுவார்கள் (சங். *9:17*).

ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள் (மத். *10:28;* லூக்கா. *12:5*).

உங்கள் மார்க்கத்தானான போது அவனை இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள் (மத். *23:15*).

நாவானது நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயிருக்கிறது (யாக். *3:6*).

நரகம், ஒரு தண்டிக்கப்படும் ஆக்கினையுள்ள இடமென்று இயேசு கூறுகிறார் (மத். *23:33*).

பாவஞ் செய்த தூதர்கள் நரகத்திலே தள்ளப்பட்டு, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள் (2 பேதுரு, *2:4*).

## நாகமான் (Naaman)

**(இன்பம்)**

*1.* சீரிய இராஜாவாகிய பெனாதாத்தின் படைத்தலைவன். மகா பராக்கிரமசாலியான அவன் குஷ்டரோகியாயிருந்தான். சிறை பிடிக்கப்பட்ட இஸ்ரவேல் தேசத்து ஒரு சிறு பெண், அவன் வீட்டில் வேலைக்காரியாயிருந்தாள். அவள் சமாரியாவிலிருந்த தீர்க்க

தரிசியைப்பற்றிச் சொன்னபோது நாகமான் அவனிடம் போய், அவன் சொற்படி யோர்தான் நதியில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணிச் சொஸ்தமானான்.

நாகமான், தீர்க்கதரிசிக்கு வெகுமதி கொடுக்கப் போனபோது, அவன் ஏற்றுக்கொள்ளாததினால் அவனிடம் இரண்டு பொதி மண் கேட்டு எடுத்துக் கொண்டு திரும்பினான் *(2 இரா. 5:1-19)*.

அதன்பின் இவன் யேகோவாவையே சேவித்தான். இவன் சொஸ்தமானதைப்பற்றி இயேசுவும் கூறுகிறார் *(லூக்கா. 4:27)*.

2. பென்யமீனுடைய குமாரன் *(ஆதி. 46:21)*.

3. பென்யமீனின் பேரன் *(1 நாளா. 8:4)*.

இவன் சந்ததியார் நாகமானியர் எனப்பட்டார்கள் *(எண். 26:40)*.

## நாகூம் (Nahum)

***(இரக்கமுள்ள)***

சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். 'எல்கோஷியன்' எனப்படுகிறான் *(நாகூம் 1:1)*. எல்கோஷ் பலஸ்தீனாவிலுள்ள ஒரு ஊர்.

நினிவேக்கு விரோதமாய் தீர்க்கதரிசனம் உரைத்தான். யோனாவின் பிரசங்கத்தினால் நினிவேயின் ஜனங்கள் மனந்திரும்பினார்கள். ஆனால் அது நிலைநிற்கவில்லை. அதன்பின் ஏறக்குறைய 150 வருடங்களுக்குப்பின் நாகூம் தீர்க்கதரிசனம் உரைத்தான். இவனுடைய தூது நினிவேயின் அழிவைப் பற்றியது.

அந்நாள்களில் இஸ்ரவேலரும் அசீரியரால் ஒடுக்கப்பட்டார்கள் நாகூம் அவர்களைத் தைரியப்படுத்திச் சொன்னதாவது :

கர்த்தர் நீடிய சாந்தமுள்ளவர். எவரையும் தண்டியாமல் விடார் *(நாகூம் 1:3)*. தம்மை நம்புகிறவர்களைக் காப்பாற்றுவார் *(நாகூம் 1:7)*. இப்போதும் உன் மேலிருக்கிற அசீரியனின் நுகத்தை முறிப்பேன் *(நாகூம் 1:13)*. நற்செய்தியைக் கூறுகிறவனின் கால்கள் மலைகளில் நடந்து வருகிறது *(நாகூம் 1:15)*.

நினிவேக்கு, நாகூம், தேவ தண்டனையையே கூறுகிறான். இதோ! நான் உனக்கு விரோதமாக வந்து இரதங்களை எரித்துப்போடுவேன் *(நாகூம். 2:13)*.

அசீரியாவின் வீழ்ச்சி நூறு வருடத்தில் சம்பவித்தது. *(கி.மு. 606)*.

யேகோவாவின் பரிசுத்தம் பாவத்தைத் தண்டியாமல் விடாது என்பதே நாகூமின் தூதின் பொருள்.

அசீரியர், இஸ்ரவேலை நிந்தித்த காலமுண்டு. ஆனாலும் இஸ்ரவேலின் தேவன் இராஜ்யங்களின் அதிகாரத்தை மாற்ற வல்லவரென்று இந்தப் புத்தகம் காட்டுகிறது.

தற்காலத்திலும் இஸ்ரவேலின் தேவன் தமது ஜனத்தை விரோதிகளின் கையிலிருந்து விடுவிப்பாராக.

## நாகோர் (Nahor)

1. ஆபிராமுடைய பாட்டன் *(ஆதி. 11:22-25)*. இயேசுவின் முற்பிதா *(லூக்கா. 3:34)*.

2. ஆபிராமுடைய சகோதரன், நாகோர் *(ஆதி. 11.27)*. இவன் தன் சகோதரனாகிய ஆரானின் மகள் மில்காளை விவாகம் செய்தான் *(ஆதி. 11:29)*. நாகோர் லாபானுடைய தகப்பன் *(ஆதி. 29:5)*. ரெபெக்காளின் பாட்டன் *(ஆதி. 24:15)*.

மெசொப்பொத்தாமியாவிலிருந்த ஆரான் "நாகோருடைய" ஊர் எனப்பட்டது *(ஆதி. 24:10)*. ஆபிராமும் லோத்தும் கானானுக்குப் புறப்பட்டுப் போனபோது இவன் ஆரானில் இருந்து விட்டான்.

நாகோர் யேகோவாவைச் சேவித்தும் வேறே தேவர்களையும் சேவித்தான் *(ஆதி. 31:53; யோசு. 24:2)*.

## நாசரேத் (Nazareth)

*(தளிர்)*

இது கலிலேயாவிலுள்ள ஒரு பட்டணம். கர்மேல் மலையிலிருந்து தென்கிழக்கில் 15 மைலுக்கு அப்பாலிருந்தது. இயேசுவின் பெற்றோர் இருந்த ஊர். அவருடைய பிறப்பைப் பற்றி தேவ தூதன் அறிவித்த இடம்.

எகிப்திலிருந்து திரும்பிவந்து, இயேசுவின் பெற்றோர் இங்கே வாசம் பண்ணினார்கள் *(மத். 2:23; லூக்கா. 1:26-31)*. இயேசு இங்கே 28 வருடம் தங்கியிருந்தபடியால் நசரேயன் எனப்பட்டார் *(மத். 2:23)*. அவர் "வளர்ந்த ஊர்" என்றும் குறித்துள்ளது *(லூக்கா. 4:16)*.

அக்காலத்தில் நாசரேத்து எருசலேமின் ஜனங்களால் மாத்திர மல்ல, சுற்றி இருந்த ஊராராலும் இகழப்பட்ட ஊராயிருந்தது. இதுவே நாத்தான்வேலின் கேள்விக்குக் காரணமாயிருந்திருக்கலாம் *(யோவான் 1:46)*.

## நாதாப் (Nadab)

***(உதாரமுள்ள)***

*1.* ஆரோனின் மூத்த குமாரன் *(யாத். 6:23; 1 நாளா. 6:3).* மோசேயோடு கூட மலையின்மேல் ஏறி கர்த்தரைப் பணிந்து கொள்ளப் போனவர்களில் ஒருவன் *(யாத். 24:1-6).* இவன் ஆசாரிய ஊழியத்துக்கு ஆரோனோடுகூடத் தெரிந்து கொள்ளப்பட்டான் *(யாத். 28:1).*

இவனும் இவன் சகோதரன் அபியூவும் அந்நிய அக்கினி போட்டு, தூபம் காட்டினதினிமித்தம் கர்த்தருடைய சந்நிதியிலிருந்துப் புறப்பட்ட அக்கினி அவர்களைப் பட்சித்ததினால் அவர்கள் செத்தார்கள் *(லேவி. 10:1,2; எண். 3:2; 1 நாளா. 24:1,2).* இவனுக்குப் பிள்ளைகள் இருக்கவில்லை.

*2.* பென்யமீன் கோத்திரத்து கிபியோன், மாக்காள் என்பவர்களின் மகன் *(1 நாளா. 8:30).*

*3.* இஸ்ரவேலின் இராஜாவாகிய யெரொபெயாமின் மகன் இவன். இரண்டு வருடம் அரசாண்டபின் பாஷா என்பவனால் கொல்லப் பட்டான் *(1 இரா. 14:20; 15:25-31).*

*4.* சம்மாவின் குமாரன் நாதாப் *(1 நாளா. 2:28).*

## நாத்தான் (Nathan)

***(கொடை)***

*1.* தாவீது, சாலொமோன் என்பவர்களின் நாள்களில் இருந்த ஒரு தீர்க்கதரிசி. தாவீது கர்த்தருக்குத் தேவாலயம் கட்ட யோசித்தபோது, இவன் முதலாவதாக அவனை தைரியப்படுத்தினான். பின்பு கர்த்தரின் வெளிப்படுத்தல் கிடைத்ததினிமித்தம் அவன் தாவீதிடம் அவனல்ல, அவனுடைய மகன் சாலொமோனே அதைக் கட்டுவான் என்று சொன்னான் *(2 சாமு. 7:1-17; 1 நாளா. 17:1-15).*

தாவீது பத்சேபாளோடு கூட செய்த பாவத்தினிமித்தம் கர்த்தர் இவன் மூலமாகத் தாவீதைக் கண்டித்தார் *(2 சாமு. 12:1-25).*

அதோனியா தான் இராஜாவாக எத்தனித்தபோது, இவன் சாலொமோனுக்கு உதவியாயிருந்து அவனை அபிஷேகம் பண்ணினான் *(1 இரா. 1:8-45).*

ஆலயத்தில் கீத வாத்தியங்கள் வாசிக்கும்படி ஒழுங்கு செய்தவர்களில் இவனும் ஒருவன் *(2 நாளா. 29:25).*

தாவீது, சாலொமோன் என்பவர்களுடைய ஆளுகையைப் பற்றிய காரியங்களை இவன் ஒரு புத்தகத்தில் எழுதிவைத்தான் *(1 நாளா. 29:30; 2 நாளா. 9:29).*

*51ஆம் சங்கீதத்தின் தலைப்பின் இவனுடைய பெயர் குறித்துள்ளது.*

*2. தாவீதின் மகன் (2 சாமு. 5:14; 1 நாளா. 3:5). அசரியா, சாபூத் என்பவர்களின் தகப்பன் (1 இரா. 4:5). இயேசுவின் முற்பிதா (லூக்கா. 3:31).*

*3. லேவியரை அழைக்கும்படி, எஸ்றா இத்தோவிடம் அனுப்பிய ஆள்களில் ஒருவன் (எஸ்றா. 8:16).*

*4. அந்நிய ஸ்திரீயை விவாகம் பண்ணினவர்களில் ஒருவன் (எஸ்றா. 10:39).*

## நாத்தான்வேல் (Nathanael)

***(தேவனுடைய கொடை)***

*இவன் கலிலேயாவிலுள்ள கானான் ஊரான் (யோவான். 21:2). பன்னிருவரில் ஒருவன். இவனுடைய இயற் பெயர் 'பற்தொலொமேயு' இவன் இயேசுவிடம் கொண்டுவரப்பட்டபோது அவர் சொன்னதைக் கேட்டு, "நீர் தேவனுடைய குமாரன்" என்றான் (யோவான். 1:45-49).*

*இயேசு உயிர்த்தெழுந்தபின், திபேரியாக் கடற்கரையில் இவனுக்கும் தரிசனமானார் (யோவான். 21:2). பின்பு இவன் இந்தியாவுக்கு அல்லது அராபியாவுக்குப் போய், சுவிசேஷம் அறிவித்துக் கொண்டிருந்து, கடைசியில் சிலுவையில் அறையுண்டு மரித்தானென்ற பாரம்பரியமுண்டு.*

## நாபால் (Nabal)

***(மதிகேடன்)***

*யூதாவைச் சேர்ந்த, மாகோனிலிருந்த ஓர் ஐசுவரியவான். அவனுடைய ஆட்டு மந்தைகள் கர்மேலில் இருந்தன. தாவீது வனாந்தரத்தில் அலைந்து திரிந்த நாள்களில், இவனிடம் உதவி கேட்டு ஆள்களை அனுப்பினபோது அவன் உதவி கொடுக்க மறுத்தான். அப்போது தாவீதும் அவனுடைய மனுஷரும் ஆயுதம் தரித்துக் கொண்டு, அவனைக் கொன்று போடப் புறப்பட்டார்கள். நாபாலின் மனைவி அபிகாயில் இதைக் கேள்விப்பட்டு, தேவையான சாமான்களை எடுத்துக்கொண்டு, தாவீதைச் சந்தித்து மன்னிப்புக்கேட்டு சமாதானப்படுத்தினபோது அவன் திரும்பிப்போனான். அபிகாயில் திரும்பி வீட்டுக்குப் போய், நாபால் வெறித்திருந்ததைக் கண்டு, மறுநாள் காலையில், அவனுக்கு வர இருந்த விதியைச் சொல்லவே, அவன் பயத்தினால் வியாதிப்பட்டு பத்து நாள்களில் மரித்தான் (1 சாமு. 25:1-42).*

*அபிகாயில் பின்பு தாவீதின் மனைவிகளில் ஒருத்தியானாள் (1 சாமு. 30:5, 2 சாமு. 2:2).*

## நாபோத்து (Naboth)

இவன் யெஸ்ரயேல் தேசத்தான். இவனுக்கு ஆகாப் இராஜாவின் அரண்மனைக்கருகே ஒரு திராட்சத் தோட்டம் இருந்தது. இராஜா இதைக் கிரயத்துக்கு வாங்கிக்கொள்ளக் கேட்டபோது, அவன் சம்மதிக்காததி னிமித்தம் ஆகாபின் மனைவி யேசபேல், நாபோத்துக்கு விரோதமாய்ப் பொய்க் குற்றஞ் சாட்டி, அவனையும், அவனுடைய குமாரரையும் கல்லெறிந்து கொல்லுவித்தாள். ஆகாப் திராட்சத் தோட்டத்தைச் சொந்தமாய் எடுக்கப் போன வேளையில், எலியா அவனைச் சந்தித்து அவன்மேல் வரப் போகிற தேவ தீர்ப்பை அறிவித்தான் *(1 இரா. 21:1-24)*. அதன்படியே, பின்பு யேசபேலின் மகனாகிய யோராமின் சவம், நாபோத்தின் நிலத்தில் எறியப்பட்டது *(2 இரா. 9:21-26)*. யேசபேலின் பிரேதம் யெஸ்ரயேலின் நிலத்தின் எருவைப் போலாயிற்று *(2 இரா. 9:37)*. ஆகாப் கொல்லப்பட்டபோது, அவன் இரத்தத்தைச் சமாரியாவின் குளத்தில் கழுவும்போது, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கின.

இவ்விதமாய் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறிற்று *(1 இரா. 22:38)*.

## நிக்கொதேமு (Nicodemus)

***(வெற்றியடைந்தவன்)***

இவன் ஒரு பரிசேயனும், 'சனதிரின்' சங்கத்தின் அங்கத்தவனுமா யிருந்தான். இயேசு செய்த அற்புதங்களால் உணர்த்தப்பட்டு, இரவில் இரகசியமாய் அவரைக் காணப் போனான். இயேசு அவனோடு மறுபடி பிறக்கிறதைப் பற்றிய காரியங்களைப் பேசினார் *(யோவான். 3:1-3)*.

பின்பு, 'சனதிரின்' சங்கத்தில் இயேசுவை ஆக்கினைக்குட்படுத்த யோசனை செய்தபோது இவன் விசாரணையில்லாமல் ஒருவனையும் நியாயந்தீர்க்கக் கூடாதே என்றான் *(யோவான். 7:50-52)*.

இயேசுவின் சரீரத்தை அடக்கம் பண்ணும்முன் இவன் வெள்ளைப் போளமும், கரிய போளமும் கொண்டு வந்து யோசேப்போடு கூட அதைச் சீலைகளில் சுற்றிக் கட்டி, ஒரு கல்லறையில் வைத்தான் *(யோவான். 19:39-42)*.

## நிக்கொலாய் மதஸ்தர் (Nicolaitans)

*ஆதிக் கிறிஸ்தவ மதபேத சமயத்தார். வெளிப்படுத்தின விசேஷத்தில் இவர்களுடைய போதகத்தையும், கிரியைகளையும் இயேசு வெறுக்கிறதாகச் சொல்லியுள்ளது (வெளி. 2:6-15).*

இவர்களுடைய கொள்கை இஸ்ரவேலைப் பாவம் செய்யப் பண்ணின பிலேயாமின் போதனைக்குச் சம்பந்தப்பட்டதெனத் தெரிகிறது (வெளி. 2:14,15).

அப். 6:5இல் சொல்லப்பட்ட நிக்கொலாய் என்பவன் இந்தச் சமயத்தைத் தொடங்கினவன் என்பதற்கு அத்தாட்சியில்லை.

## நிம்சி (Nimshi)

யெகூவின் பிதா அல்லது பாட்டன் (1 இரா. 19:16; 2 இரா. 9:2).

## நிம்ரோது (Nimrod)

**(பராக்கிரமசாலி)**

கூஷ் என்பவனின் மகன். இவன் பலத்த வேட்டைக்காரன். அசீரிய இராஜ்யத்தை ஸ்தாபித்தவன். அநேக பாபிலோனிய பட்டணங்களையும் கட்டினான் (ஆதி. 10:8-12; 1 நாளா. 1:10; மீகா. 5:6).

## நினிவே (Nineveh)

தைகிரிஸ் (Tigris) ஆற்றின் கிழக்கு பக்கத்திலிருந்த ஒரு பூர்வீகப்பட்டணம். நிம்ரோது இதைக்கட்டினான் என்று சொல்லப்படுகிறது (அதி. 10:8-11). அசீரிய இராஜ்யத்தின் தலைநகராயிருந்தது. சர்கோன் அவனுக்குப் பின் வந்தவர்களாகிய சனகெரிப், எசர்ஷடன் என்பவர்களின் நாள்களில் (கி.மு. 722-705) அதிக செழிப்பாயிருந்தது. இந்தப் பட்டணம் நான்கு மைல் சம சதுர விசாலமுள்ளது. நினிவே குரூரமான செய்கைகளுக்குப் பெயர் பெற்றது. சில இராஜாக்கள் தங்கள் வெற்றியைக் கொண்டாடும் தருணங்களில், கைதிகளின் தலை, கை, கால்களைத் துண்டித்துச் சின்னாபின்னப்படுத்தினார்கள்.

நாகூம், செப்பனியா என்பவர்கள் நினிவேக்கு நேரிடப்போவதை முன்னறிவித்தார்கள் (நாகூம் 2:8-13); செப். 2:13). யோனாவும், தேவனால் அனுப்பப்பட்டு அங்கே போய் பிரசங்கித்தான் (யோனா. 1:2).

பின்பு கல்தேயர் மேதினியரோடு கூட நினிவேயை முற்றாய் அழித்தார்கள். இந்த அழிவைப்பற்றி நாகூம் 2:3லும் செப். 2:13-15லும் விபரமாய் கூறப்பட்டுள்ளது. அது இருந்த இடமும் தெரியாமல் போயிற்று. யோனாவின் பிரசங்கத்தினிமித்தம் நினிவே மனம் திரும்பின போதிலும் அது நிலைபெறவில்லை (யோனா. 3:4,5). அவர்களுடைய மனந்திரும்புதலைப் பற்றி நமது ஆண்டவரும் புகழ்ந்து பேசினார் (மத். 12:41; லூக்கா. 11:30).

## நூன் (Nun)

எப்பிராயீம் கோத்திரத்தான். யோசுவாவின் பிதா *(யாத். 33:11; யோசுவா. 1:1; 1 நாளா. 7:27).*

## நெகேமியா (Nehemiah)

***(யேகோவா ஆறுதல் கொடுத்தார்)***

1. செருபாபேலோடு பாபிலோனியாவிலிருந்துத் திரும்பினவர்களில் ஒருவன் *(எஸ்றா. 2:2; நெகே. 7:6).*

2. எருசலேமின் அலங்கத்தைக் கட்ட உதவி செய்தவர்களில் ஒருவன் *(நெகே. 3:16).*

3. அகலியாவின் குமாரன். பாபிலோனுக்குச் சிறையாகக் கொண்டு போகப்பட்டவர்களில் ஒருவன். பெர்சியா இராஜாவாகிய முதலாம் அர்தசஷ்டா (நீண்ட கைகளுள்ள அர்தசஷ்டா) என்பவனுக்குப் பான பாத்திரக்காரனானான் *(நெகே. 1:1-11).*

இராஜாவின் 20ஆம் வருடம், நெகேமியா பானபாத்திரம் கொடுக்கும் வேளையில், துக்க முகமாயிருந்ததை இராஜா கவனித்து அவனிடம் விசாரித்தான்.

எருசலேமின் நிர்ப்பந்தமான நிலையை அறிந்ததே அதற்குக் காரணமென்று தெரியவந்தபோது, அங்கே போவதற்கு இராஜா உத்தரவு கொடுத்தான்.

அத்தோடு அவனோடுகூடப் போக இராணுவ சேவைக்காரரையும் அனுப்பினான். இன்னும் அவன் போகும் பகுதிகளிலிருந்த தேசாதிபதிகளுக்கும் அவனுக்கு உதவி செய்யும்படி கடிதங்கள் கொடுத்தனுப்பினான் *(நெகே. 2:1-9).*

அவன் எருசலேமுக்குப் போய் இடிந்து அழிந்து போயிருந்த அலங்கங்களை முதலாவதாய்க் கட்டத்தொடங்கி 52 நாள்களில் வேலையை முடித்தான் *(நெகே. 2:10; 6:15).*

பின்பு நெகேமியா மார்க்க விஷயங்களைக் கவனித்து, அநேக சீர்த்திருத்தங்கள் செய்தான். நியாயப்பிரமாண புத்தகம் ஜனங்களுக்குப் பகிரங்கமாய் வாசிக்கப்பட்டது. ஜனங்கள் அதைக் கேட்டு மனந்திரும்பி, பாவ அறிக்கை செய்தார்கள்.

கூடாரப் பண்டிகையை ஆசரித்து, கர்த்தருடைய கற்பனைகளின்படி யெல்லாம் செய்வோமென்று ஜனங்கள் உடன்படிக்கை செய்தார்கள் *(நெகே. அதி. 8).*

பின்பு ஜனங்கள் எல்லாரும் கூடி கட்டப்பட்ட அலங்கங்களைப் பிரதிஷ்டைபண்ணினார்கள் *(நெகே. 12:27-43).*

நெகேமியா எருசலேமில் 12 வருடம் தேசாதிபதியாயிருந்த பின், சூசான் அரண்மனைப் போய் திரும்பவும் உத்தரவு பெற்றுக் கொண்டு எருசலேமுக்கு வந்தான் *(நெகே. 13:6).*

நெகேமியா கி.மு. 43இல் எருசலேமுக்கு வந்தபோது அங்கே அவன் ஜனங்களுடைய சீர்கெட்ட ஜீவிய நிலையையும், மார்க்க விஷயங்களில் ஒழுங்கின்மையையும் கண்டு திடுக்கிட்டான். தேவாலயம் அவமதிக்கப்பட்டிருந்தது. லேவியருக்குக் காணிக்கை கொடுக்கப்படவில்லை. ஓய்வு நாள் பரிசுத்தக் குலைச்சலாக்கப் பட்டது. ஜனங்கள் புறஜாதி ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்டிருந்தார்கள். இவ்விதமான தாறுமாறுகளைக் கண்டான். உடனே இவைகளை சீர்படுத்தத் தொடங்கி, தொபியா (Tobiah) என்பவனை ஆலயத்துப் பிரகாரங்களிலிருந்து வெளியே துரத்தி, லேவியரை அவர்களுடைய ஊழியத்தில் வைத்து, ஓய்வு நாளில் பட்டண வாசல்களை மூடி, புறஜாதி ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட யூதரைக் கண்டித்துத் தண்டித்தான் *(நெகே. 13:7-12).* ஆகிலும் நெகேமியா 52 நாளில் கட்டு வேலையைச் செய்து முடித்தான்.

அதன்பின் நெகேமியா மார்க்க விஷயங்களில் அநேக சீர்த் திருத்தங்களைச் செய்தான். எஸ்றாவும், லேவியரும் நியாயப் பிரமாணப் புத்தகத்தை ஜனங்களுக்கு முன் வாசித்து, வியாக்கியானப் படுத்தினார்கள். ஜனங்கள் அதைக் கேட்டு, மனந்திரும்பி, பாவ அறிக்கை செய்ததினிமித்தம் பெரிய மார்க்க மீட்சி உண்டாயிற்று. கூடாரப் பண்டிகையையும் ஆசரித்து மிகுந்த சந்தோஷம் அடைந்தார்கள் *(நெகே. அதி. 7,8).*

ஜனங்கள் ஏகமாய்க்கூடி தேவனை நோக்கி ஜெபித்து, உடன்படிக்கை பண்ணி அதை எழுதிவைத்தபோது பிரபுக்களும், ஆசாரியரும் முத்திரை போட்டார்கள் *(நெகே. அதி. 9).*

ஜனத்தின் அதிகாரிகள் எருசலேமில் குடியிருந்தார்கள் *(நெகே. 11:1).*

பின்பு எருசலேமின் அலங்கத்தைப் பிரதிஷ்டை பண்ணினார்கள். எல்லா இடங்களிலுமிருந்து லேவியர் கூடி துதியினாலும், பாடலினாலும் கீத வாத்தியங்களோடு பிரதிஷ்டையைக் கொண்டாடினார்கள் *(நெகே. 12:27-37).*

நெகேமியாவின் மரணத்தைப் பற்றி ஒன்றும் சொல்லப்பட வில்லை. நமக்கு அவன் ஒரு முன்மாதிரியாயிருக்கிறான். அவன் சொன்ன சில வார்த்தைகள் ஞாபகப்படத்தக்கவை.

"பரலோக தேவனானவர் எங்களுக்குக் காரியத்தைக் கைகூடி, வரப்பண்ணுவார்" *(நெகே. 2:20)*. நான் பெரிய வேலையைச் செய்கிறேன். நான் வரக்கூடாது *(நெகே. 6:3)*.

## நெபுசராதான் (Nabuzaradan)

நேபுகாத்நேச்சாரின், காவல் சேனாபதி. எருசலேம் கைப்பற்றப் பட்டபின் இவன் ஆலயத்தையும், அரண்மனையையும், க்ட்டடங்களையும் சுட்டெரித்து ஜனங்களையும் சிறையாக்கிக் கொண்டு போனான் *(2 இரா. 25:8-11; எரே. 39:9; 52:12-30)*. அங்கிருந்த பிரதானிகள், மந்திரிகள், ஆசாரியரான அறுபது பேரை இவன் ரிப்லாவிலிருந்த இராஜாவிடம் கொண்டு போக, இராஜா அவர்களை வெட்டிக் கொன்றான் *(2 இரா. 25:18-21)*. மற்ற ஜனங்களையும் சிறைபிடித்துக் கொண்டு போனான்.

எரேமியாவை அழைத்து, அவனைப் பாதுகாத்து, அவனுக்கு வேண்டியவைகளைச் செய்யும்படி, இராஜா நேபுசராதானுக்கு கட்டளை கொடுத்தான் *(எரே. 39:11-14)*.

## நேபுகாத்நேச்சார் (Nebuchadnezzar)

***(நேபோ! தேசத்தைக் காப்பாற்றும்)***

பாபிலோன் இராஜாவாகிய நெபுபொலாசாருக்குப் பின், அவனுடைய மகனாகிய இவன் 43 வருடம் *(கி.மு. 605-562)* அரசாண்டான். தொடக்கத்திலேயே இவன் பார்வோன்நேகோவை, (Pharaoh Necho) காமிசிலே தோற்கடித்தான் *(எரே. 46:2)*. அடுத்த வருடம் எருசலேமைக் கீழ்ப்படுத்தினான் *(தானி. 1:1,2)*. பின்பு எகிப்து வரைக்கும் போகையில், தகப்பன் மரித்துப்போனதாகக் கேள்விப்பட்டு, பாபிலோனுக்குத் திரும்பிப்போய், சிங்காசனத்தை உரித்தாக்கினான். இதற்கிடையில் யூதா தேசத்தார் கலகம் பண்ணினார்கள். யோயாக்கீனுடைய இராஜதுரோகம் நொறுக்கப்பட்டது *(கி.மு. 597-2 இரா. 24:10-16; 2 நாளா. 36:5-8)*.

பின்பு சிதேக்கியா, கலகம் பண்ணவே நேபுகாத்நேச்சார் யூதா தேசத்துக்கு மூன்றாம் முறை வந்து, எருசலேமை அழித்து, ஆலயத்தை கி.மு. 586இல் சுட்டெரித்து, பிரதான ஜனங்களைச் சிறைபிடித்துக் கொண்டு போனான் *(2 இரா. 25:1-26; 2 நாளா. 36:11-20; எரே. 39:1-14; 52:1-30)*.

பூர்வ காலத்து இராஜாக்களில் நேபுகாத்நேச்சார் அதிக பெயர் பெற்றவன். பாபிலோனை மூன்று வரிசை அலங்கங்களால் அரணித்து, சுற்றிவர அகழ்வெட்டி, புது இராஜ மாளிகையைக் கட்டியெழுப்பி,

கோயில்களைச் சீர்ப்படுத்தி, தண்ணீர் பாய்ச்சுவதற்கு வாய்க்கால் களையும் கட்டுவித்தான்.

உலக ஏழு அதிசயங்களில் ஒன்றாகிய பாபிலோனிலிருக்கும் தொங்கும் தோட்டத்தை (Hanging Gardens) இவன் உண்டாக்கினான்.

அவனுடைய கடைசி நாள்களில் அவனுக்கு ஒருவகை பைத்தியம் உண்டாயிற்று. தன்னைத் தானே ஒரு மிருகம் என்று எண்ணிக் கொண்ட மனோபாவனையாய் இருக்கலாம் *(தானி. 4:22-37).*

அவனுக்குப் பின் அவன் மகன் எவில்மெரோடாக் (Evil Merodach) இராஜாவானான்.

## நேபோ (Nebo)

***(உயரமான)***

*1.* நேபோ மலைக்கு அருகே இருந்த ஒரு மோவாபிய பட்டணம். இது ரூபன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்டு, அவர்கள் இதைத் திருப்பிக் கட்டினார்கள் *(எண். 32:3; 33:47; 1 நாளா. 5:8).* ஏசாயாவும் எரேமியாவும் இந்தப் பட்டணத்துக்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் *(ஏசாயா. 15:2; எரே. 48:1,22).*

*2.* மோவாப் தேசத்திலுள்ள அபரிம் மலைத் தொடரிலுள்ள நேபோ மலையிலிருக்கும் பிஸ்காவின் கொடுமுடியிலிருந்து மோசே கானான் தேசத்தைப் பார்வையிட்டு, அங்கே மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் *(எண். 33:47; உபா. 32:49, 50; 34:1,6).*

*3.* செருபாபேலுடன் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பி வந்த யூதர் குடியேறின பட்டணம் *(எஸ்றா. 2:29; நெகே. 7:33).*

*4.* போர்சிப்பாவில் (Borcippa) வணங்கப்பட்ட பாபிலோனிய தெய்வம் *(ஏசாயா. 46:1).* கல்விக்கும், சாஸ்திரத்துக்கும் கர்த்தா வெனப்பட்டது.

*5.* புறஜாதி ஸ்திரீகளைச் சேர்த்துக்கொண்ட யூதரின் முற்பிதா *(எஸ்றா. 10:43,44).*

## நோப் (Nob)

***(மேட்டு நிலம்)***

எருசலேமுக்கு அருகே, பென்யமீனுக்குச் சேர்ந்த ஒரு பட்டணம். இது ஒலிவ மலையிலிருந்திருக்கலாம் *(நெகே. 11:32; ஏசாயா. 10:32).* தாவீது சவுலுக்குத் தப்பி ஓடித்திரிந்த நாள்களில் போன இடம் இதுவாயிருக்கலாம். அகிமெலேக் அவனைப் பட்சமாய் ஏற்றுக்கொண்டதினிமித்தம், சவுல் ஆசாரியரையும் அங்கே

குடியிருந்தவர்களையும், ஆடுமாடுகளையும் கொன்றான் *(1 சாமு. 22:9-11,19).*

## நோவா (Noah)

### *(ஓய்வு)*

*பூர்வீகக் கோத்திரத் தலைவன். ஆதாமிலிருந்து பத்தாம் தலைமுறையான லாமேக்கின் மகன் (1 நாளா. 1:4). இவன் பிறந்த போது "நம்மைத் தேற்றுவான்" என்று சொல்லி, லாமேக்கு இவனுக்கு நோவா என்று பேரிட்டான் (ஆதி. 5:29). நோவாவின் காலத்திலிருந்த ஜனங்கள் துஷ்டராயும், தேவபயமற்றவர்களாயும் இருந்தார்கள். இவனுக்கோ கர்த்தரின் கண்களில் கிருபை கிடைத்தது. நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். தேவனோடு ஐக்கியப்பட்ட ஜீவியம் செய்தான் (ஆதி. 6:1-9). அக்காலத்திலிருந்த அவபக்தியுள்ள ஜனங்களுக்கு நீதியைப் பிரசங்கித்தான் (2 பேதுரு. 2:5; எசே. 14:14).*

*தேவன் நோவாவுக்குத் தரிசனமாகி, பூமி கொடுமையால் நிறைந்திருந்தபடியால் அதை அழிக்கப் போகிறதாகவும், அதற்குமுன் ஒரு பேழையைச் செய்யவும் சொன்னார். அவன் அதைச் செய்து கொண்டு ஜனங்களுக்கும் பிரசங்கித்தான்.*

*பின்பு கர்த்தரின் சொற்படி, நோவா தன் குடும்பத்தோடும், மிருக ஜீவன்களோடும் பேழைக்குள் பிரவேசித்தான் (ஆதி. 7:1).*

*ஜலப்பிரளயம் உண்டாகி, பூமியிலுள்ள வஸ்துக்களனைத்தையும் அழித்தபின், நோவாவும் குடும்பமும் பேழைக்குள்ளிருந்த சகல ஜீவ பிராணிகளும் புறப்பட்டு வந்தன (ஆதி. 8:18).*

*தேவன் நோவாவையும், குமாரரையும் ஆசீர்வதித்து, அவர்களோடு ஓர் உடன்படிக்கையும் செய்தான் (ஆதி. 9:1,8).*

*இவைகளின்பின் நோவா ஒரு திராட்சைத் தோட்டத்தை உண்டாக்கி, அதில் குடித்து வெறித்திருந்தபோது, காம் அவனை இகழ்ந்து பேசினதினிமித்தம் சபிக்கப்பட்டான் (ஆதி. 9:22-25).*

*ஜலப்பிரளயம் உண்டானபோது நோவாவுக்கு 600 வயது; மரிக்கும்போது 950 வயது (ஆதி. 7:11; ஆதி. 9:29).*

*அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தார்கள். அவர்களால் பூமியெங்கும் ஜனங்கள் பரம்பினார்கள் (ஆதி. 9:19).*

## நோவாள் (Noah)

*மனாசே கோத்திரத்து செலொப்பியாத்தின் குமாரத்தி (எண். 26:33; யோசுவா. 17:3).*

## பஸ்கா (Passover)

எகிப்தியரின் தலைப்பிள்ளைகளனைத்தையும், கர்த்தர் அழித்த அந்த இராத்திரியில் இஸ்ரவேலர் தப்ப வைக்கப்பட்டதை நினைவுகூரும்படி வருடாந்தரமாய்க் கொண்டாடின பண்டிகை பஸ்கா பண்டிகை எனப்பட்டது.

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை யாக்கப்படும் முன் ஜனங்கள் செய்ய வேண்டியதைப்பற்றி கர்த்தர் மோசேக்கும், ஆரோனுக்கும் கட்டளை கொடுத்தார். ஆடி மாதம் 10ஆம் நாளில் ஒவ்வொரு வீட்டுக்காரரும் பழுதற்ற, ஒரு வயதுள்ள, ஆண் ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து, பதினான்காம் நாள் அந்தி நேரத்தில் அதைக் கொன்று, அதன் இரத்தத்தை வாசல் நிலைகளின் மேல் சட்டத்திலும், நிலைகள் இரண்டிலும் தெளிக்கவேண்டும். சங்காரத்தூதன் அதன் இரத்தத்தைக் கண்டு, அந்த வாசற்படியைக் கடந்து போவான். ஆட்டுக்குட்டியின் மாம்சத்தை நெருப்பில் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிக்க வேண்டும். அதில் ஒன்றையும் விடியற்காலம் மட்டும் மீதியாக வைக்கக் கூடாது. அரைகளில் கச்சைகட்டிக் கொண்டும், கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், கையில் தடி பிடித்துக்கொண்டும் தீவிரமாய்ப் புசிக்க வேண்டும் *(யாத். 12:1-11)*.

மேலும் இஸ்ரவேலர், கர்த்தர் கொடுக்கப்போகிற தேசத்துக்குப் போன பின்பும் பயபக்தியோடும், வணக்கத்தோடும் அந்த ஆராதனையைக் கைக்கொள்ளும்படியாகவும் அவரவர் தங்கள் பிள்ளைகளுக்கும் அதைச் சொல்லும்படியாகவும் கர்த்தர் மோசேக்கும், ஆரோனுக்கும் கட்டளையிட்டார்.

பின்வரும் சந்ததியாரும் பஸ்காவின் கருத்தை அறியும்படி, "கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதற்கு இது அடையாளமாகவும், ஞாபகக் குறியாகவும் இருக்கிறது" என்று நீங்கள் சொல்லவேண்டும் *(யாத். 12:26,27; 13:14-16)*.

பழைய ஏற்பாட்டின் காலத்தில் வீட்டுக்காரரில் ஒருவன், ஆட்டுக்குட்டியை ஆலயத்துக்குக் கொண்டுபோய், ஆசாரியரைக் கொண்டு கொன்று, இரத்தத்தைச் சிந்தி கொழுப்பைத் தகனித்த பின், மாமிசத்தை வீட்டுக்குக் கொண்டுபோய், நெருப்பில் சுட்டு, புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும் புசிப்பார்கள். அதோடு திராட்சரசப்பாத்திரத்தில் நான்குமுறை பானம் பண்ணுவார்கள். இயேசு கடைசி பஸ்காவை ஆசரித்த வேளையில் பாத்திரத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணினது இந்த வழக்கத்தின்

படியாயிருக்கலாம் (லூக்கா. 22:17). இடையில் "அல்லேல்" என்னும் சங்கீதங்களையும் பாடுவார்கள்.

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து, நமக்காகப் பலியிடப் பட்டிருக்கிறாரே என்று பவுல் சொல்லுகிறான் (1 கொரி. 5:7).

இந்த ஆராதனையிலிருந்து நாம் அறியவேண்டிய சில காரியங்களுண்டு.

*1. இரத்தம் : பாவ மன்னிப்புக்காகத் தெளிக்கப்பட வேண்டியது (எபி. 9:22).*

*2. புளிப்பில்லாத அப்பம் : துப்புரவு, உண்மை என்பவைகளைக் குறிக்கிறது (1 கொரி. 5:8).*

*3. கசப்பான கீரை : இஸ்ரவேலர் எகிப்தில் அடைந்த அடிமைத் தனத்தை நினைவுகூறும்படியாகப் புசிக்கப்பட்டது. இது பாவத்தினிமித்தம் மனஸ்தாபப்படுவதையும் கருதுகிறது.*

*4. அரையில் கச்சை கட்டிக் கொள்வது : புறப்பட ஆயத்தமாய் இருப்பதைக் காட்டுவதோடு, விடுதலை சீக்கிரம் கிடைக்குமென்ற விசுவாசத்தையும் குறிக்கிறது.*

*5. பஸ்கா நினைவுகூருதலுக்கான ஆராதனை : அது இஸ்ரவேலர் பாதுகாக்கப்பட்டு, விடுதலை பெற்றதை நினைவு கூரும்படியும், பின்வரப்போகிற பாவ நிவாரணப் பலிக்கு முன் அடையாளமாகவும் ஏற்படுத்தப்பட்டது.*

இந்தப் பஸ்கா பலியின் கருத்தை அறிவதற்காக, யூதர் அதை ஆசரிக்கும் தருணத்தில், அந்தக் குடும்பத்தின் மூத்த மகன், தகப்பனை நோக்கி, இதன் கருத்து என்னவென்று கேட்கவேண்டும். தகப்பன் மறுமொழியாக : எகிப்திலே தங்கள் முற்பிதாக்களைக் கர்த்தர் பாதுகாத்தார் என்பதையும், கசப்பான கீரை எகிப்தில் அவர்களுடைய ஜீவியத்தை எகிப்தியர் கசப்பாக்கினார்கள் என்பதை நினைவுகூரும்படியாகவும் இந்தப் பஸ்காவை ஆசரிக்கிறோம் என்று சொல்லவேண்டும். "பஸ்கா" என்பது "பாதுகாத்தல்" என்பதைக் குறிக்கும்.

## பத்சேபாள் (Bathsheba)

### (ஆணையின் மகள்)

இவள் எலியாமின் குமாரத்தி. ஏத்தியனான உரியாவின் மனைவி (2 சாமு. 11:3). அம்மியேலின் குமாரத்தி "பத்சுவாள்" என்றும் சொல்லியுள்ளது (1 நாளா. 3:5).

உரியா, யோவாபின் கீழ் அம்மோனியருக்கு விரோதமாய் ரப்பாவில்

யுத்தம் செய்யும் நாள்களில், தாவீது உரியாவின் மனைவியாகிய பத்சேபாளை அழைப்பித்து, அவளோடு சயனித்தான். அதன்பின் உரியாவைக் கொன்று, பத்சேபாளைத் தனக்கு மனைவியாக எடுத்துக்கொண்டான். இதினிமித்தம் கர்த்தர் நாத்தான் தீர்க்கதரிசியைக் கொண்டு தாவீதைக் கடிந்துகொண்டார் *(2 சாமு. 12:12,13).*

தாவீதின் வயோதிப காலத்தில் பத்சேபாள் நாத்தானுடைய உதவியோடு, சாலொமோனை இராஜாவாக்கக் காரணமாயிருந்தாள் *(1 இரா. 1:30-39).*

பின்பு அதோனியா பத்சேபாளிடம் கேட்டபடி அவன் அபிஷாகை விவாகம்பண்ண உத்தரவு கொடுக்க வேண்டுமென்று, சாலொமோனிடம் கேட்டாள். இது சிங்காசனத்தையும் எடுக்க நோக்கமான காரியமென்றெண்ணி, சாலொமோன் அதோனியாவைக் கொன்றான் *(1 இரா. 2:19-25).*

தாவீது உரியாவின் மனைவியாயிருந்தவளிடத்தில் சாலொமோனைப் பெற்றாள் என்று குறித்துள்ளது *(மத். 1:6).*

## பரபாஸ் (Barabbas)

***(ரபீயின் மகன்)***

இவன் கலகம்பண்ணி, கொலை செய்த ஒரு கள்ளன். ஆகையால் காவலில் வைக்கப்பட்டிருந்தான். பஸ்காப் பண்டிகை நாள்களில் ஜனங்கள் கேட்டுக்கொள்ளுகிறவனை விடுதலையாக்குவது பிலாத்துவுக்கு வழக்கமாயிருந்தது. இயேசுவை விடுதலையாக்க மனதாய், பிலாத்து ஜனங்களிடம் கேட்டபோது, பிரதான ஆசாரியர்களால் ஏவப்பட்டு, பரபாசை விடுதலையாக்கும்படி கேட்டார்கள். ஜனங்களைப் பிரியப்படுத்தும்படி அவனை விடுதலையாக்கினான் *(மத். 27:16-26; மாற்கு. 15:7-11); யோவான். 18:19-40).* பரபாசுக்குப் பதிலாக இயேசு மரித்தார். ஆகவே பிரதியுபகார பாவ நிவர்த்திக்கு பரபாஸ் ஒரு உதாரணமாகிறான்.

## பரிசுத்த ஆவி (Holy Spirit)

திரியேகத்துவத்தின் மூன்றாம் நபர். சபையைப் பரிசுத்தப்படுத்துவதே இவருடைய முக்கிய கிரியை. ஞானஸ்நானம் கொடுக்கும் வேளையில் சொல்லப்படும் வாக்குமூலத்திலிருந்து இவருடைய ஆள்தத்துவம் விளங்குகிறது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இயேசு சீடருக்குச் சொன்னார் *(மத். 28:19).*

இயேசு தாமே ஞானஸ்நானம் பெற்ற தருணத்திலும், திரியேகத்துவம் தெளிவாகக் காட்டப்பட்டது (மத். 3:16; 16,17; மாற்கு. 1:10,11; லூக்கா. 3:22).

அப்போஸ்தலனாகிய பவுல் சபைகளுக்கு வாழ்த்துதல் சொல்லும்போது, இம்மூவரையும் குறிக்கிறான். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்களனைவரோடுங் கூட இருப்பதாக, ஆமென் (2 கொரி. 13:14).

குமாரனின் வேண்டுதலின்படி பிதா, பரிசுத்த ஆவியை அனுப்புகிறதினாலும் (யோவான். 14:16,17). பிதாவினிடத்திலிருந்துக் குமாரன் பரிசுத்த ஆவியை அனுப்புகிறதினாலும் (யோவான் 15:26). அவர் பிதா, குமாரன் என்பவர்களிலும் பார்க்கக் குறைவானவரென்று நினைக்க இடமில்லை. பரிசுத்த ஆவியானவர் தாமே தமது சுயமாய்க் கிரியை செய்கிறார். ஆவியானவர் பின்வரப்போகிற காரியங்களை முன்னறிவிக்கிறவர் (1 சாமு. 10:6; 19:23,24; அப். 28:27; 1 தீமோ. 4:1). அவர் போதிக்கிறவர் (லூக்கா. 12:12). தேற்றரவாளன் (யோவான் 14:16). பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு என்பவைகளைப்பற்றி உலகத்தைக் கண்டித்து உணர்த்துகிறவர் (யோவான். 16:7,8). அவர் சத்திய ஆவி. சகல சத்தியத்துக்குள்ளும் நம்மை நடத்துகிறவர் (யோவான். 16:13). நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறவர். தேவ சித்தத்தின்படி, நமக்காக வேண்டுதல் செய்கிறவர் (ரோமர். 8:26,27). நாம் நமது கிரியைகளால் பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தக்கூடும் (எபே. 4:30). அவர் தாம் தெரிந்துகொள்வோரை ஊழியத்துக்கு அழைக்கிறார். “பர்னபாவையும், பவுலையும் தான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்து விடுங்களென்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்” (அப். 13:2).

எருசலேமில் அப்போஸ்தலரும் மூப்பரும் கூடி விருத்தசேதன விஷயத்தைப்பற்றி ஆலோசித்தபின், எழுதின நிருபத்தில் அவர்களுடைய தீர்மானங்கள், “பரிசுத்த ஆவிக்கும், எங்களுக்கும் நலமாகக் கண்டது” என்று சொன்னதிலிருந்து, அவரே சபையில் கைக்கொள்ள வேண்டிய கோட்பாடுகளை வெளிப்படுத்துகிறவரெனத் தெரிகிறது (அப். 15:6-29).

நாசரேத்தூரின் தேவாலயத்தில் இயேசு ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தில், “கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார்” என்பதை வாசித்த பின், இந்த வேத வாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று என்றார் (லூக்கா. 4:16-21; ஏசாயா. 61:1).

ஆவியானவரே வேத வசனத்தை உறுதிப்படுத்துகிறவர் (1 கொரி. 2:5). நாம் பாவ உணர்ச்சி அடைந்து உண்மையை ஏற்றுக்கொள்வதற்கு,

அவர் காரணகர்த்தராயிருக்கிறது மாத்திரமல்ல, நாம் தேவனுடைய பிள்ளைகளாகிறோம் என்பதற்கும் சாட்சி கொடுக்கிறார் (ரோ. 8:14-16). நாம் விசுவாசிகளாகும்போது, அவருக்குள் முத்திரை போடப்படுகிறோம் (எபே. 1:13). அவர் மூலமாக தேவனிடம் சேரும் சிலாக்கியத்தைப் பெறுகிறோம். தேவனுடைய வாசஸ்தலமாகக் கட்டப்பட்டும் வருகிறோம் (எபே. 2:18-22).

கர்த்தருடைய ஆவியானவர் நமக்கு விடுதலையைக் கொடுத்து அவருடைய சாயலை அடையும்படி நம்மை மறுரூபப்படுத்துகிறார் (2 கொரி. 3:17,18). தேவனுடைய இராஜ்யம், நீதியும், சமாதானமும், பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாம் (ரோம. 14:17).

உண்மையான பரிசுத்த அன்பு உண்டாவதற்கு ஆவியானவரே காரணர். அன்பே ஆவியின் முதலாம் கனி. ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்போதே, ஆவியின் கனி ஒன்பதும், நம்மில் காணப்படக்கூடும். விசுவாச அளவின்படியே, சபையில் வரங்கள் பாவிக்கப்படும். ஊழியங்களும், அந்த அளவின்படியே நியமிக்கப்பட வேண்டும். (1 கொரி. 12:13). சபைகளில் ஐக்கியமும், ஒற்றுமையும் உண்டாவதற்கு ஆவியானவரே காரணர் (எபே. 4:3). இதினிமித்தம் நாம் ஆவியானவரைத் துக்கப்படுத்தாமலும், அவித்துப் போடாமலும் இருக்க வேண்டும். (எபே. 4:30; 1 தெச. 5:19).

ஆகவே, இந்தப் பாவம் நிறைந்த உலகத்திலே, கிறிஸ்தவர்களாகிய நாம் பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்று, அவரால் நடத்தப்பட்டால் பரிபூரணமடைந்து, பரலோக இராஜ்யத்தில் பங்குள்ளவர்களாகலாம்.

சகோதரனே, சகோதரியே, பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதே நாம் விரும்ப வேண்டிய காரியம்.

## பரிசேயர் (Pharisees)
### *(பிரிந்தவர்கள்)*

யூதருக்குள்ளிருந்த ஓர் பூர்வீக மார்க்கபேத சமயத்தினர். இவர்கள் மோசேயின் பிரமாணங்களை நுட்பமாய்க் கைக்கொள்ள வேண்டுமென்றும், மூப்பர்களின் பாரம்பரியங்களை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றும் சாதித்தார்கள். "நமது மார்க்கத்திலுள்ள சமய பேதங்களில் மிகவும் கண்டிப்பான சமயம்" என்றும் பவுல் சொல்லுகிறான் (அப். 26:5).

அசிதீயரின் (Hasidaens) சமயத்திலிருந்து இது துவங்கியிருந்தும் பரிசேயர் என்ற பெயர் யோவான் ஹிரீனஸ் (John Hyreanus) (கி.மு. 135-105) என்பவன் காலத்தில் இருந்து வழங்கிற்று.

இவர்கள் சுயாதீனத்தை விரும்பியும், ரோம அரசாட்சிக்கு விரோதமாயிருக்கவில்லை. உலக மேன்மையை விரும்பி, ரோமரிடமிருந்து இராஜாங்கத்துக்கடுத்த நிலைமைகளைத் தேடவுமில்லை. தங்களுடைய பூர்வீக சமய ஒழுங்குகளைப் பாதுகாப்பதே, அவர்களுடைய முக்கிய நோக்கமாயிருந்தது. ஆவிகள், தேவதூதர் என்பவை உண்டென்று நம்பினார்கள். உயிர்த்தெழுதல் உண்டென்றும் ஒப்புக் கொண்டார்கள் *(அப். 23:8)*. நியாயப்பிரமாணத்தை சொல்லர்த்தமாய்க் கைக்கொள்வது அவசியமென்று பிடிவாதமாய் நின்றதினிமித்தம், யோவான் ஸ்நானன் இவர்களை "விரியன் பாம்புக்குட்டிகள்" என்றும், இயேசு இவர்களை "மாயக்காரர்" என்றும் சொல்ல நேரிட்டது *(மத். 3:7; 23:27)*.

துவக்கத்தில், அவர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா, இயேசுவாயிருக்கலாம் என்று எண்ணினார்கள். பின்பு அவர்களுடைய சில போதனைகளை அவர் கண்டித்துப் பேசினதினால், அவருக்கு விரோதிகளாயினர். கடைசியில் அவர்கள் சதுசேயர், ஏரோதியரோடு கூடி, இயேசுவின் மேல் குற்றஞ்சாட்டி, இயேசு சிலுவையிலறையப் படவும் காரணரானார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்தபின் அவர்களில் அநேகர் விசுவாசிகளானார்கள் *(அப். 5:34; 15:5; பிலி. 3:5)*.

## பர்சிலா (Barzila)

### *(இரும்பு போன்றவன்)*

இவன் ரோகிலிம் ஊரான்; ஒரு கிலேத்தியன்; தாவீது அப்சலோமுக்குத் தப்பி ஓடி, மக்னாயீமில் சேர்ந்தபோது, இவன் தாவீதுக்கும் அவன் ஜனங்களுக்கும் தின்பண்டங்களைக் கொண்டுவந்தான் *(2 சாமு. 17:27-29)*.

பிற்பாடு தாவீது எருசலேமுக்குத் திரும்பி வருகையில், பர்சிலா, அவனோடு யோர்தான் துறை மட்டும் வந்தான். தாவீது தன்னோடு எருசலேமுக்கு வரும்படி அவனை அழைத்தபோது, தான் வயோதிபனாயிருந்தபடியால் போகச் சம்மதியாமல், தன் மகன் கிம்காமை கூடப்போக அனுப்பிவைத்தான் *(2 சாமு. 19:31-40)*.

தாவீது மரிக்குமுன், கிம்காமுக்குத் தயை செய்யும்படி சாலொமோனுக்குச் சொன்னான் *(1 இரா. 2:7)*.

2. மேற்சொல்லப்பட்ட பர்சிலாவின் மருமகன் அவனுடைய பேரை எடுத்துக்கொண்டான் *(எஸ்றா. 2:61; நெகே. 7:63)*.

3. மேகோலாத்தியனான பர்சிலாவின் குமாரனாகிய ஆதரியேல், சவுலின் மகளாகிய மீகாளை விவாகம் செய்தான் *(2 சாமு. 21:8)*.

## பர்திமேயு (Bartimaeus)

**(திமேயுவின் மகன்)**

எரிகோ பட்டணத்திலிருந்து இயேசு புறப்பட்டுப்போகையில் அவர் சொஸ்தமாக்கின ஒரு பிச்சைக்காரக் குருடன் (மாற்கு. 10:46-52).

லூக்கா இந்தச் சம்பவத்தைக் குறித்து எழுதின போதும் இவனுடைய பெயரைச் சொல்லவில்லை (லூக்கா. 18:35-43).

மத்தேயு அச்சமயத்தில் இரண்டு குருடர் சுகமானார்களென்று சொல்லுகிறான் (மத். 20:29-34).

ஒரு சமயத்திலோ, வெவ்வேறு சமயங்களிலோ இரண்டு குருடர் சுகப்பட்டிருப்பார்கள். பர்திமேயு சத்தமிட்டுக் கூப்பிட்டதால் அவன் பெயர் குறிக்கப்பட்டுள்ளது (மாற்கு. 10:48).

## பற்தொலொமேயு (Bartholomew)

**(தல்மேயுவின் மகன்)**

இவன் பன்னிரு சீஷரில் ஒருவன் (மத். 10:3; மாற்கு. 3:18; லூக்கா. 6:14; அப். 1:13). புதிய ஏற்பாட்டில் வேறொரு இடத்திலும் இவன் பெயர் சொல்லப்படவில்லை. இவனுடைய முதற்பெயர் யோவான். மறுபெயர் நாத்தான்வேல் என்று குறித்துள்ளது (யோவான். 1:45-49; 21:2).

பாரம்பரியத்தின்படி, இவன் இந்தியாவிலோ, அராபியாவிலோ சுவிசேஷத்தைக் கூறினபின் இரத்தச்சாட்சியாய், சிலுவையில் அறையுண்டு மரித்தான்.

## பர்னபா (Barnabas)

**(ஆறுதலின் மகன்)**

இவனுடைய பெயர் யோசே. சீப்புரு தீவானாகிய இவன் ஒரு லேவியன். தனக்கு உண்டான நிலத்தை விற்று, எருசலேமிலிருந்த அப்போஸ்தலருக்குக் கொடுத்தான் (அப். 4:36,37).

சவுல் குணப்பட்டபின் எருசலேமுக்கு வந்தபோது சீஷர் அவனுக்குப் பயந்திருந்ததினால் பர்னபா அவனைச் சேர்த்துக் கொண்டு, அப்போஸ்தலரோடு ஒப்புரவாக்கிவிட்டான் (அப். 9:26,28).

அந்தியோகியாவில் எழுப்புதல் உண்டான சமயத்தில் எருசலேம் சபையார் பர்னபாவை அங்கே அனுப்பினார்கள். அவன் போய்ப் பார்த்தபின், சவுலைத் தேடி தர்சுவுக்குப்போய், அவனைக்கூட்டி வந்து, அவர்களிருவரும் ஒரு வருடமாக உபதேசம் பண்ணினார்கள்.

முதன் முதல் அந்தியோகியாவில் சீடர்களுக்குக் கிறிஸ்தவர்களென்ற பெயர் உண்டாயிற்று (அப். 11:22-26).

அப்பொழுது யூதேயாவில் பஞ்சம் உண்டானதைக் கேள்விப்பட்டு, அந்தியோகியாவின் கிறிஸ்தவர்கள், பணம் சேகரித்து, பர்னபா, சவுல் என்பவர்களின் கையில் கொடுத்தனுப்பினார்கள்.

அவர்கள் திரும்பி வந்தபின், ஆராதனை செய்து கொண்டிருக் கையில், ஆவியானவர் பர்னபாவையும், சவுலையும் ஊழியத்துக்குப் பிரித்து விடும்படி சொன்னபோது, சபையார் அவர்களை அனுப்பி வைத்தனர் (அப். 13:1-3).

அவர்கள் புறப்பட்டு, யோவானையும் கூட்டிக்கொண்டு, முதலில் சீப்புரு தீவுக்குப் போனார்கள்.

பின்பு பிரயாணம்பண்ணி லீஸ்திரா என்ற இடத்துக்குப் போனார்கள். அங்கே பவுல் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பிறவிச் சப்பாணி சுகம் அடைந்தான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, பர்னபாவை "யூப்பித்தர்" என்றும், சவுலை "மெர்க்கூரி" என்றும் சொல்லிக் கொண்டார்கள். ஆகிலும் பின்பு யூதரால் தூண்டிவிடப்பட்டு ஜனங்கள் பவுலைக் கல்லெறிந்தார்கள் (அப். 14:12,19). அதன் பின் பர்னபாவும் சவுலும் வேறு இடங்களுக்குப் போய் பிரசங்கித்தபின், திரும்பி அந்தியோகியாவுக்கு வந்து, அங்கே சீடருடனே அநேக நாள் சஞ்சரித்தார்கள் (அப். 14:27,28). அந்நாள்களில் கிறிஸ்தவர்களாகிற புறஜாதியார் விருத்தசேதனமடையாவிடில் இரட்சிக்கப்பட மாட்டார்களென வாக்குவாதமுண்டாயிற்று. அதைப்பற்றித் தீர்மானம் செய்யும்படி பவுல், பர்னபா என்பவர்கள் எருசலேமுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கே சபைகூடி அது அவசியமில்லையென்று தீர்த்துக்கொண்டார்கள் (அப். 15:1-21).

அவர்கள் திரும்பி அந்தியோகியாவுக்கு வந்து சில நாள்கள் சென்றபின், இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில், மாற்குவைக் கூட்டிக்கொண்டுபோகும் விஷயத்தில், இருவருக்கும் வாக்குவாதம் உண்டாகி, ஒருவரையொருவர் விட்டுப் பிரிய நேரிட்டது. பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு சீப்புருவுக்குப் போனான். பவுல் சீலாவைத் தெரிந்துகொண்டு புறப்பட்டுப் போனான் (அப். 15:36-41).

இதன்பின் பவுலும், பர்னபாவும் ஒருமித்து ஊழியஞ்செய்யாவிடினும் அவர்களுக்கிருந்த சிநேகிதம் முடியவில்லை. பவுல் பின்பு பர்னபாவைப் பற்றி மரியாதையாய் தன் நிருபங்களில் எழுதியுள்ளான் (1 கொரி. 9:6; கலா. 2:13).

லூக்கா இவர்களுடைய பேர்களை ஆரம்பத்தில் "பர்னபாவும் சவுலும்" என்றும், பின்பு "பவுலும் பர்னபாவும்" என்றும் குறித்துள்ளான் (அப். 11:30; 13:42).

## பவுல் (Paul)

### *(அற்பம்)*

தர்சு பட்டணத்து யூதன். தொடக்கத்தில், அவன் பெயர் சவுல். பென்யமீன் கோத்திரத்தான். பரிசேயனாயிருந்த இவன் பிற்பாடு கிறிஸ்தவ சபைக்கு முதற்தரமான முதலாளியானான்.

இவன் தர்சு கலாசாலையில் கல்வி பயின்று, பின்பு மேலான படிப்புக்காக எருசலேமுக்குப் போய், பேர்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேலிடம் கற்றான் *(அப். 22:3)*.

ஸ்தேவானைக் கல்லெறிந்தவர்கள் தங்கள் வஸ்திரங்களை இவனிடம் வைத்தார்கள் என்பதே, இவனைப்பற்றி முதன் முதல் வேதாகமத்தில் குறித்துள்ளது *(அப். 7:58)*. அவனைக் கொலை செய்ய இவனும் சம்மதித்திருந்தான் *(அப். 8:1)*.

ஸ்தேவான் கொல்லப்பட்டபின், சவுல் தமஸ்குவிலுள்ள சீஷரை துன்புறுத்தும்படி, பிரயாணமாய்ப் போகும் வழியில், உயிர்த்தெழுந்த இயேசு அவனுக்குத் தரிசனமானதினிமித்தம், குணப்பட்டான்.

பின்பு தமஸ்குவுக்குப் போய், ஞானஸ்நானம் பெற்று, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று பிரசங்கித்தான் *(அப். 9:20)*. யூதர் அவனைக் கொலை செய்ய எத்தனித்தபோது, அவ்விடமிருந்து போய்விட்டான். அந்நாள்களில் அவன் அராபி தேசத்துக்குப் போய் மூன்று வருடம் தங்கியிருந்த தாகத் தெரிகிறது *(கலா. 1:17,18)*.

பின்பு தமஸ்குவில் தைரியமாய் இயேசுவே கிறிஸ்து என்று திருஷ்டாந்தப்படுத்தி, யூதரைக் கலங்கப் பண்ணினான். அவர்கள் அவனைப் பிடிக்கும்படி கோட்டை வாசல்களில் காத்திருக்கையில், சீஷர் அவனைக் கூடையில் வைத்து, மதில் வழியாய் இறக்கிவிட்டார்கள் *(அப். 9:22-25)*.

அவன் எருசலேமுக்குப்போய் சீஷருடன் சேர்ந்துகொள்ள விரும்பியபோதும், அவர்கள் அவனை ஏற்றுக்கொள்ளாததினிமித்தம், பர்னபா அவனைக் கூட்டிக்கொண்டு போய் அப்போஸ்தலரோடு ஒருமைப்படுத்தினான். அந்நாள்களில் பவுல் பேதுருவையும், யாக்கோபையும் சந்தித்தான் *(கலா. 1:18,19)*. எருசலேமில் அவன் போக்கும் வரத்துமாயிருந்து, இயேசுவைப்பற்றி தைரியமாய் பிரசங்கித்தான் *(அப். 9:28)*.

கிரேக்க யூதர் அவனைக் கொலை செய்ய ஆலோசித்தபோது, தேவன் அவனுக்குத் தரிசனமாகி, "நீ என்னைக் குறித்துச் சொல்லும் சாட்சியை இவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்...... நான் உன்னைத் தூரமாய்ப் புறஜாதிகளிடத்தில் அனுப்புவேன்" என்றார்

*(அப். 22:17-21)*. அப்பொழுது சகோதரர் அவனைச் செசரியாவுக்கு அழைத்துக் கொண்டுபோய், தர்சுவுக்கு அனுப்பிவிட்டார்கள் *(அப். 9:30)*. பவுல், சீரியா, சிலிசியா நாடுகளில் பிரசங்கித்துக்கொண்டிருந்தான் *(கலா. 1:21)*. பவுல் இந்தப் பகுதிகளில் ஏறக்குறைய *8-10* வருடங்களாக ஊழியம் செய்ததாகத் தெரிகிறது. இந்நாள்களில் பவுல் *2* கொரி. *12:1-9*இல் சொல்லப்பட்ட அனுபவத்தை அடைந்திருக்கலாம்.

இதற்குப்பின், பர்னபா அந்தியோகியாவிலிருந்து வந்து, பவுலைக் கூட்டிக்கொண்டுபோய் இருவரும் ஒரு வருடமாக சபையோடு கூடியிருந்து, ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். அங்கே முதன் முதலாகக் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் விசுவாசிகளுக்கு வழங்கிற்று *(அப்.11:25,26)*. அந்நாள்களில் எருசலேமிலே பஞ்சம் உண்டாயிருந்த படியால் அந்தியோகியாவிலுள்ள சபையார், அங்கேயிருந்த சகோதரருக்கு உதவியாகப் பணம் சேர்த்து பர்னபா, சவுல் என்பவர்களின் கையில் கொடுத்தனுப்பினார்கள் *(அப். 11:29,30)*.

அவர்களுடைய தர்ம ஊழியம் முடிந்தபின் பர்னபாவின் சகோதர முறையான மாற்குவையும் கூட்டிக்கொண்டு அந்தியோகியாவுக்கு வந்தார்கள் *(அப். 12:25)*.

அங்கே அந்தியோகியா சபையார் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலின்படி, பர்னபாவையும், சவுலையும் அபிஷேகம்பண்ணி, தேவஊழியத்துக்கென்று அனுப்பினார்கள் *(அப். 13:1-3)*. *(கி.பி. 46)* அவர்கள் மாற்கு என்பவனையும் கூட்டிக்கொண்டு சீப்புரு தீவுக்குப்போய், பாப்போ பட்டணத்துக்கு வந்தார்கள். அங்கேயிருந்த அதிபதியாகிய செர்கியு பவுல் என்பவனோடு பவுல் தேவ வசனத்தைப் பேசின வேளையில், அவனோடிருந்த எலிமா அவர்களை எதிர்த்தான். பவுல் பரிசுத்த ஆவியினால் நிறைந்தவனாய் அவனைக் கண்டித்தபோது அவன் குருடனானான். அதிபதி விசுவாசித்தான் *(அப். 13:6-12)*.

இந்தச் சம்பவத்தின்பின், சவுலின் பெயரைப் பவுல் என்று மாற்றினதோடு, முன்போல் "பர்னபாவும் சவுலும்" என்று குறிக்காமல், பவுலும் அவனைச் சேர்ந்தவர்களும் என்று லூக்கா எழுதுகிறான் *(அப். 13:13)*. பின்பு அவர்கள் பிரயாணம் பண்ணி, பெர்கே பட்டணத்துக்கு வந்தார்கள். இங்கே, மாற்கு அவர்களை விட்டுப்பிரிந்து எருசலேமுக்குத் திரும்பிப்போனான். அவர்கள் புறப்பட்டு, பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவுக்கு வந்தார்கள் *(அப். 13:14)*.

அங்கேயுள்ள ஜெப ஆலயத்தில் பவுல் பிரசங்கம்பண்ணினபோது, அநேகர் அவனைப் பின்பற்றினார்கள். யூதர்கள் அதைக் கண்டு பொறாமை கொண்டு, அப்போஸ்தலரைத் தூஷித்தார்கள். இதினிமித்தம் "நாங்கள் புறஜாதியாரிடம் போவோம்" என்று சொல்லி, இக்கோனியா பட்டணத்துக்குப்போய், அங்கிருந்து லீஸ்திராவுக்குப் போனார்கள்.

அங்கே பவுல் ஒரு சப்பாணியைச் சொஸ்தமாக்கினபடியால், ஜனங்கள் ஆர்ப்பரித்து, பவுலை 'மெர்க்கூரி' என்று சொல்லி பலி செலுத்த ஆயத்தமானார்கள். பவுல் அதைத் தடுத்தான். பின்பு யூதர்கள் வந்து ஜனங்களை ஏவி, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப் போனான் என்று எண்ணி, பட்டணத்துக்கு வெளியில் போட்டுவிட்டார்கள் *(அப். 14:1-19)*.

மறுநாளில் அவர்களிருவரும் தெர்பைக்குப்போய், சுவிசேஷத்தைப் பிரசங்சித்து, திரும்பவும் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியாவுக்கு வந்து, பிசீதியா நாட்டைக் கடந்து, பம்பிலியாவுக்கு வந்து, பெர்கேயில் பிரசங்கித்து, அத்தாலியா பட்டணத்துக்குப்போய், அங்கிருந்து அந்தியோகியாவுக்கு வந்து சேர்ந்தார்கள் *(அப். 14:20-26)*.

அந்நாள்களில் கிறிஸ்தவர்களான யூதர், புறஜாதியார் கிறிஸ்தவர்களாகும்போது, விருத்தசேதனம் பெறவேண்டுமென்றும், மோசேயின் நியாயப் பிரமாணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் விவாதித்தார்கள். இந்த விஷயத்தைப் பற்றித் தீர்மானம் செய்யும்படி, அந்தியோகியா சபையார் பவுலையும், பர்னபாவையும், வேறு சிலரையும் எருசலேமுக்கு அனுப்பினார்கள். அங்கே அப்போஸ்தலரும், மூப்பரும் கூடி, புறஜாதிக் கிறிஸ்தவர்களைக் கலக்கம் பண்ணலாகாதென்றும், விக்கிரகாராதனைக்கும், வேசித்தனத்துக்கும், இரத்தத்திற்குமே விலகியிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள் *(அப். 15:1-21)*.

அப்போஸ்தலர் அந்தியோகியாவுக்குத் திரும்பிவந்து சில நாள்களுக்குப் பின் பவுல் மறுபடியும் பிரயாணத்துக்கு ஆயத்தமானான்.

## இரண்டாம் சுவிசேஷப் பிரயாணம்

மாற்குவையும் கூட்டிக்கொண்டு போகிற விஷயத்தில், பவுலுக்கும் பர்னபாவுக்குமிடையில் தர்க்கமுண்டாகி அவர்கள் ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து, பர்னபா மாற்குவைக் கூட்டிக்கொண்டு, சீப்புரு தீவுக்குப் போனான். பவுல் சீலாவோடு புறப்பட்டுப்போனான் *(அப். 15:39,40; 18:22)*.

பவுலும் சீலாவும் சீரியாவிலும், சிலிசியாவிலுமுள்ள சபைகளைத் திடப்படுத்தி, தெர்பைக்கும் லீஸ்திராவுக்கும் போய், அங்கே தீமோத்தேயுவைக் கண்டு அவனையும் கூட்டிக்கொண்டு போனார்கள். அவர்கள் பிரிகியா, கலாத்தியா நாடுகளைக்கடந்து, பித்தினியா நாட்டுக்குப் போகாமல், ஆவியானவரால் தடுக்கப்பட்டு, துரோவாவுக்கு வந்தார்கள் *(அப்.16:1-8)*. அவ்விடத்தில்

மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் தன்னிடம் உதவி கேட்டதாக, பவுல் ஒரு தரிசனம் கண்டு, அங்கே போகும் நோக்கமாய் இருவரும் பிலிப்பி பட்டணத்துக்கு வந்து தங்கினார்கள். அந்நாள்களில் லீதியாள் குணப்பட்டாள் *(அப். 16:9-15)*. குறிசொல்லுகிற ஒரு பெண்ணைப் பவுல் குணமாக்கினதினிமித்தம் ஜனங்கள் கலகம்பண்ணி, பவுலையும், சீலாவையும் சிறைச்சாலையில் போட்டார்கள். இது சிறைச் சாலைக்காரனும், அவன் வீட்டாரும் விசுவாசிகளாவதற்கு ஏதுவாயிற்று *(அப். 16:19-34)*

பின்பு அவர்கள் தெசலோனிக்கே, பெரோயா என்னும் இடங்களில் சுவிசேஷத்தைக் கூறினபோது, கலகம் உண்டாயிற்று. இதினிமித்தம் பவுல் அத்தேனே பட்டணத்துக்குப் போய், அங்கே மார்ஸ் மேடையில் நின்று, பிரசங்கம் பண்ணினான் *(அப். 17:18-34)*.

இங்கிருந்து பவுல் கொரிந்து பட்டணத்துக்குப் போய், ஆக்கில்லாவையும், பிரிஸ்கில்லாளையும் சந்தித்தான் *(அப். 18:1-4)*. அங்கே யூதர்கள் அவனை எதிர்த்ததினால் அவர்களை விட்டு, யுஸ்துவின் வீட்டில் தங்கி, சுவிசேஷத்தைக் கூறினான். பிற்பாடு தெசலோனிக் கேயருக்கு இரண்டு நிருபங்களை எழுதினான்.

அவ்விடமிருந்து எபேசு பட்டணம் போய், பின்பு கப்பல் ஏறி, செசரியாவுக்கு வந்து எருசலேமுக்குப் போய், மூன்று நான்கு வருடங்களின் பின், திரும்பவும் அந்தியோகியாவுக்கு வந்தான் *(அப். 18:19-22)*.

இதோடு பவுலின் இரண்டாம் பிரயாணம் முடிந்தது.

## மூன்றாம் சுவிசேஷப் பிரயாணம்

பவுல் அந்தியோகியாவிலிருந்து புறப்பட்டு, பிரிகியா, கலாத்தியா நாடுகளிலிருந்த சீஷரைத் திடப்படுத்தினான் *(அப். 18:23)*.

அதன்பின் எருசலேமுக்கு வந்து அங்கே மூன்று வருடம் ஊழியம் செய்தான்.

எபேசுவில் இதற்குமுன் அப்பொல்லோ என்பவன் சுவிசேஷத்தைக் கூறியிருந்தான். ஆனால் விசுவாசிகளானோர் பரிசுத்தாவியைப் பெறாததினால் பவுல் அதைப்பற்றிப் போதித்தான். அவர்கள் பரிசுத்தாவி பெற்றபோது, பெரிய எழுப்புதல் உண்டாயிற்று. பவுல் மூன்று மாதம் ஜெப ஆலயத்தில் பிரசங்கிக்கையில், அவிசுவாசிகள் விரோதத்தினிமித்தம் அவ்விடத்தை விட்டு திறன்னு என்பவனின் வித்தியாசாலையில் இரண்டு வருடம் தர்க்கம் செய்து வந்தான். ஆசியாவிலிருந்த எல்லோரும் வசனத்தைக் கேட்டார்கள். தேவன் பவுல் மூலம் விசேஷ அற்புதங்களைச் செய்தார் *(அப். 19:1-11)*.

பவுலின் பிரசங்கத்தினிமித்தம் தியானாளின், வணக்கம் குறைந்து போனபடியால் தெமேத்திரியு என்னும் தட்டான் ஒருவன் கலகம் உண்டாக்கினான் (அப். 19:23-41). கொரிந்துவிலிருந்தும் குழப்பமான செய்திகள் பவுலுக்கு வந்ததினால், அவ்விடம் விட்டு மக்கெதோனியாவுக்குப் போக புறப்பட்டு கிரேக்கு தேசத்தில் சேர்ந்தான் (அப். 20:1). இதற்கிடையில் 1ஆம் 2ஆம் கொரிந்தியரின் நிருபங்களை எழுதி தீத்துவின் கையில் அனுப்பினான்.

பவுல் இங்கிருந்து கொரிந்துவுக்குப் போயிருக்கையில் ரோமருக்கு நிருபம் எழுதினான். இதைவிட்டு பிலிப்பி பட்டணம் வந்து, துரோவாவுக்குப் போய், பஸ்காப் பண்டிகையை ஆசரித்த வேளையில் பவுல் நெடுநேரம் பிரசங்கித்தான். அப்பொழுது ஒரு வாலிபன் மேல் வீட்டிலிருந்து கீழே விழுந்து மரித்தபோது அவனை பவுல் உயிர்ப்பித்தான் (அப். 20:6-12).

அவர்கள் பிரயாணம்பண்ணி மிலேத்துவுக்கு வந்து எபேசு சபையின் மூப்பர்களை வரவழைத்து, பவுல் அவர்களுடன் பேசினான் (அப். 20:17-38).

பிற்பாடு கப்பல் பிரயாணம் பண்ணி தீரு பட்டணத்துக்கு வந்தார்கள். அங்கேயிருந்த சீஷர் ஆவியின் ஏவுதலினால் பவுல் எருசலேமுக்குப் போகவேண்டாமென்று சொன்னார்கள் (அப். 21:4). அவ்விடமிருந்துப் பித்தொலோமாய்க்கு வந்து மறுநாளில் செசரியாவில் பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டில் தங்கினார்கள். அங்கேயிருக்கையில் அகபு தீர்க்கதரிசி பவுலுக்கு எருசலேமில் வரப் போகிறக் கஷ்டங்களைப் பற்றிச் சொன்னான். மற்றவர்களும் பவுலைத் தடுத்தார்கள். ஆகிலும் அவர்கள் எருசலேமுக்குப் போய் மினாசோன் வீட்டில் தங்கினார்கள் (அப். 21:7-16).

அங்கே யாக்கோபும் மற்ற மூப்பரும் கொடுத்த ஆலோசனையின்படி சுத்திகரிப்பு செய்து கொள்ளும்படி பவுலும் இன்னும் நான்கு பேரும் தேவாலயத்தில் பிரவேசித்த வேளையில் ஆசியா நாட்டு யூதர் பவுலுக்கு விரோதமாய் எழும்பி, ஜனங்களை ஏவி விட்டார்கள். அவர்கள் பவுலைப்பிடித்து கொலைசெய்ய எத்தனித்தபோது ரோம சேனாதிபதி அவனை விடுவித்தான் (அப். 21:32). பவுல் ஜனங்களுடன் பேச உத்தரவுபெற்று, தான் குணப்பட்டதைப்பற்றிச் சொன்னான். அப்பொழுது ஜனங்கள் கூக்குரலிட்டதினால் சேனாதிபதி அவனைக் கோட்டைக்குள் கொண்டு போகும்படி கட்டளையிட்டான் (அப். 21:34).

மறுநாளில் பவுலுடைய குற்றம் இன்னதென்று அறியும்படி பிரதான ஆசாரியர் முன் நிறுத்தப்பட்டான் (அப். 22:30). பவுல்

தனது காரியங்களை அவர்களுக்குச் சொன்னபோது மிகுந்த கலகமுண்டாயிற்று. அப்பொழுது சேனாதிபதி பவுலைக் கோட்டைக்குக் கொண்டு போகும்படி கட்டளையிட்டான் (அப். 23:1-10).

அந்த இரவில் கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி அவனைத் திடப்படுத்தினார் (அப். 23:11). அவனுக்கு மோசமுண்டாகுமென்று சேனாதிபதி அறிந்து, செசரியாவிலிருந்த ரோம தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவனிடம் பவுலை அனுப்பி வைத்தான் (அப். 23:31-35).

பேலிக்ஸ் பவுலை இரண்டு தடவைகளில் விசாரணை செய்தும், யூதரைப் பிரியப்படுத்துவதற்காக அவனைக் காவலில் வைத்தான் (அப். 24:27).

இரண்டு வருடம் சென்றபின் பெஸ்து தேசாதிபதியாய் வந்தான். அவன் பவுலை விசாரணை செய்து அவனை யூதருடைய சங்கத்தின் விசாரணைக்கு ஒப்புவிக்க நினைத்தபோது பவுல் இராயனுக்கு அபயமிட்டான் (அப். 25:1-12).

சிலநாள்களுக்குப்பின் அகிரிப்பா இராஜாவும், பெர்னீக்கேயாளும் பெஸ்துவைக் காணும்படி வந்தார்கள். பவுல் அவர்களுக்கு முன் கொண்டுவரப்பட்டு தன் நியாயத்தை எடுத்துக்காட்டினான் (அப். 26:1-32). பின்பு பவுலை ரோமாபுரிக்கு அனுப்பும்படி தீர்மானித்து அவனையும் வேறு சிலரையும் யூலியு என்னும் நூற்றுக்கதிபதியிடம் ஒப்புவித்தார்கள். அவர்கள் கப்பல் ஏறி மீறாப் பட்டணத்தில் சேர்ந்தார்கள்.

அங்கிருந்து கப்பலேறி, காற்றினிமித்தம் மெதுவாய் ஓடி, நல்ல துறைமுகத்திற்கு வந்தார்கள். அங்கே பவுல் இந்தப் பிரயாணம் நஷ்டமாய் முடியுமென்றும், பிரயாணம் செய்வது சரியல்ல என்று சொல்லியும், அதை அவர்கள் கவனிக்கவில்லை (அப். 27:1-13).

பிரயாணம் போகையில் கப்பலுக்குச் சேதம் உண்டாயிற்று. கப்பலிலிருந்தவர்கள் தப்பிக் கரை சேர்ந்த இடம் மெலித்தா தீவு. அங்கே அற்புதங்கள் செய்வதற்குப் பவுலுக்குத் தருணம் கிடைத்தது (அப். 28:1-9). மூன்று மாதங்களுக்குப்பின் கப்பலேறி, சீரகூசா பட்டணம் வந்து, அங்கே சகோதரரைக் கண்டபின், ரோமாபுரியில் சேர்ந்தார்கள். பவுலுக்கு ஒரு வாடகை வீட்டிலிருக்க உத்தரவு கிடைத்தது (அப். 28:10-16). அப்படியே இரண்டு வருடம் தங்கி, தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்தும், இயேசுவைப்பற்றிய விசேஷங்களைக் குறித்தும் உபதேசித்துக் கொண்டிருந்தான் (அப். 28:17-31).

மேலும் அந்நாள்களில் பவுல், பிலிப்பியர், பிலேமோன், எபேசியர், கொலோசெயர் நிருபங்களை எழுதினான்.

இரண்டு வருடங்களின் பின் பவுல் விடுதலைப் பெற்றதாகத் தெரிகிறது. கி.பி. 63இல் சிங்கத்தின் வாயிலிருந்து இரட்சிக்கப்பட்டேன்

என்பது *(2 தீமோ. 4:17)* இதைக்குறிக்கலாம். ரோமர் *15:28*இல் ஸ்பானியாவுக்குப் போவேன் என்று சொல்லியபடி அவன் போனதாகத் தெரிகிறது. கி.பி. *64*ஆடி மாதம் *16*ம் தேதி ரோமாபுரி சுட்டெரிக்கப் பட்டபோது, பவுல் ஒரு வேளை ஸ்பானியாவிலிருந்திருக்கலாம்.

கி.பி. *63*இல் பவுல் விடுதலை பெற்று, பிற்பாடு பிடிக்கப்பட்டு, *68*இல் நேரோ ராயனால் ரோமாபுரியில் சிரச்சேதம் பண்ணப் பட்டான்.

அவனுடைய ஆசையின்படியே கிறிஸ்துவுடனேகூட இருக்கப் போனான் *(பிலி. 1:23)*.

## பாகால் (Baal)

### *(ஆண்டவன், உரியவன்)*

பெனிக்கேயரும், கானானியரும் வணங்கின ஓர் ஆண் தெய்வம். இந்தப்பெயர், அந்த தெய்வத்தின் வெவ்வேறு வல்லமைகளைக் குறிக்கும்படி "பாகால்கள்" என்று பன்மைப் பெயராயும் வழங்கிற்று *(நியா. 10:6; 1 சாமு. 7:4)*.

மோசேயின் காலத்தில் மோவாபியர் இந்தத் தெய்வத்தை வணங்கினார்கள் *(எண். 22:41)*.

பாகால்பெயோரைப் பின்பற்றின மனிதரையெல்லாம் கர்த்தர் அழித்துப்போட்டார் என்று மோசே சொல்லுகிறான் *(உபா. 4:3)*. இஸ்ரவேலரும் பாகால் வணக்கத்தைப் பின்பற்றினார்கள் *(நியா. 2:13)*. தோப்புகளையும் உண்டாக்கினார்கள் *(நியா. 6:25)*. கிதியோன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, தோப்புகளை வெட்டிப் போட்டதினிமித்தம், பாகால் தானே அவனோடு வழக்காடட்டும் என்று அவனுக்கு "யெருபாகால்" என்று பெயரிட்டார்கள் *(நியா. 6:32)*.

இஸ்ரவேல் இராஜாவாகிய ஆகாபின் பெனிக்கேய மனைவியாகிய யேசபேலும், அவளுடைய மகளாகிய யூதாவின் இராஜாவாகிய யோராமின் மனைவி அத்தாலியாளும் பாகால் வணக்கத்தை இஸ்ரவேலருக்குள் ஏற்படுத்தினார்கள். ஆகாப் சீதோனியரின் இராஜாவாகிய ஏற்பாகாலின் குமாரத்தி யேசபேலை விவாகம் பண்ணினதுமல்லாமல் பாகாலையும் சேவித்து, சமாரியாவில் பாகாலுக்குப் பலிபீடத்தை நிறுத்தினான். ஆகாப் விக்கிரகத்தோப்பையும் வைத்து, கர்த்தருக்குக் கோபம் உண்டாக்கினான் *(1 இரா. 16:31-33)*.

கர்மேல் மலையின்மேல் எலியா பாகாலின் ஆசாரியர்களைக் கலங்கப்பண்ணி கொன்றுபோட்டான் *(1 இரா. 18:19-40)*.

பாகால் வணக்கத்தை எசேக்கியா தடுத்தபோதிலும், அவனுடைய மகன் மனாசே அதை ஏவி விட்டான். மனாசே தன் தகப்பன் எசேக்கியா இடித்துப் போட்ட மேடைகளைத் திரும்பவும் கட்டி, பாகாலுக்குப் பலிபீடங்களை எடுப்பித்து, விக்கிரகத்தோப்பையும் உண்டாக்கி, வானத்தின் சேனைகளையெல்லாம் பணிந்துகொண்டான். இன்னும் ஆலயத்தின் பிரகாரங்களில் பலிபீடங்கள் கட்டி தன் குமாரனைத் தீ மிதிக்கப் பண்ணினான் *(2 இரா. 21:1-7)*.

யெகூ பாகாலின் தீர்க்கதரிசிகளையும், பணிவிடைக்காரரையும், ஆசாரியரையும் வரவழைத்து, பாகாலின் கோயிலுக்குள் பிரவேசிக்கப் பண்ணி, ஒருவனையும் தப்பவிடாமல் கொன்றான். அதோடு பாகாலின் கோயிலை இடித்து, சிலையைத் தகர்த்து, விக்கிரகங்களைத் தீக் கொளுத்தினான் *(2 இரா. 10:19-28)*.

இராஜாவாகிய ஆகாஸ் பாகால்களுக்கு வார்ப்பு விக்கிரகங்களைச் செய்து, தன் குமாரரை அக்கினியில் தகித்து, மேடைகளிலும் பச்சையான மரங்களின் கீழும் பலியிட்டுத் தூபங்காட்டினான் *(2 நாளா. 28:1-4)*.

எரேமியா, "யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும்; தேவர்களின் இலக்கமும் சரி; எருசலேம் வீதிகளின் இலக்கமும், பாகாலுக்குத் தூபங்காட்டும் பீடங்களின் இலக்கமும் சரி; ஆதலால் அவர்களுக்காக விண்ணப்பம் செய்யவேண்டாம் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றான் *(எரே. 11:13,14)*.

"பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத ஏழாயிரம்பேரை எனக்காக மீதியாக வைத்தேன்" என்று கர்த்தர் எலியாவுக்குச் சொன்னார் *(1 இரா. 19:18; ரோம. 11:4)*.

பாகால் என்ற பெயர் மனிதர்களுக்கும் வழங்கிற்று. *(1)* பென்யமீன் கோத்திரத்து யெகியேல் என்பவனின் குமாரன் *(1 நாளா. 8:30)*.

*(2)* ரூபன் கோத்திரத்து ராயா என்பவனின் குமாரன் - பாகால் *(1 நாளா. 5:5)*.

## பாகால் பேரீத்
### (உடன்படிக்கையின் தெய்வம்)

கிதியோன் மரித்த பின் இஸ்ரவேல் பாகால் பேரீத்தைத் தங்களுக்குத் தெய்வமாக வைத்துக் கொண்டார்கள் *(நியா. 8:33)*.

சீகேம் கோட்டையிலிருந்த மனுஷர் எல்பேரீதின் கோயில் அரணுக்குள் நுழைந்து கொண்டிருக்கையில் அபிமெலேக்கு எல்லாரையும் கொன்றான் *(நியா. 9:46-49)*.

## பாகால் காத்

### (அதிர்ஷ்டத்தின் தெய்வம்)

யோசுவா யுத்தம் செய்து பிடித்துக்கொண்ட தேசங்களில் எர்மோன் மலையடிவாரத்தின் வடக்கிலிருந்த இடம் (யோசுவா. 11:16).

## பாகால் - ஆமோன்

### (திரளின் தெய்வம்)

இங்கே சாலொமோனுக்கு ஒரு திராட்சத் தோட்டம் இருந்தது (உன். 8:11).

## பாகால் கானான்

ஓர் ஏதோமிய இராஜா (ஆதி. 36:38; 1 நாளா. 1:49).

## பாகால் எர்மோன்

மனாசேயின் தேசத்தின் வடபாகத்தில் இருந்த ஒரு மலை (நியா. 3:3).

## பாகால் மெயோன்

### (வாசஸ்தலத்தின் தெய்வம்)

இது எமோரியரின் பட்டணம் (எண். 32:38). யூதா சிறைப்பட்ட நாள்களில் இது மோவாபியருக்குரியதாயிருந்தது. பெத்மெயோனென்று சொல்லப்பட்டது (எரே. 48:23; எசே. 25:10).

## பாகால் பேயோர்

சீத்தீமில் இஸ்ரவேலர் மோவாபின் குமாரத்திகளோடு வேசித்தனம் பண்ணி, பாகால் பேயோரைப் பற்றிக் கொண்டார்கள் (எண். 25:1-3; 31:16; உபா. 4:3; ஓசியா. 9:10).

## பாகால் பிராசீம்

ரெப்பாயீமில் தாவீது பெலிஸ்தியரை முறியடித்து "கர்த்தர் என் சத்துருக்களைத் தண்ணீர் உடைத்தோடுவதுபோல ஓடப்பண்ணினார்" என்று சொல்லி, அந்த இடத்துக்குப் பாகால் பிராசீமென்று பேரிட்டான். (2 சாமு. 5:18-20; 1 நாளா. 14:9-11).

## பாகால் சலீஷா

இந்த இடத்திலிருந்து ஒரு மனுஷன் முதற்பலனான வாற்கோதுமையை எலிசா தீர்க்கதரிசியிடம் கொண்டுவந்தபோது நூறு பேர் சாப்பிட்டார்கள் (2 இரா. 4:42).

## பாகால் தாமார்
### (பனைமரத் தெய்வம்)

பென்யமீன் தேசத்திலுள்ள பாகால்தாமாரில் இஸ்ரவேல் மனுஷர் பென்யமீனரோடு யுத்தம் பண்ணவந்து நின்றார்கள் *(நியா. 20:33).*

## பாகால் செபோன்

*சிவந்த சமுத்திரத்தைக் கடக்குமுன் இஸ்ரவேலர் பாளயமிறங்கின இடம் (யாத். 14:2, 9; எண். 33:7).*

## பாகால் சேபூப்

அகசியா இராஜா வியாதிப்பட்ட வேளையில், தான் பிழைப்பேனோ என்று விசாரிக்க, எக்ரோனின் தேவனாகிய பாகால் சேபூபிடம் ஆள்களை அனுப்பினான் *(2 இரா. 1:1-4).*

புதிய ஏற்பாட்டில் இந்தத் தெய்வம் பிசாசுகளின் தலைவனாகிய "பெயெல்செபூல்" என்று சொல்லப்படுகிறது *(மத். 12:24; மாற்கு. 3:22; லூக்கா. 11:15).*

ஆகாயத்து அதிகாரப் பிரபு என்று பவுல் சொல்லுகிறான் *(எபே. 2:2)*

## பாகாலி (Baali)
### (என் எஜமான்)

அக்காலத்தில் நீ என்னைப் பாகாலி என்று சொல்லாமல் ஈஷி என்று சொல்லுவாய் என்று கர்த்தர் உரைக்கிறார் *(ஓசியா. 2:16).*

## பாசான் (Bashan)
### (கனியுள்ள)

யோர்தான் நதிக்குக் கிழக்கேயிருந்த ஒரு தேசம். இது கீலேயாத்திலிருந்து எர்மோன் மலை மட்டும் வியாபித்திருந்தது *(உபா. 3:10; யோசுவா. 12:5).*

இஸ்ரவேலர் யோர்தானைக் கடக்குமுன் இதைக் கைப்பற்றினார்கள். இதன் கடைசி இராஜாவாகிய ஓக் என்பவனை எத்ரேயுவில் கொன்றார்கள் *(எண். 21:33-35).*

இத்தேசம் மனாசேயின் பாதிக்கோத்திரத்துக்குக் கொடுக்கப்பட்டது *(உபா. 3:13).* இது செழிப்பான மேய்ச்சல் தரையுள்ள இடம். கொழுத்துப் போன ஆடுமாடுகளுக்குப் பெயர் பெற்ற தேசம் *(உபா. 32:14; எசே. 39:18).*

பாசான் தேசத்து பலத்த எருதுகள் என்பது மிருக சுபாவமுள்ள கொடூர மனுஷரைக் கருதுகிறது.

இங்கு கர்வாலி மரங்களும் இருந்தன (ஏசாயா. 2:13; எசே. 27:6). இத்தேசம் பாழாய்ப் போகுமென்று தீர்க்கதரிசிகள் கூறியிருந்தார்கள் (ஏசாயா. 33:9; நாகூம் 1:4; எரே. 22:20; சக. 11:2).

## பாஷா (Baasha)
### (தைரியம்-கி.மு.900-880)

இஸ்ரவேலின் இராஜா. இசக்கார் கோத்திரத்து அகியாவின் மகன். தாழ்ந்த நிலையிலுள்ளவன் (1 இரா. 16:1,2). இவன் யெரொபெயாமின் மகனாகிய நாதாவைக்கொன்று, தானே இராஜாவாகி, யெரொபெயாம் வீட்டாரெல்லாரையும் வெட்டிப்போட்டான் (1 இரா. 15:30). பாஷா, யூதா இராஜாவாகிய ஆசாவோடு அநேக நாள்களாய் யுத்தம் செய்தான். அவன் ராமாவில் கோட்டை கட்டத் தொடங்கினபோது, சீரியா இராஜாவாகிய பெனாதாத் ஆசாவின் கேள்விப்படி அதைத் தடுத்தான் (1 இரா. 15:16-21). மேலும் அவன் இஸ்ரவேல் ஜனங்களைப் பாவம் செய்யப்பண்ணினபடியால் கர்த்தர் யெகூ தீர்க்கதரிசி மூலம் அவனுக்கு வரப்போகிற தண்டனையை அறிவித்தார். 24 வருடம் அரசாண்டு, மரித்த பின் திர்ஷாவில் அடக்கம்பண்ணப்பட்டான் (1 இரா. 16:1-6). இவனுடைய மகன் ஏலா இராஜாவானான். ஆனால் அவனையும், அவன் குடும்பத்தார் யாவரையும் சிம்ரி கொன்றான் (1 இரா. 21:22; 2 இரா. 9:9).

## பாதாளம் (Hell)

மனுஷர் மரித்தபின் போகிற இடத்துக்கு எபிரெயர் ஷீயோல் (Sheol) என்றும், கிரேக்கர் ஹாடீஸ் (Hades) அல்லது கெஹன்னா (Gehenna) என்றும் சொன்னார்கள். இப்பதங்கள் தமிழில் பாதாளம் அல்லது நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இது நல்லோர் தீயோர் மரித்தபின் போகிற இடமென்று சங். 16:10, 30:3; ஏசாயா. 38:10லும் தீயோர் போகுமிடமென்று எண். 16:33, யோபு. 24:19; சங். 9:17லும் குறித்துள்ளது.

ஷீயோல் என்பது பிரேதக்குழியென்று ஆதி. 37:35; 42:38; 1 சாமு. 2:6; யோபு 14:13இல் சொல்லியுள்ளது.

எபிரேயர் மனுஷனுடைய ஜீவியத்தின் முடிவு மரணமென்றெண்ணின போதிலும், ஆபிரகாமும் வேறு விசுவாசிகளும் அது மேன்மையான பரமதேசம் என நம்பினார்கள் (எபி. 11:16).

ஹாடீஸ் ஒரு பிரேதக்குழியை அல்லது காணப்படாத உலகத்தைக் குறிக்கிறது. இயேசு போய்க்காவலில் உள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்பதும் இதையே கருதுகிறது *(1 பேதுரு. 3:19)*.

பாதாளம் என்பது வேதனைப்படுகிற இடமென இயேசு சொன்ன ஐசுவரியவானின் உவமையிலிருந்து வெளியாகிறது *(லூக்கா. 16:19-31)*.

பிற்காலங்களில் எபிரேயர் பாதாளத்தை இன்னோம் பள்ளத்தாக்குக்கு ஒப்பிட்டுப் பேசினார்கள். இந்தப் பள்ளத்தாக்கு எருசலேம் பட்டணத்துக்கருகே இருந்த ஒரு கால்வாய். இங்கே சாலொமோன் கேமோஸ், மோளேகு என்னும் தெய்வங்களுக்குப் பலிபீடங்களைக் கட்டினான். பின்பு யூதா இராஜாக்களில் சிலர், தங்கள் குமாரரைத் தீக்கடக்கப்பண்ணினார்கள் *(2 இரா. 16:3; 2 நாளா. 28:3; 33:6)*. குழந்தைகளையும் பலி செலுத்தினார்கள் *(எரே. 7:31)*.

ஆனால் யோசியா இராஜா இந்த இடத்தைத் தீட்டுப்படுத்தும்படி மனுஷரின் எலும்புகளைச் சுட்டெரித்தான் *(2 இரா. 23:14; 2 நாளா. 34:5)*. பின்பு நகரத்திலுள்ள குப்பை கூளங்களைப் போட்டு எரித்ததினால், இந்த இடம் நித்தியமாய் எரிகிற நரகத்துக்கு ஒப்பிடப்பட்டது *(மத். 10:28; 23:16; லூக்கா. 12:5)*.

## பாபிலோன் (Babylon)
### *(தேவ வாசல்)*

பூர்வ காலத்தில் நிம்ரோத், பாபேல் என்னும் பட்டணத்தைக் கட்டினான் *(ஆதி. 10:10)*. இது பாபிலோனியா தேசத்தில் ஐபிராத்து நதியருகே இருந்த ஒரு பெரிய பட்டணம். இஸ்தார் தெய்வத்துக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஓர் அலங்காரமான கோபுர வாயிலிலிருந்து, இந்தப் பெயர் வந்தது. இது கி.மு. 2000இல் கட்டப்பட்ட போதிலும், கி.மு. 1900இல் இராஜா அரண்மனை அங்கே நிலைப்படுத்தின பின்னேயே பேர் பெற்ற இடமாயிற்று.

ஆபிரகாமின் நாள்களிலிருந்த ஹமுராபி (கி.மு. 800) கோட்டை கொத்தளங்களைக்கட்டி, பாபிலோனை இராஜ்யத்துக்குத் தலைமையாக்கினான். அசீரிய இராஜாக்கள் இந்தத் தேசத்தை மேற்கொண்டு சில வருடங்களாக அரசாண்டார்கள். ஆனால் பாபிலோனிய இராஜாக்கள் இதைத் திரும்பவும் தங்கள் வசமாக்கிக் கொண்டார்கள்.

கி.மு. 722 இல் பாபிலோனிய இராஜா பெரோதாத் பலாதான் யூதா இராஜாவாகிய எசேக்கியாவுக்கு வெகுமானங்களனுப்பி அவனோடு சிநேகமானான் *(2 இரா. 20:12)*. பிற்பாடு ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டபடி பாபிலோன் பாழாய்ப் போயிற்று. அதன்பின்

நேபுகாத்நேச்சார் பெரிய பட்டணங்களைக் கட்டி, தேசத்தைச் சீர்ப்படுத்தினான். அந்நாள்களில் தானி. 4:30இல் சொல்லப்பட்ட சம்பவங்கள் நடந்தன.

நேபுகாத்நேச்சார் (கி.மு. 605-562) யுத்தம் செய்து, எருசலேமைக் கொள்ளை அடித்து, யோயாக்கீனைச் சிறைப்பிடித்தான் (2 இரா. 24:10-16).

சில நாள்களுக்குப் பின் சிதேக்கியாவையும் பிடித்து, அவன் கண்களைக் குருடாக்கி சிறையில் போட்டான்.

கி.மு. 534இல் பெர்சிய இராஜா கோரேஸ் பெல்தெஷாத்சாரைப் பிடித்து, அவனைக் கொன்று, தேசத்தையும் பாழாக்கினான் (ஏசாயா. 14:1-23). இதோடு எரே. 50, 51ஆம் அதிகாரங்களில் சொல்லப் பட்டவைகள் நிறைவேறின.

புதிய ஏற்பாட்டில் சொல்லப்படுகிற பாபிலோன்.

1. ஐபிராத்து நதியருகே இருந்த பட்டணம் (மத். 1:11, 12,17; அப். 7:43).

2. 1 பேதுரு. 5:13இல் சொல்லப்பட்ட பாபிலோன் ரோமாபுரி.

3. வெளி. 14:8; 17:5; 18:2லுள்ள பாபிலோன் ரோமாபுரியைக் குறிக்கிறது. யூதருடைய முற்பிதாக்களுக்குப் பாபிலோன் எதைக் கருதிற்றோ, அதையே பிற்கால யூதருக்கும் ரோமாபுரி கருதிற்று. அதாவது அவர்களுடைய அருமையான கொள்கை, கோட்பாடுகளுக்கு எதிராயிருந்த ஓர் அரசாட்சி என்பதே.

## பாபேல் (Babel)

### (தாறுமாறு)

ஜலப்பிரளயமுண்டாகி 120 வருடங்களுக்குப்பின் சிநேயார் தேசத்தில் குடியிருந்த ஜனங்கள் ஒரு நகரத்தையும், அதிக உயரமான கோபுரத்தையும் கட்டியெழுப்பத் தொடங்கினார்கள். அப்போது ஜனங்கள் ஒரே கூட்டமாயிருந்து ஒரே பாஷையைப் பேசினார்கள். ஜனங்கள் தங்களுக்கு ஒரு பேர் உண்டாகும்படியும், தங்களுக்கென்று ஒரு கோட்டையைக் கட்டி, ஓரிடத்திலிருக்கும் படியும், இதைச் செய்தார்கள் என்று கர்த்தர் கண்டு, ஒருவன் பேசுவதை மற்றவன் அறியாதபடி, அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்கினார். அதினிமித்தம் ஜனங்கள் கட்டுவேலையை விட்டதோடு, பூமியின்மீதெங்கும் சிதறிப்போனார்கள். பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் தாறுமாறாக்கினபடியால் "பாபேல்" என்னும் பெயர் வந்தது (ஆதி. 11:1-9).

இப்படிப்பட்ட கட்டடம் எழுப்பப்பட்டதை பற்றி அத்தாட்சி இப்போது இல்லை.

## பாராக் (Barak)

***(மின் ஒளி)***

இவன் நப்தலி கோத்திரத்து அபினோகாளின் மகன். யாபீனின் சேனாதிபதியாகிய சிசெரா இஸ்ரவேலுக்கு விரோதமாய் யுத்தம் செய்ய வந்தபோது, தெபொராள் தீர்க்கதரிசி, இவனை அழைத்து சிசெராவுக்கு எதிர்கொண்டு போகும்படி சொன்னாள். அவன் தெபொராளையும் கூட வரும்படி கேட்டான். அவன் அப்படியானால் வரும் மேன்மை, ஒரு ஸ்திரீக்குக் கிடைக்குமென்று சொல்லி, கூடப்போனான். அவன் தாபோர் மலைமேல் நப்தலி, செபுலோன் புத்திரரில் பதினாயிரம் பேரோடு போனான். சிசெரா தொளாயிரம் இரதங்களோடு கீசோன் பள்ளத்தாக்குக்கு வந்தான். சடுதியாய்க் கர்த்தர் மழையைப் பெய்யப் பண்ணி, பள்ளத்தாக்கைச் சதுப்பாக்கினதினிமித்தம் ஜனங்களும், இரதங்களும் அழிந்து போயின. சிசெரா தப்பியோடி யாகேலுடைய கூடாரத்துக்குள் போயிருக்கையில் கொல்லப்பட்டான். பிற்பாடு தெபொராள் பாடின பாட்டில் இவையெல்லாம் விவரிக்கப்பட்டுள்ளன *(நியா. 4,5ஆம் அதிகாரங்கள்)*.

எபி. *11:32*இல் பாராக்கு விசுவாசத்தில் நற்சாட்சி பெற்றவர்களில் ஒருவன் என்று குறித்துள்ளது.

## பாரான் (Paran)

***(குகைகள் நிறைந்த)***

இது சீனாய் குடாநாட்டிலுள்ள ஒரு வனாந்தரம். ஆபிரகாம் ஆகாரையும், இஸ்மவேலையும் தன் வீட்டிலிருந்து அனுப்பி விட்ட போது அவர்கள் பாரான் வனாந்தரத்தில் குடியிருந்தார்கள் *(ஆதி. 21:21)*.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில் *38* வருடங்களை இந்த வனாந்தரத்தில் கழித்தார்கள். எண். *33* இல் அவர்கள் போன இடங்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆகவே இது "அலைந்து திரிந்த வனாந்தரம்" என்று பெயர் பெற்றது *(எண். 10:12; 13:21; 27:14)*.

மோசே கானானை வேவு பார்க்கும்படி, இவ்விடத்திலிருந்து ஆள்களை அனுப்பினான் *(எண். 13:3, 26)*.

சாமுவேல் மரித்தபின், தாவீது இங்கே போய்த் தங்கினான் *(1 சாமு. 25:1)*.

"எல்பாரான்" (ஆதி. 14:6) என்பது இந்த வனாந்தரத்தின் ஒரு பகுதி. உபா. 33:2; ஆபகூக் 3:3 இல் சொல்லப்பட்ட மலையும் இதைச் சேர்ந்தது. ''ஏலாத்'' என்பது இந்த மலையின் முதற்பெயராயிருக்கலாம்.

## பாருக் (Baruch)

### (ஆசீர்வாதம்)

இவன் நேரியாவின் மகன் (எரே. 36:4). செராயாவின் சகோதரன். எரேமியாவுக்கு எழுத்து வேலை செய்து, அவனுடைய உண்மையான சிநேகிதனாயிருந்தான் (எரே. 36:10). எரேமியாவின் தீர்க்க தரிசனங்களை ஜனங்களுக்கு வாசித்துக் காட்டினான் (எரே. 36:14,15). எரேமியா தன் சுதந்தர நிலத்தைக் கிரயத்துக்கு வாங்கினதற்கு இவன் சாட்சிக்காரனாயிருந்தான் (எரே. 32:6). பிற்பாடு எருசலேம் விழுந்தபின், இவனும் எரேமியாவோடு எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கே மரித்தான் (எரே. 43:1-7).

2. நெகேமியாவோடு எருசலேமில் கட்டு வேலைக்கு உதவியாயிருந்தவன் (நெகே. 3:20).

## பாரேஸ் (Parez)

### (மீறி வருதல்)

யூதாவும், தாமாரும் பெற்ற இரட்டைப் பிள்ளைகளில் ஒருவன். பிரசவ வேளையில் இவன் முந்திப் பிறந்ததினால் இப்பெயர் கொடுக்கப்பட்டது (ஆதி. 38:29). மற்றப் பிள்ளையின் பெயர் சேரா. பாரேசின் சந்ததியார் பாரேசியர் எனப்பட்டார்கள் (எண். 26:20). இந்தச் சந்ததியில் தாவீதும், பின்பு மேசியாவும் பிறந்தார்கள் (1 நாளா. 9:4; ரூத். 4:18; மத். 1:3; லூக்கா. 3:33).

## பார்வோன் (Pharaoh)

எகிப்து பாஷையில், இந்தச் சொல்லின் அர்த்தம் "பெரிய வீடு" அல்லது "அரண்மனை''. பிற்பாடு அரண்மனையிலிருக்கும் இராஜாவைக் குறித்தது. "பார்வோன்" அத்தேச இராஜாக்களுக்குக் கொடுக்கப்பட்ட பொதுவான பெயர்.

1. ஆபிரகாம் காலத்துப் பார்வோன் : ஆபிரகாம் கி.மு. 1900 வருடத்தில் எகிப்துக்குப் போனபோது இருந்த பார்வோன் (ஆதி. 12:15-20).

2. யோசேப்பின் காலத்துப் பார்வோன் : இவன் கி.மு. 1700 இல் இருந்த பார்வோன் (ஆதி. அதி. 37-50).

*3. இஸ்ரவேலர் ஒடுக்கப்பட்ட காலத்துப் பார்வோன் (யாத். 1-2 அதி). பல இராஜாக்கள் இருந்திருக்கலாம்.*

*4. யாத்திராகம காலத்துப் பார்வோன் : கி.மு. 1340-1306 (யாத். அதி 5-12). இவன் இரண்டாம் ராமசேஸ் எனப்பட்டான்.*

*5. யூதா கோத்திரத்து மேரேத்தின் மனைவியாகிய பித்தியாளின் தகப்பன் (1 நாளா. 4:18).*

*6. ஏதோமியனான ஆதாத்துக்கு ஒதுக்கிடம் கொடுத்து, பின் தன் மனைவியின் சகோதரியை விவாகம் செய்து கொடுத்தவன் (1 இரா. 11:18-20).*

*7. சாலொமோனுடைய மாமனாகிய பார்வோன். கேசேர் பட்டணத்தைத் தன் மகளுக்குச் சீதனமாய்க் கொடுத்தான் (1 இரா. 9:16).*

*8. பார்வோன் - சீஷாக்*

*9. ஓசியா இராஜா காலத்துப் பார்வோன்.*

*10. எத்தியோப்பிய பார்வோன்.*

*11. பார்வோன் நேகோ. (எரே. 25:19).*

*12. பார்வோன் ஒப்பிரா (எரே. 37:5-11; எசே. 17:7).*

## பாலாக் (Balak)
### *(பாழாக்குவோன்)*

*இவன் மோவாபிய இராஜா. சிப்போரின் குமாரன். இஸ்ரவேல் தங்கள் பிரயாணத்தின் போது, மோவாபின் வெளிகளில் பாளயமிறங்கினார்கள். பாலாக் இதைக் கண்டு, அவர்களைச் சபிக்கும்படி, பிலேயாமை அழைத்தான். ஆனாலும் கர்த்தர் அவன் சாபத்தை ஆசீர்வாதமாக மாற்றினார் (எண். அதி 22-.24; யோசுவா. 24:9; நியா. 11:25; மீகா. 6:5; வெளி. 2:14).*

## பாலாம் (Balaam)
### *(பட்சிப்போன்)*

*இவன் பேயோரின் குமாரன். குறி சொல்லுகிறவன் (யோசுவா. 13:22). வேதாகமத்தின் மற்ற இடங்களில் இவன் பெயர் பிலேயாம் எனப்படுகிறது (எண். 22:2-5; யூதா. 11).*

*இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணி மோவாப் தேசத்துக்கு வந்திருக்கையில் மோவாபின் மூப்பரும், மீதியானின் மூப்பரும் ஒன்று கூடி, இஸ்ரவேலரைச் சபிக்கிறதற்காக அவனுக்குக் கூலிகொடுத்து*

அழைத்தார்கள். தன்னை அழைக்க வந்தவர்களை பாலாம் தன்னோடு ஒரு இரவு தங்கச் செய்து, தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு, மறுநாள் காலையிலே, தன் கழுதை மேலேறிப் போனான். வழியில் ஒரு தூதன் நிற்கிறதைக்கண்டு, கழுதை விலகிப் போனதினிமித்தம் பாலாம் கழுதையை அடித்தான். அப்பொழுது அது அவனோடு பேசிற்று (எண். 22:23-28). பின்பு பாலாம் போய் பாலாகைச் சந்தித்து, தன் வாக்கியத்தை மூன்று தடவைகளில் எடுத்துரைத்தான் (எண். 23:7-30). அவ்வேளையில் சபிக்கிறதற்குப் பதிலாக, இஸ்ரவேலரை ஆசீர்வதித்தான் (எண். 24:1-9). அதோடு "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும்", "ஒரு செங்கோல் இஸ்ரவேலிலிருந்து எழும்பும்" என்றும் சொன்னான் (எண். 24:17). மேசியா வருவாரென்பதைத் தீர்க்கதரிசனமாய் உரைத்தான்.

பாலாம் சொன்ன இந்த வார்த்தையை நினைத்துக்கொள்ளும் படி, மீகாவும் சொல்லுகிறான் (மீகா. 6:5).

பிற்பாடு பிலேயாம் கொடுத்த யோசனைப்படி, மீதியானியர் இஸ்ரவேலரைப் பாவம் செய்யப்பண்ணினார்கள். இதினிமித்தம் மோசே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம் செய்து, ஐந்து இராஜாக்களைக் கொன்று, பிலேயாமையும் பட்டயத்தால் கொன்றுபோட்டான் (எண். 31:8,16).

புதிய ஏற்பாட்டில் இவனுடைய பொருளாசை, பாவத்தைப்பற்றி, 2 பேதுரு 2:15; யூதா. 11இல் "பிலேயாமின் வழி" என்றும், கூலிக்காகச் செய்த "வஞ்சகம்" என்றும் வேசித்தனம் பண்ண பிலேயாம் செய்த "போதகம்" என்று வெளி. 2:14லும் குறிக்கப்பட்டுள்ளது.

## பிரிஸ்கில்லாள் (Priscilla)

ஆக்கில்லாவின் மனைவி. இருவரும் உற்சாகமுள்ள கிறிஸ்தவர்கள். இவர்கள் ரோமாபுரியில் இருக்கையில் கிலவுதியூராயன் கிறிஸ்தவர்கள் தேசத்தை விட்டுப்போக வேண்டுமென்று கட்டளை பிறப்பித்தபோது கொரிந்து பட்டணத்துக்குப் போய் அங்கே தங்கியிருந்தார்கள். பவுல் அங்கே போன சமயத்தில் இவர்களைச் சந்தித்து, இவர்களோடிருந்தான்.

அங்கிருந்து, பவுல் எபேசுவுக்குப் போனபோது இவர்களும் கூடப்போனார்கள். (அப். 18:1-3; 18:26; ரோமர். 16:3; 2 தீமோ. 4:19).

## பிலாத்து - பொந்தியு (Pontius Pilate)

திபேரியுராயன் நாள்களிலிருந்த யூதேயாவின் தேசாதிபதி (கி.பி. 26-36). அவனுடைய காலத்தில் யோவான் ஸ்நானனும், நமது

ஆண்டவரும் நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள் (லூக்கா. 3:1). அவன் யூதருக்கு அனுதாபம் காட்டாத ஒரு ரோமன். பல முறைகளிலும் அவர்களுக்கு விரோதமான காரியங்கள் நடப்பித்தான்.

முதலாவதாக, இராயனுடைய பிரதிரூபமுள்ள ஒரு விருதுக்கொடியை எருசலேமில் நிறுத்தினதால் கலகமுண்டானபோது, அதை அகற்றினான். பிற்பாடு அவன் தேவாலயத்துப் பணத்தை எடுத்து ஒரு தண்ணீர் வாய்க்கால் கட்டும்படி செலவழித்ததினிமித்தம், யூதர் கலகம் பண்ணினார்கள். இதற்குப் பழி வாங்கும்படி பண்டிகை நாள்களில் ஜனங்கள் பலிசெலுத்தின சமயத்தில், தன் போர்ச் சேவகரை அனுப்பி பட்டயக் கருக்கால் வெட்டினான். அவர்களில் அநேகர் கலிலேயரா யிருந்தார்கள் (லூக்கா 13:1,2).

இன்னும் ஒரு தடவை சமாரியாவில் அநேகரைக் கெர்சீம் மலையில் கொன்றான்.

பிலாத்து ஒரு சாமானிய மனுஷன். இயேசு கிறிஸ்துவின் நியாய விசாரணையில் சம்பந்தப்படாவிட்டால் அவன் சீக்கிரம் மறக்கப்பட்டிருப்பான். இயேசுவைக் குற்றவாளி என்று தீர்க்கப் பிரியமில்லாமல் அவர் கலிலேயனென்று கேள்விப்பட்டவுடனே, அவரை ஏரோதிடம் அனுப்பியும் அது சரிவரவில்லை (லூக்கா. 23:6-11).

அவரைச் சிலுவையிலறையும்படி, ஜனங்கள் கூக்குரலிட்டுச் சொன்னபோது, பண்டிகை நாள்களில் காவலிலிருக்கிற ஒருவனை விடுதலையாக்கும் வழக்கத்தின்படி, இயேசுவை விடுதலையாக்க முயன்றான். அதுவும் அனுகூலப்படவில்லை (யோவான் 18:39, 40).

பிலாத்து நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய மனைவி ஆள் அனுப்பி, அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். நான் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள் (மத். 27:19). அதையும் அவன் கவனிக்கவில்லை.

பிலாத்து தன்னில் இதைப் பற்றிக் குறை குற்றம் இல்லையென்று காட்டும் நோக்கமாய் தண்ணீரில் தன் கைகளைக் கழுவினான். ஆகிலும் இயேசுவை வாரினால் அடிப்பித்து, போர்ச்சேவகர் அவர் வஸ்திரங்களைக் கழற்றவும், அவரைப் பரியாசம்பண்ணவும் இடங்கொடுத்தான் (மத். 27:24-31).

பின்பு அவன் இயேசுவை வெளியே கொண்டுவந்து, தன் நியாயாசனத்தின்மேல், உட்கார்ந்து, உங்கள் இராஜாவை நான் சிலுவையிலறையலாமா, என்று சொல்லியும், பிரதான ஆசாரியருடைய விருப்பத்தின்படி அவரைச் சிலுவையிலறையும்படி ஒப்புக்கொடுத்தான் (யோவான். 19:12-16).

"நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா" என்று ஒரு மேல் விலாசத்தை எழுதி, சிலுவையின்மேல் போடுவித்தான் *(யோவான். 19:19).*

பிலாத்து தன்னயமுள்ளவன். அவன் இயேசுவை விடுதலையாக்க விரும்பியும், ஜனங்களைக் கோபப்படுத்தாமலும், இராயனைப் பிரியப் படுத்தாமலும் இருக்கிறதற்காக அவரைத் தண்டனைக்குட் படுத்தினான்.

பின்பு பிலாத்து ரோமாபுரிக்கு அழைக்கப்பட்டுப் போய்ச் சேருமுன் திபேரியுராயன் மரித்துப் போனான் *(கி.பி. 37).* ஆனாலும் அவன் புறதேசத்துக்கு அனுப்பப்பட்டு அங்கே தற்கொலை செய்துகொண்டதாகச் சொல்லப்படுகிறது *(மத். அதி. 27 மாற்கு. அதி; 15 லூக்கா. அதி; 23 யோவான் 18:19).*

## பிலிப்பு (Philip)
### *(அப்போஸ்தலன்)*

அப்போஸ்தலரில் ஒருவன் *(மத். 10:3; மாற்கு. 3:18; லூக்கா. 6:14).* பெத்சாயிதா ஊரரான் *(யோவான் 12:21).* இவனும் மற்றவர்களும் யோவான்ஸ்நானனின் பிரசங்கத்தைக் கேட்க பெத்தானியாவுக்குப் போன சமயத்தில், இயேசு அவனைக் கண்டு, "நீ எனக்குப் பின் சென்றுவா" என்றார் *(யோவான். 1:43).* பிலிப்பு நாத்தான்வேலை இயேசுவிடம் அழைத்துக்கொண்டு போனான் *(யோவான். 1:45-51).*

இயேசு 5000 பேரைப் போஷித்த வேளையில் இவனிடம் அப்பங்கள் எங்கே கொள்ளலாம் என்று கேட்டார் *(யோவான்.6:5-7).*

பஸ்காப் பண்டிகை நாள்களில் சில கிரேக்கர் இயேசுவைக் காண விரும்பி, இவனிடம் கேட்டார்கள் *(யோவான் 12:20-23).*

கடைசி இராப்போஜனத்தின் பின் இயேசு சீஷருடன் பேசிக்கொண்டிருந்த சமயத்தில், இவன் "ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும்" என்றான் *(யோவான். 14:8).*

இயேசு உயிர்த்தெழுந்தபின் பரிசுத்தாவிக்காகக் காத்திருந்தவர் களுக்குள் இவனும் இருந்தான் *(அப். 1:13).*

## பிலிப்பு (Philip)
### *(சுவிசேஷகன்)*

ஆதி சபையில் பந்தி விசாரணைக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஏழு பேரில் ஒருவன் *(அப். 6:5).* ஸ்தேவான் கொல்லப்பட்டபின் தொடங்கின துன்புறுத்தல் நிமித்தம், சீஷர்கள் சிதறிப்போனபோது,

பிலிப்பு சமாரியாவுக்குப் போய் பிரசங்கித்த வேளையில் அநேகர் குணப்பட்டார்கள். மாயவித்தைக்காரனாகிய சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றான் (அப். 8:13). இதைப் பற்றிக் கேள்விப்பட்ட பொழுது எருசலேம் சபையார் பேதுருவையும், யோவானையும் அனுப்பினார்கள்.

ஆவியானவரின் ஏவுதலின்படி, பிலிப்பு எருசலேமிலிருந்து காசாவுக்குப் போகிற பாதைக்குப் போய், எத்தியோப்பிய இராஜஸ்திரீயின் மந்திரியைச் சந்தித்து, அவனோடு பேசினபோது, அவன் குணப்பட்டு ஞானஸ்நானம் பெற்றான் (அப். 8:26-38). அதன்பின் பிலிப்பு செசரியாவுக்கு வந்து அங்கே தங்கியிருந்தான். 20 வருடங்களின் பின், பவுல் அவ்விடம் போய், அவன் வீட்டில் தங்கினான். அவனுக்குத் தீர்க்கதரிசனம் சொல்லுகிற நான்கு குமாரத்திகள் இருந்தார்கள் (அப். 21:8,9).

## பிலிப்பு - ஏரோது

இவன் இத்துரேயாவுக்கும், திராகோனித்தி நாட்டுக்கும் அதிபதியாயிருந்தான் (லூக்கா. 3:1). இந்தப் பெயருள்ள இன்னொரு ஏரோதும் இருந்தான்.

## மக்கதோனியா - பிலிப்பு

மகா அலெக்சாந்தரின் தகப்பன்.

## பிலிப்பி (Philippi)

மக்கதோனியாவின் கிழக்குப் பக்கமாயிருந்த ஒரு பட்டணம். பவுலின் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் மக்கதோனியா தேசத்தான் ஒருவன் தன்னை அவ்விடம் வந்து உதவி செய்யும்படி கேட்டதாகத் தரிசனத்தில் கண்டு, பிலிப்பி பட்டணத்துக்குப் போனான் (அப். 16:9-12). இவர்கள் அங்கே போய் ஓர் ஆற்றினருகே உபதேசித்த நாள்களில், தியத்தீரா ஊராளாகிய லீதியாள் குணப்பட்டு, அவளும் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 16:14,15).

பிற்பாடு குறி சொல்லுகிற ஆவிபிடித்த ஒரு பெண், பல நாள்களாய் அவர்களைக் குறித்து "இந்த மனுஷர் தேவனுடைய ஊழியக்காரர்" என்று சொன்னாள். பவுல் அந்த ஆவியை அதட்டி துரத்திவிட்டான். அப்பொழுது ஜனங்கள் கலகம் பண்ணி, பவுலையும் சீலாவையும் பிடித்து அடித்து சிறைச்சாலையில் வைத்தார்கள். அன்று இரவு சிறைச்சாலைக் கதவு பூமியதிர்ச்சியினால் திறவுண்டது. சிறைச்சாலைக்காரன் இந்த அதிசயத்தைக் கண்டு, பயந்து அவர்களை

உபசரித்தான். அவர்களுடைய போதனையைக் கேட்டு சிறைச் சாலைக்காரனும், அவன் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். மறுநாள் அப்போஸ்தலர் விடுதலையாக்கப்பட்டு, புறப்பட்டுப் போனார்கள் *(அப். 16:16-40).*

பவுல் திரும்பவும் மூன்று தடவைகளில் இந்த இடத்துக்குப் போனதாகத் தெரிகிறது *(2 கொரி. 2:13; அப். 20:3; 1 தீமோ. 1:3).*

பவுல் தெசலோனிக்கேயிலிருக்கையில் பிலிப்பி சபையார் பவுலுக்கு உபகாரமனுப்பினார்கள் *(பிலி. 4:16).*

பவுல் இந்தச் சபையாருக்கு ஒரு நிருபம் எழுதினான் *(பிலி. 1:1).*

## பினெகாஸ் (Phinehas)

இவன் ஆரோனுடைய பேரன். எலெயாசாரின் மகன் *(யாத். 6:25).* இஸ்ரவேல் சித்தீமில் பாகால்பேயோரைப்பற்றிக் கொண்டு, வேசித்தனம் செய்த நாள்களில் இவன் அப்படிப் பாவம் செய்த ஒரு இஸ்ரவேலனையும் மீதியானிய ஸ்திரீயையும் கொன்று போட்டான் *(எண். 25:6-18; சங். 106:30,31).* பின்பு மோசே மீதியானியருக்கெதிராக ஒரு படையை அனுப்பினபோது, பினெகாசின் கையில் பூரிகைகளைக் கொடுத்தனுப்பினான் *(எண். 31:6).* யோர்தானின் ஓரத்தில் ஒரு பலிபீடம் கட்டின விஷயத்தில், சமாதான முண்டாக்கினவர்களில் இவனுமொருவன் *(யோசுவா. 22:9-32).* நியாயாதிபதிகளின் நாள்களில் இவன் ஆசாரியனாயிருந்தான் *(நியா. 20:28).* எஸ்றா இவன் சந்ததியான் *(எஸ்றா. 7:5).*

இவனுடைய தகப்பன் மரித்தபோது, தனக்குக் கிடைத்த மேட்டில் அவனை அடக்கம் பண்ணினான் *(யோசுவா. 24:33).*

2. ஏலியுடைய இரண்டு குமாரரில் ஒருவன். துஷ்ட நடத்தையுள்ளவன் *(1 சாமு. 1:3; 2:12-17).* பின்பு ஆப்பெக்கில் நடந்த யுத்தத்தில் உடன்படிக்கைப் பெட்டி பிடிக்கப்பட்டபோது, இவனும் கொல்லப்பட்டான் *(1 சாமு. 4:4-19).*

கர்ப்பவதியாயிருந்த இவனுடைய மனைவி இந்தச் செய்தியைக் கேட்டவுடன் மரித்தாள்.

3. எஸ்றாவோடு சிறையிருப்பிலிருந்து வந்த எலியேசர் என்பவனின் தகப்பன் *(எஸ்றா. 8:33).*

## பிலேயாம்

*(பாலாம் காண்க)*

## பெக்கா (Pekah)

***(விழிப்பு - கி.மு. 768-748).***

ரெமலியாவின் குமாரன். இஸ்ரவேலின் 18ஆம் இராஜா. தன் எஜமானாகிய பெக்காகியா இராஜாவைக் கொன்று போட்டு, தான் இராஜாவாகி 20 வருடம் இராஜ்யபாரம் பண்ணினான் *(2 இரா. 15:27).*

இவன் சீரிய இராஜாவாகிய ரேசினோடு கூடிக்கொண்டு, எருசலேமுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணியும் ஜெயிக்கக்கூடாமற் போயிற்று *(2 இரா. 16:5; ஏசாயா. 7:1).* அப்பொழுது யூதாவின் இராஜாவாகிய ஆகாஸ் அசீரிய இராஜாவாகிய திக்லாத்பிலேசரிடம் உதவி கேட்கவே, அவன் வந்து இஸ்ரவேலின் பட்டணங்களைப் பிடித்து, ஜனங்களை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டு போனான் *(2 இரா. 15:29).*

யூதா ஜனங்கள் கர்த்தரை விட்டுவிட்டபடியால் பெக்கா, அவர்களுக்கு விரோதமாக வந்து, அநேகரைக் கொன்று போட்டதோடு, அநேகரைச் சிறை பிடித்து சமாரியாவுக்குக் கொண்டு போனான். பின்பு ஓதேத் தீர்க்கதரிசியின் சொற்படி அவர்களைத் திரும்ப அனுப்பினான் *(2 நாளா. 28:8-15).*

பிற்பாடு ஓசெயா கலகம் பண்ணி, இவனைக் கொன்று போட்டு தான் இராஜாவானான் *(2 இரா. 15:30).*

பெக்கா கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, யெரொபெயாமின் பாவங்களைவிட்டு விலகாதிருந்தான் *(2 இரா. 15:28).*

## பெக்காக்கியா (Pekahiah)

***(கர்த்தர் கண்களைத் திறந்தார்)***

பெக்காகியா இஸ்ரவேலின் இராஜாவாகிய மெனாகேமின் மகனும், அவனுக்குப்பின் வந்த இராஜாவும், இரண்டு வருடம் அரசாண்டான் *(கி.மு. 742-741).* அவனுடைய படைத்தலைவனாகிய பெக்கா, இராஜாவின் அரண்மனையிலேயே அவனைக் கொன்றுபோட்டு தான் இராஜா வானான் *(2 இரா. 15:23-26).*

## பெசலெயேல் (Bezaleel)

***(தேவனுடைய நிழலிலிருப்பவன்)***

*1.* யூதா கோத்திரத்து காலேபின் குடும்பத்தைச் சேர்ந்த ஊரி என்பவனின் மகன். ஆசரிப்புக்கூடார வேலை செய்வதற்காக இவன் தேவனால் அழைக்கப்பட்டு, விசேஷ வரங்கள் பெற்றான். பொன், வெள்ளிவேலை செய்வதற்கும், மற்றும் சகலவித வேலைகளை யூகித்துச்

செய்யத்தக்க ஞானமும் புத்தியும் உண்டாகும்படி ஆவியின் வரம் பெற்றவன் (*யாத். 31:1-11*).

*2.* எஸ்றாவின் நாள்களில் மறு ஜாதி மனைவியைத் தள்ளி விட்டவர்களில் ஒருவன் (எஸ்றா. *10:30*).

## பெஸ்து - பொர்க்கியு (Festus - Pocius)

நேரோ ராயன் காலத்தில் யூதேயாவில் தேசாதிபதியாயிருந்தான். இவன் கி.பி. *60*இல் பேலிக்ஸ் என்பவனுக்குப்பின், உத்தியோகம் துவங்கினான். இவன் இரண்டு வருடகாலமாய் செய்த வேலை பேலிக்ஸ் என்பவனிலும் பார்க்க செம்மையாயும் நன்மையாயு மிருந்தது. இவனுக்குமுன் பவுல் விசாரிக்கப்பட்டபோது இராயனுக்கு அபயமிட்டான் (*அப். 25:10-12*).

பவுலுடைய காரியங்கள் இரண்டாம் முறை அகிரிப்பா இராஜா, பெர்னீக்கேயாள் என்பவர்களுக்கு முன்பாகவும் விசாரிக்கப் பட்டபொழுது அகிரிப்பா பவுலில் ஒரு குற்றமும் காணப்பட வில்லையென்றும், அவன் ராயனுக்கு அபயமிடாதிருந்தால் விடுதலைப் பண்ணியிருக்கலாமென்றும் சொன்னான் (*அப். 15:13; 26:31*).

## பெத்சாயிதா (Bethsaida)

### (மீன் பிடிக்கும் வீடு)

இந்தப் பட்டணம் கலிலேயாவுக்கு வடபாகத்தில் யோர்தானுக்கு அருகிலிருந்தது. இந்தப் பெயருள்ள இரண்டு இடங்களோ அல்லது ஒரே இடம் தானோ என்று நிச்சயமில்லை.

*1.* சிலர் இது யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்திலிருந்த வனாந்தரமென்றும், இங்கே தான் ஐயாயிரம் பேர் போஷிக்கப் பட்டார்களென்றும் சொல்லுகிறார்கள் (மாற்கு. *6:32*; லூக்கா. *9:10*). இங்கே ஏரோது பிலிப்பு ஒரு பட்டணத்தைக் கட்டி ஆவியா என்று பேரிட்டான். இயேசுவும் இளைப்பாறும்படி சீஷருடன் இவ்விடம் போனார்.

இன்னும் கலிலேயா நாட்டுப் பெத்சாயிதாவைப் பற்றியும் சொல்லியிருக்கிறது (யோவான். *12:21*). பிலிப்பு, அந்திரேயா, பேதுரு என்பவர்களின் ஊர். இது கப்பர்நகூமுக்கு அருகில் இருந்தது.

பெத்சாயிதா ஊரில் இயேசு ஒரு குருடனைச் சொஸ்தமாக்கினார் (மாற்கு. *8:22-26*).

பின்பு இயேசு பெத்சாயிதாவைக் கடிந்துகொண்டார் (மத். *11:21*).

## பெத்தாபாரா (Bethabara)

***(துறை வீடு)***

*யோவான் ஞானஸ்நானம் கொடுத்த இடம். இது யோர்தானுக்கு அப்பால் இருந்த பெத்தானி என்றும் சொல்லப்பட்டது (யோவான். 1:28).*

## பெத்தானியா (Bethany)

***(அத்திப்பழ வீடு)***

*எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரமான ஒலிவ மலைச் சரிவிலிருந்த ஒரு ஊர் (யோவான். 11:18). இங்கே மார்த்தாள், மரியாள், லாசரு வாசமாயிருந்தார்கள். குஷ்டரோகியாயிருந்த சீமோனும் இந்த ஊரான் (மாற்கு. 14:3). இயேசுவும் தம் கடைசி நாள்களில் இங்கே தங்கியிருந்தார் (மத். 21:17; மாற்கு. 11:11). லாசருவை உயிர்த்தெழுப்பினதும் இங்கேயே (யோவான். 11-ஆம் அதிகாரம்)*

*கடைசியில் இயேசு சீஷரை அழைத்துக்கொண்டு பெத்தானியா வரைக்கும் போய், பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் (லூக்கா. 24:50,51).*

*தற்காலத்தில் இதன் பெயர் லாசரியா.*

## பெத்துவேல் (Bethuel)

***(கர்த்தரில் வசிப்போன்)***

*நாகோர், மில்காள் என்பவர்களின் மகன். ஆபிரகாமின் சிறிய மகன். லாபான், ரெபெக்காள் என்பவர்களின் தகப்பன் (ஆதி. 22:20-23).*

## பெத்தேல் (Bethel)

***(தேவனுடைய வீடு)***

*பெலிஸ்தியா தேசத்திலிருந்த ஒரு பூர்வீக பரிசுத்தமான பட்டணம். இது எருசலேமிலிருந்து 12 மைல் தூரத்திலிருந்தது. ஆபிரகாம் இந்தப் பட்டணத்துக்கு அருகில் ஒரு பலிபீடம் கட்டி, கர்த்தரைத் தொழுது கொண்டான் (ஆதி. 12:8). பிற்பாடு எகிப்துக்குப் போய் திரும்பவும் வந்து, இவ்விடத்தில் பலி செலுத்தினான் (ஆதி. 13:3).*

*யாக்கோபுக்கும் இவ்விடத்தில் தேவன் தரிசனமானார். அவன் பிரயாணம் பண்ணி ஓர் இடத்தில் வந்து இராத்தங்கினானென்பது இந்த இடத்தைக் குறிக்கிறது (ஆதி. 28:11-22). பின்பு "பெத்தேலில் உனக்குத் தரிசனமான தேவன் நானே" என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார் (ஆதி. 31:13).*

யாக்கோபு அராமிலிருந்து திரும்பி வந்தபோதும் இவ்விடத்தில் பலிபீடம் கட்டி, தேவனைத் தொழுது கொண்டு அந்த ஸ்தலத்திற்கு "ஏல்பெத்தேல்" என்று பேரிட்டான் (ஆதி. 35:1-7).

கானானியர் வசம் இருந்த இந்தப் பட்டணத்தை யோசுவா பிடித்து, பென்யமீன் கோத்திரத்துக்குக் கொடுத்தான் (யோசு. 18:22). பிற்பாடு உடன்படிக்கைப் பெட்டி கில்காலிலிருந்து இங்கே கொண்டுவரப்பட்டது (நியா. 2:1). தெபொராள் இதற்குச் சமீபமாய்க் குடியிருந்தாள் (நியா. 4:5).

இஸ்ரவேல் புத்திரர் இவ்விடத்திலிருந்த தேவனுடைய வீட்டில் அவருடைய சித்தத்தை விசாரித்தார்கள் (நியா. 20:18-28; 21:1-4).

சாமுவேலின் நாள்களில் இது தேவ வணக்கத்துக்கு ஒரு விசேஷமான இடமாயிருந்தது. சாமுவேலும் வருடா வருடம் அங்கே போய்க்கொண்டிருந்தான் (1 சாமு. 7:16; 10:3).

யெரொபெயாம் இரண்டு கன்றுக் குட்டிகளை உண்டாக்கி, அவைகளை தேவர்கள் என்று சொல்லி, ஒன்றைப் பெத்தேலில் ஸ்தாபித்து, ஜனங்களைப் பாவம் செய்யப்பண்ணினான் (1 இரா. 12:29:33). யெரொபெயாம், அங்கே தூபங்காட்ட நிற்கையில், தேவ மனுஷன் வந்து அதன்மேல் சாபம் கூறினான் (1 இரா. 13:3). இவ்விதவணக்கத்தைத் தீர்க்கதரிசிகளாகிய ஆமோஸ், ஓசியா என்பவர்கள் கண்டித்தார்கள் (ஆமோஸ் 3:14; ஓசியா. 4:15; 10:5).

அசீரிய இராஜா சமாரியாவைப் பிடித்தபொழுது பெத்தேலும் பிடிக்கப்பட்டது. சமாரியாவில் குடியேற்றப்பட்ட ஜனங்களுக்குப் போதிக்கப்போன ஆசாரியன் பெத்தேலில் குடியிருந்தான் (2 இரா. 17:28).

யோசியா பெத்தேலிலிருந்த தோப்புகளை அழித்தான் (2 இரா. 23:4). பெத்தேல் ஜனங்கள் பிற்பாடு செருபாபேலோடு சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்தார்கள் (எஸ்றா. 2:28; நெகே. 7:32).

2. யூதேயாவிலிருந்த ஒரு பட்டணம் (1 சாமு. 30:27).

## பெத்பகே (Bethphage)
### (இளம் அத்திப்பழ இடம்)

இது ஒலிவ மலைக்கு அருகே எரிகோவிலிருந்து எருசலேமுக்குப் போகிற பாதையில் இருந்த ஓர் ஊர். இயேசு இவ்விடத்திலிருந்து ஒரு கழுதையைக் கொண்டுவரும்படி இரண்டு சீஷரை அனுப்பினார் (மத். 21:1; மாற்கு. 11:1; லூக்கா. 19:29).

## பெத்லகேம் (Bethlehem)

### *(ஆகார வீடு)*

இந்தப் பெயருள்ள இரண்டு பட்டணங்கள் உண்டு.

*1. பெத்லகேம் யூதா: இது எருசலேமிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. 'எப்பிராத்தா' என்றும் சொல்லப்பட்டது (ஆதி. 35:16). தாவீதும், மேசியாவும் இங்கே பிறந்ததினிமித்தம் இது கீர்த்தி பெற்றது (மத். 2:1).*

இரண்டாம் நூற்றாண்டில் ஆதிரியன் இராயன் இந்த இடத்தை அழித்தான். பிற்பாடு கான்ஸ்டன்டைனின் (Constantine) நாள்களில் எலெனா (Helena) இராஜாத்தி இயேசு பிறந்த குகைமேல் ஓர் ஆலயம் கட்டினாள்.

இது நகோமி, போவாஸ், ரூத் என்பவர்கள் இருந்த ஊர் (ரூத். 1:1; 4:9-11). தாவீதுடைய நகரம் (1 சாமு. 17:12). ரெகொபெயாம் இந்த இடத்தை அரணித்தான் (2 நாளா. 11:6). மேசியா இங்கே பிறப்பாரென்று தீர்க்கதரிசனம் சொல்லப்பட்டபடி (மீகா. 5:2) இங்கே பிறந்தார் (மத். 2:1).

இந்தப் பட்டணத்தருகே ராகேலின் கல்லறை இருக்கிறதாகக் காட்டுகிறார்கள் (ஆதி. 35:19). இயேசுவைப் பார்க்கப் போன மேய்ப்பர் தங்கின வயல் வெளியும் இதற்கு அருகே இருந்தது (லூக்கா. 2:5).

2. பெத்லகேம் செபுலோன் (யோசுவா. 19:15). நாசரேத்திலிருந்து 7 மைலுக்கு அப்பால் இருந்தது.

## பெந்தெகொஸ்தே (Pentecost)

### *(50-ஆம் நாள்)*

பஸ்காப் பண்டிகையின் பின் ஐம்பதாம் நாள். யூதர் கொண்டாடின வருடாந்திரப் பண்டிகை. கோதுமை அறுப்பின் முதற்பலனைச் செலுத்தும் ஏழுவாரப்பண்டிகையென்றும் குறித்துள்ளது (யாத். 34:22). அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியன் ஓய்வு நாளுக்கு மறுநாளில் அசைவாட்டவேண்டுமென்று, மோசே சொன்னான். இது செய்யப்பட வேண்டிய முறை, லேவி. 23:15-21ல் விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த நாள் சபைகூடும் ஒரு பரிசுத்தமான நாள். அதிலே சாதாரண வேலை செய்யலாகாது (லேவி. 23:21). அந்த ஏழாம் ஓய்வு நாளுக்கு மறுநாளாகிய ஐம்பதாம் நாளிலே முதற்பலனாக இரண்டு அப்பங்களைச் செலுத்தவேண்டும் (லேவி. 23:17-20).

இந்த வாரங்களின் பண்டிகையை, ஜனங்கள் எகிப்தில் அடிமைகளாக இருந்ததை நினைத்து, கர்த்தருடைய சந்நிதியில்

சந்தோஷமாய்க் கைக்கொள்ளவேண்டும் என்று மோசே கட்டளை கொடுத்தான் (உபா. 16:6-12).

பிற்காலங்களில் சதுசேயர் பஸ்காப்பண்டிகை நாளிலிருந்து ஐம்பதாம் நாளில் இந்தப் பலியைச் செலுத்தினார்கள். எருசலேம் தேவாலயம் இருந்த நாள்களிலெல்லாம் அப்படி நடந்தது. பரிசேயருடைய கொள்கையின்படி கி.பி. 70ன் பின் இந்த நாள் வாரத்தில் ஏதாயினும் ஒரு நாளில் ஆசரிக்கப்பட்டது.

ஆதிச் சபையில் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்பட்டதும் இந்த நாளிலே (அப். 2:1-4).

புதிய ஏற்பாட்டில் இந்த நாளைப்பற்றி மூன்று தடவைகளில் சொல்லியுள்ளது.

1) இயேசு உயிர்த்தெழுந்த 50ஆம் நாளில் பெந்தெகொஸ்தே நாள் வந்தபோது, சீஷர்கள் ஓரிடத்தில் கூடியிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் இறங்கினார் (அப். 2:1-4). யோவேல் தீர்க்கதரிசியால் சொல்லப்பட்டவை இவ்விதமாய் நிறைவேறின (யோவேல் 2:28-31-கி.பி. 30).

2. பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகை நாளில் எருசலேமில் இருக்க வேண்டும் என்றான் (அப். 20:16-கி.பி. 57).

3. பெந்தெகொஸ்தே பண்டிகை மட்டும் எபேசுவில் இருப்பேனென்று பவுல் கூறுகிறான் (1 கொரி. 16:8 - கி.பி. 54).

இந்த நாளே கிறிஸ்தவ சபையின் உற்பத்திநாள் எனக் கிறஸ்தவர்கள் மதிக்கிறார்கள்.

பல பாஷை பேசுதல் :

பரிசுத்த ஆவி பெற்றவர்கள் பல பாஷைகளைப் பேசினார்கள் (அப். 10:45). இது தேவனுடைய கிருபை வரம். பவுல் அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கு தடை பண்ணாதிருங்கள் என்கிறான் (1 கொரி. 14:39). இந்த வரத்தைப்பற்றி மாற்கு 16:17லும்; அப். 2:1-13லும் 1 கொரி. 12-14 அதிகாரங்களிலும் விவரித்துள்ளது.

விசேஷமாக 1 கொரி 14இல் பவுல் தெளிவாய் இந்த வரத்தைப்பற்றி பேசுகிறான். அந்நிய பாஷை பேசுகிறவன் தேவனிடத்தில் பேசுகிறான். அது ஒரு விண்ணப்பம், விசேஷமாய் அது ஸ்தோத்திரம் பண்ணுதல். மற்றவன் அதை அறியான். பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான். இது ஆவியின் அனுபவம். பேசுகிறவன் இரகசியங்களைப் பேசுகிறான். மற்றவன் அறியமாட்டான்.

அந்நிய பாஷை பேசும்பொழுது அதற்கு வியாக்கியானம் சொல்லுவது அவசியம். பேசுகிறவனுக்கு அந்தப் பாஷையை வியாக்கியானப்படுத்தும் வரம் இல்லாவிட்டால் வரம் பெற்றவன் அதன் அர்த்தத்தைச் சொல்ல வேண்டும். இந்த வரமும் ஆவியின் அனுக்கிரகம் *(1 கொரி. 12:10).*

அந்நிய பாஷை தேவனால் உண்டாகிறபடியால் அது விசுவாசிகளுக்கு ஓர் அடையாளமாயிருக்கிறது *(1 கொரி. 14:22).* அவர்களுடைய இருதயத்தின் நிலை வெளியரங்கமாகும்.

கொரிந்து சபையில் அந்நிய பாஷை அதிகமாய்ப் பேசப்பட்டபடியால் பவுல் அதைக் கண்டிக்கிறான். வியாக்கியானம் இல்லாவிட்டால் பேசக்கூடாதென்றும், பேசினாலும் இரண்டு மூன்று பேருக்கதிகமாய்ப் பேசக்கூடாதென்றும், பேச ஏவப்படுகிறவன் தனக்குள்ளே பேசலாமென்றும் சொல்லுகிறான். எல்லா வரங்களிலும் மேலாக அன்பே யாவரும் தேட வேண்டியது *(1 கொரி. 13:1).*

இந்த அனுபவம் இல்லாவிடினும் கிருபைபெற்ற அநேக கிறிஸ்தவர்கள் உண்டு. ஆனால் இப்படிப்பட்ட பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறாதவர்கள் விலையேறப்பெற்ற ஓர் அனுபவத்தை இழந்துபோகிறார்கள் ''ஆவியினால் நிறைந்திருங்கள்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறான் *(எபே. 5:18).*

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் பெறுவோர் ஒவ்வொருவரும் அந்நிய பாஷை பேசவேண்டுமோ என்பது ஒரு கேள்வியாகும்.

பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்கள்மேல் அக்கினிமயமான நாவுகள் வந்து அமர்ந்தன *(அப். 2:3).* நாவு பாஷையைக் குறிக்கும். ஆகவே, ஒவ்வொருவரும் பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். இதுவே நமக்கும் திருஷ்டாந்தம்.

## பெயெல்செபூல் (Beelzebub)

பாகால் சேபூப் எக்ரோனின் தேவன். அகசியா இராஜா வியாதிப்பட்டிருக்கையில், இதிலிருந்து நான் பிழைப்பேனோ என்று விசாரிக்கும்படி, பாகால் சேபூபிடம் ஆள்களை அனுப்பினான். எலியா தீர்க்கதரிசி அவர்களைச் சந்தித்து இராஜாவுக்கு வரப்போகிறதைச் சொல்லி, அவர்களைத் திருப்பி அனுப்பினான் *(2 இரா. 1:1-6).*

எபிரெயர் பெயெல்செபூல் என்ற பெயரை, நிந்தைப் பேச்சாக வழங்கினார்கள்.

புதிய ஏற்பாட்டில் பெயெல்செபூல் பிசாசுகளின் தலைவன் என்று சொல்லப்பட்டான் (மத். 12:24; மாற்கு. 3:22; லூக்கா. 11:15). இயேசு இந்தப் பெயர் சாத்தானைக் குறிக்கிறதாகச் சொன்னார் (மத். 12:26; மாற்கு. 3:23; லூக்கா. 11:18).

ஆகாயத்து அதிகாரப் பிரபு என்று எபே. 2:2இல் குறித்துள்ளது.

## பெயெர்செபா (Beersheba)

### (ஆணையின் கிணறு)

பெலிஸ்தியா தேசத்தில் தென் பக்கத்திலுள்ள ஒரு பூர்வீக நாடு. "தாண் முதல் பெயர் செபா மட்டும்" (நியா. 20:1) என்ற பேச்சு. இது பலஸ்தீனா தேசத்தின் தென் எல்லை என்பதைக் காட்டுகிறது. அபிமலேக்கும் ஆபிரகாமும் ஒரு துரவைப் பற்றி ஆணையிட்டதால் இது பெயெர்செபா எனப்பட்டது (ஆதி. 21:33). பின்பு ஆபிரகாம் இங்கே குடியிருந்தான் (ஆதி. 22:19).

ஈசாக்கும் இவ்விடத்தில் துரவு வெட்டித் தண்ணீர் கண்டதினிமித்தம் 'செபா' என்று பேரிட்டான். ஆகையால் அந்த ஊரின் பேர் பெயெர்செபா எனப்பட்டது (ஆதி. 26:33).

யாக்கோபு பெயெர்செபாவிலிருந்து புறப்பட்டு ஆரானுக்குப் பிரயாணமானான் (ஆதி. 28:10). பின்பு லாபானை விட்டுப் புறப்பட்ட பின்பும் பெயெர்செபாவுக்குப் போய், தேவனுக்குப் பலியிட்டான் (ஆதி. 46:1).

யோசுவா இந்த இடத்தை யூதா புத்திரருக்குச் சுதந்தரமாகக் கொடுத்தான். சீட்டுப் போட்ட வேளையில், இது சிமியோனுக்குக் கிடைத்தது (யோசுவா. 15:28; 19:2).

சாமுவேலின் குமாரர் பெயெர்செபாவில் நியாயாதிபதி களாயிருந்தார்கள் (1 சாமு. 8:2).

யேசபேல் எலியாவைப் பயமுறுத்தினபோது, அவன் பெயெர்செபாவுக்குப் புறப்பட்டுப் போனான் (1 இரா. 19:3).

இங்கிருந்த விக்கிரக ஆராதனையைப் பற்றி ஆமோஸ் கண்டித்துப் பேசுகிறான் (ஆமோஸ். 8:14).

சிறையிருப்பின் பின்பு பெயெர்செபாவும் அதன் கிராமங்களும் குடியேற்றப்பட்டன (நெகே. 11:27).

தற்காலத்தில் இது செழிப்பான தேசமாயிருக்கிறதெனச் சொல்லுகிறார்கள்.

## பெரிசியர் (Perizzites)

இவர்கள் கப்தோர் என்னும் தேசத்திலிருந்து வந்து ஆவியரைத் துரத்திப்போட்டு, கி.மு. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் பெலிஸ்தியாவின் கடற்கரை தேசத்தில் குடியேறினார்கள் (எரே. 47:4; ஆமோஸ். 9:7).

நியாயாதிபதிகளின் நாள்கள் துவங்கி தாவீதின் நாள்கள் வரையும் இஸ்ரவேலருக்கு விரோதிகளாயிருந்த இந்த ஜனங்களைக் குறித்து புதிய ஏற்பாட்டில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில், பெலிஸ்தியரின் தேச வழியாய்ப் போகாமல் வனாந்தர வழியாய் சுற்றிப்போனார்கள் (யாத். 13:17). யோசுவா தேசத்தைப் பங்கிட்ட நாள்களிலும், காசா, அஸ்தோத், அஸ்கலோன், காத், எக்ரோன் என்னும் பட்டணங்கள் பெலிஸ்தரின் அதிபதிகளின் கீழிருந்தது (யோசுவா. 13:3). அக்காலம் தொடங்கி அநேக வருடங்களாக இவர்கள் இஸ்ரவேலுக்குத் தொந்தரவு செய்யும்படி தேவன் இடங்கொடுத்தார் (நியா. 3:2,3; 10;6,7).

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலர் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருடமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தபின், சிம்சோனை எழுப்பி, அவர்களுக்கு அநேக அழிவுகளைச் செய்தார் (நியா. அதி. 14-16). சம்கார் பெலிஸ்தரில் 600 பேரைக் கொன்றான் (நியா. 3:31).

ஏலியின் நாள்களில் பெலிஸ்தரோடு யுத்தம் நடந்தபோது, இஸ்ரவேலர் பயந்து, உடன்படிக்கைப்பெட்டியைப் பாளயத்துக்குக் கொண்டுபோன வேளையில் அது பிடிக்கப்பட்டது (1 சாமு. அதி 4). அவர்களிடமிருக்கும் போது கொள்ளை நோய் உண்டானதினிமித்தம் பெட்டியைத் திருப்பி அனுப்பினார்கள் (1 சாமு. அதி. 5,6).

சாமுவேலின் காலத்தில் பெலிஸ்தர் இஸ்ரவேல்மேல் யுத்தம் செய்ய நெருங்கினார்கள். சாமுவேல் பலி செலுத்தி, தேவனை வேண்டிக்கொண்டபின், இஸ்ரவேலர் மிஸ்பாவிலிருந்துப் பெத்காரீம் மட்டும் அவர்களைப் பின் தொடர்ந்து முறிய அடித்தார்கள். சாமுவேல் ஒரு கல்லை நிறுத்தி, தேவன் எங்களுக்கு உதவி செய்தாரென்று சொல்லி "எபனேசர்" என்று பேரிட்டான் (1 சாமு. 7:12).

சவுலின் நாள்களில் யோனத்தான் கேபாவிலும், மிக்மாசிலும் பெலிஸ்தரைத் தோற்கடித்தான் (1 சாமு. 13:1-3; 14:1-23). சவுலும் அவர்களுக்கு விரோதமாய் வீரியத்தோடு யுத்தம் செய்தும், கடைசியில் கில்போவா மலையில், அவனும், அவனது மூன்று குமாரரும் மரணமடைந்தார்கள் (1 சாமு. அதி. 31).

தாவீது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த நாள்களில், பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்குமிடையில் யுத்தம் நடந்தபோது, கோலியாத் என்னும் பெலிஸ்த வீரனைக் கொன்றான் *(1 சாமு. 17:49-51).*

சவுலுக்குத் தப்பி தாவீது ஒளிந்திருந்த காலத்தில் தாவீது பெலிஸ்தரிடம் இரண்டு தடவைகளில் உதவி பெற்றான். சிக்லாக் பட்டணமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது *(1 சாமு. 21:10-15; 27:6).* ஆனாலும் அவன் இராஜாவானபின், அவர்களைத் தோற்கடித்து கீழ்ப்படுத்தினான் *(2 சாமு. 5:22-25; 8:1).*

எசேக்கியாவும், உசியாவும் பெலிஸ்தரோடு யுத்தம் செய்து, அவர்களை முறிய அடித்தார்கள் *(2 இரா. 18:8; 2 நாளா. 26:6,7).*

இவர்கள் மேல் தேவ தீர்ப்பு வருமென்று தீர்க்கதரிசிகள் கூறியிருந்தார்கள் *(எரே. 4:7; எசே. 25:15-17; ஆமோஸ். 1:6-8; செப். 2:4,5; சக. 9:5-7).*

பெலிஸ்தருடைய தலைமையான தெய்வம் தாகோன் *(1 சாமு. 5:2-5).*

மத்தியத் தரைக்கடல் பெலிஸ்தரின் கடல் என்றும் குறித்துள்ளது *(யாத். 23:31).*

## பெலிஸ்தியா (Philistia)

### (குடியேறுதல்)

இந்தப் பதம் வேதாகமத்தில் மூன்று இடங்களில் காணப்படுகிறது *(யாத். 15:14; ஏசாயா. 14:29, 31; யோவேல் 3:4).*

பெலிஸ்தியர் குடியிருந்த தேசமானதால் பெலிஸ்தியா எனப் பட்டது. தொடக்கத்தில் இது கர்மேலுக்குத் தெற்குப் பக்கமாயிருந்த தேசத்தைக் குறித்துள்ளது. பின்பு பலஸ்தீனா (பெலிஸ்தியா) என்ற பெயர் யோர்தானுக்குக் கிழக்கிலும் மேற்கிலுமிருந்த “பரிசுத்த பூமி” முழுவதற்கும் வழங்கிற்று.

மேல் பலஸ்தீனா அல்லது கானான் என்ற தேசம், தாணிலிருந்து பெயெர்செபா வரையுமிருந்தது. கீழ் பலஸ்தீனா, பாசான் துவங்கி மோவாப் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் எனப்பட்டது *(1 நாளா. 5:9).*

ஆதியில் இந்தத் தேசத்தில் குடியிருந்த ஜனங்கள் யாரென்று சொல்லக்கூடாதிருந்தும், பிற்காலங்களில் கானானியரும், மோவாபியரும் அங்கேயிருந்தார்கள். எபிரெயர் அவர்களைத் துரத்திவிட்டு அங்கே குடியேறினார்கள்.

இஸ்ரவேலர் அந்தத் தேசத்தைக் கீழ்ப்படுத்தினபின், யோசுவா பன்னிரு கோத்திரங்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தான். நியாயாதிபதிகளின் நாள்களின் பின் சவுல், தாவீது, சாலொமோன் அரசாட்சி செய்தார்கள். ரெகோபெயாமின் நாள்களில் (கி.மு. 933-971) தேசம் இரண்டாகப் பிரிந்து யூதா, இஸ்ரவேல் என இரு இராஜயங்களாயிற்று. கி.மு. 721இல் இஸ்ரவேல் இராஜயம் தோற்கடிக்கப்பட்டு ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள். பின்பு யூதா இராஜ்யத்துக்கும் அப்படியே நேரிட்டது.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் பலஸ்தீனா ரோமருடைய அரசாட்சிக்குள்ளிருந்தது. அக்காலத்தில் யோர்தானுக்கு மேற்பக்கமான தேசம் யூதேயா, சமாரியா, கலிலேயா என்றும், கீழ்ப்பக்கம் பெரோயா, தெக்கப்போலி என்றும் பிரிக்கப்பட்டு ஆளுகை செய்யப்பட்டது.

## பெல்ஷாத்சார் (Belshazzar)

### (பாகாலே இராஜாவைப் பாதுகாரும்)

இவனுடைய தகப்பன் நெபுநிடஸ்தான், (Nebunidus) பாபிலோன் தேசத்தின் இராஜா. பெல்ஷாத்சார் சேனைக்குத் தலைவனாயிருந்தான்.

இவன் ஒரு பெரிய விருந்து செய்து, எருசலேம் தேவாலயத்தின் பாத்திரங்களில் பானம் பண்ணின வேளையில் சுவரில் எழுத்தைக் கண்டான். தானியேல் அதன் அர்த்தத்தை வெளியிட்டான். அன்று இரவு, மேதிய இராஜா கோரேஸ் தேசத்தைக் கைவசப்படுத்தியதோடு, இவனையும் கொன்று போட்டான் (தானி. 5:1-5).

## பெல்தெஷாத்சார் (Belteshazzar)

இது பாபிலோனியாவில் தானியேலுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் (தானி. 1:7; 2:26; 5:12). இதன் அர்த்தம் "அவன் ஜீவனைக் காப்பாற்றும்".

## பெனாதாத்

### (ஆதாதின் மகன்)

ஆதாத் சீரியரின் தெய்வம். அவர்களுடைய இராஜாக்கள் தெய்வமக்கள் எனப்பட்டார்கள். இந்தப் பெயருள்ள மூன்று பேர் உண்டு. இவர்கள் தமஸ்குவில் இராஜாக்களாயிருந்தவர்கள்.

1. பெனாதாத் சீரியரின் இராஜா. எசியோனின் மகனாகிய தபரிமோனின் குமாரன். இஸ்ரவேல் இராஜாவாகிய பாஷா, யூதாவுக்கு விரோதமாய் ராமாவைக் கட்டினான்.

யூதா இராஜாவாகிய ஆசா, பெனாதாத்திடம் உதவி கேட்டான். அப்பொழுது அவன் தன் ஆள்களை அனுப்பி அநேக பட்டணங்களைப்

பிடித்துக் கொண்டான். பாஷா அதைக் கேட்டபோது, கட்டுகிறதை விட்டுவிட்டான் *(1 இரா. 15:18-21; 2 நாளா. 16:1-6) (கி.மு. 860).*

*2.* மேற்சொல்லப்பட்ட பெனாதாத்தின் மகன். இவன் பெயரும் பெனாதாத். இவன் ஆகாப் இராஜாவின் நாள்களில் சமாரியாவைப் பிடிக்கப்போன வேளையில் தோற்கடிக்கப்பட்டான். அடுத்த வருடம் திரும்பவும் யுத்தம்செய்து தோல்வி அடைந்தாலும், ஆகாப் அவனைத் தப்ப வைத்து சமாதானம்பண்ணினான் *(1 இரா. 20:1-34).*

அசீரியர் பெனாதாத்துக்கு விரோதமாய் வந்தபோது ஆகாபும் மற்றவர்களும் அவனுக்கு உதவிசெய்து, நடந்த யுத்தத்தில் அசீரியருக்கு ஜெயம் கிடைத்தபோதிலும் அவர்களில் அநேகர் கொல்லப்பட்டார்கள் *(கி.மு. 854).*

பின்பு பெனாதாத் இராணுவத்தை எல்லாம் கூட்டிக் கொண்டு சமாரியாவை முற்றுகை போட்டான். கர்த்தர் அவர்கள் பாளயத்திலே சடுதியான திகில் உண்டாகச் செய்ததினிமித்தம் தங்கள் பிராணன் தப்பும்படி ஓடிப்போனார்கள் *(2 இரா. 6:24; 7:7).*

எலிசா தமஸ்குவுக்குப் போயிருக்கையில், பெனாதாத் வியாதிப் பட்டபோது ஆசகேலை எலிசாவிடம் அனுப்பினான். அவன் திரும்பி வந்து பெனாதாத்தைக் கொன்றுபோட்டு, தான் இராஜாவானான் *(2 இரா. 8:7-15).*

*3.* சீரியாவின் இராஜாவாகிய ஆசகேல் மரித்தபின், அவனுடைய குமாரனாகிய பெனாதாத் இராஜாவானான். யோவாஸ் இவனோடு யுத்தம்பண்ணி, தன் தகப்பன் இழந்துபோன பட்டணங்களைத் திரும்பப் பிடித்துக் கொண்டான் *(2 இரா. 13:24,25).*

## பெனாயா (Benaiah)

**(தேவன் கட்டி எழுப்பினார்)**

இவன் யூதேயாவிலுள்ள கப்செயெல் ஊரான். யோய்தாவின் குமாரனும், செய்கைகளில் வல்லவனுமாயிருந்தான். தாவீது தன் மெய்க்காவலருக்கு இவனைத் தலைவனாக வைத்தான் *(2 சாமு. 23:20-23).*

சாலொமோன் இராஜாவாகிறதற்கு இவன் உதவியாயிருந்தான் *(1 இரா. 1:8, 38,44).* சாலொமோனின் கட்டளைப்படி இவன் யோவாபைக் கொன்றான் *(1 இரா. 2:28-35).*

2. பிரத்தோனியனாகிய பெனாயா. இவன் தாவீதின் சேனாதிபதிகளில் ஒருவன். இவன் வகுப்பில் 24,000 பேர் இருந்தார்கள் *(2 சாமு. 23:30; 1 நாளா. 27:14).*

இந்தப் பெயருள்ள இன்னும் பன்னிரெண்டு ஆள்கள் வேதாகமத்தில் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் நான்குபேர் எஸ்றாவின் காலத்தில் அந்நிய பெண்களை விவாகம் செய்தவர்கள் (எஸ்றா. 10:25, 30,35,43).

## பெனியேல் (Peniel)

### (தேவனுடைய முகம்)

இது யாக்கோபு யாப்போக்குத் துறையைக் கடந்த இடம். அந்த இடத்தில் தேவனை முகமுகமாய்க் கண்டேன் என்று சொல்லி, பெனியேல் என்று பேரிட்டான் (ஆதி. 32:30). பிற்காலத்தில் இவ்விடத்தில் ஒரு கோபுரம் கட்டப்பட்டது. கிதியோன் மீதியானியரைத் தோற்கடித்தபோது, இதையும் அழித்துப் போட்டான் (நியா. 8:8). யெரொபெயாம் திரும்பவும் இதைக் கட்டினான் (1 இரா. 12:25).

## பென்யமீன் (Benjamin)

### (வலது கரத்தின் மகன்)

யாக்கோபின் கடைசி மகன். தகப்பன், “என் வலது கரத்தின் மகன்” என்று கருத்துள்ள “பென்யமீன்” என்றும், தாய், “துக்கத்தின் மகன்” என்று “பெனோனி” என்றும் அவனுக்குப் பேரிட்டார்கள் (ஆதி. 35:17,38).

யாக்கோபின் பிள்ளைளில் இவனே பலஸ்தீனாவில் பிறந்தவன். ராகேலின் பிள்ளைகளில் இவன் மாத்திரம் தன்னோடிருந்ததால் யாக்கோபு இவன்மேல் பட்சமாயிருந்தான் (ஆதி. 42:35-38; 43:1-14).

யாக்கோபு எகிப்துக்குப் போனபோது, இவனுக்கு 10 குமாரர் இருந்தார்கள் (ஆதி. 46:21). அப்போது யோசேப்புக்கு வயது 40.

## பென்யமீன் கோத்திரம்

எகிப்திலிருந்துப் புறப்படுகையில் இந்தக் கோத்திரத்துப் புருஷர் 35,400 பேரிருந்தார்கள். இரண்டாம் குடிமதிப்பில் 45,600 பேரிருந்தார்கள் (எண். 1:37; 26:41).

பிரயாணத்தில் எப்பிராயீமுக்கருகே இந்தக் கோத்திரத்தார் பாளயமிறங்கினார்கள் (எண். 2:22).

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கப்போனவர்களில் இந்தக் கோத்திரத்திலிருந்து பல்த்தி போனான் (எண். 13:9). தேசத்தைப் பங்கிடும்படி எலிதாது இந்தக் கோத்திரத்திலிருந்துத் தெரிந்து கொள்ளப்பட்டான் (எண். 34:21).

### கோத்திரத்தின் பங்குவீதம்

இவர்களுடைய பங்கு யூதாபுத்திரருக்கும், யோசேப்பின் புத்திரருக்கும் நடுவே இருந்தது (யோசுவா. 18:11). இதன் எல்லைகளைப்பற்றி யோசுவா 18:15-28இல் சொல்லியிருக்கிறது.

சிறையிருப்பின் பிற்பாடு இந்தக் கோத்திரத்தார் குடியேறிய கிராமங்கள் நெகே. 11:31-35இல் குறித்துள்ளது.

## பென்யமீனர்

இவர்கள் யுத்தம் செய்வதில் வல்லவர்களும், சாமர்த்திய முள்ளவர்களும் இடது கை பழக்கமுள்ளவர்களுமாயிருந்தார்கள். கவண்கள் எறிவதில் அதிக நுட்பமுள்ளவர்கள் (நியா. 20:15,16; 1 நாளா. 8:40).

பென்யமீன் பீறுகிற ஓநாய் என்று யாக்கோபு தன் கடைசி வார்த்தையில் சொன்னான் (ஆதி. 49:27).

நியாயாதிபதிகளின் நாள்களில் இஸ்ரவேலை மோவாபியர் கையிலிருந்து விடுவித்த ஏகூக் ஒரு பென்யமீனன் (நியா. 3:15).

தெபொராள், பாராக் என்பவர்களுடன் பென்யமீனர் சிசெராவுக்கு விரோதமாக யுத்தம் செய்தார்கள் (நியா. 5:14).

இஸ்ரவேலின் முதல் இராஜாவாகிய சவுல் பென்யமீனன் (1 சாமு. 9:1). எஸ்தரும் பென்யமீன் கோத்திரத்தாள் (எஸ். 2:5). தாவீதைச் சபித்தவன் ஒரு பென்யமீனன் (2 சாமு. 16:5).

இராஜ்யம் பிரிந்தபோது, ரெகொபெயாம் பக்கத்தில் யூதா பென்யமீன் கோத்திரத்தாரும் நின்றார்கள் (1 இரா. 12:21). இன்னோம் பள்ளத்தாக்கு பென்யமீனரின் தெற்கு எல்லை (நெகே. 11:30).

அப்போஸ்தலனாகிய பவுலும் இந்தக் கோத்திரத்தான் (பிலி. 3:5).

2. 1 நாளா. 7:10இல் இன்னொரு பென்யமீனைப் பற்றிச் சொல்லியுள்ளது.

3. அந்நிய பெண்களை விவாகம்பண்ணினவன் (எஸ்றா. 10:32).

## பெலிஸ்தியா, பலஸ்தீனா (Palestine)

**(குடியேறுதல்)**

தமிழ் வேதாகமத்தில் பலஸ்தீனா என்ற சொல் இல்லை. இது தமிழில் எழுதப்பட்ட ஆங்கிலப் பெயர். ஆங்கிலத்தில் யாத். 15:14; ஏசாயா. 14:29, 31. யோவேல் 3:4இல் காணப்படுகிற 'பலஸ்தீனா'

(Palestine) பெலிஸ்தியாவென்று தமிழில் மொழி பெயர்த்துள்ளது. பெலிஸ்தியர் அங்கே குடியேறியிருந்ததினால் இப்பெயர் வழங்கிற்று.

இதன் எல்லைகள் :- மத்திய தரைக்கடல், நைல் நதி, அரபிய வனாந்தரம், லீபனோன் ஆறு. சில காலங்களில் இந்த தேசம் பரிசுத்த பூமி எனப்பட்டது.

இதன் மேற்கு பகுதியாகிய தாண் துவக்கி பெயெர்செபா வரையுள்ள நாடு கானான் எனவும், பாசான் துவக்கி மோவாப் வரையுள்ள கீழ்ப்பகுதி கீலேயாத் எனவும் அழைக்கப்பட்டது (நியா. 20:1).

துவக்கத்தில் கானானியரும், எமோரியரும் இத்தேசத்தில் குடியேறினார்கள் கி.மு. 1450ஆம் வருடமளவில் யோசுவா இத்தேசத்தைக் கைப்பற்றி இஸ்ரவேல் ஜனங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தான்.

அவன் மரித்தபின், நியாயாதிபதிகளும் பின்பு இராஜாக்களும் தேசத்தில் ஆளுகை செய்து வந்தனர். ஒரு காலத்தில் இஸ்ரவேலரின் இராஜ்யம் பெயர்பெற்று பலமுள்ளதாயிருந்தது. அவர்கள் ஒரே தேவனைத் தொழுது வந்தார்கள். பின்பு அவர்கள் மெய்த்தேவனை விட்டு விலகி, விக்கிரகாராதனையைப் பற்றிக் கொண்டதினிமித்தம் அவர்களுக்குத் தண்டனையாக பாபிலோனிய இராஜாவாகிய நேபுகாத்நேச்சார் கி.மு. 606இல் எருசலேமைக் கைப்பற்றி ஜனங்களைச் சிறைகொண்டு போனான். இஸ்ரவேலரின் இராஜ்யமும் முடிவாயிற்று. தேவாலயமும் அழிக்கப்பட்டது.

கி.மு. 336இல் பெர்சிய இராஜாவாகிய கோரேஸ் என்பவனின் கட்டளையின் பயனாக, இஸ்ரவேலர் திரும்பி, பலஸ்தீனாவுக்குப்போய் தேவாலயத்தைக் கட்டினார்கள். அதுமுதல் வேறு தேசங்களிலிருந்தும் இஸ்ரவேலர் திரும்பி வந்து குடியேறினார்கள். ஆனால் அரசாட்சி புறஜாதியார் கையிலிருந்தது. கி.மு. 167இல் மக்கபெயர் (Maccabeer) என்னும் ஒரு யூதக்கட்சியார் எழும்பி தேசத்தை விடுவித்து சுயாதீனம் பெற்று கி.மு. 63வரை ஆளுகை செய்து வந்தனர்.

நமது ஆண்டவர் உலகத்தில் இருந்த நாள்களில் பலஸ்தீனா ரோமருடைய ஆளுகைக்குக் கீழிருந்தது. அவர்கள் யோர்தான் நதியின் மேற்பகுதியை யூதேயா, சமாரியா, கலிலேயா, என்றும், கீழ்ப் பகுதியை பெரெயா, தெக்கப்போலி என்றும் பிரித்து, தேசாதிபதிகளை ஏற்படுத்தி அரசாண்டு வந்தார்கள்.

ஆனாலும் யூதருக்கும் சில சுயாதீன முறைகள் இருந்தன. அவர்களுடைய மார்க்க விஷயங்களில் தடைகள் இருக்கவில்லை. அரசாங்கத்தார் யூதரைப் பிரியப்படுத்தும்படி கிறிஸ்தவர்களா யிருந்தவர்களுக்கு இடைஞ்சல் செய்தனர்.

யூத ஜனங்கள் புறஜாதியாருடைய ஆளுகைக்குக் கீழிருக்க விருப்பமில்லாமல் காலத்துக்குக் காலம் கலகம் பண்ணினார்கள். கடைசியாய் யூதர் கலகம் பண்ணினபோது வெஸ்பேசியன் (Vespasian) என்னும் ரோம ராயன் சேனைகளை அனுப்பி எருசலேமைக் கைப்பற்றினான்.

கி.பி. 70இல் ரோம சேனாதிபதி தீத்து என்பவன் வந்து எருசலேம் தேவாலயத்தைச் சுட்டெரித்து, ஜனங்களையும் சிதறடித்தான். யூதருடைய காலம் முடிவாயிற்று. சில வருடங்கள் சென்றபின் ரோமருடைய ஆளுகையும் முடிவுக்கு வந்தது. அதன் பின் பெர்சியர், சரசீனர் (Saraceener) முதலிய ஜாதியார் பலஸ்தீனாவை ஆண்டு வந்தார்கள். பின்பு துருக்கியருடைய ஆளுகையின் காலத்தில் கி.பி. 1900 துவங்கி பல தேசங்களிலிருந்த யூதர் பலஸ்தீனாவுக்குப் போய், அதை தங்கள் சுய தேசமாக்கும் நோக்கத்தோடு குடியேறினார்கள்.

கி.பி. 1914இல் முதலாம் உலக யுத்தம் நடந்தபோது பிரித்தானியர் பலஸ்தீனாவைத் துருக்கியர் கையிலிருந்து கைப்பற்றினார்கள்.

யூதருடைய யுத்தம் நடத்துவதற்கு ஒரு வகை வெடி மருந்து ஆங்கிலேயர் வசம் இல்லாதிருந்ததினால், பலஸ்தீனா பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜ் (Lloyd George) அந்நாள்களில் மான்செஸ்டர் (Manchester) மகா வித்யாசாலையில் ஆசிரியராயிருந்த பண்டிதனாகிய வைஸ்மேன் (Weysmann) என்னும் ஒரு யூதனுடைய முயற்சியின் பயனாக, அந்த வெடி மருந்தை உண்டாக்கினார்.

இதற்கு நன்றியறிதலாக யுத்தம் முடிந்தபின் பால்ஃபர் (Balfour) என்னும் ஆங்கிலேய பிரதம மந்திரி ஒரு பிரதிக்கினை கி.பி. 1917இல் செய்தார். அதாவது, யூத ஜனங்கள் குடியிருப்பதற்காகப் பலஸ்தீனாவில் அவர்களுக்கு இடங்கொடுக்கப்படவேண்டு மென்பதே. அந்நாளை இஸ்ரவேலர் இந்நாள் வரை ஞாபகக் குறி நாளாகக் கொண்டாடி வருகிறார்கள்.

அராபியர் இதற்கு விரோதமாய் எழும்பினதினிமித்தம் உலக ஐக்கிய சங்கம் (League of Nation) அந்தத் தேசத்தைப் பிரித்தானியரின் பாதுகாப்பில் வைத்தது.

கி.பி. 1920 ஆவணி மாதம் 10ஆம் தேதி செவேஸ் (Serwes) என்ற இடத்தில் செய்த சமாதான உடன்படிக்கையின்படி துருக்கியர் பலஸ்தீனாவை முற்றாய்க் கைவிட நேரிட்டது.

ஆங்கிலேயர் யூதருக்குச் சார்பாயிருந்ததினால் அவர்கள் பிற தேசங்களிலிருந்து வந்து குடியேறி, வீடு வாசல்களைக்கட்டி, அநேக சீர்த்திருத்தங்கள் செய்தார்கள். சீயோன் இயக்கம் (Zion Movement) என்ற ஒரு கூட்டத்தாரை ஏற்படுத்தி முன்னேறிப்போனார்கள்.

அராபியரும் இதற்கு எதிராக ஒரு சங்கத்தை (Arab High Committee) ஏற்படுத்தி குழப்பங்கள் செய்தார்கள்.

கி.பி. 1937இல் ஐக்கிய சங்கத்தார் ஒரு விசாரணைச் சபையை (Peel Commission) ஏற்படுத்தினார்கள். அவர்கள் பலஸ்தீனாவுக்குப்போய் விசாரணை செய்தபின் தேசத்தை இரண்டாகப் பிரிவு செய்வது நல்லதென்று தீர்மானித்தபோது, இரு பகுதியாரும் சம்மதிக்கவில்லை.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஹிட்லர் (Hitler) என்னும் ஜெர்மனியின் சர்வாதிகாரி யூத ஜனங்களைச் சங்காரம் பண்ணுகையில், தப்பியோடி, தங்கியிருக்க இடம் இல்லாத பத்து லட்சம் யூதருக்குப் பலஸ்தீனாவுக்குப். போக இடங்கொடுக்கும்படி, அமெரிக்காவின் தேசாதிபதி ட்றூமன் (Truman) ஒழுங்குபண்ணினார்.

கி.பி. 1946 கார்த்திகை மாதம் 27ஆம் தேதி உலக ஐக்கிய சங்கத்தார் (United Nations) பலஸ்தீனாவை யூதருக்கும் அராபியருக்குமிடையில் பங்கு பிரிக்கத் தீர்மானம் பண்ணினார்கள். அதன்படி பிரிக்கப்பட்டபோது இஸ்ரவேலருக்குத் தேசத்தின் ஒரு பங்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. மேலும் எருசலேமின் முக்கிய பகுதி அராபியருக்காயிற்று. ஆகிலும் கி.பி. 1942இல் இஸ்ரவேலரின் பிரதம மந்திரி பென் கூறியன் (Ben Gurion) அமெரிக்காவில் நடந்த சீயோன் சங்கக் (Zion Movement) கூட்டத்தில் இஸ்ரவேலருக்குப் பலஸ்தீனாவில் குடியுரிமை வேண்டுமென்று வாதித்தார்.

அவர் ஒரு நாள் கலிபோர்னியா (California) மகாவித்யாசாலையில் பிரசங்கம் பண்ணுகையில் அராபிய மாணவன் ஒருவன் பலஸ்தீனா நாட்டை அராபியர் கையிலிருந்து பறித்தெடுத்தது நியாயமாவென்று கேட்ட சமயத்தில், அவர் கொடுத்த மறுமொழியாவது :

தேவன் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பாராகில் நீர் இந்தத் தேசத்தை 4000 வருடத்துக்கு முன் ஆபிரகாமுக்குக் கொடுத்தீர் என்று சொல்வேன் என்றார்.

கி.பி. 1947ஆம் ஆண்டு உலக ஐக்கிய சங்கத்தார் (United Nations) பலஸ்தீனாவை யூதருக்கும் அராபியருக்குமிடையில் பங்கு பிரித்தபோது, இஸ்ரவேலருக்குத் தேசத்தின் ஒரு பங்கு மாத்திரம் கொடுக்கப்பட்டது. எருசலேமின் முக்கிய பகுதி தேவாலயம் இருந்த நிலையத்தோடு அராபியருக்காயிற்று. ஆகிலும் இஸ்ரவேலர் அதை ஏற்றுக் கொண்டார்கள்.

அதன்பின் இஸ்ரவேலர் தங்கள் சுயாதீனத்தைப் பிரசித்தஞ் செய்தனர். அவர்களுடைய பிரதம மந்திரியாகிய பென் குறியன் (Ben Gurion) இஸ்ரவேலரின் அரசு (State of Israel) எனப் பேரிட்டு சுதந்தர இராஜ்யப் பிரகடனம் செய்தார். உடனே அமெரிக்க ஐக்கிய நாடுகளும் (U.S.A.), ரஷியாவும் (Russia) அதை ஏற்றுக்கொண்டன.

ஆனால் எகிப்து, யோர்தான், லீபனோன், ஈராக், சீரியா, அராபியா தேசங்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய் எழும்பி அநேகரைக் கொன்றார்கள். அவ்வேளையில் ஆயிரக்கணக்கான அராபியர் தேசத்தைவிட்டு வேறிடங்களுக்குப் போனார்கள்.

ஐக்கிய நாட்டுச் சங்கம் (United Nations Generals Assembly) அவர்களைச் சமாதானப்படுத்தி, கி.பி. 1948இல் தேசத்தைவிட்டுப் போன எவர்களும் திரும்பி வந்து சமாதானமாய் ஜீவிக்க விரும்பினால், உடனே அப்படிச் செய்யலாமென்று பிரசித்தம் பண்ணினார்கள்.

கி.பி. 1949இல் இஸ்ரவேலருக்கும் அராபியருக்குமிடையில் தொந்தரவு உண்டானபோது, ஐக்கிய நாட்டுச்சங்கம் அராபியர் அநேகர் குடியிருந்த ஒரு பகுதியை யோர்தான் இராஜ்யத்துக்கும், காசா (Gaza) என்னும் பகுதியை எகிப்துக்கும் பகிர்ந்து கொடுத்தனர்.

கி.பி. 1950 வைகாசி மாதம் ஐக்கிய நாடும், பிரித்தானியாவும், பிரான்சும் ஒன்று கூடி இஸ்ரவேல் அராபியருக்கிடையில் எல்லை விஷய சச்சரவு ஏற்படாமல் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். ஆகிலும் தகராறு நடந்து கொண்டே இருந்தது.

கி.பி. 1954 சித்திரை மாதம் எகிப்தின் தேசாதிபதி நாசர் என்பவன் சூயஸ் கால்வாயைப் பாதுகாத்த பிரித்தானியா பட்டாளத்தை எடுத்து விடும்படி கேட்டது, அது செய்யப்பட்டது.

கி.பி. 1955 நாசர் ரஷ்யா, செக்கோஸ்லோவாக்கியா என்னும் தேசங்களிலிருந்து யுத்த ஆயுதங்கள் பெற்றுகொள்ள ஒழுங்கு செய்ததினிமித்தம் அமெரிக்கா எகிப்துக்குக் கொடுத்து வந்த உதவியை நிறுத்தினது. உடனே நாசர் சூயஸ் கால்வாயைத் தன் ஆளுகைக்குட்படுத்தினான்.

இஸ்ரவேல் அந்தக் கால்வாயை விடுவிக்கும் நோக்கமாய் படை எடுத்துப்போனபோது, கி.பி. 1956 மார்கழி மாதம் அமெரிக்காவும், ரஷ்யாவும் முன் வந்து, 6000 பேருள்ள ஒரு சேனையை எகிப்தில் நிலைப்படுத்தினர்.

கி.பி. 1960 பங்குனி மாதம் இஸ்ரவேலர் யோர்தான் நதித் தண்ணீரைப் பாலைவனத்துக்குத் திருப்புவதாக வெளியிட்டனர்.

கி.பி. 1963 வைகாசி மாதம் அமெரிக்க தேசாதிபதியாகிய கென்னடி (Kennedy) இஸ்ரவேல் அராபியருக்குள்ள தேச ஆதிக்கத்தை உறுதிப்படுத்தத் தான் உதவி செய்வதாகத் தெரிவித்தார்.

கி.பி. 1966 பங்குனி மாதம் சீரியர், இஸ்ரவேலருடைய எல்லையில் குழப்பம் உண்டாக்கினார்கள்.

கி.பி. 1967ஆம் ஆண்டு நாசர் எகிப்தில் ஐக்கிய சங்கம் வைத்துப் பட்டாளத்தை விலக்கும்படி கேட்கவே, அப்படியே செய்தார்கள். உடனே சீரியர் இஸ்ரவேலைத் தாக்க ஆரம்பித்தனர்.

கி.பி. 1967ஆம் ஆண்டு இஸ்ரவேலர் அகபா (Akaba) குடாக் கடலுக்குப்போகாதபடி நாசர் தடை செய்தான். இதினிமித்தம் யுத்தம் தொடங்கிற்று.

ஆறு நாள்களுக்குள் இஸ்ரவேல், எருசலேம், பெத்லகேம், எரிகோ பட்டணங்களைக் கைப்பற்றியதோடு சீனாவில் ஒரு பகுதியையும், காத்சா நாட்டையும் யோர்தானின் மேற்பக்கத்தையும், சீரியாவின் மலைத் தேசத்தையும் ஆட்கொண்டார்கள்.

அராபியருக்கு 1,50,000 ஆட்களுள்ள சேனைகள் இருந்தன. இஸ்ரவேலருக்கு அதில் பத்திலொரு பங்கு மாத்திரமே இருந்தது.

இதற்குள் ஐக்கிய தேசச் சங்கம் நியுயார்க்கில் (New York) ஒன்றுகூடி யுத்தத்தை நிறுத்தும்படி கட்டளையிட்டது.

கி.பி. 1967ஆம் ஆண்டு இஸ்ரவேலின் சேனாபதி தயான் (Dayan) பழைய புலம்பலின் மதில் (Wailing Wall) அருகே நின்று, "இஸ்ரவேல் சேனைகள் இன்று எருசலேமை விடுவித்தன. பிரிக்கப்பட்டிருந்த இஸ்ரவேலின் தலைநகரை மறுபடி ஒன்றாக்கினோம், நமது பூர்வீக பரிசுத்த தேவாலயத்துக்குத் திரும்பவும் வந்தோம், இனிமேல் இதை ஒரு போதும் கைவிட மாட்டோம்" என்று கூறினார்.

இஸ்ரவேலின் பிரதம மந்திரி எஸ்கோல் (Eshkol), "இந்நாள் இஸ்ரவேலருடைய சரித்திரத்தில் ஒரு முக்கிய நாள்" என்றார். ஸ்லோமா கோறென் (Shloma Goren) 2000 வருடத்துக்குப் பின் எருசலேம் யூதருடைய ஆதிக்கத்துக்குள்ளாவதற்கு அடையாளமாக எக்காளம் ஊதினபோது ஜனங்கள் ஆர்ப்பரித்தனர்.

சீனாய் மலை நாட்டையும், சூயஸ் கால்வாயையும் வெற்றி கொண்டதற்கு அடையாளமாக, தாவீதின் உருவம் ஒன்று செய்து சூயஸ் கால்வாயின் கிழக்குப் பக்கத்தில் நிறுத்தினார்கள்.

இஸ்ரவேலின் வருங்காலம் எப்படி இருக்குமோ என்று சொல்ல முடியாது. "வாருங்கள் அவர்கள் இல்லாமற் போகப்பண்ணுவோம், அவர்கள் பெயர் நினைக்கப்படாமல் போகட்டும்" என்கிறான் நாசர். இஸ்ரவேலைச் சுற்றியிருக்கிற பத்து அராபிய ஜாதிகளும் அப்படியே சொல்லுகின்றனர்.

இஸ்ரவேலருக்கு இருக்கிற நம்பிக்கை அவர்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமோடு தேவன் செய்த உடன்படிக்கையே.

“எகிப்தின் நதி துவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதி மட்டுமுள்ள இந்தத் தேசத்தை நான் உன் சந்ததிக்குத் தந்தேன்” என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார் (ஆதி. 15:18).

பின்பு “நீங்கள் கர்த்தருடைய சத்தத்திற்குச் செவிகொடாமல் போனால், நீங்கள் சுதந்தரிக்கப்போகிற தேசத்திலிருந்துப் பிடுங்கிப்போடப்படுவீர்கள்” என்று கர்த்தர் மோசேயைக் கொண்டு சொல்லி இருந்தார் (உபா. 28:63). இப்படியே சம்பவித்தது. ஆனால் “நான் என்றென்றைக்கும் கோபம் வைக்க மாட்டேன் ........ நான் உங்களை ஊரில் ஒருவனும், வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து, உங்களை சீயோனுக்கு அழைத்துக் கொண்டு வருவேன்” என்றும், “இஸ்ரவேலைச் சிதறடித்தவர், அதைச் சேர்த்துக்கொண்டு, ஒரு மேய்ப்பன் தன் மந்தையைக் காக்கும் வண்ணமாக அதைக் காப்பார்” என்றும் கர்த்தர் எரேமியாவைக் கொண்டு சொன்னார் (எரே. 5:10; 31:10).

அவ்விதமே இஸ்ரவேல் தங்கள் தேசத்தில், தேவனுடைய ஒழுங்கின்படி, வந்து சேர்ந்துள்ளனர். அவர்கள் துன்புறும் காலம் இன்னும் வர இருக்கிறது.

“ஆனாலும் அவர்களை அவர்கள் தேசத்தில் நாட்டுவேன். நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லை என்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்” என்று ஆமோஸ் சொல்லுகிறான் (ஆமோஸ். 9:15).

இதுவே இஸ்ரவேலின் ஆறுதலும் தேறுதலும்.

## பேதுரு (Peter)

**(கன்மலை)**

இவன் யோனாவின் மகன். அந்திரேயாவின் சகோதரன். முதலாவது யோவான்ஸ்நானனின் சீஷனாயிருந்து பின் இயேசுவின் சீஷனானான்.

அவன் பெத்சாயிதாவில் மீன் பிடிக்கிறவனாய் இருந்தான். கப்பர்நகூமில் அவனுக்கு ஒரு வீடு இருந்தது.

இவன் இயேசுவிடம் கொண்டு வரப்பட்டபோது, இவனுடைய கல்லைப் போன்ற குணத்தையும் முன்னிற்கும் தன்மையையும் அறிந்து, இயேசு அவனைப் பார்த்து : “நீ கேபா எனப்படுவாய்” என்றார் (யோவான். 1:42).

இவன் சீமோன், சீமோன் பேதுரு, யோனாவின் மகனாகிய சீமோன் என்றும் அழைக்கப்பட்டான்.

இயேசு தமது ஊழியத்தின் துவக்கத்தில் இவனையும் இவனது சகோதரன் அந்திரேயாவையும் சீஷராக வரும்படி அழைத்தார் (மத். 4:18).

சீஷருடைய பெயர்கள் எழுதப்பட்ட வரிசையில் இவனுடைய பெயர் முதலாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசுவின் மிகவும் அன்பான மூன்று சீஷரில் இவனும் ஒருவன் (மாற்கு. 5:37; 9:2; 14:33).

இயேசு ஊழியஞ் செய்த நாள்களில், பேதுருவோடு சம்பந்தப்பட்ட காரியங்களாவன :

கப்பர்நகூமில் பேதுருவின் வீட்டில் அவன் மாமி சொஸ்தமடைந்தாள் (மத். 8:14,15).

கெனெசரேத்துக் கடலில் மீன் பிடிக்கையில் இயேசுவின் சொற்படி திரளான மீன்கள் பிடிக்கப்பட்டபோது, பேதுருவும், யாக்கோபும், யோவானும் பிரமித்தார்கள். இயேசு அவர்களை அழைத்தவுடனே, எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள் (லூக்கா. 5:1-11).

இயேசு பன்னிரெண்டு அப்போஸ்தலரைத் தெரிந்து, ஊழியத்துக்கு அனுப்பினவர்களில் முதற் பெயர் சீமோன் பேதுரு (மத். 10:1,2).

இவன் இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தினிமித்தம் ஜலத்தின் மேல் நடக்கத் துணிந்தான் (மத். 14:28).

பின்பு இயேசுவும் சீஷரை நோக்கி, "நீங்களும் என்னை விட்டுப் போய்விட மனதாய் இருக்கிறீர்களா? என்று கேட்ட வேளையில், பேதுரு "ஆண்டவரே! யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே" என்றான் (யோவான். 6:67, 68).

பிலிப்புச்-செசரியாவில் இயேசு சீஷரிடம், "என்னை யார் என்று சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டபொழுது, பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான் (மத். 16:16). அதற்காக இயேசு அவனை மெச்சிக் கொண்டார்.

இயேசு யவீருவின் மகளை உயிர்த்தெழுப்பினபோது தன்னுடனே கூட அழைத்துக் கொண்டுபோன மூன்று சீஷரில் பேதுருவும் ஒருவன் (மாற்கு. 5:37). மறுரூபமான பொழுதும் அந்த மூன்று பேரையே கூட்டிக்கொண்டு போனார் (மத். 17:1-5).

ஒரு மீனைப் பிடித்து, அதன் வாயிலிருந்து பணத்தை எடுத்து வரிப்பணம் கொடுக்கும்படிக்கு இயேசு பேதுருவை அனுப்பினார் (மத். 17:24).

இயேசு சீஷருடைய கால்களைக் கழுவப்போன வேளையில் பேதுரு முதலில் தடைசெய்து, பின்பு அதை விரும்பினான் (யோவான். 13:6,7,8).

இராப்போஜனம்பண்ணின பின் இயேசு சீமோனை நோக்கி, "சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான்" என்றபோது பேதுரு, "காவலிலும், சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாய் இருக்கிறேன்" என்றான் (லூக்கா. 22:32).

பின்பு ஒலிவமலைக்குப் போகும்போது, இயேசு "நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்றபோது பேதுரு, "நான் ஒருக்காலும் இடறலடையேன்" என்றும் சொன்னான். இயேசு சீமோனை நோக்கி, இந்த இராத்திரியிலே நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்றார் (மத். 26:34).

கெத்செமனே தோட்டத்தில் பேதுருவும், செபெதேயுவின் குமாரரும் நித்திரைபண்ணுகிறதைக்கண்டு இயேசு பேதுருவை நோக்கி, "ஒரு மணி நேரமாவது என்னோடே கூட விழித்திருக்கக்கூடாதா?" என்றார் (மத். 26:36-46).

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவைப் பிடிக்க வந்த வேளையில் பேதுரு மல்குஸ் என்பவனின் காதை வெட்டினபோது, இயேசு அவனைத் தடுத்தார் (யோவான். 18:10,11,12).

இயேசு ஆலோசனை சங்கத்துக்குமுன் விசாரிக்கப்படுகையில், பேதுரு மூன்று தடவை "அவரை அறியேன்" என்று மறுதலித்தான் (மத். 26:33-35; 69-75).

இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற செய்தி கிடைத்தவுடன் பேதுருவும், யோவானும் ஓடிப்போய் கல்லறையைப் பார்த்தார்கள் (யோவான். 20:1-10). பிற்பாடு தேவ தூதன் ஸ்திரீகளுக்கு இவனுடைய பெயரைக் குறிப்பாய்ச் சொன்னான் (மாற்கு. 16:7). அன்று தானே இயேசு அவனுக்குத் தரிசனமானார் (லூக்கா. 24:34; 1 கொரி. 15:5).

பிற்பாடு திபேரியாக் கடலருகே இயேசுவை அவன் மறுதலித்ததற்குத் தக்கதாக மூன்றுமுறை அவரை அறிக்கையிடத் தருணம் கிடைத்தது. அவன் அப்படிச் செய்தபோது, அப்போஸ்தல ஊழியம் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. இன்னவித மரணத்தால் அவன் இயேசுவை மகிமைப்படுத்துவானென்றும் அவர் சொன்னார் (யோவான். 21:19).

இயேசு பரலோகம் சென்ற பின், பேதுரு சீஷர்களுக்குத் தலைவனாயிருந்து செயலாற்றினான். யூதாஸ்காரியோத்தின் இடத்துக்கு இன்னொருவனைத் தெரிந்துகொள்ள பேதுரு காரணமாயிருந்தான் (அப். 1:15-26). பெந்தெகொஸ்தே நாளில் முதல் பிரசங்கம் செய்தான் (அப். 2:14-36). சப்பாணியாய்ப் பிறந்தவனை பேதுருவும், யோவானும் இயேசுவின் நாமத்தினாலே குணமாக்கினார்கள் (அப். 3:6).

யூத அதிகாரிகள் முன்கொண்டு போகப்பட்ட பொழுது பிரதிநிதியாக நின்று பேசினான் (அப். 4:8). சபை ஒழுங்கைக் கண்டிப்பாய் நடத்தினான் (அப். 5:1). விசேஷமான அற்புதங்கள் பேதுருவினால் செய்யப்பட்டன (அப். 5:15,16). இதினிமித்தம் திரளான ஜனங்கள் அப்போஸ்தலரைச் சேர்ந்து கொண்டார்கள்.

பின்பு அப்போஸ்தலர் ஆலோசனைச் சங்கத்துக்கு முன் கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்தில் பேதுரு உத்தரவு சொன்னான் (அப். 5:29-42).

ஸ்தேவான் கொல்லப்பட்டபின் பேதுருவும், யோவானும் சமாரியாவுக்குப் போய் ஊழியஞ் செய்தார்கள் (அப். அதி. 8).

பேதுரு லித்தா ஊருக்குப் போய் அங்கே திமிர்வாதமாய்க் கிடந்த ஐனேயாவைக் குணமாக்கினான். யோப்பா பட்டணத்தில் தொற்காளை உயிர்த்தெழுப்பினான். அதன்பின் ஒரு தரிசனங்கண்டு, செசரியாவுக்குப் போய் கொர்நேலியுவையும், அவன் வீட்டாரையும் குணப்படுத்தினான் (அப். 9:32-41).

இப்படியாகத் தான் புறஜாதியாரிடத்தில் போய் செய்த ஊழியத்தைப் பற்றி எருசலேம் சபையாருக்கு விவரித்துச் சொன்னான் (அப். 11:1-17).

ஏரோது-அந்திப்பா பேதுருவைக் காவலில் போட்ட வேளையில் சபையார் ஊக்கமாய் ஜெபம் பண்ணினபோது, அவன் விடுதலைப் பெற்றான்.

பின்பு விருத்தசேதன விஷயத்தைப்பற்றி தீர்மானம் செய்யும்படி, அப்போஸ்தலர் எருசலேமில் கூடியிருந்த வேளையில் பேதுருவும் தன் சாட்சியைச் சொல்லி கிரியைகளினாலல்ல, விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு உண்டாகும் என்பதை உறுதிப்படுத்தினான் (அப். 15:7-11).

பேதுரு தன் மனைவியோடும் கூடப்போய் சுவிசேஷத்தைக் கூறினதாகத் தெரிகிறது. (1 கொரி. 9:5). இவன் எழுதின இரண்டு நிருபங்களில் இரண்டாவதைத் தான் மரணமடையுமுன் ரோமாபுரியிலிருந்து எழுதினான் (2 பேதுரு. 1:12-15).

இவன் கி.பி. 67இல் இரத்தசாட்சியாய்த் தன் 75ஆம் வயதில் மரித்ததாகத் தெரிகிறது. பாரம்பரியத்தின்படியும், இவன் வேண்டுதலின்படியும் தலை கீழாய்ச் சிலுவையில் அறையப்பட்டான்.

### பேதுருவின் முதன்மை

இயேசு பேதுருவை நோக்கி, "நீ பேதுருவாய் இருக்கிறாய். இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" (மத். 16:18) என்றதிலிருந்து சபை பேதுருவில் கட்டப்படும் என்று எண்ணுவது தவறு.

இயேசுவே முக்கியமான மூலைக்கல். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் திருச்சபையின் அஸ்திபாரக் கற்கள் (எபே. 2:20; 1 பேதுரு. 2:4).

சிலர் "கல்" என்பது பேதுரு இயேசுவைப்பற்றிச் சொன்ன அறிக்கையைக் குறிக்கிறது என்கிறார்கள்.

''என் சபை'' என்பது உலகத்தில் உள்ள விசுவாசிகள் எல்லாரையும் குறிக்கும்.

இன்னும் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல் என்னும் அதிகாரம் பேதுருவுக்கு மாத்திரமல்ல. மற்ற சீஷர்களுக்கும் கொடுக்கப்பட்டது (மத். 18:18); யோவான். 20:23).

பேதுருவே பெந்தெகோஸ்தே நாளில் இஸ்ரவேலருக்கும், கொர்நெலியுவின் வீட்டில் புறஜாதியாருக்கும் சுவிசேஷக் கதவைத் திறந்தான் (அப். 2:38-42; 10:34-46).

மாற்கு தன் சுவிசேஷத்தை எழுதுகிறதற்கு வேண்டிய காரியங்களை பேதுருவினிடத்திலிருந்துப் பெற்றுக்கொண்டதாகச் சொல்லப்படுகிறது.

## பேயோர் (Peor)
### (மலை பிளப்பு)

1. மோவாபிய தேசத்திலுள்ள ஒரு கொடுமுடி. இஸ்ரவேலைச் சபிக்கும்படி பாலாக் பிலேயாமைக் கூட்டிக்கொண்டு போன மூன்று கொடுமுடிகளில் கடைசியானது (எண். 23:28; 24:3).

2. மோவாபியர் சேவித்த ஒரு தேவனின் பெயர். இஸ்ரவேலரும் இந்த வணக்கத்தைப் பின் பற்றினார்கள். பாகால் பேயோரென்றும் சொல்லப்பட்டது (எண். 25:3; 31:16; யோசுவா. 22:17).

## பேலிக்ஸ் (Felix)
### (பாக்கியமுள்ள)

கிலவதியு இராயனின் நாள்களில், இவன் யூதேயாவின் தேசாதிபதி (அப். 23:6). சீர்கெட்ட, ஒரு கொடூர அதிகாரி எனப்பட்டான்.

ஒரு தடவை இவன் யூத ஸ்திரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடன் பவுலை நியாயம் விசாரித்தான். அவனுடைய பிரசங்கத்தினால் இவன் உணர்த்தப்பட்டும், யூதரைப் பிரியப்படுத்தும் நோக்குமாயும், பவுலிடம் கை இலஞ்சம் பெறும் எண்ணத்தோடும், அவனைக் காவலில் போடுவித்தான். பவுல் இரண்டு வருடம் காவலில் இருந்தான் (அப். 24:24-27).

எட்டு வருடங்களுக்குப் பின் பேலிக்ஸ் ரோமாபுரிக்கு அனுப்பப் பட்டு, பெஸ்து தேசாதிபதியானான். பேலிக்ஸ் யூதேயாவில் செய்த தப்பிதங்களுக்காகத் தண்டிக்கப்படாமல் அவனுடைய சகோதரன் அவனுக்காக இராயனுடன் பரிந்து பேசினதினிமித்தம் தப்பிக் கொண்டான்.

## பேலியாள் (Beliah)

**(துஷ்டத்தனம்)**

பழைய ஏற்பாட்டில் இந்தச் சொல்லின் அர்த்தம், "ஒன்றுக்கும் உதவாமை" *(2 சாமு. 23:6)*. இந்தக் கருத்தோடு பேலியாளின் மக்கள் என்று *நியா. 20:13, 1 சாமு. 10:27; 30:22; 1 இரா. 21:13*லும், "பேலியாளின் மகள்" என்று *1 சாமு. 1:16*லும் சொல்லப்பட்டுள்ளது.

பவுல் பேலியாள் என்ற பெயரைச் சாத்தானுக்கும், பாவ மனுஷனாகிய கேட்டின் மகனுக்கும் வழங்கினான் *(2 கொரி. 6:15; 2 தெச. 2:3)*.

## பொவனெர்கேஸ் (Boanerges)

**(இடி முழக்க மக்கள்)**

இயேசு அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்ட சமயத்தில் சகோதரராகிய யாக்கோபு, யோவான் என்பவர்களின் வேகமும், வைராக்கியமுமான தன்மையினிமித்தம் இடிமுழக்க மக்கள் என்று அர்த்தம் கொள்ளும் "பொவனெர்கேஸ்" என்று பெயரிட்டார் *(மாற்கு. 3:17)*. பிற்பாடு அவர்களில் இருந்த ஆவியைக் குறித்து இயேசு அவர்களை அதட்டினார் *(லூக்கா. 9:54)*.

## போத்திபார் (Potiphar)

எகிப்திலே பார்வோனுக்குக் கீழிருந்த தலையாரிகளுக்கு அதிபதி. மீதியானியர் யோசேப்பை இவனிடம் விற்றார்கள் *(ஆதி. 37:36)*.

போத்திபாரின் மனைவி யோசேப்புக்கு விரோதமாய்ப் பொய்க் குற்றச்சாட்டு சொன்னதினிமித்தம் அவன் காவலில் போடப்பட்டான் *(ஆதி. 29:1-20)*.

## போத்திபிரா (Potiphera)

இவன் ஒரு பட்டணத்து ஆசாரியன். பார்வோன் இவனுடைய குமாரத்தியை யோசேப்புக்கு மனைவியாகக் கொடுத்தான் *(ஆதி. 41:45; 46:20)*.

## போவாஸ் (Boaz)

### *(பெலன்)*

*1.* இவன் எருசலேம் ஊரான். நகோமியின் புருஷனாகிய எலிமலேக்குவின் இனத்தான். மிகுந்த ஆஸ்திக்காரன் *(ரூத். 2:1).* நகோமிக்குச் சுதந்தரவாளி அற்றுப் போகாதபடி, போவாஸ் அவளுடைய விதவையான மருமகள் ரூத்தை விவாகம் செய்தான். அவர்களுக்கு ஓபேத் என்னும் ஓர் ஆண் பிள்ளை பிறந்தான். ஆகவே போவாஸ் தாவீதுக்கும் கிறிஸ்துவுக்கும் முற்பிதாவானான் *(ரூத். 4:17-22; மத். 1:5).*

*2.* சாலொமோனுடைய தேவாலயத்து வாசலில் இடது புறத்தில் நிறுத்தின தூணுக்குப் "போவாஸ்" என்று பேரிடப்பட்டது *(1 இரா. 7:21; 2 நாளா. 3:7).*

## மக்கெதோனியா (Macedonia)

இது துவக்கத்தில் கிரேக்க தேசத்தின் வடபாகம். அப்பொழுது ஓர் அற்ப தேசமாயிருந்து, பின்பு பிலிப்பு, அவனுடைய மகன் மகா அலெக்சாண்டர் என்பவர்களின் காலங்களில் வல்லமையான இராஜ்யமாயிற்று *(கி.மு. 356-323).* பழைய ஏற்பாட்டில் இதன் பெயர் சொல்லப்படாதிருந்தாலும் தானி. *8:5-8* இல் குறித்துள்ள வெள்ளாட்டுக்கடா இத்தேசத்து இராஜாவைக் கருதுகிறது.

புதிய ஏற்பாட்டில் நாள்களில் மக்கெதோனியா ரோமருடைய அரசாட்சிக்குக் கீழிருந்தது *(கி.பி. 146).* அதில் இருந்த பட்டணங்கள் பிலிப்பி, தெசலோனிக்கே, பெரோயா என்பவைகள். இவ்விடங்களில் சுவிசேஷம் கூறப்பட்டு, சபைகளும் இருந்தன. பவுலும் இவ்விடங்களுக்குப் போனான் *(அப். 19:21).*

பவுல் ஒரு தரிசனத்தில் மக்கெதோனியா தேசத்தான் தன்னை அழைத்தாகக் கண்டான்.

மக்கெதோனியா சபையார் எருசலேமில் பஞ்சம் உண்டானபோது அங்குள்ள தரித்திர சகோதரருக்கு உதவிசெய்தார்கள் *(ரோமர். 15:26).* பவுல் இதைப்பற்றி தெசலோனிக்கே சபைக்கு எழுதுகிறான் *(1 தெச. 1:7,8).*

பவுல் மக்கெதோனியா தேசத்து நாடுகளில் ஒன்றுக்குத் தலைமையான பிலிப்பி பட்டணத்துக்குப் போய்ப் பிரசங்கித்தான் *(அப். 16:12).* அவ்விடம் விட்டுப்போனபின் திரும்பவும் அங்கே போக விரும்பினான் *(அப். 20:1; 2 கொரி. 1:16).* மக்கெதோனியா சபையார் எருசலேம் கிறிஸ்தவர்களுக்குச் சந்தோஷமாயும், உதாரத்துவமாயும் கொடுத்ததைப்பற்றி புகழ்ந்து பேசுகிறான் *(2 கொரி. 8:1-6).*

மக்கெதோனியராகிய காயுவும், அரிஸ்தர்க்கும் பவுலுக்கு வழித்துணையாய்ப் போய் இருந்தார்கள் (அப். 19:29).

முதலாம் காவலிருப்பின் பிற்பாடும் பவுல் இவ்விடம் போனதாகத் தெரிகிறது (பிலி. 1:25; 1 தீமோ. 1:3).

## மக்பேலா (Machpela)

### (இரட்டைக் குகை)

மம்ரேக்கு எதிராக இருந்த இந்தக் குகை சோகாருடைய குமாரனாகிய எப்பெரோனுக்குச் சேர்ந்தது. ஆபிரகாம் அந்த நிலத்துக்கு 400 சேக்கல் வெள்ளியைக் கிரயமாகக் கொடுத்து வாங்கினான் (ஆதி. 23:8-16).

இந்தக் குகையில் அடக்கம் பண்ணப்பட்டவர்கள் ஆபிரகாம் (ஆதி. 25:9) ஈசாக்கு, ரெபேக்காள் லேயாள், (ஆதி. 49:31) யாக்கோபு (ஆதி. 50:13) என்பார்கள்.

தற்காலத்தில் இந்தக் குகை இருந்த இடத்தில் ஒரு நாற்கோணக் கட்டடம் இருக்கிறது. அது 197 அடி நீளம், 111 அடி அகலம் உள்ளது. அதைச் சுற்றி வர ஏறக்குறைய 9 அடி கனமான 40 அடி உயரமுள்ள சுவர்கட்டி இருக்கிறதாம். இதற்குள் ஆறு ஞாபக ஸ்தம்பங்கள் உண்டு. அவை ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபேக்காள், யாக்கோபு, லேயாள் என்பவர்களின் நாமங்கள் உள்ளவை. சுவருக்கு வெளிப்புறத்தில் ஒரு துவாரம் இருக்கிறதாகவும், அதற்குள் யூதர் தங்கள் வேண்டுதல் களையும், பொருத்தனைகளையும் எழுதிப் போடுகிறார்களென்றும் அறிகிறோம்.

## மக்னாயீம் (Mahanaim)

### (இரண்டு கூட்டம்)

யோர்தானுக்குக் கிழக்கே இருந்த ஓர் ஊர். யாக்கோபு பிரயாணம் பண்ணுகையில் தேவதூதர்களை அவன் கண்டபோது இது தேவனுடைய சேனை என்று சொல்லி, அந்த இடத்துக்கு மக்னாயீம் என்று பேரிட்டான் (ஆதி. 32:2). இது காத்துக்கும் மனாசேக்குமிடையில் இருந்தது (யோசுவா. 13:26). இந்தப் பட்டணம் பிற்பாடு லேவியரைச் சேர்ந்த மெராரி புத்திரருக்குக் கொடுக்கப்பட்டது (யோசுவா. 21:38; 1 நாளா. 6:80).

சவுல் இராஜாவின் மகன் இஸ்போசேத்தை அப்னேர் இங்கே இராஜாவாக்கினான் (2 சாமு. 2:8). பின்பு தாவீது அப்சலோமிடமிருந்துத் தப்பி ஓடி இங்கே ஒதுக்கிடம் தேடினான்(2 சாமு. 17:24; 19:32; 1 இரா. 2:8). சாலொமோனின் உணவுப் பொருள் சேர்த்த மணியக்காரரில் ஒருவன் இந்தப் பட்டணத்தில் இருந்தான் (1 இரா. 4:14).

இந்தப் பட்டணம் யாப்போக்குத் துறைக்கு அருகில் இருந்த தென்பதைவிட குறிப்பாய் தற்காலத்தில் ஒன்றும் சொல்ல இயலாது.

## மத்தனியா (Mattaniah)

**(யேகோவாவின் கொடை)**

*1.* பாபிலோன் இராஜா யோயாக்கீனைச் சிறை பிடித்துக் கொண்டு, அவனுக்குப் பதிலாக அவனுடைய சிறிய தகப்பனாகிய மத்தனியாவை இராஜாவாக்கி, சிதேக்கியா என்று மறு பேரிட்டான் *(2 இரா. 24:17).*

*2.* ஆசாபின் சந்ததியான். ஸ்தோத்திரப் பாட்டுகளைத் துவக்கின ஒரு தலைவன் *(1 நாளா. 9:15; நெகே. 11:17).*

*3.* தேவாலய ஊழியத்துக்கென்று தாவீது பிரித்து வைத்த ஏமானின் குமாரரில் ஒருவன் *(1 நாளா. 25:4).*

*4.* எசேக்கியாவின் நாள்களில் தேவாலயத்தைச் சுத்திகரித்தவர்களில் ஒருவன் *(2 நாளா. 29:13).*

*5.* அந்நிய ஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொண்ட நான்குபேர் *(எஸ்றா. 10:26,27,30,37).*

## மத்தியா (Mathias)

**(யேகோவாவின் கொடை)**

இயேசுவைப் பின்பற்றினவர்களில் ஒருவன். யூதாஸ்காரியோத்துக்குப் பதிலாக இன்னொரு அப்போஸ்தலனைத் தெரிந்து கொள்ளும்படி சீட்டுப் போட்ட வேளையில், சீட்டு மத்தியாவின் பேருக்கு விழுந்தது. ஓர் அப்போஸ்தலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் இவனில் இருந்திருக்கலாம் *(அப். 1:21-26).*

## மத்தேயு (Matthew)

**(யேகோவாவின் கொடை)**

இவன் ஓர் அப்போஸ்தலனும், சுவிசேஷகனுமாய் இருந்தான். அப்போஸ்தல ஊழியத்துக்கு அழைக்கப்படுமுன் இவன் பெயர் லேவி *(மத். 9:9).* அல்பேயுவின் மகன் *(மாற்கு. 2:14).* ஓர் ஆயக்காரன் *(மத். 10:3).*

இவன் ஆயத்துறையில் இருக்கையில் இயேசு தமக்குப் பின்வரும்படி சொல்லவே, அவன் எழுந்து போனான். பின்பு இயேசுவுக்கும் மற்றவர்களுக்கும் தன் வீட்டில் ஒரு விருந்து கொடுத்தான் *(மத். 9:9,10; மாற்கு. 2:15; லூக்கா. 5:29).*

இயேசு பரலோகம் போன பின் மத்தேயு பலஸ்தீனாவில் அநேக வருடங்களாய்ப் பிரசங்கித்தபின், பிற தேசங்களுக்குப் போய் சுவிசேஷத்தைக் கூறினான் என்று சொல்லப்படுகிறது.

இவன் தன்னுடைய சுவிசேஷத்தை முதலில், எபிரெய பாஷையில் எழுதி, சில வருடங்களுக்குப் பின் (கி.பி. 60இல்) கிரேக்க பாஷையில் பூரணப்படுத்தி எழுதினான் என்று தெரிகிறது. பாரம்பரியத்தின்படி இவன் எத்தியோப்பியாவில் கல்லெறியப்பட்டு இரத்த சாட்சியாக மரித்தான்.

## மம்ரே (Mamre)

**(கொழுப்பு)**

*1. கோத்திரப் பிதாக்களின் நாள்களில் இது எபிரோன் நாட்டின் ஒரு பகுதி.*

ஆபிரகாம் இவ்விடத்தில் கூடாரம் அடித்துத் தங்கியிருந்தான். அங்கே கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டினான். கர்த்தர் அவனுக்குத் தரிசனமானார் (ஆதி. 13:18; 18:1).

இவ்விடத்தில் அவன் மூன்று புருஷரை உபசரித்த வேளையில் சோதோமுக்கு வரப்போகிற முடிவு அவனுக்குச் சொல்லப்பட்டது (ஆதி. 18:4-33).

இதற்கு அருகில் மக்பேலா குகை இருந்தது. அந்தக் குகையில் சாராள், ஆபிரகாம், ஈசாக்கு, லேயாள், யாக்கோபு என்பவர்கள் அடக்கம்பண்ணப்பட்டார்கள் (ஆதி. 23:17,19; 49:30,31; 50:13).

2. ஆபிரகாமோடு சேர்ந்து கெதர்லாகோமேரைத் தோற்கடித்த ஓர் எமோரிய அதிபதி (ஆதி. 14:13,24).

## மரியாள் (Mary)

கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரில் வாசமாயிருந்த இந்த மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் கர்ப்பவதியானாள் (மத். 1:18). யோசேப்பு தாவீதின் சந்ததியான் (லூக்கா. 1:27; ரோமர். 1:5).

மரியாள் எலிசபெத்தைக் காணப்போனபோது அவள் "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது" என்றாள். அப்போழுது மரியாள் ஸ்தோத்திரம் பாடினாள் (லூக்கா. 1:42; 44-55).

அந்நாள்களில் குடிமதிப்பெழுதும்படி கட்டளை பிறந்ததினால் யோசேப்பு மரியாளோடு கூட பெத்லகேம் ஊருக்குப் போனான் (லூக்கா. 2:5); அங்கே இயேசு பிறந்தார்.

பின்பு தேவதூதனால் அறிவிக்கப்பட்டு, யோசேப்பும், மரியாளும் பிள்ளையை எடுத்துக் கொண்டு எகிப்துக்குப் போனார்கள் (மத். 2:13).

ஏரோது இறந்தபின் யோசேப்பு திரும்பி இஸ்ரவேல் தேசத்துக்கு வந்து நாசரேத்து ஊரில் வாசம்பண்ணினான் (மத். 2:23).

இயேசு பன்னிரெண்டு வயதானபோது அவருடைய தாய், தகப்பன் அவரை எருசலேமுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள். திரும்பிவரும்போது அவரைக் காணாததினால் எருசலேமுக்குப் போய் அவரைக் கண்டு, ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்டதற்கு அவர் "என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்கவேண்டியதென்று அறியீர்களா" என்றார் (லூக்கா. 2:41-51).

கானா ஊரில் நடந்த கலியாண வீட்டில் திராட்சரசம் குறைவுப்பட்டதை அவருடைய தாய் அவருக்கு அறிவித்தாள். அது அவர் தமது முதலாம் அற்புதத்தைச் செய்யத் தருணமாயிற்று (யோவான். 2:1-11).

ஒரு தடவை வேதபாரகர் இயேசு பெயெல்செபூலைக் கொண்டிருக்கிறார் என்று சொன்னதினிமித்தம் அவருடைய தாயும், சகோதரரும் அவரை அழைத்துக்கொண்டு போகும்படி வந்தார்கள் (மாற்கு. 3:31-35).

இயேசு சிலுவையில் தொங்கியிருக்கையில் தமது த்தாயாரை நோக்கி, அதோ, உன் மகன் என்று யோவானைக் காட்டிச் சொன்னார் (யோவான். 19:25).

இயேசு பரலோகம் போன பின், அவருடைய தாயும், சகோதரரும் கூட ஒருமனப்பட்டு மற்ற சீஷருடன் ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப். 1:14).

மரியாளைப் பற்றி நாம் சொல்லத்தக்கது, எலிசபெத்து சொன்னபடியே, "ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்" என்பதே.

## மரியாள் மகதலேனாள் (Mary Magdalene)

இவள் மகதலே ஊராளாயிருக்கலாம். இயேசு இவளிலிருந்து ஏழு பிசாசுகளை நீக்கிக் குணமாக்கினார் (லூக்கா. 8:2).

பின்பு இவள் இயேசுவுக்கும், சீஷருக்கும் ஊழியம் செய்து கொண்டிருந்தாள் (லூக்கா. 8:3).

இயேசு சிலுவையில் அறையுண்டதைப் பார்த்திருந்து அவரை

அடக்கம்பண்ணின இடத்துக்கும் இவள் போய் இருந்தாள் (*மத். 27:55; மாற்கு. 15:47; யோவான். 19:25*).

லூக்கா. 7:37-50இல் சொல்லப்பட்ட இயேசுவின் பாதங்களை அபிஷேகம்பண்ணின ஸ்திரீ இவளென்று நினைப்பது தப்பிதம். இவள் லாசருவின் சகோதரியான மரியாளுமல்ல.

இயேசு எழுந்திருந்த பின்பு முதன் முதல் இவளுக்குத் தரிசனமானார். அவள் அந்தச் செய்தியை மற்றவர்களுக்கு அறிவித்தாள் (*மாற்கு. 16:9-11*).

இயேசு உயிர்த்தெழுந்த காலையில் இவளும், மற்ற ஸ்திரீகளும் கல்லறைக்குப் போனார்கள் (*மத். 28:1; மாற்கு. 16:1; லூக்கா. 24:10*).

இந்த மரியாள் மற்ற ஸ்திரீகளோடு புறப்பட்டுப் போகையில் இவள் முந்தி ஓடி, கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டு, பேதுரு, யோவான் என்பவர்களிடம் போய் அறிவித்தாள் (*யோவான். 20:1,2*). பின்பு மற்ற ஸ்திரீகள் கல்லறையிடம் வந்து தேவதூதரைக் கண்டார்கள். அவர்கள் இவர்களை நோக்கி இயேசு உயிர்த்தெழுந்ததைச் சீஷருக்கு அறிவிக்கும்படி சொன்னார்கள் (*மத். 28:1-8; மாற்கு. 16:1-8; லூக்கா. 24:1-9; யோவான். 20:1,2*).

மரியாள் சொன்னதைக்கேட்டு பேதுருவும், யோவானும் கல்லறைக்கு ஓடிவந்து, அது வெறுமையாக இருக்கிறதைப் பார்த்து விட்டுப்போனார்கள் (*லூக்கா. 24:12; யோவான். 20:3-11*).

பின்பு மரியாள் கல்லறையினருகே நின்று அழுதுகொண்டு, கல்லறைக்குள் பார்த்தபோது, இரண்டு தேவதூதர்களைக் கண்டாள். திரும்பிப் பார்த்து இயேசுவைக் கண்டாள் (*மாற்கு. 16:9*). இயேசு அவளை நோக்கி, "என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்தில் ஏறிப்போகவில்லை" என்றார் (*யோவான். 20:11-18*). மற்ற ஸ்திரீகள் அவர் பாதங்களைத் தழுவி, அவரைப் பணிந்து கொண்டார்கள் (*மத். 28:9*). இங்கே "என்னைத் தொடாதே" என்பதின் கருத்து, இது என்னைத் தொட்டுக் கொண்டிருக்கிற காலமல்ல, நான் பிதாவினிடம் போனபின், ஆவிக்குரிய பிரகாரமாய் என்னைத் தொழுது கொள்ளலாம் என்பதே (*யோவான். 16:16-24*).

## மரியாள்-பெத்தானிய ஊராள் (Mary of Bethany)

இயேசு பிரயாணமாய்ப் போய் பெத்தானியா என்னும் கிராமத்தில் பிரவேசித்தார். அங்கே மார்த்தாள் தன் வீட்டிலே அவரை ஏற்றுக்கொண்டாள். அவருக்கு மரியாள் என்னும் சகோதரியும், லாசரு என்னும் சகோதரனும் இருந்தார்கள். மார்த்தாள் வேலை செய்து கொண்டிருந்தாள். மரியாளோ இயேசுவின் வசனத்தைக் கேட்டுக்

கொண்டிருந்தாள். மார்த்தாள் முறையிட்டபோது இயேசு, "அவள் நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்றார் (லூக்கா. 10:38-42).

பிற்பாடு லாசரு மரித்துப் போன சமயத்தில் இயேசு அங்கே போனபோது, இவள் அவர் பாதத்தில் விழுந்து அழுதாள் (யோவான். 11:32). ஜனங்களும் அழுகிறதைக்கண்டு இயேசுவும் ஆவியில் கலங்கி கண்ணீர்விட்டார் (யோவான். 11:32-35).

பெத்தானியாவுக்குத் திரும்பவும் இயேசு வந்த வேளையில், சீமோன் வீட்டில் அவருக்கு விருந்து பண்ணினார்கள். மரியாள் நளதம் என்னும் தைலத்தை அவருடைய பாதங்களில் பூசி, தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்தாள். இதை அவள் தாம் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாய்ச் செய்தாள் என்றார் (மாற்கு. 14:1-9).

## மரியாள்
### (யாக்கோபு, யோசே என்பவர்களின் தாய்)

கலிலேயாவிலிருந்து இயேசுவோடே எருசலேமுக்கு வந்த ஸ்திரீகளில் ஒருத்தி இந்த மரியாள் (மத். 27:56). இவள் மற்ற மரியாளென்று மத். 27:61லும், கிலெயோப்பா மரியாள் என்று யோவான் 19:25லும் சொல்லப்பட்டுள்ளது.

இவளும் மற்றவர்களும் இயேசுவைச் சிலுவையில் அறைந்ததைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் (மத். 27). பின்பு கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள் (மத். 26:61). உயிர்த்தெழுந்த காலையில் கல்லறையைப் பார்க்கப் போயிருந்தார்கள் (மத். 28:1).

இவள் சின்ன யாக்கோபுக்கும் யோசேக்கும் தாய் என்று மாற்கு 15:40லும், யோசேயின் தாய் என்று மாற்கு 15:47லும், யாக்கோபின் தாய் என்று மாற்கு 16:1லும் குறித்திருக்கிறது.

இவளும் மற்ற ஸ்திரீகளும் கல்லறையிலிருந்துப் போய் சீஷருக்கு அறிவித்தார்கள் (லூக்கா. 24:9,10).

கிலெயோப்பு என்பவன் கன்னி மரியாளின் புருஷனாகிய யோசேப்பின் சகோதரன் என்று தெரியவருகிறது.

## மரியாள்
### (மாற்குவின் தாய்)

பேதுரு சிறையிலிருந்து விடுதலையானபோது, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான். இந்த வீடு தேவாராதனை நடக்கிற இடமென்று

அறியப்பட்டிருக்கலாம். மேலும் பேதுரு அங்கே போன பொழுது அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கிறதைக் கண்டாள் (அப். 12:12).

இந்த மரியாள் பர்னபாவின் சிறிய தாய் (கொலோ. 4:10). தன்னையும் மகனையும் ஊழியத்துக்கு ஒப்புவித்ததாகத் தெரிகிறது.

இந்த வீட்டிலே இயேசு தம் கடைசி பஸ்காப் பண்டிகையை அனுசரித்தாரென்றும் எண்ணப்படுகிறது.

## மரியாள்

பவுல், "எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாள்" என்று இன்னொரு மரியாளைப் பற்றி சொல்லுகிறான் (ரோமர் 16:6).

## மனாசே (Manasseh)

### (மறக்கப்பண்ணி)

1. யோசேப்பின் மூத்த குமாரன். இவனுடைய தாய் போத்திபிராவின் குமாரத்தியாகிய ஆஸ்நாத்து (ஆதி. 41:50). தன் வருத்தங்களைத் தேவன் மறக்கப்பண்ணினார் என்று சொல்லி, இவனுக்கு மனாசே என்னும் பேரை இட்டான். இரண்டாம் மகனின் பெயர் எப்பிராயீம் (ஆதி. 41:51,52).

யாக்கோபு இவர்களை ஆசீர்வதிக்கும்படி, யோசேப்பு அவர்களைக் கூட்டிக்கொண்டு போய், மனாசேயை யாக்கோபின் வலது கைப் பக்கத்திலும், எப்பிராயீமை இடது பக்கத்திலும் விட்டான். ஆனாலும் யாக்கோபு, தன் வலது கையை எப்பிராயீமின்மேல் வைத்து ஆசீர்வதித்தான். யோசேப்பு இதைத் தடுக்கப்பார்த்தும் அவன் இடங் கொடுக்கவில்லை (ஆதி. 48:8-20).

மேலும் ரூபன், சிமியோன் என்பவர்கள்போல் எப்பிராயீமும் மனாசேயும் என்னுடையவர்கள் என்றும் யாக்கோபு சொன்னான் (ஆதி. 48:5).

### மனாசே கோத்திரம்

யோர்தானுக்குக் கிழக்குப் பக்கத்தில் ரூபன், காத் கோத்திரங்களுக்கு மாத்திரம் மோசே சுதந்திரம் கொடுத்ததாகக் குறித்துள்ளது (எண். 32:1,2; 16-33). இன்னொரு இடத்தில் மனாசேயின் பாதிக் கோத்திரம் யோர்தானுக்குக் கிழக்கே தங்கியிருந்ததாகத் தெரிகிறது (எண். 32:33). தொடக்கத்தில் சில குடும்பங்கள் மாத்திரம் யோர்தானுக்கு இக்கரையில் தங்கியிருந்திருக்கலாம்.

மற்றவர்கள் ஆற்றைக் கடந்து போய் இருக்கலாம். பிற்பாடு மனாசே கோத்திரத்து மாகீர், நோபாக், யாவீர் என்பவர்கள் ஆற்றுக்குக் கிழக்கே இருந்த கீலேயாத் ஆகிய பட்டணங்களைக் கைப்பற்றினார்கள் (எண். 32:39-42). இதனிமித்தம் மனாசேயின் பாதிக் கோத்திரத்தையும் சேர்த்துச் சொல்லி இருக்கலாம்.

கோலான் என்னும் அடைக்கலப் பட்டணம் மனாசேயைச் சேர்ந்த பாசானில் இருந்தது (உபா. 4:42; யோசுவா. 28:8).

நியாயாதிபதியாகிய கிதியோன் இந்தக் கோத்திரத்தான் (நியா. 6:15).

பிற்பாடு இந்தக் கோத்திரத்தார் தாவீது சிக்லாகில் இருக்கையில் அவனிடம் போனார்கள் (1 நாளா. 12:19,20).

இவர்களும் அந்நிய தேவர்களைப் பின்பற்றினதினால் அசீரியரால் சிறைபிடிக்கப்பட்டார்கள் (1 நாளா. 5:26).

எசேக்கியா இராஜாவின் நாள்களில் பஸ்கா பண்டிகைக்கு இந்தக் கோத்திரத்தாரும் போனார்கள் (2 நாளா. 30:1,11).

## மனாசே (Manasseh)

எசேக்கியாவின் மகன். தாயின் பேர் எப்சிபாள். பன்னிரெண்டு வயதில் யூதாவின் இராஜாவாகி 55 வருஷம் அரசாண்டான் (2 இரா. 21:1; 2 நாளா. 33:1). தொடக்கத்தில் தகப்பனோடு கி.மு. 696-686 வரை அரசாண்டு, பின்பு கி.மு. 686-642 வரை தனியே இராஜாவாக இருந்தான். எசேக்கியாவுக்கு மேல் மிச்சமாகக் கிடைத்த 15 வருடத்துக்குள் பிறந்த இவனுடைய ஆளுகை, பின்வாங்கிய நிலையிலுள்ளது. தகப்பன் இடித்துப்போட்ட மேடைகளை இவன் திரும்பவும் கட்டி, விக்கிரகத் தோப்புகளை உண்டாக்கி, வான சேனைகளைச் சேவித்தான். தன் குமாரனைத் தீ மிதிக்கப்பண்ணி, பொல்லாப்பானதை மிகுதியாய்ச் செய்தான் (2 இரா. 21:3-7; 2 நாளா. 33:1-10). மேலும் கர்த்தர் அவனோடு பேசின போதிலும் அவன் கவனிக்கவில்லை.

இதினிமித்தம் அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோகப்பட்டு, அங்கே கர்த்தரை நோக்கி ஜெபித்தபோது, திரும்பவும், எருசலேமுக்கு அனுப்பப்பட்டான். கர்த்தரே தேவன் என்று அப்பொழுது மனாசே அறிந்தான் (2 நாளா. 33:11-13).

அதன்பின், கர்த்தருடைய ஆலயத்திலிருந்து விக்கிரகங்களை அகற்றி, கர்த்தரையே சேவிக்க வேண்டுமென்று கட்டளையிட்டான். மரித்தபோது அவன் வீட்டிலே அடக்கம்பண்ணப்பட்டான் (2 நாளா. 33:14-20).

## மனோவா (Manova)
### (இளைப்பாறுதல்)

இவன் தாண் வம்சத்தான். சோரா ஊரான். சிம்சோனின் தகப்பன். மனோவாவின் மனைவி மலடியாய் இருந்தாள் *(நியா. 13:2)*. ஒரு தேவதூதன் அவளுக்குத் தரிசனமாகி, அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்றும், அவன் நசரேயனாய் வளர்க்கப்பட வேண்டு மென்றும் சொன்னான் *(நியா. 13:3-5)*. மனோவா இதைக் கேட்டுத் தானும் தேவதூதனைக் காண வேண்டுமென்று விண்ணப்பம் பண்ணினபொழுது தேவதூதன் தரிசனமாகி, செய்ய வேண்டியவை களைச் சொன்னான் *(நியா. 13:9-13)*. மனோவா பலி செலுத்தினபோது, தூதன் ஜுவாலையில் ஏறிப்போனான் *(நியா. 13:20)*.

பிற்பாடு அவர்களுக்கு ஒரு பிள்ளை பிறந்து, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டார்கள்.

சிம்சோனின் சரித்திரத்தில் அவனுடைய தாய், தகப்பனைப் பற்றி இரண்டு தடவைகளில் சொல்லப்பட்டுள்ளது.

முதலாவது திம்னாவிலிருந்த ஒரு பெலிஸ்திய பெண்ணைச் சிம்சோன் விவாகம் செய்ய விரும்பினதினிமித்தம் இவர்களும் அவனோடுகூடப் போனார்கள் *(நியா. 14:5)*.

இரண்டாவதாக அந்தக் கலியாணம் நடந்த தருணத்திலும் போயிருந்தார்கள் *(நியா. 14:9)*.

சிம்சோனுக்கு முந்தி மனோவா மரித்துப்போனான். சிம்சோனை அடக்கம்பண்ணினது அவனுடைய சகோதரர் *(நியா. 16:31)*

## மன்னா (Manna)

இது, இஸ்ரவேலர் 40 வருடமளவும் வனாந்தரத்தில் புசித்த ஆகாரம் *(யாத். 16:35)*. சீன் வனாந்தரத்தில் ஜனங்கள் ஆகாரக்குறைவைப் பற்றி முறுமுறுத்தபோது, கர்த்தர் வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணினார் *(யாத். 16:4; சங். 78:23,24)*. அவர்கள் கானான் தேசத்துக்குப் போய் அதன் தானியத்தைப் புசிக்கும்வரையும் மன்னா ஒழிந்துபோகவில்லை *(யோசுவா. 5:12)*.

முதன் முதல் பாளயத்தைச் சுற்றி பனிபெய்து நீங்கின பின், ஒரு சிறிய வஸ்து தரையின்மேல் கிடந்தது. ஜனங்கள் இதைப் பார்த்து, "இது என்ன?"என்றார்கள். அதன் அர்த்தம் மன்னா *(யாத். 16:15)*. மன்னா கொத்துமல்லி அளவாயும், வெண்மை நிறமாயும், அதன் ருசி தேனிட்ட பணியாரத்துக்கு ஒப்பாயிருந்தது. ஜனங்கள் அதை எந்திரங்களில் அரைத்தாவது, உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்.

அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள். அதன் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசி போலிருந்தது *(எண். 11:7,8,9)*. பின்பு ஓர் ஓமர் அளவு மன்னாவை ஒரு கலசத்தில் போட்டு, பின் சந்ததியாருக்குச் சாட்சியாக ஆரோன் கர்த்தருடைய சந்நிதியில் வைத்தான் *(யாத். 6:33,34; எபி. 9:4)*.

இஸ்ரவேலர் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது *(யோசுவா. 5:12)*.

நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்தார்கள் என்று இயேசுவிடம் சொன்ன வேளையில், அவர், "ஜீவ அப்பம் நானே" என்றார் *(யோவான். 6:31-35)*.

ஜெயங் கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன் *(வெளி. 2:17)*.

மன்னா வானத்தின் தானியம் என்றும், "வான அப்பம்" என்றும் குறித்துள்ளது *(சங். 78:24; 105:40)*.

பவுல் இது "ஞானப் போஜனம்" என்று ஆவிக்குரியதாகப் பயன்படுத்துகிறான் *(1 கொரி. 10:3)*.

## மாகோகு (Magog)

யாப்பேத்தின் சந்ததியார் என்று சொல்லப்பட்ட ஒரு பூர்வீக ஜனம். இவர்கள் மிலேச்ச ஜாதி. மாகோகு தேசத்தின் அதிபதி கோகு. கடைசி நாள்களில் இஸ்ரவேலருக்கு விரோதமாக இவர்கள் போவார்கள் என்றும், அப்போழுது கர்த்தர் அவர்களைத் திருப்பி அனுப்பிவைப்பாரென்றும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது *(எசே. 38:2)*.

சாத்தான் பூமியின் இராஜாக்களாகிய கோகையும், மாகோகையும் யுத்தத்துக்குக் கூட்டிக் கொண்டு வருவான் என்பது கடைசி நாள்களில் நடக்கப்போகிற யுத்தத்தைக் குறிக்கிறது. ஜாதிகள் பரிசுத்தவான்களுடைய பாளயத்தையும், நகரத்தையும் வளைந்து கொள்ளும்போது வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சிக்கும் *(வெளி. 20:8-10)*.

## மாசா (Massah)

***(சோதனை)***

*1.* இஸ்ரவேலர் பிரயாணம் பண்ணி ரெவிதீமிலே பாளயமிறங்கினார்கள். அங்கே தண்ணீர் இல்லாததினால் ஜனங்கள் முறுமுறுத்தார்கள். அப்பொழுது கர்த்தரின் சொற்படி மோசே

கன்மலையை அடித்தபோது, தண்ணீர் புறப்பட்டது. ஜனங்கள் வாதாடினதினிமித்தமும், கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும் அந்த இடத்துக்கு மாசா என்று மோசே பேரிட்டான் *(யாத். 17:1-7).*

## மாசா (Massa)

***(பாரம்)***

இவன் ஆபிரகாமின் குமாரனாகிய இஸ்மவேலின் மகன் *(ஆதி. 25:14; 1 நாளா. 1:30).*

## மாத்தான் (Matthan)

***(கொடை)***

1. யோய்தா பாகாலின் பூஜாரியாகிய மாத்தானைப் பலி பீடங்களின் முன் கொன்று போட்டான் *(2 இரா. 11:18; 2 நாளா. 23:17).*

2. மாத்தானின் குமாரன் செப்பத்தியாவும், மற்றவர்களும் எரேமியாவை மல்கியாவின் துரவிலே போட்டார்கள் *(எரே. 38:3-6).*

3. இயேசுவின் முற்பிதாக்களில் ஒருவன். யோசேப்பினுடைய பாட்டன் *(மத். 1:15).*

## மாரா (Marah)

***(கசப்பு)***

இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின், பாளயமிறங்கின இடம். அங்கே தண்ணீர் கசப்பாயிருந்ததினால் இந்தப் பெயர் கொடுக்கப்பட்டது *(யாத். 15:23; எண். 33:8).* ஜனங்கள் முறுமுறுத்தபோது கர்த்தர் காண்பித்த ஒரு மரத்தை மோசே தண்ணீரில் போட்டவுடன் அது மதுரமான தண்ணீராயிற்று *(யாத். 15:25).*

## மாராள் (Mara)

***(கசப்பு)***

நகோமி மோவாப் தேசத்திலிருந்துப் பெத்லகேமுக்கு வந்த போது, தன்னை மாராள் என்று சொல்லும்படி சொன்னாள். சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டார். நீங்கள் என்னை நகோமி என்பானேன் என்றாள் *(ரூத். 1:20,21).*

## மார்ஸ்மேடை (Mars Hill)

1. அத்தேனே பட்டணத்தில் இருந்த ஒரு மேடை *(அப். 17:22).*

2. இது ஆலோசனைச் சங்கம் கூடுகிற இடத்தையும் குறிக்கும். பவுல் மார்ஸ் மேடையின் நடுவில் நின்று பேசினதாகத் தெரிகிறது (அப். 17:19-21).

இந்தச் சங்கத்துக்கு நியாய விசாரணை செய்யும் அதிகாரம் இருந்ததாகத் தெரிகிறது. இதன் நியாயாதிபதிகளில் ஒருவன் விசுவாசியானான் (அப். 17:34).

## மார்த்தாள் (Martha)

*(எஜமாட்டி)*

இவள் எருசலேமிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள பெத்தானிய ஊராள். இவளுக்கு மரியாள் என்ற சகோதரியும், லாசரு என்ற சகோதரனும் இருந்தார்கள் (லூக்கா. 10:38-41; யோவான் 11:1).

இயேசு பிரயாணம்பண்ணி, பெத்தானியாவில் பிரவேசித்த போது, மார்த்தாள் அவரைத் தன் வீட்டில் ஏற்றுக் கொண்டாள். அவள் அவரை உபசரிக்கிற வேளையில் ஆயத்தமாயிருந்தபோது, மரியாளோ அவர் போதனையைக்கேட்டுக் கொண்டிருந்தாள். இயேசு அவளை நோக்கி, "மார்த்தாளே! நீ அநேகக் காரியங்களைக் குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே" என்றார் (லூக்கா. 10:38-41).

பிற்பாடு லாசரு வியாதியாயிருந்தபோது, மார்த்தாள் அவருக்கு ஆள் அனுப்பி, அவர் வந்து லாசருவை உயிர்த்தெழுப்பினார் (யோவான் 11:1-44)

பின்பு பஸ்கா பண்டிகைக்கு முன் இயேசு பெத்தானியாவுக்கு வந்தார். குஷ்டரோகியாயிருந்த சீமோன் வீட்டில் அவருக்கு இராவிருந்து பண்ணினார்கள். மார்த்தாள் பணிவிடை செய்தாள் (யோவான். 12:1-8; மத். 26:6).

## மாற்கு (Mark)

எருசலேமிலிருந்த ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயாகிய மரியாள் என்பவளின் மகன். பவுலுடைய முதலாம் சுவிசேஷப் பிரயாணத்தில், பெர்கே பட்டணம் மட்டும் கூடப்போனவன். (அப். 11:12; 13:13).

இவன் பவுல், பர்னபா என்பவர்களோடு சுவிசேஷப் பிரயாணத்தில் கூடப் போயிருந்தும், பெர்கேவில் அவர்களை விட்டுத் திரும்பி விட்டான்.

இதனிமித்தம் இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் இவனைக் கூட்டிக் கொண்டு போக பவுல் சம்மதியாததினால் பவுலுக்கும்

பர்னபாவுக்குமிடையில் தர்க்கமுண்டாகி, இருவரும் ஊழிய வேளையில் பிரிந்து போக நேரிட்டது. பர்னபா, மாற்குவைத் தனக்குத் துணையாகச் சேர்த்துக் கொண்டான்.

ஆகிலும் பின்பு இவர்கள் சமாதானம்பண்ணிக் கொண்டார்கள். பவுல் ரோமாபுரியில் காவலில் இருக்கையில் மாற்குவை கொலோசெ சபைக்கு அனுப்பினான் (கொலோ. 4:10).

பேதுரு மாற்குவை என் குமாரனென்றும் குறிக்கிறான் (2 பேதுரு. 5:13).

இயேசுவைக் கெத்செமனே தோட்டத்தில் பிடித்துக் கொண்டு போகையில் பின்னே போன வாலிபன் மாற்கு என்று தெரிகிறது (மாற்கு. 14:51).

இரண்டாம் சுவிசேஷத்தை எழுதினவன் இந்த மாற்கு.

## மிகாயா (Micaiah)

**(கர்த்தரை போன்றவர் யார்?)**

இம்லாவின் குமாரன்; ஒரு தீர்க்கதரிசி. இஸ்ரவேலின் இராஜா ஆகாப், யோசபாத்தின் உதவியோடு கீலேயாத்திலுள்ள ராமோத்தின் மேல் யுத்தம் செய்ய ஆயத்தமாகி தீர்க்கதரிசிகளிடம் கேட்டபோது, அவர்கள் ஜெயம் கிடைக்கும் என்றார்கள். ஆனால் மிகாயாவிடம் கேட்ட போது, அவன் இஸ்ரவேல் சிதறடிக்கப்படுவார்கள் என்றான். இதனிமித்தம் ஆகாப் அவனைச் சிறைப்படுத்தினான். பின்பு யுத்தம் நடந்தபோது இஸ்ரவேலர் தோற்கடிக்கப்பட்டார்கள். ஆகாபும் காயப்பட்டு மரித்துப் போனான் (1 இரா. 22:4-28).

2. யோசபாத் உபதேசம் பண்ணும்படி அனுப்பின பிரபுக்களில் ஒருவன் (2 நாளா. 17:7).

3. அலங்கம் பிரதிஷ்டை பண்ணப்பட்டபோது, பூரிகை பிடித்த ஆசாரியரில் ஒருவன் (நெகே. 12:4).

4. கெமரியாவின் மகன். இவன் எரேமியாவின் புத்தகத்தில் உள்ளதை வாசிக்கக் கேட்டு, இராஜா அரண்மனைக்குப்போய் பிரபுக்களுக்கு அறிவித்தான் (எரே. 36:11-13).

## மிகாவேல் (Michael)

**(தேவனுக்கு ஒப்பானவன்)**

ஒரு பிரதான தூதன். இவன் பிரதான அதிபதிகளில் ஒருவன். "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதி'' என்றும் குறிக்கப்படுகிறான் (தானி. 10:21; 12:1). தேவனுக்கு முன்பாக நிற்கும் தூதர்களில் இவன் விசேஷமானவன்.

பிரதான தூதனாகிய இவன், மோசேயின் சரீரத்தைக் குறித்து பிசாசுடன் தர்க்கித்தான் (யூதா. 9).

1. வானத்தில் உண்டான யுத்தத்தில் மிகாவேல் மற்ற தூதர்களைச் சேர்த்துக் கொண்டு வலுசர்ப்பமாகிய சாத்தானை எதிர்த்துத் தோற்கடித்தான் (வெளி. 12:7).

2. கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கப்போன ஆசேர் கோத்திரத்து சேத்தூரின் பிதா (எண். 13:13).

3. காத் கோத்திரத்தாரில் இருவர் (1 நாளா. 5:13,14).

4. கெர்சோன் சந்ததியானான லேவியன் (1 நாளா. 6:40).

5. இசக்கார் குடும்பத்து ஒம்ரியின் பிதா (நாளா. 27:18).

6. யோசபாத்தின் குமாரன் (2 நாளா. 21:2).

7. சிறையிருப்பிலிருந்து வந்த செப்பதியாவின் தகப்பன் மிகாவேல் (எஸ்றா. 8:8).

## மிக்மாஸ் (Mickmash)

**(மறைவான இடம்)**

இது பென்யமீன் நாட்டிலுள்ள ஒரு பட்டணம். பெலிஸ்தர் இஸ்ரவேலரோடு யுத்தம் பண்ணும்படி மிக்மாசிலே பாளயமிறங்கினார்கள் (1 சாமு. 13:5). யோனத்தான் இரகசியமாய் அங்கிருந்த பெலிஸ்தரின் தாணையத்திற்குப்போய் அவர்களை முறியடித்தான் (1 சாமு. 14:1-14).

ஏசாயா எருசலேமுக்கு வரப்போகிற யுத்தத்தைப்பற்றி முன்னறிவித்து, அசீரியன் மிக்மாசிலே தன் ரஸ்துக்களை வைத்திருக்கிறான் என்றான் (ஏசாயா. 10:28).

சிறையிருப்பின் பின் மிக்மாஸ் ஊரார், எஸ்றா, நெகேமியாவோடு திரும்பி வந்தார்கள் (எஸ்றா. 2:27; நெகே. 7:31; 11:31).

## மிஸ்பா (Mizpah)

**(காவற் கோபுரம்)**

1. லாபானும் யாக்கோபும் பொருத்தனை செய்து ஒரு கற்குவியலை உண்டாக்கி, "தேவனே உனக்கும் எனக்கும் சாட்சி என்று சொன்னபடியால் அது மிஸ்பா என்று பேர் பெற்றது (ஆதி. 31:50).

2. அம்மோனியர் யுத்தம் செய்ய ஆயத்தமானபோது, இஸ்ரவேலர் மிஸ்பாவில் பாளையமிறங்கினார்கள். அப்பொழுது அவ்வூரானாகிய

கிலேயாத்தியனான யெப்தா, ஒரு பொருத்தனைசெய்து கொண்டு, அம்மோனியரைத் தோற்கடித்தான் *(நியா. 10:17; 20:1).*

3. யூதா கோத்திரம் பெற்ற சுதந்தரப் பட்டணம் மிஸ்பே *(யோசுவா. 15:38).*

4. நியாயாதிபதிகளின் நாள்களில் ஒரு லேவியனின் மறுனையாட்டிக்குச் செய்த துரோகத்தினிமித்தம், இஸ்ரவேல் ஜனங்கள் பென்யமீன் கோத்திரத்தாருக்கு விரோதமாக மிஸ்பாவிலே கூடினார்கள் *(நியா. 20:1-3; 21:1-8).*

5. பெலிஸ்தர் இஸ்ரவேலருக்கு விரோதமாக வந்த வேளையில், சாமுவேல் ஜனங்களை மிஸ்பாவில் கூடிவரச் செய்து, தேவனை நோக்கிப் பிரார்த்தித்ததினிமித்தம் ஜெயங் கிடைத்தது *(1 சாமு. 7:5-12).*

6. மிஸ்பாவில் இஸ்ரவேலர் சவுலை இராஜாவாகத் தெரிந்துக் கொண்டார்கள் *(1 சாமு. 10:17).*

7. பாஷா ராமாவில் கட்டப் போன கற்களையும், மரங்களையும் ஆசா எடுத்து, மிஸ்பாவைக் கட்டினான் *(1 இரா. 15:22; 2 நாளா. 16:6).*

8. பாபிலோன் இராஜா ஏற்படுத்தின கெதலியா என்பவன் மிஸ்பாவில் தங்கியிருந்தான் *(2 இரா. 25:33).*

9. எரேமியா விடுதலையாக்கப்பட்டபின் மிஸ்பாவுக்கு வந்து கெதலியாவோடு சேர்ந்தான் *(எரே. 40:6).*

## மிஸ்பே (Mispeh)

***(காவற் கோபுரம்)***

1. தாவீது மிஸ்பேக்குப் போய், மோவாபிய இராஜாவிடம் பேசி, தன் தகப்பனும், தாயும் அங்கே தங்கி இருக்கும்படி ஒழுங்கு செய்தான் *(1 சாமு. 22:3).*

2. கானானிய இராஜாக்கள் கூடி, யோசுவாவுக்கு விரோதமாக யுத்தம் செய்தபோது, அவன் அவர்களை மிஸ்பே பள்ளத்தாக்கு மட்டும் துரத்தி, வெட்டிப்போட்டான் *(யோசுவா. 11:8).*

3. பென்யமீன் கோத்திரத்துக்குக் கிடைத்த பட்டணம் *(யோசுவா. 18:26).*

## மிரியாம் (Miriam)

***(கலகம்)***

1. அம்ராம், யோகெபேத் என்பவர்களின் குமாரத்தி, ஆரோன், மோசே என்பவர்களின் சகோதரி *(எண். 26:59).* மோசே

குழந்தையாயிருக்கையில் நாணலுக்குள் வைக்கப்பட்ட வேளையில் தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் (யாத். 2:4). இஸ்ரவேல் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின், தீர்க்கதரிசியான இவள், தம்புரை எடுத்துக் கொண்டு நடனம்பண்ணினாள் (யாத். 15:20).

ஆஸ்ரோத்தில் ஆரோனும், இவளும் மோசேக்கு விரோதமாய்ப் பேசினதினிமித்தம் அவள் குஷ்டரோகியானாள். ஆரோனின் கேள்விப்படி, மோசே விண்ணப்பம் பண்ணவே சுகமடைந்தாள். ஆகிலும் அதனிமித்தம் ஏழு நாள் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள் (எண். 12:1-15).

பின்பு அவள் மரித்து, காதேசில் அடக்கம்பண்ணப்பட்டாள் (எண். 20:1). குஷ்டரோகத்தைக் குறித்துச் செய்யவேண்டியதைப்பற்றி மோசே ஜனங்களை எச்சரித்தபோது, மிரியாமுக்கு நடந்ததை நினைத்துக் கொள்ளுங்கள் என்றான் (உபா. 24:8).

இஸ்ரவேல் ஜனத்தை வழிநடத்தின மோசே, ஆரோன் என்பவர்களோடு இவளுடைய பெயரும் சொல்லப்பட்டுள்ளது (மீகா. 6:4).

2. காலேபின் சந்ததியானாகிய மேரேத்தின் மனைவி மிரியாம் (1 நாளா. 4:15,17).

## மில்க்காள் (Milcah)
### (ஆலோசனை)

1. நாகோருடைய மனைவி, ஆரோனுடைய குமாரத்தி, ரெபேக்காளின் பாட்டி (ஆதி. 11:29; 22:20-23; 24:15).

2. செலோப்பியத்தின் குமாரத்திகளில் ஒருத்தி, மில்காள். இவர்களுக்கு சகோதரர் இல்லாததால், தேசம் பிரிக்கப்பட்ட பொழுது, சுதந்தரம் கொடுக்கப்பட்டது (எண். 26:33; 27:1; 36:11; யோசுவா. 17:3,4).

## மீகா (Micah)

எப்பிராயீம் தேசத்தானாகிய மீகா ஒரு சுரூபத்தையும், விக்கிரகத்தையும் உண்டுபண்ணி, தன் வீட்டில் வைத்திருந்தான். பின்பு ஒரு லேவியனாகிய வாலிபனைப் பிரதிஷ்டைபண்ணி ஆசாரியனாக்கினான் (நியா. 17:1-13).

தாண் கோத்திரத்தாரில் சிலர் சுதந்தரம் தேடிப்போய், இந்த வாலிபனிடம் விசாரித்தபோது, அவன் அவர்கள் பிரயாணம் வாய்க்கும் என்றான். அப்படியே அவர்கள் லாயீசுக்குப் போய்,

தேசத்தைப் பார்த்துத் திரும்பிப் போனார்கள். (நியா. 18:1-8). பின்பு அவர்கள் 600 பேரோடு புறப்பட்டுப்போய், மீகா வீட்டில் இருந்த சுரூபங்களையும் எடுத்து, ஆசாரியனையும் கூட்டிக்கொண்டுபோய், லாயீசைப் பிடித்து, தங்கள் தேசமாக்கினார்கள். மனாசேயின் சந்ததியானாகிய யோனத்தானும், அவன் குமாரரும் அவர்களுக்கு ஆசாரியராய் இருந்தார்கள் (நியா. 18:10-31).

தாண் கோத்திரத்தில் சுரூப வணக்கம் இவ்விதமாய்த் துவங்கிற்று.

## மீகா (Mica)

1. மேவிபோசேத்தின் குமாரன் (2 சாமு. 9:12; 1 நாளா. 8:34).
2. மீகா ரூபன் கோத்திரத்தான் (1 நாளா. 5:5).
3. கோகாத்தியனான ஊசியேலின் குமாரன் (1 நாளா. 23:20).
4. உடன்படிக்கைக்கு முத்திரைபோட்ட லேவியன் (நெகே. 10:11).

## மீகா தீர்க்கதரிசி

மொரேசா ஊரானாகிய மீகா. சிறிய தீர்க்கதரிசிகளில் ஒருவன். யோதாம், ஆகாஸ், எசேக்கியா என்பவர்களின் நாள்களில் தீர்க்கதரிசனம் கூறினான் மீகா 1:1; எரே. 26:18. (கி.மு. 740-700). இவனைப்பற்றி வேறொன்றும் சொல்லப்படவில்லை. வட, தென், இராஜ்யங்களின் தலைநகராகிய சமாரியா, எருசலேம் பட்டணங்களுக்கு விரோதமாகக் கண்டிப்பான தீர்வை வருமென்று கூறினான்.

ஆமோசைப்போல ஜனங்களின் அநியாயங்களைக் குறித்துக் கண்டித்தான் (மீகா. 2:1-3; 3:1-4, 11).

## மீகாள் (Michal)

### (தேவனைப்போல உள்ளது யார்?)

இவள் சவுலின் இளைய குமாரத்தி (1 சாமு. 14:49). தாவீதை நேசித்தாள் (1 சாமு. 18:20). பின்பு தாவீது பெலிஸ்தரில் இருநூறு பேரின் நுனித்தோலை கொடுத்து, அவளை விவாகம் செய்தான் (1 சாமு. 18:27). சவுல் தாவீதைக் கொன்றுபோட எத்தனித்த போது, இவள் அவனைத் தப்புவித்தாள் (1 சாமு. 19:11-17). தாவீது ஒளிந்துத் திரிந்த நாள்களில் சவுல் மீகாளை லாயீசின் குமாரனாகிய பல்த்திக்குக் கொடுத்தான் (1 சாமு. 25:44).

சவுல் மரித்தபின், அப்னேர் தாவீதோடு உடன்படிக்கை செய்யப்போன சமயத்தில் தாவீது மீகாளை மறுபடியும் தனக்கு

மனைவியாக எடுக்க வேண்டுமென்று கேட்டதினிமித்தம் பல்த்தியேலிடமிருந்து அவளைப் பலாத்காரமாய் எடுத்து, அப்னேர் தாவீதிடம் கொண்டுபோனான் *(2 சாமு. 3:14-16)*.

கர்த்தருடைய பெட்டியைத் தாவீது எருசலேமுக்குக் கொண்டுவரும்போது நடனம் பண்ணினான். இதைப் பார்த்திருந்த மீகாள் அவனை நிந்தித்ததினிமித்தம் அவள் மரணமடையும்வரை பிள்ளையில்லாதிருந்தாள் *(2 சாமு. 6:20-23)*.

*2 சாமு. 21:8*இல் காண்கிற மீகாள் இவள் அல்ல என்று தெரிகிறது.

## மீசவேல் (Mishael)

***(தேவன் யார்?)***

*1.* ஆரோனின் சிறிய தகப்பனாகிய ஊசியேலின் குமாரன் *(யாத். 6:22; லேவி. 10:4)*.

*2.* எஸ்றா நியாயப்பிரமாணப் புத்தகத்தை வாசித்தபோது, அவனுக்கு இடதுபக்கமாக நின்றவர்களில் ஒருவன் *(நெகே. 8:4)*.

## மீதியான் (Midian)

***(கலகம்)***

ஆபிரகாமுக்குக் கேத்தூராள் பெற்ற மகன். இவனுக்கு ஐந்து குமாரர் இருந்தார்கள் *(ஆதி. 25:1-4; 1 நாளா. 1:32,33)*. ஆபிரகாம் இவர்களுக்கு நன்கொடை கொடுத்து, ஈசாக்கை விட்டுப்போகக் கீழ்த்தேசத்துக்கு அனுப்பிவிட்டான் *(ஆதி. 25:6)*.

இதன்பின், மோவாபின் நாட்டிலே ஆதாத் இவர்களை முறியடித்தான் என்று *ஆதி. 36:35*இல் குறித்துள்ளது.

## மீதியானியர் (Midianites)

இவர்கள் ஆபிரகாம், கேத்தூரு என்பவர்களின் சந்ததியார். அரபியா தேசத்தில் வடமேற்குப் பக்கத்தில் குடியேறின நாடோடி ஜனங்கள்.

இஸ்மவேலர், ஆபிரகாம், ஆகார் என்பவர்களின் சந்ததியார். இவ்விரு ஜாதியினரும் வனாந்தரவாசிகளும், வர்த்தகருமாய் இருந்தார்கள். யோசேப்பின் சகோதரர் அவனை இவர்கள் கையில் விற்றபொழுது இவர்கள் அவனை எகிப்தில் பார்வோனின் பிரதானியாகிய போத்திப்பாரிடம் விற்றார்கள் *(ஆதி. 37:28,36)*.

மீதியான் தேசத்து ஆசாரியனாகிய எத்திரோவின் மகள் சிப்போராளை மோசே விவாகம் பண்ணினான் *(யாத். 2:21; 3:1)*.

பின்பு எத்திரோ அல்லது ரெகுவேல் எனப்பட்டவனின் மகனாகிய ஓபா வனாந்தரப் பிரயாணத்தில் இஸ்ரவேலருக்கு உதவியாயிருந்தான் *(எண். 10:29,32).*

மீதியானியரும், மோவாபியரும் ஒருமித்து, இஸ்ரவேலரைச் சபிப்பதற்காக பிலேயாமுக்குக் கூலி கொடுத்து அழைப்பித்தார்கள் *(எண். 22:1-5).*

மீதியான் தேசத்து ஐந்து பிரபுக்கள் எமோரியருடைய இராஜாவாகிய சீகோனுடன் சேர்ந்து இஸ்ரவேலருக்கெதிராக வந்தபோது கொல்லப்பட்டார்கள் *(யோசுவா. 13:21).*

மீதியானியரின் இரண்டு இராஜாக்களாகிய சேபா, சல்மூனா என்பவர்களையும், சேனை முழுவதையும், கிதியோன் கலங்கடித்தான் *(நியா. 8:12).*

### மீதியானிய ஸ்திரீ

இஸ்ரவேலர் சித்தீமிலே மோவாபிய ஸ்திரீகளோடு வேசித்தனம் பண்ணி, பாகால் பேயோரைப் பின்பற்றினார்கள். இதினிமித்தம் கர்த்தருக்குக் கோபம் மூண்டது. அத்தருணத்தில் இஸ்ரவேலில் ஒருவன் ஒரு மீதியானிய ஸ்திரீயை அழைத்துக் கொண்டு வந்ததை, எலெயாசாரின் மகன் பினெகாஸ் கண்டு, ஓர் ஈட்டியால் அவர்கள் இருவரையும் குத்திக் கொன்றான். அப்பொழுது அவர்களுக்குள் உண்டான வாதை நின்று போயிற்று *(எண். 25:1-8).*

## மெகிதோ (Megiddo)

### *(சேனை கூடும் இடம்)*

இது கட்டப்பட்ட ஒரு பட்டணம். எஸ்திரேயன், சாரோன் என்னும் சமவெளிகளுக்கிடையே இருந்த பாதைக்கு இது காவல் பட்டணமாயிருந்தது. இங்கே இருந்த இராஜாவைக் கொன்றுபோட்டு, யோசுவா இந்தப் பட்டணத்தை மனாசே கோத்திரத்துக்குக் கொடுத்தான். ஆகிலும் கானானியர் துரத்தப்படவில்லை *(யோசுவா. 12:21; 17:11; நியா. 1:28).*

பூர்வீக நாள்கள் தொடங்கி, இங்கே அநேக யுத்தங்கள் நடந்தன.

கானானிய இராஜாக்கள் மெகிதோவின் தண்ணீர் அருகே யுத்தம் பண்ணின வேளையில், நட்சத்திரங்கள் சிசெராவோடு யுத்தம் பண்ணின *(நியா. 5:19-21).*

சாலொமோன் இராஜா இதைக் கீழ்ப்படுத்திக் கட்டினான் *(1 இரா. 4:12; 9:15).* அவனுடைய போஜன சாலை ஒன்று இங்கே இருந்தது.

அகசியா காயப்பட்டபோது, மெகிதோவுக்குப் போய் அங்கே மரித்தான் *(2 இரா. 9:27).*

யோசியா இராஜா பார்வோன் நேகோவுக்கு எதிராகப் போன போது இவ்விடத்தில் கொல்லப்பட்டான் *(2 இரா. 23:29; 2 நாளா. 35:20,22).*

சகரியா இந்த இடத்தைப் பற்றி புலம்பல் சொல்லி, தீர்க்கதரிசனம் உரைத்தான் *(சக. 12:11).*

தேவனுடைய மகாநாளின் யுத்தம், இங்கே நடக்குமென்று குறித்துள்ளது *(வெளி. 16:14-16).*

## மெசொப்பொத்தாமியா (Mesopotamia)

**(இரண்டு நதிகளுக்கிடையில்)**

திகிரிஸ், ஐபிராத்து நதிகளுக்கிடையில் உள்ள பூமியின் (கிரேக்க) பெயர். ஆரான் இந்தத் தேசத்தைச் சேர்ந்த ஒரு பகுதி.

பாபிலோனியாவிலுள்ள ஊர் என்ற இடத்திலிருந்துத் தேராகு, ஆபிராமையும், சாராயையும்; லோத்தையும் கூட்டிக்கொண்டு ஆரானுக்கு வந்தான் *(ஆதி. 11:31,32).*

எலியேசர் ஈசாக்குக்குப் பெண் கொள்ள மெசொப்பொத்தாமியா விலே நாகோருடைய ஊருக்குப் போனான் *(ஆதி. 24:10).*

இஸ்ரவேலரைச் சபிக்கும்படி பிலேயாம் இந்தத் தேசத்திலிருந்து அழைக்கப்பட்டான் *(உபா. 23:4).*

ஒத்னியேல் இத்தேசத்தின் இராஜாவாகிய கூசான்ரிஷதாயீமைக் கீழ்ப்படுத்தினான் *(நியா. 3:10).*

அம்மோன் புத்திரர் இங்கிருந்துத் தாவீதுக்கு விரோதமாக இரதங்களையும், குதிரை வீரரையும் கூலிக்கு வரவழைத்தார்கள் *(1 நாளா. 19:6).*

பெந்தெகொஸ்தே நாளில் இத்தேசத்தாரும் எருசலேமுக்குப் போயிருந்தார்கள் *(அப். 2:9).*

## மெத்தூசலா (Methuselah)

ஏனோக்கின் மகன், நோவாவின் பாட்டன். லாமேக்கின் தகப்பன் *(ஆதி. 5:25; 1 நாளா. 1:3).* இவன் *969* வருடம் உயிரோடிருந்தான். மனுஷரில் எல்லாரைக் காட்டிலும் அதிக நாள் ஜீவித்தவன்.

## மெராரி (Merari)

***(கசப்பு)***

லேவியின் மூன்றாம் மகன். இவனுடைய பெயரும், சகோதரரான கெர்சோன், கோகாத் என்பவர்களின் பெயரும் ஒருமித்துச் சொல்லப்பட்டுள்ளன *(ஆதி. 46:11; யாத். 6:16)*. இவன் யாக்கோபோடு எகிப்துக்குப் போன எழுபது பேரில் ஒருவன் *(ஆதி. 46:8,11)*.

மெராரியர் இவனுடைய சந்ததியார் *(எண். 26:57)*.

## மெராரியர் (Merarites)

லேவியரின் குடும்பங்கள் - கெர்சோன், கோகாத், மெராரி என்னும் மூன்று பிரிவுகளாயிருந்தன *(எண். 26:57)*.

வனாந்தரப் பிரயாணத்தில் மெராரி ஆசரிப்புக் கூடாரத்தின் வட பக்கத்தில் பாளயமிறங்கினார்கள்.

மெராரியின் குமாரர் மகேலி, மூசி என்பவர்களின் பணி காவல் விசாரிப்பும், வாசஸ்தலத்தின் பணிமுட்டுகளும், அதற்கடுத்தவைகளுமே *(எண். 3:20; 35:37; 4:31-33; 7:8)*. பிரயாணத்தில் மெராரி புத்திரர் வாசஸ்தலத்தைச் சுமந்து கொண்டு போனார்கள் *(எண். 10:17)*.

கானான் தேசத்தில் அவர்களுக்குப் பன்னிரெண்டு பட்டணங்கள் கொடுக்கப்பட்டன *(யோசுவா. 21:7,40)*.

கர்த்தரைத் துதிக்கிறவர்களாகத் தாவீது, கெர்சோன், கோகாத், மெராரி என்பவர்களுடைய வம்சப் பிரிவுகளின்படி வகுத்தான் *(1 நாளா. 23:6; 21-23)*.

எசேக்கியாவின் நாள்களிலும் யோசியாவின் நாள்களிலும் அவர்கள் ஆலயத்தைச் சுத்திகரிக்கும் வேலையில் உதவி செய்தார்கள் *(2 நாளா. 29:12; 34:12)*.

மெராரியின் புத்திரரில் சிலர் எஸ்றாவோடு எருசலேமுக்குப் போனார்கள் *(எஸ்றா. 8:19)*.

## மெல்கிசேதேக்கு (Melchizedek)

***(நீதியின் இராஜா)***

சாலேமின் அல்லது எருசலேமின் இராஜா *(சங். 76:2)*. ஆபிரகாம் கெதர்லோகோமேரையும், மற்ற இராஜாக்களையும் முறிய அடித்து திரும்பி வருகிறபோது, உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும், திராட்சரசமும் கொண்டு வந்து, அவனை ஆசீர்வதித்து, ஆயாசம் தீர்த்தபோது

ஆபிரகாம் அவனுக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான் (ஆதி. 14:18-20).

"மெல்கிசேதேக்கு தகப்பனும், தாயும், வம்ச வரலாறும் இல்லாதவன். இவன் நாள்களின் துவக்கமும், ஜீவனின் முடிவுமுடையவனாயிராமல், தேவனுடைய குமாரனுக்கு ஒப்பானவனாய் என்றென்றைக்கும் ஆசாரியனாக நிலைத்திருக்கிறான்" (எபி. 7:1-3).

ஆகவே இவன் ஆபிரகாமுக்கு மேலானவனும், தசம பாகம் பெறுகிற லேவி கோத்திரத்தாருக்கு முதன்மையானவனுமாயிருக்கிறான்.

இயேசுவானவர் ஆணையின்படி என்றென்றைக்கும் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி ஆசாரியராய் இருக்கிறார் என்பது தாவீதினாலும், எபிரெயர் நிருபம் எழுதினவராலும் வெளிப்படையாய்ச் சொல்லியுள்ளது (சங். 110:4; எபி. 7:15-17).

## மேசியா (Messiah)

மேசியா என்பதன் அர்த்தம் கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர்). பழைய ஏற்பாட்டில் பொதுவாக இராஜாக்களும் ஆசாரியர்களும் அபிஷேகம் பண்ணப்பட்டார்கள் (1 சாமு. 24:6; 2 சாமு. 19:2; 23:1).

"கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசு" என்று சொல்லப்பட்டிருக்கிறது (ஏசாயா. 45:1).

மேலும், கர்த்தரால் தமது ஊழியத்துக்குத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களும், அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாம் (1 நாளா. 16:22; சங். 105:15).

ஆகிலும், ஆதியிலிருந்து கர்த்தர் தமது ஜனத்தை மீட்கும் பொருட்டே ஒருவனை அபிஷேகம் பண்ணுகிறதாகத் தெரிகிறது.

இந்த மேசியாவைப்பற்றி முதன் முதலாக ஆதி. 3:15இல் "அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" என்பதோடு துவக்கி, "உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும்" என்பதோடு பழைய ஏற்பாட்டுக் குறிப்புகள் முடிவாகிறது (மல். 4:2).

இதற்கிடையில், நோவாவின் தீர்க்கதரிசனம் "சேமுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (ஆதி. 9:26). ஆபிரகாமுக்குக் கிடைத்த வாக்குத்தத்தம்; "பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்'' (ஆதி.12:3) யாக்கோபு சொன்ன ஆசீர்வாதமாவது: "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல்

யூதாவை விட்டு நீங்குவதும் இல்லை" (ஆதி. 49:10); பிலேயாமின் தீர்க்கதரிசனம்: "ஒரு நட்சத்திரம் யாக்கோபிலிருந்து உதிக்கும். ஒரு செங்கோல் இஸ்ரவேலில் இருந்து எழும்பும்" (எண். 24:17). மோசேக்குக் கிடைத்த வார்த்தை: "உன்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரில் இருந்து எழும்பப் பண்ணுவேன்" (உபா. 18:18.)

"உன் இராஜாசனம் என்றென்றைக்கும் நிலை பெற்றிருக்கும்" என்று நாத்தான் தாவீதுக்குச் சொன்னான் (2 சாமு. 7:15). இதிலிருந்து ஆளுகை செய்யும் ஒரு மேசியா தாவீதின் சந்ததியில் தோன்றுவாரென்பது தெளிவாகிறது.

"நீதிபரராய் மனுஷரை ஆண்டு, தெய்வ பயமாய்த் துரைத்தனம் பண்ணுகிறவர் இருப்பார். இது நிச்சயமான நித்திய உடன்படிக்கை" என்று தாவீது சொன்னான் (2 சாமு. 23:3-5).

வரப்போகிற மேசியாவைப் பற்றிப் பின்வரும் சங்கீதங்களில் குறிக்கப்பட்டுள்ளன. (சங். 2,6,22,40,41,68,69,72,109,110,118,132).

தீர்க்கதரிசன புத்தகங்களில் இந்த நூதன இராஜாவைப் பற்றிக் கூறியதாவது:- ஏசாயா "இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்..... நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்" (ஏசாயா. 7:14; 9:6).

எரேமியா : "மேசியா நீதியுள்ள கிளை." "அவர் நாமம் நீதியாயிருக்கிற கர்த்தர்" என்பதே (எரே. 23:5,6. 33:15,16).

எசேக்கியேல் : "என் தாசனாகிய தாவீது என்னும் ஒரே மேய்ப்பனை நான் ஏற்படுத்துவேன். அவர் என் ஜனங்களின் நடுவில் அதிகாரியாயிருப்பார்" (எசே. 34:23; 37:24).

ஆகாய் : "அந்நாளிலே உன்னை நான் முத்திரை மோதிரமாக வைப்பேன்" (ஆகாய். 2:23).

சகரியா : "சீயோன் குமாரத்தியே, இதோ, உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார். கழுதையின் மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார் (சக. 9:9).

மீகா : "பெத்லகேமே! நீ சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்" (மீகா. 5:2).

தானியேல் : பிரபுவாகிய மேசியா வருவதைப்பற்றியும், மேசியா சங்கரிக்கப்படுவதைப் பற்றியும் கூறியிருக்கிறான் (தானி. 9:25, 26).

புதிய ஏற்பாட்டின் நாள்களில், மேசியா சீக்கிரம் வருவாரென்ற நம்பிக்கை அதிகமாயிருந்தது. யோவான் ஸ்நானனும் "வருகிறவர் நீர் தானா?" என்று இயேசுவிடம் கேட்டு அனுப்பினான் *(மத். 11:3)*. ஜனங்களும் யோவான் கிறிஸ்துவாயிருக்கலாம் என்று நினைத்தார்கள் *(லூக்கா. 3:15)*.

அக்காலத்தில் யூதருக்குள்ளிருந்த நம்பிக்கையாவது மேசியா தாவீதின் வம்சத்தில் தோன்றி, ஒரு பெரிய இராஜ்யத்தை ஏற்படுத்தி, எருசலேமில் சிங்காசனத்தை ஸ்தாபித்து, அவர்களுடைய சத்துருக்களை வென்று, தங்களையே மேலான ஜாதியாக்குவாரென்பதே.

இந்த நம்பிக்கையினிமித்தம் இயேசு எருசலேமுக்குப் பவனி போனபோது ஜனங்கள் கெம்பீரித்து "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா" என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள் *(மத். 21:9)*. பரிசேயரும் அவர் தாவீதின் குமாரனென்று சொன்னார்கள் *(மத். 22:42)*.

ஆனாலும் சிலர் வேறு விதமான எண்ணங்கள் கொண்டிருந்தார்கள். "கிறிஸ்து வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வருவாரென்று ஒருவனும் அறிய மாட்டான்" என்றார்கள் *(யோவான். 7:27)*.

இன்னும் அவரை விசுவாசித்த அநேகர், "கிறிஸ்து வரும்போது, இவர் செய்கிற அற்புதங்களைப் பார்க்கிலும் அதிகம் செய்வாரோ?" என்றார்கள் *(யோவான். 7:31)*.

அந்திரேயா, "மேசியாவைக் கண்டோம்" என்றும், சமாரிய ஸ்திரீ, "கிறிஸ்து எனப்படுகிற மேசியா வருவார் என்று அறிவேன்" என்றும் சொன்னார்கள் *(யோவான். 1:41; 4:27)*.

ஜனங்கள் யோவான் ஸ்நானனிடம் கேட்ட கேள்விகளிலிருந்து வருகிறவர் கிறிஸ்துவாய் அல்லது ஒரு தீர்க்கதரிசியாய் இருப்பாரென்று எண்ணினதாகத் தெரிகிறது *(யோவான் 1:21,25)*. ஆகவே அவர் செய்த அற்புதங்களைக் கண்டபோது, ஜனங்கள் "அவரே வருகிறவரான தீர்க்கதரிசி" என்று சொல்லி, அவரை இராஜாவாக்க மனதாயிருந்தார்கள் *(யோவான். 6:14)*.

ஆனால் இயேசு, ஜனங்கள் எதிர்ப்பார்த்திருந்த மேசியாவை போல நடவாமல், தாம் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றினார்.

இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்ற வேளையில், "நீர் என்னுடைய நேச குமாரன்" என்றது போலல்ல *(மாற்கு. 1:11)*. "நான் ஆதரிக்கும் என் தாசன்" *(ஏசாயா 42:1)* என்பதற்கிசைவாய்த்

தாழ்மையான கீழ்ப்படிதல் உள்ள ஊழியக்காரன்போல் தமது அழைப்பை நிறைவேற்றினார். பாடுபட்டு, நிந்திக்கப்பட்டு, சிலுவையில் அறையுண்டு மரித்ததினாலே, மேசியா என்பதற்கு ஒரு புதிய கருத்தைக் கொடுத்தார்.

இயேசு கிறிஸ்து, ஜனங்கள் எதிர்பார்த்த வண்ணம் உலகத்தின் இராஜாவாக இராவிட்டாலும், அவர் ஆவிக்குரிய இராஜாவாக இருக்கிறார்.

## மேசேக்கு (Mesheck)

இவர்கள் பெலிஸ்திய தேசத்தின் வடபாகத்தில் இருந்த ஒரு பூர்வீகப் பராக்கிரமமுள்ள ஜனங்கள்; யாப்பேத்தின் சந்ததியார் என்று சொல்லப்படுகிறார்கள் *(ஆதி. 10:2)*.

மேசேக், தூபால் என்னும் ஜாதிகளின் தலைமையான அதிபதி கோகு எனப்பட்டான் *(எசே. 38:2,3; 39:1)*.

"மேசேக் ஜாதியார் உன் வியாபாரிகளாயிருந்து மனுஷர்களையும், வெண்கலப் பாத்திரங்களையும் கொண்டுவந்தார்கள்" *(எசே. 27:13)*.

இவர்கள் கேதார் ஜாதியாரும் மிலேச்சரும் யுத்தப் பிரியருமானவர்கள் *(சங். 120:5-7)*.

## மேஷாக் (Meshack)

நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் தானியேலோடிருந்த மீஷாவேலுக்கு மேஷாக் என்ற பெயர் கொடுக்கப்பட்டது *(தானி. 1:7)*. இவன் பாபிலோன் மாகாணத்தில் விசாரிப்புக்காரனாயிருந்தான் *(தானி. 2:49)*.

பின்பு இவனும், இவனுடைய கூட்டாளிகள் இருவரும் அக்கினிச்சூளையிலே போடப்பட்டும், தேவனால் பாதுகாக்கப் பட்டார்கள் *(தானி. 3:13-30)*.

## மேதியா (Media)

இது நைகிரிஸ், கஸ்பியன் என்னும் கடல்களுக்கிடையே இருந்த ஒரு பூர்வீகராஜ்யம். தற்போது ஈரான் எனப்படுகிறது.

எரேமியாவின் நாள்களில், சின்ன ஆசியா, கருங்கடல் என்ற இடங்கள் மட்டும் பரந்திருந்த ஒரு விசாலமான தேசம்.

இத்தேசத்தார் மீதியானியர் அல்லது மேதியர் எனப்பட்டார்கள். யாப்பேத்தின் சந்ததியார் *(ஆதி. 10:2)* விசேஷ ஜாதிக் குதிரைகளை வளர்த்தார்கள். கி.மு. 886இல் மூன்றாம் சல்மனேசர் என்பவன் இவர்கள் இருந்த பகுதிகளுக்குப் போய், குதிரைகள் வாங்கினான்.

அதன்பின் அசீரிய இராஜாக்கள் அங்கே போக்குவரத்தாயிருந்து, பிற்பாடு திக்லாத்பிலேசார் கி.மு. 743இல் இந்தத்தேசத்தைக் கைப்பற்றினான்.

சர்கோன் இராஜா சிறைப்பிடித்த இஸ்ரவேலரை மேதியாவில் குடியேற்றினான் *(2 இரா. 17:6; 18:1).*

கி.மு. 612இல் நினிவேயை அழிக்கிறதற்கு மேதியா பாபிலோனியாவுக்கு உதவியாயிருந்தது.

கி.மு. 350இல் பெர்சிய இராஜாவாகிய கோரேஸ், மேதியா தேசத்தைப் பிடித்து அதன் இராஜாவானான்.

அநேக மேதியருக்கு விசேஷ உத்தியோகங்கள் கொடுக்கப்பட்டன. மேதியருடைய பழக்க வழக்கங்களும், அவர்களுடைய பிரமாணங்களும் பெர்சிய தேசத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன *(தானி. 6:8, 15).* பின்பு இரண்டு தேசங்களும் மேதியா-பெர்சியா என ஒரு தேசம்போல் ஐக்கியப்பட்டிருந்தன. தானியேல் தரிசனத்தில் கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா பெர்சிய, மேதிய இராஜாக்களைக் குறிக்கிறது *(தானி. 8:20; எஸ். 1:19).*

பாபிலோன் தேசத்தை அழிக்கும்படி கர்த்தர் மேதியரை எழுப்பினார் *(ஏசாயா. 13:17; எரே. 51:11,28).*

பாபிலோனின் புது இராஜா தரியு, ஒரு மேதியனென்று சொல்லப்படுகிறான் *(தானி. 11:1).*

மேதியாவிலிருந்த யூத ஜனங்களின் சரித்திரம் எஸ்தர். *1:3, 14,18,19*இல் சொல்லப்படுகிறது.

## மேரிபா (Meribah)

**(வாதாட்டம்)**

மேரிபா, மாசா என்பவை காரணப் பெயர்களாம். இஸ்ரவேலர் ரெவிதீமில் தங்கியிருந்த வேளையில் குடிக்கத் தண்ணீர் இல்லாததினால் முறுமுறுத்தார்கள். கர்த்தர் கன்மலையிலிருந்து தண்ணீர் வரப்பண்ணினார். அவர்கள் வாதாடினதினிமித்தமும், கர்த்தரைப் பரீட்சை பார்த்ததினிமித்தமும் அந்த ஸ்தலம் மாசா என்றும், மேரிபா என்றும் பெயரிடப்பட்டது *(யாத். 17:1-7).* ஆகவே ரெவிதீமில் நடந்தது போன்ற சம்பவம் காதேஸ் பர்னேயாவில் இரண்டாம் முறை சம்பவித்ததினால், மேரிபாவின் தண்ணீர் என்னப்பட்டது *(எண். 20:13; 27:14).*

என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து என் கிரியையையும் கண்டார்கள் *(சங். 95:9).*

பின்னும் ஜனங்கள் கர்த்தருக்குக் கோபம் மூட்டினார்களென்றும், கர்த்தர் அவர்களைச் சோதித்தார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது (சங். 106:32; சங். 81:7).

மேரிபாவின் தண்ணீர் காரியத்தில், கர்த்தருடைய சொல்லை மீறினபடியால் ஆரோன் கானானிலே பிரவேசிக்கவில்லை (எண். 20:24).

மோசே, மேரிபாவின் தண்ணீர் சம்பவத்தில் கர்த்தரைப் பரிசுத்தம் பண்ணாமல் அந்த அற்புதத்தின் மகிமையைத் தேவனுக்குக் கொடாமல் வாய்ப்பதறிப் பேசினதினிமித்தம் கானான் தேசத்துக்குள் பிரவேசிக்கக் கூடாமற் போயிற்று (உபா. 32:51,52; சங். 106:33).

## மேவிபோசேத் (Mephibosheth)

**(பாகாலின் சொல்)**

இந்தப் பெயருள்ள இரண்டு பேரைப் பற்றி சொல்லியுள்ளது.

1. சவுலுடைய மகனாகிய யோனத்தானின் மகன். சவுலும், யோனத்தானும் கொல்லப்பட்டபோது, இவனுக்கு வயது ஐந்து. பெலிஸ்தருக்குப் பயந்து, இவனுடைய தாதி இவனை எடுத்துக் கொண்டு ஓடிப் போகையில் இவன் விழுந்து முடவன் ஆனான் (2 சாமு. 9:11).

பின்பு தாவீது, யோனத்தான்நிமித்தம் இவனுக்குத் தயவு காட்டி, தன் பந்தியில் தினமும் அப்பம் புசிக்கும்படி ஒழுங்கு செய்தான் (2 சாமு. 9:11).

சீபா இவனுக்கு விரோதமாகத் துரோகம் செய்த வேளையிலும், தாவீது இவனுக்கு நியாயம் செய்தான் (2 சாமு. 16:1-6,19).

இவனுடைய பெயர் மேரிபால் என்னும் குறித்துள்ளது (1 நாளா. 8:34).

2. சவுலின் மறுமனையாட்டியாகிய ரிஸ்பா பெற்ற மகன். சவுல் கிபியோனியரைக் கொன்ற பாதகம் தீர, தாவீது சவுலின் சந்ததியாரில் இவனோடு கூட ஏழு பேரைக் கிபியோனியருக்கு ஒப்புக் கொடுத்தான். அவர்களை மலையின் மேல் தூக்கிப் போட்டார்கள் (2 சாமு. 21:8,9).

## மொர்தெகாய் (Mordecai)

இவன் பென்யமீன் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு யூதன். இவனுடைய பூட்டன் கீசு. எகொனியா இராஜா சிறைப்பட்டுப் போனபோது, இவனும் பிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்டான். எஸ்தர் இவனுடைய சிறிய தகப்பனின் குமாரத்தி. அவள் தன் தாயையும், தகப்பனையும் இழந்தபோது, மொர்தெகாய் அவளைத் தன் குமாரத்தியாக எடுத்து வளர்த்தான் (எஸ். 2:5-7).

மொர்தெகாய் அகாஸ்வேரு இராஜாவின் சூசான் அரண்மனையில் உத்தியோகம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது இராஜாவுக்கு விரோதமாய் சதியாலோசனை செய்த இருவரைப் பற்றி இராஜாவாகிய அகாஸ்வேருக்கு இவன் அறிவித்தான். இந்தக் காரியம் உண்மையென நாளாகமப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது (எஸ். 2:21,22).

அந்நாள்களில் பிரதான மந்திரியாயிருந்த ஆமான், யூதர் எல்லாரையும் கொன்று போட வகைதேடினான். இதினிமித்தம் அவன் குற்றவாளியாகக் காணப்பட்டு, கொல்லப்பட்ட பின் மொர்தெகாய் மந்திரியானான். யூதருக்குள் மேன்மைபட்ட இவன், இராஜாவுக்கு அடுத்தவனாய் இருந்து, தன் ஜனங்களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக்கெல்லாம் சமாதானமுண்டாக்கினான் (எஸ். 10:3).

2. செருபாபேலுடன் சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்த ஒருவன் (எஸ்றா. 2:2; நெகே. 7:6).

## மோசே (Moses)

### *(ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன்)*

அம்ராம், யோகெபேத் என்பவர்களின் புத்திரன் (யாத். 6:20). இவர்களுடைய வம்ச வரலாறு சொல்லப்படாவிடினும் இவர்கள் இருவரும் லேவி குடும்பத்தாரென்று தெரிகிறது. எகிப்திலிருந்த எபிரெயருக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளை, நதியிலே போட்டு விடும்படி பார்வோன் கட்டளையிட்டிருந்தான். மோசே பிறந்த போது, அவனுடைய தாய் அவனை அழகுள்ளபிள்ளை என்று கண்டு மூன்று மாதம் ஒளித்து வைத்திருந்தபின், பிள்ளையை ஒரு நாணற் பெட்டியில் வைத்து, நதி ஓரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள் (யாத். 2:1-3).

பார்வோனுடைய குமாரத்தி ஸ்நானம்பண்ணப் போனபோது, அதைக் கண்டு, அந்தப் பிள்ளையின் தாயிடமே அதை வளர்க்கும்படி கொடுக்க நேரிட்டது. பிள்ளை பெரிதான போது தாய் அவனைப் பார்வோனுடைய குமாரத்தியிடம் கொண்டு போய்விட்டாள். அவள் அவனை ஜலத்திலிருந்து எடுத்ததினால் மோசே என்று பேரிட்டு (யாத். 2:4-10) தனக்குப் பிள்ளையாக வளர்த்தாள். அவன் எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.

மோசேக்கு நாற்பது வயதான போது ஓர் இஸ்ரவேலனை ஓர் எகிப்தியன் அநியாயமாய் அடித்ததைக் கண்டு, அவனைக் கொன்று போட்டான் (யாத். 2:11,12). அப்படியிருந்தும், தன் சகோதரர் தானும்

தன்னை ஏற்றுக் கொள்ளவில்லை என்று கண்டு, பார்வோனுக்குப் பயந்து ஓடிப் போய் மீதியான் தேசத்தில் சஞ்சரித்தான் (*அப். 7:25,28; யாத். 2:11-25*).

மோசே, அங்கிருந்த ஆசாரியனாகிய ரெகுவேலின் ஆடுகளை நாற்பது வருடங்களாக மேய்த்தான். அந்த ஆசாரியன் தன் குமாரத்தி சிப்போராளை மோசேக்கு விவாகம் செய்து கொடுத்தான். அவர்களுக்கு இரண்டு குமாரர் பிறந்தார்கள் (*யாத். 2:15-22, அப். 7:29*).

அவனுக்கு எண்பது வயதாயிருக்கையில், ஒரு நாள் மோசே ஆடுகளை ஓட்டிக்கொண்டு ஓரேப் மட்டும் வந்தான். அங்கே எரிகிற முட்செடியில் அவனுக்குத் தேவ தரிசனம் கிடைத்தது. அவ்வேளையில் எகிப்துக்குப் போய் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக் கொண்டு வரும்படி கர்த்தர் அவனுக்குக் கட்டளை கொடுத்தார் (*யாத். 3:1-10*).

மோசே தன் மனைவியுடன் புறப்பட்டுப் போகையில், மகனுக்கு விருத்தசேதனம் செய்தார்கள். மோசே எகிப்துக்குப் போகிற வழியில், தேவ பர்வதத்தண்டையில் ஆரோனைச் சந்தித்தான். இருவரும் எகிப்துக்குப் போய், இஸ்ரவேல் புத்திரரின் மூப்பருடன் பேசி தங்கள் நோக்கத்தை அறிவித்தார்கள் (*யாத். 4:27*). ஜனங்கள் சந்தோஷப்பட்டு கர்த்தரைத் தொழுது கொண்டார்கள் (*யாத். 4:31*).

பின்பு மோசேயும் ஆரோனும் பார்வோனிடம் போய், ''இஸ்ரவேலரின் தேவன் தமது ஜனங்களை பண்டிகை கொண்டாடும்படி, வனாந்தரத்துக்குப் போக விட வேண்டும், என்று சொல்லுகிறார்'' என்றார்கள். பார்வோன் அதைத் தடுத்ததுமன்றி, ஜனங்களின் வேலையை அதிகக்கடினப்படுத்தினான் (*யாத். 5:10,19*). மோசே இதைக் கர்த்தருக்கு முறையிட்டபோது, அவர் அவனைத் தைரியப்படுத்தி தாம் இஸ்ரவேல் ஜனங்களை மீட்டுக் கொண்டு, தாம் ஆணையிட்ட தேசத்தை அவர்களுக்குக் கொடுப்பதாக உறுதிப்படுத்தி, அதை ஜனங்களுக்கும் அறிவிக்கும்படி சொன்னார் (*யாத். 5:22,6:1*).

பிற்பாடு கர்த்தர் எகிப்தின் மேலும், இராஜாக்கள் மேலும் அவர்களின் தேவர்கள் மேலும், பல வாதைகளை வரப்பண்ணியும், பார்வோன் ஜனங்களை விடுதலையாக்காதிருந்தான் (*யாத். அதி. 7-12*). பின்பு கர்த்தர் ஒரு நாளைக் குறித்து ஜனங்கள் தாம் நியமித்தபடி பஸ்காவை அனுசரிக்கும்படிச் சொன்னார். அன்று இராத்திரியிலே எகிப்திலுள்ள இராஜாவின் தலைப்பிள்ளை முதல் எல்லா எகிப்தியரின் முதற்பேறனைத்தும் மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தும் கொல்லப்பட்டன. உடனே பார்வோனும் ஜனங்களும் இஸ்ரவேலரை போகும்படி துரிதப்படுத்தினதுமன்றி அவர்கள் கேட்ட பொருள்களையும் கொடுத்தனுப்பினார்கள் (*யாத். 12:29-36*).

**இஸ்ரவேலரின் புறப்படுதல் :** இஸ்ரவேலர் எகிப்தில் நானூற்று முப்பது வருடங்களிருந்து முடிந்த அன்று எகிப்திலிருந்துப் புறப்பட்டார்கள் *(யாத். 12:41).*

கர்த்தர் தாமே அவர்களை வழி நடத்திப் பகலில் மேக ஸ்தம்பத்திலும், இரவில் அக்கினிஸ்தம்பத்திலும், அவர்களுக்கு முன் சென்றார் *(யாத். 13:21).*

ஜனங்கள் பிரயாணம்பண்ணி ஈரோத் பள்ளத்தாக்கில் பாளயமிறங்கினார்கள். கர்த்தர் சிவந்த சமுத்திரத்தைப் பிளந்து, இஸ்ரவேல் ஜனங்கள் அதற்கூடாகக் கடந்து போகச் செய்தார். எகிப்தியர் பின்தொடர்ந்து போனபோது, ஜலம் திரும்பி வந்து, அவர்கள் எல்லாரையும் மூடினது. அப்பொழுது மோசேயும் ஜனங்களும் கர்த்தரைப் புகழ்ந்து பாடினார்கள் *(யாத். 15:1).* மிரியாமும் சகல ஸ்திரீகளும் தம்புருகளோடு நடனம் பண்ணினார்கள் *(யாத். 15:20).*

பின்பு ஜனங்கள், மாராவில் வந்து சேர்ந்தபோது, தண்ணீர் கசப்பாயிருந்ததினால் முறுமுறுத்தார்கள் *(யாத். 15:25).* கர்த்தரின் சொற்படி மோசே ஒரு மரத்தைத் தண்ணீரில் போடவே அது மதுரமான தண்ணீரானது.

பின்பு அவர்கள் ரெவிதீமுக்கு வந்தபோது தண்ணீர் இல்லாததினால், மோசே கர்த்தர் சொன்ன ஒரு கன்மலையை அடித்தான். தண்ணீர் ஏராளமாய் வந்தது. அப்பொழுது அமலேக்கியர் வந்து அவர்களோடு யுத்தம் பண்ணினார்கள். மோசேயின் ஜெபத்தினாலும், யோசுவாவின் பட்டயத்தினாலும் அமலேக்கியர் தோற்கடிக்கப்பட்டார்கள் *(யாத். 17:8-16).* கர்த்தர் "அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன்" என்றார். மோசேயும் ஒரு பலிபீடத்தைக் கட்டி, தலைமுறைதோறும், அமலேக்குக்கு விரோதமாக கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்று கூறினான் *(யாத். 17:16).*

மோசேயின் மாமன் எத்திரோ மோசேயின் மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு தேவபர்வதத்தினிடம் வந்து, அங்கே தேவனுக்குப் பலி செலுத்திப் போஜனம்பண்ணினார்கள் *(யாத். 18:5-12).*

ஜனங்களுடைய வழக்குகளைத் தீர்க்கிற விஷயத்தில் எத்திரோ, விசேஷ யோசனைகளை மோசேக்கு சொல்லிக் கொடுத்தான் *(யாத். 18:13-26).*

பிற்பாடு இஸ்ரவேலர் பிரயாணம்பண்ணி, சீனாய் மலைக்கு எதிராக பாளயமிறங்கினார்கள். மோசே மலையின்மேல் ஏறி

கர்த்தரைத் தரிசித்தபின் ஜனங்கள் காணத்தக்கதாய் கர்த்தர் சீனாய் மலைமேல் இறங்கி, மோசேயுடன் பேசினார். பத்து கற்பனைகள் எழுதப்பட்ட இரண்டு பலகைகளை அவனிடம் ஒப்புவித்தார் *(யாத்.அதி.21-32)*. மோசே வந்து ஜனங்களை கூட்டிச் சேர்த்து, ஒரு பலிபீடத்தைக் கட்டி, இரத்தத்தினால் உடன்படிக்கை செய்தார்கள். பின்னும் மோசே மலைமேலேறி இரவும் பகலும் நாற்பது நாள் இருந்தான் *(யாத். 24:3-8, 16-18)*.

அங்கே கர்த்தருக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்கும் மாதிரியை மோசே படித்துக் கொண்டிருக்கையில், கீழே ஜனங்கள் பொறுமையிழந்து, ஆரோனை நோக்கி "எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும்" என்றார்கள். அதன்படி ஆரோன் ஒரு கன்றுக் குட்டியை வார்ப்பித்து, பண்டிகை, கொண்டாடினார்கள் *(யாத். 32:1-6)*. இதினிமித்தம் கர்த்தர் அவர்களை அழித்துப் போட எண்ணியும், மோசே வாதாடினதினிமித்தம் அதைச் செய்யாதிருந்தார் *(யாத். 32:14)*. ஆனால் அவர்கள் செய்த துரோகத்தினிமித்தம் மூவாயிரம் பேர், லேவியின் புத்திரரால் கொல்லப்பட்டார்கள் *(யாத். 32:38)*.

மோசே பாளயத்துக்குப் புறம்பே ஆசரிப்புக் கூடாரத்தை போட்டான். தேவன் அவனுக்குத் தரிசனமாகி, அவனோடு பேசிச் செய்ய வேண்டிய காரியங்களைச் சொன்னார் *(யாத். 33:7-17)*.

கர்த்தர் கற்பித்தபடி எல்லாம், மோசே செய்து முடித்து, இரண்டாம் வருடம் முதலாம் மாதம் முதலாம் தேதியில் வாசஸ்தலத்தை ஸ்தாபித்தான் *(யாத். 40:17-19)*. மோசேயும் ஆரோனும் பலி செலுத்தினபோது, அக்கினி இறங்கி, பலியைப் பட்சித்தது *(லேவி. 9:24)*.

அதன்பின் பிரயாணத்தினிமித்தம் ஜனங்கள் முறையிட்ட போது கர்த்தருடைய அக்கினி, சிலரைப் பட்சித்தது. மோசே விண்ணப்பம் பண்ணினான். அக்கினி அவிந்தது. அந்த இடத்துக்குத் தபேரா என்று மோசே பேரிட்டான் *(எண். 11:1-3)*.

ஜனங்கள் ஆஸ்ரோத்துக்கு வந்திருக்கையில் ஆரோனும் மிரியாமும் மோசேக்கு விரோதமாய் பேசினதினிமித்தம், மிரியாம் குஷ்டரோகியானாள். மோசே கர்த்தரை நோக்கிக் கெஞ்சியபோது, அவளுக்குச் சுகம் கிடைத்தது *(எண். 12:13-15)*.

மோசே கானானைச் சுற்றிப் பார்க்கும்படி பன்னிருவரைத் தெரிந்து அனுப்பினான். அவர்கள் திரும்பி வந்து "தேசம் நல்லதுதான் ஆனால் ஜனங்கள் பலவான்கள், பட்டணங்கள் அரணிப்பானவை" என்றார்கள். யோசுவாவும், காலேபும் அப்படியல்ல, "நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம் என்று சொல்லி, ஜனங்களைத் தேற்றினார்கள் (எண்.

13:17-30). ஆகிலும் சபையாரெல்லாரும் அழுது புலம்பி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் முறுமுறுத்து, எகிப்துக்குத் திரும்பிப்போக வேண்டுமென்றார்கள். அதினிமித்தம் கர்த்தர் ஜனங்களைச் சுதந்தரத்துக்குப் புறம்பாக்குவேன் என்று மோசேக்குச் சொல்லவே, அவன் அவர்களுக்காகப் பரிந்து பேசினான். அப்பொழுது முறுமுறுத்த ஜனங்களின் சந்ததியார், மரித்துப் போகும்வரை, நாற்பது வருடம் வனாந்தரத்தில் அலைந்து திரிவார்களென்று கர்த்தர் சொன்னார் (எண். 14:20-35).

இதன்பின் கோராகு, தாத்தான், அபிராம், ஓன் என்பவர்கள் கூட மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் பேசினார்கள். இதினிமித்தம் பூமி வாயைத் திறந்து கோராகையும் அவனைச் சேர்ந்தவர்களையும் விழுங்கிப்போட்டது. அக்கினி இறங்கி இன்னும் 250 பேரையும் பட்சித்தது (எண். 16:1-35). இதினிமித்தம் ஜனங்கள் எல்லாரும் கூட்டம் கூடி, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாய் எழும்பின போது கர்த்தருக்குக் கோபம் மூண்டதினால் வாதை தொடங்கிற்று. அநேக ஜனங்கள் இறந்தார்கள் (எண். 16:41-50).

இஸ்ரவேல் பிரயாணம்பண்ணி திரும்பவும் காதேசில் தங்கின காலத்தில், மிரியாம் மரித்தாள். அங்கே தண்ணீர் இல்லாதிருந்ததினால், ஜனங்கள் மோசேயோடு வாக்குவாதம் பண்ணினார்கள். கர்த்தர் மோசேயை நோக்கி, “நீ கோலை எடுத்துக் கொண்டு கன்மலையைப் பார்த்து பேசு” என்றார். மோசே தன் சுயசக்தியால் தண்ணீர் வரச் செய்வதுபோல மலையைக் கோலால் அடித்தான். இதினிமித்தம் மோசேக்கும் ஆரோனுக்கும் வாக்குத் தத்தம் பண்ணின தேசத்துக்குப் போக தருணம் கிடைக்கவில்லை (எண். 20:1-12). நடந்த வாக்குவாதத்தினிமித்தம் அது மேரிபாவின் தண்ணீர் எனப்பட்டது (எண். 20:13).

ஜனங்கள் ஏதோம் தேசத்தைச் சுற்றிப் போக வேண்டியிருந்ததினிமித்தம் மனமடிவடைந்து முறுமுறுத்ததினால் கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். அநேக ஜனங்கள் இறந்தார்கள். மோசே கர்த்தர் சொற்படி ஒரு வெண்கலச் சர்ப்பத்தை உண்டாக்கி, ஒரு கம்பத்தில் தூக்கி வைத்தான். அதைப் பார்த்தவர்கள் பிழைத்தார்கள் (எண். 21:4-9).

ஜனங்கள் பிரயாணம் பண்ணி யோர்தான் கரைக்கு வந்தபோது, கர்த்தர் மோசேயோடு பேசி, யோசுவாவைத் தெரிந்து, அவனை இஸ்ரவேல் ஜனத்துக்கு அதிபதியாக ஏற்படுத்தும்படி சொன்னார் (எண். 27:15-23). பின்பு மீதியானியரிடம் யுத்தம் செய்யும்படி கர்த்தர் சொன்னார். அந்தப்படியே, அவர்களில் புருஷர் யாவரையும், இராஜாக்கள் ஐந்து பேரையும் அதோடு பிலேயாமையும் கொன்று

போட்டு மீதியானியருடைய பொன்னாபரணங்களை வாங்கி ஜனங்கள் ஆசரிப்புக் கூடாரத்தில் வைத்தார்கள் (எண். அதி. 31).

ரூபன், காத், மனாசேயின் பாதிக் கோத்திரங்களுக்கு யோர்தானின் இக்கரையில் தேசம் கொடுக்கப்பட்டது (எண். அதி. 32).

**மோசேயின் கடைசிச் செயல்கள் :**

நாற்பதாம் வருடம், பதினோராம் மாதம், முதலாம் தேதியில், மோசே ஜனங்களெல்லாரையும் கூடி வரச் செய்து, கர்த்தர் விதித்த யாவற்றையும் அவர்களுக்கு அறிவித்தான் (உபா. 1:30).

பின்பு மோசே யோசுவாவை அழைத்து, ஜனங்களை வழி நடத்தி கர்த்தர் ஆணையிட்ட தேசத்துக்கு அழைத்து கொண்டு போகும்படி, அவனைத் திடப்படுத்தினான் (உபா. 31:1-8).

தேவனுடைய நியாயப்பிரமாணத்தை எழுதி அதை உடன்படிக்கைப் பெட்டி அண்டையில் வைக்கும்படி, மோசே லேவியருக்குக் கொடுத்தான் (உபா. 31:26). கடைசியாய் ஜனங்களுக்கு எச்சரிப்பாக இறுதி வார்த்தைகளையும் சொல்லிய பின் எல்லாரையும் ஆசீர்வதித்தான் (உபா. 30:1-69).

பின்பு மோசே பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி, கானான் தேசத்தைப் பார்த்தபின், கர்த்தரின் சொற்படி மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் (உபா. 34:1-5). ஒருவனும் அவன் பிரேதக் குழியை அறியான். அவனுடைய வயது (120) நூற்றிருபது வருடம் (உபா. 34:6-7).

மோசே கிறிஸ்துவுக்கு முன்னடையாளமானவன். "உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல், ஒரு தீர்க்கதரிசியை உனக்காக, உன் நடுவே, உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார். அவருக்குச் செவி கொடுப்பீர்களாக" (உபா. 18:15).

கிறிஸ்து பரலோகம் போன பின், அவரே மோசே சொன்ன தீர்க்கதரிசியென பேதுருவும், ஸ்தேவானும் எடுத்துக் காட்டி யிருக்கிறார்கள் (அப். 3:22; 7:37).

இயேசு மறுரூபமானபோது, மோசேயும் எலியாவும் அவரோடு பேசுகிறவர்களாகக் காணப்பட்டார்கள் (மத். 17:3, மாற்கு 9:4, லூக்கா. 9:30).

பழைய ஏற்பாட்டில் இயேசுவைப் பற்றிய அநேக சம்பவங்களின் நிறைவேறுதல் புதிய ஏற்பாட்டில் குறித்துள்ளன (யோவான். 3:10; ரோமர். 5:14; யூதா. 9; வெளி. 15:3; எபி. 3:2).

மோசே மனுஷருக்குள் அதிக விசேஷித்தவனும், இஸ்ரவேலுக்குள் சிறந்தவனும், பிரமாணிகனும், தீர்க்கதரிசியும், பூமியிலே சாந்த குணமுள்ளவனும், பலவானுமாயிருந்தான்.

மோசேயின் சாந்த குணத்தைக் குறித்து தேவன் தாமே சாட்சிக் கொடுத்தார் *(எண். 12:3).*

## மோரியா (Moriah)

***(கர்த்தர் பார்த்துக் கொள்வார்)***

ஆபிரகாம் தன் ஏகசுதனாகிய ஈசாக்கைக் கொண்டு போய் பலியிடும்படி தேவன் சொன்ன இடம் *(ஆதி. 22:2).* இதுவே எருசலேமிலுள்ள மோரியாமலை எனப்படுகிறது. இங்கே தாவீது பலி செலுத்தின எபூசியனான அர்னாவின் களம் இருந்தது *(2 சாமு. 24:18).* பின்பு இவ்விடத்திலேயே சாலொமோன் ஆலயத்தைக் கட்டினான் *(2 நாளா. 3:1).*

இது இஸ்ரவேலின் வணக்கத்துக்குரிய மத்திய ஸ்தானமாயிற்று.

## மோரே (Moreh)

***(போதகன்)***

ஆபிரகாம் கானான் தேசத்துக்குப் போய் சீகேமுக்குச் சமீபமான மோரே என்னும் சமபூமியில் ஒரு பலிபீடத்தைக் கட்டினான் *(ஆதி. 12:6,7).*

கெர்சீம், ஏபால் மலைகள், கில்காலுக்கெதிரான மோரே சமபூமியினருகே இருக்கிறது *(உபா. 11:30).*

பேர் பெற்ற கர்வாலி மரங்கள் இங்கே இருந்ததாகத் தெரிகிறது *(ஆதி. 35:4; யோசுவா. 24:24, நியா. 9:6).*

மோரேமேடு கலிலேயாக் கடலிலிருந்துப் பத்து மைல் தூரத்திலுள்ளது. மீதியானியர், கிதியோனோடு யுத்தஞ் செய்த தருணத்தில் இங்கே பாளயமிறங்கினார்கள் *(நியா. 7:1).*

## மோவாப், மோவாபியர் (Moab, Moabites)

***(தகப்பனின் தண்ணீர்)***

மோவாப், லோத்து என்பவனின் மகன். அவனுடைய சந்ததியார் மோவாபியர். அவர்களுடைய தேசம் மோவாப். அது சவக்கடலுக்கருகேயுள்ள மேடான தேசம்.

இஸ்ரவேலர், பிரயாணமாய் இந்தத் தேசத்துக்கு வந்த போது, அவர்களோடு யுத்தம் செய்யவில்லை *(உபா. 2:9; நியா. 11:15).*

அர்னோனுக்கு வடக்கே இருந்த, மோவாபியரின் தேசத்தைச் சீகோன் பிடித்திருந்தான். இஸ்ரவேலர் சீகோனைத் தோற்கடித்து

அந்தத் தேசத்தை மோசே, ரூபன் கோத்திரத்தாருக்குக் கொடுத்தான் *(எண். 21:21-26; உபா. 2:24; யோசுவா. 13:15-21).*

மோவாபியரும் அம்மோனியரும், இஸ்ரவேல் மேல் இருந்த விரோதத்தினிமித்தம், ஒன்று கூடி, அவர்களைச் சபிக்கும்படி, பிலேயாமை அழைப்பித்தார்கள். இதினிமித்தம் அம்மோனியனும் மோவாபியனும் பத்தாம் தலைமுறை மட்டும் கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாதென்று கர்த்தர் சொன்னார் *(உபா. 23:3-6; நெகே. 13:1).*

பின்பு நியாயாதிபதிகளின் நாள்களில் மோவாபிய இராஜாவாகிய எக்லோன் இஸ்ரவேலரைப் பதினெட்டு வருடக்காலம் ஒடுக்கினான். பென்யமீன் கோத்திரத்தா னாகிய ஏகூத் எழும்பி, அந்த இராஜாவையும் ஜனங்களையும் கொன்று அவர்களைத் தாழ்த்தினான் *(நியா. 3:12-30).*

பெத்லகேம் ஊரானாகிய எலிமெலேக்கின் மருமகளான மோவாபிய ஸ்திரீயாகிய ரூத் என்பவளைப் போவாஸ் விவாகஞ் செய்து, அவள் சந்ததியில் தாவீது பிறந்தான் *(ரூத் 4:18-22).* இயேசுவும் அவளுடைய வம்சத்தில் பிறந்தார்.

சவுல் மோவாபியரோடு யுத்தம் செய்தான். தாவீது அவர்களைத் தோற்கடித்து கப்பங்கட்டச் செய்தான் *(2 சாமு. 8:2).* சாலொமோன் மோவாபிய ஸ்திரீகளை விவாகஞ்செய்து அவர்களுடைய தெய்வமாகிய கேமோசுக்கு ஆலயம் கட்டிக் கொடுத்தான் *(1 இரா. 11:1,7).*

இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாப் மரித்தபின், மோவாபியர் சுயாதீனம் பெற்றார்கள். யோராமும், யோசபாத்தும் கூடி அவர்களுக்கு எதிராகப் போய், மோவாபியரைத் தோற்கடித்தார்கள் *(2 இரா. 8:4-27).*

மோவாபியரும் அம்மோனியரும் ஒன்று கூடி யோசபாத்துக்கு விரோதமாய்ப் போன வேளையில் கர்த்தருடைய உதவியினால் அவர்களுக்குள்ளேயே குழப்பம் உண்டாகி ஒருவரையொருவர் வெட்டிக் கொன்றதினிமித்தம், யூதாவுக்கு ஜெயம் கிடைத்தது *(2 நாளா. 20:1-30).*

யோயாக்கீமின் நாள்களில் கர்த்தர் மோவாபியரையும் வேறே ஜாதியாரையும் யூதர்மேல் வரவிட்டார் *(2 இரா. 20:3).*

மோவாபுக்கு விரோதமாக அநேக தீர்க்கதரிசனங்கள் உரைக்கப் பட்டுள்ளது *(ஏசாயா. 15:16; எரே. 48; எசே. 25:8-11; ஆமோஸ் 2:1-3; செப். 2:8-11).*

தாவீது சவுலுக்குத் தப்பி ஓடித்திரிந்த நாள்களில், மோவாபிய இராஜாவிடம் போய் தனது பெற்றோருக்கு ஒதுக்கிடம் பெற்றான் *(1 சாமு. 22:3,4).*

மோசே மோவாப் தேசத்தில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் *(உபா. 34:5,6).*

கி.மு. 587இல் எருசலேம் பிடிக்கப்பட்டபின், சில யூதர் மோவாபுக்குப் போய் தங்கியிருந்து கெதலியா அதிகாரம் பெற்ற போது, திரும்பி வந்தார்கள் (எரே. 40:11).

நேபுகாத்நேச்சார் மோவாபைக் கீழ்ப்படுத்தினதோடு அவர்கள் சுயாதீனமும் முடிந்தது.

## மோளேகு (Molech)

### (ஆலோசனைக்காரன்)

மோளேகு, மில்கோம் என்னும் பல பெயர்களுள்ள ஒரு தெய்வம், அம்மோனியரின் அருவருப்பு என்றும் சொல்லியுள்ளது (1 இரா. 11:5-7). இந்த தெய்வத்தை வணங்குவதற்காகப் பிள்ளைகளைத் தீக்கடக்கப் பண்ணினார்கள். இதைச் செய்யக்கூடாதென்றும் அப்படிச் செய்பவர்கள் கல்லெறியப்பட வேண்டுமென்றும் இஸ்ரவேலருக்குள் கட்டளையிருந்தது (லேவி. 20:2; 18:21).

சாலொமோன் எருசலேமில் மோளேகுக்கு மேடைகளைக் கட்டினான் (1 இரா. 11:7). ஆகாஸ், மனாசே என்னும் இராஜாக்கள் தங்கள் குமாரரை பலியாகக் கொடுத்தார்கள் (2 இரா. 21:6,2 நாளா. 28:3).

யூதா இராஜாவாகிய யோசியா மோளேக்கின் மேடைகளைத் தகர்த்தான் (2 இரா. 23:12).

எரேமியா, எசேக்கியேல் ஆகியோர் இந்த வணக்கத்தைக் கண்டித்தார்கள் (எரே. 32:35; எசே. 16:20).

## யந்நே - யம்பிரே

யந்நேயும் யம்பிரேயும் எகிப்திலிருந்த மந்திரவாதிகள். மோசே பார்வோனுக்கு முன் செய்த அற்புதங்கள் நம்பக் கூடாதவை என்று காட்ட எத்தனித்தவர்கள் (யாத். 7:11).

பிற்காலங்களில் சபைகளில் துர்ப் போதனை செய்தவர்களைப் பவுல் மேற்சொல்லப்பட்ட மாய வித்தைக்காரருக்கு ஒப்பிடுகிறான் (2 தீமோ. 3:8).

## யவீரு (Jairus)

இவன் ஒரு ஜெப ஆலயத் தலைவன். இயேசு கப்பர்நகூமுக்கு வந்தபோது, இவன் அவரிடம் வந்து, தன் குமாரத்தி மரண அவஸ்தைப்படுகிறாளென்று சொல்லி, அவளைக் குணப்படுத்தும்படி வேண்டிக் கொண்டான்.

அவர் போய் வீட்டுக்குள் பிரவேசித்து, 'சிறு பெண்ணே, எழுந்திரு' என்று சொன்னவுடனே. அவள் எழுந்திருந்து நடந்தாள் (மாற்கு. *5:22-24; 35-42;* லூக்கா. *8:41,42; 49-55*).

## யாகேல் (Jael)

***(மலையாடு)***

கேனியனான ஏபேரின் மனைவி. யாபீன் என்னும் இராஜாவின் சேனாதிபதியாகிய பசிசெரா, பாராக் என்பவனால் தோற்கடிக்கப்பட்டபோது, கால் நடையாய் யாகேலின் கூடாரத்துக்கு ஓடிப்போனான். அவள் அவனை ஏற்றுக் கொண்டு, குடிக்க பால் கொடுத்தபின், அவன் ஆயாசமாய்த் தூங்கின வேளையில் ஓர் ஆணியை அவன் நெற்றியிலே அடித்துக் கொன்று போட்டாள் (நியா. *4:17-21*).

இதன்பின் இருபது வருடம் கானாகிய இராஜாவால் ஒடுக்கப்பட்ட இஸ்ரவேலர் விடுதலை பெற்றார்கள்.

யாகேலின் செய்கை, தெபொராள் பாடின பாட்டில் புகழப்பட்டுள்ளது (நியா. *5:24-27*).

## யாக்கோபு (Jacob)

***கி.மு. 1837-1689***

***(தட்டி வீழ்த்துவோன்)***

இவன் இஸ்ரவேலின் ஒரு கோத்திரத் தலைவன். கி.மு. 18ஆம் நூற்றாண்டில் ஜீவித்தவன். ஈசாக்கு, ரெபெக்காள் என்பவர்களின் மகன் ஏசாவும் இவனும் இரட்டைப் பிள்ளைகள். இவன் பிறக்கும் போது தன் சகோதரனின் குதிங்காலைப் பிடித்துக் கொண்டு வெளிப்பட்டதினிமித்தம், "மோசம் போக்குகிறவன்" என்று அர்த்தம் கொள்ளும் பெயர் பெற்றான் (ஆதி. *25:19-36,* ஓசியா. *12:3*).

ஏசா முதற் பிறந்தவனானதால் ஆஸ்திகளில் சேஷ்ட புத்திர பாகம் பெறவும், தகப்பனுக்குப் பின் குடும்பத்துக்குத் தலைவனாகவும் அவனுக்கு உரிமையிருந்தது. இதினிமித்தம், யாக்கோபு தன் தமையன் ஒரு முறை பசியாயிருக்கையில், தான் சமைத்த கூழில் கொஞ்சம் கொடுத்து சேஷ்ட புத்திர பாகத்தைப் பெற்றுக் கொண்டான் (ஆதி. *25:29-34*).

பின்பு ஈசாக்கு, ஏசாவை ஆசீர்வதிக்கும் நோக்கமாய், அவனிடம் ருசியுள்ள சாப்பாடு கேட்டபொழுது, இதைக்கேட்டுக் கொண்டிருந்த தாய் யாக்கோபை அனுப்பி அந்த ஆசீர்வாதத்தைப் பெறும்படி செய்தாள். இதினிமித்தம் ஏசா அவனைக் கொன்று போட யோசித்தான். அத்துடன் ஏசா ஏத்தின் குமாரத்திகளை விவாகம் செய்தது

பெற்றோருக்கு வெறுப்பாய் இருந்ததினிமித்தம் யாக்கோபு பெண் கொள்ளும்படி, பதான் அராமிலிருந்த லாபான் வீட்டிற்கு அனுப்பப்பட்டான் *(ஆதி. 27:42, 28:5)*.

யாக்கோபு புறப்பட்டுப் போய், அன்று இராத்திரியிலே ஒரு இடத்தில் நித்திரை செய்தபோது, வானத்தை எட்டும் ஏணியில் கர்த்தர் அவனுக்குத் தரிசனமானார். காலையில் எழுந்து தன் தலையின் கீழ் வைத்த கல்லைத் தூணாக நிறுத்தி அந்த ஸ்தலத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான் *(ஆதி. 28:12-19)*.

பின்பு பிரயாணம்பண்ணி, ஆராமுக்கு வந்து, ஒரு கிணற்றண்டையில் தன் மாமனின் மகளாகிய ராகேலைச் சந்தித்து, லாபான் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்தான் *(ஆதி. 29:1-14)*.

அங்கே ராகேலை விவாகம் செய்யும் நோக்கத்தோடு, மாமனுக்கு ஏழு வருடம் ஊழியம் செய்ய உறுதிக் கொண்டான். நாள்கள் நிறைவேறின பின், லாபான் விருந்து செய்து, வஞ்சகமாக தன் மூத்த மகளாகிய லேயாளை அவனுக்குக் கொடுத்தான். ஆனாலும் யாக்கோபு இன்னும் ஏழு வருடம் ஊழியம் செய்து ராகேலையும் விவாகம் பண்ணினான் *(ஆதி. 29:15-30)*.

லேயாளுக்கு நான்கு குமாரர் பிறந்தார்கள். ராகேல் மலடியாயிருந்ததினால், தானும் பிள்ளைகளை வளர்க்கும் நோக்கமாய், தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள். அவள் இரண்டு பிள்ளைகளைப் பெற்ற பின், ராகேலுக்கு ஒரு பிள்ளை கிடைத்தது *(ஆதி. 3:5-7; 30:24)*.

இவ்விதமாய் 14 வருடம் சென்ற பின், யாக்கோபு தன் தேசத்துக்குத் திரும்பிப் போக எண்ணினபோது லாபான் தன் சுய நலத்தை விரும்பி அவனோடு புதிய பொருத்தனை செய்ததினிமித்தம், இன்னும் 6 வருடம் ஊழியம் செய்தான். தேவன் யாக்கோபை ஆசீர்வதித்ததினால், அவன் மிகவும் விருத்தியடைந்தான் *(ஆதி. 30:27-43)*.

பின்பு, தேவன், யாக்கோபுக்குத் தரிசனமாகி, அவனைத் தன் தேசத்துக்குத் திரும்பிப் போகும்படி சொன்னார் *(ஆதி. 31:3)*. அவன் அந்தப்படி தனக்குள்ள எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு மனைவிமாரோடும் பிள்ளைகளோடும், லாபானுக்குத் தெரியாமல் புறப்பட்டுப்போனான். ராகேல் தன் தகப்பனின் சுரூபங்களைத் திருடிக் கொண்டாள் *(ஆதி. 31:19-21)*.

மூன்றாம் நாள் லாபான் இதைக் கேள்விப்பட்டு, யாக்கோபைத் தொடர்ந்து போய், ஏழாம் நாளில் கிலேயாத் மலையில் அவனைக் கண்டுபிடித்தான். அவர்கள் ஒருவன்மேலொருவன் குற்றம்

சாட்டினபின், தன் தெய்வங்களை எடுத்துக் கொண்டு வந்தது ஏன் என்று லாபான் கேட்டான். லாபான் கூடாரங்கள் எல்லாம் தேடிப் பார்த்தும் அவைகளைக் கண்டு பிடிக்கவில்லை *(ஆதி. 31:35).*

பின்பு இரு பகுதியாரும் உடன்படிக்கைப்பண்ணி, ஒரு கல் தூணை நிறுத்தி, எல்லாரும் விருந்து சாப்பிட்டபின் சமாதான ஆணையிட்டுக் கொண்டார்கள். அந்த இடத்துக்கு 'கலயெத்' என்றும், 'மிஸ்பா' என்றும் பெயர் கொடுக்கப்பட்டது *(ஆதி. 31:33-53).* மறுநாள் லாபான் தன் குமாரர், குமாரத்திகளை முத்தம் செய்து ஆசீர்வதித்தபின், தன் இடத்துக்குத் திரும்பிப் போனான் *(ஆதி. 31:55).*

யாக்கோபு, பிரயாணம்பண்ணுகையில் தேவதூதர்களைச் சந்தித்ததினிமித்தம் அந்த ஸ்தலத்திற்கு "மக்னாயீம்" என்று பேரிட்டான் *(ஆதி. 32:2).* பின்பு ஏசாவோடு ஒப்புரவாகும்படி ஆட்களை அனுப்பினான். ஏசா 400 பேருடன் தன்னிடம் வருகிறானென்று அறிந்தபோது, யாக்கோபு பயந்து தனக்குள்ளவைகளில் ஒரு பங்கை ஏசாவுக்கு வெகுமானமாக அனுப்பினபின், தன் மனைவி மக்களையும், பொருள் பண்டங்களையும், யாப்போக்கு ஆற்றுக்கு அக்கரைப்படுத்தி, அவன் பிந்தித் தனித்திருந்தான் *(ஆதி. 32:24).*

அன்று இராத்திரி ஒரு தூதன் அவனுக்குத் தரிசனமாகி அவனோடு போராடினபின், "நீ தேவனோடும் மனிதனோடும் போராடி மேற்கொண்டாயே" என்று சொல்லி உன் பேர் இனி இஸ்ரவேல் எனப்படும் என்றார் *(ஆதி. 32:25-28).* இந்தச் சம்பவம் ஓசியா 12:4ல் "அவன் தூதனானவரோடு போராடி, மேற்கொண்டான். அழுது அவரை நோக்கி கெஞ்சினான்" என்று குறித்திருக்கிறது.

பிற்பாடு ஏசா வந்து தன் சகோதரனைச் சந்தித்து இருவரும் ஒருவரையொருவர் முத்தமிட்டுச் சமாதானமானார்கள். ஏசா யாக்கோபைத் தன்னுடன் போகும்படி அழைத்தும், யாக்கோபு சாக்குப் போக்குச் சொல்லி நின்றுவிட்டான். ஏசா திரும்பி சேயீருக்குப் போனான் *(ஆதி. 33:1-16).*

யாக்கோபு பிரயாணம்பண்ணி சுக்கோத்துக்குப் போய் ஒரு வீடு கட்டி மிருக ஜீவன்களுக்கு கூடாரங்களையும் போட்டான் *(ஆதி. 33:17).*

பின்பு சீகேமுக்குப் போய் கூடாரம் போட்டு, அந்த நிலத்தை கிரயத்துக்கு வாங்கி, ஒரு பலிபீடம் கட்டி ஏல்எல்லோகே இஸ்ரவேல் என்று பேரிட்டான் *(ஆதி. 33:18-20).*

அவ்விடத்தில் அவனுடைய குமாரத்தி தீனாள் சீகேம் என்பவனால் தீட்டுப்படுத்தப்பட்டாள். இதினிமித்தம் அவளுடைய சகோதரர், சிமியோன், லேவி என்பவர்கள் பழிவாங்கி அந்த ஜனங்களைக் கொன்று பட்டணத்தையும் கொள்ளையடித்தார்கள் *(ஆதி. 34:1-31).*

தேவன் யாக்கோபை நோக்கி, பெத்தேலுக்குப் போய் பலி செலுத்தும்படிச் சொன்னார். அவனுடைய வீட்டார் தங்கள் அந்நிய தெய்வங்களை அகற்றி சுத்தம்பண்ணிக் கொண்டபின் புறப் பட்டார்கள் (ஆதி. 35:1-5).

யாக்கோபு பெத்தேல் என்னும் லூசுக்கு வந்து ஒரு பலிபீடம் கட்டி ஏல்பெத்தேல் என்று பேரிட்டான். அவ்விடத்தில் ரெபெக்காளின் தாதி தெபோராள் மரித்து அடக்கம் பண்ணப் பட்டாள் (ஆதி. 35:8).

பின்பு எப்பிராத்தாவுக்கு வந்தபொழுது ராகேல் பிரசவ வேதனைப்பட்டு பிள்ளைப் பேற்றில் மரித்தாள். பிள்ளைக்குப் பெனொனி என்று பேரிட்டாள். அவள் அடக்கம் பண்ணப்பட்ட இடத்தில் யாக்கோபு ஒரு தூணையும் நிறுத்தினான் (ஆதி. 35:18-20).

யாக்கோபு மம்ரேக்கு தன் தகப்பனிடம் வந்தான். ஈசாக்கு மரித்தபொழுது ஏசாவும் யாக்கோபும் அவனை அடக்கம் பண்ணினார்கள் (ஆதி. 35:29).

ஈசாக்கின் மரணத்தின்பின், யாக்கோபு கோத்திரத் தலைவனாய் எபிரோனில் சஞ்சரித்தான்.

யாக்கோபுக்குப் பன்னிரெண்டு குமாரர் இருந்தார்கள். ஆனாலும் தன் மகனாகிய யோசேப்பை, மற்றவர்களிலும் அதிகமாய் நேசித்தான். இதினிமித்தம் அவனுடைய சகோதரர் யோசேப்பைப் பகைத்தார்கள். யோசேப்பு கண்ட தரிசனங்களைக் கேட்டபோது, இன்னும் அதிகமாக அவனைப் பகைத்தார்கள் (ஆதி. 37:34).

இப்படியிருக்கையில் சீகேமில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த சகோதரரைப் போய்ப் பார்த்து வரும்படி யாக்கோபு, யோசேப்பை அனுப்பினான். அவன் அங்கே போன வேளையில், அவர்கள் அவனைப் பிடித்து, இஸ்மவேலருக்கு விற்றுப் போட்டார்கள். பின் அவனது அங்கியை இரத்தத்தில் தோய்த்து ஒரு துஷ்ட மிருகம் அவனைப் பட்சித்துப் போட்டது என்று தகப்பனுக்குச் சொல்லி அனுப்பினார்கள். யாக்கோபு புலம்பி அநேக நாள் துக்கித்துக் கொண்டிருந்தான் (ஆதி. 37:31-35). இதன்பின் தேசத்தில் பஞ்சம் உண்டானதினால், யாக்கோபு தன் குமாரரைத் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு அனுப்பினான் (ஆதி. 42:1-5).

அவர்கள் போய் வந்து, திரும்பவும் போக நேர்ந்தபோது, பென்யமீனையும் கூட்டிக் கொண்டு போனார்கள் (ஆதி. 43:11-15). அங்கே யோசேப்பு தான் யாரென்பதைத் தன் சகோதரருக்கு வெளிப்படுத்தி, திரும்பிப் போய் தன் தகப்பனையும், குடும்பத்தாரையும் அழைத்துக் கொண்டு வரும்படி சொன்னான்.

அதன்படியே யாக்கோபும் அவன் சந்ததியாரும் எகிப்துக்குப் போனார்கள். அங்கே யோசேப்பு அவனைச் சந்தித்து, அழுது, சந்தோஷங் கொண்டாடினார்கள். பின் அவன் தன் தகப்பனை அழைத்துக்கொண்டு பார்வோனிடம் போனபோது, யாக்கோபு பார்வோனை ஆசீர்வதித்தான் *(ஆதி. 47:7-10)*.

பார்வோனின் கட்டளைப்படி, யோசேப்பு தன் தகப்பனுக்கும் சகோதரருக்கும் எகிப்து தேசத்தில் நல்ல நாடாகிய ராமசேஸ் என்னும் நாட்டில் சுதந்தரம் கொடுத்து, குடியேற்றினான் *(ஆதி. 47:7-11)*.

யாக்கோபு மரணமடையுங் காலம் சமீபத்திருக்கையில் யோசேப்பை வரழைத்து, தான் மரித்தபின், மக்பேலா குகையில் தன்னை அடக்கம் பண்ணும்படி கேட்டுக் கொண்டான் *(ஆதி. 47:28-31)*.

யோசேப்பு தன் குமாரர் இருவரையும் கூட்டிக்கொண்டு யாக்கோபிடம் போன சமயத்தில் அவன் மூத்த மகனாகிய மனாசேயைக் காட்டிலும் இளைய மகனாகிய எப்பிராயீமை மேலோக்கி ஆசீர்வதித்தான் *(ஆதி. 48:12-20)*.

யாக்கோபு எகிப்து தேசத்தில் பதினேழு வருடம் இருந்து, நூற்று நாற்பத்தேழு வருடம் ஜீவித்து மரித்தான் *(ஆதி. 49:28-33)*. அவனை எபிரோனுக்குக் கொண்டுபோய் மக்பேலா குகையில் அடக்கம் பண்ணினார்கள் *(ஆதி. 50:13)*.

இஸ்ரவேல் என்று அவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர் அவனுடைய சந்ததியாருக்கு வழங்குகிறது.

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில், யாக்கோபின் பெயர் காணப்படுகிறது *(மத். 1:2; லூக்கா. 3:3,4)*.

இயேசு உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசினபோது, "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் என்று சொன்னார்" *(மத். 22:31, மாற்கு. 12:26, லூக்கா. 20:37)*.

"ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார்" என்று பேதுரு கூறினான் *(அப். 3:13)*.

ஸ்தேவான் யாக்கோபின் பெயரைப் பல தடவைகளில் சொல்லுகிறான் *(அப். 7:12, 14, 15, 38)*. "யாக்கோபின் தேவன்" என்றும் கூறுகிறான் *(அப். 7:46)*.

தேவனுடைய தெரிந்து கொள்ளுதலைப்பற்றிப் பவுல் பேசின போது, யாக்கோபை உதாரணமாகக் காட்டுகிறான் *(ரோமர். 9:13)*. "மீட்கிறவர்

வந்து யாக்கோபின் அவபக்தியை விலக்குவார்" (ரோமர். 11:26) என்பதில் அவனுடைய பெயர், இஸ்ரவேல் ஜாதிக்காக உபயோகிக்கப்பட்டது.

யாக்கோபு விசுவாசத்தில் நற்சாட்சி பெற்றவர்களில் ஒருவன் (எபி. 11:9,20).

யாக்கோபின் கிணற்றைப் பற்றி யோவான் 4ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

யாக்கோபு : இவன் மரியாளின் புருஷனாகிய யோசேப்பின் தகப்பன் (மத். 1:15,16).

யாக்கோபு : இப்பெயர் இஸ்ரவேல் ஜனங்களுக்கும் உபயோகிக்கப்பட்டுள்ளது (ஏசாயா. 10:21; 14:1; எரே. 10:16).

யாக்கோபு : ஆங்கிலத்தில் "ஜேம்ஸ்". இவன் செபதேயுவின் மகன். யோவானின் சகோதரன். இவனுடைய தாயாகிய சலோமே, இயேசுவின் தாயாகிய மரியாளின் சகோதரி. யாக்கோபும், யோவானும் தங்கள் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கையில், இயேசு அவர்களை அழைத்தார் (மத். 4:21; மாற்கு. 1:19). அப்போஸ்தலருடைய பெயர் வரிசையில் இவனுடைய பெயருக்கு அடுத்ததாக யோவானின் பெயர் குறித்துள்ளது (மத். 10:2; மாற்கு. 3:17; லூக்கா. 6:14). இயேசு இவர்களிருவருக்கும் "பொவனெர்கேஸ்" என்று பெயரிட்டார் (மாற்கு. 3:17). இவர்களுடைய மூர்க்கக் குணத்தினிமித்தம் அப்படிச் சொன்னார் (லூக்கா. 4:54). பேதுருவும் இவர்களிருவரும் இயேசுவுடன் முக்கிய ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள் (மத். 17:1; 26:37).

யாக்கோபு, யூதேயா இராஜாவாகிய ஏரோது அகிரிப்பா என்பவனால் கொல்லப்பட்டான் (கி.பி. 41-44 அப். 12:2).

யாக்கோபு : அல்பேயுவின் குமாரன். அப்போஸ்தலரில் ஒருவன் (மத். 10:3,4; மாற்கு. 3:18,19; லூக்கா. 6:15,16; அப். 1:13). இவன் "சின்ன யாக்கோபு" என்றும் அழைக்கப்பட்டான். மத்தேயுவும் அல்பேயுவின் குமாரனென்று சொல்லியிருக்கிறபடியால், இவன் அவனுடைய சகோதரனாயிருக்கலாம் (மாற்கு 2:14). இந்த அல்பேயு யோவான் 19:25இல் குறித்துள்ள கிலெயோப்பாவாயிருந்தால், இவன் யோசேயின் சகோதரன், சிலுவையில் இயேசு அறையுண்டதைப் பார்த்திருந்த மரியாளின் மகன் (மாற்கு. 15:40).

இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு. இவன் இயேசுவை முதலில் ஏற்றுக்கொள்ளவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பின்பே

விசுவாசியானான். அவர் இவனுக்குத் தரிசனமானார் *(1 கொரி. 15:7)*. பின்பு எருசலேம் சபைக்குத் தலைவனானான் *(அப். 21:17; கலா. 1:19)*. நீதியுள்ள யாக்கோபு (James the Just) எனப் பெயர் பெற்றான்.

யாக்கோபின் நிருபத்தை இவன் எருசலேமில் *(கி.பி. 44-50)* எழுதினான் *(யாக். 1:1)*. புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் இதுவே முதலானது.

கடைசியில் எருசலேமில் ஒருகொடுமுடியிலிருந்து கீழே தள்ளினபின் கோலால் அடித்துக் கொல்லப்பட்டானென்ற பாரம்பரியமுண்டு. "யாக்கோபு" என்ற பெயருள்ள ஆறு ஆள்களைப்பற்றிச் சொல்லியிருந்தும் திட்டமாய்ப் பார்த்தால் மூன்று பேர் மாத்திரம் இருந்ததாகத் தெரிகிறது. 1. செபதேயுவின் குமாரன், 2. அல்பேயுவின் குமாரன், 3. ஆண்டவரின் சகோதரன்.

## யாபேத் (Japheth)

### *(பெருகுகிறவன்)*

நோவாவின் மூன்று குமாரர் சேம், காம், யாபேத் என்பவர்கள். இவர்களிலிருந்து மனுஷர் பூமியின் மேல் பெருகத் துவங்கினார்கள் *(ஆதி. 5:32; 6:10; 10:1)*.

யாப்பேத்தின் குமாரனாகிய மாதாயிலிருந்து அசீரியா தேசத்து மேதியரும், யாவான் என்பவனிலிருந்து கிரேக்கரும், யாவானின் குமாரனாகிய தர்ஷீசிலிருந்து ஸ்பானிய தேசத்தாரும் உற்பத்தியானார்களென்று சொல்லப்படுகிறது.

நோவா வெறி தெளிந்து விழித்தபோது, "யாப்பேத்தை தேவன் விருத்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான். கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான்" என்றான் *(ஆதி. 9:27)*.

## யாப்போக்கு (Jabbok)

### *(பாய்கிற)*

பலஸ்தீனாவில் கிழக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஆறு. யாக்கோபு பதான் அராமிலிருந்து பிரயாணம்பண்ணிப் போகையில், இந்த ஆற்றங்கரையில் ஒரு தேவ தூதனோடு போராடினான் *(ஆதி. 32:22)*.

இந்த ஆறு அம்மோனியரின் தேசத்து வடக்கு எல்லை. இது 60 மைல் நீளமுள்ளது. யோர்தான் ஆற்றுக்குள் பாய்கிறது *(உபா. 3:16)*.

இஸ்ரவேலர் தங்கள் பிரயாணத்தில் சீகோனோடு யுத்தம் பண்ணி அவனைத் தோற்கடித்த பின் யாப்போக்கு வரைக்குமுள்ள அவன் தேசத்தைக் கட்டிக் கொண்டார்கள் *(எண். 21:24)*.

## யாவிர் (Jair)
**(ஒளியிடுவோன்)**

மனாசே கோத்திரத்தான். இவன் வேறே ஆட்களைச் சேர்த்துக் கொண்டு, கிலியாத்தைச் கைப்பற்றிக்கொண்டு, மற்றப் பட்டணங் களையும் சேர்த்துக் கொண்டான். அவைகள் யாயீரிபடிகள் என்று பேர் வழங்குகிறது.

இவன் 22 வருடம் இஸ்ரவேலின் நியாயாதிபதியாக இருந்தான். அவனுக்கு 31 குமாரரும், 30 ஊர்களும் இருந்தன.

யாவீர் மரித்து காமோனில் அடக்கம் பண்ணப்பட்டான் (நியா. 10:3-5).

## யுஸ்து (Justus)

1. யுஸ்து : இது "யோசேப்பு பர்சபா" என்னப்பட்டவனின் மறு நாமம் (அப். 1:23).

2. கொரிந்து பட்டணத்திலிருந்த ஒரு விசுவாசி. இவனுடைய வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத்த தாயிருந்தது. பவுல் இவனுடைய வீட்டிலிருந்து சுவிசேஷத்தைக் கூறினான் (அப். 18:7).

3. பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில், யுஸ்து எனப்பட்ட இயேசுவைப்பற்றிச் சொல்லுகிறான் (கொலோ. 4:11).

## யூதன் (Jew)

யூதேய தேசத்தான், தொடக்கத்தில் யூதன் எனப்பட்டான். பின்பு யாக்கோபின் சந்ததியாரெல்லாருக்கும் அந்தப் பெயர் வழங்கிற்று. ஆனாலும் கி.மு. 538இல் கோரேஸ் சிறையிருப்பிலிருந்த இஸ்ரவேலரைத் திரும்ப பலஸ்தீனாவுக்குப் போக உத்தரவு கொடுத்த பின்னரே, அந்தப் பெயர் அவர்களுக்குக் குறிப்பாய்க் கொடுக்கப்பட்டது.

வேதாகம "ஐக்கிய திருப்புதலில்" முதன்முதல் இப்பெயர் 2 இரா. 16:6இல் காணப்படுகிறது, மேலும் யூத மார்க்கத்தைத் தழுவினவர்களுக்கும் இப்பெயர் கொடுக்கப்பட்டது.

யூத பாஷை, யூத இராஜா, யூத ஸ்திரீ எனப் பண்புச் சொல்லாகவும் பாவிக்கப்படுகிறது (2 இரா. 18:26; நெகே. 13:24; ஏசாயா. 36:11; அப். 6:1).

## யூதா (Judah)
**(புகழ்ச்சி)**

1. யாக்கோபு லேயாள் என்பவர்களின் நான்காம் மகன். இஸ்ரவேல் எனப்பட்டவனுடைய பன்னிரு குமாரரில் ஒருவன். யூதா

கோத்திரத்தின் முன்னோன் (ஆதி. 29:25, 35:23). யாக்கோபு தன் கடைசி வார்த்தைகளில் யூதாவை மேலாக்கி, "சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவைவிட்டு நீங்குவதும் இல்லை. நியாயப் பிரமாணிகன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதும் இல்லை" என்று சொன்னான் (ஆதி. 49:8-12).

யோசேப்பைக் கொன்று போடும்படி அவனுடைய சகோதரர் யோசனை செய்த போது, யூதா தலையிட்டு, அவனை மீதியானியருக்கு விற்கும்படி செய்தான் (ஆதி. 37:26).

யூதா அதுல்லாம் ஊரானாகிய ஒரு கானானியனுடைய குமாரத்தியை விவாகம் பண்ணினான் (ஆதி. 38:2).

யூதா தாமார் என்பவளால் அனுப்பப்பட்டதைப் பற்றி ஆதி. 38:13-26இல் பார்க்கலாம்.

யாக்கோபின் குமாரர் எகிப்துக்குப் போன வேளையில், யூதா யோசேப்பிடம் பென்யமீனுக்காக வாதாடினான் (ஆதி. 44:14-34).

யூதா நான்காம் மகனாயிருந்தும் சிரேஷ்டபுத்திர உரிமையும் தலைமையும் அவனுக்குக் கிடைத்தது. மூத்த மகனாகிய ரூபன் தப்பிதம் செய்தான் (ஆதி. 35:22).

அடுத்து சிமியோனும், லேவியும் சீகேமில் ஜனங்களைக் கொன்றார்கள் (ஆதி. 34)

ஆகிலும் யாக்கோபு இவனை ஆசீர்வதித்த வேளையில் 'இராஜரீகம்' அவன் சந்ததியாருக்கு வருமென்று சொல்லப்படவில்லை (ஆதி. 49:8-12).

2. ஒரு லேவியன் (எஸ்றா 1:9).

3. அந்நிய ஸ்திரீயை விவாகம்பண்ணின லேவியன் (எஸ்றா. 10:23).

4. பென்யமீன் கோத்திரத்தில் எருசலேமில் விசாரிப்புக்காரனாயிருந்த யூதா (நெகே. 11:9).

5. எருசலேம் மதிலைக் கட்டினவர்களிலொருவனுடைய மகன் (நெகே. 12:36).

6. செருபாபேலுடன் எருசலேமுக்கு வந்த ஒரு லேவியன் (நெகே. 12:8).

7. யூதா யோசேப்பின் குமாரன் (லூக்கா. 3:30).

8. இயேசுவின் சீஷரில் ஒருவன் (யோவான் 14:22).

9. தமஸ்குவில் நேர்த்தெருவிலிருந்தவன். பவுல் இவன் வீட்டில் தங்கினான் (அப். 9:11).

10. பர்சபா என மறுபெயருள்ள யூதா. இவன் எருசலேம் சபையில் ஒரு தலைவன். பவுலோடும் பர்னபாவோடும் அந்தியோகியாவுக்குப் போகும்படி இவனும் சீலாவும் தெரிந்து கொள்ளப்பட்டார்கள் (அப். 15:22-33).

11. கன்னி மரியாளின் குமாரன் (மத். 13:55; மாற்கு. 6:3). இயேசுவின் நாலு சகோதரரிலொருவன். இவர்கள் இயேசுவை மேசியாவென்று ஏற்றுக்கொள்ளாததினிமித்தம் அப்போஸ்தலராகவில்லை. இயேசு உயிர்த்தெழுந்த பின்னரே அவரை விசுவாசித்தார்கள். யூதா அப்போஸ்தலரோடு கூட ஊழியஞ் செய்ததாகத் தெரிகிறது (யூதா. 17:18).

இவன் தன் நிருபத்தை கி.பி. 64-68இல் எழுதினானென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

இவன் அசீரியா, பெர்சியா தேசங்களில் சுவிசேஷ ஊழியஞ் செய்து, கடைசியாக பெர்சியாவில் இரத்தச் சாட்சியாகக் கொல்லப்பட்டான் என்ற பாரம்பரியமுண்டு.

## யூதா கோத்திரம் (Tribe of Judah)

யூதாவுக்கு ஐந்து குமாரரிருந்தார்கள். முதல் மூன்று பேரும், ஒரு கானானிய ஸ்திரீயின் பிள்ளைகள். முதலிருவரும் பிள்ளையில்லாமல் மரித்தார்கள். மற்றவனுடைய சந்ததியைப்பற்றி ஒன்றும் தெரியாது. யூதாவின் மருமகளாகிய தாமார் அவனுக்குப் பாரேசையும், சேராவையும் பெற்றாள் (1 நாளா. 2:3,4). பாரேசின் சந்ததியில் இராஜாக்களும், இன்னும் பெயர் பெற்ற ஆள்களும் தோன்றினார்கள்.

வனாந்தரப் பிரயாணத்தில் யூதா கோத்திரத்தார் முதற் பாளயமாய்ப் போனார்கள் (எண். 2:9). இந்தக் கோத்திரத்தார் எண்ணப்பட்டபோது முதல் தடவையில் எழுபத்து நாலாயிரத்து அறுநூறு (74600) பேர் இருந்தார்கள் (எண். 1:27). இரண்டாம் தடவையில், யூதாவின் குடும்பங்கள் எழுபத்தாறாயிரத்து ஐந்நூறு பேர் (76500) (எண். 26:22).

பிரயாணத்தில் யூதாவின் கொடியுடைய சேனைகள் சூரியன் உதிக்கும் திசையில் பாளயமிறங்கினார்கள் (எண். 2:3).

## யூதா தேசம் (Land of Judah)

சிறையிருப்பின் பிற்பாடு இது யூதேயா எனப்பட்டது. இந்த தேசத்தின் எல்லை, யோசுவா 15இல் குறித்திருக்கிறது. மேசியா வருவாரென்ற வாக்குத்தத்தம் யூதாவுக்குக் கொடுக்கப்பட்டபடியால், இவர்களுடைய தேசத்துக்குள் பெத்லகேம் இருக்கவேண்டியது.

ஏனெனில் இயேசு பெத்லகேமில் பிறப்பாரென்று மீகா 5:2இல் கூறியுள்ளான். கி.மு. 931 இல் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்த போதிலும், யூதா இராஜ்யம் தாவீதின் இராஜ வம்சத்தின் கீழ், எருசலேம் நேபுகாத்நேச்சாரால் கி.மு. 586இல் அழிக்கப்படும் வரை இருந்தது. சிறையிருப்பின் பின்னரும் யூதா இராஜ்யம் எனப்பட்டு கி.பி. 70இல் முடிவுக்கு வந்தது. ஆனாலும் யூதர் என்ற பெயர் அழியாததாய் எப்போதும் உள்ளது.

## யூதா இராஜாக்கள்

சவுல் மரித்த பின் யூதா நாட்டார் வந்து தாவீதை யூதா வம்சத்தாரின் மேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினார்கள் (2 சாமு. 2:4).

சாலொமோன் மரித்தபின் இராஜ்யம் இரண்டாகப் பிரிந்து யூதா இராஜ்யம், இஸ்ரவேல் இராஜ்யமாயிற்று (கி.மு. 937).

**யூதா இராஜாக்கள்**
**(கி.மு. 937-586)**

| | | |
|---|---|---|
| ரெகொபெயாம் | 17 | வருடம் |
| அபியா | 3 | வருடம் |
| ஆசா | 40 | வருடம் |
| யெகோசபாத் | 25 | வருடம் |
| யோராம் | 8 | வருடம் |
| அகசியா | 1 | வருடம் |
| அத்தாலியாள் | 6 | வருடம் |
| யோவாஸ் | 40 | வருடம் |
| அமாசியா | 29 | வருடம் |
| ஊசியா | 39 | வருடம் |
| யோதாம் | 20 | வருடம் |
| ஆகாஸ் | 10 | வருடம் |
| எசேக்கியா | 29 | வருடம் |
| மனாசே | 55 | வருடம் |
| ஆமோன் | 2 | வருடம் |
| யோசியா | 31 | வருடம் |
| யெகோவாஸ் | 3 | மாதம் |
| யெகோயாக்கிம் | 11 | வருடம் |
| யெகோயாக்கின் | 3 | மாதம் |
| சிதெக்கியா | 11 | வருடம் |
| எருசலேமின் வீழ்ச்சி | | கி.மு. 586 |

## யூதாஸ் (Judas)

### *(புகழ்ச்சி)*

*1. கலிலேயனாகிய யூதாஸ், இவன் ரோம இராஜ்யத்துக்கு விரோதமாய் கலகம்பண்ணினான். இவனைப்பின்பற்றினோர் வைராகிகள் எனப்பட்டார்கள். பின்பு எல்லாருக் சிதறடிக்கப் பட்டார்கள் (அப். 5:37).*

## யூதாஸ்காரியோத்து (Judas Iscariot)

இவனுடைய பெயரிலிருந்து இவன் யூதாவிலுள்ள கீரியாத் என்னும் ஊரானென்று தெரிகிறது. பன்னிரு சீஷருக்குள்ளும் இவன் மாத்திரம் கலிலேயாவைச் சேர்ந்தவனல்ல. சீஷருடைய பெயர் வரிசையில் இவனுடைய பெயர் கடைசியாக வருகிறது மாத்திரமல்ல, காட்டிக் கொடுத்தவன் அல்லது துரோகி என்றும் சொல்லியுள்ளது *(மத். 10:4; மாற்கு. 3:19; லூக்கா. 6:16; யோவான். 18:2).*

அப்போஸ்தலருடைய பணப்பை இவன் கையிலிருந்தது. இவன் அதிலிருந்துத் திருடினான் என்றும் சொல்லியுள்ளது *(யோவான். 12:4; 13:29).*

மரியாள் இயேசுவின் பாதங்களில் தைலத்தைப் பூசினபோது இவன் அவளில் குற்றம் பிடித்தான் *(யோவான் 12:3,4).*

இதன்பின் யூதாஸ் பிரதான ஆசாரியரிடம் போய், முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவைக் காட்டிக் கொடுக்க சம்மதித்து சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். *(மத். 26:14-16; மாற்கு. 14:10; லூக்கா. 22:4-6).*

இயேசு சீஷரோடு கடைசிப் பஸ்காவைச் சாப்பிட்ட வேளையில், "உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்" என்றார் *(மாற்கு. 14:18).* யூதாசும் அவரிடம் "நானோ" என்று கேட்டபோது, நீ சொல்லுகிறபடிதான் என்றார் *(மத். 26:25).* பின்பு இயேசு ஒரு துணிக்கையைத் தோய்த்து யூதாசுக்குக் கொடுத்து, "நீ செய்கிறதைச் சீக்கிரம் செய்" எனறார். உடனே அவன் புறப்பட்டுப் போனான் *(யோவான். 13:30).*

அந்த இராத்திரியே, யூதாஸ் கெத்சமெனே தோட்டத்தில் இயேசுவை முத்தத்தினால் காட்டிக் கொடுத்தான் *(மாற்கு. 14:45).* அவர் சிலுவையிலறையப்படத் தீர்மானிக்கப்பட்டதைக் கண்டு யூதாஸ் மனஸ்தாபப்பட்டு வெள்ளிக்காசை தேவாலயத்தில் எறிந்து விட்டுப்போய், நான்று கொண்டு செத்தான் *(மத். 27:1-5).* அவன் தலை கீழாக விழுந்து, வயிறு வெடித்து குடல்களெல்லாம் சரிந்து மரித்தான் *(அப். 1:18).*

"கேட்டின் மகன் கெட்டுப் போனானேயல்லாமல்" என்று இயேசு தமது கடைசி ஜெபத்தில் யூதாசைப்பற்றிச் சொன்னார் (யோவான் 17:12). அப்போஸ்தலர் யூதாசுக்காக இன்னொருவனைத் தெரிந்து கொண்ட வேளையில், "யூதாஸ் என்பவன் தனக்குரிய இடத்துக்குப் போகும்படி இழந்துபோன இந்த ஊழியம்" எனறு சொன்னார்கள் (அப். 1:24).

இன்னும் ஒரு தருணத்தில், "நான் தெரிந்துகொண்டவர்களை அறிவேன்" என்று இயேசு சொன்னார் (யோவான். 13:18).

இவைகளிலிருந்து யூதாசைப் பற்றி நாம் அறியக்கூடிய விஷயங்கள்:

1. இயேசு அவனை நல்ல நோக்கத்தோடு தெரிந்திருப்பார். அவனுக்கு உண்மையான அப்போஸ்தலர் நிலைக்கு வரஇடமிருந்தது. இயேசுவும் அவனை ஆதாயப்படுத்திக் கொள்ள பல முறைகளில் தண்டித்தார். ஆனாலும் அவன் தன் நடக்கையினால் அந்த அழைப்பை இழந்தான்.

2. தேவனுடைய முன் அறிவு என்பது அவருடைய முன்தீர்மான மல்ல. தேவன் ஒருவரையும் நரகத்துக்குப் போகும்படி முன்னமே நியமிக்கமாட்டார். யூதாஸ் இயேசுவைக் காட்டிக் கொடுத்ததும் தேவ தீர்மானத்தின்படி அல்ல.

துன்மார்க்கருக்கு வர இருக்கும் தண்டனை தேவ நியமத்தின்படி அல்ல. அவர்களுடைய நடக்கைக்கேற்றதாகவே இருக்கும்.

3. யூதாஸ் இயேசுவோடுகூட இருந்தபோதிலும் அவருடைய ஆவி அவனிலிருக்கவில்லை. "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், மாம்சத்துக்குட்பட்டவர்களாயிருக்க மாட்டீர்கள்" (ரோமர். 8:9). கிறிஸ்துவின், ஆவியைப் பெற்றுக்கொள்ளாமல், கிறிஸ்தவன் என்று காட்டுவது பயங்கரமான காரியம்.

## யூதேயா (Judea)

யூதேயா என்பது யூதருடைய நாடு. சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்தவர்களில், யூதா கோத்திரத்தார் அநேகராயிருந்ததினால், பொதுவாய் அவர்கள் யூதரென்றும், அவர்கள் நாடு யூதேயா என்றும் பெயர் வழங்கிற்று.

சில இடங்களில் முழுநாடும் யூதேயா எனப்பட்டது (லூக்கா. 23:5; அப். 2:9, 10:37). எருசலேமும், யூதேயாவும் வெவ்வேறு தேசங்கள் என்றுக் குறிக்கப்பட்டுள்ளது (மத். 4:25; மாற்கு. 1:5; லூக்கா. 5:17; யோவான். 3:22; அப். 1:8). சவக் கடலுக்கு அருகேயுள்ள தேசம், யூதேயாவின் வனாந்தரம் எனப்பட்டது (மத். 3:1).

பெரிய ஏரோது மரித்தபின், யூதேயா, சமாரியா, இதுமேயா என்னும் நாடுகள் அர்கெலாயு என்பவனின் கீழிருந்தது. அவனுக்குப்பின் யூதேயா, சீரியாவோடு சேர்ந்துள்ளது.

## யெகூ (Jehu)

### (அவர் யேகோவா)

இவன் இஸ்ரவேலின் பத்தாம் இராஜா, நிம்சியின் குமாரனாகிய யோசபாத்தின் மகன். இஸ்ரவேல் இராஜாவாகிய யோராமுக்குக் கீழ் சேனாதிபதியாயிருந்தான்.

கீலேயாத்திலுள்ள ராமோத்தில் இவன் இருந்த நாள்களில், தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன். இவனை இஸ்ரவேல் இராஜாவாக அபிஷேகம் பண்ணினான் *(2 இரா. 9:1-3)*. அப்பொழுது அவனோடிருந்தவர்கள் எக்காளம் ஊதி, யெகூவை இராஜா வாக்கினார்கள். இது அவன் தன் எஜமானுக்கு விரோதமாக எழும்ப ஏதுவாயிற்று. அப்பொழுது யோராம் இராஜா சீரியர் தன்னை வெட்டின காயங்களை ஆற்றிக்கொள்ளும்படி, யெஸ்ரயெலுக்குப் போயிருந்தான். யெகூ அவ்விடம் போய் யோராமைச் சந்தித்து, அவனைக் கொன்றான் *(2 இரா. 9:24)*. அதோடு யூதாவின் இராஜாவாகிய அகசியாவும் கொல்லப்பட்டான்.

யெகூ யெஸ்ரயேலுக்குப் போய் யேசபேலைக் கண்டு அவனையும் கொன்றான் *(2 இரா. 9:30-33)*.

சமாரியாவிலிருந்த ஆகாபின் சந்ததியிலுள்ள ஆண் மக்கள் எழுபது பேர் யெகூவின் கட்டளைப்படி கொல்லப்பட்டார்கள் *(2 இரா. 10:1-10)*. யெஸ்ரயேலிலும் ஆகாபின் குடும்பத்தாரில் ஒருவரையும் மீதியாக வைக்காதபடி யெகூ கொன்று போட்டான் *(2 இரா. 10:11)*.

பின்பு யெகூ பாகாலுக்குப் பெரிய பலியிடப் போகிறேன் என்று சொல்லி, பாகாலின் பணிவிடைக்காரரெல்லாரையும் வரவழைத்து, அவர்களை வெட்டிப்போட்டான் *(2 இரா. 10:20-28)*.

இப்படி எல்லாம் செய்து யெகூ தன் அரசாட்சியைப் பலப்படுத்தி 28 வருடம் அரசாண்டான் *(கி.மு. 841-813)*. இவனுடைய குமாரர் இஸ்ரவேலின் சிங்காசனத்தின் மேல் நான்கு தலைமுறையாக வீற்றிருந்தார்கள் *(2 இரா. 10:30)*.

ஆனாலும் யெகூ யெரொபெயாமின் பாவங்களை விட்டு விலகவில்லை. ஆகவே அசீரியாவுக்குக் கீழ்ப்பட்டு, திறை கொடுக்க நேரிட்டது *(2 இரா. 10:31-33)*.

## யெகூ (Jehu)

ஆனானியின் குமாரனாகிய இவன் ஒரு தீர்க்கதரிசி. இஸ்ரவேலின் பாவங்களைக் கண்டித்து, அதினிமித்தம் அவனையும், அவன்

வீட்டாரையும் அவன் சந்ததியையும் தேவன் அழித்துப் போடுவாரென்று உரைத்தான். அது அப்படியே நடந்தது (1 இரா. 16:1-6).

பின்பு பாஷாவின் குமாரனாகிய ஏலா இராஜாவின் பின்பும், அவனுடைய பாவங்களினிமித்தம் வரப்போகிற தேவ தீர்ப்பையும் யெகூ கூறினான். அப்படியே பாஷாவும், ஏலாவும் தங்கள் விக்கிரகங்களினால் கர்த்தரை கோபமூட்டினதினிமித்தம் அவர்களும் வீட்டாரும் அழிக்கப்பட்டார்கள் (1 இரா. 16:12,13).

பிற்பாடு யோசபாத் ஆகாபுக்கு உதவி செய்து திரும்பி வந்த வேளையில், யெகூ அவனைச் சந்தித்து கர்த்தருடைய வார்த்தையை அவனுக்கு அறிவித்தான் (2 நாளா. 19:2).

3. யூதா கோத்திரத்து ஓபேத்தின் மகன் (1 நாளா. 2:38).

4. சிமியோன் கோத்திரத்தான் (1 நாளா. 4:35).

5. தாவீது இராஜாவின் வில்வீரரில் ஒருவன் (1 நாளா. 12:3).

## யெசுவா (Jeshua)

1. தாவீதின் நாள்களில் ஒன்பதாம் ஆசாரிய வகுப்பின் தலைவன் (1 நாளா. 24:11).

2. எசேக்கியாவின் காலத்தில் உற்சாகக் காணிக்கைகள் மேல் அதிகாரியாயிருந்த ஒரு லேவியன் (2 நாளா. 31:14,15).

3. செரூபாபேலுடன் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குப் போன பிரதான ஆசாரியன். யோசதாக்கின் மகன். இவன் எருசலேமில் பலிபீடங் கட்டிப் பலிகள் செலுத்தினதோடு, ஆலயத்தைக் கட்டும்படி ஜனங்களை ஏவினான் (எஸ். 2:2; நெகே. 7:6). ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள் யோசுவா என்று குறிக்கிறார்கள் (ஆகாய் 1:1; சக. 3:6).

4. பாபிலோனிலிருந்து எருசலேமுக்குப் போன பாகாத் மோவாபின் சந்ததியான் (எஸ். 2:6).

5. எஸ்றாவின் நாள்களில் உடன்படிக்கைக்கு முத்திரை போட்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் (எஸ். 3:9; நெகே. 8:7).

## யெஸ்ரயேல் (Jezreel)

### (கர்த்தர் விதைக்கிறார்)

1. இது பலஸ்தீனாவின் வட பக்கத்திலுள்ள ஒரு வெளி. கலிலேயாக் கடலுக்கு தெற்பக்கமாய் யோர்தான் ஆறு மட்டும் உள்ளது.

*2.* சீட்டுப் போட்டபோது இசக்காருக்குக் கிடைத்த பட்டணங்களில் ஒன்று *(யோசுவா. 19:18)*. இது இஸ்ரவேலின் இராஜாக்கள் வாசம்பண்ணின ஒரு தலை நகர் *(1 இரா. 18:45,46)*. நாபோத்தின் திராட்சைத் தோட்டம் இங்கே இருந்தது *(1 இரா. 21:1, 23)*.

*3.* யூதா கோத்திரத்து ஏதாமின் சந்ததியானான யெஸ்ரயேல் *(1 நாளா. 4:3)*.

*4.* ஓசியாவின் மூத்த மகனுக்குக் கொடுக்கப்பட்ட அடையாளப் பெயர் *(ஓசியா. 1:4)*.

*5.* இஸ்ரவேலருக்கும் இது அடையாளப் பெயராக வழங்கப்பட்டுள்ளது *(ஓசியா. 2:22)*.

## யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு

இது மெகிதோ பள்ளத்தாக்கு என்றும் சொல்லப்படுகிறது. யோர்தானுக்கருகிலுள்ள முக்கோண வடிவமுள்ள ஒரு பெரிய சமவெளி. இதன் எல்லை, வடக்கு கலிலேயா மலைகள், கிழக்கு கில்போவா, மோரேயா என்னும் மலைகள், தெற்கும் மேற்கும் சமாரியா மலைகளும், கர்மேல் மலைத்தொடரும்.

இந்தச் சமபூமி யோர்தான் வெளியிலிருந்து மத்திய தரைக்கடல் பக்கம் போவோருக்கு முக்கிய பாதையாயிருந்தது. இதினிமித்தம் அநேக யுத்தங்களும் இவ்விடத்தில் நடந்தன *(நியா. 4:5; 1 சாமு. 31:2; 1. இரா. 9:11-28)*.

கடைசி நாள்களில் நடக்கப்போகிற தேவனுடைய மகா நாளின் யுத்தமும் இங்கேயே நடக்குமென்று சொல்லியுள்ளது (வெளி.16:14-16).

## யெப்தா (Jephthah)

இவன் நியாயாதிபதிகளில் பெயர் பெற்ற ஒருவன் *(நியா. 11)*. கிலெயாத் என்பவனுக்குப் பிறந்த ஒரு பரஸ்திரீயின் குமாரன். கிலெயாத்தின் மற்ற பிள்ளைகள் இவனை ஏற்றுக் கொள்ளாததினிமித்தம், இவன் தோப் தேசத்துக்குப்போய், அங்கே வீணரான மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, கொள்ளை அடித்து ஜீவித்தான்.

அம்மோனியர் இஸ்ரவேல் மேல் யுத்தம் செய்யப் போனபோது, கிலெயாத்தின் மூப்பர், தங்களுக்கு உதவி செய்யும்படி யெப்தாவைக் கேட்டார்கள். இவன் தான் ஜெயம் பெற்றால் தன்னைத் தலைவனாக ஏற்படுத்த வேண்டுமென்று பொருத்தனை கேட்டுப் பெற்றான் *(நியா. 11:10)*.

அதன்பின் யெப்தா ஜனங்களைச் சேர்த்துக்கொண்டு மிஸ்பாவுக்கு வந்து, கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டுபோய் அம்மோனியரைத் தோற்கடித்தான். பின்பு தன் வீட்டுக்குத் திரும்பி வருகிறபோது, தனது ஒரே குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ் செய்து அவனுக்கு எதிர்கொண்டு போனாள். யெப்தா தான் செய்த பொருத்தனையினிமித்தம் கலங்கினான். ஆனால் அவளோ தகப்பனைத் தைரியப்படுத்தி, செய்த பொருத்தனையை நிறைவேற்றும்படிச் சொன்னாள். அவள் துக்கம் கொண்டாட இரண்டு மாதம் தவணை கொடுத்தபின், தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான் (நியா. 11:39).

எப்பிராயீம் மனுஷர் தங்களை அம்மோனியருடன் யுத்தம் செய்ய அழைக்கவில்லை என்று யெப்தாவில் குற்றம் பிடித்து, அவன்மேல் யுத்தம்பண்ண வந்தபோது தோற்கடிக்கப்பட்டார்கள் (நியா. 12:1-6).

யெப்தா இஸ்ரவேலை ஆறு வருடம் நியாயம் விசாரித்தபின், மரித்து அடக்கம்பண்ணப்பட்டான் (நியா. 12:7).

கர்த்தர் யெப்தாவைக் கொண்டு இஸ்ரவேலருக்குச் செய்த நன்மையைப்பற்றி சாமுவேல் குறித்துள்ளான் (1 சாமு. 12:11).

## யெருபாகால் (Jerubbaal)

***(பாகால் போராடட்டும்)***

இது கிதியோனுடைய மறு பெயர். கிதியோன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் அவனுடைய தகப்பன் அவனுக்கு இந்தப் பேரிட்டான். "பாகால் வழக்காடட்டும்" என்பது அதன் அர்த்தம் (நியா. 6:32).

இந்தப் பெயர் "எருப்பேசேத்" என்று 2 சாமு. 11:21இல் சொல்லப் பட்டிருக்கிறது.

## யெரொபெயாம் (Jeroboam)

***(ஜனங்களை ஆதரிப்பான்)***

***(கி.மு. 931-910).***

இது இஸ்ரவேலின் இரண்டு இராஜாக்களின் பெயர் :

*1.* **முதலாம் யெரொபெயாம் :** இவன் எப்பிராயீம் மனுஷனாகிய நேபாத்தின் மகன். இவனுடைய தாய் செரூகாள் என்னும் ஒரு விதவை (1 இரா. 11:26). இவன் காரிய சமர்த்தனாயிருந்தபடியால், சாலொமோன் இவனை மில்லோவில் நடந்த கட்டட வேளையில் யோசேப்பின் வம்சத்தாரின் வேலையை மேல் விசாரணை செய்ய நியமித்தான். பின்பு இவன் இராஜாவுக்கு விரோதமாக கையெடுத்தானென்று சாலொமோன்

கேள்விப்பட்டு, இவனைக் கொலை செய்ய வகை தேடினதினிமித்தம் இவன் எகிப்துக்குப் போய், அந்த இராஜாவிடம், சாலொமோன் மரணமடையுமட்டும் எகிப்தில் இருந்தான் *(1 இரா. 11:40).*

சாலொமோன் மரித்தபின், ரெகொபெயாம் இராஜாவானபோது, பத்து கோத்திரங்கள் அவனோடு பேசித் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள ஆள் அனுப்பி இவனை அழைப்பித்தார்கள் *(1 இரா. 12:3).*

இவன் வந்து ரெகொபெயாமுடன் வாக்குவாதம்பண்ணியும், சரிவராததினால், இராஜ்யம் இரண்டாகப் பிரிந்தது. யூதாவும் பென்யமீனும் ரெகொபெயாம் பக்கத்திலும், மற்றப் பத்துக் கோத்திரங்கள் யெரொபெயாம் பக்கத்திலும் சேர்ந்தார்கள். இஸ்ரவேலர் யெரொபெயாமை இராஜாவாக்கினார்கள் *(1 இரா. 12:20).*

இவ்விரு பகுதியாருக்கிடையில் யுத்தம் எப்போதும் நடந்து கொண்டிருந்தது *(1 இரா. 14:30).*

யெரொபெயாம் தன்னுடைய ஜனங்கள் பலி செலுத்த எருசலேம் தேவாலயத்துக்குப் போகாமலிருக்கும்படி இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, பெத்தேலிலும், தாணிலும் ஸ்தாபித்து, மேடைகளைக் கட்டி, ஆசாரியரை ஏற்படுத்தி பண்டிகை கொண்டாடும்படி செய்தான். இதினிமித்தம் அவன் "இஸ்ரவேலைப் பாவம் செய்யப்பண்ணினவன்" என்று பேர் பெற்றான் *(1 இரா. 12:30; 16:26).*

ஒரு நாள் தூபங்காட்டும்படி யெரொபெயாம் பலிபீடத்தண்டை நிற்கையில், தேவனுடைய மனுஷன் ஒருவன் வந்து பலி பீடத்தைச் சபித்தான். பலிபீடம் வெடித்தது. சாம்பலும் கொட்டுண்டது *(1 இரா. 13:1-5).*

பின்னும் ஒரு தடவை தன்னுடைய மகன் வியாதிப் பட்டிருக்கையில், தன் மனைவியை அகியா தீர்க்கதரிசியிடம் அனுப்பினான். அப்போது அவனுடைய குடும்பம் நாசமாய்ப்போகும் என்றும், இஸ்ரவேல் ஜனங்கள் சிறைப்பட்டு போவார்களென்றும், அவனுடைய மகனும் செத்துப் போவானென்றும், அவளுக்குச் சொல்லப்பட்டது *(1 இரா. 14:1-13).*

யெரொபெயாம் இருபத்திரண்டு வருடம் ஆளுகை செய்த பின் மரித்தான் (2நாளா. 13:20). கர்த்தர் அவனை அடித்ததினால் அவனுடைய பயபக்தி இராச தந்திரமானது என அறியலாம்.

## இரண்டாம் யெரொபெயாம்

***(கி.மு. 794-753)***

*யோவாசின் மகன். இஸ்ரவேலின் 13ஆம் இராஜா 41 வருடம் அரசாண்டான் (2 இரா. 14:23-29). இவன் யெகூவின் நான்காவதான இராஜ குலத்தரசன். இவன் ஆமாத்தின் எல்லை முதற்கொண்டு சமபூமியின் கடல் மட்டுமுள்ள எல்லைகளை யோனா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டபடியே சேர்த்துக் கொண்டான் (2 இரா. 14:25). ஆயினும் கர்த்தர் பார்வையில் பொல்லாப்பானதைச் செய்தான்.*

*இவனுடைய நாள்களில் ஆமோஸ் தீர்க்கதரிசி இவன் மேலும், இஸ்ரவேல் மேலும் வரப்போகிற தேவ தண்டனையைப் பற்றிக் கூறினான் (ஆமோஸ் 7:7-9).*

*ஓசியா தீர்க்கதரிசியும் அக்காலத்தில் தீர்க்கதரிசனம் உரைத்து, இஸ்ரவேலின் பின் வாங்கின நிலையையும் அவர்கள்மேல் அதினிமித்தம் வரும் தேவதீர்மானங்களையும் உரைத்தான் (ஓசியா. 1:1).*

*யெரொபெயாம் மரித்தபின் அவனுடைய குமாரன் சகரியா இராஜாவானான் (2 இரா. 14:29).*

## யேகோவா (Jehovah)

*இது தேவனுடைய பெயர்களில் ஒன்று. இஸ்ரவேலரை மீட்கும்படி, தேவன் மோசேயை மீதியான் தேசத்திலிருந்து எகிப்துக்கு அனுப்பின வேளையில், இந்தப் பெயரைச் சொல்லி, தம்மை வெளிப்படுத்தினார் (யாத். 6:3). ஆகிலும் கர்த்தருடைய நாமத்தை நிந்திக்கிறவன், கொலை செய்யப்பட வேண்டுமென்று லேவி 24:16இல் குறித்துள்ளதைத் தப்பிதமாக விளங்கிக்கொண்டு அந்தப் பெயரை இஸ்ரவேலர் முழுமையும் உச்சரியாமல் சில எழுத்துக்களையே சொல்வது வழக்கமாயிற்று.*

*பூர்வ காலத்தில் ஒரு முக்கிய கருத்தோடு மனிதருக்குப் பெயரிடுவது வழக்கமாயிருந்தது. வேதாகமக் காலங்களிலும் அப்படி நடந்தது. கோத்திரப் பிதாக்களின் நாள்களில், ஒரு பிள்ளை பிறந்தவுடன், அதன் தாய் ஒரு பெயர் கொடுப்பாள் (ஆதி. 4:1; 19:37; 29:32). பின்பு விருத்தசேதனம் செய்யும் வேளையில், தகப்பனும் ஒரு பெயர் கொடுத்ததாகத் தெரிகிறது (லூக்கா. 1:56-63). அதன்படியே தற்காலத்திலும், ஒருவன் குணப்பட்டு ஞானஸ்நானம் பெறும்பொழுது வேறொரு பெயர் இடுவது வழக்கம்.*

*இவ்விதமே, தேவனும் வெவ்வேறு பெயர்கள் மூலம், தம்மை தமது*

ஜனங்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார் (யாத். 6:3; சங். 83:17; ஏசாயா. 12:2, 26:4).

தேவன் தம்மை மூன்று மூலாதார பெயர்களால் வெளிப் படுத்தியிருக்கிறார். அவைகளாவன :-

1. தேவன்-ஏல்

2. உன்னத தேவன் - ஏலோகிம்

3. யேகோவா - யாவே

1. தேவன் என்பது ஒரு பொதுப்பெயர். மரமும், கல்லுமான மனுஷர் கைவேலையாகிய தேவர்களுமுண்டு (உபா. 4:28). பேய்களும் புது தெய்வங்களென்று குறித்துள்ளது (உபா. 32:17). இதினிமித்தம் மெய்த்தேவனைப் பற்றிச் சொல்லும்போது, அவனுடைய தன்மையைக் காட்டுவது வழக்கம். உதாரணமாக, "உன் கர்த்தராகிய நான் எரிச்சலுள்ள தேவன்" (உபா. 5:9). "பெத்தேலில் தரிசனமான தேவன் நானே" (ஆதி. 31:13).

2. உன்னத தேவன் - ஏலோகிம். "உன்னதமானவர்" "உன்னத கர்த்தர்" என்றும் குறித்துள்ளது (எண். 24:16; சங். 7:17). "ஏலோகிம்" எபிரெய பாஷையில் தேவன் என்பது அர்த்தம்.

3. யேகோவா - யாவே. இது அவருடைய நித்தியத்துவத்தைக் குறிக்கிறது. "இருக்கிறவராகவே இருக்கிறேன்" (யாத். 6:3; சங். 83:17; ஏசாயா. 12:2; 26:4).

யோகோவாவுக்குக் கொடுத்த வேறு பெயர்கள் :

ஏல் ஓலாம் : தேவனாகிய கர்த்தர், ஆபிரகாம் பெயர்செபாவில் ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டான் (ஆதி. 21:30).

ஏல் எல்லோகே இஸ்ரவேல் : யாக்கோபு ஒரு பலிபீடத்தைக் கட்டி, இந்தப் பேரிட்டான் (ஆதி. 33:20).

யேகோவா யீரே : ஆபிரகாம் ஈசாக்குக்குப் பதிலாக ஓர் ஆட்டுக் கடாவைக்கண்டு அதைப் பலியிட்ட இடத்துக்கு "இந்தப் பர்வதத்தில் பார்த்துக்கொள்ளப்படும்" என்பதே அதன் அர்த்தம் (ஆதி. 22:14).

யேகோவா நிசி : இஸ்ரவேல் அமலேக்கை முறிய அடித்த போது, மோசே ஒரு 'பலிபீடத்தைக் கட்டி யேகோவா நிசி என்று பேரிட்டான். "கர்த்தர் என் வெற்றிக்கொடி" என்பது இதன் பொருள்.

யேகோவா ஷாலோம் : ஓப்ராவில் தேவ தூதன் கிதியோனுக்குத் தரிசனமான பின், அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி அதற்கு இந்தப்

பேரிட்டான். "யேகோவா சமாதானத்தைக் கட்டளையிடுவாராக" என்ற கருத்துள்ளது (நியா. 6:24).

யேகோவா சிட்கேனு : "கர்த்தர் நமது நீதி" தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப் பண்ணுவேன். அவருடைய நாமம் "நமது நீதியாயிருக்கிற கர்த்தர்" என்பதே (எரே. 23:6).

யேகோவா ஷம்மா : கர்த்தர் அங்கிருக்கிறார். இது எசேக்கியேல் தரிசனத்தில் கண்ட பட்டணத்தின் பெயர் (எசே. 48:35).

சேனைகளின் கர்த்தர் : சீலோவில் இந்தப் பெயரைக் கொண்டு, கர்த்தரைப் பணிந்துகொண்டார்கள் (1 சாமு. 1:3). தாவீதும் கோலியாத்தை எதிர்த்துப் போன வேளையில் இந்தப் பெயரை உபயோகித்தான் (1 சாமு. 17:45). பின்பு சங்கீதங்களிலும் இப்பெயர் வழங்கியுள்ளது (சங். 24:10; 46:7, 11).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் : தெபொராளின் பாட்டில் இது காணப்படுகிறது (நியா. 5:3; ஏசாயா. 17:6; செப். 2:9; சங். 59:5).

இஸ்ரவேலின் பரிசுத்தர் : ஏசாயா 29 தடவைகளில் இந்தப் பெயரை உபயோகிக்கிறான் (1:4).

நீண்ட ஆயுசுள்ளவர் : தானியேல் இந்தப் பெயரை வழங்குகிறான் (தானி. 7:9, 13:21). உன்னதமானவர் என்ற பெயரும் வருகிறது (தானி. 7:18, 21,25,27).

யேகோவா றோபா : "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்." இஸ்ரவேலின் பிரயாணத்தில் மாராவில் கசப்பான தண்ணீரை மதுரமாக்கினபோது, கர்த்தர் கொடுத்த பிரதிக்கினை இதுவே (யாத். 15:26).

## யேசபேல் (Jezebel)

இஸ்ரவேல் இராஜாவாகிய ஆகாப் என்பவனின் மனைவி. சீதோனியரின் இராஜாவாகிய எத்பாகாலின் குமாரத்தி (1 இரா. 16:31). அசீரியா இஸ்ரவேலுக்கு விரோதமாயிருந்தபடியால் இஸ்ரவேல் தங்கள் பாதுகாப்புக்காக தீரு, சீதோன் தேசங்களின் உதவி பெறும் நோக்கமாய், இந்தச் சம்பந்தம் கலந்திருக்கலாம். அதோடு அவளுக்காக ஆகாப் சமாரியாவில் பாகாலுக்குப் பலிபீடத்தையும் விக்கிரகத் தோப்பையும் உண்டாக்கினான் (1 இரா. 16:32,33). அவளுக்கு நானூற்றைம்பது பாகாலின் தீர்க்கதரிசிகளும் இருந்தார்கள் (1. இரா. 18:19) இதினிமித்தம் அவளுக்கும், எலியா தீர்க்கதரிசிக்குமிடையில் விரோதமுண்டாயிற்று. கர்மேல் மலையின் மேல் இரு பகுதியாருக்குமிடையிலுண்டான வாக்கு வாதத்தின் பயனாக, எலியா பாகாலின் தீர்க்கதரிசிகள் எல்லாரையும் வெட்டிப்போட்டான் (1 இரா. 18:20, 40).

யேசபேல் இதை அறிந்த போது, எலியாவைக் கொன்று போட எண்ணினதால், அவன் புறப்பட்டு வனாந்தர வழியாய்ப் போனான் *(1 இரா. அதி. 19).*

பின்பு நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தின் விஷயத்திலும் இவள் முன்னின்று மும்முரமாய்க் காரியங்களை நடப்பித்ததினிமித்தம், ஆகாபின் குடும்பத்துக்கு அழிவுண்டாயிற்று *(1 இரா. 21).*

ஆகாப் மரித்தப்பின், இவள் பன்னிரெண்டு வருடம் இராஜரீக அதிகாரம் செலுத்தினாள். அகசியா, யோராம் என்பவர்களின் நாள்களிலும் இவளே தலைவியாயிருந்தாள்.

பின்பு யெகூ என்பவன் கலகம்பண்ணி, யெஸ்ரயேலுக்குப் போன வேளையில், இவள் தன்னைச் சிங்காரித்துக்கொண்டு, அவனோடு பரிகாசமாய்ப் பேசினதினிமித்தம் கொல்லப்பட்டாள் *(2 இரா. 9:30-32 - கி.மு. 841).*

தியத்தீரா சபைக்கு எழுதப்பட்ட நிருபத்தில் ஒரு யேசபேலைப் பற்றிச் சொல்லியுள்ளது *(வெளி. 2:20).* இவள் ஒரு பொய்த்தீர்க்கதரிசி என்றும், சமய சம்பந்தமாகப் பொய்ப் போதனைகளைக் கொடுத்தவளென்றும் தெரிகிறது. இப்படிப்பட்டவர்கள் அச்சபையிலிருந்திருக்கலாம். இப்பெயர் மதபேதத்தைக் குறிக்கிறது.

## யோசபாத் (Jehoshaphat)

***(கர்த்தர் தீர்மானித்தார்)***

***(கி.மு. 873-848)***

யூதாவின் நான்காம் இராஜா. ஆசாவின் மகன். 25 வருடம் அரசாண்டான். இவன் யூதாவின் பட்டணங்களில் தாணையங்களை வைத்து, கர்த்தரின் கற்பனைகளின்படி நடந்து பெயர்செபா தொடங்கி எப்பிராயீம் மலைத்தேசம் மட்டுமுள்ள தன் ஜனங்களைக் கர்த்தரிடம் திரும்பப்பண்ணினான் *(2 நாளா. 19:2-4).* இவைகளினிமித்தம் கர்த்தர் அவன் கையில் இராஜ்ய பாரத்தை திடப்படுத்தினார். அவனுக்கு ஐசுவரியமும் கனமும் உண்டாயிற்று. தன் பிரபுக்களையும் லேவியரையும் அனுப்பி, யூதாவின் பட்டணங்களிலெல்லாம் வேத புத்தகத்திலிருந்துப் போதிக்கும்படி செய்தான் *(2 நாளா. 17:5-9).*

இவன் நியாயாதிபதிகளை ஏற்படுத்தி, ஜனங்களுடைய வழக்குச் சங்கதிகளை விசாரித்து நியாயம் செய்யும்படி ஒழுங்கு பண்ணினான் *(2 நாளா. 19:10).*

இவனுடைய முக்கிய உபயோக செய்கையாவது, யூதாவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலிருந்த சண்டைகளை முடிவாக்கினதே.

இவன் ஆகாப் இராஜாவோடு சம்பந்தங் கலந்து அவனோடு ராமாத்தில் சீரியருக்கு விரோதமாய் யுத்தம் பண்ணினான் *(1 இரா. 22:1-14).*

பின்பு யோராமுடன் கூடி மோவாபியருக்கு விரோதமாய்ப் போனான் *(2 இரா. 3:6-25).*

அதற்குப் பின்பு, இவன் பொல்லாதவனான இஸ்ரவேல் இராஜாவாகிய அகசியாவோடு தோழமைபண்ணி, அவனோடு கூட வியாபாரக் கப்பல்களைச் செய்வித்தபோது, அவைகள் உடைந்து போயிற்று *(2 நாளா. 20:35-37).*

யோசபாத் மரித்து, தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான் *(2 நாளா. 21:1).*

2. யெகூவின் பிதா *(2 இரா. 9:2).*

3. தாவீது சாலொமோன் என்பவர்களின் காலத்திலிருந்த ஒரு மந்திரி *(2 சாமு. 8:16; 1 இரா. 4:3).*

4. ஓபேத் ஏதோம் வீட்டிலிருந்துத் தேவனுடைய பெட்டியை எருசலேமுக்குக் கொண்டு போன போது, பூரிகை ஊதின ஆசாரியர்களில் ஒருவன் *(1 நாளா. 15:24).*

## யோசபாத்தின் பள்ளத்தாக்கு (Valley of Jehoshaphat)

இது எருசலேமுக்கு அருகில் இருந்த ஒரு பள்ளத்தாக்கு, கெதரோன் என்றும் சொல்லப்பட்டது. இது தேவனுடைய கடைசி நியாயத்தீர்ப்பு நடக்கப்போகிற இடமென்று யோவேல் குறிக்கிறான் *(யோவேல் 3:2-12).*

## யோசியா (Joshiah)

***(கி.மு. 638 - 608)***

***(கர்த்தர் சீர்ப்படுத்துகிறார்)***

யூதாவின் இராஜா. ஆமோனின் மகன். எட்டு வயதில் இராஜாவாகி, முப்பத்தொரு வருடம் அரசாண்டான் *(2 இரா. 22:1).*

இவன் தன் இராஜ்யபாரத்தின் எட்டாம் வருடம் தேவனைத் தேட ஆரம்பித்து, பன்னிரெண்டாம் வருடத்தில் மேடைகள், விக்கிரகங்களை அற்றுப் போகும்படி செய்தான் *(2 நாளா. 34:3).* பதினெட்டாம் வருடத்தில் தேவாலயத்தைச் சுத்திகரித்தபோது, ஆசாரியனாகிய இல்க்கியா நியாயப் பிரமாணப் புத்தகத்தைக் கண்டெடுத்தான். இது உபாகமப் புத்தகமாயிருக்கலாம். அதை வாசித்தவுடனே இராஜாவுக்கும் ஜனங்களுக்கும் குற்றவுணர்ச்சி உண்டானதினிமித்தம், எல்லாரும் அதில் சொல்லப்பட்டவைகளைக் கைக்கொள்ளும்படி உடன்படிக்கை செய்தார்கள் *(2 இரா. 23:3; 2 நாளா. 34:32).*

சாலொமோன் எருசலேமுக்கு எதிரே கட்டியிருந்த அருவருப்பான மேடைகளை, யோசியா தீட்டாக்கி, யெரொபெயாம் உண்டாக்கியிருந்த விக்கிரகத் தோப்புகளைச் சுட்டெரித்தான் *(2 இரா. 23:13-15)*.

பின்பு யோசியா கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்கும்படி சகல ஜனங்களுக்கும் கட்டளையிட்டு, அதற்கு முன்னும், பின்னும் நடவாதவிதமாய், எருசலேமில் யோசியாவின் பதினெட்டாம் வருடத்தில் இந்தப் பஸ்கா ஆசரிக்கப்பட்டது *(2 இரா. 23:21-23, 2 நாளா. 35:1-19)*.

அந்நாள்களில் எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் நேகோ, கர்கேமிஸ் பட்டணத்தின்மேல் யுத்தம் பண்ணப் போகையில், யோசியா அவனுக்கு எதிராகப் போனான். நேகோ அவனை வேண்டிக் கொண்டபோதிலும், அவன் செவிகொடாது யுத்தஞ் செய்து, காயப்பட்டு மரித்தான் *(2 இரா. 23:29; 2 நாளா. 35:20-24)*. ஊழியக்காரர் அவனை மெகிதோவிலிருந்து எருசலேமுக்குக் கொண்டுபோய் அடக்கம்பண்ணினார்கள் *(2 இரா. 23:30)*.

யூதாவின் இராஜாக்களெல்லாருக்குள்ளும் மேலான பல பக்தியுள்ள இராஜாவுக்கு வந்த முடிவு இதுவே. அவனைப் போலொத்த இராஜா அவனுக்கு முன்னிருந்ததுமில்லை, அவனுக்குப்பின் எழும்பினதும் இல்லை *(2 இரா. 23:25)*.

2. செப்பனியாவின் குமாரன் யோசியா *(சக. 6:10)*.

## யோசுவா (Joshua)

### *(கர்த்தர் இரட்சிப்பு)*

எப்பிராயீம் கோத்திரத்துத் தலைவனாகிய எலிஷாவின் பேரன். நூன் என்பவனின் மகன் *(1 நாளா. 7:27; எண். 1:10)*. இவனுடைய பெயர் ஓசேயா என்று எண். 13:8இல் குறித்துள்ளது.

வனாந்தர பிரயாண நாள்களில் யோசுவா வாலிபனாயும் மோசேயின் பணிவிடைக்காரனாயுமிருந்தான் *(யாத். 33:11)*.

அமலேக்கோடு நடந்த யுத்தத்தில், யோசுவா முன்சென்று அவர்களை முறிய அடித்தான் *(யாத். 17:13)*.

கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கப் போனவர்களில், இவன் எப்பிராயீம் கோத்திரத்துப் பிரதிநிதியாயிருந்து திரும்பி வந்து, இவனும் காலேபும் தேசத்தை ஜெயிக்கக்கூடும் என்று சொல்லி, ஜனங்களைத் தைரியப்படுத்தினார்கள் *(எண். 14:8,9)*.

மோசே சீனாய் மலைமேல் ஏறி கர்த்தர் சமூகத்தில் தங்கி யிருக்கையில் இவன் மலையடிவாரத்தில் காத்திருந்தான் *(யாத். 24:13)*.

கர்த்தரின் சொற்படி, மோசே யோசுவாவைத் தெரிந்து கொண்டு, அவன் மேல் தன் கைகளை வைத்து, இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படியும்படி, கட்டளை கொடுத்தான் *(எண். 27:18-23).*

மோசே மரித்தபின், யோசுவா இஸ்ரவேலரை வழி நடத்தி, யோர்தானைக் கடந்து, கானான் தேசத்தைக் கைப்பற்றி கோத்திரங்களுக்குப் பிரித்துக் கொடுத்தான்.

யோசுவா வயது சென்று முதிர் வயதானபோது, ஜனங்களெல்லாரையும் சீகேமில் கூடி வரச்செய்து, தனது கடைசி வார்த்தைகளையெல்லாம் சொன்னான். அவைகளை எழுதி, ஒரு கல்லை நிறுத்தி அது அவர்களுக்கு சாட்சியாயிருக்குமென்று சொல்லி ஜனங்களை அவரவர் சுதந்தரத்துக்கு அனுப்பிவிட்டான் *(யோசுவா. 24:21,28).*

யோசுவா 110 வயதுள்ளவனாய் மரணமடைந்தான். அவனை அவன் சுதந்தர பாகத்தில் அடக்கம் பண்ணினார்கள் *(யோசுவா. 24:29,30).*

யோசுவாவின் புத்தகம் அவனால் எழுதப்பட்டதொன்றல்ல, அவனுடைய ஜீவியமும் செயலும் அதிலே விவரித்துள்ளன என்பதே அதன் கருத்து.

2. யோசுவா : இவன் பெத்ஷிமேஸ் ஊரான். பெலிஸ்தர் கர்த்தருடைய பெட்டியை ஒரு வண்டியில் வைத்து அனுப்பின போது, அது இவனுடைய வயலில் வந்து நின்றது. அங்கே ஒரு பெரிய கல்லிருந்தது. பெட்டியை அதன்மேல் வைத்தார்கள் *(1 சாமு. 6:14, 18).*

3. யோசியா இராஜாவின் நாள்களிலிருந்த எருசலேம் பட்டணத் தலைவன் *(2 இரா. 23:8).*

4. செருபாபேலின் நாள்களிலிருந்த பிரதான ஆசாரியன் *(ஆகாய். 1:1, சக. 3:1-10).*

## யோசே (Joses)

1. கன்னி மரியாளின் குமாரரில் ஒருவன். இயேசுவின் சகோதரன் *(மத். 13:55; மாற்கு. 6:3).*

2. பர்னபாசுக்குரிய மறுபேர் *(அப். 4:36).*

## யோசேபாள் (Jehosheba)

இவள் யோராமுடைய மகள். அகசியாவின் சகோதரி. பிரதான ஆசாரியனாகிய யோய்தாவின் மனைவி. அத்தாலியாள் இராஜ குடும்பத்தாரெல்லாரையும் கொன்றபோது, அகசியா இராஜாவின் கடைசி மகனாகிய யோவாசையும் அவன் தாதியையும் ஒளித்துவைத்துப்

பாதுகாத்தாள் *(2 இரா. 11:2)*. இவள் பெயர் யோசேபியாத் என்றும் குறித்துள்ளது *(2 நாளா. 22:11)*.

## யோசேப்பு (Joseph)

யாக்கோபின் பதினோராம் மகன். ராகேலின் முதற்பிள்ளை *(ஆதி. 30:24)*. யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் மேலாக இவனை நேசித்து, இவனுக்கு பலநிறமுள்ள அங்கியைச் செய்வித்தான். இதினிமித்தம் யோசேப்பின் சகோதரர் அவனைப் பகைத்தார்கள் *(ஆதி. 37:3,4)*.

யாக்கோபுடைய மற்ற குமாரர் ஆடுகளை மேய்க்கும்படி சீகேமுக்குப் போய் இருக்கையில் அவர்களைப் போய் பார்த்து வரும்படிக்கு அவன் யோசேப்பை எபிரோனிலிருந்து அனுப்பினான் *(ஆதி. 37:14)*. யோசேப்பு அவர்களிடம் போனபோது, அவர்கள் அவனைப் பிடித்து இஸ்மவேலருக்கு விற்றுப்போட்டார்கள். அவர்கள் அவனை எகிப்துக்குக் கொண்டுபோய், போத்திபார் என்பவனிடத்தில் விற்றார்கள் *(ஆதி. 37:28-36)*.

அங்கே அவனைப் பற்றிச் சொல்லப்பட்ட ஒரு பொய்க் குற்றச்சாட்டினிமித்தம், காவலில் வைக்கப்பட்டான் *(ஆதி. 39:20)*.

பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான். சாஸ்திரிகள் ஒருவருக்கும் அதன் அர்த்தத்தைச் சொல்ல இயலாமற் போயிற்று. ஆகையால் யோசேப்பு கொண்டுவரப்பட்டு, அதன் அர்த்தத்தைச் சொன்னான். ஆனபடியால் பார்வோன் அவனை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான் *(ஆதி. 41:43)*. மேலும், அவனுக்கு 'சாப்நாத் பன்னேயா' என்று பேரிட்டு, ஆசாரியனாகிய போத்திபிராவின் குமாரத்தியை மனைவியாகக் கொடுத்தான். யோசேப்பு முப்பது வயதாயிருந்து, எகிப்து தேசம் முழுவதையும் சுற்றிப் பார்த்தான் *(ஆதி. 41:45-46)*.

பின்பு சகல தேசங்களிலும் பஞ்சம் உண்டாயிருந்தபடியால் கானான் தேசத்திலிருக்கும் யாக்கோபின் குமாரர் தானியங் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள். அவர்கள் யோசேப்பின் முன் கொண்டு போகப்பட்டபோது அவர்கள் அவனை அறியவில்லை. யோசேப்பு அவர்களை அறிந்துகொண்டான்.

யோசேப்பு தன் சகோதரரை வேறு விதமாய் சோதித்து அவர்களின் உண்மையை அறிந்தபின், தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினான். அதோடு அவர்கள் திரும்பிப் போய் தகப்பனையும் கூட்டிக் கொண்டு எல்லாரும் வந்து எகிப்தில் குடியிருக்கும்படிச் சொன்னான் *(ஆதி. 45:20)*.

அதன்படி யாக்கோபும் குமாரரும் அவர்களைச் சேர்ந்தவர்களும் எகிப்துக்குப்போய்ச் சேர்ந்தார்கள் (ஆதி. அதி 46). யோசேப்பு அவர்களை ஏற்றுக்கொண்டு கோசேன் நாட்டை அவர்களுக்குக் கொடுத்தான் (ஆதி. 47:1).

அதற்குப் பின் யாக்கோபு வருத்தமாயிருந்தான். யோசேப்பு அவனைக் காணும்படி தனது இரண்டு குமாரரையும் கூட்டிக் கொண்டு போனபோது யாக்கோபு அவர்களை ஆசீர்வதித்தான் (ஆதி. அதி 48).

பின்பு யாக்கோபு தன் குமாரரை அழைத்து, கடைசி நாள்களில் அவர்களுக்கு நேரிடும் காரியங்களை அறிவித்தபின் மரித்தான் (ஆதி. அதி 49). அவன் விரும்பியபடி அவனைக் கானான் தேசத்துக்குக் கொண்டுபோய், மக்பேலா குகையில் அடக்கம்பண்ணினார்கள் (ஆதி. 50:13).

அதன்பின் யோசேப்பும் அவன் தகப்பன் குடும்பத்தாரும் எகிப்தில் குடியிருந்தார்கள். யோசேப்பு தன்னுடைய மூன்றாம் தலைமுறைப் பிள்ளைகளையும் கண்டு நூற்றுப்பத்தாம் வயதில் மரணமடைந்தான். தன்னுடைய எலும்புகளைப் பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்துக்குப் போகும் போது, கொண்டு போகும்படி ஆணையிடுவித்தான் (ஆதி. 50:14-26).

யோசேப்பு இயேசுவுக்கு முன்னடையாளமென்று குறிப்பிடாதிருந்தும், அவர்களிருவருக்குமுள்ள ஒப்பான காரியங்கள் அநேகம்.

1. இவருடைய பிதாக்களும் அவர்களை அதிகமாக நேசித்தார்கள் (ஆதி. 37:3; மத். 3:17; யோவான். 3:35).

2. இருவரும் தங்களுடைய சகோதரரால் பகைக்கப்பட்டார்கள் (ஆதி. 37:4; யோவான் 15:25).

3. அவர்களுக்கிருந்த முதன்மையை சகோதரர் மறுத்தார்கள் (ஆதி. 37:8; மத். 27:37-39; யோவான் 15:24, 25).

4. இருவருடைய சகோதரரும் அவர்களைக் கொன்று போட துராலோசனை பண்ணினார்கள் (ஆதி. 37:18; மத். 26:3-4).

5. இருவரும் சகோதரரால் கொல்லப்பட்டார்கள் என்று ஒரு வகையில் சொல்லலாம் (ஆதி. 37:24; மத். 27:35,30).

6. இருவரும் புற ஜாதியாருக்கு ஆசீர்வாதமாகி அவர்களுக்குள் மணவாட்டியைத் தேடிக் கொண்டார்கள் (ஆதி. 41:45; எபே. 5:25-32).

7. யோசேப்பு தன்னோடு தன் சகோதரரை ஒப்புரவாக்கிக் கொண்டு அவர்களுக்கு மேலான நிலைமையைக் கொடுத்ததுபோல், இயேசுவும் யூத ஜாதியாகிய தன் சகோதரருக்குச் செய்வார் (ஆதி. 45:1-15; ரோமர். 11:1,15).

யோசேப்பின் குமாரராகிய எப்பிராயீம் மனாசே என்பவர்களை யாக்கோபு ஆசீர்வதிக்கையில் அவர்கள் இருவரும் ஜனக் கூட்டமாவார்கள் என்றான் (ஆதி. 48:19). அதுபோல் அவர்கள் இரு குலத்தாராயிருந்தும் யோசேப்பின் கோத்திரத்தா ரெனப்பட்டார்கள் (எண். 13:11; உபா. 27:12; நியா. 1:22-23; எசே. 47:13).

2. கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கப் போன இசக்கார் கோத்திரப் பிரபுவின் தகப்பன் (எண். 13:7).

3. சுரமண்டலம் வாசித்த ஆசாபின் குமாரனாகிய யோசேப்பு (1 நாளா. 25:2).

4. புறஜாதியான ஸ்திரீயை விவாகம் செய்தவன் (எஸ்றா. 10:42).

5. யோயாக்கீமின் நாள்களிலிருந்த ஓர் ஆசாரியன் (நெகே. 12:14).

## புதிய ஏற்பாட்டிலுள்ளவர்கள்

6. யோசேப்பு ஏலியின் குமாரன். இயேசுவின் தாயாகிய மரியாளின் புருஷன் (லூக்கா. 3:24). இவன் நாசரேத்தில் குடியிருந்த தாவீதின் வம்சத்தானான ஒரு மரத்தச்சன். குடிமதிப்பு எழுதப் படும்படி, இவனும் மரியாளும் பெத்லகேமுக்குப் போயிருக்கையில், இயேசு என்னும் ஒரு பிள்ளை அவளுக்குப் பிறந்தது (மத். 1:20; லூக்கா. 2:1-5) பிள்ளைக்கு மோசம் நேரிட இருக்கிறதென்று ஒரு தேவ தூதனால் எச்சரிக்கப்பட்டு யோசேப்பும், மரியாளும், பிள்ளையை எடுத்துக்கொண்டு எகிப்துக்குப் போயிருந்தபின், திரும்பி வந்து நாசரேத்தூரில் தங்கியிருந்தார்கள் (மத். 2:13; 19:23).

அதற்குப் பின் யோசேப்பு மரித்துப் போனதாகத் தெரிகிறது. ஏனெனில் தச்சுவேலை செய்தது இயேசு என்று குறித்துள்ளது (மத். 13:55; மாற்கு. 6:3). இயேசு மரிக்குமுன் சிலுவையிலிருந்து தன் தாயாகிய மரியாளைப் பராமரிக்கும்படி யோவானுக்கு ஒப்புவித்தார் (யோவான். 19:26,27).

இயேசு ஊழியஞ் செய்த நாள்களிலும், அவரைக் காணும்படி போக்குவரத்தாயிருந்தது அவருடைய தாயாரும் சகோதரருமே; யோசேப்பைப் பற்றிச் சொல்லப்படவில்லை (மத். 12:46; மாற்கு. 3:31; லூக்கா. 8:19).

7. யோசேப்பு (அரிமத்தியா ஊரான்)

இவன் ஐசுவரியமுள்ள, பயபக்தியான ஓர் இஸ்ரவேலன். இயேசுவின் அந்தரங்க சீஷன் (யோவான். 19:38). இவன் ஆலோசனைச் சங்கத்தின் அங்கத்தவனாயிருந்து, இயேசுவின்

மரணத்துக்குச் சம்மதியாதவனுமாயிருந்தான் (லூக்கா. 23:51). இவன் பிலாத்துவினிடம் இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, தன்னுடைய புதிய கல்லறையில் அடக்கம்பண்ணினான் (மத். 27:57-60).

8. பர்சபா எனப்பட்ட யோசேப்பு, இவனும் மத்தியாவும் யூதாசுடைய இடத்துக்கு ஒருவனைத் தெரிந்துகொள்ளும்படியாகப் பெயரிடப்பட்டார்கள் (அப். 1:23-25).

9. மரியாளின் புருஷனாகிய யோசேப்பின் முற்பிதாக்களாகிய மூன்று பேரின் பெயர் (லூக்கா. 3:24, 28, 30).

## யோதாம் (Jotham)

### (யேகோவா பரிபூரணமானவர்)

1. இவன் கிதியோனின் கடைசி மகன். அபிமெலேக்கு கிதியோனின் குமாரர் எழுபது பேரைக் கொலை செய்தபோது, இவன் ஒளித்திருந்து தப்பிக் கொண்டான் (நியா. 9:5). சீகேமியர் அபிமெலேக்கை இராஜா வாக்கினதை யோதாம் அறிந்து "மரங்கள் ஒரு முட்செடியை இராஜா வாக்கினதற்கு" ஒப்பிட்டு, ஒரு கட்டுக் கதையை அவர்களுக்குச் சொன்னான் (நியா. 9:6-15). அதன் பின் யோதாம் அபிமெலேக்குக்குப் பயந்து தப்பியோடி பேயேருக்குப்போய் குடியிருந்தான் (நியா. 9:21). மூன்று வருடங்களுக்குப்பின் யோதாமின் சாபம் பலித்தது (நியா. 9:57).

2. யூதாவின் 12ஆம் இராஜா (கி.மு. 751-735). உசியாவின் குமாரன். இவனுடைய தகப்பன் குஷ்டரோகியாயிருந்தபடியால் அவனோடு கூட இராஜாவாயிருந்தான். 25 வயதில் இராஜாவாகி பதினாறு வருடம் அரசாண்டான். இவன் ஆலயத்தில் ஓர் உயர்ந்த வாசலைக் கட்டி, யூதாவில் பட்டணங்களை எழுப்பி, அம்மோன் இராஜாவோடு யுத்தம்பண்ணி மேற்கொண்டு, தன் வழிகளைக் கர்த்தருக்கு முன் நேராக்கினான். பின்பு மரித்து தாவீதின் பட்டணத்தில் அடக்கம்பண்ணப்பட்டான் (2 இரா. 15:32,33, 38; 2 நாளா. 27:3-9).

3. காலேபின் சந்ததியான் (1 நாளா. 2:47).

## யோப்பா (Joppa)

### (அழகிய)

கர்மேலுக்கும் பலஸ்தீனாவின் தென் பாகத்துக்கும் இடையில், மத்திய தரைக்கடலோரத்திலுள்ள ஓர் இயற்கை துறைமுகமுள்ள பட்டணம். இது யாப்போ என்றும் சொல்லப்பட்டுள்ளது (யோசுவா. 19:46).

சாலொமோனின் நாள்களில் தீருவின் இராஜா, லீபனோனிலே மரங்களை வெட்டி, கடல் வழியாக யோப்பா மட்டும் கொண்டு வந்தான் (2 நாளா. 2:16).

யோனா, கர்த்தரின் சமூகத்திலிருந்துத் தப்பி ஓடி, தர்ஷீசுக்குப் போகும்படி, யோப்பாவில் கப்பல் ஏறினான் (யோனா. 1:3).

எஸ்றாவின் நாள்களிலும் தேவாலயம் கட்டுகிறதற்காக, கேதுரு மரங்களை லீபனோனிலிருந்து யோப்பாவுக்குக் கொண்டு வந்தார்கள் (எஸ்றா. 3:7).

பேதுரு லித்தாவிலிருந்து, யோப்பாவுக்கு வந்து, தொற்காளை உயிர்த்தெழுப்பினான் (அப். 9:36). பேதுருவுக்கு, ஒரு விசேஷமான தரிசனம் கிடைத்ததும் இங்கேயே (அப். 10:9-16).

பிற்காலங்களில் காலத்துக்குக் காலம், வெவ்வேறு ஜாதிகள் இந்தப் பட்டணத்தை ஆண்டார்கள்.

தற்போது, இது தெல்அவீவ் என்ற துறைமுகத்தைச் சேர்ந்ததாயிருக்கிறது.

## யோயாக்கீம் (Jehoiakim)

***(கி.மு. 609-598)***

***(கர்த்தர் நிறுத்துகிறார்)***

யோசியாவின் மகன். யூதாவின் இராஜா. எகிப்து இராஜாவாகிய நேகோ பலஸ்தீனாவை முற்றுகையிட்டு யோசியா இராஜாவைக் கொன்றுபோட்டு, இவனை இராஜாவாக நியமித்தான் (2 இரா. 23:34, 36).

பின்பு பாபிலோனியருக்கும் எகிப்தியருக்குமிடையில் கார்கேமீசில் நடந்த யுத்தத்தில் (கி.மு. 604) எகிப்தியர் தோல்வியடைந்ததினால், பலஸ்தீனா பாபிலோனியருக்குக் கீழாயிற்று. நான்கு வருடங்களின் பின் யோயாக்கீம் பாபிலோனியருக்குக் கொடுத்து வந்த திறையைக் கொடாமல் விட்டதினிமித்தம், நேபுகாத்நேச்சார் யூதேயாவை முற்றுகைப் போட்டு, எருசலேமைக் கைப்பற்றினான் (கி.மு. 597) இது நடப்பதற்கு சில மாதங்களின் முன், யோயாக்கீம் இறந்து போனான். பின்பு அவன் மகன் யோயாக்கீம் இராஜாவானான்.

யோயாக்கீம் எருசலேமைக் குற்றமற்ற இரத்தத்தினால் நிரப்பினான் (2 இரா. 24:4). இவன் விஸ்தாரமான வீடுகள் கட்டத் தொடங்கி ஜனங்களைக் கொடூரமாக ஆண்டான் (எரே. 22:13-17). இவனுடைய நாள்களில் விக்கிரகாராதனையும் அருவருப்பான கிரியைகளும் நடந்தன (எசே. 8:5-17).

உரியா தீர்க்கதரிசியைப் பட்டயத்தால் வெட்டி, அவன் உடலைப் பிரேதக் குழியில் எறிந்து விட்டான் (எரே. 26:23). எரேமியா தீர்க்கதரிசி எழுதின சுருளை அக்கினியில் போட்டான் (எரே. 36:23).

எரேமியா சொன்னபடி, ஒரு கழுதைப் புதைக்கப்படுகிற வண்ணமாய் இவனுடைய சரீரம் எருசலேம் வாசல்களுக்கு வெளியே இழுத்தெறிந்து புதைக்கப்பட்டது (எரே. *22:19;* தானி. *1:2).*

## யோயாக்கீன் (Jehoiachin)

### *(கர்த்தர் ஏற்படுத்தினார்)*

எகோனியா, கோனியா என்பது இவனுடைய மறு பெயர்கள் *(1* நாளா. *3:16;* எரே. *24:1).* இவனுடைய தகப்பன் யோயாக்கீம் மரித்த பின், இவன் பதினெட்டாம் வயதில் இராஜாவாகி, மூன்று மாதம் பத்து நாள் மாத்திரம் அரசாண்டான் *(2* இரா. *24:8; 2* நாளா. *36:9).*

பாபிலோன் இராஜாவாகிய நேபுகாத்நேச்சார், யூதேயாவை முற்றுகைப் போட்டபோது அவனை எதிர்த்துப் போவதில் பலனில்லையென்று கண்டு, தன்னை ஒப்படைத்தான். பாபிலோன் இராஜா அவனையும் பதினாயிரம் பேரையும் சிறைப்பிடித்துக்கொண்டு போனான் *(2* இரா. *24:14).* இவ்விதமே கி.மு. *597*இல் இஸ்ரவேலின் சிறையிருப்புத் தொடங்கிற்று. கி.மு. *561*இல் நேபுகாத்நேச்சாரின் மரணம் வரைக்கும், யோயாக்கீன் சிறைப்பட்டிருந்தான். ஏவில் மெரோதாக் இராஜாவானபோது, அவனை விடுதலை பண்ணி, உயர்ந்த சிங்காசனத்தில் வைத்து, தன்னுடைய விருந்தாளிபோல் நடத்தினான் *(2* இரா. *25:27-30).*

அவன் உயிரோடிருந்த நாளெல்லாம் அப்படிச் செய்யப்பட்டது (எரே. *52:31-34).*

## யோய்தா (Jehoiada)

### *(கர்த்தர் அறிவார்)*

*1.* யோய்தாவின் குமாரனாகிய பெனாயா கிரேத்தியருக்கும் பிலேயத்திற்கும் தலைவன் *(2* சாமு. *8:18).*

*2.* பெனாயாவின் குமாரன் யோய்தா தாவீதின் ஆலோசனைக் காரனாகிய அகித்தோப்பேலுக்கு உதவியாயிருந்தான் *(1* நாளா. *27:34).*

*3.* யூதா இராஜாவாகிய அகசியா மரணமடைந்தபின், அவனுடைய தாயாகிய அத்தாலியாள் அரசாண்டபோது பிரதான ஆசாரியனாயிருந்த யோய்தா *(2* இரா. *11:1-4).* இவன் அகசியா இராஜாவின் சகோதரியாகிய யோசேபாளை விவாகம் செய்தான். அத்தாலியாள் இராஜ குடும்பத்தாரை எல்லாம் கொன்றபோது, அகசியாவின் இளைய மகனாகிய யோவாசை இவர்கள் களவாய் எடுத்து பாதுகாத்து ஆறு வருடங்களின் பின், அவனை இராஜாவாக்கினார்கள் *(2* இரா. *11:4-16).* யோய்தாவின் ஆலோசனையைக் கேட்ட நாளெல்லாம், யோவாஸ் செம்மையாய் நடந்தான் *(2* இரா. *12:1-3).*

4. எரேமியாவின் நாள்களிலிருந்த யோய்தா (எரே. 29:26).

5. எருசலேமின் வாசலைப் பழுது பார்த்தவர்களில் ஒருவன் (நெகே. 3:6).

## யோராம் (Joram)

***(கர்த்தர் உயர்த்தப்பட்டார்)***

1. ஆகாப், யேசபேல் என்பவர்களின் மகன். இவனுடைய தமையன் அகசியா இராஜா பிள்ளையில்லாமல் மரித்தபடியால் இவன் இஸ்ரவேலின் இராஜாவானான் (கி.மு. 852-841). இவனுடைய நாள்களில் சீரியாவோடு யுத்தம் நடந்தது. மோவாபும் இவனுக்கு விரோதமாக கலகம்பண்ணினார்கள். இவன் யூதா இராஜாவாகிய யோசபாத்துடன் சேர்ந்து மோவாபியருக்கெதிராக யுத்தம் செய்து, அவர்களைத் தோற்கடித்தான்.

இவன் யெஸ்ரயேலுக்குப் போயிருந்த சமயத்தில், யெகூ எனபவன் கலகம்பண்ணி, அவனை அம்பினால் எய்து கொன்றான். அவனுடைய சரீரம் நாபோத்தின் வயல் நிலத்தில் எறிந்துவிடப் பட்டது (2 இரா. 1:1; 9:21-26).

எலிசா தீர்க்கதரிசி இவனுடைய நாள்களில் ஊழியம் செய்தான். ஆகிலும் யோராம், பாகால் வணக்கத்தை முற்றாய் விட்டு விடவில்லை (2 இரா. 3:3).

2. யூதாவின் இராஜா (கி.மு. 848-842). யோசபாத்தின் மகன் (2 இரா. 8:16-24; 2 நாளா. 21:1-20). இவன் ஆகாப் இராஜாவின் குமாரத்தியை விவாகம் செய்து, அவர்களைப்போல் பொல்லாப் பானதைச் செய்தான். இவன் தன் சகோதரர் ஆறு பேரைக் கொன்றான்.

இவனுக்கு வரும் தேவ தண்டனையைப்பற்றி எலியா தீர்க்கதரிசி இவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தான். அப்படியே அவன் கொடிய குடல் நோயினால் வாதிக்கப்பட்டு, இரண்டு வருடம் முடிகிற காலத்தில் விரும்புவாரில்லாமல் இறந்து போனான் (2 நாளா. 21:12-20).

3. யோராம் (Jehoram)) : ஆசாரியனான யோராம், யோசபாத் இராஜாவால், ஜனங்களுக்குப் போதிக்கும்படி இவனும் அனுப்பப் பட்டான் (2 நாளா. 17:8).

4. யோராம் தோயீயின் மகன். இவன் தாவீதின் சுகசெய்தியை விசாரிக்கவும், வாழ்த்துதல் சொல்லவும் அவனிடம் அனுப்பப் பட்டான் (2 சாமு. 8:10). இவனுடைய பெயர் அதோராம் என்று சொல்லப்பட்டுள்ளது (1 நாளா. 18:10).

*5.* தாவீதின் நாள்களிலிருந்த ஒரு லேவியனுடைய பெயர் *(1 நாளா. 26:25)* யோசபாத் என்றும் குறித்துள்ளது *(2 நாளா. 35:9)*.

## யோர்தான் (Jordon)
### *(இறங்கிப் பாயும் ஆறு)*

இது பலஸ்தீனா நாட்டிலுள்ள முக்கிய நதி. இது தெற்குப் பக்கமாக பாய்கிறது. கடல் மட்டத்திலிருந்து *230* அடி உயரத்திலுள்ள ஊலே (Huleh) என்னும் ஏரியிலிருந்து இது உற்பத்தியாகிறது.

இந்த ஆறு பத்து மைலுக்கப்பாலுள்ள திபேரியாக்கடலுக்கு வரும்போது மத்தியதரைக்கடல் மட்டத்திலிருந்து *700* அடி கீழிருக்கிறது. இங்கிருந்து *90* மைலுக்கப்பால், சாக்கடலில் விழும்போது, மத்திய தரைக்கடல் மட்டத்திலிருந்து *1292* அடி ஆழமுள்ளது.

இந்த நதியுடன் யாமேக், யாப்போக்கு என்ற இரு உப நதிகள் கிழக்கிலிருந்து வந்து சேருகின்றன. பொதுவாக இது ஒரு சிறு நதி. ஆனால் அறிப்புக் காலங்களில் கரை புரண்டு போவதுண்டு *(யோசுவா. 3:15)*. இந்த நதியில் சிறு வெள்ளங்களே போகக்கூடியதாக இருக்கும். கலிலேயாக் கடலுக்கும் செங்கடலுக்குமிடையில், அநேக இடங்களில் இவ்வாற்றைக் கடக்கக் கூடியதாக இருந்தது. கலிலேயாக் கடலுக்குக் கீழே, இப்போது மூன்று பாலங்கள் இருக்கின்றன. எரிகோவுக்கு எதிராகவும் ஒன்று உள்ளது.

இந்நதி ஊலே ஏரியிலிருந்து உற்பத்தியாகி சவக்கடலில் விழுகிறது. இவ்விரு இடங்களுக்குமிடையிலுள்ள தூரம் *75* மைல், ஆனாலும் இந்நதி சுற்றிச் சுற்றி ஓடுவதினால் *200* மைல் நீளமுள்ளது.

கானான் தேசத்திலுள்ள எரிகோவைக் கைப்பற்றும்படி, இஸ்ரவேல் ஜனங்கள், யோசுவாவின் தலைமையின் கீழ், உலர்ந்த தரை வழியாக இவ்வாற்றைக் கடந்து போனார்கள் *(யோசுவா. 3:5-17)*.

யாப்போக்குக்கருகே இருந்த பெனியேல் என்ற இடத்தில், யாக்கோபு ஒரு தேவ தூதனோடு போராடினான் *(ஆதி. 32:22-32)*.

இந்த ஆற்றங்கரையிலிருந்து, எலியா சுழல் காற்றிலே பரலோகத்துக்கேறிப் போனான் *(2 இரா. 2:11)*.

யாப்போக்கு அருகில் ஆபிரகாமும் யாக்கோபும் இந்த ஆற்றைக் கடந்தார்கள் *(ஆதி. 32:10)*.

இவ்விடத்திலே மீதியானியர் கிதியோனுக்குத் தப்பி, ஆற்றைக் கடந்தார்கள் *(நியா. 7:24; 8:4)*.

தாவீதும் அப்சலோமின் கலகத்தினிமித்தம் இரண்டு தடவைகளில், இதைக் கடந்து போனான் *(2 சாமு. 17:22; 19:15)*.

யோவான்ஸ்நானனும், இவ்வாற்றில் ஞானஸ்நானம் கொடுத்தான் *(மத். 3:6).*

இயேசுவானவரும் சோதிக்கப்பட்டது இந்த ஆற்றங்கரையி லென்று தெரிகிறது *(மத். 4:3; லூக்கா. 4:3).*

யெஸ்ரயேல் பள்ளத்தாக்குக்கூடாக ஓர் உபநதி ஓடி, யோர்தானுக்குள் விழுகிறது. இந்தப் பள்ளத்தாக்கு யோர்தானிலிருந்து யெஸ்திராவைத் தாண்டி நாசரேத்து மட்டும் போகிறது. எருசலேமிலிருந்துச் சமாரியாவுக்குப் போகாமல், நாசரேத்துக்குப் போக விரும்புவோர், இந்த வழியாய்ப் போவதுண்டு.

## யோவாகாஸ் (Jehoahaz)

*1.* இஸ்ரவேலின் இராஜாவாகிய யெகூவின் மகன். அவன் ஸ்தானத்தில் இவன் இராஜாவானான் *(2 இரா. 10:35).* கி.மு. 817இல் தகப்பனோடு ஆளத் தொடங்கி, 17 வருடம் அரசாண்டான் *(2 இரா. 13:1).* இவன் கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பானதைச் செய்ததினிமித்தம், கர்த்தர் சீரியாவின் இராஜாவாகிய ஆசகேலின் கையிலும், அவனுடைய குமாரனாகிய பெனாதாத்தின் கையிலும், இஸ்ரவேலை ஒப்புக்கொடுத்தார். யோவகாஸ் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினபோது, சிறுசகாயம் கிடைத்தது. இவன் மரித்து, சமாரியாவில் அடக்கம் பண்ணப்பட்டான் *(2 இரா. 13:2,9).*

*2.* யூதா இராஜாவாகிய யோசியாவின் குமாரரில் ஒருவன். யோசியா மரித்தபின் ஜனங்கள் அவனை, 23 வயதாயிருக்கையில், இராஜாவாக்கினார்கள். மூன்று மாதங்களின் பின், எகிப்தின் இராஜாவாகிய பார்வோன் நேகோ அவனைப் பிடித்து ரிப்லாவுக்குக் கொண்டு போய், எகிப்துக்கு அனுப்பி வைத்தான். அங்கே அவன் மரித்தான். நேகோ யோசியாவின் குமாரனாகிய எலியாக்கீமை இராஜாவாக்கி, அவன் பெயரை யோயாக்கீம் என்று மாற்றினான் *(2 இரா. 23:30-34; 2 நாளா. 36:1-4).*

யோவகாஸ், சல்லூம் என்றும் அழைக்கப்பட்டான் *(1 நாளா. 3:15; எரே. 22:10-12).*

*3.* யூதா இராஜாவாகிய யோராமின் இளைய மகன் *(2 நாளா. 21:17).*

## யோவாஸ் (Joash)

*1.* அகசியாவின் மகன். யூதாவின் ஒன்பதாம் இராஜா *(கி.மு. 836-796, 2 இரா. 11:21).* இவனுடைய தகப்பன், யெகூவின் காலத்தில் கொல்லப்பட்டபோது, இவனுடைய பாட்டி, அத்தாலியாள் இராஜ

குடும்பத்தாரைக் கொன்ற சமயத்தில், சிறு பிள்ளையாயிருந்த இவன் தப்ப வைக்கப்பட்டான். இவனுடைய மாமி யோசேப்பியாள், இவனை ஆறு வருடம் பள்ளி அறையில் ஒளித்து வைத்தாள். அதன் பின் பிரதான ஆசாரியனாகிய யோய்தா கலகம் எழுப்பி அத்தாலியாளைக் கொன்று, யோவாசை இராஜாவாக்கினான். இவன் பக்குவ வயதாகுமட்டும் யோய்தா தானே அரசாட்சி செய்தான்.

பின்பு யோவாஸ் இராஜ்யபாரம் எடுத்தபின் தேவாலயத்தைப் பழுது பார்த்து, அநேக சீர்த்திருத்தங்களைச் செய்தான். இவைகளை நடப்பிக்கிறதற்கு, யோய்தா உதவிக்காரனாயிருந்தான். யோய்தா மரித்தபின் ஜனங்கள் பின் வாங்கத் தொடங்கினார்கள்.

அதன்பின் சீரியாவின் இராஜாவாகிய ஆசகேல் எருசலேமுக்கு விரோதமாய் வந்தான். யோவாஸ் ஆலயத்திலும் அரண்மனையிலுமிருந்த பொன் யாவையும் அவனுக்குக் கொடுத்ததினால் அவன் திரும்பிப் போனான் *(2 இரா. 12:17-18)*.

யோய்தா மரித்தபின், ஜனங்கள் தோப்பு விக்கிரகங்களையும், சிலைகளையும் சேவித்தார்கள். யோய்தாவின் குமாரன் சகரியா ஆவியினால் ஏவப்பட்டு அவர்கள் மேல் தேவ தண்டனை வருமென்றான். இதினிமித்தம் அவனை, இராஜாவின் கற்பனையின்படி, கல்லெறிந்து கொன்றார்கள் *(2 நாளா. 24:20,21)*.

*2.* யெகூவின் வம்சத்தானாகிய யோவாகாசின் மகன். இஸ்ரவேலின் 12ஆம் இராஜா. கி.மு. 798-782 வரையும், அரசாண்டு பொல்லாப்பானதைச் செய்தான். இவனுடைய நாள்களில் சீரியரால், ஜனங்கள் அதிகமாய் நெருக்கப்பட்டார்கள்.

அந்நாள்களில் மரணத்துக்கேதுவாயிருந்த எலிசாவை இவன் காணப்போனபோது அடையாளங்கள் காட்டிச் சீரியர் மேல் வெற்றி கிடைக்கும் என்று எலிசா சொன்னான் *(2 இரா. 13:14-19)*.

யூதாவுக்கும் இஸ்ரவேலுக்குமிடையில் யுத்தம் நடந்தபோது யோவாஸ் யூதா இராஜாவாகிய அமத்சியாவைப் பிடித்து, எருசலேமுக்குப் போய், அதன் அலங்கத்தின் ஒரு பகுதியை இடித்துப்போட்டு, ஆலயத்திலும் அரண்மனையிலுமிருந்த பொன், வெள்ளி யாவையும் எடுத்துக் கொண்டு சமாரியாவுக்குத் திரும்பிப் போனான் *(2 இரா. 14:13,14)*.

பின்பு யோவாஸ் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் *(2 இரா. 14:16)*.

*3.* மனாசே கோத்திரத்து, அபியேஸ்ரியனான யோவாஸ். இவன் ஒப்ராவில் குடியிருந்தான். கிதியோனின் பிதா *(நியா. 6:11, 29,30)*.

*4.* யூதா கோத்திரத்து சேலாகின் சந்ததியான் *(1 நாளா. 4:21,22)*.

5. சிக்லாகிலே தாவீதோடு இருந்த பென்யமீன் கோத்திரத்தான் (1 நாளா. 12:3).

6. ஆகாப் இராஜாவின் மகன் (1 இரா. 22:26; 2 நாளா. 18:25).

7. தாவீதின் எண்ணெய் பொக்கிஷங்களின் விசாரிப்புக்காரன் (1 நாளா. 27:28).

## யோவாப் (Joab)

இவன் தாவீதின் சகோதரி முறையான செருயாவின் மூன்று குமாரரில் மூத்தவன் (2 சாமு. 2:18).

யோவாப் தாவீதின் சேனைகளுக்குத் தலைவனாயிருந்தான். அப்னேர் இஸ்போசேத்தின் மனுஷரோடு கிபியோனின் குளத்தண்டையில் கூடினபோது, இவன் தாவீதின் மனுஷரோடு போய் அவர்களைத் தோற்கடித்தான். இவனுடைய தம்பி ஆசகேல் அப்னேரை பின் தொடர்ந்து போனதால் அவனால் கொல்லப்பட்டான் (2 சாமு. 2:23).

பின் இரு பகுதியினருக்குமிடையில் யுத்தம் நடந்துகொண்டே யிருக்கையில் அப்னேர் தாவீதோடு ஒப்புரவாக எத்தனித்ததி னிமித்தம் யோவாப் அவனைத் தந்திரமாய்க் கொன்றான் (2 சாமு. 2:27-30).

தாவீது அப்னேருக்காகத் துக்கம் கொண்டாடி, கர்த்தர் அந்தப் பொல்லாப்புக்குத் தக்கதாய் சரிக்கட்டுவாராக என்றான் (2 சாமு. 3:31-35).

ஆகிலும், எபூசியரின் கோட்டையைப் பிடிக்க யோவாப் முந்திப் போனதினால், தாவீது அடிமைச் சேனைக்குத் தலைவனாக்கினான் (1 நாளா. 11:6-8).

பின்பு தாவீது, பத்சேபாளின் விஷயத்தில், உரியாவைக் கொன்றுபோட சதியோசனை செய்த வேளையில் இவனும் உதவியாயிருந்தான் (2 சாமு. 11:6-26).

யோவாப் அம்மோனியரோடு யுத்தம் செய்து ரப்பா இராஜதானியைப் பிடித்தபின் தாவீதை அழைத்தான். தாவீது போய், அந்த இராஜாவின் கிரீடத்தை எடுத்து, தலையில் வைத்து புகழ்ச்சி பெற்றான் (2 சாமு. 12:26-31).

தாவீது அப்சலோமை அழைப்பித்து அவனை ஏற்றுக் கொள்வதற்கு யோவாப் காரணகாரனாயிருந்தான் (2 சாமு. 14:33). ஆகிலும் பின்பு யுத்தம் நடந்தபோது, தாவீதின் சொல்லுக்கு எதிராக

யோவாப் அப்சலோமை வல்லயங்களால் குத்தினான் (2 சாமு. 18:14). இதின்பின் இராஜா யோவாபுக்குப் பதிலாக அமாசாவைப் படைத் தலைவனாக்கினான் (2 சாமு. 19:13). பின்பு சேபா கலகம் பண்ணின போது, யோவாப் அதை அமர்த்திப் போட்டு, அமாசாவையும் கொன்றுபோட்டான் (2 சாமு. 20:12).

ஜனங்களை இலக்கம் பார்க்கும்படி தாவீது யோவாபிடம் சொன்னபோது, யோவாப் அதைத் தடுக்க முயன்றான் (2 சாமு. 24:2-4).

சாலொமோன் இராஜாவான பின் யோவாப் சிந்தின இரத்தப் பழியினிமித்தம் அவனைக் கொன்றான் (1 இரா. 2:30-34).

2. செராயாவின் மகன் (1 நாளா. 4:14).

3. செருபாபேலோடு திரும்பி வந்தவர்களில் ஒருவன் (எஸ்றா. 2:6; நெகே. 7:11).

## யோவான் (John)

1. சீமோன் பேதுருவின் தகப்பன். யோனாவென்றும் அழைக்கப் பட்டான் (யோவான் 1:42; 21:15-17).

2. பிரதான ஆசாரியனின் குடும்பத்தைச் சேர்ந்தவன். எருசலேமில் கூடின ஆசாரிய கூட்டத்துக்கு இவன் போயிருந்தான் (அப். 4:6).

3. யோவான், மாற்கு எனப்பட்டவன்.

4. அப்போஸ்தலனாகிய யோவான்.

## யோவான்ஸ்நானன் (John the Baptist)

இயேசுவுக்கு முன்னோடி, யூதாவின் மலைத் தேசத்தில், வயோதிபரும் தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களுமாயிருந்த சகரியா, எலிசபெத்து என்பவர்களுக்கு கி.மு. 5இல் இவன் பிறந்தான்.

இவனுடைய பிறப்பும், பெயரும், இவன் நசரேயனாயிருந்து இயேசுவுக்கு முன்னோடியாயிருப்பானென்பதும், காபிரியேல் தேவ தூதனால், இவன் தகப்பனுக்கு முன்னறிவிக்கப்பட்டது. இவனுடைய தாய் இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு சகோதரி முறையானவள் (லூக்கா. 1:5-25).

இவன் வனாந்தரத்தில் கண்டிதமாய் ஜீவித்து எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் வளர்ந்தான் (லூக்கா. 1:17, 80).

கி.பி. 26இல் யோவான் தன் ஊழியத்தைத் தொடங்கி "மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று

பிரசங்கித்து, தன்னிடம் வந்து தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான் *(மத். 3:6).*

ஞானஸ்நானம் பெறப் போனவர்களுக்குள் இயேசுவும் போயிருந்தார். அவன், அவரோடு இதைப்பற்றி ஆட்சேபித்தபின், ஞானஸ்நானம் கொடுத்தான். அவர் கரையேறினபோது, ஆவியானவர் புறாவைப்போல் அவர் மேல் இறங்கினதை யோவான் கண்டு இயேசுவே மேசியா என்று அறிந்துகொண்டான் *(மத். 3:13-17; யோவான். 1:32,33).*

மறுநாளில் யோவான் அவரைக் கண்டு "இதோ தேவ ஆட்டுக்குட்டி" என்று சொன்னதை அவனுடைய சீடரான இரண்டு பேர் கேட்டு இயேசுவுக்குப் பின் சென்றார்கள் *(யோவான் 1:35-42).*

இவ்விடமிருந்து யோவான், ஏரோது அந்திப்பா இருந்த பெரோயா பக்கம் போய், ஊழியம் செய்தான். அங்கே ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியைத் தன் மனைவியாக்கிக் கொண்டதினிமித்தம், யோவான் அவனைக் குற்றம் சாட்டினான் *(மத். 14:4).* இதன் காரணமாக யோவான் காவலில் வைக்கப்பட்டான்.

அங்கிருந்து யோவான், "வருகிறவர் நீர்தானா?" என்று கேட்கும்படி, தன் சீடரில் இரண்டு பேரை இயேசுவினிடத்தில் அனுப்பினான். இயேசு, அவர்களுக்குப் பிரதியுத்தரமாக, தாம் செய்கிறவைகளைக்கண்டு அவனுக்குப் போய் அறிவிக்குமாறு கூறினார் அவர்கள் போன பின், இயேசு அவனைக் குறித்து ஜனங்களிடம் புகழ்ந்து பேசினார் *(மத். 15:2-15).*

பின்பு ஏரோதின் ஜென்ம நாள் கொண்டாட்டத்தில் ஏரோது யோவானைச் சிரச்சேதம் பண்ணுவித்தான். அவனுடைய சீடர் அவனை அடக்கம் பண்ணினார்கள் *(மாற்கு. 6:21-29).*

எலியா முந்தி வரவேண்டுமென்று வேத பாரகர் சொல்லுகிறார்களென்று சீஷர் அவரிடம் சொன்னபோது, இயேசு வருகிறவனாகிய எலியா இவன்தான் என்றும், நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வார்த்தைகளும் யோவான்வரைக்கும் என்றும் அது முதல் தேவனுடைய இராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறதென்றும், எலியா முந்தி வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்றும் சொன்னார். ஆனாலும் எலியா வந்தாயிற்று. அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள் என்றார் *(மத். 17:10-12; மாற்கு. 9:11-13).*

யோவானுடைய ஊழியம் ஜனங்களுக்குள் நீடித்த செல்வாக்குள்ளதாயிருந்தது. அவன் கொடுத்த ஞானஸ்நானம்

தேவனால் உண்டானதென்றும் அவன் ஒரு தீர்க்கதரிசி என்றும், ஆசாரியரும் மற்றவர்களும் எண்ணியிருந்தார்கள் *(லூக்கா. 20:4-8).*

மோசே கானான் தேசத்துக்குட்படாமல் அதைப் பார்த்து விட்டு மரித்ததுபோல், யோவானும் தேவ இராஜ்யத்தைக் கண்டபின் மரித்தான்.

## யோவேல் (Joel)

*1. பெத்துவேலின் மகன். தீர்க்கதரிசிகளில் ஒருவன் (யோவேல் 1:1).*

*2. சாமுவேல் தீர்க்கதரிசியின் மகன் (1 சாமு. 8:2; 1 நாளா. 6:33).*

*3. சாமுவேலின் முற்பிதாவாகிய ஒரு கோகாத்திய லேவியன் (1 நாளா. 6:36).*

*4. சிமியோன் கோத்திரத்து அதிபதி (1 நாளா. 4:35).*

*5. தாவீதின் பராக்கிரமசாலிகளில் ஒருவன் (1 நாளா. 11:38).*

*6. அந்நிய ஸ்திரீயை விவாகம் செய்தவன் (எஸ்றா. 10:43).*

*7. பென்யமீன் கோத்திரத்து விசாரிப்புக்காரன் (நெகே. 11:9).*

## யோனத்தான் (Jonathan)

*இவன் சவுல் இராஜாவின் மூத்த மகன் (1 சாமு. 14:49). சவுல் இராஜ்யபாரம் பண்ணும் நாள்களில் இவன் கேபாவிலே தாணையம் இருந்த பெலிஸ்தரை முறிய அடித்தான் (1 சாமு. 13:3). பின்னும் ஒரு தடவை பெலிஸ்தர் மிக்பாஸ் மட்டும் வந்து, பாளயமிறங்கி இருக்கையில், இவன் தன் ஆயுததாரியுடன், தேவன் துணை நிற்க, அவர்களை முறிய அடித்தான் (1 சாமு. 14:14). அதோடு யுத்தம் பலத்தது. சவுல் யுத்தம் முடியுமுன், போஜனம் பண்ணுகிறவன் சபிக்கப்பட்டவனென்று ஆணை இட்டான். யோனத்தான் அறியாமல் அதை மீறினபோதிலும் அவன் சாக வேண்டும் என்று சவுல் சொன்னான். ஜனங்கள் அவனைத் தப்புவித்தார்கள் (1 சாமு. 14:24,25; 44:45).*

*சவுல் தாவீதைக் கொல்ல வகை தேடினபோது, இவன் தாவீதுக்கு உதவியாயிருந்ததினிமித்தம் சவுல் இவன் மேல் கோபமாயிருந்தான் (1 சாமு. 20:23-24).*

*தாவீது கோலியாத்தைக் கொன்றபின், யோனத்தான் அவனைச் சிநேகித்து இருவரும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள் (1 சாமு. 18:3).*

சவுல் தாவீதைக் கொன்று போடும்படி, யோனத்தானோடும் மற்றவர்களோடும் பேசின போது யோனத்தான் தாவீதுக்கு அதை அறிவித்து அவனைத் தப்பவைத்தான் *(1 சாமு. 19:1-7).*

இன்னுமொரு முறை, யோனத்தான் தாவீதைச் சீப் வனாந்தரத்தில் சந்தித்து, இருவரும் ஒருவருக்கொருவர் ஆணையிட்டுக் கொண்டார்கள் *(1 சாமு. 23:15-17).*

சவுலின் கடைசி நாள்களில், பெலிஸ்தரோடு நடந்த யுத்தத்தில், சவுலும் யோனத்தானும் மாண்டுபோனார்கள் *(2 சாமு. 1:4; 21:12-14).* யோனத்தானின் மகனாகிய மேவிபோசேத் தப்பித்துக் கொண்டான்.

2. மோசேயின் மகனாகிய கெர்சோமின் சந்ததியான். மீகா என்பவன் இவனை அழைத்து, தன் சுரூபங்களுக்கு ஆராதனை செய்யும்படி, இவனை ஆசாரியனாக்கினான் *(நியா. 17:1-8).*

பின்பு தாண் கோத்திரத்தார் சிறைபட்டுப் போகுமட்டும், இவனும், இவன் சந்ததியாரும் அவர்களுக்கு ஆசாரியராயிருந்தார்கள் *(நியா. 18:30).*

3. அபியத்தாரின் மகன். தாவீதின் நாள்களில் பிரதான ஆசாரியன். இவனும் அகிமாசும், அப்சலோம் கலகம் செய்த நாள்களில் எருசலேமிலிருந்துத் தாவீதுக்குச் செய்திகள் அனுப்பினார்கள் *(2 சாமு. 15:27,36; 1 இரா. 1:42,43).*

4. தாவீதின் சகோதரனாகிய சீமேயாவின் குமாரன். இவன் காத் ஊரானாகிய ஓர் இராட்சதனை வெட்டிக் கொன்றான் *(2 சாமு. 21:21; 1 நாளா. 27:32).*

5. தாவீதினுடைய பராக்கிரமசாலிகளில் ஒருவன் *(2 சாமு. 23:32; 1 நாளா. 11:34).*

6. எரேமியா, காவலில் வைக்கப்பட்டிருந்த வீட்டுச் சொந்தக்காரன் *(எரே. 37:20).*

7. யூதேயா தேசத்தானாகிய யாதாவின் குமாரன் *(1 நாளா. 2:32).*

8. கரேயாவின் மகன். இவன் எருசலேமின் அதிகாரியாயிருந்த கெதலியாவைச் சேர்ந்திருந்தான் *(எரே. 40:8,9).*

8. ஓபேத் என்பவனின் தகப்பன் *(எஸ்றா. 8:6).*

10. யோயாக்கீம் என்ற பிரதான ஆசாரியனோடிருந்த ஆசாரியன் *(நெகே. 12:14).*

11. ஒரு லேவியன் *(நெகே. 12:35).*

## யோனா (Jonah)

*1.* கலிலேயாவிலுள்ள காத்தேப்பேர் ஊரின் அமித்தாயின் மகன். கி.மு. 800க்குப் பின் இருந்த ஒரு தீர்க்கதரிசி. இவன் இஸ்ரவேலின் தேசம் விசாலமாகும் என்று தீர்க்க்தரிசனமாய் முன்னறிவித்தான் *(2 இரா. 14:25).*

யோனா புத்தகம் இவனால் எழுதப்பட்டது. தீர்க்கதரிசிகளெல்லாரிலும் இவன் முந்தினவன் என்பது வேத சாஸ்திரிகளின் தீர்மானம். இவன் பின் வாங்கின இஸ்ரவேலின் வட இராஜ்யத்தைச் சேர்ந்த செபுலோன் கோத்திரத்தான்.

*2.* ஒரு தீர்க்கதரிசி, இவன் யெரொபெயாம் நாள்களில் இருந்தவன் *(2 இரா. 14:25).*

*3.* சீமோன் பேதுருவின் தகப்பன் *(மத். 16:17; யோவான் 21:15).*

## ரபீ (Rabbi)

யூதர் தங்களுடைய ஆசாரியருக்கும், போதகர்களுக்கும், படித்தவர்களுக்கும் கொடுத்த பட்டப்பெயர் *(மத். 23:7,8).* பல தடவைகளில் இந்தப் பெயரால் இயேசுவை அழைத்தார்கள் *(யோவான். 1:38,49 3:2; 6:25;).* யோவான் ஸ்நானனுக்கும் இந்தப் பெயர் உபயோகிக்கப்பட்டது *(யோவான். 3:26).*

ரபூனி, இது ரபீ என்பதிலும் மேன்மையான சொல். நமது ஆண்டவர் இந்தப் பெயரால் அழைக்கப்பட்டார் *(யோவான். 20:16).*

## ரப்சாக்கே (Rab-Shakeh)

இவன் அசீரிய இராஜாவாகிய சனகெரிப்பின் கீழிருந்த ஓர் உத்தியோகஸ்தன். இராஜா இவனையும் தர்தானையும் ரப்சாரீசையும், லாகீசிலிருந்து எருசலேமுக்கு, எசேக்கியாவிடம் இராஜ்யத்தை ஒப்புவிக்கும்படி கேட்க அனுப்பியிருந்தான் *(2 இரா 18:17).*

அப்பொழுது எலியாக்கீமும் செப்னாவும், யோவாக்கும் அவர்களைச் சந்திக்கப் போய் தங்களோடு யூத பாஷையில் பேசாமல், சீரிய பாஷையில் பேசும்படி கேட்டார்கள் *(ஏசாயா. 35:11).* அவர்கள் அதற்குச் சம்மதியாமல், எசேக்கியா இராஜாவை நிந்தித்துப் பேசினார்கள். பின்பு எசேக்கியாவின் வேண்டுகோளின்படி ஏசாயா விண்ணப்பம் செய்ததினால் அசீரிய சேனை அழிக்கப்பட்டது *(2 இரா. 19:35; ஏசாயா. 37:36).*

## ராகாப் (Rahab)

இவள் எரிகோ பட்டணத்தில் ஒரு சத்திரம் வைத்திருந்தாள். யோசுவா அனுப்பின வேவுக்காரர் இவள் வீட்டுக்குப் போனார்கள். எரிகோவின் இராஜா அவர்களைப் பிடிக்க ஆள்களை அனுப்பினபோது, இவள் அவர்களை ஒளித்து வைத்து, வேறே வழியாய் அனுப்பிவிட்டாள் *(யோசுவா. 2:1, 22).*

இதினிமித்தம் எரிகோ பட்டணம் பிடிக்கப்பட்ட வேளையில், இவளும் இவளுடைய குடும்பத்தார் யாவரும் தப்புவிக்கப் பட்டார்கள். பின்பு இவர்கள் இஸ்ரவேலரோடு சேர்ந்து கொண்டார்கள் *(யோசுவா. 6:16-25).*

ராகாபுடைய விசுவாசத்தின் மேன்மையும், அவள் கிரியையினால் நீதியுள்ளவளாக்கப்பட்டதும் வேதாகமத்தில் குறித்துள்ளது *(எபி. 11:31; யாக். 2:25).*

அவள் தாவீதின் முன்னோடியாளென்றும், அவளுடைய வம்சத்தில் இயேசு பிறந்தாரென்றும் சொல்லியுள்ளது *(மத். 1:5).*

2. ராகாப் என்பதின் அர்த்தம் மேட்டிமை, அகங்காரம். இந்தக் கருத்தோடு எகிப்தைக் குறித்தும் சொல்லியுள்ளது *(சங். 87:4, 89:10)* ஏசாயா. 51:9இல் இராகாப் என்று சொல்லியுள்ளது.

## ராகேல் (Rachel)

***(செம்மறி)***

லாபானுடைய இளைய மகள். இவள் ரூபவதியும், பார்வைக்கு அழகானவளுமாக இருந்தாள். யாக்கோபு பிரயாணம்பண்ணி ஆரானுக்குப் போனபோது இவளை முதன் முதலில் சந்தித்தான் *(ஆதி. 29:9-17).*

பின்பு யாக்கோபு இவளை விவாகம் செய்ய விரும்பி, லாபானிடம் கேட்டு ஏழு வருடம் ஊழியம் செய்தான் *(ஆதி. 29:18-20).* ஏழு வருடமான பின் லாபான் இவனை வஞ்சித்து லேயாளை மனைவியாகக் கொடுத்தான். யாக்கோபு இதைப் பற்றி லாபானோடு பேசி இன்னும் ஏழு வருடம் வேலை செய்து, ராகேலையும் விவாகம் பண்ணினான் *(ஆதி. 29:25-29).*

லேயாள் கர்ப்பந்தரித்து பிள்ளைகளைப் பெற்றாள். ராகேல் மலடியாயிருந்தாள் *(ஆதி. 21:31).* அப்பொழுது ராகேல் தானும் பிள்ளைகளை வளர்க்க விரும்பி தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுக்கு மனைவியாகக் கொடுத்தாள். தாண், நப்தலி என்னும் பிள்ளைகள் பிறந்தார்கள் *(ஆதி. 30:3-8).*

இதன் பின் தேவன் ராகேலை நினைத்தருளி அவளுக்குச் செவி கொடுத்து, அவளைக் கர்ப்பந்தரிக்கச் செய்தார். அப்படியே அவள் ஒரு குமாரனைப் பெற்று, யோசேப்பு என்று பேரிட்டாள் (ஆதி. 30:22-24).

ஆறு வருடங்களுக்குப் பின், யாக்கோபு தன் தேசத்துக்குத் திரும்பிப் போக புறப்பட்டபோது, ராகேல் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக்கொண்டு போனாள் (ஆதி. 31:19).

லாபான் அவர்களைத் தொடர்ந்து போய், கீலேயாத் மலையில் கண்டுபிடித்தும் சுரூபங்களைக் கண்டுபிடிக்கவில்லை (ஆதி. 31:34). ஆனாலும் ராகேலின் செய்கை யாக்கோபுக்குத் தெரியாதிருந்தது.

அவர்கள் பிரயாணம் பண்ணி, பெத்தேலுக்குப் பலி செலுத்தப் போகுமுன், யாக்கோபின் சொற்படி அந்நிய தெய்வங்களையும், காதணிகளையும் அவனுக்குக் கொடுத்தார்கள். அவன் அவைகளை ஒரு கர்வாலி மரத்தின் கீழ் புதைத்தான் (ஆதி. 35:4). பிற்பாடு ராகேல் எப்பிராத்தாவுக்குப் போகும்வழியில் பிள்ளை பேற்றின்போது மரித்தாள். மரிக்கும்முன் பிள்ளைக்குப் "பெனோனி" என்று பெயரிட்டாள் (ஆதி. 35:16-18). அவளைப் பெத்தேலுக்கு அருகே அடக்கம்பண்ணி கல்லறையின் மேல் ஒரு தூணை நிறுத்தினான் (ஆதி. 35:20).

பென்யமீன், எப்பிராயீம், மனாசே என்னும் கோத்திரங்கள் இவளிலிருந்து தோன்றின. லேயாளும் இவளும் இஸ்ரவேல் வீட்டைக் கட்டினவர்களென்று குறித்துள்ளது (ரூத். 4:11).

ராகேல் மரித்து, பல நூற்றாண்டுகளுக்குப்பின், அசீரியரால் சிறைப்பட்டுப்போன இஸ்ரவேலரைக் குறித்து, "ராகேல் ராமாவிலே தன் பிள்ளைகளுக்காக அழுது துக்கங்கொண்டாடுகிறாளென்று" எரேமியா தீர்க்கதரிசி உவமையாய் எடுத்துச்சொல்லுகிறான் (எரே. 31:15-17).

பிற்காலங்களில் பெத்லகேமின் குழந்தைகளை ஏரோது கொடூரமாய்ச் சங்காரம் செய்ததினிமித்தம் உண்டான கூக்குரலுக்கு முன்னறிவிப்பாகவும் சொல்லியுள்ளது (மத். 2:17).

## ராஜ்யம் (Kingdom)

வேதாகமத்தில் பல இடங்களில் உலக இராஜ்யத்தைப் பற்றிக் குறித்துள்ளது. மெனாகேம் இராஜ்யபாரத்தைத் தன் கையில் பலப்படுத்தினான் (2 இரா. 15:19). ஆனால் இராஜ்யம் என்பது வேறு கருத்துமுள்ளது, "இராஜ்யம் கர்த்தருடையது; அவர் ஜாதிகளை ஆளுகிறவர்" (சங். 22:28). உமது இராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ளது (சங். 145:13). இவை சர்வலோகம் தேவனால் ஆளப்படுகிறதென்பதைக் கருதுகின்றன.

வேறே இராஜ்யங்களுமுண்டு. கர்த்தருடைய ஜெபத்தில் "உம்முடைய இராஜ்யம் வருவதாக" (மத். 6:10) என்பது ஆவிக்கடுத்த கருத்துள்ளது. இது இயேசு சொன்ன உவமைகளில் "பரலோக இராஜ்யம்" என்று மத். 13:24, 31, 33-44லும் "தேவனுடைய இராஜ்யம்" எனறு மாற்கு 4:11,26; லூக்கா. 14:15லும் குறித்துள்ளது. இயேசுதாமே தமது இராஜ்யம்" இவ்வுலகத்துக்குரியதல்ல என்று சொன்னார் (யோவான் 18:36). இது உலகத்திலுள்ள கிறிஸ்துவின் இராஜ்யம். உலகத்தில் எழும்பி, என்றென்றைக்கும் நிலைநிற்கும் (தானி. 2:44; வெளி. 20:4-6) என்பதும் தெரியவருகிறது.

## ராமா (Rama)

இந்தப் பெயரின் அர்த்தம் உயர்ந்த இடம். இது பென்யமீன் கோத்திரத்தாருக்குக் கொடுக்கப்பட்ட பட்டணங்களில் ஒன்று. எருசலேமிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது (யோசுவா. 18:25).

ஒரு லேவியன், தன் மறுமனையாட்டியுடன் பிரயாணம் போகையில் இவ்விடத்தில் இராத்தங்கினான். இது சம்பந்தமாய் அங்கே பெரிய குழப்பம் உண்டாயிற்று (நியா. 19:13).

பெத்தேலுக்கும், ராமாவுக்குமிடையில் தெபொராள் குடியிருந்தாள் (நியா. 4:5).

யூதா இராஜா ஆசாவுக்கும், இஸ்ரவேல் இராஜா பாஷாவுக்கு மிடையில் யுத்தம் நடந்தபோது பாஷா ராமாவைக் கட்டினான். பின்பு ஆசா அதை உடைத்து அதன் மரங்களால் கேபாவையும், மிஸ்பாவையும் கட்டினான் (1 இரா. 15:17-22; 2 நாளா. 16:1-6).

எருசலேம் விழுந்த பின், நெபுசராதான் சிறைப்பட்டவர்களை இவ்விடத்தில் சேர்த்தான் (எரே. 40:1).

சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்தவர்கள் இங்கே குடியேறினார்கள் (எஸ்றா. 2:26; நெகே. 11:33).

இது ராகேலின் கல்லறைக்கு அருகில் இருந்ததாகத் தெரிகிறது (எரே. 31:15; 1 சாமு. 10:2; மத். 2:17).

2. எப்பிராயீம் மலைத் தேசத்திலுள்ள ஒரு பட்டணம். சோபயீம், ராமதாயீம் என்றும் குறித்துள்ளது. சாமுவேல் பிறந்ததும், குடியிருந்ததும் இவ்விடத்திலேயே (1 சாமு. 1:1-19; 2:11; 7:17; 8:4; 15:34; 16:13).

தாவீது சவுலுக்குத் தப்பி ஓடிப்போய் இங்கே ஒதுக்கிடம் தேடினான் (1 சாமு. 19:18-23; 20:1; 22:6).

சாமுவேல் மரித்து அடக்கம் பண்ணப்பட்டதும் ராமாவிலேயே (1 சாமு. 25:1; 28:3).

3. ஆசேருக்குள்ள ஒரு பட்டணம் (யோசுவா. 19:29).

4. நப்தலி தேசத்திலுள்ள ஒரு பட்டணம் (யோசுவா. 19:36).

5. ராமோத் என்று 1 சாமு. 30:27இல் குறித்துள்ளது (2 இரா, 8:28; 2 நாளா. 22:5).

## ராமோத் - கீலேயாத் (Ramoth - Gilead)

காத்தியரைச் சேர்ந்த, கீலேயாத்திலுள்ள ஓர் அடைக்கலப்பட்டணம் (உபா. 4:43; யோசுவா. 20:8; 21:38). இது லேவியராகிய மெராரி புத்திரருக்குக் கொடுக்கப்பட்டது (யோசுவா. 21:38; 1 நாளா. 6:80).

சாலொமோனின் மணியகாரரில் ஒருவனாகிய கேபேரின் குமாரன் இவ்விடத்திலிருந்தான் (1 இரா. 4:13).

ஓம்ரியின் நாள்களில், சீரியர் இந்தப் பட்டணத்தைப் பிடித்தார்கள். இதைத் திரும்ப எடுக்கும்படி, ஆகாப் யோசபாத்தைக் கூட்டிக் கொண்டு போனபோது, காயப்பட்டு இறந்து போனான் (1 இரா. 22:1-40; 2 இரா. 8:28; 2 நாளா. 18:22,5).

இங்கே யெகூ இராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான் (2 இரா. 9:1-4; 2 நாளா. 22:7).

பிற்காலங்களில் இந்தப்பட்டணம் மிஸ்பே என்று சொல்லப் பட்டதாகத் தெரிகிறது.

## ராயன் (Caesar)

ரோமாவில் அரசாட்சி செய்த ஜூலிய குடும்பத்தார் "சீசர்" என்ற பட்டப் பெயரை எடுத்தார்கள். தமிழில் ராயன் என்று மொழி பெயர்த்துள்ளது.

காயு ஜூலியஸ் சீசர் மரித்த பின், அகுஸ்து என்பவன் "ராயன்" என்ற பட்டப் பெயரை எடுத்ததினால், அவனுக்குப் பின் வந்த ராயரெல்லாரும் இரு நூறு வருடக் காலமாய் அதை வழங்கினார்கள்.

புதிய ஏற்பாட்டுக் காலங்களில் பதினொரு ராயர் இருந்த போதிலும், நான்குபேரைப் பற்றியே வேதாகமத்தில் குறித்துள்ளது.

1. அகுஸ்து ராயன் (கி.மு. 31 - கி.பி. 14) : இவன் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்பட வேண்டும் என்று கட்டளையிட்டான் (லூக்கா. 2:1). இந்தக் கட்டளையினிமித்தம் மரியாளும் யோசேப்பும்

பெத்லகேமுக்குப் போன வேளையில், மீகாவுடைய தீர்க்கதரிசனம் (மீகா 5:2) நிறைவேறும்படி மேசியா அங்கே பிறந்தார்.

2. திபேரியு ராயன் (கி.பி. 14-37) : இவன் அகுஸ்து ராயனின் மருமகன். அவனுக்குப் பின் ராயனாய் வந்தான். இவனுடைய 15ஆம் வருடம், யோவான் ஸ்நானன் தன் ஊழியத்தைத் தொடங்கினான்.

3. கிலவுதியு ராயன் (கி.பி. 1-54) : இவனுடைய நாள்களில் அகபு தீர்க்கதரிசியால் முன்னறிவிக்கப்பட்ட பஞ்சம் உண்டாயிற்று (அப். 11:28). இவனே யூதரை ரோம தேசத்திலிருந்துத் துரத்திவிட்டான். அப்பொழுது ஆக்கில்லா, பிரிஸ்கில்லா என்பவர்களும் தேசத்தை விட்டுப் போனார்கள் (அப். 18:2).

4. நேரோராயன் (கி.பி. 54-68) : இவன் கிலவுதியு ராயனின் வளர்ப்புப் பிள்ளை. இவன் தன் சகோதர முறையான பிறிற்றானிக்ஸ் என்பவனை நஞ்சு கொடுத்துக் கொன்றுபோட்டு, தான் இராஜாவானான். இவனைக் குறித்து அப். 25:25; பிலி. 4:22இல் சொல்லியுள்ளது.

இவன் ரோமா பட்டணத்துக்கு நெருப்பு வைத்துச் சுட்டெரித்தவனென்று எண்ணுகிறார்கள். பவுல் அபயமிட்டபின் (அப். 25:10-12). தானேபோய் தனக்காக இவனுக்கு முன் பரிந்து பேசினான்.

## ரூபன் (Reuben)

### (இதோ ஒரு மகன்)

யாக்கோபு, லேயாள் என்பவர்களின் மூத்த மகன். பன்னிரு கோத்திரப் பிதாக்களிலும் மூத்தவன் (ஆதி. 29:32). வாலிபனாயிருந்த நாள்களில் தூதாயீம் கனிகளைக் கண்டெடுத்து தன் தாயாகிய லேயாளிடம் கொடுத்தான் (ஆதி. 30:14).

யாக்கோபு ஏதேர் தேசத்தில் தங்கியிருந்த நாள்களில், இவன் தன் தகப்பனுடைய மறுமனையாட்டியாகிய பில்காளோடு சயனித்தான் (ஆதி. 35:22).

யோசேப்பினுடைய சகோதரர் அவனைக் கொல்ல வகை தேடின போது, இவன் அவனைத் தப்புவித்தான் (ஆதி. 37:22).

பிற்பாடு யோசேப்பு, எகிப்தில் அதிகாரியாயிருக்கையில், அவனுடைய சகோதரர் அவனிடம் போன வேளையில், பென்யமீனை எகிப்துக்குக் கொண்டு வரும்படி யோசேப்பு சொன்னான். அப்படிச் செய்வதற்காக, ரூபன் தன் குமாரர் இருவரையும் பிணையாகத் தகப்பனுக்குக் கொடுக்கச் சம்மதித்தான் (ஆதி. 42:37).

யாக்கோபு தன் குமாரருக்குச் சொன்ன கடைசி வார்த்தைகளில், ரூபனை நோக்கி, ''தண்ணீரைப்போல் தளும்பினவனே, நீ மேன்மையடையமாட்டாய்" என்றான் (ஆதி. 49:3,4).

இஸ்ரவேல் எகிப்துக்குப் போகையில் ரூபனுடைய நான்கு குமாரரும் கூடப்போனார்கள் (ஆதி. 46:8).

ரூபன் செய்த தப்பிதத்தினிமித்தம், அவனுடைய சேஷ்ட புத்திர சுதந்தரம் யோசேப்பின் குமாரருக்குக் கொடுக்கப்பட்டது (1 நாளா. 5:1).

## ரூபன் கோத்திரம்

இவர்கள் யாக்கோபின் மூத்த குமாரனுடைய சந்ததியாராயிருந்த போதிலும், குறைந்து போனார்கள். பிரயாணத்தில் இவர்கள் இரண்டாம் பாளயமாய்ப் போக கட்டளை பெற்றார்கள் (எண். 2:16).

சீனாய் வனாந்தரத்தில் தொகையேற்றப்பட்டபோது, கோத்திரத்தில் 46500 பேர் இருந்தார்கள் (எண். 1:21; 2:11). மோவாப் வெளியில் எண்ணப்பட்டபோது 43730 பேர் மாத்திரம் இருந்தார்கள் (எண். 26:7).

வனாந்தரத்தில் கோராகு மோசேக்கு விரோதமாய் எழும்பின காலத்தில், ரூபன் கோத்திரத்துத் தாத்தானும், அபிராமும் அவனோடு கூடினார்கள் (எண். 16:1-5).

ரூபன், காத் என்பவர்களின் புத்திரருக்கு ஆடு மாடுகள் திரளாயிருந்ததினால், யோர்தானுக்கு இப்புறத்தில் கிழக்கே தங்களுக்குச் சுதந்தரம் வேண்டுமென்று மோசேயிடம் கேட்டபோது, அவர்கள் யோர்தானைக் கடந்து போய் யுத்தம் செய்து தேசத்தை வசப்படுத்தினபின் கொடுக்கலாம் என்று மோசே சொன்னான் (எண். 32:1-32).

பின்பு சிசெராவுக்கு விரோதமாய் நடந்த யுத்தத்தில் ரூபனியர் உதவி செய்யாதிருந்ததினிமித்தம், தெபொராள் பாடின பாட்டில், அவர்களைக் கடிந்து கொண்டாள் (நியா. 5:15-16).

## ரூபனுடைய தேசம்

இது மோவாபியருடைய தேசத்துக்கு அடுத்திருந்தது. பிற்காலங்களில் காத் தேசத்தோடுச் சேர்ந்து கொண்டது போல் தெரிகிறது.

ஆகிலும் எசேக்கியேல் கண்ட தரிசனத்தில், ரூபன் கோத்திரத்தாருக்கும் ஓர் இடம் இருந்தது (எசே. 48:6). வெளிப்படுத்தின விசேஷத்திலும் இந்தக் கோத்திரத்தின் 12,000 பேர் முத்திரை போடப்பட்டார்கள் (வெளி. 7:5).

## ரெகுவேல் (Reuel)

*1. ஏசா, பஸ்மாத் என்பவர்களின் குமாரன் (ஆதி. 36:4,10,13,17; 1 நாளா. 1:36-37).*

*2. மோசேயின் மாமனாகிய எத்திரோவின் மறு பெயர் (யாத். 2:18; 3:1; எண். 10:29).*

*3. பென்யமீன் கோத்திரத்து இப்னியாவின் குமாரன் ரெகுவேல் (1 நாளா. 9:8).*

## ரெகொபெயாம் (Rehoboam)

*சாலொமோனின் மகன். அம்மோன் ஜாதியான நாமாள் அவனுடைய தாய் (1 இரா. 14:31). அவன் இராஜாவாகிறபோது 41 வயது. பதினெழு வருடம் இராஜ்யபாரம் பண்ணினான் (2 நாளா. 12:13).*

*சாலொமோன் மரித்தபின், ஜனங்கள் சீகேமில் கூடி வந்து ரெகொபெயாமை இராஜாவாக்கினார்கள். ஜனங்கள் அவனுடைய தகப்பன் சாலொமோன் தங்கள் மேல் வைத்த நுகத்தை இலகுவாக்கும்படி அவனிடம் கேட்டார்கள். அவன், தன் வாலிப சிநேகிதரின் யோசனையின்படி, அவர்களுடைய நுகத்தை அதிக பாரமாக்குவேன் என்றான் (1 இரா. 12:14; 2 நாளா. 10:1:11).*

*இதினிமித்தம் பத்துக் கோத்திரங்கள் பிரிந்துபோயின. யூதாவும் பென்யமீனும் அவன் பக்கமாயிருந்தார்கள்.*

*பின்பு ரெகொபெயாமின் பகுதி விசாரிப்புக்காரனாகிய அதோராமை, இஸ்ரவேலர் கல்லெறிந்து கொன்றார்கள். அப்பொழுது ரெகொபெயாம் எருசலேமுக்கு ஓடிப்போய் யூதா பென்யமீன் கோத்திரத்து ஜனங்களைக் கூட்டிக்கொண்டு இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தஞ் செய்ய ஆயத்தமானபோது, சேமாயா தீர்க்கதரிசி அதைத் தடுத்தான் (1 இரா. 12:22-24).*

*ரெ்கொபெயாம் இராஜ்யத்தை திடப்படுத்திக் கொண்டு, அவனும் ஜனங்களும் வேதத்தை அசட்டை பண்ணி, கர்த்தருக்கு விரோதமாய் நடந்ததினால், எகிப்தின் இராஜா சீஷாக் எருசலேமுக்கு விரோதமாய் வந்து அங்கிருந்த பொக்கிஷங்களையும் பொன்பரிசைகள் முதலியவைகளையும் எடுத்துக்கொண்டு போனான் (2 நாளா. 12:9).*

*ரெகொபெயாம் எருசலேமில் வாசமாயிருந்து அரணிப்பான பட்டணங்களை எடுப்பித்து, தன்னைப் பலப்படுத்தினான். ஆசாரியரும் லேவியரும் அவனிடம் வந்து சேர்ந்தார்கள் (2 நாளா. 11:5-13).*

தகப்பன் செய்ததுபோல் அவனும் அநேக மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் எடுத்து, ஆடம்பரமாய் ஜீவித்தான் (2 நாளா. 11:18-23).

அவன் மரித்து தாவீதின் நகரத்தில் அடக்கம்பண்ணப்பட்டான். அவனுடைய மகன் அபியா இராஜாவானான் (2 நாளா. 12:16).

## ரெபெக்காள் (Rebekah)

**(சுருக்குக் கயிறு)**

ஆபிரகாமின் மருமகளாகிய பெத்துவேலின் மகள். ஈசாக்கின் மனைவி (ஆதி. 22:22).

கானானியருக்குள் ஒரு பெண் பிள்ளையைத் தன் மகனுக்கு மனைவியாக எடுக்க விரும்பாமல் ஆபிரகாம் தன் ஊழியக்காரனை தன் ஜனங்கள் இருந்த மெசொப்பொத்தாமியாவுக்கு அனுப்பினான். அவன் போய் தேவனுடைய வழி நடத்துதலின்படி ரெபெக்காளை ஒரு கிணற்றடியில் சந்தித்தான். அவள் அழகானவளும், புத்தி யோசனையுள்ளவளென்றும் கண்டான். பின்பு அவன் ரெபெக்காளின் தகப்பனோடும், தமையனோடும் பேசி, அவர்களுடைய சம்மதம் பெற்றுக்கொண்டு, அவளைக் கூட்டிக் கொண்டு கானானுக்குத் திரும்பிப் போனான்.

ஈசாக்கு அவளை ஏற்றுக் கொண்டு தனக்கு மனைவியாக்கி அவளை நேசித்தான் (ஆதி. 24:40-67). பின்பு ஏசா, யாக்கோபு என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். ஈசாக்கு ஏசாவின்மேல் பட்சமாயிருந்தான். ரெபெக்காள் யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள் (ஆதி. 25:28).

ஏசா மூத்தவனாயிருந்தபடியால் தலைப்பிள்ளைச் சுதந்தரம் அவனுக்குரியது. ஒரு நாள் யாக்கோபு சிவப்பான கூழில் ஏசாவுக்கு சாப்பிடக் கொடுத்து சேஷ்ட புத்திர பாகத்தை வாங்கிக் கொண்டான் (ஆதி. 25:29-34).

ஈசாக்கு பார்வைக் குறைந்தவனாயிருந்தபடியால், அவனை ஏமாற்றி அந்த ஆசீர்வாதத்தை யாக்கோபு பெற்றுக்கொண்டான். ரெபெக்காள் இதற்கு உதவியாயிருந்தாள் (ஆதி. 27:19-30). இதினிமித்தம் ஏசா அவனைக் கொன்று போட யோசித்ததினிமித்தம், ஈசாக்கு அவனை மெசொப்பொத்தாமியாவுக்கு லாபானிடம் அனுப்பிவிட்டான் (ஆதி. 28:5). யாக்கோபு அங்கே இருக்கையிலே ரெபெக்காள் மரித்து, மக்பேலா குகையில் அடக்கம்பண்ணப்பட்டாள் (ஆதி. 49:31).

புதிய ஏற்பாட்டில் இவளுடைய பெயர் குறித்துள்ள இடத்தில், தேவனுடைய தீர்மானம் அவருடைய தெரிந்துகொள்ளுதலின்படியே ஆகும் என்னும், ஏசா, யாக்கோபு என்பவர்கள் பிறக்குமுன்னே,

தேவனால் ரெபெக்காளுக்கு அருளப்பட்ட வார்த்தை அதை நிரூபிக்கிறது என்றும் பவுல் குறிக்கிறான் (ரோமர். 9:10).

## ரேத்சீன் (Rezin)

1. இவன் தமஸ்குவிலிருந்த சீரிய இராஜாக்களில் ஒருவன். இவன் இஸ்ரவேல் இராஜாவாகிய பெக்காவோடு கூடி யூதா இராஜாவாகிய ஆகாசுக்கு விரோதமாய் வந்து எருசலேமை முற்றுகை போட்டான் (2 இரா. 16:5; ஏசாயா. 7:1). அப்பொழுது கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியை ஆகாசிடம் அனுப்பி "இந்த இரண்டு புகைகிற கொள்ளிக்கட்டைகளினிமித்தம் உன் இருதயம் துவள வேண்டாம்" என்று சொல்லும்படி சொன்னார். பின்னும் ஓர் அடையாளத்தை கேட்கும்படி சொன்னபின் மேசியாவைப் பற்றிய ஒரு முக்கியமான தீர்க்கதரிசனத்தையும் சொன்னான். "இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள்" (ஏசாயா 7:14).

பின்பு ஆகாஸ் அசீரிய இராஜாவாகிய திகிலாத் பிலேசரிடம் உதவி கேட்டதினிமித்தம், அவன் போய் தமஸ்குவைப் பிடித்து ரேத்சீனையும் கொன்றான். இதோடு சீரிய இராஜ்யத்தின் முடிவு வந்தது.

2. சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களில் நிதனீமியரான ரேத்சீனின் புத்திரரும் இருந்தார்கள் (எஸ்றா. 2:48; நெகே. 7:50).

## ரோமாபுரி (Rome)

இத்தாலியா தேசத்தின் தலை நகர். மத்தியதரைக் கடலிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள தைபர் நதியின் கரையில், ரொமுலஸ், ரேமஸ் என்பவர்களால் கி.மு. 753இல் கட்டப்பட்டது. தொடக்கத்தில் மலைப்பட்டணம் என்ற பெயர் பெற்றது.

அந்நாள்களில் இதைச் சுற்றி இருந்த கிரேக்கு, சின்ன ஆசியா ஸ்பானியா, ஆப்பிரிக்கா, எகிப்து முதலிய தேசங்கள் ஒன்றாய் சேர்ந்திருந்தது, ஆளுகை நடத்தி வந்தார்கள். இதினிமித்தம் மத்தியத் தரைக்கடல், ரோமருடைய குளம் என்று பெயரிடப்பட்டது. காலாகாலங்களில் பிரிவினைகள் உண்டானதினிமித்தம், ஜனங்கள் பிரிந்து வெவ்வேறு இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். கடைசியில் ரோமாபுரி இத்தாலியா தேசத்திற்கு மாத்திரம் தலைநகரமாயிறறு. தேசத்தில் சுயாதிகார ஆளுகை இருந்தது.

பலஸ்தீனாவில் மக்கபெயர் (Maccabees) ஆளுகை செய்த நாள்களிலே, முதன்முதல் இந்தத் தேசத்தோடு சம்பந்தம் துவங்கிற்று. யூதர் தங்கள் சத்துருக்களிலிருந்துப் பாதுகாப்படையும்படி,

ரோமரிடம் உதவி கேட்டபொழுது, அவர்கள் சீரியா, பலஸ்தீனா தேசங்களைத் தங்கள் வசப்படுத்தினார்கள் *(கி.மு. 63).*

பலஸ்தீனாவில் அர்கெனு (Hyrcannees) என்பவன் பிரதான ஆசாரியனாயும் நியாயாதிபதியாயுமிருந்தான். பின்பு ரோமர் தேசத்தை ஏரோதின் ஆளுகைக்குள்ளாக்கினார்கள். அவன் திறை கொடுத்து வந்தான். அவனுக்கு ஒரு ரோம பட்டாளம் கொடுக்கப்பட்டது.

ஜூலியஸ் ராயன் யூதருக்கு அநேக நன்மையான காரியங்கள் செய்தான். அவன் கி.மு. 44இல் மரித்தான்.

அகுஸ்து ராயன் காலத்தில் இயேசுவும், யோவான்ஸ்நானனும் பிறந்தார்கள். ஆனால் திபேரியு ராயனின் நாள்களிலேயே அவர்களுடைய ஊழியம் நடைபெற்றது *(லூக்கா. 2:1).*

ஏரோது குடும்பத்தாருக்குத் துவக்கத்தில் ரோமாபுரியில் அநேக சிலாக்கியங்கள் கிடைத்தன. முதலாம் ஏரோது அகிரிப்பா என்பவன், திபேரியு ராயனின் மகனாகிய துருகஸ் (Dourcus) என்பவனோடு அரண்மனையில் வளர்க்கப்பட்டான்.

இந்த நிலை பிற்காலங்களில் மாற்றமடைந்தது. யூதரும் கிறிஸ்தவர்களும் ரோமாபுரியில் துன்புறுத்தப்பட்டார்கள்.

கி.பி. 49இல் கிலவுதியுராயன் யூதரெல்லாம் ரோமாபுரியை விட்டுப் போகும்படி கட்டளைச் சட்டம் பிறப்பித்தான். அத்தருணத்தில் ஆக்கில்லாவும், பிரிஸ்கில்லாவும் புறப்பட்டு, கொரிந்து பட்டணம் போன பொழுது, பவுலைச் சந்தித்தார்கள் *(அப். 18:1-2).* இந்த ராயனின் நாள்களில் யோவானின் சகோதரன் யாக்கோபு இரத்தச் சாட்சியாய்க் கொல்லப்பட்டான் *(அப். 11:28; 12:2).*

பெந்தெகொஸ்தே நாளில் ரோமாபுரியிலிருந்த யூதர்களும் எருசலேமுக்குப் போயிருந்தார்கள் *(அப். 2:10).*

பவுல் ரோமாபுரியில் காவலிலிருக்கையில் இராஜ அரண்மனையிலிருந்தவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவிக்க சமயம் கிடைத்தது *(பிலி. 1:13-22).* அவன் இரண்டு வருடம் ரோமாபுரியில் காவலிலிருந்தபோது, பிலிப்பியர், கொலோசெயர், பிலேமோன் நிருபங்களை எழுதினான்.

பவுலும் பேதுருவும் ரோமாபுரியில் இரத்தச் சாட்சியாய் கொல்லப்பட்டார்கள்.

கி.பி. 70இல் தீத்து சேனாதிபதி எருசலேமைச் சுட்டெரித்ததோடு பலஸ்தீனாவின் சுயாதீனம் முடிவுக்கு வந்தது.

கி.பி. 313இல் கான்ஸ்டன்டைன் (Constantine) என்பவரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைச் சட்டத்தின்படி கிறிஸ்து மார்க்கம் ரோம இராஜாங்கத்தின் இராஜாதிகார மார்க்கமாயிற்று.

புதிய ஏற்பாட்டில் ரோமாபுரி பாபிலோனுக்கு அடையாளப் பெயராக குறிக்கப்பட்டுள்ளது (1 பேதுரு, 5:13; வெளி. 18:10,21).

## லவோதிக்கேயா (Laodicea)

சின்ன ஆசியாவில் லீகோஸ் பள்ளத்தாக்கிலுள்ள ஒரு பட்டணம். இது எபேசுவிலிருந்து 40 மைல் தூரத்திலும், கொலோசேயிலிருந்து 11 மைல் தூரத்திலுமுள்ளது. இது சீரிய இராஜாவாகிய இரண்டாம் அந்தியோகு என்பவனால் கட்டப்பட்டு, அவனுடைய மனைவியாகிய 'லவோதிஸ்' என்பவளின் பேர் கொடுக்கப்பட்டது.

கி.மு. 190இல் ரோமர் இதைத் தம் வசமாக்கி, அநேக சீர்த்திருத்தங்களைச் செய்தார்கள். ரோம தேசாதிபதியின் அரண்மனை இங்கே இருந்தது. நாணயவர்த்தகமும் கம்பளி வியாபாரமும் அதிகமாய் நடந்தது.

கி.பி. 60இல் பூமி அதிர்ச்சியினால் இதற்கு அழிவு நேரிட்ட போதிலும், திரும்பவும் சீர்த்திருத்தப்பட்டது.

கிறிஸ்து மார்க்கம் இங்கே எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டதென்று, திட்டமாய்க் கூற முடியாது. எனினும் மாற்கு, தீமோத்தேயு, எப்பாப்பிரா, இங்கே போய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததாகத் தெரிகிறது.

பவுல், இங்கிருந்த சபைக்கு ஒரு நிருபம் எழுதி, கொலொசே சபையார் மூலம் அனுப்பினான் (கொலொ. 2:1; 4:13-16).

லவோதிக்கேயா சபை, ஆசியாவிலுள்ள ஏழு சபைகளில் ஒன்று (வெளி. 1:4; 3:14-18). இந்தச் சபையின் தூதனுக்கு எழுதின நிருபத்தில், அச்சபையார் எல்லாவற்றிலும் நிறையுள்ளவர்களென்று நினைத்ததைக் குறித்து, கடிந்து கொள்ளப்படுகிறார்கள். உலக காரியங்களில் செல்வாக்கிருந்தாலும், ஆத்ம விஷயத்தில் குறையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பட்டணத்திலிருந்த செல்வாக்குடன், கண்ணுக்குப் போடும் விசேஷ மருந்து அங்கே உண்டாக்கப்பட்டதால், "கண்ணுக்குக் கலிக்கம்" போடுவதைப் பற்றி குறித்திருக்கிறதாக எண்ணப்படுகிறது (வெளி. 3:18).

## லாகீஸ் (Lachish)

இது யூதாவுக்குச் சேர்ந்த ஓர் மதில் சூழ்ந்த பட்டணம். எருசலேமிலிருந்து 25 மைலுக்கப்பாலுள்ளது.அந்தக் காலத்தில் எருசலேம், மெகிதோ என்னும் பட்டணங்களைப்பார்க்கிலும் இது பெரியதாயிருந்தது.

இஸ்ரவேலருடைய சரித்திரத்தில், இதைப்பற்றி முதன் முதல் சொல்லப்பட்ட சம்பவமானது :

எருசலேம் இராஜா, லாகீஸ் இராஜாவோடு இன்னும் மூன்று இராஜாக்களைச் சேர்த்துக் கொண்டு, ஐந்து பேருமாக கிபியோன்மேல் யுத்தம்பண்ணினார்கள். யோசுவா, அதைக் கேள்விப்பட்டுப்போய், அவர்களை முறியடித்தான் (யோசுவா. 10:10). அந்த ஐந்து இராஜாக்களையும் அவன் பிடித்து, மக்கெதாவில் கொன்றுபோட்டான். லாகீஸ் பட்டணத்தைப் பிடித்து, எல்லா நரஜீவன்களையும் பட்டயக் கருக்கால் அழித்தான் (யோசுவா. 10:32). பின்பு இந்தப் பட்டணம் யூதாவுக்குக் கொடுக்கப்பட்டது (யோசுவா. 15:39).

யூதாவின் இராஜாவாகிய அமத்சியா, எருசலேமில் உண்டான கலகத்தினிமித்தம் லாகீசுக்குத் தப்பி ஓடியும் அவனைப் பிடித்து, அங்கே கொன்று போட்டார்கள் (2 இரா. 14:19; 2 நாளா. 25:27).

ரெகொபெயாம் யூதாவின் பாதுகாப்புக்காக இந்தப் பட்டணத்தைக் கட்டினான் (2 நாளா. 11:5-12). ஆனாலும் இவையெல்லாம் வீண் என்பதை மீகா தீர்க்கதரிசி குறிப்பாய்ச் சொன்னான் (மீகா. 1:13).

எசேக்கியாவின் நாள்களில், சனகெரிப் வந்து, இந்தப் பட்டணத்தைக் கைப்பற்றினதினிமித்தம் எசேக்கியா எகிப்தின் உதவியைத் தேடினான். எலியா தீர்க்கதரிசி அதினிமித்தம் அவனை எச்சரித்தான் (ஏசாயா. 20:5-6; 30:1-5; 31:1).

சனகெரிப் இந்தப் பட்டணத்தை கி.மு. 701இல் அழித்துப் போட்டதாகத் தெரிகிறது (2 இரா. 18:13-17). ஆனால் யோயாக்கீம் நாள்களில் அதைத் திரும்பக் கட்டினார்கள்.

இந்தப் பட்டணத்துக்கு விரோதமாக நேபுகாத்நேச்சார் கி.மு. 589-587இல் யுத்தம்பண்ணினான் (எரே. 34:7). அது அழிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனாலும் இஸ்ரவேலர் சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்தபின் இங்கே குடியேறினார்கள் (நெகே. 11:30).

## லாசரு (Lazarus)

பெத்தானியா ஊரான். மார்த்தாள் மரியாள் என்பவர்களின் சகோதரன். இயேசு அவர்கள் வீட்டுக்குப்போய் உபதேசித்தார். அப்பொழுது மரியாள் அவர் சொன்னவைகளைக் கவனித்துக் கேட்டாள் (லூக்கா. 10:38-42).

பின்பு லாசரு வியாதிப்பட்டிருக்கையில், இயேசுவுக்கு ஆள் அனுப்பினார்கள். அவர் வருமுன் லாசரு மரித்து அடக்கம் பண்ணப் பட்டான். நான்கு நாள்களுக்குப் பின், இயேசு வந்து அவனை

உயிர்த்தெழுப்பினார் (யோவான் 11:1-46). அப்பொழுது, ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்தார்கள். அந்நாள் முதல் பிரதான ஆசாரியரும், பரிசேயரும் அவரைக் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள் (யோவான் 11:53).

அதன்பின், இயேசுவுக்குப் பெத்தானியாவில், இராவிருந்து கொடுத்த தருணத்தில், லாசருவும், அங்கே இருந்தான். ஜனங்கள் அவனைப் பார்க்கும்படி போயிருந்ததினிமித்தம், யூதர் அவனையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள் (யோவான் 12:10-11).

நான்கு சுவிசேஷகரில் யோவான் மாத்திரம் இந்த விசேஷ அற்புதத்தைப் பற்றி எழுதுகிறதோடு, இயேசு கண்ணீர் விட்டாரென்பதையும் ஒரு சாட்சி சொல்வது போல் குறித்திருக்கிறான் (யோவான் 12:35). இந்த அற்புதத்திலிருந்து நாம் அறியக் கூடிய காரியங்களாவன :

1. இயேசு ஜீவனுக்கும் மரணத்துக்கும் அதிகாரி.

2. சீடருடைய விசுவாசம் பலப்பட ஏதுவாயிற்று.

3. லாசரு என்ற ஒருவனைப் பற்றி, இயேசு சொன்ன உவமை ஒன்றில் குறித்துள்ளது (லூக்கா. 16:19-31). இதில் சொல்லப்பட்ட ஐசுவரியவான் அவனுடைய வாசலருகே இருந்த தரித்திரனாகிய லாசருவைப்பற்றி ஒரு கவனமும் எடுக்கவில்லை. பின்பு லாசரு மரித்தபோது, ஆபிரகாமின் மடிக்கு கொண்டுபோகப்பட்டான். ஐசுவரியவான் மரித்து பாதாளத்துக்குப் போனான். இருவரும் ஒருவரையொருவர் சந்திக்கவோ ஒருவருக்கொருவர் உதவி செய்யவோ கூடாததாய், இருவருக்குமிடையில் ஒரு பிளவு உண்டாயிருந்தது. மேலும் அந்த ஐசுவரியவானின் சகோதரர் மனந்திரும்புவதற்கு இவ்வுலகத்தில் ஆகமங்கள் உண்டு; பரத்திலிருந்து ஒருவர் வரத் தேவையில்லை என்பவையுங் குறித்துள்ளன.

இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடிய காரியங்கள் :

1. மறுமையில் நமக்குக் கிடைக்கும் பலன் இவ்வுலக ஜீவியத்தின் பிரதிபலனாகும்.

2. ஐசுவரியத்தினால் வரக் கூடிய தீமை, தரித்திரன் நிலைமையை உணராதிருப்பதே.

## லாபான் (Laban)

இவன் பதான் அராம் ஊரான் (ஆதி. 28:5). பெத்துவேலின் மகன். ரெபெக்காளின் சகோதரன் (ஆதி. 24:29). லாபான் லேயாள், ராகேல் என்பவர்களின் தகப்பன் (ஆதி. 29:16). ஆபிரகாமும்,

லோத்தும் தங்கள் தேசத்தைவிட்டுப் போனபின், அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்கள் ஆரானில் இருந்துவிட்டார்கள். இவ்விடத்திலிருந்து ஈசாக்கும், யாக்கோபும் தங்களுக்கு மனைவிகளைத் தேடிக் கொண்டார்கள்.

ஆபிரகாமின் ஊழியக்காரன் ஈசாக்குக்குப் பெண் தேடிக் கொண்டு ஆராமுக்குப் போன பொழுது ரெபெக்காளின் சகோதரன் லாபான் முன் வந்து காரியங்களை நடத்தினான் *(ஆதி. அதி.24)*.

யாக்கோபு ஏசாவுக்குப் பயந்து, ஆரானுக்குப் போனபோது, அவன் ராகேல் மேல் வைத்த அன்பை லாபான் அறிந்து அவனிடம் பதினான்கு வருடம் ஊழியம் வாங்கினான்.

கடைசியில் யாக்கோபு தனக்கு உண்டானவைகளெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, லாபானுக்குத் தெரியாமல், ஓடிப்போன வேளையில் லாபான் அவனைத் தொடர்ந்து போய்க் கண்டுபிடித்தான். ஆனாலும் தேவனால் எச்சரிக்கப்பட்டதினிமித்தம் ஒரு தீங்கும் செய்யாமல், யாக்கோபுடன் மிஸ்பாவில் உடன்படிக்கைபண்ணிக் கொண்டு திரும்பினான் *(ஆதி. 31:22-55)*.

லாபானும் யாக்கோபும் ஒருவரோடொருவர் நடந்துகொண்டதைப் பார்த்தால், இருவரும் கபடுள்ளவர்கள். ஆனால் லாபான் யாக்கோபுக்கு மாமன், எஜமான். யாக்கோபு லாபானுக்கு மருமகன், ஊழியக்காரன் இருவரும் பொருளாசைக்காரர். சுய நன்மையை நோக்கினவர்கள். எப்படியாயினும் தேவனுடைய கரம் யாக்கோபின் மேலிருந்ததென்பது தெளிவாகிறது.

*2.* மோசே, ஜனங்களுக்குத் தன் கடைசி வார்த்தைகள் சொன்ன ஓர் இடம் *(உபா. 1:1)*.

## லாமேக்கு (Lamech)

*1.* மெத்தூசவேலின் மகன். காயீனுடைய சந்ததியான். இவனுக்கு ஆதாள், சில்லாள் என்று இரண்டு மனைவிகளிருந்தார்கள். ஆதாள், யாபால், யூபால் என்று இரண்டு குமாரரைப் பெற்றாள். சில்லாள், தூபால்-காயீனைப் பெற்றாள். அவளுக்கு நாமாள் என்னும் ஒரு குமாரத்தியுமிருந்தாள் *(ஆதி. 4:18-24)*.

தூபால்-காயீன், பித்தளை இரும்பு முதலியவற்றில் வேலை செய்கிறவர்களுக்கு ஆசாரியனானான்.

லாமேக்கு தன் மகன் செய்த ஆயுதங்களைக் குறித்து, பெருமை பாராட்டி, அவைகளால்தான் ஆள்களைக் கொன்றதாகத் தன் மனைவிகளிடம் வீம்பு பேசினான். ஆகவே தேவனுடைய பாதுகாப் பில்லாமல், தானே தன்னைக் காத்துக்கொள்ளக்கூடும் என்பதையும் கருதினான் *(ஆதி. 4:23-24)*.

2. தேசத்தின் சந்ததியானான மெத்தூசலாவின் மகன். இவன் நோவாவின் தகப்பன் (ஆதி. 5:25, 28-31).

## லிவியாதான் (Leviatan)

இது ஜலத்தில் வசிக்கும் ஒரு ஜந்து, இது எபிரெய பதம். ஆங்கிலத்தில் அதையே எழுதியுள்ளார்கள். வேதாகமத்தில் ஐந்து இடங்களில் இது சொல்லப்படுகிறது. தமிழில், யோபு. 3:8; 41:1; ஏசாயா. 27:1இல் "லிவியாதான்" என்றும், சங். 74:14இல் "முதலை" என்றும் சங். 104:26இல் "திமிங்கலம்" என்றும் மொழி பெயர்த்துள்ளது.

யோபு. 3:8இல் சொல்லப்படும் லிவியாதான், துக்கம் கொண்டாடுதலைக் குறிக்கிறது. அந்தச் சர்ப்பம் சூரியனை விழுங்குகிறதினால் சூரிய கிரகணம் உண்டாகிறதென்றும் பயங்கர சம்பவத்துக்கு முன் அடையாளமென்றும் நம்பப்பட்டது.

ஏசாயா. 27:1இல் சொல்லப்படும் "லிவியாதான்" என்பது இஸ்ரவேலின் சத்துருக்களாகிய அசீரியா, பாபிலோன், எகிப்து முதலிய ஜாதிகளைக் குறிக்கிறது. இந்தப் பெயர் ஒரு பூர்வீக கட்டுக் கதைக்கு அடுத்ததாயிருக்கலாம்.

## லீஸ்திரா (Lystra)

இக்கோனியா நாட்டிலிருந்த, ரோமரைச் சேர்ந்த ஒரு பட்டணம். அகுஸ்து ராயனால் கட்டப்பட்டது. பவுல் நான்கு தடவைகளில் அங்கே போயிருந்தான் (அப். 14:6, 21; 16:1; 18:23). பவுலும், பர்னபாவும் இக்கோனியாவுக்குப் போய், பிரசங்கித்தபோது கலகம் உண்டானதினிமித்தம் லீஸ்திராவுக்கு ஓடிப்போனார்கள் (அப். 14:4-6).

லீஸ்திராவில், பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்த, பிறந்தது முதல் சப்பாணியாயிருந்த ஒருவன் சுகமடைந்தான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த இக்கோனியா ஜனங்கள், பவுலும் பர்னபாவும் இரு தெய்வங்கள் என்று சொல்லி, அவர்களுக்குப் பலி செலுத்த ஆரம்பித்த வேளையில், அவர்கள் அதைத் தடுத்தார்கள் (அப். 14:11).

லீஸ்திராவில் ரோமர், கிரேக்கர், யூதர் என்னும் ஜாதியார் வாசமாயிருந்தார்கள். பின்பு சில யூதர் அடுத்த பட்டணங்களிலிருந்து வந்து, ஜனங்களை எழுப்பிவிட்டு, பவுலைக் கல்லெறிந்தார்கள் (அப். 14:8,19).

மறுநாளில் பவுல் புறப்பட்டு அடுத்த பட்டணங்களுக்குப் போய், அவனும் பர்னபாவும் லீஸ்திராவுக்கு வந்து, சீஷரைத் திடப்படுத்தினபின், புறப்பட்டுப் போனார்கள் (அப். 14:20-23).

சில காலங்களுக்குப் பின்பு, பவுல் லீஸ்திராவுக்குப்போன சமயத்தில், தீமோத்தேயுவைச் சந்தித்தான் (அப். 16:1,2).

கடைசியில் தீமோத்தேயுவுக்கு எழுதின நிருபத்தில், தனக்கு லீஸ்திராவில் சம்பவித்ததை நினைப்பூட்டி எழுதியிருக்கிறான் (2 தீமோ. 3:11).

## லீதியாள் (Levities)

பவுல் பிலிப்பி பட்டணத்துக்குப் போயிருக்கையில் அங்கே ஆற்றினருகே ஜெபம்பண்ணக் கூடியிருந்தவர்களுக்குள், லீதியாள் என்னும் ஒரு ஸ்திரீ இருந்தாள். இவள் பிலிப்பி பட்டணத்தில் வாசமாயிருந்த, தியத்தீரா ஊராள். இரத்தாம்பரம் விற்பது அவளுடைய தொழிலாயிருந்தது. அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்து, பவுல் சொன்னவைகளைக் கேட்ட பொழுது, கர்த்தர் அவளுடைய இருதயத்தைத் திறந்தார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன்பின் அவளுடைய வீடு, சுவிசேஷகர் தங்கும் இடமாயிற்று. பிலிப்பி சபையின் தொடக்கம் இதுவே (அப். 16:13-15). பவுலும் சீலாவும் சிறைச்சாலையிலிருந்து விடுதலையான பின் புறப்பட்டு, லீதியாள் வீட்டுக்குப்போனார்கள் (அப். 16:40).

## லீபனோன் (Lebanon)

**(வெண்மலை)**

இது சீரியாவிலுள்ள ஒரு மலைத் தேசம். எர்மோன் மலையடிவாரத்திலிருக்கிற பாகால்காத் என்னும் இடத்திலிருந்து ஆமாத்துக்குள் பிரவேசிக்கும் மட்டுமுள்ள நாடு (யோசுவா. 13:5).

வருடம் முழுவதிலும், உறைபனி இந்த மலையுச்சியில் இருப்பதினாலும், சுண்ணாம்புக் கல் நிறைந்திருக்கிறதினாலும், "வெள்ளை மலை" என்ற பெயர் கொடுக்கப்பட்டது (எரே. 18:14). இந்த மலைகளில் அநேக சிகரங்களும் உள்ளன. எர்மோன் மலையுச்சியிலிருக்கிறது (யோசுவா. 11:16). இது 9000 அடி உயரமுள்ளது. இந்த மலை நாடு வடக்கு தெற்கு 100 மைல் நீளமும், கிழக்கு மேற்கு 20 மைல் அகலமுமுள்ளது.

இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசம் லீபனோன் தொடங்கி, ஐபிராத்து நதி மட்டும் பெரிய சமுத்திரம் வரைக்கும் உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது (உபா. 11:24; யோசுவா. 1:4).

இந்த நாட்டில் மழை அதிகமாய் பெய்கிறதினால், நீருற்றுகளும் அநேகமுள்ளன. இதினிமித்தம் இது செழிப்பான தேசம். உயர்வான பகுதிகளில், கேதுரு முதலிய விசேஷ மரங்களும், கீழ்ப்பகுதிகளில் திராட்சைத் தோட்டங்கள் முதலிய பழவகை விருட்சங்களும், பயிரிடப்பட்டன.

வேதாகமத்தில், பல இடங்களில் இதின் செழிப்பைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது *(சங். 72:16; உன். 4:11; ஓசியா. 14:5-7)*

பலவித காட்டு மிருகங்களும் அங்கே சஞ்சரித்ததாகத் தெரிகிறது *(2 இரா. 14:9).*

முதன் முதல் குடியேறினவர்கள் ஏவியரும், கிப்லியரும் (யோசுவா. *13:5,6; நியா. 3:3).* இந்தத் தேசம் முழுவதும் இஸ்ரவேலுக்குக் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர்கள் அதை ஜெயித்துக் கொள்ளவில்லை. பேனிக்கியர் அதை ஆண்டு வந்தார்கள். தற்காலத்தில் அநேக கிறிஸ்தவர்களும், முகமதியரும், கிரேக்கரும் அங்கே இருக்கிறார்கள். கி.பி. 1860 துவங்கி இந்த நாடு கிறிஸ்தவ தேசாதிபதிகளின் கீழிருக்கிறது. ஜனத்தொகை 275,000 என்று மதிக்கப்படுகிறது.

லீபனோன் முழுவதிலும் அநேக கோயில்கள் இருந்தும் அவைகள் இப்பொழுது பாழாய்க் கிடக்கின்றன.

லீபனோனின் கேதுரு மரங்களின் மகிமையும் அலங்காரமும் உவமையாக வேதாகமத்தில் பல இடங்களில் எடுத்துக்காட்டியுள்ளது *(நியா. 9:15; 1 இரா. 10:27; சங். 92:12; 104:16; உன். 5:15; ஏசாயா. 35:2; 60:13).*

மனுஷனுடைய மேட்டிமையான குணத்துக்கும், லீபனோனின் கேதுரு மரங்கள் ஒப்பிடப்படுகிறது *(சங். 29:5,6; ஏசாயா. 2:13; 10:34; எரே. 22:6; எசே. 31:3-14; சக. 11:1,2).*

சாலொமோன் கட்டின தேவாலயத்துக்காக, ஈராம் இவ்விடத்திலிருந்துக் கேதுரு மரங்களை வெட்டி அனுப்பினான் *(1 இரா. 5:6,9,14; 7:2; 10:17; 2 நாளா. 2:8; 9:20).*

கப்பற்பாய் மரங்களாக இங்கிருந்த மரங்கள் உபயோகிக்கப் பட்டன *(எசே. 23:5).*

இரண்டாம் தேவாலயத்துக்கும் இங்கிருந்து மரங்கள் கொண்டு போகப்பட்டன *(எஸ்றா. 3:7).*

அசீரிய இராஜாவாகிய சனகெரிப் இந்த மலைகளிலிருந்து கேதுரு மரங்களையும் தேவதாரி விருட்சங்களையும் வெட்டினான் *(2 இரா. 19:23; ஏசாயா. 37:24).* பாபிலோனியரும் அவ்விதமே செய்தார்கள் *(ஆப. 2:17; ஏசாயா. 14:8).*

## லூக்கா (Luke)

"பிரியமான வைத்தியனாகிய லூக்கா" என்றும், 'என் உடன் வேலையாள்' என்றும் பவுல் இவனைக் குறித்துச் சொல்லுகிறான் *(கொலோ. 4:14; 2 தீமோ. 4:11; பிலே. 24).*

லூக்கா மூன்றாம் சுவிசேஷத்தையும், அப்போஸ்தலர் நடபடிகளையும் எழுதினான். இவைகளில் தன் பெயரை அவன் சொல்லவில்லை.

லூக்கா எழுதிய சங்கதிகளை அவன் கண்ணாரக் கண்டதாகத் தெரியவில்லை (லூக்கா. 1:2).

பவுல், கொலோ 4:14இல் லூக்காவை விருத்தசேதனம் பெற்றவர்களோடு சேர்த்தெழுதாமல், புறஜாதியாரான எப்பாப்பிரா, தோமாவோடு சேர்த்தபடியால், இவனும் ஒரு புற ஜாதியான் என்று தெரிகிறது.

துரோவா பட்டணத்தில் பவுல் இவனை முதன் முதல் சந்தித்ததாக அப். 16:10இல் "நாங்கள்" என்று சொல்லியிருக்கிறதிலிருந்து விளங்குகிறது. இவன் ஒரு கிரேக்கனும், கல்விமானுமாயிருந்தான் (லூக்கா. 1:1-4).

இவன், பிறந்த ஊர் திட்டமாய்க் குறிக்கப்படாதிருந்தும், அந்தியோகியாவில் பிறந்தானென்று எண்ணப்படுகிறது. பவுல் ரோமாபுரியில் சிறைப்பட்டிருந்தபொழுது, கொலோசெயருக்கும், பிலேமோனுக்கும் எழுதின நிருபங்களில், இவனைப் பற்றியும் குறித்திருக்கிறபடியால் இவனும் அவனோடிருந்ததாகத் தெரிகிறது.

பவுல் இரண்டாம் முறை சிறைச் சாலையிலிருந்தபோதும், லூக்கா அவனோடிருந்ததாக, கி.பி. 64இல் எழுதப்பட்ட தீமோத்தேயுவின் நிருபத்திலிருந்து அறியலாம் (2 தீமோ. 4:11). ஆகவே லூக்கா அவனுடன் கடைசி நேரம் வரை ஏறக்குறைய ஒன்பது வருட காலம் இருந்திருக்கிறான்.

இதன்பின், லூக்கா தேவ ஊழியம் செய்து வந்தானென்றும், கடைசியில் கிரேக்க தேசத்தில் தன் 84ஆம் வயதில் மரித்தான் என்றும் சொல்லப்படுகிறது.

லூக்கா, பவுலோடும், மற்ற ஊழியக்காரரோடும் ஐக்கியப்பட்டிருந்ததினாலும், எருசலேம் செசரியா முதலிய இடங்களுக்கு போயிருந்தபடியாலும், இயேசுவைப்பற்றியும், முதல் சீஷருடைய செய்கைகளைப் பற்றியும், நன்றாய் அறியக்கூடியதாக இருந்தது. "நாங்கள் முழு நிச்சயமாய் நம்புகிற சங்கதிகள் ஆரம்பமுதல், கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்களிடம் பெற்ற சரித்திரம்" என்று சொல்லுகிறான் (லூக்கா. 1:2).

## லேகியோன் (Legion)

புதிய ஏற்பாடு காலங்களில் ரோமருடைய இராணுவத்தின், ஒரு கூட்டத்தில் 6000 யுத்த வீரரிருந்தார்கள். ஒவ்வொரு கூட்டத்தில் பத்துப்

படைகளுண்டு (மத். 27:27; யோவான் 18:3,12). ஒவ்வொரு படையும் நூறு பேருள்ள பத்துப் பகுதிகளாய்ப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தலைவனுண்டு.

ஆகவே, "லேகியோன்" ஒரு பெரிய கூட்டம் என்பதைக் கருதினது. இயேசுவும் ''பன்னிரண்டு லேகியோன்'' என்றது இந்த அர்த்தத்திலேயே (மத். 26:53).

கதரேனருடைய நாட்டில் அசுத்த ஆவி பிடித்திருந்தவனும், நாங்கள் அநேகராயிருக்கிறபடியால், என்பேர் ''லேகியோன்'' என்றான் (மாற்கு. 5:9; லூக்கா. 8:30).

## லேமுவேல் (Lemuel)

***(பிரதிஷ்டை செய்யப்பட்டவன்)***

இது ஓர் இராஜாவுடைய பெயர். இவனுடைய தாயார் இவனுக்குப் போதகமாய்ச் சொன்னவைகள் நீதி. 31:1-9இல் குறித்துள்ளது.

## லேயாள் (Leah)

லாபானுடைய மூத்த மகள். கூச்சப் பார்வையான கண்ணுள்ளவள். யாக்கோபின் முதல் மனைவி. இவள் அவனுக்குப் பிரியமான மனைவியாயிராத போதிலும், உண்மையுள்ளவளாயிருந்து, தன் தகப்பனை விட்டுப்போக வேண்டி வந்த தருணத்திலும், தன் புருஷனோடு கூடிப்போனாள். அவளுக்கு ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். ரூபன், சிமியோன், லேவி, யூதா, இசக்கார், செபுலோன், தீனாள் என்பவர்கள்.

யாக்கோபு எகிப்துக்குப் போகுமுன், இவள் மரித்து, மக்பேலா குகையில் அடக்கம்பண்ணப்பட்டாள் (ஆதி. 29:16-35; 30:17-21; 31:14; 49:31).

லேயாள், ராகேல் என்பவர்களைக்கொண்டு கர்த்தர் இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்தார் எனப்படுகிறது (ரூத். 4:11).

## லேவி (Levi)

1. யாக்கோபுக்கு லேயாள் பெற்ற மூன்றாம் மகன். இவன் பிறந்தபோது தன் புருஷன் தன்னோடு சேர்ந்திருப்பார் என்று சொல்லி, லேயாள் "லேவி" என்று பேரிட்டாள் (ஆதி. 29:34).

பின்பு யாக்கோபு சீகேமிலிருந்த நாள்களில் தங்கள் சகோதரியாகிய தீனாளுக்கு நடந்த தீங்கினிமித்தம், சிமியோனும், லேவியும் சீகேமியரைப் பட்டயத்தால் கொன்றார்கள். அதினிமித்தம்

யாக்கோபு அவர்களைக் கண்டித்தான் (ஆதி. 30:25-30). தன் கடைசிவார்த்தைகளிலும் பேசினான் (ஆதி. 49:5-7).

லேவிக்கு கெர்சோன், கோகாத் மெராரி என்னும் மூன்று குமாரரிருந்தார்கள். லேவி 137 வயதில் எகிப்தில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான் (ஆதி. 46:11; யாத். 6:16).

2. இயேசுவின் முற்பிதாக்கள் இரண்டு பேர் (லூக்கா. 3:24; 29).

3. அப்போஸ்தலனாகிய மத்தேயுவின் மறுபெயர் (மத். 9:9; லூக்கா. 5:27).

## லேவியர் (Levites)

லேவியர் லேவி என்பவனின் சந்ததியார். பின்பு இவர்கள் இஸ்ரவேலருக்கு ஆசாரிய கோத்திரமானார்கள். மோசேயின் நாள்களிலேயே இவர்கள் ஆசாரிய ஊழியத்துக்கென்று தனியே பிரிக்கப்பட்டார்கள். லேவியன் என்ற பெயரே ஆசாரிய வகுப்பைக் கருதினது (நியா. 17:7).

லேவியின் இரண்டாம் புத்திரனாகிய கோகாத்தின் குடும்பத்தைச் சேர்ந்த மோசேயும், ஆரோனும், லேவியர் (யாத். 6:16-20).

சீனாய் மலையில், கர்த்தர் ஆரோனையும் அவன் குமாரரையும் ஆசாரிய ஊழியத்துக்குப் பிரிக்கும்படி, மோசேயோடு சொன்னார் (யாத். 28:1). லேவி கோத்திரத்தார் ஆரோனுக்கும் பணிவிடை செய்யும்படி நியமிக்கப்பட்டார்கள் (எண். 3:5-10).

வனாந்தரத்தில், இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியை வணங்கின தருணத்தில், லேவியின் புத்திரர் காட்டின வைராக்கியத்தின் பயனாக, லேவிகோத்திரம் ஆசாரிய ஊழியத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டது (யாத். 32:29; எண். 3:12; 8:20-22).

குறிப்பாய்ச் சொல்லுகிறதானால் ஆசரிப்புக் கூடாரத்தின், வேலைகளைச் செய்கிறவர்களுக்கே "லேவியர்" என்று சொல்ல வேண்டும். ஆனாலும் ஆசாரிய ஊழியம் செய்த ஆரோனுடைய சந்ததியார் லேவி கோத்திரத்தாராயிருந்ததினால் அவர்களும் லேவியர் எனப்பட்டார்கள் (யோசுவா. 14:3; மல். 3:3).

தொடக்கத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் வேலை செய்தவர்கள் முப்பது வயதுமுதல் ஐம்பது வயதாயிருக்க வேண்டும் (எண். 4:3). பின்பு வயது 25 ஆகவும், அதின்பின் 20ஆகவும் மாற்றப்பட்டது (எண். 8:24; 1 நாளா. 23:24).

கானான் தேசம் பிரிக்கப்பட்டபோது, லேவியருக்கென்று ஒரு பங்கும் கொடுக்கப்படவில்லை. ஆனால் மற்ற கோத்திரங்களுக்குக் கிடைத்த

தேசங்களில், பட்டணங்களும், வயல்களும், வெளி நிலங்களும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டன (யோசுவா. 21:1-8; எண்.அதி. 35).

தாவீதின் நாள்களில் லேவியர் நான்கு வகுப்பினராய்ப் பிரிக்கப்பட்டார்கள். அவையாவன : ஆலயவேலை, விசாரிப்போர், மணியக்காரர், வாசல் காப்போர், கீத வாத்தியம் வாசித்துத் துதி செய்வோர் இந்த நான்கு வகுப்பினரும், 24 முறை வரிசையாக நிறுத்தப்பட்டார்கள் (1 நாளா. 23:3-5; எஸ்றா. 6:18).

லேவியின் புத்திரர் செய்த பணிவிடை வேலைக்காக இஸ்ரவேலர் தங்களுக்குள்ள எல்லாவற்றிலும் தசம பாகம் கொடுக்கவேண்டும் (எண்.18:21).

லேவி புத்திரர் பெறும் தசம பாகங்களில், ஒரு பங்கைக் கர்த்தருக்கென்று படைத்து, ஆரோனுக்குக் கொடுக்க வேண்டும் (எண். 18:28).

பிற்காலங்களில் லேவியர் ஜனங்களுக்கு வேதத்தைப் போதிக்கவும், நியாயம் விசாரிக்கவும் ஏற்படுத்தப்பட்டார்கள் (2 நாளா. 17:8; 19:8; நெகே. 8:7).

சிறையிருப்பிலிருந்து வந்தவர்களில் லேவியரும் அநேகரிருந்தார்கள் (எஸ்றா. 2:40; நெகே. 11:15).

புதிய ஏற்பாட்டில் சொல்லப்படும் வேதபாரகரும், நியாய சாஸ்திரிகளும் லேவி கோத்திரத்தாரென்று எண்ணப்படுகிறார்கள்.

## லோத்து (Lot)

லோத்து ஆரானின் மகன். ஆரான் ஆபிராமின் சகோதரன். ஆபிராம் தேராகின் மகன் (ஆதி. 11:27).

தேராகு ஆபிராமையும், அவன் மனைவி சாராயையும், லோத்தையும் அழைத்துக் கொண்டு, ஊர் என்ற தேசத்திலிருந்துக் கானானுக்குப் போக புறப்பட்டு ஆரானுக்கு வந்தபோது, அங்கே தங்கினார்கள். சில நாள்களுக்குப் பின், தேராகு மரித்தான் (ஆதி. 11:31).

பின்பு ஆபிராம் லோத்தைக் கூட்டிக்கொண்டு கானானுக்குப் போய், அங்கிருந்து எகிப்துக்குப் போய், சில நாள்களில் பின் திரும்பி வந்து பெத்தேலில் வாசம்பண்ணினார்கள் (ஆதி. 12:4; 13:1-3).

ஆபிராமுடைய மந்தை மேய்ப்பருக்கும், லோத்துடைய மந்தை மேய்ப்பருக்குமிடையில் வாக்கு வாதம் உண்டானதினிமித்தம், இருவரும் பிரிய வேண்டி வந்தது. லோத்து யோர்தானுக்கு அருகான

சமபூமியைத் தெரிந்து கொண்டு, அங்கே போய், சோதோமுக்கு நேரே கூடாரம் போட்டான். சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களாயிருந்தார்கள் (ஆதி. 13:10-13).

அந்தப் பகுதிகளிலிருந்த இராஜாக்களுக்கிடையில் யுத்தம் உண்டாயிற்று.

சோதோமின் ஜனங்கள் தோற்கடிக்கப்பட்டு, லோத்தும் சிறையாகக்கொண்டு போகப்பட்டான். எமோரியாவின் சமபூமியில் குடியிருந்த ஆபிராம் அதைக் கேள்விப்பட்டு, தன் வேலைக்காரரோடு பின் தொடர்ந்து போய், அந்த இராஜாக்களை மடங்கடித்து, லோத்தையும் அவனுக்குள்ள எல்லாவற்றையும் திருப்பிக் கொண்டு வந்தான் (ஆதி. 14:1-6).

பிற்பாடு சோதோம்கொமோரா அழிக்கப்பட்டபோது கர்த்தர் ஆபிராமின் வேண்டுதலினிமித்தம் லோத்தையும் மனைவியையும் இரண்டு குமாரத்திகளையும் தப்பவைத்தார். ஆனால் லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத் தூண் ஆனாள் (ஆதி. 19:15-26).

பின்பு லோத்தும் அவன் குமாரத்திகளும் மலையிலே வாசம் பண்ணினார்கள். மூத்தவள் ஒரு குமாரனைப்பெற்று, “மோவாப்” என்று பேரிட்டாள். இளையவள் ஒரு குமாரனைப் பெற்று, “பென்னமி” என்று பேரிட்டாள். இவர்களுடைய சந்ததியார் மோவாபியர், அம்மோனியர் எனப்பட்டார்கள் (ஆதி. 19:38).

இந்த இரண்டு சாதியாரும் பிற்காலங்களில் இஸ்ரவேலருடைய கொடிய எதிரிகளானார்கள்.

இயேசு தமது இரண்டாம் வருகையைப்பற்றிப் பேசின தருணத்தில், லோத்தினுடைய நாள்களைப்பற்றியும், லோத்தின் மனைவிக்கு நடந்ததைப் பற்றியும் உதாரணமாகவும், எச்சரிப்பாகவும் கூறினார் (லூக்கா. 17:28-32).

நீதிமானாகிய லோத்தைக் கர்த்தர் இரட்சித்தார் என்று பேதுரு சொல்லுகிறான் (2 பேதுரு. 2:8).

## வஸ்தி (Vasti)

*(சௌந்தரி)*

அகாஸ்வேரு இராஜாவின் மனைவி. இராஜா தன் மண்டபத்தில் விருந்து செய்வித்த நாள்களில், இராஜாத்தியாகிய வஸ்தியின் சௌந்தரியத்தை மற்றவர்களும் பார்க்கும்படி இராஜாத்தியை வரும்படி ஆள் அனுப்பினான், அவள் வரமாட்டேன் என்றாள். இதினிமித்தம் அவள் இராஜாத்தியாயிராமல் விலக்கப்பட்டாள் (எஸ். 1:1-32). வஸ்தியின் ஸ்தானத்தில் எஸ்தர் பட்டத்து ஸ்திரீயானாள் (எஸ். 2:17).

## வலுசர்ப்பம் (Dragon)

இந்தப் பெயர் மிகுதியாய் ஒரு ஊளையிடுகிற காட்டு மிருகத்தைக் குறிக்கிறது. பழைய ஏற்பாட்டில் "மலைப்பாம்பு" என்று யோபு *30:29*லும், "வலுசர்ப்பம்" என்று சங். *44:18;* ஏசாயா. *13:22; 34:13; 35:7;* எரே. *10:22; 49:33*லும் கூறியுள்ளது.

முதலை என்ற கருத்தோடு பார்வோனைக் குறிக்கிறது (எசே. *29:3*).

வலுசர்ப்பம் என்று நேபுகாத்நேச்சாரைக் குறிக்கிறது (எரே. *51:34*).

புதிய ஏற்பாட்டில், சாத்தான் வலு சர்ப்பம் என்று அழைக்கப்படுகிறான்

ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தலைகளின் மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பம் வானத்தில் காணப்பட்டது (வெளி. *12:3-9*). சிவப்பு இரத்தத்தையும், கொம்புகள் வல்லமையையும் கருதுகிறது. இதில் கடைசி நாள்களில் உலகத்தி லுள்ள தேவனுடைய ஜனங்களைச் சாத்தான் துன்புறுத்துவான் என விளங்குகிறது.

பின்பு ஒரு தூதன் வானத்திலிருந்திறங்கி வந்து, பிசாசென்றும், சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலு சர்ப்பத்தைப் பிடித்து, பாதாளத்தில் தள்ளியடைத்து முத்திரை போட்டான் (வெளி. *2:2*).

## வார்த்தை (Word)

இது ஆயிர வருட சமாதான காலத்தின் துவக்கத்தில் நடக்குமெனத் தெரிகிறது.

"கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்கு உண்டாகி" (ஆதி. *15:1-4*). என்பதிலிருந்து, ஆபிரகாமுடைய காது கேட்க கர்த்தர் பேசினா ரென்றல்ல, தமது கருத்தை அவன் அறியும்படி செய்தாரென்றே விளங்கலாம்.

கர்த்தருடைய வார்த்தை ஆபிரகாமுக்கு தரிசனத்தில் உண்டாகி, நான் உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் (ஆதி. *15:1*) என்றபோது, அவன் "ஆண்டவரே அடியேனுக்கு என்ன தருவீர்" என்கிறான். இது ஒரு சம்பாஷணை போலத் தெரிகிறது.

என் வாயிலிருந்துப் புறப்படும் வசனம் .... நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்" (ஏசாயா. *55:11*) என்பது கர்த்தர் தமது நோக்கத்தை மனுஷரைக்கொண்டு செய்விக்கிறாரென்பதைக் காட்டுகிறது.

அவர் தமது வார்த்தையைப் பூமியிலே அனுப்புகிறார். அவருடைய சொல் மகா தீவிரமாய்ச் செல்லுகிறது (சங். 147:15). இங்கே அவருடைய வார்த்தை தூது கொண்டு போகும் ஒரு ஆள்போலவும், அவருடைய சித்தம், சீக்கிரம் நிறைவேறும் என்பதையும் குறிக்கிறது.

கர்த்தருடைய வார்த்தை, அவருடைய கட்டளையைக் கருதுகிறதாக பழைய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

அந்த வார்த்தை உனக்குச் சமீபமாயும், உன் வாயிலும் இருதயத்திலும் இருக்கிறது (உபா. 30:11-14).

அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வார்த்தை "விசுவாசத்தின் வார்த்தை" யென்றும், இயேசுவை விசுவாசிப்பதனாலேயே இரட்சிப்பு உண்டென்றும் கூறுகிறான் (ரோமர். 10:8,9).

புதிய ஏற்பாட்டில் "வார்த்தை" என்பது தேவ வாக்கையும் அதன் பலனையும் கருதுகிறது.

மரியாள் தேவதூதனை நோக்கி உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள் (லூக்கா. 1:38).

மேய்ப்பர் தேவதூதரின் செய்தியைக் கேட்டு, அதைப் பார்க்கும்படி போனார்கள் (லூக்கா. 2:10-15).

அந்தியோகியா பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி, கூடிவந்தார்கள் (அப். 13:43). இங்கே "தேவ வசனம்" என்பது சுவிசேஷத்தைக் கருதுகிறது. நமது ஆண்டவர் பிரசங்கித்ததும் "தேவ வசனம்" என்று லூக்கா 5:1இல் குறித்துள்ளது.

யோவானுடைய சுவிசேஷத்தில் வார்த்தை என்பது "வெளியாக்கப்பட்ட தேவனுடைய எண்ணம்" என்பதே (Logos). ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது. சகலமும் அவர்மூலமாய் உண்டாயிற்று. அந்த வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்று கூறியுள்ளது (யோவான். 1:1-14).

இங்கே வார்த்தை என்பது தேவத்துவத்தையும், சிருஷ்டிகராயிருந்து, மனுஷவதாரமெடுத்த இயேசு கிறிஸ்துவையுமே குறிக்கிறது.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறதாவது :

கிறிஸ்து தேவ பெலனும் தேவ ஞானமுமாயிருக்கிறார் (1 கொரி. 1:24). "அவரே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார் (1 கொரி. 1:30).

இயேசு அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானார். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது (கொலோ. 1:15).

யோவான் மேலும் அவரை ஜீவ வார்த்தையென்று சொல்லுகிறான் *(1 யோவான். 1:1).*

இதற்கேற்ப வெளி. *19:11-13*இல் வெள்ளைக் குதிரைமேலேறியிருந்தவருடைய நாமம், தேவனுடைய வார்த்தை எனப்படுகிறது.

வேதாகமத்தில் வார்த்தைக்கும், வசனத்துக்கும் இருக்கும் வித்தியாசம் அப். *10:44*இல் வெளியாகிறது. "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில், வசனத்தைக் கேட்ட யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார் *(அப். 10:44; 2 தீமோ. 4:2).*

வார்த்தை என்பது இயேசுவை விசுவாசிப்பதனாலேயே இரட்சிப்புண்டென்ற உண்மை வசனம் என்பது அதைப்பற்றிய சுவிசேஷம் *(ரோமர். 10:5-9; உபா. 30:14).*

## வேதம், வேதாகமம், வேத வாக்கியம்

வானத்திலேயும், பூமியிலேயும், அநேக தேவர்கள் உண்டு. ஆனால் ஒரே தேவன் நமக்குண்டு *(1 கொரி. 8:5).* அவர் ஜீவனுள்ள தேவன். சர்வவல்லவர். அவர் மனுஷ குலத்துக்குத் தம்மை வெளிப்படுத்தும் படி ஒரு புத்தகத்தை உண்டாக்கினார். சத்திய வேதம் அல்லது வேதாகமம் எனப்படுவது அதுவே. தொடக்கத்தில் இப்புத்தகம், லத்தீன் பாஷையில் "பிபிலியர்" புத்தகங்கள் எனப்பட்டது. பல சாதனங்கள் என்பது கருத்து. தானியேலும் "வருடங்களின் தொகையைப் புத்தகங்களால் அறிந்து கொண்டேன்" என்கிறான் *(தானி. 9:2).*

இதில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு பிரிவுகளுண்டு. எபிரெய பழைய ஏற்பாடு யூதருடைய வேதம். எபிரெய பஞ்சாகமம், மாத்திரம் சமாரியரின் வேதம்.

மார்ட்டின் லூத்தரின் (Martin Luther) மார்க்க சீர்த்திருத்தத்தோடு கிறிஸ்தவ சபை *39* புத்தகங்களுள்ள பழைய ஏற்பாட்டையும், *27* புத்தகங்களுள்ள புதிய ஏற்பாட்டையும் தங்கள் வேத புத்தகமாக வைத்துக் கொண்டார்கள். "ஏற்பாடு" என்பது லத்தீன் பாஷையில் மரணசாதனம் (Testament) எனவும் கருத்துள்ளது. பின்னர் கர்த்தர் தமது ஜனங்களோடு ஒரு புது உடன்படிக்கை பண்ணினதாக, எரேமியா சொல்லுகிறான் *(எரே. 31:31).* அது வனாந்தரத்தில் கொடுத்த முதல் உடன்படிக்கைக்கு *(யாத். 24:7)* மேலானது. அதாவது முந்தின உடன்படிக்கையைக் கர்த்தர் பழமையாக்கினார் *(எபி. 8:13).*

புதிய ஏற்பாடு எழுதினோர், இயேசு கிறிஸ்துவில் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினதாக குறிக்கிறார்கள்.

இயேசு தாமே, இராப்போஜன சமயத்தில் "இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை" எனறார் (1 கொரி. 11:25). பழைய ஏற்பாடு, பழைய உடன்படிக்கைக்கு அடுத்தவை; புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் புதிய உடன்படிக்கைக்கடுத்தவை. பழைய ஏற்பாடு வாசிக்கையில் சுவிசேஷத்தின் மகிமை யூதருக்கு மறைந்திருந்ததினால் அது முக்காடு எனப்பட்டது. அவர்கள் கர்த்தரிடம் மனந்திரும்பும்போது அந்த முக்காடு எடுபட்டுப்போம் (2 கொரி. 3:14,16).

இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலேயே பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரண்டு பகுதிகள் கிறிஸ்தவருக்குள் பொதுவாய் அங்கீகரிக்கப்பட்டது.

எபிரெய வேத புத்தகத்தில் மூன்று பிரிவுகளுள்ளன : நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம், பிரபந்தம், கிரேக்க மொழி பெயர்ப்பில், புத்தகங்கள் கால நிரூபணப்படியல்ல, விஷய சம்பந்தமாக ஒழுங்காக்கப்பட்டன. முதலாவது பஞ்சாகமம், அதன் பின் சரித்திரம், பாட்டு, ஞான புஸ்தகங்கள் கடைசியாக தீர்க்கதரிசனம்.

இயேசு, எபிரெய வேதத்தில், நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனம். சங்கீதமென 3 பகுதிகளுள்ளனவெனக் கருதினார் (லூக்கா. 24:44).

பழைய ஏற்பாட்டில் நியாயப் பிரமாணமும், தீர்க்கதரிசனமும் உண்டென்று மத். 5:17லும் மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டென்று லூக்கா. 16:29லும் குறித்துள்ளது.

## பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள சம்பந்தம்

வேதாகமத்தில் காலக்கிரமப்படி பழைய ஏற்பாடு முன்பும், புதிய ஏற்பாடு பின்பும் வருகிறது. இதற்கேற்ப "பூர்வகாலங்களில் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினதை தேவன் இந்தக் கடைசி நாள்களில் குமாரன் மூலமாய்த் திருவுளம் பற்றினார்" (எபி. 1:1,2) என்பதைப் பார்க்கிறோம்.

ஆகிலும் கிறிஸ்தவ மார்க்கம் தொடங்கின நாள்களில் அப்போஸ்தலரும், பிரசங்கிமாரும் எடுத்துக் கொண்டு திரிந்து பிரசங்கம் செய்த வேத புத்தகம் இந்தப் பழைய ஏற்பாடே. அதினால் வாக்குப் பண்ணப்பட்ட மேசியாவும் இரட்சகரும் இந்த இயேசுதானென்று நிரூபித்தார்கள். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே" (யோவான். 5:39) என்று இயேசுவும் கூறினார்.

இயேசுவும் அப்போஸ்தலரும் பயன்படுத்தின பழைய ஏற்பாட்டைத் திருச்சபையும் பரிசுத்த ஆகமமென புரிந்து கொண்டது.

பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றம் புதிய ஏற்பாட்டில், காணப்படுகிறது. யாக்கோபின் நிருபத்தைவிட, பவுலுடைய சில நிருபங்களே முதன் முதல் (கி.பி. 48-60) எழுதப்பட்டன. சுவிசேஷங்கள் அதன்பின் எழுதப்பட்டதாகத் தெரியவருகிறது. பவுல் எழுதின நிருபங்கள் தொடக்கத்தில் அந்தந்த சபையாரிடமோ, தனித்தனி ஆள்களிடமோ இருந்தன.

இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவையெல்லாம் சேர்க்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன. புத்தகங்களின் அளவின்படியே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்கள், தனி ஆள்களுக்கு எழுதப்பட்டவைகளுக்கு முன்சேர்க்கப்பட்டன. இவ்விதமே நான்கு சுவிசேஷங்களும், பவுலுடைய நிருபங்களும் அதற்கிடையில் அப்போஸ்தலருடைய நடபடிகளும் சேர்ந்து புதிய ஏற்பாடு ஆயிற்று.

தொடக்கத்தில் எபிரெய பாஷையிலும், பின்பு கிரேக்கிலுமே, இப்புஸ்தகம் எழுதப்பட்டிருந்தது. பின்னர் பிற ஜாதியார் கிறிஸ்தவர்களானபோது, அவர்கள் பாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

வேதாகமத்தின் தூது இரட்சிப்பின் வழி. இது ஒரு முப்புரி கயிறு போல மூன்று பிரிவுகளுள்ளது : இரட்சிப்பைக் கொண்டு வருபவர், இரட்சிப்பு அடையும் வழி, இரட்சிப்பை அடைவோரின் நிலை.

தேவன்தாமே, தனது ஜனங்களை மீட்கிறவர். அவரே உடன்படிக்கை செய்தவர், கிறிஸ்து மத்தியஸ்தர், அவரே இரட்சிப்பைச் செயலாற்றின தேவ குமாரன்.

இரட்சிப்பின் வழி தேவ கிருபையால் வருகிறது. கீழ்ப்படிவோர், பெற்றுக்கொள்வர். இதை ஏற்றுக்கொள்வோர், தேவனுடைய இஸ்ரவேல் அல்லது தேவ சபை எனப்படுவர்.

வேதாகமத்தின் மத்திய தூது, இரட்சிப்பைப் பற்றியது. இது தேவனுடைய அழைப்பு, வகைவகையாய், பங்குபங்காய் ஆதி தொடங்கி தேவனால் திருவுளம் பற்றப்பட்டு, கடைசியில் இயேசு கிறிஸ்துவில் பகிரங்கமாயிற்று. வேதாகமத்தின் அடிப்படை தேவன். அவரே ஆக்கியோன்; ஆகவே, **வேதாகமம் தேவ வார்த்தையாகும்.**

# எங்களது பிற தமிழ் வெளியீடுகள்

| எண் | நூலின் பெயர் | ஆசிரியர் | விலை |
|---|---|---|---|
| 1. | **தெளிதேன் விருந்து - பாகம் 1** | **பாஸ்டர் பி. தங்கமணி** | **230.00** |
| 2. | தெளிதேன் விருந்து - பாகம் 2 | பாஸ்டர் பி. தங்கமணி | 100.00 |
| 3. | தெளிதேன் விருந்து - பாகம் 3 | பாஸ்டர் பி. தங்கமணி | 130.00 |
| 4. | **தெளிதேன் விருந்து - பாகம் 4** | **பாஸ்டர் பி. தங்கமணி** | **250.00** |
| 5. | **தெளிதேன் விருந்து - பாகம் 5** | **பாஸ்டர் பி. தங்கமணி** | **210.00** |
| 6. | ஓசியா - மீகா | டி.ஏ. துரோவர் | 50.00 |
| 7. | நாகூம் - மல்கியா | டி.ஏ. துரோவர் | 50.00 |
| 8. | இயேசு திரும்ப வருகிறார் | தியோடர் வில்லியம்ஸ் | 25.00 |
| 9. | **இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை** | **கிளாரன்ஸ் லார்க்கின்** | **90.00** |
| 10. | புதிய ஏற்பாடு - ஓர் அறிமுகம் | சே. சுந்தரராசன் | 50.00 |
| 11. | பழைய ஏற்பாடு - ஓர் அறிமுகம் | சே. சுந்தரராசன் | 100.00 |
| 12. | ஆமோஸ் | ஜெசுதாசன் ஜெயராஜ் | 160.00 |
| 13. | வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை | ஆர்.என். ஆசீர்வாதம் | 490.00 |
| 14. | சத்திய வேதாகமப் பெயர் அகராதி | ஆர்.என். ஆசீர்வாதம் | 190.00 |
| 15. | பிரசங்கக் குறிப்புகள்(இயேசுவின் உவமைகள்) | கிராப்ட் எம். பென்ட்ஸ் | 40.00 |
| 16. | பிரசங்கக் குறிப்புகள்(பவுலடியாரின் நிருபங்கள்) | ஆர்ச்சி எல். எட்வர்ட்ஸ் | 30.00 |
| 17. | பிரசங்கி விளக்கவுரை | எம். சாலமோன் | 70.00* |
| 18. | வெளிப்படுத்தல் புத்தகம் | கிளாரன்ஸ் லார்க்கின் | 120.00* |
| 19. | **வெளிப்படுத்தின விசேஷம் விளக்கவுரை** | கொர்னீலியஸ் மனோகரன் | 120.00 |
| 20. | வேத வினா விடை | இ.எல்.எஸ். தொகுப்பு | 50.00 |
| 21. | **வேத வியாக்கியானம்** | **மதன்ராஜ்** | **320.00** |
| 22. | வேதாகமத்திலே 5000 கேள்வி..., விடைகளும் | பாஸ்டர் பி. தங்கமணி | 220.00 |
| 23. | விசுவாச வாழ்வு | தியோடர் வில்லியம்ஸ் | 25.00 |
| 24. | கிறிஸ்தவப் புனித வாழ்க்கை | வாச்மன் நீ | 65.00 |
| 25. | இயேசுவே பிரதான ஆசாரியர் | சே. சுந்தரராசன் | 35.00 |
| 26. | வேதாகம சொல் அகராதி | எச்.ஜே.ஆப்பில்பி | 70.00* |
| 27. | ஆசரிப்புக் கூடாரம் | லாரன்ஸ் டி. சேம்பர்ஸ் | 100.00 |
| 28. | எபேசியர் விளக்கவுரை | பீட்டர் நேலோ | 110.00 |
| 29. | பரிசுத்த வேதாகம எண் அகராதி | சா. சௌந்திரராசன் | 95.00* |
| 30. | நூறு வேத பாடங்கள் - பாகம் 1 | ஆல்பன் டக்ளஸ் | 170.00 |
| 31. | நூறு வேத பாடங்கள் - பாகம் 2 | ஆல்பன் டக்ளஸ் | 190.00 |
| 32. | இயேசு வாழ்ந்த நகரங்களும் நிகழ்ச்சிகளும் | சே. சுந்தரராசன் | 90.00 |
| 33. | திருமறையில் பிற தெய்வங்கள் | ஜெசுதாசன் ஜெயராஜ் | 45.00 |
| 34. | யாத்திராகமம் | தாமஸ் உவாக்கர் | 45.00* |
| 35. | உட்காரு, நட, நில் | வாச்மன் நீ | 30.00 |
| 36. | திரித்துவம் | டொனால்டு-ரொனால்டு ஹாரிஸ் | 20.00 |
| 37. | மணவாளனின் தோழன் | ராபர்ட் ஹென்றி சைக்ஸ் | 40.00* |
| 38. | **தேவனுடைய இடது கரம்** | **டேவிட் டபிள்யூ.எஃப்.வாங்** | **150.00** |
| 39. | **ஆசரிப்புக் கூடாரம் மற்றும் உடன்படிக்...** | **ஆபிரகாம் பார்க்** | **380.00** |
| 40. | சரோஜாவின் துணிவு | பக்தி | 20.00 |

| | | | |
|---|---|---|---|
| 41. | திருவசனக் கதைகள் | எச்.பி. ராஜ்குமார் | 35.00 |
| 42. | தங்க வசனக் கதைகள் | எச்.பி. ராஜ்குமார் | 35.00 |
| 43. | நல்வழிக் கதைகள் | ஜே. அமிர்தராஜ் | 40.00 |
| 44. | காட்டின் நடுவே | எச்.பி. ராஜ்குமார் | 30.00 |
| 45. | கிறிஸ்தவ குடும்பம் | ஜெசி யார்டி | 30.00 |
| 46. | கிறிஸ்துவை ... கொண்டுள்ள இல்லம் | பில்லி கிரஹாம் | 25.00 |
| 47. | பால் உறவும் திருமணமும் | சகரியா பூணன் | 40.00 |
| 48. | சந்தோஷத்தின் இரகசியம் | பில்லி கிரஹாம் | 70.00 |
| 49. | கொல்லும் கொடிய பாவங்கள் ஏழு | பில்லி கிரஹாம் | 50.00 |
| 50. | ஜெபத்தில் சிறந்த சான்றோர் | சே. சுந்தரராசன் | 40.00 |
| 51. | பரிசுத்த வேதாகமமும் விஞ்ஞானமும் | எஸ்.டி. அம்புரோஸ் | 100.00 |
| 52. | இயேசுவின் பன்னிரண்டு சீடர்கள் | சே. சுந்தரராசன் | 80.00 |
| 53. | தேவதூதரும் மனுக்குலமும் | எஸ்.டி. அம்புரோஸ் | 50.00 |
| 54. | பண்டிகைகளும் பலிகளும் | சே. சுந்தரராசன் | 110.00 |
| 55. | ஸ்பர்ஜன் அறிவுரைகள் | சி.எச். ஸ்பர்ஜன் | 60.00 |
| 56. | நோயுற்ற நேரங்கள் | என். ஜாண் ஜெயானந்தம் | 56.00 |
| 57. | நிலைமாறாத உண்மைகள் | பேசிலியா சிலிங்க் | 42.00* |
| 58. | கடவுளைக் கண்டடைவது எப்படி? | பில்லி கிரஹாம் | 35.00* |
| 59. | கிறிஸ்து எனக்காக சிலுவையில் அறையப்பட்டார் | பவுல் டக்கர் | 40.00 |
| 60. | இயேசு கிறிஸ்து சிலுவையில் மொழிந்த வார்த் | ஜெறோம் | 80.00 |
| 61. | கிறிஸ்துவின் ஜீவியம் | எஸ். பரமானந்தம் | 350.00 |
| 62. | எதிர்காலத்தின் நம்பிக்கை | பில்லி கிரஹாம் | 35.00 |
| 63. | ஜெபமும் வேதாகம ஜெப வீரரும் | இ.எம். பவுண்ட்ஸ் | 40.00 |
| 64. | என் முழுமையும் அவருக்கே | பேசிலியா சிலிங்க் | 30.00* |
| 65. | பெண்கள் ஜெபிக்கும்போது நடப்பது என்ன? | ஈவ்லின் கிறிஸ்டன்சன் | 90.00 |
| 66. | இஸ்மவேல் என் சகோதரன் | பி.ஏ. ஹட்சன் டேலர் | 30.00 |
| 67. | சிலுவைப் பாதை | ராய் ஹெஸியன் | 50.00 |
| 68. | ஜெபத்தின் மூலம் வல்லமை | இ.எம். பவுண்ட்ஸ் | 50.00 |
| 69. | வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர் | பென்ஜமின் ஞானமாணிக்கம் | 50.00 |
| 70. | ஆத்தும வாஞ்சை | ஆஸ்வால்ட் ஸ்மித் | 45.00 |
| 71. | மோட்சப் பயணம் | ஜாண் பனியன் | 220.00 |
| 72. | மரணம் ஒரு முடிவல்ல | தியோடர் வில்லியம்ஸ் | 30.00 |
| 73. | உத்தம கிறிஸ்தவன் | கிறிஸ்தியான் உவைஸ் | 50.00 |
| 74. | மனந்திரும்புதல் | பேசிலியா சிலிங்க் | 25.00* |
| 75. | வியாதியின் மூலம் கடவுளின் ஆசீர்வாதம் | பேசிலியா சிலிங்க் | 20.00* |
| 76. | அன்பு, அமைதி நிலைகளின் புரட்சி | ஜார்ஜ் வெர்வர் | 36.00 |
| 77. | நீங்கள் எந்த சபை ? | சாமுவேல் விஜயகுமார் | 50.00 |
| 78. | வன்யா | மிர்னா கிராண்ட் | 65.00 |
| 79. | புஷ்பம்மாள் | ஏமி கார்மைக்கல் | 40.00 |
| 80. | டாக்டர் ஐடா ஸ்கடர் | திலகவதி பால் | 60.00 |
| 81. | ஜியார்ஜ் முல்லர் | பேசில் மில்லர் | 50.00 |
| 82. | சி.டி. ஸ்டட் | கோயில் பிச்சை | 45.00 |
| 83. | ரீஸ் ஹவல்ஸ் | இ.எல்.எஸ். தொகுப்பு | 50.00 |
| 84. | அக்கினியால் பதிலளிக்கும் கடவுள் | மார்கரெட் கிளீட்டர் | 50.00 |

| | | | |
|---|---|---|---|
| 85. | செம்புலிங்கம் | யூ. ஹாப்கின்ஸ் | 60.00 |
| 86. | பிதாவே என்று அழைக்கத் துணிந்தேன் | பில்குமிஸ் ஷேக் | 60.00* |
| 87. | படுவேதனையில் பரம வெற்றி | ரிச்சர்ட் உம்பிராண்ட் | 60.00 |
| 88. | சாமுவேல் மாரிஸ் | லின்ட்லே பால்ட்வின் | 45.00 |
| 89. | ஹட்சன் டெய்லர் | ஹோவார்டு டெய்லர் | 90.00 |
| 90. | சாது சுந்தர் சிங் | ஆன்ரு பிரபுகுமார் | 60.00 |
| 91. | மார்ட்டின் லூத்தர் | கோயில் பிச்சை | 50.00 |
| 92. | டேவிட் லிவிங்ஸ்டன் | ஜே.எச். வொர்செஸ்டர் | 50.00 |
| 93. | மூடி பிரசங்கியார் | சாமுவேல் ஜெபசிங் | 80.00 |
| 94. | ஒலிவீசும் சுடர்கள் | A. R. இராஜரத்தினம் | 140.00 |
| 95. | ஜியார்ஜ் ஒயிட்பீல்டு | பிலிப் ஏ. கிரிஸ்ட் | 45.00 |
| 96. | பவுல் அடியாரின் வாழ்க்கை | சே. சுந்தரராசன் | 80.00 |
| 97. | மகத்தான மிஷனெரிகளின் ஆழ்ந்த அனுபவங்கள் | இ.எல்.எஸ். தொகுப்பு | 40.00 |
| 98. | யோனத்தான் கோஃபோர்த் | இ.ஜி. பாக்கியராஜ் | 50.00 |
| 99. | ஒரு யோகியின் மறுபிறப்பு | ரவீந்திரநாத் மகராஜ் | 120.00 |
| 100. | காபாவிலிருந்து கல்வாரிக்கு | பி.ஏ. ஹட்சன் டேலர் | 35.00 |
| 101. | கிளாடிஸ் அயில்வார்டு | என். இராபர்ட் | 45.00 |
| 102. | நடாஷா என்னை மன்னித்துவிடு | இ.ஜி. பாக்கியராஜ் | 60.00 |
| 103. | நிலத்தில் விழுந்த கோதுமை மணி | எஸ். லலிதா செல்லப்பா | 75.00* |
| 104. | ஏமி கார்மைக்கல் அம்மையார் | திலகவதி பால் | 150.00 |
| 105. | வில்லியம் கேரி | ஜே.பி. மிடில் புரூக் | 50.00 |
| 106. | கர்த்தரின் கரத்தில் காட்டு மனிதர் | ஜேம்ஸ் - மார்டி ஹெப்லி | 40.00 |
| 107. | ஜெபவீரன் ஜாண் ஹைடு | சாமுவேல் ஜெயசிங் | 50.00 |
| 107. | இருட்டறை அரசி | கிறிஸ்தீனாள் திசாய் | 70.00 |
| 108. | சிலுவை வீரர்கள் | தியோடர் வில்லியம்ஸ் | 70.00 |
| 110. | **பெண்களின்... பண்டிதமேரி இராமாபாய்** | **சே. சுந்தரராசன்** | **50.00** |
| 111. | சார்லஸ் பின்னியின் பிரசங்கங்கள் | பெஞ்ஜமின் ஞானமாணிக்கம் | 45.00 |
| 112. | மூடி பிரசங்கங்கள் | தாமஸ் இரத்தினம் | 60.00 |
| 113. | அருளுரை உபமானங்கள் | எஸ்.டி. அம்புரோஸ் | 40.00 |
| 114. | பிரசங்கிமார்களுக்கும் வேதாகம மாணவருக்கும் | இ.எல்.எஸ். தொகுப்பு | 60.00 |
| 115. | ஸ்பர்ஜன் பிரசங்கங்கள் | சி.எச். ஸ்பர்ஜன் | 60.00 |
| 116. | வெற்றி வாழ்வுக்குரிய அருளுரைகள் | என். இராபர்ட் | 24.00* |
| 117. | வேதாகம வீரர்கள் | கிளோவிஸ் ஜி. சேப்பல் | 48.00* |
| 118. | விசுவாச தின தியானம் | சி.எச். ஸ்பர்ஜன் | 65.00* |
| 119. | அன்றாடக அமுதம் | ரேய்மண்ட் எட்மன் | 100.00 |
| 120. | பாலைவன நீரோடைகள் | திருமதி சார்லஸ் கௌமேன் | 220.00 |
| 121. | உந்தன் சிலுவை என்தன் மேன்மை | த. சம்பத் பகவான்தாஸ் | 40.00* |
| 122. | மலரைப் பறித்தது யார் | எம்.ஜெ.ஜெக்கப் | 65.00 |

• குறியிட்ட புத்தகங்கள் இருப்பில் இல்லை

சுவிசேஷ ஊழிய நூல் நிலையம் (ELS) வெளியிட்டுள்ள மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகள், வேத ஆராய்ச்சி நூல்கள், தின தியானங்கள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கேற்ற நூல்கள், பிரசங்கக் குறிப்புகள் மற்றும் சிறுவர் நூல்கள் அதன் தலைமையகத்திலும் மற்றும் கீழ்காணும் கிளைகளிலும் கிடைக்கும். (முழுவிலைப்பட்டியலைப் பெற்றுக்கொள்ள எழுதுங்கள்)

## கிளைகள்

**EVANGELICAL LITERATURE SERVICE**
69/3, Mookathal Street, (Next to CSI Missionary Chapel) Purasawalkam,
Chennai-600 007, Tamil Nadu.
Tel. : 044-2642 2722 / 2661 0888

**EVANGELICAL LITERATURE SERVICE**
55, Anna Salai, Chennai - 600 002
Tamil Nadu. Tel. : 044-2851 4403

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 1, Ground Floor, 200 Feet Road,
Kannagi Nagar, Kolathur,
Chennai - 600 099, Tamil Nadu
Mobile No.: 78240 01747

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.M.C. Hospital Compound,
Vellore - 632 004, Tamil Nadu
Tel. : 0416-222 4808, 222 5808

**EVANGELICAL LITERATURE SERVICE**
Vasavi Complex, 1250, Big Bazaar St.,
Coimbatore - 641001, Tamil Nadu.
Tel. : 0422-239 0694

**EVANGELICAL LITERATURE SERVICE**
Jeevan Complex, 84, 100 Feet Road,
Gandhipuram, Coimbatore - 641 012,
Tamil Nadu. Tel. : 0422-249 4434

**EVANGELICAL LITERATURE SERVICE**
G4, Ground Floor, Ashoka Enclave,
12, Nethaji Road, Frazer Town,
Bangalore - 560 005, Karnataka,
Tel. : 080-2547 3388/2547 8833

**EVANGELICAL LITERATURE SERVICE**
582, Oil Mill Road, Aravind Nagar,
Bangalore - 560 084, Karnataka,
Tel. : 080-2546 7014

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 1/1A, Ground Floor, 2nd Main,
(Near Mathikere Signal), Mathikere
Bangalore - 560 054, Karnataka.
Tel.: 080-2337 8087

**EVANGELICAL LITERATURE SERVICE**
Bangalore Baptist Hospital Compound,
Bellary Road, Hebbal,
Bangalore - 560 024, Karnataka.
Tel. : 080-2355 4455

**EVANGELICAL LITERATURE SERVICE**
Kesavadasapuram, Pattom P.O.,
Trivandrum - 695 004, Kerala.
Tel. : 0471-244 8916

**EVANGELICAL LITERATURE SERVICE**
Shop No.430-A3, Ascension Square,
Railway Station Road, Collectorate P.O.,
Kottayam - 686 002, Kerala.
Tel. : 0481-230 4790

**EVANGELICAL LITERATURE SERVICE**
F-II, Dadar Manish Market,
Senapati Bapat Marg, Dadar (W),
Mumbai - 400 028, Maharashtra,
Tel. : 022-2437 9572

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.M.C. Hospital Compound,
Ludhiana - 141 008, Punjab,
Tel. : 0161-222 1052

**EVANGELICAL LITERATURE SERVICE**
7A/4I, W.E.A. Western Chambers,
Channa Market, Karol Bagh,
New Delhi - 110 005.
Tel. : 011-2575 9431

**EVANGELICAL LITERATURE SERVICE**
CISHR Compound, 4th Mile,
Dimapur - 797 115, Nagaland.
Tel. : 03862-243 222

**EVANGELICAL LITERATURE SERVICE**
New No.35-71/2(Old No.35-73/1),
G.K.Colony (Near Naredmet Cross Road)
Sainikpuri, Secunderabad-500094,
Andhra Pradesh
Tel. : 040-2711 5533

**EVANGELICAL LITERATURE SERVICE**
No. 50-50-32, Church Street,
T.P.T. Colony, (Near Gurudwar),
Visakhapatnam - 530 013,
Andhra Pradesh
Tel. : 0891-279 9588

**EVANGELICAL LITERATURE SERVICE**
PIMS Campus, Ganapathichettikulam,
Kalapet, Pondicherry - 605 014.
Tel. : 0413-265 5330

**EVANGELICAL LITERATURE SERVICE**
C.S.I. Holy Trinity Church,
Commissioner's Road, Ooty - 643 001,
Tamil Nadu, Tel. : 0423-244 6055

**EVANGELICAL LITERATURE SERVICE**
Scudder Memorial Hospital Compound,
Ranipet-632 401, Vellore Dt., Tamil Nadu
Tel. : 04172-27 1733

E-mail : <elshq@elsindia.org> Website : www.elsindia.org

**Online Store : www.christianbooksindia.com**